
JL
3m 21192, N04
EV 04.1-2
1 b 1978

பிரஜாபந்துகூடலன்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு. VI-2

1904-06

பருவம் I. } 1904 வது ஏப்பிரல்மீ 11 உ { இலக்கம் I.

பிரஜாபந்துகூடலன்

உலகத்தில் சுய இச்சைசுவாதீனம் என்ற பொருளையே அதிகவிலை கொடுத்துவாங்குகிறார்கள். அது சகலத்திற்கும் மேன்மையானது. அதற்கொப்பாக உலகில் ஒன்றுமில்லை. அதிகிலாக்கியமானதும் யாவரும் ஆசிக்கப்படத்தக்கதுமான பொருள். உழுதுண்டு வாழ்வோருக்கொப்பானவர் உலகிலொருவருமில்லை. பத்திராதிபர் பதவிக்கு சமானமானது உலகிலொன்றுமில்லை. அரசன்முதல் சகலத்திராளும் உழுகிறவனிடமிருந்தே ஜீவாதாரமான தானியங்களைப்பெறவேண்டும். உலகில் சகலமான பேர்களும் பத்திராதிபர்களுடைய தயவைக்கோரி அவர்களால் தங்கள் புகழ்ச்சி பூரணசந்திரனைப்போல் எங்கும் பிரகாசிக்கவேண்டுமென்று பெரும்பிரயத்தினங்கள் செய்துவருவார்கள். உழுவதற்குச் சொந்த நிலமிருக்கவேண்டும். பத்திராதிபருக்கும் கொஞ்சம் சொந்த முதல் இருக்கவேண்டும். சொந்த நிலமில்லாதபக்ஷத்தில் குத்தகைக்காவது நிலம் வாங்கிக்கொள்ளவேண்டும். பத்திராதிபருக்குக்கைப்பொருளில்லாவிடினும் கொஞ்சம் கடனாவது வாங்கிக்கொள்ளவேண்டும். குடியானவனுக்கு சொந்த ஏர் இருக்கவேண்டும். அதில் அதிக சௌக்கியமுண்டு. தன் வேலை முடிந்தபிறகு வாடகைக்கும் தன் கலப்பை மாடுகளைவிடலாம். பத்திராதிபருக்கு சொந்த அச்சாபீசு இருந்தால் பத்திரிகை சுகமாய் நடத்தக்கூடும். பத்திரிகைவேலை தீர்ந்தபிறகு அச்சாபீசில் வேற கூலிவேலைகளையும் செய்யலாம். வாடகை ஏர்வாங்கி உழுகிறவர்களின் பிழைப்பும், வேற அச்சாபீசில் பத்திரிகை அச்சுப்போடுகிறவர்களுடைபபிழைப்பும் ஆதாயமற்றது. தன்சமயத்திற்குதவாது. தன் சொந்தசாகுபடியையும், தன் சொந்த அச்சாபீசு வேலைகளையும் முன்னுபார்த்துக்கொண்டு பிறகு எரை வாடகைக்கு விடுகிறதும், அசசாபீசுகளில் பிறத்தியார் வேலைகளைச்செய்வதும், சாதாரணமாய் நாம் காணக்கூடிய விஷயங்கள். வாடகைக்கு ஏர்வாங்கி உழுவதுபோல் வேற அச்சாபீசில் பத்திரிகைகளை அச்சுப்போடவேணும். சதாகண்பார்வையில்லாத நிலம் நல்ல பலனைக்கொடுக்காது. அதுபோல் பத்திராதிபருக்கு அதிக பொறுப்பு இருக்கவேண்டும். பெருமானிருக்கள் பெருமை பாராட்டக்கூடாது. அதுபோல்

16/9/08

பத்திராதிபர்கள் மிகவும் அடக்கமாயிருந்து தாழ்மையானவார்த்தைகளையும் பாஷைகளையும் எப்போதும் எந்த இடத்திலும் உபயோகப்படுத்துதல் அவசியம். தன்னை உயர்த்திக்கொள்ளுபவன் தாழ்த்தப்பட்டு தன்னைத்தாழ்த்திக் கொள்ளுகிறவன் உயர்த்தப்படுவான் என்பது உண்மையன்றோ! கிராமாதிபதிசகலருக்கும் உபகாரியாயிருந்து எல்லோரையும் அனுசரித்துக்கொண்டு கிராமகட்சி பிரிவினைகளிலும் சேராமல், கலகங்களில் தலையிட்டுக்கொள்ளாமலும், விருதாவான காரியங்களில் பிரவேசிக்காமலும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். அதுபோல் பத்திராதிபர்களும் பொது நன்மைக்குரித்தான விஷயங்களில் சதா தன் புத்தியைச் செலுத்தி பிரஜாபந்துகூடலனென்ற பெயரை வகிப்பதற்கு வேண்டிய நற்கிரியைகள் அனைத்தையும் செய்து தன்சக பாடிகளும் எக்காலமுஸ்திகளாயிருக்கும் தன்சகோதர பத்திராதிபர்களுடன் போட்டிபோடாமல் சர்க்கார் ஆஞ்ஞாசக்கரத்துக்குள் அடங்கி "சக்கரநெறியில்" என்றவிதிப்படி நடந்து நமதுஎட்வர்ட் இராஜேந்திரன்சிங்கக்கோடியின்கீழ் அமர்ந்து வாழும் சகலகுடி ஜனங்களின்பேரில் எவ்வித தூஷணம் அல்லது அவதூறான வார்த்தைகளைப்பத்திரிகையில் பதிப்பியாமலும் பத்திரமாயிருக்கவேண்டும்.

நாம் செய்யக்கூடிய வேலையை இனி ஒருவரைப்பார்க்கச் சொல்லுவது ஒரு சொட்டு. "உடையவன் கண்ணோடாப் பயிர் அழியாதா" என்ற பழமொழிக்கிணங்க நேரில் கண்பார்வையில்லாத வேளாண்மை பாழே. பத்திராதிபர் நேரில் தானே சகலதையும் கண்ணுய்ப்பார்க்கவேண்டும். பயிரிடுவோர் காட்டையெரித்து வேர்களை அகற்றி புதரைக்கொளுத்திகரம்புதிருத்தி விதை விதைத்து நீர் பாய்ச்சி பட்டிமேயாமல் வேலிகோலிக்காத்து பயிர் தளைத்து முழுப்பலனை அடைவதுபோல் பத்திராதிபர் பலவிஷயங்களிலும் தன் சித்தத்தைச்செலுத்தாமல் சகலத்தையும் இயாஜ்ஜியம்செய்து பிரஜாபந்துகூடலன் என்ற ஒரு கங்கணத்தைமட்டும் கைதனிலே கட்டிக்கொண்டு வஞ்சனை பொய் கடினசித்தம் இதுகளைத்தன் வழியில்வராமல் தடுத்து உண்மை என்ற ஊன்றுகோலை பக்குவமாய்ப்பிடித்து விஷய பலன்களை வெறுத்து சாந்தசித்தர்களாய் ஞானசதையும் முக்திபையும் பெறுதல் போல் பத்திரிகையைப்பூர்த்தி செய்வார்கள். பயிர்களுக்கு களைபிடுங்குவதுபோல் குற்றமுள்ளதும் அருவையானதும் அளவுகடந்தமானதுமான வர்த்தமானங்களைப்பதிப்பியாது நீக்கிவிடவேண்டும். பயிரிடுவோர்களுக்கு காரியஸ்தர்கள் சகபாடிகள் வேண்டும். பத்திராதிபருக்கு நிரூபகர்களும் உபபத்திராதிபர்களும் வேண்டியதாயிருக்கும். தண்ணீரும் குப்பையும் மழையும் தளையும் பயிரிடுவோர்களுக்கு அவசியம்வேண்டும். பத்திராதிபர்களுக்கு சந்தாதாரர்களும், செய்யாமற்செய்த உதவி, அதாவது பிரதிஉபகாரத்தை எதிர்பாராதியும் போஷகர்களும் வேண்டியதவசியம். விவசாயத்திற்கு முதலில் விதை தேவை. பத்திரிகைகளுக்கு பிரதமபிரயத்தினமாகிய நோட்டீஸ்கள் போட்டோ அன்றேல் பிரசங்கம் செய்தோ எக்கும்பிரசித்தம்செய்யவேண்டும். வரப்பு உயர்ந்தால் தாராளமாய் தண்ணீர் கட்டிக்கொள்ளலாம். தெய்வபக்தி, பொதுநன்மை, பொருந்துபோக்கு வதற்கு மனோல்லாசமாயுள்ள வர்த்தமானங்களாதியவைகள் பத்திரிகைகளில் அடங்கியிருக்குமாகில் அதிக சந்தாதாரர்கள் அதிக சீக்கிரத்தில் சேருவார்கள். யாவரும் அபிமானித்து ஆதரிப்பார்கள். நிலத்தின்தரம் வளர்த்துக்குத்தக்கபடியும் உழைப்புக்குத்தக்கபடியும் விளைவுதானும். பத்திரிகையின் அளவுசந்தா, அதில்கண்டிருக்கும் வர்த்தமானம் இதுகளுக்குத்தக்கபடியேசர்க்குலேசனும் ஆகும். பயிரிடுவோர்

லே பட்டணங்களுக்குருகில் இல்லாமல் எட்டியிருக்கும் பட்டிக்காடுகிராமங்களில் கடந்துவரும். பத்திரிகைகளும் அநேகமாய் பயிரங்கமான இடங்களில் இருக்கவேண்டிய அவசியமில்லே. (பயிரங்கமான இடங்களில் இருப்பின் அதிகநன்மைதான்.) எங்கிருந்தாலும் சகஜமாய்சகலருக்கும் வந்து வாங்கி வாசிப்பார்கள். குன்றமணிகுப்பையில் கிடந்தாலும் அதின் நிறம் மாறுது. "நாடறிந்த பார்ப்பானுக்குப்பூணூலேன்?" நிலங்களுக்கு எதிர் மூற்றுகிறவரையில் அன்றாடம் கண்காணிப்பும் அறுவடைகாலங்களில் விசேஷக்கவனிப்பும் வேண்டியதவசியம். அதுபோல் நினைவர்த்தமானம் கடிதப் போக்குவரத்துக்கிலக்கவனிக்கவேண்டியதுடன் பத்திராதிபரும் அப்போதைக்கப்போது நிகழும் சம்பவங்களைப்பற்றி சங்கிரகமாய் எழுதிவரவேண்டும். நீர் பாய்ச்சல் நீர் இறைத்தல் செய்வதைப்போல் சிற்சில சமயங்களில் அதிகவேலையுண்டானால் கூலிக்கு ஆள்களை அமைத்து அவசரவேலைகளை நடத்திவரவேணும். "பாகவதத்தே பயிர்செய்." "நாடொப்பனசெய்," "அடுத்தகைபார்த்தண்ணு" என்பதைப்போல் முக்கியமான பத்திரிகைகளை வரவழைத்து அதில்கண்டசங்கதிகளைப்பொறுக்கியெடுத்து மற்ற பத்திரிகைகளின் மாதிரியாக சகலசமாசாரங்களையும் அமைத்து அன்றன்று நிகழும் உன்னூர் வர்த்தமானம் நீதிவிசாரணைத்தீர்மானங்கள் ஆகிய இதுகளையும்சேர்த்து பத்திரிகை பதிப்பிக்கவேண்டும். அறுவடைகாலம் வந்ததாலும் கதிர்களை அறுத்துப்போர்போட்டு போர் அடித்து நெல்லையும் பதரையும் வேறுசெய்து தானியராசியாக்கி களத்துமேட்டில் ஒன்று சேர்த்து பிறகு தானியத்தை வீட்டிற்குக்கொண்டுவந்து குதிர்களில் போட்டு எலி பெருச்சாளிகள் அழித்துவிடாமலும் நெல்லை அத்து ஊதாமலும் பத்திரப்படுத்துவதுபோல் "புரூப்" காகிதங்களைத் திருத்தி அச்சடித்த காகிதங்களை அடுக்கி அதை மடித்து விசசல்கள் எழுதி தபாலாபீசில் கொடுத்து விலாசப்படி அவரவர்களுக்கு பத்திரிகைகளை சேர்ப்பிப்பார்கள். பூனைகள் திருட்டுத்தனமாய் சோறு, பால், நெய், முதலிய தின்பண்டங்களைதிருடித்தின்பதுபோல் பத்திரிகைத்திருடனும் உண்டு. இவர்களின் சாமர்த்திய திருட்டைக்கண்டுபிடிப்பது மிகவும் பிரயாசையே. நிலங்களில் தரைக்கட்டை விழுவதும் தண்ணீர் சேதமுண்டாகி நட்டுப்பாழ் வெள்ளப்பாழ் ஆவதுமுண்டு. அதுபோல் இரக்கமற்ற சந்தாதாரர்கள் ஏழைப்பத்திராதிபருடைய சந்தாவைக்கொடாமல் நிறுத்திவைத்துக்கொள்ளுவதுமுண்டு. முகதாக்ஷண்ணியத்திற்கு கைம்பெண்கர்ப்பவதியானகதைபோலும் "இத்தனை பெரிய மனிதன் என்கையைப்பிடித்தால் நான் எப்படிமாட்டேனென்று சொல்லுவேன்" என்பதுபோல் முகதாக்ஷண்ணியத்திற்குப் பத்திரிகைகளை கடனுக்குக் கொடுத்து ஏமாந்து போவதும், பெரியமனிதர்கள், நாணயஸ்தர்கள் என்ற நம்பி கையிலிருந்து தபால்கூலிகொடுத்து கடனுக்குப்பத்திரிகையைஅனுப்பி கைநஷ்டப்படுவதுமுண்டு. க்ஷௌரம் செய்யவும், வெள்ளைவெளுக்கவும், பானைசட்டி செய்துகொக்கவும் கலப்பைமுதலிய ஆயுதங்கள் செய்யவும்; அப்பட்டன், வண்ணான், குசவன், கம்மாளன், இவர்களுடையவும்; வள்ளுவன், புரோகிதன், பள்ளுபறையர், ஜோஜிஜங்கம் இவர்களுடையவும்; பண்ணைக்காறனுடையவும் சுதந்திரங்களைக்களத்துமேட்டிலேயே கொடுத்துவிடவேண்டும். அதுபோல் அநேக நிருபகர்களுக்கும் சகோதரபத்திராதிபர்களுக்கும் இலவசமாய் பத்திரிகைகளைக்கொடுத்து அதற்குப்பதிலாய் அவர்கள் பத்திரிகைகளைப்பெற்றுக்கொள்ளுவது வழக்கம். மாதிரிக்கு நெல்லு கேட்டால் எப்படி குடியானவன் தரவேண்டுமோ அப்படியே மாதிரி பத்திரிகை கேட்டால் பத்திராதிபரும் தரவேண்டும். எவ்விதகாரணத்தைக்கொண்டும் தர்க்கம் வரிதா

3m 21/9/2,004 0404:1-2

வைச்செலுத்தத்தவக்கப்படக்கூடாது. எவ்விதகாரணத்தினுலேயும் பத்திரிகை பிரசுரஞ்செய்து சந்தாதாரர்கள்முதலிய பலபேர்களுக்கும். அனுப்புவதைத்தவக்கப்படுத்தல்கூடாது. அதிகசெலுப்பனுல் அதிகமாகுல் செழிப்புகுறைவானுல் மாருல சம்பி. பத்திரிகையை ஆதரிப்போர்கள் அதிகமாயிருந்தால் அதிகசந்தாதாரர்கள். இல்லேலகுறைந்தசந்தாதாரர்களே. பயிரிடுகுடியானவன் அந்தத்தொழிலைத் திடீரென்ற விட்டுவிலகுவது கஷ்டம். பத்திராதிபரும் திடீரென்று பத்திரிகையைப் பதிப்பிக்கும் வேலையை விட்டு விலகுவது கஷ்டமாகவே யிருக்கும். பயிரிடுகிறவனுக்கு பலகடன், சமுசாயிகள் உண்டு. அதுபோல் பத்திராதிபருக்கும் காகிதம் முதலிய பலவித ஸ்டேஷனரி, அச்சுக்கூலி ஆன்மாக்ணசம்பளம் இதுபோன்ற பல சமுசாயிகள் உண்டு. சர்க்கார் வரியாதாவைக்கடன் வாங்கியதை முன்னரே கொடுத்துவிடவேணும். சாவிவஞ சில சமயங்களில் கள்ளிக் கொடுப்பதுமுண்டு. அரசுவடகூலி அப்போதே கொடுக்கவேணும். நெல் வட்டி மகசூல் காலத்தில் அளந்துவிடவேண்டும். பிரயாசைக்குத் தகுந்த பலனுண்டு. நிலத்திற்குத்தகுந்த விளைவு. அதுபோல் தபாற்கூலி முன்னரே கட்டவேணும். தயாளகுணமுள்ள தேசாபிமானிகள் தாங்களாய் தன்கொடைகளளிப்பதுமுண்டு. பத்திரிகைகளை நிறுத்தாமல் சரியாய் அனுப்பிக்கொண்டு வரவேண்டும். பிரயத்தினம், ஊக்கம், விடாமுயற்சி இதுகளுக்குத்தக்கபடி பத்திரிகைகள் செலவாகும். பத்திராதிபருடைய வித்தியாசக்திக்குத்தக்கபடியே பத்திரிகைகள் விலையாகும். பலரும் அபிமானித்துப் போஷிப்பர். இவ்விரண்டுதொழிலும் உற்றுநோக்கில் ஒன்றுக்கொன்று அநேகமாய் ஒத்திருக்கின்றது. "உழுதவன் கணக்குப்பார்த்தால் உலகுக்குத் தினையுமுமிஞ்சாது" கையைமூடிக்கொண்டிருந்தால் ஏதோ பார்க்கிறவர் களுக்கு கௌரதைதான். அதுபோல் பத்திராதிபரும் தன்படைஷ்டவஷ்டங்களையும் தனக்குண்டான செலவுகளையும் தனைத்து வருமானத்தையும் கணக்கிட்டுப்பார்த்தால் உனக்கெண்ணை வாங்கி உளக்கெண்ணை விற்றல்லுக்கெண்ணை லாபமேலும் யாதொரு பயனுமின்றி வியாத்தத்திற்கே உழைத்ததாய் ஏற்பட்டு முடிகின்றது.

எமக்கு இயற்கையாயுள்ள பத்திரிகாபிமானத்தினுலும் பிரஜோபகாரஞ்செய்யவேண்டுமென்ற அபேக்ஷையினுலும், தமிழ் பாஷையின்மீதி எமக்குள்ள ஆர்வத்தினுலும், அப்பாஷையை அபிவர்த்தி செயவதே எமது முக்கிய கருமமாயெண்ணியும், மேற்குறித்த கஷ்டநஷ்டங்களிருப்பினும் அவைகளனைத்தையும் பொறுத்துக்கொண்டு சென்ற 1903ஆ அக்டோபர்மீ 10வ யன்று நமது "பிரஜாபந்துகூலன்" பத்திரிகையை வெளியிடத்துணிந்து முன்வந்தோமாயினும் "நல்லகாரியத்திற்கு நாலாயிரம் விக்கினங்கள்" என்னும் பழமொழிக்கிணங்க போதுமான சந்தாதாரர்கள் சேராமலிருந்து வந்தமையால் குறிப்பிட்டதேதியிற் பிரசுரிக்கமுடியாமற்போய்விட்டது. ஆகிலும் ("முயற்சியுடையோரிழச்சியடையார்" எனும் பழமொழியைச் சிந்தித்து, இற்றை நாளளவும் முயற்சி செய்துவந்ததில், சேர்ந்திருக்கும் சந்தாதாரர்களின் தொகையானது எம்மைச்சேர்ந்துள்ள சந்தாதாரர்களின் தொகையைக்காட்டிலும் மிகச்சொற்பமாகவே இருப்பதாலும், இவர்களைக்கொண்டு பத்திரிகையை ஒழுங்காய் நடாத்துவதற்குகடமையாயிருப்பதாலும், ஆயிய இவ்வகளை முன்னிட்டு வாரம்மார்முறை பத்திரிகை வெளிப்படுத்திவர முடியாதிருப்பதால் நமது "பிரஜாபந்துகூலனை" மாதாந்தசஞ்சிகையாக்கி அதற்கேற்றபடி சந்தாவை மூன்று ரூபாயிலிருந்து இரண்டு

ரூபாயாக்குறைத்து இரண்டுபாரம் கைவரில் 16 பக்கங்கள் கொண்டதாக புதுக்கரூபமாய் மாதமொருமுறையாகத் தற்காலம் வெளிப்படுத்திப் பின்னர் நாளடைவில் சந்தாதாரர்கள் சேர்சேர அப்போதைக்கப்போது இந்த அபிவிர்த்திக்குறிய விஷயங்களைக்கவனித்து பக்ஷமொருமுறைபகிரங்கஞ்செய்து இறுதியில் வாரப்பத்திரிகையாக்கி வெளியிடலாமென்ற கருத்துடன் இப்போது பிரசுரஞ்செய்திருக்கும் நமது 'அநுகூலனை" நமது நேயர்கள் அபிமானித்து "பலதுளிபெருவெள்ளம" என்பதைச் சிந்தித்து தங்களாலியன்ற மட்டும் கூடிய சந்தாதாரர்களைச்சேர்ப்பித்தத் தந்து "பிரஜாபந்துகூலனுக்கு" அனுகூலஞ்செய்யும்"சர்வானுகூலர்கள்"எனும் நாமதேயத்தை அடையும் பற்சிக்குமாறு மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகின்றோம். நமது பத்திரிகைக்குத் தற்காலம் சந்தாதாரர்களாய்ச்சேர்ந்திருக்கும் அன்பர்களனைவருக்கும் வணையபத்திராதிப சகோதரர்கட்கும் இருதயபூர்வகமாய் வந்தனம்ளிக்கின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம் எல்லோரையும் இரகஷிப்பாராக. மங்களமஸ்து.

பத்திராதிபன்.

பக்தி.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்துநான்குலக்ஷம் ஜீவராசிகளில மானிடஜென்மம் வாய்ப்பது துர்லபம். "அரிதரிது மானிடராதலரிது" என்றூர் ஒளவையாரும். அது பூர்வஜென்மார்ஜித சுகிர்த விசேஷத்தினுல் நமக்குக் கிடைத்தது. இனி இந்தஜென்மம் கிடைப்பதரிது. இது அசாஸ்வதமாயிருந்தாலும் பகவத்பக்தி ரூப்பிரயோஜனத்தை உண்டாக்குகிறது. பதத்தறிவு என்ற விவேகசக்தி மனிதராய்ப்பிறந்தவர்களுக்கன்றி மற்றெந்த ஜெந்துவுக்கும் கிடையாது. அதுவேநமக்குக்கண். அந்தக்கண்ணில்லாதவன் கண்ணுபுடைத்தாயிருந்தும் குருடனே. இந்த ஜென்மத்தில் தான் நாம் சுவாமியின் பாதாரவிந்தங்களைச் சேருவதற்கேற்ற முயற்சிகளைக்கையாடவேண்டியது. மண், பெண், பொன், இந்த மூன்றுக்கும் ஆத்துமாவிற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அதுகள் நம்முடன்கூட வரப்பட்டதுகளல்ல. நம்முடைய சாஸ்வத நிதியைத்தேடியடையும் உபாயத்தை நாம் கோருமல் அன்னியர் சொத்தில் ஆசைவைத்து அலைகின்றோம். அந்த சாஸ்வதநிதியினுல் அடையும் இன்பம அற்பமும் அழிவுக்கும் துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் உரியதன்று. அது என்றும் சாஸ்வதமானது. அதையே மோக்ஷபதவி என்றும் சொல்லுவார்கள். அந்த பிரம்மானந்தத்தையடைந்தவன் மேலும் துக்கங்களைக்கண்ணுற்பாரான். வேறுவிஷயங்களையும் மனதில் நினையான். அப்பேற்பட்ட சுகத்தையடையும்படிக்கான எதுவை உண்டாக்குகிறது பகவத்பக்தியேயன்றி வேறன்று. ஜகதீசனதுகல்யாணகுணங்களையும் மகிமைகளையும், காதால் கேட்டு கண்ணுல் பார்த்து அவர் பாதாரவிந்தங்களாகிய மோக்ஷபதவியை அடைவதற்கு பக்திசெய்யக்கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம்.

அவ்விதம் பக்திசெய்வதற்கு இராகம், துவேஷம், கர்மம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், இரவினியை, அசூயை, டம்பம், தாபம், அக

ங்காரம்; இவைகளுடன் கலந்து வளராநின்ற பொய், கொலை, களவு, கள்ளுண்ணல், சோரம், ஆகிய இவைகளை நெருங்கவொட்டாமல் தடுத்து நிறுத்திற்கு பாசபந்தங்களையறுத்து ஜனன மரணமென்னும் பெருத்தன்பங்களை ஒழித்து முக்தியையடைவதற்குச் சுலபமான வழியை ஜகதீசன் நமக்குக்காட்டியிருக்கின்றார். அதாவது, பிரதமத்தில் கல்லோர்களுடன் சகவாசஞ்செய்து சுவாநுபவமடைந்த சற்குருவின் பாதகமலங்களில் சரணமடைந்து; மனம், வாக்கு, காயம், எனும் முக்கரணங்களையும் அவருக்குத்தத்தஞ்செய்து; அவர் அருளேப்பெற்று பிறகு குருவாக்கியத்தின்படி நமக்குக்கிடைக்கும் பிரயோஜனத்தை ஈஸ்வரார்ப்பணம்செய்து பகவத் கதாப்பிரவாகங்களில் சிரத்தையைவைத்து அவர் குணாதிசயங்களே வர்ணித்து அவருடைய பாதாரவிந்தத்தையே சதாதியானித்து மண்ணுயிரைத் தன்னுயிர்போலெண்ணி சன்மானித்தலானது ஜகதீசனின் கிருபாகடாக்ஷத்தைப்பெற்று நாம் கோறியமோக்ஷபீட்டையடைவதற்குத்தக்க ஏதுவாயிருக்கிறதென்றும், அப்பெறும்பதவியை யடைந்தவர்களே இந்த உலகிலெடுத்தபிறவியைப்பயன்படச்செய்தவர்களென்றும், பெரியோர்களால் திருவாய்மலர்ந்தருளிய பலநூல்களிலும்சொல்லப்பட்டிருக்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானத்தால் கடவுளின் அரியபதவியை அடைப்பார்கள். அப்பதவிவேண்டில் அப்பரமன்றனே மறவாதேத்தும் மனதையுடையவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு அது எளிதில் கிடைக்கக்கூடிய தல்ல. இந்த நிடபக்திக்கு அவசியகரமான சாதனம் சித்தசுத்தி. சித்தசுத்தியாயிருந்து பக்திசெய்த அநேகபக்தர்கள் என்றுமழிவில்லாத மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தை யடைந்திருக்கின்றார்கள். ஆனதால் நாம் பிரதிபலனைக்கோறாது ஜகதீசனிடம் பக்திசெய்து முக்தியடைய முயற்சிப்போமாக.

அமைப்பு.

இந்தியா தேசத்திற்கு வடமேற்குத்திசையில் ஒரு அரசி தன் புருஷனுடைய பூவுலன் புத்திர சந்தானமின்றி இறந்துபோனதால் ஒரு பிள்ளையைச் சுவீகாரஞ்செய்துகொள்ள மனதுடையவளாய் தூரதேசத்தில் வசிக்கும் தன் பங்காளிகளில் ஏழைக்குடியானவனின் பிள்ளைகள் நால்வரைக்கொண்டுவரும்படி கோறியவண்ணம் ஐங்கிலேய ரெஜிடெண்டுதுரை இரண்டாவது வகுப்பு வண்டியில் அந்தப்பிள்ளைகளே வைத்துக்கொண்டுவந்து அரசியின்முன் விடுத்தார். அரசி ஒரு மண்டபத்தை அலங்காரம்செய்து அதில் நான்கு மூலைகட்கும் நான்குவித சாமான்களை வைத்தாள். ஒரு பக்கத்தில் துப்பாக்கி முதலிய ஆயுதங்களையும், இனி ஒரு பக்கத்தில் அதிகவேடிக்கையானசாமான்களையும், பின்னெருபக்கத்தில் நிறைபண்டங்களையும், வேறொரு பக்கத்தில் உத்திருவுண்டமான சத்திரசந்தங்களையும் வைத்து இந்தப்பிள்ளைகள் நால்வரையும் அழைத்து இந்த மண்டபத்தில் நோடித்துத்திருக்கும் நான்கு வகையுள்ள சாமான்களில் உங்களுக்கு வேண்டிய ஒரு சாமானை எடுத்துவாருங்களெனவே; ஒருவன் துப்பாக்கியையும் பட்டாக்கத்தியையும் எடுத்துவந்தான். அவனைப்பார்த்து அரசி நீ சேனாதிபதியாவாயென்றாள் (அப்படியே 1885ல் அந்தப்பிள்ளை சேனாதிபதியானான்) மற்றொருவன் வேடிக்கைசாமான்களை யெடுத்துக்கொண்டுவந்தான். அவனைப்பார்த்து நீ வேடிக்குருவாயிரு

ன் சித்தின்படிபிரியனென்றாள். இன்னொருவன் நிறைபண்டங்களைத் தன் கைநிறைய வாரிக்கொண்டுவந்தான். அவனை நோக்கி நீ சாப்பாட்டு ராமன் சுவாமியாயிருப்பாயென்றாள். (இந்த இரண்டுபிள்ளைகளும் இதேவேலைமையில்தான் இருந்துவந்தனர்.) கடைசியாக நான்காவதுபையன் கல்லுபுத்தகங்கள் நான்கை யெடுத்துவந்தான். அரசி அவனைப்பார்த்துக்கட்டியணைத்து முத்தமிட்டு "மகனே நீ அரசாளப்பிறந்தவன்" என்று அந்தப்பிள்ளையைச் சுவீகாரஞ்செய்துகொண்டாள். அந்தப்பிள்ளைக்கு வயதுவந்து பட்டத்தைப்பெற்று இப்போது அரசாண்டுவருகின்றது. நம்நேயர்கள் இதன் தாற்பரியத்தைக் கிரகிக்கக்கடவர்.

நல்லுரை.

1 ஒருவருடன் பேசும்பொழுது மரியாதையர்ப் பேசவேண்டியதுடன், எதேனுமொருபொருளை ஒருவரிடம்கேட்கும்போதும், அவ்விதகோறிக்கையின் முடிவில் "தயவுசெய்து" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவேண்டும்.

2 வீதிவழியே நடக்கும்போது அமெரிக்கையுடன் நடப்பதோடு, உபாத்தியாயரையாவது, பெரியோர்களையாவதுசந்தித்தால் வந்தனம் அல்லது நமஸ்காரம் செய்யவேண்டும்.

3 தெருக்களில் நடக்கும்போது விருத்தாப்பியர்கட்கும், பலஹீனர்கட்கும் வழிவிட்டு ஒதுங்கி நடக்கவேண்டியது.

4 உடுக்கும்வஸ்திரங்கள்உடுப்புகள்இவைகள்சுசிகரமாயிருக்கவேண்டும். வீண்படாடான ஆடைகளினிமீது ஆசைவையாதே.

5 தினசரிகத்தை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டியது. எங்குசென்றாலும் முகம்கழுவி கைகால்களைச் சுத்தஞ் செய்துகொள்ளவேண்டியது.

6. கீழ்ப்படிதலுக்கு ஆதாரமாயிரு. ஒரு காரியத்தை இரண்டாவது தடவை உனக்குச்சொல்லும்படி இடங்கொடாதே.

7 உனக்கு மற்றவர்கள் எவ்விதமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று நீ விரும்புவாயோ அதைப்போலவே அவர்களிடத்திலும் நீ நடந்துகொள்.

8. எவரையும் மனம் கோணும்படி பேசாதே. ஒருவரைப்பார்த்து பரிகசிப்பதும், நகைப்பதும், குரூரச்செய்கைகள் என்பதை மனதில்வை.

9 உனக்குத்தன்பம் செய்தவனுக்கு நீ மறுபடியும் தன்பஞ்செய்யாதே. அவனுக்கு நன்மையே செய். அவ்விதம் தற்செய்கைசெய்தவன் விஷயத்தில் நீ என் மனமிரகசியம்பாராட்டக்கூடாது?

10 எந்தஒருகாரியத்தை இவ்விதமுடித்தபின் வேறொரு விஷயத்தை நீ ஆரம்பிக்கும்முன்சிக்கவேண்டுமேயன்றி, முதலிலெடுத்தகாரியம் முடியாதிருக்கும்போழ்தே அதை முடிப்பதை விட்டுவிட்டு வேறொரு காரியத்தை இடையிலே எடுத்துக்கொள்ளாதே

11 துஷ்டர் சகவாசத்தைவிட ஏகாந்தமினிது. அற்பரிடத்தில் நேசம்வைப்பதைவிட கடவுளிடத்தில் அன்பைச்செலுத்தி சித்தசுத்தியுடனிருப்பது மிகவும் நன்று.

12 பிறர்மீது குற்றஞ்சொல்லத்தினிவதற்குமுன் நீ குற்றமற்றவனு என்பதை முதலில் யோசிப்பாயாக.

13 உன்னுடைய ஸ்வபொருள்களின் மீது உனக்கு இருக்கிற நிறத்தையே அயலாருக்கும் இருக்குமென்பதை உன்மனதிலிருத்தி பிறர்பொருளில் அபேக்ஷியாதிருப்பாயாக.

14 ஒவ்வொரு நாளின் வேலைகளை ஜாக்கிரதையாயும் மனசாட்சிக்கு ஒத்தவிதமாயும் நடத்து.

15 ஒரு நான் பொழுதைப்போக்குவதற்கு மிதமாயும் நிஷ்கபடமாயுமிருக்கவேண்டும்.

16 ஒவ்வொரு தினத்தினுடையவும் சோதனை மயக்குசலிலிருந்து உன்னை நீ தற்காத்துக்கொள்ளவேண்டும்.

17 மித்திரர்களின் கூட்டத்திலும், பெரியோர்கள் நிறைந்த சபையிலும் ஸ்திரீகளிருக்குமிடத்திலும், நீஇருக்கும்போதும்; நியாயாதிபதிகளிடம் வசனிக்கும்போழ்தும்; உன் நாக்கைப்பத்திரமாய்வைத்துக்காப்பாற்று.

18 ஏகாந்தமாயிருக்கும் சமயத்தில் உன் மனோபாவங்களை அடக்கி ஆளுகைசெய்.

19 தூண்புரியும் தேவஇருபையைத் தானே நீ ஒவ்வொரு விஷயத்திலும் நம்பியிரு.

20 உன் மனதிலிருக்கும் இரகஸியத்தை வேறெவரிடத்திலாகிலும்செப்பி இதை வெளிடமும் சொல்லாதே என்று கூறுவதைவிட அவிவேகம் வேறொன்றுமில்லை. உன்சொந்தமனமே அந்த இரகஸியத்தைக்காப்பாற்றசக்தியற்றிருக்கும்போது அன்னியனுடைய மனம் அந்த இரகஸியத்தைக்காப்பாற்றுமென்று நீ நம்புவது பேதமையன்றோ.?

சமயயுக்தி சாலவும் பெரிது.

டெல்லிய ராண்ட ஓர் மகம்மதிய அரசன் டெல்லிசிம்மாசனத்திலிருந்தபோது பூனுவுக்கருகில் பீமநதிக்கரையில் வேலாபூர் என்ற கிராமத்துக்கு சமீபமாயுள்ள ஒரு ஆற்றைக்கடந்தபோக வேண்டியதாயிருந்ததால் தன திருப்புகளின் வரவைகாட்சித்தவனும் அதிருந்த மதியூகியும் கலீலுமறிய ஒரு ஓடக்காரனுடன் பேசிக்கொண்டிருக்கும்போழ்து இவ்வுலகத்தில் வசிக்கும் பிராணிகள் எதுவாயிருந்தபோதிலும் அதின் நிறையைக் கணக்கிடத்தன்னால் கூடுமென்ற ஷை ஓடக்காரன் சொன்னதை இம்மகம்மதிய அரசன் கேட்டுத்தான் ஏறிக்கொண்டு வந்திருக்கும் யானையின் நிறையைச்சொல்லென்ற வினவ அதற்கு ஓடக்காரன் தனது படகின்மேல் ஷை யானையை ஏற்றி ஆற்றைக்கடக்கும்படி செய்யுமென அரசன் அதற்கணங்கவும் உடனே

ஓடக்காரன் யானையைப் படகிலேற்றி அந்த பாரத்தால் படகு எண்ணீரில் அமிழ்திருந்த அளவைக்குறிப்பிட்டுக்கொண்டு பின் யானையை இறக்கிவிட்டு அந்த நிறையளவுக்குச் சற்சோ படகிலேற்றி நதை சரிபார்த்துக்கொண்டு பிறகு சற்சோ எடுத்துத்தனியே நிறுத்தி அதின் நிறையைத் தெரிந்துகொண்டு அம்மகம்மதிய அரசனுக்குத் தெரிவித்தான்.

ஓடக்காரன் புத்திசாதுரியத்திற்கும் யுக்திக்கும் அவனுடைய தீவிரமான பதிலுக்கும் மெச்சி அவனைப்புகழ்ந்துகொண்டு அவனுக்கும் அவன் சந்ததியார்களும் ஷேகிராமத்தை அம்மகம்மதிய அரசன் டோலாபூர் என்றபெயரால் நிலம் சாசனம் செய்துகொடுத்தான்

நமமவர்களின் நிலைமை.

தற்சமயத்திலும் நமது தேசமிருக்கும் நிஷ்டையை உற்று நோக்கில் நெடு நாட்களுக்கு முன்னதாகவே வெகு சீருஞ்சிறப்புமடைந்து நாகரீகத்தில் முதிர்ந்ததென நிச்சயிக்கலாம். நாகரீகத்தேர்ச்சியையும், நீர்வளம், நிலவளங்களின் பேன்மையையும்கருதியே, ஒருவர்மேலொருவராய்பற்பலவரசாங்கத்தார்கள் ஆசைகொண்டுஇங்குவந்தும் கடைசியாகதற்காலத்திலரசாளும் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் தங்களராசாட்சிக்குள்ளாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அங்கிலேயவரசாங்கம் நமது தேசத்திற்குகிடைத்தது நம்மவர்களின் அதிஷ்டவசமேயாயினும், அரும்பொருளகப்பட்டிருந்தும் அகமகிழ்ந்துண்டுகளிக்காத லோபிகளின் தனத்தைப்போல், அங்கிலேயகவர்ன்மெண்டின் விசேஷத்தால் நமகுக்கிடைக்கக்கூடிய பற்பல நன்மைகளும் இடையாமல் வருந்துகின்றோம். நம்மவர்கள் சீரடைவதற்கு ஒருவரிடம்போய் குருதிஷ்ப திபாயமாகக்கற்றுத்தெரிந்து படிக்கவேண்டுவதில்லையே! நம்மையாளும் ஆங்கிலேயர்களின் ஒற்றுமைமையும், விடாமுயற்சியையும், தேசாபிமானத்தையும், நிதர்சனமாக நாம் கண்டுகேட்டுமிருந்தும் அவ்விஷயங்களை அனுசரித்துபேன்மையடையாமல், கண்ணிருந்துங்குருடர்களாயும், காதிருந்தும் செவிடர்களாயும், திடசரீரமும், சுத்தமனமுமிருந்தும், அதனால்எவ்விதமேன்மையும் அடையாமலும், அடைப்பிரயத்தனிக்காமலும், மிருகஜீவிகளிலும் கேடாக நம்முடைய காலத்தைக்கடத்துகின்றோம். எவ்வளவுகற்றிருந்தாலும், எவ்வளவு புத்தியுக்திகளிற்றேர்ந்தாலும், தேசாபிமானமற்ற மானிடர்கள் மானிடசேயாகார். உண்பதும், உடுப்பதும், குடிப்பதும், படுப்பதும், கெடுப்பதும், மற்றஇயற்கையறிவாலும், செயற்கையறிவாலுங்கிடைத்த ஜகத்தின்பயனல் சுயநயத்தைப்பாராட்டாமலுமிருப்பது மேன்மையாகுமா? அவ்வித இயல்கையறிவில்லாத மிருகங்களும் பட்சிகளும் மற்றப்பிராணிகளுஞ் ஜீவித்து விருத்தியாகின்றன; அவைகளுக்கும் மனிதர்கள் மேலானவர்கள் என்பதற்கும் பொருளென்ன? தேசாபிமானமென்றல் என்ன? தாம்பிறந்த தேசத்தின்மீது அபிமானங்கொண்டு, தேசநன்மைக்காடி தம்மாலான பிரயாசை பெறத்துக்கொள்ளுவதாம். தற்சமயம் நம்முதேசத்தில் தேசாபிமானிகள் முன்னின்று அதற்றவதற்குரிய ராஜமான குறைகள் நிறைந்திருக்கின்றன. அஃதாவது; நிலவரிஉயர்வால் பிரசைதார்கள் தாமரையிலைநீர்போல் தத்தளிக்குதல், வருமான வரியுரல்தோரிலும் துண்பங்கள், உப்புவரியினுல்டாகு

ம் நஷ்டம், பின்னும் தோலிருக்கச்சுளை விழுங்குவதுபோல், நமது சுதந்திரங்களைக்குறைத்துக்கொண்டே வெளியாகும் சட்டதிட்டங்களின் ஏற்பாடுகள், எவ்வளவு படித்திருந்தாலும் புத்தியாலுயர்ந்தாலும், இந்தியரை அவமதித்துக் கீழ்ப்படுத்துதல் முதலியன. இன்னும் பற்பல குறைகளுமிருக்கின்றனவன்றே? மேற்காட்டிய குறைகளே அகற்ற இந்தியாவை ஜனனபூமியாகக்கொண்ட பிரஜைகள் யாவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேற்காட்டிய குறைகளால் இந்தியாவில் வாழும் அனைவருமே துன்பமடைகின்றார்கள்.

அத்துன்பத்தை அகற்ற தேசாபிமானிகள் ஆங்காங்கு தோன்றி சபைகள்வாயிலாகவும், பத்திரிகைகள்வாயிலாகவும், எடுத்துக்காட்டி நன்மை பயின்றுவருகின்றார்கள். மேற்காட்டிய பெருத்த விஷயங்களை கவனித்து அதை அகற்றும் வழியை நாடசாமான்னியர்களான நம்மால் எவ்வாறு கூடுமென்று அபிப்பிராயப்பட எதுவாகும். ஓர் மஹாரதத்தையிழுக்க எளியர், வலியர், பிரபுக்கள், என்ற பேதமின்றி ஒரே முகமாய் நின்று இழுத்து நிலைக்குக்கொண்டுவருவதுபோல் இவ்விந்தியா தேசமனைத்துக்கும், பொதுவான குறைகளாகு மிரதங்களை யிழுக்க, நம் இந்துதேசவாசிகளனைவரும் மனமொத்துழைக்கவேண்டும். அப்போதைக்கப்போது நிகழுங்குறைகளையும், அதனை யகற்றுமார்க்கங்களையும், அறிந்து கங்கணம்பூண்டு உழைக்கும், பத்திராதிபர்களின்மேன்மைகளையும், அவர்கள் புத்திக்கூர்மையினுலும் ஊக்கத்தினுலும், நிரேகப் பிரயாசையினுலும், பொருட்செலவையுங்கருதாதுவெளிப்படுத்தும் பத்திரிகைகளுக்கு எப்படித்தியிருக்கும் சுவல்ப சந்தாவைக்கொடுத்து, அதனுல் தேசவர்த்தமானங்கள், அதியற்புத சமாசாரங்கள், சட்டதிட்டஎற்பாடுகள், முதலிய விஷயங்களை அறிந்துகைக்காப்பாடுபட்டு ழைக்கும் பத்திராதிபர்களின் கையைப்பலப்படுத்தி, உற்சாகமூட்டி, அறிய பெரிய விஷயங்களை பத்திரிகைகளுக்குத்தீட்டி, அதிகாரிகளை வாட்டி, தத்தம் மித்திராகளுகுக்காட்டி, சந்தாதாரர்களைக்கூட்டி, விருத்திசெய்துவந்தால் மேற்கூறிய விஷயங்கள் யாவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல்தென்றெனப்பலித்து குறைகள் யாவும் நீங்கி, நாம் முன்னுக்குவரும் மார்க்கத்தைக்கொள்ள ஏதுவாகும். சுபம்! சுபம்!! சுபம்!!!

"தஞ்சைபுரிதேசன்."

இதுவும் ஓர் விந்தையே!

திருச்சியில் வசிக்கும் இந்தினசாமிப்பிள்ளை எனபவருக்கு பாலிய முதல் அண்டவரத உபத்திரவமுண்டு. அதற்கு அநேகவித சிகிச்சைகளைச்செய்துவந்தார். அண்டவாதத்தின் அடிகனம் தாங்கமுடியாத கஷ்டம். அதில் கோர்த்திருக்கும் தர்மீர்தனவு நமச்சலைக்கொடுக்கும். மெல்லிய ஊசியால் நீரைக்குத்தி எடுப்பது சாதாரண வழக்கம். 1872 வருஷத்தில் சாதாரணமாய் மெல்லிய ஊசியினுல் குத்தி தர்மீரை எடுத்துக்கொண்டிருக்கையில் தன்னையறியாது தற்செயலாய் ஊசி உள்ளுக்குள் சென்றவிட்டது. உபத்திரவம் மிகுந்து ஆஸ்பத்திரிக்குப்போனதில், தகுந்த சிகிச்சையினுலும்

புரித்து தர்மீரனைத்தையும் வெளியிலெடுத்த வியாதியைச் சொல்லத்தக்கது இரண்டைவைத்தியர் கண்ணுக்கு உள்ளே புலப்படாமல் போய்விட்டது. அதுமுதல் 32 வருஷங்களாக உள்ளே சென்ற ஊசி தனக்குவேண்டிய அளவு இருப்பிடம் செய்துகொண்டு இஷ்டத்திற்கு இதமானபடி மீட்டுப்போக்காய் பனம்போனபோக்கு போய்க்கொண்டிருந்ததால், அந்த ஊசி எந்தெந்த இடங்களில் நிற்குமோ அந்தந்த இடங்களில் சிறுகுகள் தானுவதும், சிழ்வடிவதும், பொறுக்கமுடியாத நமைச்சலுண்டாவதுமாக இருந்துவந்தது. இவ்விதமாய் இவ்வளவென்று எண்ணிமுடியாத ஹிம்சைகளைச் செய்துவந்த இந்தத்திருட்டு ஊசியானது இற்றைக்குச்சின்னுள் முன்னர் ஒரு சிறந்த வழியாய் தனக்குப்பாதை செய்துகொண்டு வெளியே புறப்பட்டது. 32 வருஷங்களாய் சரீரத்துக்குள் இருந்த இந்த ஊசி, திருப்பிடிக்காமலும் பளபளப்புடனும் புது ஊசியைப்போன்ற நிறத்துடனும் வெளிவந்தது மிகவும் விந்தைக்குரியதே.

"காணுதுரையேன்."

இதென்ன ஆச்சரியம்?

யாழ்ப்பாணத்தில் ஒருநாள் கதிரைசொத்திரியில் 5 பேர்கள் கூடி வாடகை மாட்டு வண்டி ஒட்டுகிற ஒருவனிடம்போய் இரண்டுமைல் தூரத்திலுள்ள தங்கள் குறிப்பிட்ட வீட்டிற்கு வண்டி விடமுடியுமாவென்றுகேட்க, 5 ரூபாய் கொடுத்தால் வண்டி ஒட்டிவரமுடியுமென்று வண்டிக்காரன் சொல்ல, அதற்கு 5 பேரும் 5 ரூபாய் நோட்டு ஒன்றை வண்டிக்காரனிடம் கொடுத்து வண்டியிலேறிச்சென்றார்கள். பிறகு முன் சொன்ன 2 மைல் தூரத்திலுள்ள வீட்டிற்குச்சமீபமாய் போனவுடனே 3 பேரும் வண்டியைவிட்டு இறங்கிவிட மற்ற இரண்டுபேர்கள் வண்டியிலிருந்தபடியே திரும்பப் புறப்பட்ட இடத்திற்கே போகவேண்டுமென்று சொல்லி வண்டிக்காரனுக்கு மேற்கொண்டு ஒரு ரூபாய் வாடகை கொடுத்து வண்டியில் வந்தார்களாம். வண்டிக்காரனுடையவீடு சமீபித்ததால் வண்டியிலிருந்தவர்கள் இறங்கிப்போய்விட வண்டிக்காரன் வண்டியை அவிழ்த்துவிட்டுவிட்டு தன் வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவனுக்குச்சரியாகாண, மறுநாள் விடியற்காலையில் கேற்று இராத்திரி அவர்களிடம் வாங்கி முடிந்து வைத்திருந்த 5 ரூபாய் நோட்டும் 1 ரூபாய் நொக்குமாய் அவிழ்த்துப்பார்த்ததில் கோட்டும் பணமும் இல்லாமல் இரண்டும் வெறுங்கடிதாசியாகவும், அதில் வரைந்திருந்தது யாதெனில்; "எங்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வராமல் இங்கிலீஸ்காரன் தடுக்கருன், ஆனாலும் நாங்கள் விடமாட்டோம்" என்றமிருந்ததாம். அதுமுதல் எங்குப்பார்த்தாலும் சுரம் சாதாரணமாய் நடமாடுகிறதாம். தெற்குலங்கை மாகாணங்களில் காணப்படவில்லை. இனி பின்னுக்குப்பார்ப்போம்.

தேவஞ்சாரி.

சன்மார்க்க சரிதைகள்.

பூர்வகாலத்தில் தன்னுடைய தருமத்தினாலுள்ள அநேக செய்கைகளினால் தினதையாளன் என்று அழைக்கப்படும் ஓர் உயர்குலவேந்தன் இருந்தான். அவன் தன்னுடைய அரண்மனையில் வாரமொரு முறை எல்லா ஏழை ஜனங்களையும் வரவழைத்து அவர்களுடைய கஷ்ட சுகங்களை விசாரித்து அவரவர்களுடைய அவசியத்துக்குத்தக்கபடி சகாயம் செய்துவருகிற ஒழுங்கான வழக்கத்தை வைத்திருந்தான். ஒரு நாள் ஒரு ஏழை விதவை பதினேந்து வயதுள்ள சௌந்தரியவதியான தன் ஏகபுத்திரியுடன் அரசன் கொலுமண்டபத்திற்கு வந்தாள். அநேக மனுதார்களுடைய கூட்டத்தில் அவளுடைய முறைவந்தபோது அரசன் அவளுடையவும், அவள் குமாரத்தியுடையவும், அபூர்வமான மரியாதையையும், கற்புத்தன்மையையும், அவர்கள் நடக்கும் கோலத்திலும் நோக்கத்திலும் கண்டுகொண்டு, தாராளமாய் அவளுடைய குறைகளைச்சொல்லிக்கொள்ளும்படி நேறறல் வார்த்தைகளைச் சொன்னான். அவள் அதிக நாணத்துடன் கண்ணீர் சோர அடியில்கண்டபடி அரசனைப்பார்த்துச்சொல்லலாரம்பித்தாள். திருபா சமுத்திரமாகிய வேந்தனே! என் வீட்டுவாடகைக்குப்பாக்கி நான் ஐந்துபொன் கொடுக்கவேண்டியிருக்கிறது. என் நிற்பாக்கியமானது அதைச்செலுத்துவதற்கு எனக்கு வேறு வழியில்லாமலிருக்கிறது. என் புத்திரியாகிய இந்தப்பெண்ணை இதபரியந்தரம் அதிகக்கவலை கருத்தைக்கொண்டு நீதி ஒழுக்கமான மார்க்கத்தில் படிப்பித்து வந்திருக்கிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்குச் சொந்தக்காரன் என் குமாரத்தியைச்சோர மார்க்கத்திற்குக் கட்டாயப்படுத்தவேணுமாய் பயமுறுத்துகிறான். அது என் நெஞ்சைப்பிளக்குகிறது. அவனுடைய வாடகைப்பணத்தை எங்கள் நாணயமான உழைப்பினால் நாங்கள் சம்பாதித்து அவனுக்குச் செலுத்துகிறபரியந்திரம், இந்தக்கொடிய மனிதனுடைய துஷ்டதனத்திலிருந்து எங்களைக்காப்பாற்றும்படி உத்திரவுசெய்யவேண்டுகிறேனென்றாள். அவளுடைய மாசற்ற கற்புநிலைமையையும், மரியாதையையும் அரசன் பார்த்து ஆச்சரியப்பட்டு அதைநிறைவேற்றவேண்டுமென்று சொல்லி உடனே ஒரு சீட்டு எழுதி அவள் கையில் கொடுத்து அதைக்கொண்டு போய் தன் காரியஸ்தனிடம் கொடுத்தால் அவன் ஐந்துபொன் கொடுப்பான்; அதை வாங்கி வீட்டுவாடகைப்பாக்கியைச் செலுத்திவிடென்றான். உடனே அந்த ஏழை விதவையும் அதிக சந்தோஷமுண்டாய் அரசனுக்கு அநேகமுறை வந்தனம் செய்துவிட்டு அவன் காரியஸ்தனிடம்போய் அந்த சீட்டைக்கொடுத்தாள். அவன் அதைப்பார்த்து 500 பொன் கொடுத்தான். அவனுடைய செய்கைகளுக்கு அவள் ஆச்சரியப்பட்டு இது தன் நாணயத்தைப் பரிசோதிப்பதற்குச் செய்த ஒரு தந்திரமென்று பயந்து ஐந்துபொன்னுக்கு மேல் ஒரு காசுகூட வாங்கமாட்டேனென்றாள். அரசனுடைய உத்திரவின் படி 500 பொன் கொடுத்திருப்பதாய் காரியஸ்தன் பிடிவாதமாய் வற்புறுத்தியும், அவன் புத்தியிற்படவில்லை. கடைசியாக காரியஸ்தன் அவளை அரசனிடம்முன் கொண்டுபோய் நடந்த சங்கதிகளைச் சவிஸ்தாரமாய்ச்சொன்னான். அந்த உதாரகுணமுள்ள அரசன் இந்தவிதமாகக்கேட்டு, உண்மைதான் 500 பொன் என்றுசீட்டில் எழுதிவிட்டேன், அந்தச்சீட்டைக்கொடு நான் திருத்திக்கொடுக்கிறேனென்று சொல்லி மறுபடியும் அந்தச்சீட்டில் எழுதி, அந்த

எழுதினதையைப்பார்த்து, உன் மனசுத்தத்திற்கும், ஒழுக்கத்திற்கும், தகுந்த பிரதி பிரயோஜனத்திற்குப் பாத்திரமுள்ளவளாயிருப்பதால் உனக்கு 000 பொன் கொடுக்கும்படி உத்திரவு செய்திருக்கிறேன்; அதில் உன்னால் எவ்வளவு மீத்தவைக்கக்கூடுமோ அதை உன்மகன் கலியாணகாலத்தில் தானமாக அவளுக்குக்கொடு என்றான்.

ஈஜிப்ட்டு தேசத்து அரசனாகிய செசோஸ்ட்டிரிஸ் என்பவன் தான் தனையில் வைத்திருந்த நான்கு அரசர்களையும் தன் இரதத்தை இழுக்கும்படி செய்தான். அந்த நால்வரில் ஒருவன் சதா அந்த இரதத்தின் சக்கரத்தைப்பார்த்தவண்ணமாயிருந்ததை, ஈஜிப்ட்டு அரசன் கருத்தாய்ப்பார்த்து, அப்படிப்பார்ப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்க அவ்வரசன், ஐயா சக்கரம் சுற்றுவதை நான் பார்க்குமிடத்து, இப்போது கீழேயிருக்கும் பாகம் தகஷணம் மேலாவதும், மேலாகயிருக்கும் பாகம் உடனே கீழாவதும், நம்முடைய செல்வம் நிலையாமை யென்பதற்கு அதிகுறியாயிருக்கிதென்றான். ஈஜிப்ட்டு அரசன் அதிக கருத்துள்ளவனபடியால், அந்த சொல்லைத் தீர்க்கமாய் யோசித்து உடனே அந்த நான்கு அரசர்களையும் விடுதலைசெய்து அவர்களுடைய தேசத்திற்கு அனுப்பிவிட்டான்.

இவ்வுலக இன்ப நிலையாமை.

மனிதனுடைய விதிவசமானது சகலவாற்றலையும் தனக்கு மறுமைக் காரத்தேடவேண்டியிருக்கிறது.

இம்மையான தாசைக்கும் நினைவுக்கும் உடனே அனுபவபலனடைவது மிகவும் அரிதே.

ஆகையால் இக்குறைவுகளுக்கு நாம் நியாபகம் அல்லது ஒன்றுக்கு எதிர்பார்ப்பதாகிய மறுமையின் பலனையே நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

ஒவ்வொருவரும் தாங்கள் கொள்ளும் ஆசையானது அடிக்கடி சடமாடிப்போவதையும், ஆயிரம் விக்கினங்களால் தடுக்கக்கூடியதாகவே எதிர் பார்த்து சரிப்படாமையாயிருப்பதையும், தனக்குத்தானே தெரிந்துகொள்ளுகிறார்கள்.

அன்றியும், பாலியத்தில் உலகத்தை வசியப்படுத்த நினைக்கும் நமது தூணிவு வார்த்தீகத்தால் குறைந்தபின்பு நம்முடைய ஆயுள்காலத்தில் கடந்துபோயிருக்கும் உண்மையான காரியங்களையும், சுகயமான அனுபவங்களையும் நினைத்து (பொழுதுபோக்க) காலங்கழிக்கும் சாதாரணமாய் பிரயத்தனம் பண்ணுகிறோம் அல்லது விரும்புகின்றோம்.

ஆனால் உலகம் துன்பத்தால் நிறைந்திருப்பதால் சந்தோஷத்திற்குண்டான சகலவழியும் சுட்டுமன அபிக்ஷையும் கத்தளிக்கின்றது.

சென்றகாலத்திலே நமது எண்ணங்களை உபயோகிக்க வெகு (போதுமான) காரியங்கள் நடந்து அநேகஇடையூறுகளும், சஞ்சலங்களும், விளைந்திருப்பதால், அவைகளை நினைக்க மனது ஒப்பாமல், மனதில் அதுகளை நி

னத்துக்கொள்ளப்பயந்து (அவைகளே மற்கும்படி) மனிதர் சகவாசத்தையும் சந்தோஷகரமான காலக்ஷேபத்தையும் அபேக்ஷிக்கிறோம்.

தனக்குப்பாதியதான பின் பாலியத்தில் அனுபவித்த சுகங்களை நினைத்து விசனப்படுவோரெருவனுமில்லை.

ஆனலும் குற்றமற்ற களிப்போடு சென்ற அநேக பதற்காலங்களும் யோக்கியதையான மகிழ்ச்சியோடு சென்ற அநேக இராக்காலங்களும், அவன் நினைவிற்குவரும்.

அதிர்ஷ்ட வசத்தால் சித்தித்த அநேக நன்மைகளும் மனுவுற்சாகத்தால் செய்த அநேக கோலாகலங்களும், அப்போதவன் மனதில் வராமலிராதுகள்.

அன்றியும் அவன் பல வேலைகளில் உடன்பட்டவனுயும், அருமையும் கஷ்டமுமான காரியங்களில் பண்பட்டவனுயும், செல்வத்தையும் வறுமையையும், அனுபவித்தவனுயுமிருப்பானுகில்; சிறுமையை எண்ணி மனங்களராது சகித்ததையும், சம்பவித்த பொல்லாங்கனேத்தையும் ஊக்கத்தோடு வென்றதையும், அந்தந்த தொந்திரவுகளை உபாயத்தோடு நீக்கியதையும், நினைத்து மேலான இன்பமடைவான்.

சம்பவித்த பொல்லாங்கு நமது தப்பிதத்தால் வந்ததாயும், அதற்கு நாம் அஞ்சியதாயுமில்லாமல் அதை வென்றதிஞல், இனிஒருகாலம் அதை நரம் நினைத்து அனுபவிக்கும் சந்தோஷத்தைவிட பெரிய சந்தோஷம் வேறெருன்றுமிராது.

ஆனல் இவ்வகையான சந்தோஷத்தை நம்முடன்கூடியனுபவிக்க மிகவும் உரிதானவர்கள் இப்போதிறந்துபோயிருப்பதை நினைக்கும்போது அந்த சந்தோஷம் குறைந்தேபோகின்றது.

சிலவருஷங்கட்குள்ளே மனிதருள் வெகுபேர் மடிந்துபோகின்றபடியால் இவ்வுலகத்திலே நம்முடன் மருவியபேர்களும் சிறுகாலத்திற்குள் இறந்துபோகக்காண்கிறோம்.

ஒரு பெருங்கருமத்தை மூடித்திருப்பவன், அதைச்செய்த விதங்களைச்சொல்லி முடித்தவுடனே அதற்காகத்தனக்கு உதவியாயிருந்தவர்கள் இறந்துபோனதை நினைத்து துக்கப்படுகிறன்.

சந்தோஷகரமாயிருந்தவர்களுடன் கூடியிருந்தவன் அந்த உல்லாச சந்தோஷமும், மகிழ்ச்சியும் அற்று இப்போதிறந்துபோயிருக்குமலர்கள் உயிருடன் இருந்தபோது எடுத்துக்காட்டிய நியாயங்களையும் சமயோசித உத்தரங்களையும் திடீரென்று நினைப்பான்.

பிதிரார்ச்சிதமில்லாமல் தன் பிரயாசத்தினுலே தனந்தேடிய வியாபாரி அந்தத்தனத்தைப்பிற்காலம் அனுபவிக்கத் தொடங்தும்போது, அக்கால சந்தோஷத்துக்கடுத்தவைகளே தன்னுடன் கூடி ஆலோசித்திருந்த பிரியமுள்ள நேசர்கள் இறந்துபோய்த் தனிமையாய் நின்ற தன்னிடத்திலிருக்கும் பொருளே நினைத்துத்துயரப்படுவான்.

வித்தையிலே நெடுங்காலம் உழைத்து அடைந்த யோக்கியதையால் வறுமையிலிருந்து நீங்கி உயர்ந்த வித்துவானுகினவன் தான் தேடிய ஐஸ்வரியத்தைக் கண்ணினுல் பார்க்கவும், தான் செய்யும் உபகாரங்களைப்பெற்றுக்கொள்ளவும் அந்த உயர்ந்த அந்தஸ்திலிருந்து இறந்துபோயிருக்கும், தன் பழய சிநேகிதர்களே மியர்த்தமாய்த்தேடி மனம் வாடுகிறன்.

மனிதர் செல்வமெல்லாம் அல்லது இவ்வுலகத்திலடையும் இன்பமெல்லாம் இத்தன்மையாயிருக்கிறவு உள்ளதேதான்.

ஆதலால் எவ்வயதடையோரும் தங்களுக்குரிய சந்தோஷத்தை மறுமையில் தான் அனுபவிக்கவேண்டியது. பாலியத்தில் நமக்கு சந்தோஷமளிக்க அதன் முன்னே நான் செய்திருந்ததொன்றுமில்லை. வீண் சஞ்சலமேயொழிய கடந்துபோனதை நினைப்பதால் வரும் பயன் ஒன்றுமில்லை. நம துகேசர்களும் அன்பர்களும் பந்துக்களும் பெற்றேர்களும் இறந்துபோய்விட்ட நினைவானது நாமும் அச்சப்படியே போக வேண்டுமென்ற எண்ணத்தை அடிக்கடி நமக்குண்டாக்குகின்றது.

உயிருடனிருக்க நாம் பண்ணும் பிரயத்தனங்களெல்லாம் அப்போதைக்கப்போது அழிந்துபோகின்றனவென்றும், நாம் இருக்கும் உலகத்தை மற்றெருவருக்கு விட்டுவிட்டு, பூர்வம் இருந்து மறைந்துபோயிருக்கப்பட்ட எண்ணிறந்த ஜனங்களோடு நாம் சேரவேண்டுமென்றும், நமக்குப்பின் இருப்பவர்களும் சிலகாலம் நம்மைப்போலிருந்து ஆசையோடாகிலும், அச்சத்தோடாகிலும் இறந்து மறையவேண்டுமென்றும் நமக்குத்தெரிகின்றது.

தேகத்தோடுகூடிய உயிர் பிரிந்துவிட்ட பின்பும் நிறைவேறுமபடி சில ஆசைகளை நாம் கொள்ளுகிறபடியால் அவனவன் தான் இறந்தபின்பு நடக்கவேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் தன் மனதிலே நினைக்கிறன்.

தங்கள் ஆஸ்திகளை இன்னர் இன்னருக்கென்று எழுதிவைக்கவும், தங்கள் ஆயுள்காலமெல்லாம் பிரயாசைப்பட்டுத்தேடிய அவ்வாஸ்திகள் அழியாதிருக்க வழிதேடவும் நினைக்கிறார்கள்.

தேர்ந்த புத்திமான்களாகிய மற்றேர் தங்களுக்கினியுண்டாகப்போகின்ற புகழையும், தாங்கள் செய்த காரியங்களுக்கென்றுமழியாதிருக்கப்போகின்றகீர்த்தியையும், தூரதேசத்து ஜனங்கள் தங்களைக்கொண்டாடப்போகுதலையும், இனிவரப்போகின்ற சந்ததியார் அந்த நன்றி பாராட்டப்போகுதலையும் நினைத்து உள்ளத்திற் சந்தோஷிக்கிறார்கள்.

ஆகையால் இறக்குமபோதுள்ள விசனத்தைத் தீர்க்கக் கிஞ்சித்து அளவாகிலும் ஆற்றல் இவ்வுலகத்தில் உண்டாவதில்லை.

மறுமையில் அவ்வாற்றலுக்கு இடமுண்டு. அன்றியும் நமது சஞ்சலத்தையெல்லாம நிவர்த்திசெய்ய குறைவில்லாத பாக்கியம் அங்குண்டு. அந்த நம்பிக்கை ஒன்றே மனிதனுடைய முக்கியமானவாம். அந்த நம்பிக்கையொன்றே நியாயமானதாம். அது ஒரு நாளும் சகிசெய்யாதென்ற நிச்சயம் நமக்குண்டு. இவ்வுலகில் நாம் காணும் சகலபொருள்களும் சீக்கிரத்தில் அல்லது கொஞ்சகாலத்திற்குள் அழிந்துபோகக்கூடியதே.

பகுத்தறிவுள்ள மனிதஜாதிகளும் பகுத்தறிவில்லாத சகலவீட்டு மிருகங்களும், காட்டுமிருகங்களும், வீட்டில் வளர்க்கப்படும் பட்சி ஜாதிகளும் ஆகாசத்திற்பறவைகளும், எல்லா ஊர்வனநீர்வாழ்வனவும், மற்றுமுள்ள சகலஜீவகோடிகளும், ஒருகாலத்தில்தேவநிர்மாணத்தின்படிசாகவேண்டியதே.

வெகுகால உழைப்பினலும் ஏராளமான பணச்செலவினலும் கட்டப்பட்ட பிர்மாண்டமான கட்டடங்களும் ஒரு காலத்தில் இடிந்துவிழுந்துபோகின்றது.

விலையுள்ள வஸ்திரங்களும் கிழிந்துபோகின்றன. எல்லாமரச்சாமன்களும் உடைந்துபோகின்றது. சகல இரும்பு சாமான்களும் துருப்பிடித்துக் கெட்டுப்போகின்றது.

பல உலோகங்களால் செய்யப்பட்ட சகல சாமான்களும் புழுக்கத்தினல் தேய்த்துபோகின்றது. பலமான யந்திரங்களும் அடிக்கடி நிப்பேருக்கு வந்துவிடுகின்றது. பலமான புகைக்கப்பல்களிலும் ஒரு ஓட்டை உண்டாகிவிடுகின்றது. ஆயிரம் வருஷங்களாய் பூமியில் பலமாய் வேரூன்றியி

ருக்கும் பிரம்மாண்டமான விருக்ஷங்களும் புகல் காற்றிலுவ் வேரோடு பிடுங்கி எறியப்படுகின்றது. தேவனுல் சிருஷ்டிக்கப்பட்டதவும் மனிதனுல் செய்யப்பட்டதுவுமான சகல பொருள்களும் அழிந்துபோகக்கூடியதே. சூரிய சந்திர நக்ஷத்திராதிகள், ஆகாயம், பிரம்மாண்டமானமலேகள், சமுத்திரம் இதுகள் அழிவுக்குறியதாவென்று சிலர் கேட்கக்கூடும். சகலமும் ஈற்றில் அழிந்து மறைந்துபோகக் கூடியதென்பது நிச்சயமும் உண்மையுமானதால், நாம் ஆம் என்றே சொல்லுவோம். இதுகள் நமது ஆராய்ச்சிக்குக் கெட்டாத பொருள்களென்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

இதுகள் நம்முடைய பரிசோதனைக்கு உட்பட்டதாயிராததினுல் அதைப்பற்றி நிர்மானிப்பது நமது தரமல்ல. இவ்வுலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டனவும், மனிதனுல் உண்டாக்கப்பட்டதுவுமான சகல பொருள்களும் அழிவுக்கு உரித்தானதாவென்று சொல்லிமுடிக்கவேணும். இந்த உலகத்தில் சாஸ்வதம் ஒன்றுமில்லே. எல்லாம செல்லவேண்டியதே செல்லத்தின் பொருள். சீக்கிரமோ சற்று தாமதமோ பரிமள வாசனேயுள்ள ஒரு புஸ்பத்தின் வாடுதலேப்போல், எல்லா கோர்ட்டு தீர்மானங்களும் மாறிவிடுகிறது. எல்லா சட்டங்களும் அடிக்கடி திருத்தியாகவேணும். மகா ஆலோசனைச் சங்கத்தின் ஏற்பாடுகளிலுங்கூட ஒரு குறை அண்டியிருக்கிறது. அதுபோல் இதுகளுக்கும ஒரு நிச்சயமான காலவிதிகளேச்சொல்லுகிறோம்.

(இன்னும வரும்.)

விஞ்ஞாபனம்.

நமது அனுகூலனின் அபிவிர்த்தியைக்கருதி பத்து ரூபாய்க்குக் குறையாமல் அனுப்பும் உதாரகுணசீலர்கள் போஷகர்களெனப்படுவர். ஸ்வபாஷாபிவிர்த்தியைக்கோறும் தேசாபிமானமுள்ள கனவான்கள் முன்வந்து தவிபுரியுமாறு வேண்டுகின்றோம்.

நமது அனுகூலன் பல இடங்களிலும் பரவிவருகின்றதுகலால் விளம்பரங்கள் பிரசுரிப்போர்க்குத் தக்க லாபம் கிடைக்கக்கூடியதாயிருக்குமென அபிப்பிராயப்படுகின்றோம். ஆகவே வர்த்தகர்கள் தங்கள் விளம்பரங்களே நமது அனுகூலனில் பிரசுரிப்பாராக.

நமது அனுகூலன் பிரதிமாதமும் முதல்தேதியில் வெளிவருவான்.

பதில் விரும்பும் நேயர்களும் வேறு எவ்வித காரணத்தைக்கொண்டாகிலும் எழுதுகிறவர்களும் ரிப்ளேகார்டிலேயே எழுதவேணும்.

பத்திரிகை சம்மந்தமல்லாத வேறு விஷயங்களேப்பற்றி எழுதுகிறவர்கட்கும், ரிப்ளேகார்டாகிலும் ஸ்டாம்பாகிலும் அனுப்பாதவர்கட்கும், கண்டிப்பாய் பதில் எழுதப்படமாட்டா.

நமது அனுகூலனின் ஒரு வருஷ சந்தாவாகிய ரூபாய் இரண்டையும் முன்பணமாகச் செலுத்துவோர்கட்கு அருமையான சித்திரந்தமொன்றும் இனமாய் அளிக்கப்படும்.

மாதிரி பத்திரிகை வேண்டுவோர் ஐந்து அரை அணு ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

N. B. இவ்வேப்பிரல் மாதசஞ்சிகையே முதற்பத்திரிகையானதாலும், எம்மால்செய்யப்படவேண்டிய கடமைகளேப்பூர்த்தி செய்வதவசியமாயிருந்தமையாலும், மற்றும்பலஅலுவல்களாலும் இம்மஹி முதல்தேதிபன்று வெளியிடத் தவக்கப்பட்டது

பிரஜாபந்துகூலன் ஆபீஸ்,
திருச்சிராப்பள்ளி.

S. G. இராமாநுஜலுநாயுடு,
பிரஜாபந்துகூலன் பத்திராதிபர்.

பிரஜாபந்துகூலன்.

ஒரு மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை.



எப்போதன்வார் வார் வாய்க்கேட்பினு மப்போதன்
மேய்ப்போதன் காண்பதரிவு.

பருவம் I. } திருச்சிராபுரம் 1904 வரு மேமீ { இலக்கம் 2.

சனிப்பள்ளிக்கூடம்.

கல்வி என்பவர் ஒரு மகா சக்தரபுருஷர். அவரே மனுக்குப் பிரமனுரு. இந்நிலவுலகில் மானிடராய் ஜெனித்த மானிலத்தின்கண் வசிப்போனேவரும், அவர் பாதகமலங்களில் சரணடைந்து சதா அவருக்குத்தொண்டுபுரிந்து அவரால் கற்பிக்கப்படும் சகல விஷயங்களேயும், கனிவர்க்கங்கள், கரும்பு முதலிய அதிரசவர்க்கங்களுக்கும் மேலாக எண்ணி மனதில் நிதித்து மனப்பாடம் செய்து அவரால் சொல்லப்படும் இதமான இனிய சொற்களுக்கு இருசெவியையச்சாய்த்து இன்புறயனுபவித்து சுயகலத்தைச் சொம்பலேனும் சோராத இந்த பரமபுருஷர், இவரை நாம் தஞ்சமென்றடைந்து இந்த பிராபஞ்சத்தில் நமது ஆயுள்காலம் வரையில் நம்மை விட்டாது நம்மூடன் கூடஇருந்துகூடிக்குலாவி சுகத்திலுவும், பசித்திலுவும், நன்மை, தின்மை, பாவம், புண்ணியம், ஹிதம், அஹிதம், வெறுக்கத்தக்கது, விரும்பத்தக்கது, முதலிய அனேத்தையும் கரதலாமலகம்போல் தெளியக்காட்டி உலகவிசரத்திற்கு ஏவுக்கு மயமான வார்த்தைகளே அருளுவையுண்டிபோல் அன்புடன் ஊட்டவித்து, சகல நூல்களேயும் பயிற்றுவித்து நமை மனுஷருக்கு மேலும் கீர்த்தியும நமக்குச் சம்பாதித்துக்கொடுத்து நம்முடைய மனதிற்கு மகிழ்ச்சியையுண்டாக்கி அறிவென்னும் பரமபொருளேத் தெளிவாய்ப் போதித்து சகல சல்லாபங்களேயும், உல்லாசங்களேயும், உள்ளபடி உயிருள்ளமட்டும் ஆண்டு அனுபவிக்கும்படிக்கும, நமை வளர்த்து வாலிபம்செய்து, நற்பழக்கம், நற்சகவாசம், நன்னடக்கை, இகபரசுகசாதக விஷயங்கள், இதுகளினுல் உண்டாகும் நன்மைகள் யாவான உபதேசரூபமான வார்த்தைகளால் நமக்கு அத்திபாபனஞ்செய்து வைத்த கல்வி எனும் மகாபண்டிதோத்தமருக்கு அன்புடன் வந்தனம். அவ்விசமமிழ்ந்தமே தந்தனம். நமக்கு ஜீவாதாரமாயிருப்பவரும் இகபரமிரண்டிலும் நன்மைகளேயளிக்குமாற்றலே வகித்த வருமிவரே. நாம் ஜீவனமசெய்வதும் அவர் அன்புடனளித்த அழியாத வித்தினுற்றான். தெவிட்டாத தேனே நமக்கு பாலியத்தில் ஊட்டிவளர்த்

தபெருமையென்ன? அதை எம் ஒரு கவ்வால் செப்பமுடியுமோ? அகர் சென்றவிடமெல்லாஞ்சிறப்பே.

அங்கிலேய அரசாட்சியின்கீழுள்ள சதலகச்சேரிகள், வர்த்தகசாலைகள், தொழிற்சாலைகள், முதலியவைகளில், பணிப்பகைவன், பாநுவாரம் ஒன்றையே ஓய்வு நாளாக்கி மற்ற சோமன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களுடைய தினங்களாகிய மற்ற ஆறுநாட்களிலும் வேலைசெய்துவரச்சே அங்கிலேய பாஷாபள்ளிக்கூடங்களுக்கு மாத்திரம் வாரத்திற்கு ஐந்துநாள்மட்டும் பள்ளிக்கூடம் வைத்து சனிற்பை அவன் தந்தையாகிய ஆதித்தனுடன்போய் ஜனத்தமாய் வாரத்திற்கெரிருநாள் பிதுத்துக்கும்படி செய்ததற்கு உற்பவகாரணமிபாதோ? அறியக்கூடவில்லை! சகலருக்கும் பிராணதாரமான பிரதான கல்வியிலாகாவிற்கு வாரத்திற்கு ஆறு நான்யன்வில்க்கூடம் வினை வைக்கக்கூடாது? ஈரொருநாள்முழுவதும் படித்தல் பண்டைக்காலத்துவள்ளிகூடங்களில் கண்டபெற்றதன. அவ்விதமாய் சனிப்பள்ளிக்கூடம் வைத்து பழைய படங்களைப்படிக்கும்படி கல்வியிலாகாவிசாரணைத்தலைவர்கள் சகல்பட்சாரகளுக்கும் ஒரு உத்திரவு பிறப்பித்தல் அதிக அவசியகரமானதாயிருக்கின்றது.

வருஷத்திற்குநாள் 366, அதில் இந்துக்கள் பண்டிகைநாள் 11, முகம்மதியர் பண்டிகைநாள் 9, கிருஸ்துவபண்டிகைநாள் 18, சக்கிரவர்த்தியாரும் அவர் குமாரரும் பிறந்தநாள் 2, கோடைகாலவிடுமுறை நாள் 45, ஆகவை ஐந்துக்கு கூடுதல்விடுமுறைநாள் 85 போக நின்ற நாள்கள் 281க்கு 40 வாரத்திற்கு வாரம் ஒன்றுக்கு கல்வியிலாகாவுக்குத் தள்ளுபடி 2 நாள்வீதம் நாள் 80 போக பாக்கி 201 நாள் பாடசாலையில் படம்படித்துவருகிறார்கள். பகல் பள்ளிக்கூடமானதினுல் பாதிபாகம் 12 மணி இரவு நித்திரையில் கழிந்துபோகின்றது நாள்கள் 100½; இதில் சொந்தகாரியங்கள், சுபாசுபவிவகயங்கள், முதலியவைகளுக்காக உத்திரவு கொடுத்துவிலும் நில்லாரை ரஜாவும் சேர்ந்து 22½ நாள் போக பாக்கி நாள் 80 இந்நாளுவருஷகாலத்திற்குப்படிக்கும் நாள்கள். தேகாரோக்கியமாயிருந்து உத்திரவு வாங்காமலும் குடும்பத்தைச்சேர்ந்த சொந்த காரியங்களைக் கவனியாது கல்விவிஷயத்திலேயே தன் முழு கவனத்தையுஞ்செலுத்தி வந்தவர்களும் நூற்றுக்கு 27½ வீதமுள்ள நாட்களே படிப்புக்கு அவகாசம் கிடைக்கின்றது. பகலிரவு பேதமின்றி ஒரு தினத்திற்கு மணி பன்னிரண்டாகக் கணக்கிட்டாலும் நூறு தினத்திற்குவரிக்கும் நாட்கள் 55 ஆக இருக்கின்றது. "இளமையிற்கல்" என்னும் ஔவையாரும், அவ்வுத்தமியின் ஆழ்ந்த கருத்துள்ள அன்புமிகுந்த சொற்களுக்கு அனேகதலைகும் அமர்ந்த அடங்கி நடக்கும். தாய்தகப்பனிகுஞ்சுபொறித்த மூன்றுவது மாதமே தன் குஞ்சுகளைக் கொத்தித் தள்ளிப்பையைக்கீறி கல்லோ, மண்ணோ, செல்லோ, உமியோ, பொருக்கித்தின்ற பிழைத்துப்போங்கென்று தூரத்திவிடுகின்றது. அதுபோல் இருபதாவது வயதுமுதல் இருபத்தைந்தாவது பிராயத்திற்குள் மானமான ஜீவனமொன்றைத்தேடிக்கொள்ளவேண்டியது புருஷராய் பிறந்தெடுத்த சகலருடைய கடன்மையாயிருக்கின்றது. ஜீவனத்திற்கு ஆஸ்திவாரம் கல்வி, அதைப்போல் இகபரசாதகமானது வேறென்றுமில்லை. "பருந்தேபோலிரண்டு" என்றிருப்பினுல் நமக்குள்ள சொற்பகாலத்தை விவேகத்தாய் வீண்விஷயவிகளிலும், உறக்கத்திலும் கழித்திடாது கல்வியை மனதில் வைத்துக் கருத்தாய் கல்விசாலைக்கடைத்தேறுதல் கடமையாயிருக்கின்றதென்பதை நாம் எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? கழிந்தகாலம் மறுபடியும்வரப்போவதில்லை. இதைத்தீர்க்கமாய் யோசித்து நமது காருண்ய கவர்ன்மெண்டார் கல்வி இலாகாவின் விசாரணைத்தலைவரைத் தண்டிவிட்டு சனிக்கிழமைதோறும் பள்ளிக்கூடம்வைத்து இப்போதிருக்கும் நூற்றுக்கு 55 வீதமுள்ள நாட்களை எழுபத்தேழாய் உயர்த்தி உலகத்தாருக்கு சாஸ்வதமான உதவியைப்புரிந்து அதிக ஊக்கத்துடன் ஒளிவிள்ள மணிரங்கு ஜீவனுக்கு உயிர்நிலையாகிய கல்விப்பொருளையிவர்த்திசெய்து நீங்காதசெல்வம் நிரம்பப்பெற்று நேரிகாலம் நிர்விகாரமாய் வாழ்ந்து நித்தியநிர்மல நித்தியானந்தவனவாழ்வை அடையும்படிக்கு அனுக்கிரகிப்பாரெனை மிகுந்த அபேக்ஷையுடன் கிரகிக்கின்றோம்.

பத்திராதிபர்

இவ்வுலக இன்ப நிலையாமை.

(16-வது பக்கத்துடர்ச்சி)

நீதியாலீட்டி அறஞ்செய்வார் செல்வம்சகடக்காலுக்குச் சமானமானது. நீதியாலீட்டி அறஞ்செய்பார் செல்வம் சுழன்றுவண்டிச்சக்காம்போல்மாறும்; அநீதியாலீட்டி அறஞ்செய்பார் செல்வம் குதிரைவண்டிச் சக்கரம்போல் குலுக்கு போகும். அநீதியாலீட்டி அறஞ் செய்பார் செல்வம் புகைவண்டிச் சக்கரம்போல் பூமியில் அழிந்துபோகும். இதுகள் நம்மூடைய ஜீவியகாலத்தில் அன்றன்றும் அனுபவபூர்வகமாய்க்கண்டறிந்த அல்லது விரித்அறைக்கூடிய பட்டப்பகலைபோன்ற உண்மைகளே. ஆயினும் அதை ஞானிகள்மட்டும் தன்மயத்துதெரிந்துகொள்ளுகின்றார்கள். மற்றவர்களுக்கோ அவர்களுடைய சுத்தமான மனதை அல்லது அறிவை அமாவாசை இருட்டைப்போலொத்த அஞ்ஞானந்தகாரம் மூடிக்கொள்ளுகிறதால் அதைத்தெரிந்துகொள்ளுக்கூடாமற்போகின்றது. நமது யோசனைகளிலும் செய்கைகளிலும்உள்ள சகல குற்றங்குறைக்கும் அஞ்ஞானமே தலைமையாயிருக்கின்றது. மதுவானது நமது நிரோகத்திற்குக் கெடுதியைச்செய்து மயக்கத்திற்குள்ளழுத்துவதைப்போலே மதம், புத்தி, அல்லதுஅறிவு, இதுகளை மறைத்து அந்தகாரத்தினில் ஆழ்த்தி அதனுல் இயற்றவேண்டிய சற்கருமங்களைச் செய்விக்காட்டாமல் தடுக்கின்றது.

இம்மையில் அனுபவிக்கும் செல்வம் அல்லது இன்பம் நிடையாதென்று சொல்லிபதுவே, மறுமைக்கு அல்லது மறுமையில் அழிவு இல்லையென்றும், அவைகளைப் முயற்சிக்கவேண்டியது நமது முக்கிய கடமையென்பதுமான இவ்வின்பருள்ள விஷயத்தைப்பற்றிப்பேச நமக்கு இடம் தரீர்.

நல்லுரை.

1. அசாத்தியமான காரியங்களில் மீண்முயற்சி செய்து இகழ்ச்சியடையாதே.
2. நினைக்கும் கேடு தனக்கு. ஆனதால் பிறர் பொருளே இச்சியாதே அது உன் கஷ்டாற்ஜிதத்திற்கு அழிவைகொடுக்கும்.
3. எவ்வளவு பலசாலியாயிருப்பினும் அசேஷ ஜனங்களின் பகையைச்சம்பாதிக்கலாகாது.
4. கடவுள் அளித்ததே போதுமென்ற திருப்தியடையாமல் அதிகமுழைப்பவனிறவன் உள்ளதையும் இழந்தேபோவான். "உள்ளதுபோச்சே கொள்ளைக்கண்ணுப்" என்றோரந்தகன் அலறியதை உணர்க்கடவர்.
5. விவேகி அடிக்கொரு நினைவுகொள்ளமாட்டான். நித்தியமான காரியங்களிலும் கெட்ட விஷயங்களிலும் தன் மனதைச் செல்லவிடுவானாட்டான்.
6. பரிகாசமான வார்த்தைகளாடாதே. அது புத்தி மதியாயிருந்தாலும் பயன்படாது.
7. மதியீனர்கள் சகவாசத்தால் வெல்ல நினைத்துத் தடுமாடிப்பின் இறுதியில் தாமே மோசம்போவர்.
8. ஏகபத்தினி விரதமே சர்வலோக்கியம். மூத்தவன் தாரம். இளையவன் பாரம். மூன்றாவது கோரம். நான்காவது நாசம்.
9. பரஸ்திரீகமனர்கள் தாமியற்றும் வியபிசாரம் பாவமன்றெனப் பகருகின்றனர். இது விக்ஷைக்குரியதே. அங்ஙனமத்தீத்தொழிலியற்றுவோர் தத்தம் மனைவியர் பரபுருஷர்களுடன் வியபிசாரம் செய்வதாய்த் தாங்களுணர்ந்தால் அதருணத்தில் தங்கள் மனம் எக்கிலேமையையெய்துமோ அக்கிலேமையையே தாம் வியபிசாரம் செய்வதினிமித்தம் ஸ்திரீகளுமடைவரென்பதையுணர்ந்து அத்தீத்தொழிலினின்றுமகல உடனே முயற்சிக்கக்கடவர்.
10. ஸ்திரீகளைக் கைதீண்டியடிக்கத்தூண்டுவது கொடுமையிலுங்கொடுமை "சற்றேனும் ஏருமாறுக இருப்பாரேயாமால் கூருமற் சண்டியாசன் சொன்" இம்மொழியை நினைத்து விலகிவிடுதல் அதிக நலம்.
11. ஒருவாளுக்கு ஒரு காரியத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது. எடுத்துக்கொண்டபின் ஒரு விஷயத்தை "நாளை" யென்ற போக்கில் விடலாகாது.
12. நல்ல சுவை தேடி போகத்திலிருக்க விரும்புபவர்களே அரசனுவமாட்டான். தெய்வம் விரும்பவுமாட்டாது. அவன் இரப்பதையே இறப்பது நலம்.

வக்கீலும் தாசியும்.

இருவருக்கும் முன்பணம் கொடுத்தேதீரவேண்டியது.

கடனுக்கு வழக்கு பேசமாட்டார்.
கட்சிக்காரன் விஷயத்தில் அக்கறையில்லை.
குத்தகையாய் நியமிக்கப்பட்டாலும் வேறுகேசிலும் பேசுவார்.
கட்சிக்காரர்மீதுபொதுநலமிராது.
சுயலாபதிருஷ்டியேயதிகம்.

உலகமே வக்கீலை நம்பும்.

கடனுக்கு கலந்தாலோசாமாட்டான்.
மாப்பிள்ளையின்பேரில் உள்ளன் புதிடையாது.
குத்தகைக்கு ஒருவனிடமிருந்தாலும் பரபுருஷன்மீதே சதாசிந்தை.
மாப்பிள்ளைவிஷயத்தில் பொதுநலமின்றி சுயலாபத்தையே சதாகோருவான்.

காமிகன் தாசிகளை விரும்புவர்.

இவர்களுக்கு பிறர்கஷ்டம்தெரியாது. பழகியபிறகேவெகுலுபத்து. கருணம்பார்த்து பணத்தைபிடுங்கிக்கொண்டு பணக்காரனையும் பிச்சைக்காரனைக்கிவிடுவார்கள். வக்கீல்களில் சத்தியவானும் தாசியில் சாத்தியமுண்டு.

கோர்ட்டு வழக்குக்கு வக்கீல் அவசியகரம்.

காம இச்சைக்கு தாசி அவசியம்.

இருவரும் ஊர்சொத்தைப்பறிப்பார்கள். இதுவயிற்றெரிச்சல்சொத்து, இது விடியாது. வரன்முறைகிடையாது. அப்பன்மகன் தப்புமுறையென்று தள்ளமாட்டாள்.

படாடோபம்.

சட்டபுத்தகங்கள் லாரிபோர்ட்கேஸ் முதலி. பணத்துக்குத்தக்கபடிவார்த்தையை அளந்துபேசுவார்.
கோர்ட்டில் பாடம் ஒப்புவிப்பார்கள்.
கட்சிக்காரருடைய கேசுகளைக்கவனிப்பர்.
கேசு ஜயமானால் அதிக சந்தோஷம்.

டம்பம்.

தினமணி கைபேட்டுமிருதி. தக்கபணத்திற்கு தக்கபடிபோகம்கொடுப்பர்.
அன்றன்று தங்கள்பாலங்களைகோயிலில் அபிக்கையிடுவார்கள்.
வீட்டுக்கு வரும் மாப்பிள்ளைகளை உபசரிப்பர்.
ஆதாயமன்சொத்தெல்லாந்தன்னிடம்சேர்ந்தால் அதிகசந்தோஷம்.

இருவர்சொல்லும் குருவாக்கே. அவர்கள்தயவைப்பெற வேண்டி பணிவிடைப்புரிவர். அவர்கள்இரக்கத்திற்கே தங்களை ஒப்புக்கொடுப்பர்.

அஜாக்கிரதையினால் கேசு பிரதி கூலமாகும்.
வழக்கிழந்தவனுக்கு வேறுவழியில்லை.
கோர்ட்டுவழக்குப்போய்க்கெட்டுதிக்கற்ற அனர்த்தம்.

நல்ல திரேகமாயில்லாமல் வியாதி ஸ்திரீயாயிருந்தால் துன்பம்.
தாசியிடம் சம்பாதித்த அற்பபாதி மண்டையோடு முழுதும்.
தாசிகளால் அழிந்த குடும்பங்கள் அனந்தம்.

ஓர் விசேஷ விஞ்ஞாபனம்.

மழலைச்சொல்லைக்கேட்டு மனமிகமகிழும் மாதாபிதாக்களைப்போல் எமதன்பர்களனைவரும் நமது அறிவுக்கு எட்டினமட்டும் நம்மாலியன்றவரையில் எழுதிவரும் சகலவிஷயங்களையும் வாஞ்சித்துணர்ந்து அதிலுள்ள குற்றங்களை நீக்கி குணத்தைக் கிரகிப்பார்களென நம்புகின்றோம். பாலகனைப்பக்குவமாய்ப் பரிபாலித்து வளர்ப்பதற்கு செலவுகண்டமெத்தவுண்டு. அதுபோல் நமது செல்வனான "அனுகூலனுக்கு" பலவித அசியகரமான செலவுகள்உண்டு. "பலதுளிபெருவெள்ளம்" என்பதுபோல் நமது நேயர்களனைவரும் புதிய சந்தாதார்களைச்சேர்ப்பிப்பதிலும் நமதுபத்திரிகையில்வியாபாரசம்பந்தமான சகலவித விளம்பரங்களை பிரசுரஞ்செய்வதற்கும் தங்களாலியன்ற உதவிபுரிந்து பாலகன் ஒங்கிவளர்ந்து பெரியமனிதனாவதுபோல் நமது "பிரஜாபந்துகூடலன்"பத்திரிகையை நிலைபெறச்செய்யவேண்டியதற்கேற்ற முயற்சிகள் புரிந்து ஊக்கமூட்டுமாறு நமது அன்பர்களனைவரையும் வந்தனபூர்வகமாய் மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வீண்பெருமை.

இந்தியா முகதத மேற்குத்திக்கில் இப்போதும் ஸ்வதந்தரராய் இருக்கும் ஒரு பெரிய இராஜ்யத்தில் அரசபுரியும் ஒரு மகாராஜனுடைய இரண்டாவது மனைவிதான் விவாகம் செய்துக் கொண்டவுடன் சக்களத்தியாகிய காலஞ்சென்ற இராணிக்கு சொந்தமான பதினயிரம்ரூபாய் விலையுள்ள அதிக உயர்ந்த பட்டு ஜரிகை மயமான சேலைகள் ஐம்பதை தன்னிஷ்டப்படி ஒரேநாளில் தானஞ்செய்துவிட்டாள். பணத்தின் அருமை அறிந்த அரசர் இதைக்கேள்வியுற்று மிகுந்த விசனமும் ஆச்சரியமும் கொண்டவராய்த்தன் மனைவியிடம்வந்து, பெண்ணே! உனக்கேன் இந்த விபரீதபுத்தி வந்தது? பொருளை நாம் காப்பாற்றினால் அது நம்மைக்காப்பாற்றும், தானம் செய்யவேண்டியது அரசர்களுக்குரியசெய்கையே. ஆயினும் அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகுமே. ஏகாலத்தில்விலையுயர்ந்த சேலைகளைத் தானம்செய்வது புத்தியீனமானகாரியமென்ற உனக்குத்தோற்றவில்லையா? ஒருகாலத்தில் ஒன்று அல்லது இரண்டு சேலைகள் தானம்செய்தால்போதாதோ? இதற்குஉற்பவகாரணமின்னதென்று உண்மையாய் உரைக்கவேணுமென்று அரசன்கடுஞ்சினத்துடன் கேட்க, அரசிதான் செய்தகாரியம் சர்வசாதாரணமானதென்று நினைத்தவளாய் மகாராஜனே! உமது முதல் மனைவியின் சேலைகளைக்கட்டிக்கொள்ள ஏனக்கு இஷ்டமில்லாதினால் அவைகளையெல்லாம் ஒரேகாலத்தில் தானஞ்செய்துவிட்டேன் என்று மறுமொழி சொன்னாள். இதைக்கேட்ட அரசன் தன் இரண்டாவதுமனைவி தான்செய்

தமதியீனமானசெய்கைக்குத்தன்னை மன்னிப்புக்கேட்டுக்கொள்ளாமல் வீண் பெருமைபடத்தலே நிதரிசனமாகக்காட்டக்கூடிய அவ்வளவுமொழிக்குஅதிக வீசனமுற்ற பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள். கிரமற்ற வடிவுற்றுகற்பென்னும் அணியை ஆபரணமாகப்பூண்டு அவதரித்த அங்கனமணியான என்இராணியை தெய்வலோகஸ்திரீகளுக்கு ஒருபடிப்பினையைக்காட்டஎண்ணி பகவான் பரலோகஇராஜ்ஜியத்துப் பெரும்பதவிக்கு அழைத்துக்கொண்டார். நான் அந்த இராணியை விவாகம் செய்துகொண்டகாலத்தில் தருமார்த்தகாமமோட்சத்திற்கு என்னுடன் சமபாகஸ்தியாகவும், இவ்வுலகத்தின்கண் இருள்நிலவைப்போல் காலவேற்றுமையினால் மாறிமாறி வரக்கூடிய, சுகம், துக்கம், நன்மை, தின்மை, லாபம், கஷ்டம், செல்வம், வறுமை, சந்தோஷம், விசனம், சௌக்கியம், அசௌக்கியம், இப்பேற்பட்டதுகள் சம்பவிக்கும் காலங்களிலும் பேதபுத்தியின்றி ஒரே மனதாய் உள்ளன்புடன் உபசரித்துக்காப்பாற்றி என்னை நம்பினபிராணியை இரட்சிப்பதாய் சகலதேவர்களையும்; பெரியோர்களையும், இஷ்டமித்திரபந்து ஜனங்களையும், சாட்சியாய் வைத்து என் முதல்இராணியை விவாகஞ்செய்துக்கொண்டேன். அவளைக் கைதொட்டாள்முதல் அவள் என்னிடத்தில் கடந்துகொண்டஉண்மையான அன்பு ஒழுக்கம்மரியாதை முதலிபகுதிகளை அபூர்வகுணங்களினால் என்னை அவள் அடிமையாக்கிக்கொண்டாள். உடல் பொருள் ஆவி அன்பு அனைத்தையும் அந்த புண்ணியவதிக்கு தத்தம் செய்துவிட்டேன். அவளுக்குத்தத்தம் செய்ததுபோக மீந்த சொத்து எனக்குச்சொந்தமானது யாதொன்றுமில்லை. உயிரொன்றும் உடலிரண்டுமாயிருந்து நாங்கள் வாழ்ந்துவந்தது உலகம்பொறுக்கவில்லை. உன் சக்களத்தியின் சேலைகளைத் தீண்டக்கூடாத அவ்வளவு அசுசையான வஸ்துவாய் நினைத்த உனக்கு அவளுடைய எச்சில் திரேகம் உனக்கு எப்படி உவப்பாயிருக்கக்கூடும்? எனக்கு வேறுதிரேகமில்லை, இறந்துபோன மனைவி அநுபவித்த திரேகம் இதுதான். அவள் எச்சிலை உண்பதற்கு ஆசைபட்டுத்தானே நீ வந்திருக்கிறாய். நான் யாருக்குச்சொந்தமானவன்? என்னிடமிருக்கும் சொத்து முழுவதும் இறந்துபோன என் காதலிக்குச்சொந்தமானது. நீ சாப்பிடும் சாப்பாடு கட்டியிருக்கும் வஸ்திரம் அணிந்திருக்கும் ஆபரணமாதிய சகலமும் உன் சக்களத்தி வைத்துவிட்டுப்போனதென்று நீ இன்னமும் அறிந்துகொள்ளவில்லையா? நீ அவள் மீது துவேசம் வைத்தால் நான் உன்னை நேசிக்கமுடியாது. நீ என்னை நம்பின பிராணியாயிருக்கின்றாய். உன் புத்தியினாலும் நடத்தைகளினாலும்என்னுடைய அபிமானத்திற்குப்பாத்திரையாகவேணும்."முதற்கோணல் முற்றுங்கோணல்" என்கிறபடி இனிமேலும் புத்தி பூர்வகமாய் நீ நடவாதபக்ஷத்தில் அது உன் க்ஷேமத்திற்கு உரியதாயிராது. ஆயினும், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, எனக்கு உன் விஷயத்தில் அபிமானமுள்ளவரையில் உனக்கு யாதொரு குறைவும் நேரிடமாட்டாது. காலஞ்சென்ற இராணியின் பதவிபாவரும் பொருமைபடக்கூடியதே. அந்த ஸ்தானத்தில் நீயும் வந்திருக்கின்றாய். எனது முதல் மனைவியை விவாகஞ்செய்ததற்கே நீயும் வந்திருக்கின்றாய். எனது முதல் மனைவியை விவாகஞ்செய்ததைப்போலவே எனக்கு சமமான பாத்தியக்காரியாக்கி உன்னைமணம்செய்துகொண்டதினால் என் இஷ்டத்திற்கு இதமாய் நடந்து என் மனதை வசியப்படுத்தி நீ மனக்கிழத்தியாய் அகவரதை வாழ்வை அநுபவிக்கவேணுமென்பதே என்னுடைய அபேக்ஷையென்று சொல்லிமுடித்தான்.

இவையனைத்தும் கேட்ட இராணியானவள் அதிக பயங்கொண்டவளாய் அரசன் காலில் சாஷ்டாங்க பூர்வகமாய் விழுந்து நீர்க்கதெண்டஞ்

சம்ப்பித்து தான் ஏழை, தங்களை நம்பின பிராணி, மாதாபிதா குரு தெய்வம் எல்லாம் ஒருருவாகி அமைத்தபொருள் தாங்களே, தான் அறியாமையினால் செய்த பிழையை மன்னித்தருளும், இனிமீது எனக்கு அரசனும் புருஷனும் மனோகரனுமான தங்கள் ஆக்ஞையின்படி நடந்துகொள்ள்க்காத்திருக்கிறேனென்று சொன்னாள். இராஜனும் புதுராணியும்சமாதானமாகி பாலும்நீரும்போல் ஒப்பறவாய் வாழ்ந்து அநேக புத்திரபாக்கியங்களைப்பெற்று நாளதுவரையில் நிரோகாரோக்கியத்துடன் மங்களகரமாய் வாழ்ந்து வருகின்றார்கள். இப்படியே இவ்வரசனைப்போல்ஒவ்வொருவரும்நடக்க முயற்சிப்பார்களானால் "சக்களத்திப்போராட்டம்" "மாற்றன்னையின்கொடுமை" முதலிய பல கெட்டவழக்கங்கள் நம்நாட்டில் நிலைபெறுதொழியுமன்றோ? "இலையானே வாடி மலையாளம்போவோம், மூத்தானே வாடி மூட்டிக்கொண்டு சாவோம்" என்ற பழமொழிப்படி அசடர்களான புருஷர்கள் பலர் நடப்பதாலுண்டாகும் கெடுதிகளை இன்னின்னதென விவரித்துரைக்கவேண்டியதில்லையே! "இரண்டுபெண்டாட்டிக்காரன் நிண்டாட்டப்பட்டான்" என்பதையுணராது பல மனைவியரை விவாகஞ்செய்துகொள்ளுதலாலும் ஒரு மனைவி இருக்க மற்றொருவளை யதியாக வரிப்பதாலும் உண்டாகும் பயனென்னையோ? மாற்றன்னையின் கொடுமையால் துன்புறும் மக்களும் பலருளர். இவர்களின் பரிதாபத்தை விவரித்தல் துயரப்பெருக்கே. "தாபோட்டு சுவைபோம்" என்பதண்மையேயன்றோ? இதைப்பின்னும் நிரூபணப்படுத்த மாற்றன்னைகள் தோன்றினார்போலும், இத்தகையமத்தமதிகள் உணர வேண்டுமென்ற கருத்துகொண்டே வித்தியாவந்தரும் விவேகியுமான இவ்வரசரின் சரித்திரத்தை இங்கெடுத்தெழுதலானேம். இதையுணர்ந்தபின்னராவது இவ்வரசரைப்போல சுகுணர்களாய் வாழ முயற்சிப்பார்களானால் நலமாயிருக்கும்.

இன்பம் தேடுதல்.

இன்பமும் துன்பமும் உலகில் அமைப்பெனச்சொல்லுவோருண்டு. ஆயினும் தங்கள்முயற்சிக்குத்தக்கபடியேஅதின்பலனை யடைகிறார்கள். சந்ததடியாய்க்காலம் கழிக்கவேணுமென்பது எல்லாமானிடர்களும் கோரப்பட்டளிவுயம். இந்த இயற்கையானவிருப்பத்தை யிவ்வுலகிலொருபோதும் பூரணமாயனுபவிக்காவிடினும் கடையாய் அந்தப்பூரணசந்தோஷத்தை நாமடையக்கடுமென்பது நமக்குள் ஒரு உறுதிப்பாடு. இத்தசாதாரண எல்லைக்குச் செல்லுவதற்கு மனிதர்கள் போகும்மார்க்கம் அனந்தம். பஞ்சேந்திரியங்களின் இன்பசந்தோஷங்களுக்கு இடங்கொடுப்பதினால் அது அவ்விடத்திற்கு வழிகாட்டுமென்று ஒருவன்நினைக்கிறான். இனியொருவன் திரவியத்தை அல்லது அதிகாரத்தை யடைவதினால் மனரம்மியத்தைப் பெறக்கூடுமென்று நினைக்கிறான். மற்றொருவன் கலவிப்பயிரி அல்லது ஏதாவதொரு தொழில்வித்தையில் தேர்ச்சியடைவதினால் தன்னுத்தரவின் ஆவல்தீரக்கூடுமென்றுநினைக்கிறான். வேறொருவன் உலகத்திற் ஒருபேரும்கீர்த்தியுமாயிருப்பது அருமையானபோராசையின் உட்குறிப்பென்கிறான். மற்றொருவன் ஏதேனுமொரு சமயக்கோட்பாட்டில் நம்பிக்கைவைப்பதினால் தன்

ஆத்துமத்திற்கு விசிறுதல் அல்லது ஒய்வு உண்டாகக்கூடுமென்று நம்புகிறான். இவர்களில் ஒருவரேனும் தாங்கள் கோரியபெருவே அடையுவில்லை அல்லது அனுபவிக்கவில்லையென்று நம்பிக்கையாயும் உறுதியாயும் சொல்லக்கூடும். தன் ஆசையின்பிரகாரம் தான் கோறிய அனவு தவக்குக்கிடைத்ததென்ற மனத்திருப்தி ஒருவருக்காவது கிடையாது. என்றாலும் உண்மையை நோக்குமிடத்து இந்த உலக வாழ்க்கையில் யாதொரு ஜீவாதாரமான மறைச்சொல்லை விடுவிப்பது ரொம்பவும் சுலபமானதே. மனிதர்களில் பெரும்பான்மையோர் ஒரு பிடிவாதமாய் ஒரு மரீசகத்தைப்பின்தொடர்ந்து அதைக்கிட்டமுன்னமே பின்னிடைந்து, என்றைக்கு மதைவிட்டு விலகும்படியாயிருக்கும் தந்திரத்தைக்கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். உலக இன்பங்களையனுபவித்து சக்கையாய்ப்போய் அதுவெல்லாம் மாயையென்றும், ஜீவனுக்கு அலக்கழிப்பென்றும், அதின்முடிவையறிந்து, ஜீவன் தனக்கின்பமான வியூகத்தைத்தேடிச்செல்லுவதில் தாங்கக்கூடாத சுமையைத்தலைமேல் கொள்ளுகிறதென்பதை அனுபோகத்தினால் நாம் கண்டறியலாம். அப்படிக்கிருந்தும் மனிதரில் பெரும்பான்மையோர் இந்தப்படிப்பினையை மனதில்கொள்ளாமல், தங்களுக்கு முன்னர் அந்த மார்க்கத்தில் சென்று பாடுபட்ட அனுபோகன்தர்களுடைய லாப நஷ்டத்தை மறுத்துவிட்டு ஒவ்வொருவனும் அந்த நஷ்டத்தின் பிரயோஜனத்தைத் தானே நேரில் அறிந்துகொள்ள விரும்புகிறான். தனக்கு இதமானபடி ஒன்றைவிட்டொன்று நினைதம், ஆசை, இதுகள் மனக்கொதுப்பை உண்டாக்கும் அவாந்தரமென்றும், மனதின் எரிச்சல் இன்னமும் ஒருவிததிருப்தியையடையாமலிருப்பதைத்தான் நேரில் அம்மாதிரிபாகமேயறிந்துகொள்ளுகிறபரியந்தம் அதுகளில் தன் புத்தியைச்செலுத்துகிறான். ஆசையென்ற பகட்டினால் இந்த நவீன உலகத்திலின்பத்தை ஆவலாய்த்தேட ஆரம்பித்து மாயாரூபத்தையே நாடுகிறான் பாக்கியவசதியின் ஆக்ஞையெல்லாம்மனோரம்மியப்பட்ட ஆத்துமாவின் விலையில்லா னன்கொடைக்குச்சமானமாகுமா?

மனிதனானவன் கீர்த்தியென்றூப்பரிசையைச்சேர்ந்தவுடன், அல்லது அவனுடைய ஜீவனின் பேராசையென்ற எல்லையைக்கிட்டியவுடன் தனது ஆயுள்காலத்தையெல்லாம் தத்தம்செய்த தான் பெற்ற பிரயோஜனமாகிய சௌக்கியமும் மனரம்மியமும் அநித்திய வாழ்வென்று தெரிந்துகொள்ளுகிறான்.

அநேக வருஷங்களாய் சலியா முயற்சி அல்லது அப்பியாசஞ்செய்து சித்திரக்காரன், வாத்தியக்காரன், நூதனகதைஎழுதுவோன் அல்லது கவிராயன், தன் அதிஉத்தமமான வேலைபகிர்மாணிக்கிறான். அது முடிவுபெற்றது. பிறகென்ன? அவன் இப்பொழுது பூரணசந்தோஷமும், திருப்தியையும் அடைந்தவனுக்கு காணப்படுகின்றானா? இல்லவேயில்லை! அவன் உடனே வேறுவேலையில் பிரவேசிக்க முயலுகிறான். இவ்விதமாக ஒரு கோறிக்கை ஈடேறினவுடன் அத்தஸ்தானத்தில் வேறொன்று உற்பத்தியாகி, இவ்வாறுசத் திருமபத்திருமப அநந்த அசாத்திய காரியங்களிலெல்லாம் புத்தி நாடுகின்றது. ஒவ்வொரு தடவையிலும் உயர்ந்த உச்சியைக்கிட்டினேமென்று நாம் நினைக்குந்தோறும், நம்முன்பாக வேறொரு உயர்ந்த மேட்டிமையானதொன்று, தூரத்தில் தோன்றுவதை நாம் கண்டு, கடையில் ஆத்துமாவானது விபர்த்தமாய் இளைத்துத்தளர்ந்து பின்வாங்குகிறது.

ஆசைக்கு அளவில்லை. அது திருப்தியடையப்பட்டதல்ல. தன்னை போஷிக்கும் வஸ்துவின்பேரிலேயே அது வளருகிறது. அந்த ஆசையானது நமது எண்ணத்தின் வண்ணம் மனிதர்களின் மனதில் சார்வதாகாலமும் உற்பத்தியாய்க்கொண்டிருக்கிறது. இதை யோசிக்குமிடத்து, ஆசையானது நிறைவேறுமல் நிலைபெற்றிருக்கும் வரையில் நாம் பூரண சந்தோஷத்தையடையப்போகிறதில்லை. இந்த விடுகதையை விடுவிக்கவேண்டுமென்பதே சகல ஆத்துமாக்களுடைய முக்கிய கருத்து. ஆசையை நீக்குவதில் ஆனந்தமும் மனத்திருப்தியையும் காணலாம். அநித்தியமான வஸ்துக்களைவிட்டு, நித்தியமான வஸ்துவை அடையும் மார்க்கமிதுவென்பதேயதின் சரியான கருத்து.

இவ்வுலகத்திலுள்ள பூர்வீகமான காரீகமுள்ள அநேகதேசத்து சாஸ்திரங்களிலும் இதின் உண்மையை வெளிப்படுத்தப்பட்டு அதற்கு வியாக்கியானங்களும் பண்ணப்பட்டிருக்கின்றது. இந்து தேசத்தாரின் தத்துவஞானம் பக்குவமான பூரணவிவேகத்தை உணர்த்துகின்றது. அதின் துண்ணிய கூறுபாடுகளையும், மானிட தத்துவத்தையும், உள்ளாராய்வதற்கு மற்ற மேற்குத்திசையிலுள்ள உலகத்தார்களில் யாதொரு சாஸ்திரங்களும் கிடையாது. கடைசியாக சுகமும் துக்கமும் நம்முடைய இஷ்டத்தைப்பொறுத்ததாயிருக்கிறது. எனெனில், அதிகள் புரம்பான காரியங்களில் நம்முடைய நிலையைப்பற்றியே அதற்கு தக்கபடியாய் நடக்கும். பஞ்சேந்திரியங்களில் நாம் மனப்பற்றுதலை ஒழித்துவிட்டால் அதாவது அநித்திய வஸ்துக்களின்பேரில் நாம் கொண்டிருக்கும் ஆசையை ஒழித்துவிட்டால் நம்முடைய மனச்சமாதானத்தை ஒரு நிமைப்பொழுதாகிலும் குலைக்கவல்லபாதொரு அபாயமும் சம்பவிக்கமாட்டாது. ஆனபடியினாலே, நாம் பிரதமத்தில் பட்டுத் தெளியவேண்டிய அல்லது அறியவேண்டிய பாடம் அல்லது புத்திமதியான தென்னவென்றால், சாஸ்வதம், அசாஸ்வதம், என்ற இரண்டையும் பகுத்தறியவேண்டியதே. அதையறிந்துகொண்டோமானால் சுயலாபநிருவர்த்தியுள்ள முடிவுக்காக நாம் படும் பாதகளனைத்தும், உண்மையான ஆனந்தம் அல்லது இன்பத்தையடையக்கூடியதல்லவென்று ஒருபிரமாணமாகச் சொல்லலாம். இது சம்பந்தமாய் நமக்குள் இரண்டுகாரியங்கள் தென்படுவதைச்சிந்திப்போம். மரணத்திற்நம் அழிவுக்கும் ஆதினமான அநித்திய துக்கமான தாழ்ந்தகாரியமொன்றும் சாஸ்விதமான மேலானகாரியமொன்றுமே. மேலேகண்ட உயர்வு தாழ்வுக்கு உரித்தான காரியங்கள் எதுவென்று ஒவ்வொருவரும் தங்களுக்குத்தாங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டும். இது ஒருகஷ்டமானகாரியமல்ல.

இன்பத்தை நிலைகொள்ளச்செய்வதும், விபரீதமற்ற நிலைமையும் அமெரிக்கையான சந்தோஷமும், லௌகீக உண்மைப்பொருளின் கலக்கமும், தெருக்கத்தினால் ஒருபோதும் கலங்காத அமைதி அல்லது அமெரிக்கையானது எவ்விதசெய்கைகளையும் சார்ந்ததாயிராது. அல்லது யாதொரு பிரயத்தனத்தின் அனுகூலபரிகூலத்தைப் பற்றியதாயுமிராது. எனெனில், நம்முடைய இன்பமானது நம்முடைய செய்கைகளின் பிரயோஜனத்தை எதிர்பார்த்தாவது அல்லது ஒரு திட்டமான முடிவை சித்தியாக்கக்கூடிய நம்முடைய முயற்சியின் காரியசித்தியைப் பற்றியாவதுயிருந்தால், அது விசனம், காரியத்தடை, முதலியதுகளினால் அடிக்கடி தளர்ந்துபோகக்கூடிய இன்பமாயிருக்கும். பஞ்சேந்திரியங்களின், இரஞ்சிதத்தை ஆசையாது நம்முடைய செய்கைகளின் காரியசித்தியில் கேவல உபேக்ஷையான கோலமே கலப்பற்ற இன்பசுகத்தைப்பெறுகிறது. அப்போர்பட்ட கோலமானது செயலற்றிருப்பதாயாவது ஒரு காரியத்தை செய்வதிலிருந்து நீக்குவதாயாவது எண்ணக்கூடாது. கருத்துமட்டும் மாறியிருக்கிறது. நம்முடைய கடமையை நாம் நிறைவேற்றவேண்டியதே நம்முடைய கருத்தாயிருக்கவேணும். மனிதஜாதிகளுடைய பொதுநன்மைக்காகவே நாம் பாடுபடுவதாயிருந்தால், நம்முடைய பிரயத்தனத்தில் நாம் தவறிப்போனலும் அது நம்மைத்தண்டிப்பதில்லை. காரியசித்திபெற்றேமென்ற இறுமாப்பும் நமக்குண்டாகாது. நாம் செய்யும் செய்கைகளின் பலன் நமக்கு உரியதல்ல. நம்முடைய அதிகாரத்திற்கு உள்பட்டதுமல்ல. நம்முடைய கடமையை நாம் செலுத்தியவுடன் நம்முடைய சம்மந்தம் முடிவு பெறுகிறது. மேலேகண்டவைகளினால் மனித சுகத்திற்கு அவசியமானது. மனக்கலக்கத்தையும் சிற்றின்பபிரியத்தையும் அடக்கி தன் மனதை வசமாக்கவேண்டியதென்றே உடனே கீழ்க்காணிக்கலாம். எல்லாவற்றையும்விட மேலேகண்டகலக்கம், சிற்றின்பப்பிரியம் ஆகிய இதுபோன்றவைகள் ஆத்மார்த்தமான தோற்றத்தை உற்பத்தி செய்வதற்கு விரோதியாயிருந்து இடைஞ்சல் பண்ணுகிறது. இதைத்தவிற, குரோதபுத்தி, பகை, கோபம், வன்மம், வெடுவெடுப்பு, ஆத்திரம், மனஸ்தாபம், இதுகள் உண்மையான சுகத்தைக்கோறும் ஒருவர் உள்ளத்தில் ஒரு நிமைப்பொழுதேனும் குடிகொண்டிருக்கக்கூடாது. எனென்றால், இப்போர்பட்ட மனோவிகாரங்களைத் தன்னிருப்பிடமாகக் கொண்டிருக்கிறவன் உண்மையான சந்தோஷத்தை ஒருபொழுதும் அடையமாட்டான். இந்த மனோசலனங்களுக்கு ஆளாகியிருப்பவன் இணக்கமின்மைக்குக் காரணஸ்தனாயிருக்கிறன். மன ஒற்றுமையே எல்லா சுகத்திற்கும் முக்கியமானது. கோபத்தைத்தூண்டுவது கோபவார்த்தையால்ல. அன்புள்ள வார்த்தைகளாலேயே. மனிதர்களுக்குள் உரிமையையுண்டாக்கி ஒப்புறவாய் யாதொருதவக்கமன்னியில் சிநேகசந்தோஷமென்னும் சிக்கலான சூழ்நிரத்தைப்பலப்படுத்துகிறது அன்பென்னும் அரியபொருளே. நம் விஷயத்தில் குற்றம் செய்த ஒருவன் மீது பகைசாதிக்காமலிருந்தால் அவன்பேரில் கோபங்கொள்ளக்காரணமேது? அவ்விதத்தற்செய்கைசெய்தவன் விஷயத்தில் நாமேன் மனமிரக்கம்பாராட்டக்கூடாது? எனெனில் அவன் செய்தகுற்றம் அவன்நெஞ்சைப்பிளைப்பதினால்தனக்குத்தானே கஷ்டத்தை உண்டாக்கிக்கொடவனுகிறன். அறியாமை அல்லது அஞ்ஞானமே ஏறதகுறைய எல்லாபொல்லாங்குகளுக்கும் தாயிடம் அல்லது உறைவிடமாயிருக்கிறதென்பதை நாம் யோசிப்போமானால், தன்மார்க்கர்கள் விஷயமாய் தரும சிந்தையுள்ளவர்களாயிருப்போமென்பது நிச்சயம். மனப்பூர்வமாய் உண்மையை அறிந்துகொள்ளாதவர்கள் உலகில் ஒருவருமில்லை.

கடைசியாக நாம் சொல்லப்போகும் வார்த்தை ஒன்றே. அதாவது பரிசுத்தமான சுகத்தை அனுபவிக்கவேணுமென்ற ஆசை உங்களுக்கிருக்குமானில், நீங்கள் அனுபவிக்கிறதற்காக எதையும் வைத்திருக்க வேணுமென்ற பிரயத்தினம்பண்ணவேண்டாம். ஆசை, பேகூ என்ற துன்பத்தைவிட்டு நீங்கி, தெய்வீகத்தோற்றமாகவே காணப்படுகின்ற உண்மைகளேம், ஆத்மார்த்தமான சௌந்தர்யம், இந்தசான்விதமான சற்குணங்களின்பேரில் உங்களுடைய அன்பைச்செலுத்தி அசாஸ்விதமான பொருள்களின் மீதுள்ள பற்றுதலை ஒழித்துவிடவேண்டும். அதுவே உங்களுக்கு மனச் சமாதானத்தைக்கொடுக்கும். அதுவே நாம் கோரிய இன்பவீடு.

பெருவாழ்வு.

இதை செல்வமென்றும், மதாளிப்பென்றும், பெரும்போகதுகர்ச்சி யென்றும் சொல்லலாம். சாப்பாடு; உடுப்பு, நகை, நாணயம், கண்ணுக்கு பகட்டான சாமான்கள், சவாரி அதாவது வாகனம், இதுகளில் எதேச்சையான இன்பசந்தோஷங்களில் நாம் கொள்ளும் அபேக்ஷை, கோலம், முதலியதுகளைக்குறிக்கும். இது அகன்ற ஆழ்ந்த இனிய விஷயம். படாடோபமாய் பொருளைவிரையப்படித்தல் அல்லதுஉபயோகப்படுத்துதலானதுசன்மார்க்க ஆலோசனை அதற்குள் உட்படுத்தி மனசாட்சியை பலமுறை பதருப்பண்ணுகிறது. பெருவாழ்வை ஏறக்குறைய குறை சொல்லப்பட்டதக்கதென்று சகலரும் சாதாரணமாய் நினைக்கிறார்கள். எந்த ஜாக்கிரதையும் கருத்துற்ற மனிதனும் அதிபோகமாய் வாழ்வது சரியான விஷயமென்று சித்தாந்தச்சுருக்கமாய் சொல்லத்துணியமாட்டான். நல்லதகப்பன் தன் குழந்தைகள் தான்வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி பாடுபட்டு சேர்த்துதைத்திருக்கிற பொருளை மதாழிப்பாய் செலவழிப்பதற்கு அதிகாரம்கொடுக்க ஒருபோதும் நினைத்திரான். என்றாலும் அநேக கஷ்ட ஜீவிகள் செய்யக்கூடிய நோக்கமானது அவ்வித முடிவையடைவதற்கே அனுகூலமாயிருக்கிறது. ஆதலால் இந்தக் காரியம் அல்லது சங்கதியானது கல்லமனிதர்களுடைய பிழை, புத்திக்கூர்மையற்ற விஷயங்களுக்கு இணையானதென்று நினைக்கயிடமில்லை. இந்தத் தப்பிதங்கள் ஜீவனின் ஒழுங்கான கருத்துக்கு இந்த அல்லது அந்த விகாரமான ஆவல்கள், சுற்றநேரமுள்ள அபிதிய ஜெயங்களென்ற ஒரு விஷயத்தை ஏற்பட்டிருக்கிறது. மேலான சிந்தனையுள்ள கௌரவமான கனவான்களுடைய பெரும்வாழ்வு இந்த சுபாவத்துக்கு தற்செயலான கோணலாயெண்ணப்படாது. சுகானுபவங்களையொத்த ஆவசிய காரியங்கள் துன்பங்களுக்குயிடமின்றி சாதாரணபாதுகாப்புகளாகவே அடிக்கடி நிகழும் அமிஷங்களாயிருக்கிறது. இனியொருகட்சியை யோசிப்போமாகுல், பெருவாழ்வானது நிஜமான இன்பசந்தோஷங்களுக்கு மூலகாரணமாயிருப்பதினால், அதை சற்று தாக்கிவைப்பது யாதொரு மனக்கலக்கத்தையு முண்டாக்கமாட்டாது. நல்ல ஆடைகளின்றி நாம் வெளியே புறப்படுவது மதிப்புக்குறைவு. ஆடையில்லாதவன் அரைமனிதனே. ஆதலால் அவசியமானஉடுப்புகள் வைத்திருப்பது மதாளிப்பு ஆகமாட்டாது. ஸ்டாக்கிங்ஸ், பூட்ஸ், சால்வைகள், தூப்பட்டாக்கள், ஜரிகைகொட்டடியுருமால, வாரணுசிசைத்துண்டுகள் இதுகள் வீண்படாடோப வேஷங்களே. முக்கியமாய பழக்கம் அல்லது தற்பழக்கங்களே இந்த வித்தியாசங்களே உண்டாக்கிவித்து கடையிலாய், பிரதமத்தில் அதிக மூஸ்திப்பாயிருந்த விஷயமெல்லாம் சாதாரணமான சௌகியத்துக்குறியபொருளாயும், அதி அவசியகரமான வஸ்துக்களாயும்வந்து தெகிழ்கிறது. மதபானம், கரப்பி, தேத்தண்ணீர், மிட்டாய்தினுசுகள் பலகார வகைகள், உயர்ந்த விலையுள்ள சுருட்டுகள், அதிக டம்பமான சாப்பாடுகள், டம்பவிருந்துகள், டம்பமான வாகனுதிகள் இதுகளோ முற்றிலும் விடத்து மனிதன் சாதாரணமாய் சமாளிக்கக்கூடும். எவ்வித கல்லெஞ்சையுடைய செட்டாய் செலவழிப்போனும், ஆச்சிம தரோகமின்றி தன் வருமானத்துக்குத்தகுந்தபடி சௌகியபோஜனம், தள்ளாதவிருந்து, சாதாரணவண்டிச்செலவு, தன் சக்திக்குத்தகுந்ததான தர்மம், பரோபகாரம், வருஷமொருமுறை

வரும் பண்டிகைகளுக்குப்பலகாரங்கள் இதுகளோச்செய்துவருவது மிதமிஞ்சின செலவாகமாட்டாது. சௌக்கியத்துக்குறிய வஸ்துக்கள் இன்னதென்றும், தன் பரியாதை யோக்கியைக்குறிய வஸ்துக்களின்னதென்றும் பகுத்தறிந்து டம்பகாரியங்களைத்தவிர்ப்பது சுலபமானகாரியமல்ல. தன் சக்திக்கு மிஞ்சின ஒரு பழக்கத்தை ஆகியிலேயே விலக்குவது புத்திபூர்வமான காரியமாயிருக்கும். பழக்கத்துக்கு வந்த ஒரு காரியத்தை திடீரென்று மத்தியில் விட்டிவிடுவது புத்தியீனமாயிருப்பதுடன்திரேகசௌக்கியத்திற்கும் ஏற்காது. அவசியகரமின்னது, பெரும்போகமின்னதுஎன்று பகுத்தறிவதே இலேசான ஒழுங்கு. அநேககாலமாக பழக்கமாகிவந்த சிலவுகளையும் தன் திராணிக்குத்தக்கபடி தன்பதிகோரணத்தை உத்தேசித்து செய்யும் யாதொரு சிலவையும் கோலாகல மென்னும் இனவகையில் சேர்க்கலாகாது. சந்தோஷ அபிவிர்த்தியையும் மனிதசாதிகளுடைய சுகவாழ்வையும் பற்றிய யாதொரு செலவுகளும்கண்மையேபயக்கும். இந்த சித்தாந்தத்தையும்சிலசன்மார்க்கர்கள் வாதிக்கிறார்கள். செல்வத்தின்பேரிலிச்சைகொள்ளுவது ழோன அல்லது தக்கமான விஷயமென்று சொல்லுவோருண்டு. செல்வத்தின்மீது உண்டாகும் மதே விருப்பத்தை ஒடுக்குவது நன்மைக்குப் பதிலாக தீமையை அளித்ருமென்று சொல்லும் நியாயம் இன்னமும் ஆதேக்கியமானதாயிருக்கும். சோம்பேரித்தனமானது பெரும்போக வாழ்வுக்கு அவசியமான கூட்டாளியல்ல. மானிடவாழ்வு ஒரு சபை அல்லது கூட்டத்தாருக்கு பணிவிடை செய்வதற்காக ஏற்பட்டுள்ளது. அது யாதொரு ஆபத்து அல்லது இடைஞ்சல் வந்திற்றபோதும் சினேக சந்தோஷஉத்திரவாதத்தை தரக்கூடியதாயெண்ணப்படுகிறது. பெருவாழ்வை நியாயம்சொல்லித்தாக்குவதற்கு இரண்டு நியாயாதாரமுண்டு. பிரதமம், அறிவுவிர்த்திக்குக்காரணமானது. துதியம், சிங்காரத்தின் யோக்கியதையை மதிப்பிடுதலே. சவுந்தரியத்தின்பேரில் இச்சைகொண்டு அதேதான் அடையும் முடிவாயும், அதிலும் தன் வரம்புகடவாத சுகவாழ்வைக்கோருவதில் வாக்குகண்டனை செய்யலாகாது. அதைரியத்தையும் கொடுக்கக்கூடாது.

பலதிரட்டுக்கோர்வை.

ருஷிய ஜப்பானிய யுத்தம்:—இந்த யுத்தத்தைப்பற்றிய விஷயங்களியாவும் வெகு அற்தரங்கமாகவே இருக்கின்றது. ஜப்பானியர்களின் முன் யோசனையே இந்த யுத்தத்திற்கு காரணம். கடற்சண்டையில் ஜப்பானியரே வெற்றியடைந்தனர். தரைச்சண்டையிலும் அவர்களே வெற்றியடைக்கூடியதாயிருக்கும். ருஷியா பலவித்திலும் கஷ்டமேயடைந்துவருகிறது. ஜப்பானியர்களின் தேசாபிமானம் ஸ்லாகிக்கத்தக்கது. தரைச்சண்டையுடன் இந்தயுத்தம் முடிவடையும்போலும்.

நாடகம்:— மிகுந்த பிரசித்தியாதி பெற்றிலங்கும் மகா-ா-ஸ்ரீ P. S. அரங்கசாமி அப்பங்காரவர்களது "ஹிந்து ராயல் டிராமரடிக்கம்

பெனி" யாரால் திருச்சிராப்பள்ளியில் நடாத்திவரும் பிரதிசரித்திரங்களும் பார்க்கமனோகரமாயும், நேத்திரானந்தமாயும் மனதைக்கவரத்தக்கதாயு மிருப்பதைக் குறித்து நாம் மிகவும் சந்தோஷிக்கின்றோம். மிகுந்த பிரசித்தி பெற்றஇராஜபார்ட் G. S. முனுசாமிநாயுடவாகள் ஸ்டேஜ்மானேஜராயமை ந்ததகாரணங்கொண்டு இன்னும் மிக்கவிமரிசையாய் நடைபெற்றிலங்குமென் றெதிர்பார்க்கின்றோம்.

அறிக்கை:— நமது பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச்சேர்க்க ஏஜண் டுகள் தேவை. தக்க கமிஷன் அளிக்கப்படும். ரிப்ளை கார்டாகிலும் ஸ்டா ம்பாகிலும் அனுப்பாமல் பதில் பெறவிரும்புவோர்கட்குப் பதிலும், ஐந்து அரை அணா ஸ்டாம்பு அனுப்பாதுமாதிரி பத்திரிகைவேண்டுமென்று எழு துகிறவர்கட்குப்பத்திரிகையும், பத்திரிகை சம்மந்தமல்லாத ஏனையவிஷய களைப்பற்றி எழுதுகிறவர்கட்கு மறுமொழியும், பத்திரிகையில் பிரசுரியாது தவிர்க்கப்பட்ட விஷயங்களைத்திருப்பியும், அனுப்பப்படமாட்டா.

கலாப்பிரகாசினி:— "ஜெயவிஜயன்" எனும் கதைப்புத்தகமொன் றை சென்றமாதத்தில் வெளிப்படுத்தலானோம். அதை வாசித்து ஆனந்தம டைந்த அன்பர்களின் கோரிக்கைகிணங்க அடுத்த மாதக்கடைசியில் பல அ த்தியாயங்களுள்ளதாய் மனோகரமான செந்தமிழ் நடையில் அமைக்கப்பட்டு நவரசங்களும் செறிந்திலங்கும் "கலாப்பிரகாசினி" எனும் அதி அற்புத மான சரித்திரத்தை வெளியிட வெண்ணியிருக்கின்றோம். இதை நமது ந ண்பர்கள் ஆபிமானிப்பரேல், கலாலங்கிருதன், சுகுணகலாவதி, வனசலோ சனி, வித்தியாபரணி, முதலிய புத்தகங்களை இரண்டு மாதத்திற்கோர்மு றையாய் வெளியிடுவோம்.

விளம்பரம்:—களருக்கடுத்த பள்ளப்பட்டியிலிருக்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ S. V. பாலசாமிபிள்ளை அவர்களை நமதுபத்திரிகைக்கு கமிஷன் ஏஜண்டாக இம்மாதமுதல் நியமித்திருக்கின்றோம்..

தஞ்சைமாநகரம் கோட்டை வெளிவடக்கு வாயில் புதுரஸ்தாவுக்கு கீழ்புரமுள்ள மோகர் பாவாபிரத்தாவணமண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக் கும் தஞ்சை சத்கங்கிய சமரசசுகத்தின் அங்கத்தினர்களாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ லட்சுமணராவ் அமுர்தலிங்கம்பிள்ளை வகையறாக்களால் திருவையார் சப்தஸ்தானம் பிரதக்ஷணைவைபவத்தன்று, திருவேதிகுடிக்கு சம்பததில் கூ டாரமடித்து அறுசீரச்சாலை ஸ்தாபித்து, அங்குவரும் தேவாரகோஷ்டிகளுக் கும், இன்னும் பக்தர்களுக்கும், சந்தனம், புஷ்பம், பழம், நீர்மோர், பான க்கம் முதலிய வைகளைக்கொடுத்து உபசரித்த விஷயத்தைக்கண்டு கூ சக தத்தின் அங்கத்தினர்களுக்கு வந்தனமளிப்பதுடன் சங்கம் நீடுழிவாழ நிலை ஞ்ப்பிரார்த்திக்கின்றோம்.

"தஞ்சைபுரிகேசன்"

எச்சரிக்கை:— பிரஜாபந்துகூடலன் பத்திரிகையின் ஏஜண்டர் என்று சிற்சிலவிடங்களில் கூறிக்கொண்டு ஒருவர் சந்தா வசூல் செய்ய முயற்சித்த தாயும், அது சாத்தியப்படாததால் மறைந்துவிட்டதாயும் கேள்விப்படுகின் றோம். நமது பிரஜாபந்துகூடலன் பத்திரிகைக்கு நம்மைத்தவிர வேறே ஏஜண்டர்களில்லையென்றும் பிரஜாபந்துகூடலன் பத்திரிகையின் ஆதிரியரும் அதிபரும் நாம்தானென்றும் நமது நேயர்கள் அறிந்துகொள்ளுவதுடன் அத் தகைய அயோக்கியர்கள் எவ்விடத்திலாகினும் காணப்பட்டாலவர்களை யோ சாரிடம் ஒப்புவிக்கும்படியும் கோறுகின்றோம்.

கமலாக்ஷி:— இத்தலைப்பெயர்பூனேந்த ஓரறிய சிறந்த கதை ஒன்று நமது கரத்திற்கெட்டியது. வாசித்துணர்ந்து ஆனந்தசாகரத்தினிலாழ்ந் திலேம். இப்புத்தகத்தை நமது நாட்டுச்சிறுவர்களும் சிறுமிகளும், பலர்வீ ட்டு விஷயங்களை கம்பீரமாய் வழங்கிக்களிக்கும் அநாசரீக காரீமணிகளும் வாசிப்பார்களாயின் தங்கள் தற்குணங்களை அறவே ஒழித்துநற்குணங்களை ப்பெற்று சிறப்புற்று கதாநாயகியான கமலாக்ஷியைப்போலும், கதாநாயகனை ன விஜயரங்கத்தைப்போலும் நல்லொழுக்கங்களால் கண்மைபெற்ற மேன் மையடைந்தானந்தபரிதர்களாவரென்பதிலையமில்லை. அன்றியும் வீண்கா லிட்டத்திரியும் வம்பர்கள் பலர் இச்சரித்திரத்தின்கண் 19வது அத்தியாயத் தில் பிரசங்கியாரால் விஜயரங்கத்திற்குரைக்கப்படும் விஷயங்களை வாசித்து ணருவார்களாயின் அன்றுடன் தங்கள் வாதத்தைவிட்டொழிப்பர். "அவரவ ர்கள் தமக்குத்தாமே சுதந்தரமாய்ப் பெண்களைத்தேடி மணம் புரிதல் நலம்" என்றுரைக்க முன்வருவோர் 7வது அத்தியாயத்தில் விஜயரங்கம் கூறும் ச ங்கதிகளை அறிந்தால் தாங்கள் சொல்லுவது சரியன்றென்றும், முன்னோர் கள் ஏற்படுத்தியிருக்கும் வழக்கங்களே சிறந்ததென்றுணர்வர். இந்த சரித்தி ரத்தில்கூறியிருக்கும் ஒவ்வொருவிஷயங்களும் ஹிந்துகுடும்பங்களில் உண் மையாய் நிகழக்கூடியதே. உலகியல்பறியாதசிறுவர் சிறுமியாதியோர் இந் தசரித்திரத்தை வாசிப்பார்களாஞல்உலகவியவகாரங்களைச் செவ்வனேயுண ருவதுடன் நல்லதைச்செய்தால் நன்மையிளைதலும் தீயதைப்புரிந்தால் தின் மைவிளைதலையுமுணர்ந்து தீயவழியை விடுத்து நன்மையைக்கடைபிடித்து நலமிகவடைவரென்பதிலையமில்லை. இன்னும்பலவாறுசொல்லியென்ன? இ க்கதாலை ஒவ்வொருவரும் அவசியமாய் வாசித்துணரவேண்டுமென்றும் ஒவ் வொருவரிடத்திலும் ஒவ்வொரு சபைகளிலும் புத்தகாலயங்களிலும் அவசிய மாயிருக்கத்தக்கதும், ஹஸ்தபூஷணமாய் இலகக்கூடியதுமாய் இருப்ப து,"கமலாக்ஷி" எனும் இத்தஒரு புத்தகமென்றுந்தான்சொல்லிமுடிக்கவேண் டும். இத்த புத்தகத்தைப்பற்றி எழுதுவதென்றால் நமது பத்திரிகையே இ டந்தராதாதலால் இம்மட்டில் நிறுத்தினோம். இச்சரித்திரத்தை இயற்றிய இ ங்கன் காரன்வில்ஆபீஸ் பொக்கேதாரராகியமகா-ரா-ரா-ஸ்ரீ T. M. பொன் னுசாமிபிள்ளையவர்களின் சொல்வன்மையும்,கதாகற்பனாசக்தியும்,மிகவும்மெ ச்சத்தக்கதே.. அத்துடன் அவரடைந்திருக்கும் பலகலேப்பயிற்சியும் சாஸ்தி ரநூலாராய்ச்சியும் அநுபவமும் செவ்வனே வினங்குகின்றன. 41 பாரக்க ள்கொண்டதாய் 327 பக்கங்களுள்ளதான இத்த பெரிய புத்தகத்திற்கு தபா லவாத்தனையுட்பட ரூ 1—8—0 ஏற்படுத்தியது பிரசோபகாரத்தை கருதி யே என்னலாம். மகா-ரா-ரா-ஸ்ரீ தண்டலம் பாலசுந்தரமுதலியாரவர்களும் மகா-ரா-ரா-ஸ்ரீ அனவரதநாயகம்பிள்ளை M.A. L.T. அவர்களும் அபிப்பிரா யம் தந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமையைநன்குவிளக்கும். என்றாலு ம் மற்றொரு குறைவொன்றிருக்கின்றது அதென்னையெனின் நமது நண் பர் மகா-ரா-ரா-ஸ்ரீ கி. முத்துகிருஷ்ணப்பிள்ளை அவர்கள்கூறிய படி "இன் னுமொருகதை எழுதிவிடுகாரோ" என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் தமிழ்செல்வர்களின் குறையையகற்ற மற்றொரு புத்தகமொன்றியற்றி வெளி யிட்டு அனைவரையும் ஆனந்த பரிதர்களாகும் வண்ணம் புரிவாரென மிகுந்

த அபேக்ஷையுடன் நிரீக்ஷிக்கின்றனம். இந்த கமலாம்பி சரித்திரத்தை செந்தமிழ் மாட்டன்புடையோர் பலரும் பெற்று வாசித்து ஆனந்தமடைவார்களென்றெண்ணுகிறோம். இவ்வரிய பெரிய புகழுதற்குரிய இச்சிறந்த சரித்திரத்தை பிரஜோபகாரங்கருதி வெளியிட்ட இந்நூலாசிரியரவர்களுக்கு நாம் இருதய பூர்வகமாய் வந்தனமளிப்பதுடன் நந்தமிழுலகும் இவர் மாட்டுகடமைப்பட்டிருக்குமென நம்புகின்றோம்.

விதிபெரிதோ மதிபெரிதோ?

விதி பெரிதோ மதி பெரிதோவென்று சண்டையிட்டுப் பலர் மண்டையுடைத்துக்கொள்ளுகின்றனர். அன்னவர் அடியில் வருவனவற்றை கவனிக்கக்கடவர். இற்றைக்குச் சின்னுண்முன்னர் சென்னிமலையில் ஸ்நாஞர்த்தமாய்அவணுள்ள ஜணரொன்றிற்குப்போக்த மூன்றரமணிகளில் ஒருவள்தற்செயலாய்த்தவறி ஜலத்தில்விழுந்துவிட இதைக்கண்ணுற்ற மற்றோரங்ஙனேஅவ்விபத்திலிருந்து அவளைத்தப்புவிக்கவெண்ணித்தனித்துக்கொண்டிருக்கும் தருணியின் கரத்தைபிடித் திழுக்கச்சென்றதில் இவளும் தவறிவிழுந்துவிட, இவ்விருதருணிகளையும் கரையேற்றிவிட நினைத்து உதவிசெய்யச்சென்ற மற்றோர் மாதும் தவறிவிழுந்துநீரினுள்மூழ்கிப்போகபின் இம்மூவர்களையும் காணுமென்று தேடியதில் பிரேதங்களாகக்காணப்பட்டனர்களாம்.என்னபரிதாபகரம்! அந்தோ!! பாவம்!!! பெற்றோரு முற்றோருமற்றோரு மெய்திய துயரத்தை விவரித்தல் சஞ்சலப்பெருக்கே! ஸ்நாஞர்த்தமாய்ச்செல்லுமங்ஙனமணிகள் உங்கட்கிதோரெச்சரிக்கை!

ஆசிரியவிருத்தம்.

சீரணியுங் கடலாடை யுடுத்தபுவி யென்னுளுஞ்
செழித்துவாழ்க
தேசமன்னர் நடுவழியாச் செங்கோலு மவர்பொறையுஞ்
சிறந்துவாழ்க
ஏரணியு மிந்தியா வேற்றசக்கிரவர்த்தி நம
தெட்வர்ட்வாழ்க
இலகிடு மிங்கிலண்செபைப் பார்லிமெண்டு சட்டதிட்ட
மினிதுவாழ்க
கோரிவந்து தமிழ்ப்பொருளைக்கொடுத்துவரும்பிரஜாபந்து
கூடலன்வாழ்க
குவலயத்து குடிஜனங்கள் குறையற்றவே பத்தியுடன்
குளிர்ந்துவாழ்க
சாரமுட னுலவுபல சங்கமொளிர் பத்திரிகைத்
தழைத்துவாழ்க
நனய னிராமாநுஜனைத் தர்க்காக்கு மீசர்பதம்
வாழிதானே.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7-JUN 1904
MADRAS.

பிரஜாபந்துகூடலன்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

பருவம் 1. } திருசிரபுரம் 1904ஆம் ஜூன்மீ. } இலக்கம் 3.

வட்டி.

இந்த ஆளின் உருவம் மிகச்சிறியதாயும் மூன்று எழுத்துக்குள் அடங்கினதாயுமிருந்தபோதிலும் மூவுலகத்தையும் முழுப்பூசைபோடவந்த மூதேவிபண்டார சாமியார். உலகமே இவன் அதிகாரத்திற்கு உள்பட்டு இருக்கின்றது. உலகமே இவனைக்கண்டு உடல்நடுங்கும். இவனுக்கு தர்மசிந்தை பேதையாது. சுயலாபத்தின்பேரில் சதாதிருஷ்டி. பிறர் கஷ்டம் இவனுக்குத்தெரியாது. தெரிந்தாலும் அதைக்கவனியான். இவனுக்குநேகர், உற்றூர், உறவினர், ஒருவருமில்லை. ஒரு மாதாவின் கெற்பத்தில் உற்பவித்து ஜெனித்தபிண்டமல்ல. ஆதலால் உலகபாசபந்தங்கள் இவனுக்குக்கிடையாது. இவன் சன்னியாசி. விவாகம்கிடையாது. சந்தானமுமில்லை. அப்படியிருந்தும் உலகமெங்கும் இரசப்பகலென்ற பேதமின்றி சார்வதாகாலமும் வீடுவீடாய் தூழைந்து கொள்ளையடிக்கும் கொடும்பாவி. இவன் கொடுந்தவம்புரிந்து மரணம்இல்லாமல் சிரஞ்சீவிவரம்பெற்றிருக்கிறான். இவனுக்கு இரவும் பகலும் ஒரு விநாடி நேரமாவது தூக்கம்பிடிக்கிறதில்லை. இவனுக்கு சதாஏக்கம் பணத்தின் பேரில் இருக்கும். உலகத்தில் நீரிலும் நிலத்திலும் இவன்கால் அடிபடாத இடம் இல்லை. இவன் சம்பத்து ருபேராவுக்கு மேற்பட்டது. அவ்டத்திக்கு விஜயம் செய்திருக்கிறான். எங்கே சென்றாலும் இவனுக்கே ஜெயம். தன் கைமேலாக இருந்துக்கொண்டு உலகத்தையே தனக்கு அடிமையாக்கிக்கொண்டான். இவனால் கெட்டகுடிகள் கோடானுகோடி. இவன் பெயரைக்கேட்டாலே சகல மண்டலாதிபதிகளும் மனம் நடுங்குவார்கள். இந்த கொடும்பாவியின் கொட்டத்தை அடக்கவேண்டுமென்று பூமண்டலத்திலுள்ள சக்கிரவர்த்திகள், ஜராஜாக்கள், பிரபுக்கள், வர்த்தகர், ஜெமீன்தார்கள், மிராசுதார்கள், ஏழைக்குடிகள், சகல தொழிலாளிகள், ஆகிய எல்லோரும் ஒன்றுகூடி இவனுடைய கெர்வத்தைச் சற்று பங்கப்படுத்தி இவன் கொடுமையை கொஞ்சம் கொஞ்சமாய் குலைக்க வகைதேட பெரும் பிரயத்தினங்கள் செய்து போர்ச்சேனைகளை அணிவகுத்து சீக்கிரம்படையெழு

ச்சிக்கு துரிதமான முயற்சிகள் செய்துவருகிறார்கள். இது தகுதியானஉப காரணம். நலமும், ஆரோக்கியகரமுமானஉபாயங்களே உலகசாதனத்தை யுத்தே சித்து ஒருவற்பாடு செய்வது அவசியதரம். சுவார்த்தம்அல்லாது லோகார்த் தம்மாயும் தன்னயமல்லாது ஹார்தயத்தைக்கருதியதாயும், ஒருவருக்கேனும் வி ரோதமின்றி சகலருக்கும் ஹிதமாயும் இனியதாயும் மனோகரமாயும் இருப்ப தினால் சகலரும் விரும்பக்கூடிய உரிமையான விஷயமாய் இருக்கிறதென்று நாம் சொல்லவும் வேண்டுமோ! வட்டிப்போர்ச்சேனை என்ற விருதுக்கொ டியுடன் புறப்பட்டு இந்தியா இராஜப்பிரதிநிதியவர்கள் நேய சமுகத்தை நாடிச்செல்லுவோம். நம்முடைய படை வகுப்பில் சகல ஜாதிமத சகலமகா ஜனங்களும் சேரவாருங்கள் என்று "தம்தாம்" "தீம்தீம்" என பேரிகை வாத்தியம் முழங்குகின்றோம்.

உலகமே வட்டியினால் முழுகிப்போயிருக்கிறது. 'தனக்கு மிஞ்சிதா னதர்மம்' என்று சொல்லுவதினால் நமதுஇந்தியாதேசத்தைக்குறித்தவட்டில் தற்காலம் அதிஅவசியகரமான வீதிவிலக்குகளே இந்தவட்டிவிஷயமாய் எடுத் துக்காட்டவேண்டியது நமது கடமை. சாதாரண வட்டி என்பதே கடின மானபதம். அதினிலும் கொடிது வட்டிக்குவட்டி. வட்டியில் தருமவட்டி அநியாயவட்டி, என்று இருவகைப்படும். நூறு ரூபாய் வரையில் ஒருவட் டி, நூற்றுக்குமேல் ஆயிரம் வரையில் முக்கால் வட்டி, ஆயிரத்திற்குமேல் தொகைக்குத்தக்கபடி அணு எட்டுக்குக்குறையாமல் வட்டிவாங்குவது தர்மவ ட்டி என்போர் சிலர். வட்டியின் கொடுமையை உத்தேசித்துக் குறைந்தவ ட்டிக்குக்கொடுக்கும் புண்ணியவான்களும் உண்டு. நூற்றுக்குஐந்துவட்டியும் ரூபாய்க்கு ஒரு அணு வட்டியும்வாங்கும் கொடும்பாவிகள் சிலர்உண்டு, இது வே அநியாயவட்டிகள். அவசரம் ஆபத்துகாலங்களில் அதிக வட்டியை யோ சிபாமல் அநேகர் வாங்கி அவஸ்தைக்கும் அதோகதிக்கும் ஆளாகின்றார்கள். அந்தோ!! இவர்கள் நிலைமையிகவும் பரிதாபகரமானது. "வட்டியாசை முதலே க்கெடுத்தது" என்பதபோல் இஞ்சினின்ற குரங்கினத்தைச்சேர்ந்த இளிச்ச வாயன்களும் உண்டு. வட்டி நிபந்தனைகளில், கெடுமாறின வட்டி என்ப தும் ஒரு பெரிய ராக்ஷதன். சற்றேனும் மனமிரக்கமின்றி ஈரச்சேலையை ப்போட்டு கழுத்தை நெரிப்பதும் உண்டு. கடன் வாங்கும்போது கெடுவுக் குள் செலுத்திவிட பெரும் பிரயத்தினங்கள் செய்து முடியாமல் அநியாய நி பந்தனை வட்டிக்கு ஆளாகின்றான். "எலிக்குத்திண்டாட்டம் பூனைக்குக்கொ ண்டாட்டம்." பணம் கொடுக்கும்போதே, கெடுவுசப்பிப்பேசவேணும், அ நியாயவட்டிவாங்கி அள்ளிக்கொட்டிக்கொள்ளவேணும், நமது வயிறு சப்பை யிடவேணும், என்று தொல்லுலகிலுள்ள தெய்வங்களே தொழுதவண்ணமா ய் பணங்கொடுத்தவனிருப்பான். கெடுவு நிபந்தனைகளின் கொடுமைகளே எ டுத்துரைக்க எம்மொருநாவால் முடியா. கடன் இருவகையதாகும். ஈடு, அல்லது பந்தனம், வெண்கடன், என்று சொல்லப்படும். ஒரு வெண்டலே க்கடன்காரன் குறித்த கெடுவில் கொடுக்கத்தவறினால் தன் சதையில் ஒருபவு ன் கொடுப்பதாய் பத்திரம் எழுதிக்கொடுத்தான். தெய்வச்செயலாய் பல அ சந்தர்ப்பங்கள் நேரிட்டதுடன் பலவித கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகி கெடு வுகடந்த சொற்பதினத்திற்குள் வட்டியும்முதலும் சேர்த்து முடிப்புக் கட்டிக் கொண்டு பணம் கொடுத்த வர்த்தகனிடம் சென்று பழயகாலத்து பத்திரவா கத்தின்படி கைகட்டி வாய்பொத்தி மறுவார்த்தை பேசாமல் எதிர்த்தொன்று ம் சொல்லாமல் பணமுடிப்பை வர்த்தகன் முன்வைத்து வணங்கிநின்றான். வர்த்தகனே "வல்லடிவழக்கைச்சொல்லடிமாமி" என்று ஏழையை வாதிக்க

REGISTERED 7 JUN 1904 MADRAS. OFFICE

ழைத்து கொஞ்சமேனும் இரக்கமின்றி உன் பணத்தை எடுத்துக்கொண்டு போ, உன் நிபந்தனைகளின்படி ஒரு பவுண் நிறையுள்ள உன் சதையை அ றுத்துக்கொடு என்று நிர்பந்தஞ்செய்தான். ஏழையின்மீது கடினசித்தம் வையாதீர் என்று கண்களினின்று தாரைதாரையாய் தண்ணீர் வடிய உடல் பதர ஆவிசோரக்கதறியும் கேளாமல் நியாயாதிபதியிடம் வர்த்தகன் சென்று வழக்கிட்டான். நியாயாதிபதி வாதியின் கடின சித்தத்தையும் பிரதிவாதி யின் யோக்கியதையையும் க்லேமையையும்யோசித்து பத்திரத்தின்நிபந்தனை யின்படி அசல் வட்டிக்கி வாதி அருகனல்ல, பிரதிவாதியின் தரேகத்திலிரு ந்து ஒரு பவுண் நிறையுள்ள சதையை வாதியானவன் தானே தன்னுடைய க்த்தியினால் அறுத்து எடுத்துக்கொள்ளக்கடவன்: அப்படி எடுப்பதில் ஒரு ப வுன் அளவுக்கு மேற்படுமாகின் வாதி தன் தரேகத்திலிருந்து ஒன்றுக்கு பதி ன்மடங்கு சதையைத்தானே வாதி அறுத்து பிரதிவாதிக்குக்கொடுக்கக்கடவ ன், என்று தீர்ப்பளித்தார். அளவின்பிறகாரம் அறுத்தெடுக்க வர்த்தகன் க ஷாப்பு வேலையில் கைதேர்ந்தவனல்லவாகலான் வட்டிமுதலே இழந்து வந்த வழியே தன் வீடுபோய்ச்சேர்ந்தான். நிபந்தனை வட்டியை மாற்ற கோர்ட் டாருக்கும் அதிகாரமில்லை, வியாஜ்ஜியத்திற்குப் பிந்திய வட்டியைக்கொடு க்க, குறைக்க, பூராவுக்குத்தள்ள, அதிகாரமுண்டு. நூறு ரூபாய்க்கொடு த்து அதற்கு அநியாய வட்டிபோட்டு நானூறு ரூபாய் வட்டியாக்கி அசல் வ ட்டி கூடுதல் ஐந்நூறு ஆக்கி அதை வசூல் செய்வதுமுண்டு. இப்போப்பட் ட அக்கிரமங்களுக்கு இனிமீது இடங்கொடாமல் எவ்விதகாரணத்தைக்கொ ண்டும் அசல்நூறு ரூபாய்க்கு வட்டிரூபா நூற்றுக்கு அதிகப்படக்கூடாதென் று கண்டிப்பான உத்திரவை ஜகோர்ட்டார் அல்லது கவர்ண்மெண்டார் ஏற் படுத்தவேண்டியது மிகவும் அவசியகரமாயிருக்கிறது.

நகை அடையில் நடக்கும் மோசங்கள் நானாவிதம். நகை மதிப்பு ஒ ன்றுக்கு முக்கால். கொடுக்கும் கடன் மதிப்பில் பாதி தகை. கொடுத்த க டன் கெடுவில் செலுத்தத்தவறினால் "பண்டமரிது பணமரிது." இந்த மோ சடிலேவாதேவிக்கு ஒர்விதமோசமும் அருளவேண்டியது முக்கியமானதாய் இருப்பதால் ஜகோர்ட்டாரும் கவர்ண்மெண்டாரும் முன்னின்று கலந்து பே சி விதிவிலக்குகளே ஏற்படுத்துதல் உசிதம்.

வட்டி நாணய ரூபமாயும் தானிய ரூபமாயுமிருக்கின்றன. தானிய வட்டி விஷயத்திலும் சில சோத்திரத்தங்கள் செய்வது அவசியம். ஆயிரரூ பாய் நிலத்தின்பேரில் நூறு ரூபாய்க்கடன்வாங்கி கெடுவில் செலுத்தத்தவறி னால் "அவன் தந்துவிட்டான் நான் வந்துவிட்டேன்" என்றபடி வாதி கோர் ட்டுக்குப்போய்வழக்கிட்டு அடைவுநிலத்தை ஐம்பதுரூபாய்க்குத் தன்பேருக் கு ஏலமெடுத்துக்கொண்டு பாக்கித்தொகைக்கு பிரதிவாதியின் ஜங்கம சொ த்தின்பேரிலும் அவன் சரீரத்தின்பேரிலும் நிறைவேற்றுகிறான். இதுவிஷ யத்தில் பிரதிவாதிக்கு அனுகூலமாய் அவன் வாதிக்கு எந்தக்காலத்தில் கோர்ட்டுத்தீர்ப்பின் தொகையை பின் வட்டியுடன் செலுத்துகிறானே அந்த க்காலத்தில் வாதி நிலத்தை பிரதிவாதிக்கு விட்டுவிடவேணுமென்று விதி ஏர்படுத்துதல் உசிதமாயிருக்கிறது.

கடன் வாங்காதவர்கள் உலகத்தில் வெகு சொற்பமே. உள்ளவனு யிய பணக்காரனும் இல்லாதவனுயிய ஏழையும் கடன் வாங்குகிறார்கள். ப ணக்காரன் கடனைச்செலுத்துவது கஷ்டமல்ல, பாரிவர்த்தகர்கள் ஏராளமா

னை தொகைகளைக்கடன்வாங்கி வியாபாரம்செய்து கெடுவு தேதி குறிப்பு புஸ்தகம் ஒன்று தயார்செய்து அதில்கண்டபடி கெடுவுதப்பாமல் பணத்தைச்செலுத்திவிடுகிறார்கள். ஏழை கடன் வாங்கினால் குறித்த கெடுவில் செலுத்துவது பிரயாசையே. பணக்காரனுக்குச்சொற்பவட்டிக்குப்பணம் கிடைக்கும். ஏழையோ அதிக வட்டி கொடுத்தே பணம் வாங்கவேண்டும். கடனிலும் கொடிதான கஷ்டம் உலகில் வேறொன்றுமில்லை. கடனே சனியின் அவதாரம். கடன் வாங்கின தக்ஷணம் கஷ்டத்திற்கும் வியாகூலத்திற்கும் காரணமாய்விடுகிறன். சொச்ச முதல் இல்லாத வியாபாரி கடன்வாங்கி சரக்கு ரூபமாய் பிறருக்குக்கடன் கொடுத்து காணயமாய் செலுத்தினவர்கள்போக மற்றத் தப்பிலிகளால் நஷ்டத்திற்கு ஆளாகி வாங்கினகடனைச்செலுத்தவகையின்றி வருத்தப்படுகிறான். குடும்ப விவாகங்களுக்கும், வரவுக்கு மிஞ்சின குடும்ப செலவிற்கும், கால்மழையின்றி நட்டுப்பாழுக்கும், அதிக மழையினால் வெள்ளச்சேதத்திற்கும், சாவிபயிருக்கு வஜாசெய்யாத கடினசித்த 'ரிவன்யூ இலாக்கா' உத்தியோகஸ்தர்களுடைய ஹிம்சைகளுக்கும், பயிறுகள் சுதர்வீடாமல் தொண்டைக்குழியில் இருக்கும்போதே சர்க்கார் வாயிதா பணங்களை முன்னடி கட்டவேண்டிய பெரும் ஆபத்திற்கும், கடன் வாங்குவது அவசியமாயிருக்கிறது. தர்ம வட்டிக்குக்கொடுப்பாரில்லை. "பணம்கண்டதேவடியாள் பாயில்படுக்காள்." இன்றுருகிகண்டவன் அந்தபகார்த்தத்தையே மறுபடியும் விரும்புவான். சமயம் பார்த்து ஊரார் சொத்தை பறிக்கப்பார்ப்பது பாவிகளின் பிறவிக்குணம். ஆகச்சே அநியாய அதிக வட்டிகொடுத்தே பணம் வாங்கவேணும்.

கம்பேனியாருடைய இராஜரீகத்திற்கு உள்பட்டிருந்தசிப்பந்திகள்சகல இலாகாக்களிலும் இருந்ததற்கு இப்போதிருக்கும் சிப்பந்திகள்சற்றேறக்குறைய பாதிக்கு மேற்பட்டிருக்கலாம். எங்கே பார்த்தாலும் சொற்ப ஏழை சிப்பந்திகளே குறைப்பதே ஒரு வேடிக்கையான வாடிக்கையாயிருக்கின்றது. ரூபாய் ஒன்றுக்கு அரிசிபடி 30, பருப்பு படி 25, உப்புபடி 20, நெய்சேர் 15 இப்படியே சகல பதார்த்தங்களும் சரசமான விலைக்குக்கிடைத்து விறகுமூலியதுகள் சொற்பகிரயத்திற்கு வாங்கி காலக்ஷேபம் செய்துவந்த நாளில், சேவகனுக்கு சம்பளம் 6, 7, 8, ரூபாய். இப்போதிருக்கும் விலைவாசிகளுக்கு இந்த சொற்ப சம்பளம் போதாதே! ஏழை என்ன செய்வான்? "கடன்வாங்கியும் பட்டினி கல்யாணம் செய்தும் சன்னியாசம்" என்பதுபோல் சேவகம் செய்தும் அறைவயிற்றுக்குஞ்சிக்கு ஆதாரமில்லாமல் பெரியோர்களால் சம்பாதித்த வீடுவாசல் நிலபலம் இதுகளெல்லாம் தோற்று வட்டிக்குகடன்வாங்கி வயிறுவளர்த்து "எங்கள் வீட்டு ஆண்படையாளுக்கு அரண்மனையில்சேவகம்" என்ற பேரைமட்டும் வைத்துக்கொண்டு பகல் வேசம்போடும் இராப்பட்டினிக்காரர்களாய் அநேகர் காலம் கழித்துவருவது சகலரும் அறிந்த விஷயமே. பிழைக்கும் வகையெங்கே? கைத்தொழில் என்ன இருக்கிறது? இரண்டெழுத்து வாசித்து உத்தியோகம் செய்யலாமென்றால் பள்ளிக்கூட சம்பளங்கள் ஒன்றுக்குப்பத்தாக இருக்கின்றதே! கூலிவேலைகூட கிடைப்பது அரிதாயிருக்கிறது! கடன் வாங்காமல் எப்படிக்காலங்கழிப்பது? பாரம்பரியமாய் பெரியகுடும்பத்தைச்சேர்ந்தவர்கள் தங்கள் அந்தரங்கத்தை வெளியிடாமலும், தங்கள் கௌரதையைக்காப்பாற்றிக்கொண்டு தங்களை அண்டினபேரை ஆதரித்துக்கொண்டும் அது விஷயமாய் பலவித கடன்தொந்திரவுகளுக்கு ஆளாகிறார்கள். மூகதாக்ஷண்ணியத்திற்கு "கைம்பெண்கர்ப்பவதியான" கதைபோல் மேல் ஒப்பம் வைத்து கடன்வாங்கிக் கொடுத்துக்கெட்ட குடும்பங்கள் அனந்தானந்தம்.

ரிவன்யூ, மாஜிஸ்டிரேட், சிவில் கோர்ட், போலீஸ் கோர்ட், மிஜில்டர் ஆபீசு, முனிசிபல், லோகல்பண்ட், முதலியசகலவித சர்க்கார் இலாகாகிலவுகள் அபரிமிதமாகி அதேக ஏழைக்குடும்பங்கள் கூஷ்ணஜிசைக்கு வந்துவிட்டது. மேலேகண்ட சகல இலாகா சிலவுகளுக்கும் அநியாயவட்டிகொடுத்துப்பணம்வாங்கவேண்டியிருக்கிறது.

தன்மார்க்க சூது குடிவேசியாசை இதுகளால் சொத்தை விரயம் செய்கிறவன் அநியாயவட்டிக்கும் நூற்றுக்கு 25 வீதம் டிஸ்கவுண்டு கொடுத்தும், நூறு ரூபாய் பெற்றுக்கொண்டு ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் எழுதிக்கொடுத்து "ஆத்திரத்திற்கு அவுசாரிபோலுள் கோத்திரத்திற்குக்குறைவில்லை," "வெட்கம்கெட்டாலும் கெடுதிவயறு தொப்பையிட்டாற்போதும்" என்றபடி அக்கிரமத்தால் நாசமடைந்திருக்கிறார்கள். இவ்வித பொய்ப்பத்திரங்கள் அநியாய வட்டிகளை அடியோடுவேரூன்றாமல் அடிப்பதற்குக்கவர்ன்மெண்டார் தக்கவிதிகளை ஏற்படுத்தல்கடன்.

கடன் என்னும் சிங்கம் யானையைப்போன்ற வலிவுள்ள மனிதனுடைய மூளையை உறிஞ்சிவிடும். திரேகத்தை தற்பலமாக்கி புத்தியை மழுங்கச்செய்து அகாலமரணத்திற்கு ஆளாக்கிவிடுகிறது. கடனுல் அந்தஸ்து, சொத்து, உத்தியோகம், இதுகள் கொலைந்துபோகின்றது. கடன்காரனுடைய நிலைமை தூண்டிலடிப்பட்ட மீன். அனலில் மெழுகு. பாமபின் வாய்த்தசை. இதுகளுக்குச்சமமான நிலைமையில் இருந்துகொண்டு தனலக்ஷ்மியின்தயவை இழந்ததைரியலக்ஷ்மியினுல் கைவிடப்பட்டு எங்கும் காரியசித்தியின்றி அபஜெயமடைகின்றன். கடன் ஹிம்சைக்கும், வாரண்டிற்கும், சொத்து ஜப்திக்கும், சிவில் ஜெயிலுக்கும், அவமானத்திற்கும், பயந்து பிராணனைப்போக்கடித்துக்கொண்டவர்கள் அநேகர். தன் வியாஜ்ஜியம் மெய்யாயிருந்தும் அதை எடுத்துக்காட்ட வாக்கு வல்லமை இல்லாமல் சிவில் ஜெயிலுக்குப்போனவர்கள் அநேகர். பொய் விபசாரம் செய்து சொல் வன்மையினுல் சிவில் ஜெயிலுக்குப்போகாமல் ஜெயமடைந்தவருமுண்டு.

சர்க்கார் பத்திரத்தின் வட்டி வருஷம் ஒன்றுக்கு ரூபாய் மூன்றுக்குக்குறைபாமல் நாலுக்கு மேற்படாமல் இருந்தும் முதலுக்கு மோசமில்லை, எக்காலத்திலும் அரைவயிற்றுக்குஞ்சிக்கு ஆங்கிலேய இராஜாங்கம் இருக்குமளவும் யாதும் குறைவில்லை யென்றே சாக்காரில் பணம்போடுகிறார்கள். பாங்கிவட்டி ஆறு அணு எட்டு அணு வீதமாய் இருந்தும் நம்பிக்கைக்கு உரித்தான இடமென்றும நம்பி அதில் பணம் போடுகிறார்கள். "சேவிங்பாங்கில் காலேவீசும் வட்டிக்கும் பணம் போடுகிறார்கள். வட்டியைப்பற்றி வீரிவாய்ச்சொல்லிவந்தோம். இனி வட்டிக்கு வட்டியைப்பற்றி சில முக்கியாம்சங்களை எடுத்துக்கூறுவோம்.

இந்த வட்டிக்கு வட்டி (Compound Interest) ஒரு பெரிய "தந்திரக்கடன்". மாதத்திற்கு ஒருதடவை வட்டிக்கூட்டினுல் நூற்றுக்கு சுமார் 50 அதிக வட்டியாகும். மூன்று மாதத்திற்கு ஒரு முறையானுல் நூற்றுக்குப்பதினேழு ஆகும். ஆறுமாதத்திற்கொருமுறையானுல் நூற்றுக்கு ஒன்பது அதிக வட்டியாகும். சொற்ப கெடுவு போட்டுக்கொண்டு பத்திரமெழுதிக் கெடுவுகடந்தபின் இந்தவட்டியோடு முதலைச்சேர்த்து மொத்த தொ

கைக்கு மறுப்பத்திரம் செய்வித்து இவ்வாறுகளே ஒரு கடனுக்குப் பலபத்திரங்களே எற்பதித்தி ஒன்றை நாலாய்ப்பெருக்கி ஊர் குடியைக் கெடுப்பது "வட்டிக்குவட்டி" எனும் பாதகனுக்கு உரிய தொழில். இவனுக்கோர் அருமை சகோதரன் உண்டு. அவன் மகாமாயாவி. இவன்ரூபாய் ஒன்றுக்குமேல் மூன்று வரையில் வட்டிவாங்குவான். இவன் 10 மாதத்திற்குக்குறைவாமல் 15, 20, 25, மீ வரையில் கெடுவுபோட்டுக்கொள்ளுவான். முன்வட்டி பூராகெடுவுமாதங்கள் வரையில் எடுத்துக்கொண்டு தூற்றுக்கு அணு 2, 4, வீதம் தர்மத்திற்கென்றசொல்லி பிடித்துக்கொண்டு பாக்கியைக்கொடுப்பான். முன் வட்டி எடுத்துக்கொண்ட சங்கதியைக்குறித்து பத்திரத்தில் காணுவதில்லை. கெடுவு எத்தனை மாதமோ அத்தனைப்பங்காக அசல்தொகையைவகுத்து மாதாந்திரம் குறித்த தேதியில் செலுத்திவரவேண்டும். எந்தக்கெடுவில் செலுத்தத்தவறினலும், பின்கெடுவு நிபந்தனையன்னியில் பாக்கியாகும் தொகை முழுவதும் செலுத்தவேண்டியதுடன் அசல் தொகையில் ஒரு ரூபாய் பாக்கியானலும் மே அசல் தொகை பூராவுக்கே வட்டிகூட்டிக்கொடுப்பதாய் கண்டதமான சரத்துகளே எழுதி நிபந்தனை வட்டியும் போட்டுச்சரியான ஸ்டாம்பு காகிதத்தில் பத்திரம் எழுதி வாங்கி உலகமே முழுகிப்போகும்படி செய்யும் இவ்வித அநியாய பத்திரங்களே அடியோடு அழித்துவிடும்படிக்குச்சர்க்காரில் விதிவிலக்குகளே ஏற்படுத்தவேண்டும்.

இவ்வித வட்டியினுலேயே அநேக பெரிய ஜெமீன்தார்கள், மிராசுதார்கள், பிரபுக்கள், இராஜாக்கள், முதலியவர்களும் துயரத்தில் மூழ்கி சதாகாலமும் சஞ்சலப்பட்டுவருகிறார்கள். கோர்ட்டுத்தீர்ப்புகளிலும் அறியாமையினுலோ அல்லேல் யாது காரணத்தாலோ வட்டிக்கு வட்டி தீர்ப்பு செய்வதுமுண்டு. "மரத்தின்மீதிருந்து கீழே விழுந்தவனே மாடுமிதித்த கதை"போல் அநியாயவட்டி, நிபந்தனைவட்டி கொடுப்பதும் போதாமல் வட்டிக்குவட்டி கொடுக்கும்படி சம்பவிப்பது கஷ்டத்திலும் கஷ்டம்.

ஆகையால் இவைகளேயெல்லாம் யோசித்து நமது ஆங்கிலேய துரைத்தனத்தார் இந்தியா தேசத்திற்குமாத்திரமல்ல, இங்கிலீஷ் கொடி பறக்கும் சகல நாடுகளிலும் சினேகபந்தமுள்ள சகல இராஜ்ஜியங்களுக்கும் இதில் விவரித்திருக்கும் சகலவிதமான அக்கிரம வட்டி லேவாதேவிகளேயும் கண்டித்து சகலருக்கும் பொதுவான சாதகத்தை விளைவிக்கும் விதிவிலக்கு சட்டதிட்டங்களே ஏற்படுத்துவார்களென நம்புகிறேம்.

பத்திராதிபர்.

நல்லுரை.

மனிதருடைய எண்ணங்களெல்லாம் வீணென்றும் அநேக விதத்தில் சதிசெய்கின்றவைகளென்றும் தெரியவருகிறது. நமது செல்வத்திற்குக் குறையொன்றுமில்லையென்று நாமெண்ணுங்காலத்தில் தெரியாத ஒருபொல்லாங்கந்தச் செல்வத்துள் மறைந்திருப்பதுவும் வழக்கந்தான்.

நமதுள்ளத்தை முழுமையுந் தெய்வசித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதே பக்தியாம். அவ்வுண்மை விளங்க நாமெல்லாவிஷயத்திலும் நடப்பதே நன்மார்க்கமாம். அதற்குள்ள குணங்களும் அதற்குச்சொல்லிய பலன்களும் சமப்பிரயோஜனமுள்ளவைகளாம். அதன் வழிகள் இன்பமுள்ள வழிகளாம். அவ்வழிகளினேத்தும் சஞ்சலமற்றவைகளாம்.

கல்வியைத்தேட பாலியமே நல்லகாலமாம். அதை நன்னடக்கையுடன் நன்றாக பயிற்சிசெய்து அதன்படி நடந்தால் பிற்கால முனக்கது மெத்த உதவியாயிருக்கும்.

கல்வியைக்கற்பது இன்பம். சன்மார்க்கத்திலிருந்துகொண்டு கல்வியைக்கற்பது அதிக இன்பம். தான் கற்றதை "எட்டுச்சுரக்கா"யாக்காமல் கற்றபடி நடப்பது அதைவிட இன்பம். இப்படி கற்றபடி நின்று அனுபவிக்கும் ஆனந்தத்தைவிட இன்பம் வேருென்றுமில்லை.

எல்லா காரியத்திற்கும் மத்தியமொன்றுண்டு. அதையே யதன்தலை கடையிரண்டுக்கும் உத்தமமாகவெண்ணவேண்டும். ஐஸ்வரியத்திலும் பெருமைப்பாட்டிலும் நிடீரென்று உயர்வதுந் தாழ்வதுஞ் சமமாகவே பொல்லாதவைகளாம். ஐஸ்வரியமும் பெருமையும் மனிதனேச்சகலவித அக்கிரமத்திலு மூழ்த்துகின்றன. தாழ்வானதெப்போதும் ஆசையை அறுத்துவிடுகின்றது.

தற்காலத்திய நடபடியில் விவாகமானது பொருளாசை நிரப்தியடைவதற்குத் தரித்திரமகிப்படுவதற்கு மோரேதுவாயிருப்பதையும், ஸ்திரீயினுடைய யோக்கியதை யவள் பரியத்தைப்பார்க்கிலும் பதினுயிரம் பங்கு அதிகமானதாயிருக்க, அவள் நன்னடக்கைகளேயுங் குணுதிசயங்களேயு மதியாதிருப்பதையும் யாலோசிக்குமளவில் குற்றமாய்த்தானிருக்கிறது. இந்தக்குற்றமுள்ளபடி யெய்யே. இதினுலேதான் அநேகவிவாகங்கள் யோக்கியத்துடன் முடியாதிருக்கப்பிரதினமுங்காண்கின்றேம். இதனேச்சீர்த்திருத்துவது சம்பவர்களின் கடமை.

மனதுக்கினிய நேசமானதுகயவஞ்சகமுள்ளதாகி மனிதருக்குமிகவானந்தத்தையும் கொடியதுன்பத்தையும் விளைகின்றது. காதலுள் நேசமுயற்சியுங்கலந்திருக்கின்றமைபோல அவ்வின்பமுந்துன்பமும் ஊழில் அமைந்திருக்கின்றன.

இங்கு நாம் வாழுங்காலம் குறியதேயாலுலும் மறுமையிலடையுமின்பம் நீடியானதாம். அவ்வின்பத்தை யடையவிருப்பங்கொண்டிருக்கும் நாம நமது அன்பைக்கடவுளே மிஞ்சிச்செல்லவிடுவது பொல்லாங்காம்.

பிறரது கஷ்டத்தைக்கண்டு விவேசத்துடனடப்பாயாகில் முழுது முனக்கு நன்மையாம். இன்றைக்கே முடிக்கக்கூடியதை நாளேவரையில் நிறுத்தவேண்டாம். நீ செய்யக்கூடிய காரியத்திற்கு உனது சினேகிதனேயும் ஊழியக்காரனேயும் நம்பவேண்டாம்.

தினச்சிலவை கணக்குவைத்து வாரத்திற்கொருதரமாகிலும் உன் னுடைய வரவு நிலுவையை யொத்திட்டுப்பார். திரவியம் தேட அதிக ஆ சையை வையாதிரு. ஒரு காரியத்தினிமித்தம் நாம் படும் பிரயாசைகளுக்கு ஈசாநுக்கிரகம் இல்லாவிட்டால் சீக்கிரத்திலாகிலும் மெதுவிலாகிலும் நாமோ ங்குவதாதென்று எல்லாவற்றிலும் முக்கியமாக நீ நினைத்திருக்கவேண்டும்.

துன்பமானது நமக்கிருக்கும் உலகவாசையை வெறுக்கச்செய்கின்ற து. எனெனில் தற்காலம் நாமனுபவிக்கும் சுகம் அல்லது இன்பம் தடை படாமலென்றும் ஒரு தன்மையாக நடந்தால் நம்மைப்படைத்த கடவுளே நா மெளிதாகமறந்து நிகரற்றவாண்மையோடு நாம் வணங்கவேண்டுந்தேவனெ ருவனுண்டோவென்போம். நாமனுபவிக்கும் சஞ்சலமானது அதிக பெரிதா ன நித்தியானந்த சந்தோஷத்திற்கு நம்மை வழிப்படுத்துவதாயிருப்பதால் இதை நமது நலத்தைக்கோரி நமக்குதயளித்த ஜெகதீசனே ஸ்தோத்தரிக்க நா ம் பலவிதத்திலும் கடமைப்பட்டிருக்கின்றோமன்றே? அப்படியிருக்க அ தற்கு மாறுக நமக்குத்துன்பமளித்தகாலத்தில் கடவுளே நிந்திப்பதானது ந மது பேதமையை வெளிப்பிரித்துகாட்டுகிறதல்லவா?

பிள்ளைகள் கல்வியிலடையவேண்டிய பயிற்சிக்குக் கவலைவைப்பது போலவே அவர்கள் பரிசுத்த நடக்கைக்கும் கவலைவையாது அயோக்கியரு ன உபாத்தியாயரிடத்தில் ஒப்புவிப்பது மிகவும் கெட்டது.

நீதிசாஸ்திரமானது பெருமையுமுபயோகமு முள்ளதாயிருந்தாலும் வெகுஜனங்களுதை யநியாயஞ்செய்வதற்கு மெய்யானவழியென்றும், அத் தொழிலிலொரு கனவான் பிரவேசித்தவுடனே நன்மார்க்கத்திற்கடுத்த கட மைகளெயெல்லாமுதறிவிட்டு விபகாரம் நியாயமாயிருந்தாலும் அநியாயமாயி ருந்தாலும் வித்தியாசமில்லாமல் அதற்கு காரியக்காரனாய் ஏற்பட விரும்புகி ன்றனென்றும் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

மரணம் யாவருக்குமுரியதாகையால் அந்நினைவை யெண்ணுமறவா திருக்க நமது இருதயத்திற் பதியவைத்துக்கொள்ளவேண்டியது. அயரை நிறக்கக்கண்டால் அவ்வீடிக்கு வாடி நடுங்கியஞ்சுகின்றோம். அவர்களே நம து பார்வைக்கப்பா லெடுத்துப்போனவுடனே, நமது அலுவலின் மெல்லெ யிற்சிக்கிக்கடவுளே மறந்து அவர் கட்டளையின்படி நடவாமல் சுகபோகத்தி லுழலுகின்றோம். நிலையற்ற நமதுபுத்தியிலுள்ள அம்மரண நினைவானது ஆ காயத்தையுருவும்படி யெய்த அம்புப், அலைகடலிலோடிய கப்பலும் போன வழிக்குச்சமமாயிருக்கின்றது. நமது விவேகத்தாலறியவும் எச்சரிக்கையால் நீக்கவும் கூடாமல் நமதாயுளானேத்தையும் முடிக்கக்காத்திருக்கும் எண்ணி றந்த இடையூறுகளே நன்றுயாலோசிப்போமாகில் நாம் பரசாதகமான விஷ யங்களில் மனஞ்செலுத்தாமல்இகவிஷயங்களிலேயே மனஞ்செலுத்திவாணு ளே வீணளாக்குமுடிவில் மரணமடைகின்றோமெனவும் நமக்குத்தெரியவரு கிறது. நமது ஆயுளுட்களனேத்தையும் முடித்துவிட்ட இவ்விடையூறுகளா ல் நாமமைந்தபயன் ஏதாகிலுமுண்டோ? இம்மானிட ஜெண்மத்தை முற் பிறவிகளில் பல்லாண்டுகளாய் நாமியற்றிய நற்கிரியைகளின் பலனுகப் பெற் றோம். இனி இந்த ஜெண்மம் கிடைப்பதரிது. இந்தஜெண்மமெடுத்ததி ன்பயனுகநித்தியானந்த வாழ்வை நாமடைய வேண்டியதாயிருக்க அதைய டையவொட்டாமற்றடுக்கும் இக இன்பங்களே நமது மித்திரர்களாக நாம்

நினைத்து பரமசாயுஜ்ஜிய பதவியையடையவேண்டியதற்குரிய மார்க்கங்களே யனுவந்திக்க முயற்சிக்காமல் மதிமோசம்போவதெவ்வளவு வியசனகரம்? இதை இனியேனுமுணர்ந்து நித்தியானந்தவாழ்வினையடைவதற்குரியமார் க்கங்களே யனுவந்திக்க உடனே முயற்சிக்கவேண்டியது நமது முக்கிய கட மைகளிலும் மிக முக்கிய கடமையாம்.

நமது ஜீவகாலத்தின் பிரயாணகதியில் நமக்கு விவேகமுண்டான கா லமுதல் நாம் சற்க முயன்று வித்தையை அப்பியாசத்திற்குக்கொண்டுவந்து ம் விவேகமென்ற விசேஷப்பொருளை அடையப்பெற்றிலோம். கற்றும் கல் லாதவராக இருப்பது என்னபுதுமை! தத்வஞானம், விஷயஞானம், இது களை பரிசோதனை செய்து பட்டத்தெளியவேண்டிய மார்க்கங்களைக் கண்டு பிடியாமல் சொன்னதைச்சொல்லும் கிளியைப்போலும் அன்றடம் பாடங்க ளைக்குருட்டுப்பாடம் அல்லது மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் பள்ளிப்பின் னோகளுடைய நிலைமையில் நாமிருந்துவருவதென்ன ஆச்சரியம்! நீடித்தகா லமாய் இவ்வுலகில் வாழ்ந்திருந்தும் நமது வாஞ்ஞைகளெல்லாம் நமது நல்வழிக் குத்துணையாயிருக்கும் யாதொரு வஸ்துவைக்கண்டுபிடிக்கவும் அதனையடை யவும் முயற்சித்தோமில்லை. நித்தியானந்த வாழ்வை யனுபவிப்பதற்குரி ய யாதொரு அப்பியாசம் அல்லது மனப்பழக்கமுஞ்செய்தோமில்லை. அந் தோ! இஃதென்ன விந்தை! ஞானியிலுஞ்சேராது முழுமூடனிலுஞ்சே ராது நாமிருக்கும் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. சத்தியவிரதனுயிரு ந்து தத்வஞான மின்னதெனக்கண்டறிந் தனுபவிக்கவேண்டாமா! நிஷ்கப டமாய்சதி நினைவு இரண்டகம் முதலியதுகளின்றி பொய்யும் மெய்யும் தன் அநுபவத்தைக்கொண்டு பகுத்தறிய மனமுள்ளவன் அதுகளைத்தெளிவாயறி ந்துணர்ந்து அதை இன்னவிதமென வாராய்ந்து நிதானித்து இளமைமுதல் மரணத்திற்கு மனிதனை ஆளாக்கும் பாவவழியை விட்டு, தனம், தாரம், தன யன், யென்ற மூவாசைகளையும், சற்புகழ்ச்சி, அகங்காரம், சுயநலம், மமதை, சுயரிச்சை இதுகளினுலேயுமுண்டாகும் சகலவித மனக்களங்கையும் அறுத்து எல்லா வற்றையும் மறக்கவேண்டும். நாம் அப்படிச்செய்ய முயன்று மறந்திருக் குமவ்வுண்மையை அறிவதற்குள், கண்பொத்தி விளையாடும் நிலைமையிலிருக் கும்போதே ஆயுகாலம் கூற்றினிசைக்கு வந்து டாணம் சமீபித்து விடுவதி னல் ஒளிவுள்ள மணியாயிய ஜீவன் ஒழிந்துபோகின்றது. ஆனதால் அறம், பொருள், இன்பம், வீடு, எனுமசதுர்விதபுருஷார்த்தங்கட்கும் விளைநிலமெ ன்னப்பட்ட இளமையிலிருந்தே முக்கியமடைய வேண்டியதற்குரிய கருமங்க ளே அநுஷ்டித்து வரவேண்டுமென்று இதனால் தெரியவருகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் புருஷார்த்தங்களுண்டி னுக்கும் விளைநிலமென்னப்பட்ட இளமையிலிருந்து நல்வழியைக்கைகொ ண்டு நடக்க முயற்சிக்காமல், கல்வழி வார்த்தைகத்திற்கே யுரியதென்றெண் ணி சிலர் அதுவரையிலப்படி நடவாதிருக்கத் தீர்மானிக்கிறார்கள். இது எத்த ன்மையதோவெனில் மனுஷத்தன்மைக்கு மிகவும் அடாததாயிருப்பதை அ த்தன்மைக்கு மிகவுஞ் சிறப்பானதுபோல வெண்ணுவதாம். நெடுகாலநிந் திருப்பதே யுள்ளபடி பரிகூஷபாகும். ஞானமானது வார்த்தைகத்தாலுண் டாகும் பெரிய நன்மையென்றபோதிலும் இதற்கும் பரிகூஷக்கும் மிக வித் தியாசமுண்டு. கல்வழியென்பது புத்திக்கொரு பழக்கமானதாலதனே பிர யாசையாலும் கவனத்தாலும் சம்பாதித்துத் தீயவழிக்கு விரோதமாயதனை

மனதில் நுழைப்பிக்கவேணும். அது மனதில் நெடுநாட்குடிகொண்ட பிறகு வெகு பிரயாசத்தோடு நிலையாகவதனைக் காப்பாற்றவேண்டியது. இது சிறிது காட்களுக்குள்ளே நடப்பதல்ல. பெரியசத்துருவாகிய தற்குணத்தைக்குடிவாங்கச்செய்யக்கிரமத்துடன் மெதுவிலே நடக்கவேண்டும். அதற்குப் பாலியத்தினுடைய பலமும் வார்த்தீகத்திற்கு யிஞ்சியகாலமும் வேண்டும். கூடியமட்டில் நம்மைத்தெய்வத்தன்மைக் கொக்கச்செய்து நமது பஞ்சத்தன்மைக்கியன்றமாத்திர மவரைப்போலப் பரிசுத்தத் தன்மையி லுயர்த்தவதே நன்மார்க்கத்திற்குரிய முக்கிய பயனும். ஆகையால் வார்த்தீகம்வரையிலிதனை யாலசியப்படுத்துவது தெய்வத்தன்மைக் கொவ்வாததாய்ச் செய்கின்றது. நமது காலமெல்லாம் வேணுமென்றே பாவத்தைச் செய்தபின்பு வார்த்தீகம் நமது பழுதைத்திருத்தி தெய்வத்திற்கொப்பாக்கி பரிசுத்தத்தன்மையை நமக்கொரு நிமிஷத்திலுண்டாக்குமென்று கம்புவது மிகவும் கைப்பாயிருக்கின்றது. பரிசுத்த தன்மையுஞ் சருசுரூப்புமிருக்கவேண்டிய பாலியகாலமானது தற்விஷயத்தில் சென்றிருக்க பலமற்ற வார்த்தீகமானது அத்தற்விஷயங்களினின்றும் நம்மை நீக்கி முத்தியடைவதற்குரிய வழிக்குமென்று நினைப்பதெவ்வளவு பேதமை! ஆதலால் நமதனித்தியகாலம் சஞ்சலமில்லாமல் முடியும்பொருட்டும் வெறப்பான இந்த ஜெனனத்தின் போராட்டமெல்லாம் ஒழிந்தபின்பு ஆத்துமா தன்பற்படாத நிலையான முத்தியையடையும்பொருட்டும் நமது பாலியகாலத்திலிருந்தே நல்வழியில் சருகுணஞ்ய் நடப்பதே மிகுந்த ஞானதுறைபாம்.

தற்காலத்திய சிறுவர்களிற் பெரும்பான்மையோர் மணம்புரிக்துகொள்ளாது உபபத்தினிகளை வைத்துக்கொள்ளுவதில் அதிசூரர்களாயிருக்கின்றனர். இதனால் வியாயுங்கெடுதிகளும் நிகழும் கொலைகளும் கட்சுங் கலகங்களும் அனந்தானந்தம். இவர்கள் தான் இப்படி யிருக்கின்றார்களென்றாலோ கற்றுணர்ந்த கனவான்களிலும் பலர் இத்துற்செய்கைகளைக் கைக்கொண்டொழுகுகின்றனரே! சில பிரபுக்கள் வேசிநேசர்களாய் இருப்பது தங்கட்குச் கௌரதையென்றும் சிறுவர்கள் அஃதே தமக்கு ஒரு பெரிய பெருமையென்று மெண்ணுவது அவர்கள் அறிபாமையை விளக்குகின்றவன்றே? அந்தோ! இஃதென்ன பேதமை! கல்லாத சிறுவர்களென்றாலுஞரில் சிலரைத்தன்னிலிட்டாலும் செல்வனே கற்றுணர்ந்தவர்களுந் தாங்கள் பயின்றதை வட்டுச்சுரைக்காயாக்கி சொல்லுவதொன்று நடப்பதொன்றாய் "படிப்பது திருவாய்மொழி இடிப்பது பெருமாள் கோயில்" எனுமுதுமொழியை நிதர்சனப்படுத்தி நடந்துவருவதற்குரிய உற்பவகாரணமியாதோ? இவ்விருவகையோரும் இங்ஙனம் தீயவழிகளில் பிரவேசித்துக் கெட்டழிவதற்குத் தான்றோன்றினானதே காரணம். இறுதியில் உற்றோர்கில் இவ்விரு பாலரும் இத்தகைய துற்கருமங்களைக் கைக்கொண்டதற்கு அவர்களின் பெற்றோரே காரணர்களாயுளார். இவர்கள் என் தங்கள் மக்களை இளமையிலிருந்தே நல்வழியிற் பயிற்றுவிக்கலாகாது? தங்களுக்குரிய கருமத்தை இயற்றுதொழிந்தோர் கர்மப்பிரஸ்டாகளன்றே? "மக்களுக்குச்சத்துரு மாதாபிதா" எனும் பழமொழி பின்னும் பிரகாசமடைவதைத்தவிற மற்றபடி இவர்களால் என்ன கன்மை உண்டாகப்போகிறது? இனிமேலாகினும் பெற்றோர்கள் தம்மக்களை பாவபுண்ணியங்களுக்கு அஞ்சி நடக்கும்படி இளமையிலிருந்தே நல்லொழுக்கத்துடன் சுலேனையிருக்கப்பயிற்றுவிக்க முயற்சிசெய்ய முன் வருவார்களாக. சிறுவர்கள்! இத்தொழில் உங்கட்கேற்றதன்று. மறம்புரியவஞ்சாதவன் மாகொலைகளைச்செய்பவும் பய்ப்படமாட்டான். நாம்செய்த தீவினைகளின் சேஷத்தால் இப்பிறவிநமக்கு வாய்த்ததெனினும் அத்துடன்செய்திருந்த புண்ணியவிசேஷத்தால் இம்மானிட ஜென்மம் எடுக்கலாமேனும். இப்பிறவியை காமெடுத்தது இவ்வனித்திய உலகத்தில் இன்பமனுபவிக்கவல்ல. அதிலும் பரஸ்திரீகமனர்களாய்த்திரிந்து உபபத்தினிகளை வைத்துக்கொண்டு காலங்கழித்துப்பாவத்தைத்தேடிக்கொள்ளுவதற்கன்று. இகபரசுக சாதகமாகிய கருமங்களை இயற்றி முக்தியடைவதற்கே இப்பிறவியை காமெடுத்தது. ஆகலான் இனியேனும் இதையுணர்ந்து இத்தீத்தொழிலினின்றகன்று முக்தியடைவதற்குரிய விஷயங்களைக்கவனித்து நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு நல்வழியில் நின்று கன்மைபெறுவீர்களாக. கற்றுணர்ந்த பரஸ்திரீகமனர்காள்! உங்கட்கு யாமென்ன சொல்லுவது? அப்படி சொன்னலும் கற்ற கல்வியையெல்லாம் பாழாக்கிவிட்ட உங்கட்கு நாம் சொல்லப்போகும் சொல்லும் அதோகதி தானாகும். ஆயினும் சொல்லுவதொன்று. இனியேனும் நீங்கள் கற்றகல்வியை எட்டுச்சுரைக்காயாக்காமல் அனுபவத்திற்குக்கொண்டுவந்து தீக்கருமங்களில் பிரவர்த்திப்பதைவொழித்து நல்வழியில் நின்று; பிரஜோபகாரிகளாய் கீர்த்தி பெற்று இவ்வுலகிலிலங்கி மேலுலகிலும் முக்தியடைவதற்குரிய கருமங்களைப்புரிக்து. தர்மமார்க்கதரிசிகளாய் சன்மார்க்கர்களாய் ஆஸ்தி பக்தர்களாய் இலங்குவீர்களாக.

கற்புள மாதர்க் கணிகலம் பத்து.

அன்புடைய புருடனுனக் கூணுடையு மாபரண
மளித்து மப்பா
லின்ப துன்பத்திலு மூனுட னுயிர்த் தோழனு யிருந்து
மிரகஷிக் கின்று
னென்புருக வுனைப் பயந்த தந்தை தாயுறவினர்க்கு
மிவனே சிலாக்யன்
சென்புடனே காக்குங் கடவுளு மிவனே செம்மையுடன்
றெளிவாய் பெண்ணே. (1)

எத்தனே தான் மேற்குலத்துப் பெண்ணுய் நீ யிருந்தாலு
மென்ன வுன்னைச்
சத்தியத்தோடே மணந்த கனவனுக்குத் தாழ்ந்தவளாற்
சற்குலத்தி
னுத்தமனென்றே மனதி லுறுதியைக் கொண் டவனிடத்தி
லுண்மையானப்
பத்தி செலுத்தவன் கருத்தே வுன்னதெனப் பாவித்து
பாலிப் பாயே. (2)

கஷ்ட சுக லாப நஷ்டங் கனவனுக்கு முனக்கு மல்லாற்
கதிவேறில்லை
இஷ்ட முட னவ னுரையை வேத மென்வே வெண்ண
லினிதா மப்பா
லஷ்ட வைசூரியமு மவனுகு மனு தினமு
மன்பாக ப்ர
திஷ்டையுஞ் செய் தவ னடியிற் நெண்டு புரிந் தின்ப முட
னிருப்பாய் பெண்ணே. (3)

உத்தம சமங்கலிக ளெத்தனை யாபரணங்களை
யுரிந்திட்டாலு
மத்தமதாற் கட்டிய தன் நாயகனின் முகிதனை
யகற்றுவாரோ
அத்தகைய சாகுனியைப் போல் துன்ப மனத் தர்ப மதை
யடைந் திட்டாலு
மித்தரையிற் புருடனை நீ யிமைப் பொழுதும் பிரியாம
லிருப்பாய் பெண்ணே (4)

அச்சம் மடம் நாணம் பயிர்ப் பென்னு நன்கு நகை
யரிவையர்க்கு
விச்சித்ரமே யலாற் போலி யாபரணங்களை
வேண்டாதே நீ
நச்செனும் பொட்டிட்டு மைதீட்டி கண்டார் கவர
நகைத் நிராதே
மெச்ச நடப்பனவும் புருஷனுக் கல்லாற் பிறர்க் கல்ல
வேற்கண் மானே. (5)

புருஷனைப் பற்றி யுனது மாமி மாமன் நாத்தி
பொல்லாப்பெல்லா
மொரு சினத்தி லுவக்காதே வுறவினரையும் வேண்டி
யுண்மையான
வசிச்சனைகள் புரிந் தவரின் காலிற் பட்ட தூசுக்கு னின்
கண் பட்டாற் போல்
பிரிய முட னுபசரித்துப் பெண் போலுண்டோ வெனப் பேர்
பெறுவாய் பெண்ணே. (6

குடித்தனத்திற் கவலை வைத்துப் பல்பொருளைச் சிக்கமற்
கோரியே நீ
பிடித்த முட னுயிர் போலப் பேணிச் செய்திடி லதுனை
பெருமை யாகும்
அடுத்த சில வெற்றெந்த காலத்தில் நேரிடினு
மதுபோற் செய்து
கடத்து சுருசுருப்புடனே கல்ல மகளென்று சொலும்
ஞாலந் தானே. (7)

வேறு விருத்தங்கள்.

கடவுள் சங்கற்பத்தினாலு முன் ருய் தந்தை
கருணை கோறிக்கையாலுங்
கனமான பெரியோர்க ளுறவின் முறையாளர்கள்
காட்டிய நல்வழியி னாலும்
மடமா னனக் கென்று மாப்பிள்ளை வாய்ப்பது
மனத் தழுக் கன்றி யன்னென்
மலர் முகம் ரூப மில்லா திருந்தாலுமன்
மத னெனக் கொள்ளல் வேண்டும்
விடமான ரோகஸ்தனு யிருந்தாலும்
வெருப்பின்றி சந்தோஷமாய்
வேந்த னென்றும் வஸ்ர தேக னென்றும் மனதில்
மேலாக வெண்ணல் வேண்டும்
நிடமான கல்வியிற் நேரா திருப்பினுந்
தேர்ந்த கவி யென்றல்வேண்டும்
திரவிய சம்பத் தில்லை யாயினுங் குபேர னெனத்
தேர்ந்து பணிசெய்ய வேண்டும். (8)

வீட்டு வேலை யின்றி சும்மா விருக்கின்ற
வேளைகளி லயலாரிடம்
வீணன வாய் பேசி வம்பிழுக்காமல் நல்
வித்தைகள் படிக்கவேண்டும்
வட்டிற் குறித்த பெரியோர்க ளுபவ நூலை
யின்பமாய்க் கற்கவேண்டும்
இனிதாக வுன்னிற் படித் தறிந்த பெண்க ளிட
மிணங்கி நீ யிருக்க வேண்டும்
பாட்டியா மவ்வை முன் சொன்னபடி பல நீதி
பரி னின்பங் கருதவேண்டும்
பலகணி முதற் கதவடைத்துத் தூங்காமலே
பகலே நீ கழிக்கவேண்டும்

நீட்டி மஞ்சட் குங்குமம் புட்ப மணிக்து நற்
செங்கை வளை யணிதல் வேண்டும்
தேவனுக் கொப்புள நினர்வலனே பூசித்துச்
சீரோங்கி வாழவேண்டும் (9)

தருமத்தை யொரு நாளுங் கை விடாதே பொய்மைக்
கனவிலும் கருதிடாதே
தீரித்ரம் வந்தாலுமே களவு செய்யாமல் நீ
சன்மார்க்க மாகவேண்டும்
பர சொத்து சிறு துரும் பென் றெடுத்தாலு முன்
பருத்த தூலங் கொள்ளே போம்
பாலே நீ யுள்ளதைக் கொண்டக மகிழ்ந்துமே
பரிமளித் திடவும் வேண்டும்
கருமத்தைச் செய் துனைக் கதி பெறச் செயும் மக்கள்
கல்வி தேதேறத் திருத்து
கவலையுடன் வாய்ச் சொல் மாத்திரமல நடக்கையில்
காட்டிப் பயிற்ற வேண்டும்
பிரமத்தை யனுதினம் பூசிக்க வாலயம்
பெண்களுடன் செல்ல வேண்டும்
பெறுங் கதி தருந் தாதை யவ ராதலாற் சற்றும்
பேணு திருந்திடாதே. (10)

இடிக்கெதிர் கையா லிடு நோடி யோப்பத்
துடிக்கு மென் சோற் பொறுப்பர் மேல்.

க. வீ. சந்தான கிருஷ்ண நாயுடு.

கடவுள் மாட்சி

அகர முதல வெழுத் தெல்லாமதி
பகவன் முதற்றே யுலகு.

காலையில் ஆதித்தன் குணதிசையில் தோன்றவும், மாலையில் குடதிசையில் மறையவும், மண் இறகவும், நீர் பரவவும், தீ சுடவும், காற்றுவீசவும், ஆகாயம் இவை வியாபிக்க இடந்தரவும், ஊர்வன ஊரவும், நடப்பன நடக்கவும், பறப்பன பறக்கவும், மீன் குஞ்சு நீந்தவும், மான் கன்று பாயவும், மானிடர் பகுத்தறியவும், செய்யவல்லவரியார் ?..... கடவுள்.

அடைமழை பொழிந்து உலகம் வெள்ளப்பாழாக்காமலும், மாரியற்று வெப்பம் மிகுந்து காடு நகரமெல்லாம் வெந்து தீய்க்காமலும், சண்டமாருதம் வீசி தரு அனைத்தையும வேரோடுகளைந்து உபாதிரிபையும் அடிவரையோடு பெயர்க்காமலும், ஆழ்கடல் வீற்றமலும், அது பொங்கி எழுந்து இப்புவியை மூடாமலும், பேருருவாய்க்க யானை சிற்றுருவமைத்த சிங்கக்குட்டிக்கு அஞ்சி அடங்கவும், "தெண்ணீர் கயத்துட்ச் நெமீன் கினையினும் துண்ணிய விதினின்றும்" "அண்ணல் யானை அணிதேர் புரவி யாட்பெரும்படையொடு மன்னர்க்கிருக்க நிழ"ல்தரும்விருக்ஷந் தோன்றவும் செய்பவரியார் ?..... கடவுள்.

கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சுக்கும், அமுதளித்து தாய் அருக்கக் கருப்பையிலிருக்கும் சிசு பசி தாபம் தணியவும், மழை பெய்யும் பருவத்தில் மழை பெய்யவும், வெயில் காயும் பருவத்தில் வெயில் காயவும், காற்று வீசும் பருவத்தில் காற்று வீசவும், செய்பவரியார் ?..... கடவுள்.

..

மேருவை அணுவாக்கவும், அணுவை மேருவாக்கவும், நரியைப்பரியாக்கவும், பரியை நரியாக்கவும், பெருங்கடலைச் சிறு கடுகுகுள்ளடக்கவும், கொடும்புலியை வீட்டுப் பசுவெனச் சாதுவாக்கவும், வானத்தை வில்லாக வளைக்கவும், ஆற்றுமணலைக் கயிராகத்திரிக்கவும், வீண்மீனை எண்ணிக்கணக்கிடவும், கடலுரு கருமணலை எடுக்கவும், இப்புவிசூழ் வேலியின் நீரை முகக்கினும் முகக்கவல்லவரியார் ?..... கடவுள்.

கடவுளுக்கு சிறுகோப மொருவேளை வரவரின், அண்ட அடுக்குகளெல்லாங்குலைந்து ஒன்றோடொன்று தாக்கி, சூரியமண்டலம் சந்திரமண்டலத்தின்மீதும், சந்திரமண்டலம் பூமண்டலத்தின்மேலும் விழுந்து சின்னபின்னமாய்ச்சிதறுண்டு, அதோகதியாய்ப் போகுமென்பதுஞ் சந்தேகமா ? அவர் மகிமை மனம் வாக்கு காயங்களுக்குமெட்டாது. பலகோடி அண்டங்களும் பரமபதியினது பாதத்துகள், சூரியன் அக்கினி முதலிய சுடர்கள் கடவுளின் திவ்யப்பிரகாசத்திருமேனியிலிருந்து சிதறிய சிறுபொறிகள், சமுத்திரங்களும், மேகங்களும், அவருடைய கிருபா சமுத்திரத்திலிருந்து தெறித்த சிறு துளிகள். பிரசண்டமாருதம் அவருடைய சிறுவிரலின் அசைவு. உண்ணதப்பருவதங்கள், அவர் விளையாடும் பந்துகள். பஞ்சபூதாதிகளோ, அவருடைய மக்களாகிய நமக்காக நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்கள். கற்பகோடிகாலங்கள் அவருக்கொருகணப்பொழுது. தமக்குத்தேவையில்லாமலிருந்தும் சகல ஜீவர்களுக்கும் தேகங்களைக் கொடுப்பவருமவரே. தாம் உண்ணுமல மற்ற உயிர்களுக்கு உணவளிப்பவருமவரே. தாம் கித்திரை செய்யாமல் மன்னுயிர்களைத் தூங்கவைத்துக் காவலிருப்பவரு மவரே. தாம் நடவாமல் நிறியாமல் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருப்பவருமவரே. தாம் கைவேலைசெய்யாமல், நினைத்த மாத்திரத்தில் அண்டகோடிகளையும் உண்டாக்கி இரகூஷிப்பவருமவரே. அந்த அண்டகோடிகளைச் சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டுகின்றவரு மவரே. கண்ணுயிருந்து பொருளைக் காட்டுகின்றவரு மவரே. இந்திரியாகந்தங்களேயெல்லாம் நமக்கு ஊட்டுகின்றவருமவரே. கிருபா கோக்கத்தால் நம்மைப் பார்ப்பவருமவரே. துஷ்ட சத்துருக்கள்மேல சூரதரித்ரம் செய்கிற சூத்திரியரு மவரே. மோக்ஷ வியாபாரம் செய்கிற வைசியருமவரே. அண்டங்களை ஆட்டுகின்ற சூத்திரருமவரே. ஜீவ கோடிகளுக்கு வேளாண்மை செய்கிற வேளாளருமவரே. அண்டவீடுகளைக் கட்டிய தெய்வத் தச்சரரு மவரே. தேககட்டடங்களைச்செய்கிற குலாலரருமவரே. சிறிய விஷயத்தைக்கெ

ண்டு பெரியவற்றையும், ஒரு தானியத்தைக்கொண்டு கோடி தானியங்களையும் செய்கிற ஜாலவித்தைக்காரரு மவரே. மனுஷர்களுக்கும் மிலங்குகளுக்கும், பக்ஷிகளுக்கும், புஷ்பங்களுக்கும், பலவர்ணங்களையும், அலங்காரங்களையும், அமைத்தெழுதிய சித்திரக்காரரு மவரே. ஆத்தும அரசன் குடியிருக்க இருதால் நாட்டி, இரத்த நீர் சேர்த்து, மாமிஷச்சுவரெழுப்பி, என்புக்கழிகளைப்பரப்பி, நரம்புக்கயிற்றாற் கட்டி, தோலாகிய கூரை வேய்ந்து, ஒன்பது வாயில் அமைத்து, சரீர வீட்டைக்கட்டிய கொத்தனாரு மவரே. அவ்வீடு பிராணவாயுவால் சஞ்சரிக்கச்செய்த மந்திரவாதியுமவரே. நமக்குத்தெரியாமல், நமது சித்தத்தில் வசிக்கிற சித்தருமவரே. தேகவீடு தானே வளரவும், நிமிரவும், குனியவும், நடக்கவும், படுக்கவும், இருக்கவும், தூங்கவும், பல வேலைகளைச்செய்யவும், உண்ணவும், உண்ணுகிற பதார்த்தங்கள் ஜீரணித்து உடலெங்கும் பரவவும், மனமானது சஞ்சரிக்கவும், ஆலோசிக்கவும் சுகிக்கவும், துக்கிக்கவும், பஞ்சேந்திரியங்கள் பல இன்பங்களை அனுபவிக்கவும், நமது சுவாதீனமில்லாமல் சுவாசந்தானே ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கவும், செயும் பரமதயாநிதியுமவரே. கடவுளின மகோன்னதப் பிரபாவ வல்லமையை யார்தான் எடுத்துரைக்கவல்லார்? அவர் சர்வஜ்ஞர், சர்வசக்தர், சர்வேசுரர், சர்வகாரணர், சர்வாந்தரியாமி, தினகிருபாகரர், சீல மஹோததி, ஞானதிவாகரர்; பரமபவித்திரர், பக்தர்கள் மித்திரர், நற்குணசாகரர்; சகல விசித்திரர், இன்ப சமுத்திரர், புவனவைத்தியர்; மோக்ஷதாதா, மூலவேதா, சாட்சாத்மாதா, ஆதிமத்தியாந்தரஹிதர், சோதிநித்தியானந்த சஹிதர், வேத சித்தாந்த விஹிதர்; கபடநாடக சூத்திரர், தபனகோடி காத்திரர், உபயஞான நேத்திரர்; பவஹாசர், ஜீவநேசர், தேவராசர்;

இப்பேர்பட்ட தயாதாக்ஷண்ணிய கல்யாண குணங்களையுடைய பரமனையே பலமுறையும், பன்மலர் கொண்டேத்திப் பண்பாடித் துதிப்போமாக. அவரையே சதாகாலமும் தியானிப்போமாக. அவரையே நமக்குரஸ்தந்து கடாட்சிக்கவேண்டுவோமாக. ஓம், சுபம்! சுபம்!! சுபம்!!!

"தஞ்சைபுரிநேசன்"

கமலாக்ஷி:—இப்புத்தகத்தை V.P.P. சார்ஜுடன் ரூ. 1—8—0 கொடுத்து திருச்சியைச்சேர்ந்த உறையூரில் பஞ்சவர்ணஸ்வாமி கோயில் தெருவிலிருக்கும மகா-ரா-ரா-ஸ்ரீ வைத்தியர் லைலாசம்பின்னை யவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்துராயல்டிராமாடிக்கம்பெனி:—இக்கம்பெனியாரால் திருச்சியில் சென்ற மாதத்தில் நிகழ்ந்தேறிய 12 சரித்திரங்களும் மிக்க விமரிசையாய் மனதைக்கவரத்தக்க வண்ணம் நடத்திவருவதற்குச் சாலவும் சந்தோஷிக்கின்றோம். அவற்றில் சாரங்கதர சரித்திரம், சதாரம், பெரோஜ்ஷா & நூற் ஜகான் ஆகிய இம்மூன்றும் மிகச்சிறந்தவையென்பதும் இக்கம்பெனியிலிருப்பவர்களுள் G. S. முனிசாமி நாயடு, P. S. இரெங்கசாமி அய்யங்கார், K. V. S. K. N; அங்குசாமி நாயடு, கணபதி ஐயர், இந்த ஐவரும் ஆக்ட்டு செய்வதில் மிக்க நிறமை வாய்ந்தவர்களென்பதும் நமதபிப்பிராயம்.

மதுரை மாணவர் சேந்தமிழ் சங்கம்:—இந்த சங்கத்தின் மூன்றாவது வருடாந்த அறிக்கையின் பிரதி ஒன்று நமதி பார்வைக்கு வரப்பெற்றோம். இச்சங்கத்தை இவ்வளவு சிறப்புடன் நடாத்தி வருவதினிமித்தம் நாமடையுமானந்தத்தை இச் சங்கத்து மெம்பர்கட்கறிவிக்க நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். இச்சங்கம் மென்மேலும் விர்த்தியடையுமாக.

பிரஜாபந்துகூடலன்.

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS REGISTERED 4-JUL1904 MADRAS.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

எப்போதுள் யார் யார் வாய்க்கேட்பினு மப்போதுள்
மெய்ப்போருள் காண்பதறிவு.

பருவம் I. } திருசிரபுரம் 1904வது ஜூலைமீ { இலக்கம் 4.

வருமானவரி.

வரியானது நியாயம், அநியாயம், என இருவகைப்படும். உழுதுண்டதற்குக்கொடுக்கும் நிலவரிக்கு நியாயமான வரியென்று சொல்லுவர். தோட்டவரி, கிராம சிப்பந்திவரி இதுகள் ஒரு கணிக்குமட்டும் நியாயமான வரியெனத்தோற்றும். விறகுபட்டை, தீனி, அரக்கு, தேன், உவர்மண், கல்லு, இதுகளுக்குப்போடும் காட்டவரி மிகக்கடினமானது. ஊர்களிலுள்ள பாதைகளிலெல்லாம் ஆளை மடக்கிக்கொண்டு சுங்கங்களை வாங்குவது கடூரோட்டவரி. 30 வருஷத்திற்கு முன்னிருந்த இப்போதிருக்கும் உப்புவரி விஷம் ஏறுவதுபோல் அதிகமாய்விட்டன. தூணி நெசவு இயந்திரங்களுக்கு வரி விதித்து உள்ளூர் நெசவுத்தூணிகளின் விலையை உயர்த்திவிட்டார்கள். தோல் பதனிடும் சாலைகளுக்கும் அதிக வரி விதித்திருக்கின்றார்கள். கடற்றரை முகங்களிலும் ஆதியிலிருந்ததைவிட ஆயத்தீர்வை அதிகமாய்விட்டது. ஆப்காரிவரி அநீதத்திலும் அநீதம். இதனால் தோட்டிமுதல் தோண்டமானீறாகக்கெட்டுப்போகின்றார்கள். இத்துடன் ஒழிந்தனவா இவ்வரிகள்? இல்லேயில்லே!! சிங்கம், புலி, கரடி, ஒனாய், முதலியதுகள் தங்கள் தரிசனத்திற்கு வருகிறவர்களிடம் சிங்கார நந்தவன வரிவாங்குகிறது, யானை, ஒட்டை, குதிரை, முதலிய காட்டு மிருகங்களும், எருமை, மாடு, ஆடு, நாய், முதலிய வீட்டு மிருகங்களும், வரி செலுத்துகின்றன. ஆகாயத்திற் பறக்கும் பறவைகட்கும், பூனை, பெருச்சாளி, எலி, கண்டெலி; இதுகளுக்கு வரி தள்ளுபடி, முனிசிபல் வரிகள் முழுதும் முழுக அடித்து கையில் ஓட்டைக் கொடுப்பதா யிருக்கிறது. தண்ணீர் வரி ஒன்றுண்டாகி ஜனங்கள் தத்தளிக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியில் தெருவுக்கு நான்கு குளங்கள் உண்டு. அதில் ஜலமெடுக்கும் குளம், ஸ்நானம் செய்யும் குளம் வெவ்வேறுக இருக்கும். இதோடுகூட காவிரி நதி சமீபத்திலோடுகின்றது. வாய்க்கால்களிலும் தண்ணீருக்குத் தட்டில்லே. நீர்வளம்பொருந்திய இவ்வூரு

க்குத்தண்ணீர்க்குழாய்களேதுக்கு? "அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டதைப்போல்" தண்ணீர்க்குழாய்களை நம்பி எல்லா குளங்களையும் ஸ்னானத்திற்கு விட்டுவிட்டு குழாய்த்தண்ணீரையே உபயோகப்படுத்தும்படி முனிசிபாலிட்டியார் நிர்ப்பந்தஞ்செய்தார்கள். தண்ணீர்க்குழாய்களின் இயந்திரங்கள் பிரவாககாலங்களிலும் மற்றும் பல தருணங்களிலும் பழுதாய்ப்போய் குழாய்த்தண்ணீர் திடீரென நின்றுவிடுவதினால், ஆபாசமாக்கப்பட்ட குளத்துத்தண்ணீரையே, பெருவாரி, வாந்திபேதி காலங்களிலும் கொடுத்து தாகத்திற்கும், சமையலுக்கும் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. தண்ணீர் நின்ற நாட்களுக்குத் தீர்வை வஜா செய்யும் வழக்கமில்லை. வாகன வரிகளையும் கொஞ்சம் உயர்த்திவிட்டார்கள். உத்தியோகம், கைத்தொழில், வர்த்தகம், இதுகளுக்கு வரிகள் ஏற்பட்டிருக்கிறது. இந்த மூன்றும் இல்லாதவர்கள் யாரோ தெரியவில்லை? தொழில் வரியினால் உலகமே ஹிம்சைப்படுகின்றது. இந்து தேசத்தில் தொழிலாளிகள் ஜாதிக்கு ஒரு தொழிலையே செய்வர். ஜாதியும் தொழிலும் விவகரிக்கில் பெருகும். இதில் விவரித்திருக்கிறபடி தலைவரி ஒன்று தவிர மற்ற சகல வரிகளையும் நாம் கொடுத்து வருவதும்போதாமல் "மரத்திலிருந்து கீழே விழுந்தவனை மாடுமிதித்த கதை" போல் "வருமானவரி" யென்று ஒரு வரியைப்போட்டிருக்கின்றனர். பல வரிகளைக்கொடுத்து தேகம் மெலிந்து உடம்பில் நல்ல இரத்தமின்றி தோலும் எலும்புமாயிருக்கும் நமக்கு, சிற்றுருவாய்ந்த கேஸரி பேருருவாய்ந்த கஜத்தினுடைய மஸ்தகத்தின் பாய்ந்து அதின் மூளையை உறிஞ்சுந்தன்மைக்கிணங்க, மனிதனுடைய மூளையை உறிஞ்சிவிட்டு அவனை உள்ளபடி உன்மத்தனாக்குகிறது. இந்தியாவில் பஞ்சம் அடிக்கடி நேரிடுவதினால் அதைத்தவிர்த்து குடிகளை இரட்சிக்கும்பொருட்டு ஒரு பொது நிதி சேகரிக்கவேண்டியது அவசியகரமாகத் தோற்றி அதற்கென்றே சொற்ப காலத்திற்குமட்டும் வருமான வரி போடுவதாய் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள். வருமான வரியின் சட்ட நிபந்தனைகள், வியவகார விதிகள், இதுவரையில் கண்டதும் கேட்டதும் போலிராமல் நூதனமாயிருக்கின்றது. வருமான வரி விதிப்பவர் தாசில்தார். அவரே அப்பீல் அதிகாரி. நமக்கு விரோதமாய்த்தீர்ப்புசெய்த சிவில் அதிகாரியிடம் புனராலோசனைக்கு மனு கொடுப்பதினாலும், நமக்குத்தண்டனை விதித்த மாஜிஸ்டிரேட் அதிகாரிகளிடம் நாம் அப்பீல்செய்து கொள்ளுவதினாலும் நமக்கு என்ன நியாயம் கிடைக்கப்போகின்றது. முன் ஒரு தடவை தான் செய்த தீர்மானத்தை மாற்ற அந்த அதிகாரி அசக்தராக யிருக்கின்றார். தாசில்தார் தீர்மானத்திற்கு மேல் டிவிஜன் டிப்டி கலெக்டருக்கு விசேஷ அப்பீல் உண்டு. இவர்கள் இருவரும் ஒரே டிவிஜன் அதிகாரிகள், வரி விதிப்பதற்கு அநுஷ்டான விதிகள் வகை தொகையில்லாததாயிருக்கும். சொற்ப சம்பளமுள்ள கிராமமுனிசீப், க்ரணம், இவர்களும், பத்து அல்லது அதற்குக்குறைந்த சம்பளத்திலிருக்கும் தாழ்ந்த உத்தியோகஸ்தர்களுடைய ரிப்போர்ட்டின்பேரிலேயே வரி விதிப்பது. இவர்கள் சொல்லும் வார்த்தையே குருமொழி. வரி கொடுப்பவன் சொல்லும் நியாயமான வார்த்தைகள் செவிக்கேறாது. வரிபோடுவதற்குமுன் வருமானத்திற்கு விவரக்கணக்கு அனுப்பும்படி வழக்கமாய் ஒரு நோட்டீஸ் அனுப்புகிறதுண்டு. அதில் கண்ட நிபந்தனைகளின்படி கணக்கு தயாரிப்பது கஷ்டகரமான விஷயம். சகல விவரக்கணக்குகள் கறந்த பால் கறந்தமேனிக்கு காரியத்தை எடுத்துச்சொன்னாலும் அதை தாசில்தார் காதில் போட்டுக்கொள்ளாமல் "கணக்கு சரியாய் வைக்கப்படவில்லை" என்றுவார்த்தையையே முகாந்திரமாகக்காட்டி வரியை காயம் செய்துவிடுகி

றார். அப்பீல் அதிகாரியாகிய டிப்டி கலெக்டரும் அப்பீலில் கண்டவைகளைக்கவனியாமல் பெரும்பாலும் தாசில்தார் செய்த தீர்மானத்தையே நம்பி அப்பீலைத்தள்ளிவிடுவது வழக்கமாயிருக்கிறது. சென்ற வருஷம் வருமான வரி வசூல் தொகை ரூ 50000. இந்த வருஷம் அதற்குக்குறைவுபடக்கூடாது அதற்கு மேலாகவே இருக்கவேணுமென்பது மாற்றப்படாத நிலையான உத்திரவு. அதற்கு அதிகாரிகள் என்ன செய்வார்கள். மனம்போன போக்குப்போகவேணுமேயல்லது நியாயம், உண்மை சத்தியத்தைக்கவனித்து நடப்பதற்கு வேறு விதியுமில்லை வழியுமில்லை. ஏகதேசத்தில் நூற்றில் ஒருவருக்கு வரியைக்குறைத்தாலும், தள்ளுபடி செய்தாலும், அந்த தள்ளுபடி அல்லது குறைந்த தொகையை யார் தலையில் போட்டாகிலும் அல்லது வரியை அதிகப்படுத்தியே இல்லேல் நூதனமாய் ஒரு ஏழைக்கு புது வரி ஒன்று போட்டாகிலும் மொத்தத்திற்கு கணக்கு நிரவல் செய்யவேண்டும் யார் எக்கேடு கெட்டாலும் நிமித்தமில்லை. சர்க்கார் வருமான வரி வசூல் தொகைக்குமட்டும் குறையக்கூடாது. இந்த வருமான வரியில் இருக்கும் பெரும் அநீதி ஒன்று. அதாவது டிப்டிகலெக்டர் தீர்மானத்திற்குமேல் அப்பீல் கிடையாது. சொற்ப ரிவன்யூ வியவகாரத்திற்கும், ஒரு ரூபாய் சிவில் வியாஜ்ஜியத்திற்கும், சொற்ப கிரிமினல் கேசுகளுக்கும் ஐகோர்ட்டு வரையிலும் கவர்ன்மெண்டு வரையிலும் அப்பீல் இருக்க; இந்த வருமான வரிக்குமட்டும் அவ்வித அநுகூலத்திற்கு ஆஸ்பதம் வைக்காதிருப்பதற்குரிய காரணமென்னையோ? தாசில்தாரும், டிப்டிகலெக்டரும் சேர்ந்து ஒரு அநியாயதீர்ப்பு செய்துவிட்டால் அதற்குக்கேள்விமுறையில்லையா? ஏனோ இந்த அநீதம்? மேலேகண்ட அதிகாரிகள் ஏதேனும் நியாயவிரோதம் செய்வார்களாகில், "முக்கியமாய் வருமானவரி அப்பீல்கள் தயாவிஷயமாய் விசாரிப்பதாயிருப்பதால் அது விஷயத்தில் போர்டார் அப்பீலாக ஏற்றுக்கொள்ளாவிடினும் அவ்வித நம்பர்களை ஷை டிப்டி கலெக்டருக்கு மறு விசாரணைக்கு அனுப்ப போர்டாருக்கு அதிகாரமுண்" டென்று ஒருவாறு கண்ணைத்துடைத்து ஒரு ஜீ. வோ. (Government Order) பிறப்பித்திருக்கின்றார்கள். இது மாவிலும் ஒட்டாத பணியாரத்திலும் ஒட்டாத வீண் உபசாரப்பேச்சே. காரியபலிதம் ஒன்றுமேயில்லை. வருமான வரியினால் கஷ்டப்படுகிறவர்கள் ஏழைகளேயன்றி பாக்கியவந்தரல்லர். மேலுமின்றி கீழுமின்றி நடுநிலைமையில் இருப்பவர்கள் பாடுதான் கஷ்டம். ஐரோப்பியர்களைப்போல் நாம் ஏகாங்கிகளும் ஏக குடும்பஸ்தர்களுமல்ல. இந்து குடும்பங்களில் ஒருவன் சம்பாதிக்க பல குடும்பங்கள் சாப்பிடவேணும். சுஜனசம்ரக்ஷணையே சிறந்த தர்மமெனத் தொன்றுதொட்டு வழக்கத்திற்கு வந்திருப்பதை இனிமேல் மாற்ற மனங்கொள்ளாது. நம்மை நம்பினவர்கட்கு அன்னவஸ்திரம், வித்தை முதலிய விஷயங்களில் நம்மாலியன்றமட்டில் உதவிபுரியவேண்டும். நம்முடைய வேலைக்காரர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் நாம் காப்பாற்றி வருகின்றோம். இதுகளைக் கவர்ன்மெண்டார் யோஜிக்கவில்லை. அதிபாக்கியவந்தர்கள் வாழும் இங்கிலாந்தில் வருமானத்தில் 120 பவுன் தள்ளி பாக்கித்தொகைக்கு வரிபோடுவதிலும் 150 பவுனுக்கு குறைந்து வருஷாந்திர வருமானமுள்ளவனுக்கு வருமானவரி கிடையாது. அதிலும் தனிக்குடும்பஸ்தனும் ஏக குடும்பத்தையே போஷிப்பவனுக்கு இவ்வித சகாயங்கள் செய்யப்பட்டிருக்க, நமக்கு 500 ரூபாய்க்கே வரிபோட்டுவந்தார்கள் விலைவாசிகள் தானியவகைகளுக்கு விலையேறி பணத்துக்குள்ளபடி கிடைக்கவேண்டிய சாமான்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது, இது விஷயமாய் 'காங்கிரஸ்" மகாஜனசபையார் வருஷாவருஷம் யெடுத்துக்காட்டிப்போரா

டிவந்தநிலுல் அவர்கள் ஆக்கியாபித்தபடி 1000 ரூபாய்க்கு செய்யப்பட்டிருக்கிறது. இராஜப்பிரதிநிதி கமக்குப்படியளத்துவிட்டார் கொடுத்ததவிலர். விறகு முதலிய எறிதருப்புகளும் இலவசமாய் கொடுத்தார். பாத்திரத்தை அடுப்பின் மீதேற்றி தண்ணீர் வார்த்து அரிசிகளேந்து பாத்திரத்தில் போட்டு விறகு வீராட்டிகளே வைத்தபோதிலும் அருந்துவதற்கு இதமுள்ள பாகமான நன்றும் வேகவைத்த அன்னம் சமைப்பதற்கு காரணமான அக்கினிதரிசனம் அவசியமாதலால் வருமானவரி விஷயமாய் நமக்கு கிடைத்திருக்கும் சாதகங்களே அனுப்பிவிப்பதற்கு புதிய வருமானவரி ஆக்ட்டை அனுசரித்து நமது ஜில்லா, தாலூகா, கிராம அதிகாரிகள் மேல்கண்ட சட்டத்தின் கருத்துக்கு யாதொரு உல்லங்கனமின்றி அதை அமுலுக்கு கொண்டுவரவேண்டியதற்கு அடியில்கண்ட விதிவிலக்குகள் அதிக அவசியமானதாயிருக்கின்றது. பயனல்லசெய்து பயனில்லே. "செய்வன திருந்தச்செய்" என்னும் மேற்கோளே அனுசரித்தல் கடன். இந்தியா முழுவதிலும் இந்த அனுகூலத்தை அனுபவிக்கவேண்டியது உண்மையாதலால் ஒருவனுக்கு வெகுமதிசெய்து அனுப்பிவிட்டு உடனே அவனுக்குப்பின் ஆட்களே ஏவிவிட்டு அடித்துப்பிடிங்கிவரும்படி செய்யாமல் அடியில் கண்டவாறு கண்டிதமான விதிவிலக்குகள் ஷெடூல்களே அனுசரித்து அனுஷ்டிக்கவேண்டியது அவசியகரமாயிருக்கின்றது.

1 ரூபாய் ஆயிரத்துக்கு உள்பட்ட வருமானமுடையவர்களாயிருந்து வரி செலுத்திவந்தவர்கள் பெயர் விலாசங்களே விவரமாய் ஒவ்வொரு ஜில்லா செஜட்டிலும் பிரசுரம் செய்வித்து இனிமீது இவர்களுக்கு வரி கிடையாதென்னும் இவர்களில் யாரேனும் விசேஷ வருமானத்தை சம்பாதித்திருப்பதாய் கமூதுக்கு வந்தாலொழிய அவர்களுக்கு மறுபடியும் வரிபோடலாகாதென்றும் கண்டிதமான உத்திரவு செய்து கவர்னர் ஜெனரல் அவர்களின் வார்த்தையைக் காப்பாற்ற கருத்தாய் கவனித்தல் கடமை.

2 நில அளவு கணக்கை கையில் வைத்துக்கொண்டு தரம்பிரிக்கும் உத்தியோகஸ்தன் ஏற்படுத்திய நிலவரியை ஒவ்வொரு புலத்தையும் பார்வையிட்டு பைமாஸ் பைசலாதி அதிகாரி வரியை தீர்மானம் செய்வதுபோல் வருமானவரி சீப்போர்ட்டுகளே 1000 முதல் 1500 ரூபாய் வருமானத்தை ரெவினியூ இன்ஸ்பெக்ட்டர்களும் 1500 முதல் 3000 வரையிலுள்ள வருமானத்தை டிப்டி தாசில்தாரும், 3000க்கு மேல்பட்ட வருமானங்களே தாசில்தாரும், மேல் தணிக்கை செய்து தீர விசாரித்து வரி ஏற்படுத்தவேண்டும்.

3 "வல்லடிவழக்கை சொல்லடி மாமி" யென்ற வரி விதித்த தாசில்தாரிடமே வம்புக்குப்போவது உசிதமல்ல அப்பீல் அதிகாரி டிப்டிகலெக்ட்டராயிருக்கவேணும். அவருக்குமேல் ஜில்லா கலெக்ட்டருக்கும் ரெவினியூ போர்ட்டுக்கும் அப்பீல் செய்ய அனுமதிகொடுப்பதவசியம்.

4 அவசியமானுல் வருமானவரி ஸ்பெஷல் டிப்டி கலெக்ட்டர் என்று ஒரு பொது மத்தியஸ்தரே நியமித்து அவரை சர்க்கியூட் ஆபீசராக ஜில்லா

வுக்கு ஒருவராய் நியமித்து வரி அப்பீல்களே விசாரித்து முடிவு செய்தால் அதிலுல் ஜனங்களுக்கு அதிக நியாயம் கிடைக்கும்.

5 வரி செலுத்த காலதாமதமானுல் நூற்றுக்கு ஒன்று வட்டி வீதம் வசூல் செய்வதே போதுமென்று சுமந்த அபராதங்களே போடுவதை நிறுத்தி நிமித்திய மாத்திரத்துக்கு சங்கதிக்குத்தக்கபடி 5 ரூபாய்க்கு அதிகப்படாத அபராதம் விதிக்கவேண்டியது.

6 சர்க்கார் வரியை செலுத்துவதற்கு உள்ளபடி நீர்வாகமில்லாதவர்களுக்கு எவ்வித காரணத்தைக்கொண்டும் காவல் தண்டனேயாவது அன்றுடம் சாப்பாடு செய்விப்பதற்கு அவசியகரமான சாமான் தட்டுமுட்டுகள் 10 ரூபாய்க்கு உட்பட்ட விலையுள்ளதை ஜப்திசெய்யும்படி உத்திரவு பிறப்பிவிப்பதை கண்டிப்பாய் விலக்கவேண்டும்.

7 வரி அப்பீல்களே (சம்மேரி) சுருக்க விசாரணையாகச்செய்யாமல் அசல் நெம்பர் விசாரணையைப்போல் விசாரித்து பைசல் செய்யவேண்டும.

8 இப்போது வஜா செய்திருக்கும் ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வருமானவரியிலுல் இசற்ற முன்னிருந்த வருமானவரி மொத்தத் தொகை குறையுமாதலால் சென்ற வருஷம் வசூல் செய்த வரியின் மொத்தத்தை நிரவல் செய்வதற்கு "இறந்தவன் பாரம் இருப்பவன் தலேமேலென்று" ஆயிரத்துக்கு மேற்பட்ட வருமானமுள்ளவர்களுக்கு பேர்வழிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் வரியை அதிகப்படுத்தி மொத்த தொகையை முன்போல் சமனுக்க முயலுவது கூடாது.

மேலேகண்ட விஷயங்களேத் தீர்க்கமாய் யோசித்து "கலியாணம் செய்தும் சன்னியாசி, கடன்வாங்கியும் பட்டினி" யென்று செய்யாமலும் "ஈவது விலக்கேல்" என்ற விதியைக்கைபிடியாய் வகித்து இடுவார்பிச்சையை கொடுக்கும் ஆள் மாகாணங்கள் அதைக்கெடுக்காமல் தர்மதேவதைக்கு ஒப்பிதமாய் அதிகாரிகள் நடந்து பேரும் கீர்த்தியும் அசேஷ ஜனங்களின் ஆசீர்வாதத்தையும் பெற்று யாதொரு தீங்கின்றி நிங்கள் மும்மாரி பெய்து செல்வம் தழைத்தோங்க நீடூழிகாலம் நித்தியானந்தத்தை யடையும்படிக்கு தர்மபரிபாலனஞ்செய்து இகபரமிரண்டுக்கும் சுகசாதகமான காரியங்களே இயற்ற வேணுமாய் சகல அதிகாரிகளேயும் வந்தனத்துடன் பிரார்த்திக்கின்றேம்.

நல்லுரை.

1. தன்னுடைய கெட்ட நிலேமைக்காகப் பிறரை நிந்தித்தல் அதமனுடையசெய்கை. தன்னேயேநிந்தித்துக்கொள்ளல் மத்திமன்செய்கை. தன்னேயும் பிறரையும் நிந்தியாதிருத்தல் உத்தமனுடைய செய்கை.

2 தர்மம் என்று சொல்லப்படுகிற தேவதானமே நாம் உள்ளே விடுவோமானால் அவன் பலவித தொல்லைகளிலிருந்து நம்முடைய இருதயத்தை விடுவித்து இரக்ஷிப்பான்.

3 தன்னைப்பூரணமாக்க எவன் சிரமப்படுகிறானே அவனே மிகவும் நல்லவன். தான் பூரணமடைந்து வருவதாக எவன் உணருகிறானே அவனே அதிக சுகமடைந்தவன்.

4 நானும் உழுது விதைக்கிறேன், என்னுடைய உழவிலும் விதைப்பிலும்யிருந்து நித்யபயனை அறுக்கிறேன், என்னுடைய வயல் சமயம், நான் பிடுங்கும் களைகள் காமக்குரோதாதிகள், எனது கலப்பை ஞானம், நான் விதைக்கும் வித்து பரிசுத்தம், என்று வயலில் வேலைசெய்துக் கொண்டிருந்த ஒரு கிருஷிக்காரன் பக்கத்தில் நின்று புத்தர் சொன்னார்.

5 ஒருவன் எண்ணத்தின்படியே அவன் நிச்சயம். நிச்சயத்தின்படியே அவன் கர்மம். கருமத்தின்படியே அவன் அனுபவம்.

6 தராசின் பளுவான தட்டு கீழேயிறங்க இலேசானதட்டு மேலேசெல்லுகின்றது, அதுபோல்வே உலக சம்மந்தமான கவலைகள் அதிகமுடையவன் அதிலேயே தாழ்ந்துபோக, அவ்வித கவலைகள் குறைந்தவன் பரமபதத்தை நோக்கி மேலே செல்லுகிறான்.

7 ஒரு மனிதனுடைய வீடு சர்வவல்லமையுள்ள கடவுளுடைய பாதார விந்தங்களாயிருக்கின்றது. துரதிர்ஷ்டத்தினாலும் கெட்டகாலத்தினாலும் அவனுக்குப்பயம் நேரிடும்பொழுதெல்லாம தனது உண்மையான வீடாகிய கடவுளிடத்துக்குப்போகிறான்; ஆனால் உலக விஷயங்கள் அவனையிழுப்பதால் அவன் சிறிது நேரத்தில் கீழே இறங்கும்படி நேரிடுகிறது.

8 யாவனொருவன் சகல பற்றுக்களையும், மோகங்களையும், பாரங்களையும், உதறிவிட்டு விடுதலையடைகிறானே அவன் சாந்தமும் சுகமும் அடைகிறான். அப்படிச்செய்யாவிட்டால எவ்வளவு ஆபத்து?

9 ஒவ்வொரு மதத்திலும் நன்மையையும் உண்மையையுங்காணலாம். தேவனே உண்மையாய் நேசிக்கிறவன் அவரை யெங்குங்காணக்கூடும்.

10 மறுபடியும் ஒத்திருக்கவேண்டிய புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு கலகஞ்செய்வதன்வபடி மெத்த மூடத்தனம்.

11 இக்காலத்திலே சற்றேறக்குறைய எவ்வகை அந்தஸ்தையுடையவர்களும் புத்திகெட்டு செலவு விஷயத்திலும் டம்பத்திலும் ஒருவரையொருவர் மிஞ்சப்பார்க்கின்றனர். இவ்வழக்கத்தால் பின்னுக்கு சம்பவிக்கும்கெடுதிகள் அநேகானேகம். இனிமேலாகிலும் எச்சரிக்கையாயிருப்பாராக.

12 நல்லோருக்குவரும் மரணம் துன்பத்தையொழித்தற் பொருட்டாயிருக்க, லோக இச்சையைப்பற்றி இன்னும் அவர்கள் இருக்கவேணுமென்று நாம் ஆசைப்பட்டபோதிலும், மோட்சத்தில் அவர்களனுபவிக்கும் பாக்கியத்தை நினைத்தால் நாம் துக்கப்படாதிருக்கவேண்டியதாயிருக்கிறது, எதிலும் இன்பதுன்பமிரண்டையும் சமமாக கடவுள் அமைத்திருக்கிறார். அவர்கள் முக்தியடைந்ததைப்பற்றி சந்தோஷப்படுவதா? அல்லது நம்மை விட்டுப்பிரிந்து இவ்வுலகத்திலிருந்து நீங்கியதைக் குறித்து துக்கப்படுவதா?

விதவாவிவாகம்.

"சொல்லுவதெளிது செய்வதரிது" எனும் முதுமொழியைப்பின்னும் பிரகாசமடையும் வண்ணம் புரிவதில் அதிசூரர்களாயிருக்கின்றனர், தற்காலத்திலுள்ள மாந்தர்களிற் பெரும்பாலோர். விதவைகட்கு மறுமணம்புரிவதவசியகரமென்று பிரசங்கமேடையிலிருந்து கம்பீரமாய் வழங்கிப் பின்னர்சொல்லியதொன்றை நடப்பதொன்றாய் ஒழுகின்றனர். விதவைகட்கு மறுமணம் அவசியமென்றுரைக்க முன்வருவோர் தாம் இறந்தபின்னர் தத்தம் மனைவியர் இன்னுரைப் பதியாக வரித்துக்கொள்ள வேண்டுமென்று தாம் ஏற்படுத்தும் உயிலில் எழுதிவைத்து அதை அநுஷ்டானத்திற்குகொண்டுவரும்படி செய்வார்களாயின் சிலாக்கியமாகும். இப்படி இந்தக்களுக்குன் நிகழ்ந்தேறுவது குதிரைக்கொம்பே. ஆகிகாலந்தொட்டு ஆரியாங்கனைகள் பதியே பரமதெய்வமென்றெண்ணி அவனுடனிருந்து இல்லறத்தை நடாத்தி பின் அவன் இறந்ததும் சகலசுகங்களையும் வெறுத்துசன்னியாசினிகளாய் அன்னைதந்தையர் ஆதரவிலாகிலும் அல்லேல் கணவன்வீட்டாராலாகிலும் காப்பாற்றப்பட்டு ஈஸ்வரதியானத்துடன் தம்காலத்தை ஸத்விஷயத்தில் கழிபான்றிப்பர். பதியின்பிரிவைப் பொறுக்க ஆற்றலில்லாது அனைத்தையும் துறந்து ஸகமனஞ்செய்த அங்கனைமணிகள் அநேகர். இவ்விதம் அமைந்த காரணங்கொண்டே இந்துக்களின் முன்னோர்கள்-பிறமதஸ்தர்கட்கு உள்ளதுபோல் ஆரியகுலாங்கனைகட்கு "கன்னியாமாடம்" என்ற பிரத்தியேகமாய் ஏற்படுத்தாதொழிந்தனர். 'விதவாவிவாகம்' அவசியகரமென்று உரைக்க முன்வருவோர் அதற்குப் பெரும்பாலும்காரணமாயிருக்கும் "பாலியவிவாக"த்தை நீக்க முன்வராததற்குயை முகாந்திரமென்னையோ? மூன்று வயது சிறுவனுக்கும் இரண்டுவயது சிறுமிக்கும் விவாகம் நடத்திக்கொள்ளும்படி எந்தசாஸ்திரத்தில் விதித்திருக்கின்றதோ யாமுணர்கிலேம். விவாகத்தால் சந்தோஷப் படுகிறவர்களும் வியசனப்படுகின்றவர்களும் ஸ்திபதிகளேயன்றோ? அந்த ஸ்திபதிகட்கே அவ்விவாகம் அமங்களத்தை தருமாயின் அந்தமணத்தால் எய்திய பயன் யாது? தற்காலத்தில் ஸ்திரீ பிரஜைகளே அதிகமாயிருக்கின்றனர் இவர்கட்கே தக்கவரன்கள் கிடைப்பதரிதாயிருக்கும் போது இனி விதவைகட்கு எங்கிருந்து கிடைப்பர்? ஆரியாசாரம் தலைதூக்கவன்றோ ஆய்விடும்? தற்காலத்திய புருஷர்களிற் பெரும்பான்மையோருக்கு தம் சுபத்தினிகளின்மீது பெரும்பாலும் சந்தேகங்கள் நேரிவது காரணமாக எவ்வளவோ சண்டைகளும், கலகங்களும், கொலைகளும் நடந்தேறுகின்றன. இனி விதவாவிவாகம் ஒன்றுதான் பாக்கி. அதுவும் பெரும்பாலும் அநுஷ்டானத்திற்கு வந்து ஆசரிக்கத் தொடங்கிவிட்டால் சொல்லவேண்டியதில்லை, கலகங்கட்கும், கொலைகட்கும், வம்புசண்டைகட்கும். தன்னை மாலையிட்ட மஞ்ஞளனிடத்து தன்னுள்ளன்பைச் செலுத்தி இன்புறுவாழ்ந்து அவன் மரித்தவுடன் அவன்பிரிவைச் சகியாது வருந்தி சகலஇன்பசந்தோஷ

க்களையும் விடுத்து அவனடைந்த உலகையே தானுமடைதற்குரிய முயற்சிகளே இயற்றி முக்கியமடைதலன்றே சற்பனமாதர்கட்குச் சிறப்பு? மதிகெட்டு பாலியவிவாகஞ் செய்வானேன்? விதிகெட்டு விதவாவிவாகம் அவசியமென்றுகூறிமறைவானேன்? விதவாவிவாகம் புரிவதாலுண்டாகும் தீங்குகள் பலவுள. பாலிய விவாகத்தைத் தவிர்ப்பதாலடையும் நன்மைகள் கணக்கில. தீயதைவிடுத்து நன்மையைக்கடைபிடித்து நலமிகவடைவதே நல்லறிவமைபெற்ற புத்திசாலிகளின் கடமை. ஆனதுகொண்டு விதவாவிவாகம் செய்யவேண்டுமென்று கூற முன்வருவதைவிட அதற்குக்காரணமாயிருக்கும் பாலிய விவாகத்தை அறவே நீக்க முயற்சிக்க முன் வருவதே சர்வசிலாக்கியம். இப்பாலிய விவாகத்தாலுண்டாகும் கெடுதிகளை மறுசஞ்சிகையில் ஆராய்வாம்.

விநோதசம்பாஷணைகள்.

ஆசிரியர்:—அடே படலே! நேற்று உன்னை அடிக்காமல் மன்னித்து விட்டேனே. இன்று என்முன் ஏன் வந்தாய்?

மாணாக்கன்:—தாங்கள் செய்த நன்றியை மறக்கவில்லே. தங்கள் மதிமுகத்தைக்கண்டு களிப்படையவேண்டுமென்பது என் அபேக்ஷை. ஆனதுகொண்டுதான் பாடம் படிக்கவில்லே.

தந்தை:—என் இன்று பாடசாலேக்குப்போகவில்லே? உன்னை உபாத்தியாயரிடம் சொல்லி அடிப்பிக்கிறேன்.

தனயன்:—தந்தாய்! நான் பள்ளிக்கூடம்போகத் தடையில்லே. உங்களேப் பிரியவேண்டியிருக்கின்றதே என்று தான் வியசனம்.

மாஜிஸ்டிரேட்:—அடே என் அந்தஇடத்தில் மலவிசர்ஜ்ஜனம் செய்தாய்? அதற்கேற்றவிடம் அஃதன்றென்று நீ உணரவில்லேயா?

கைதி:—ஐயா! நான் போய்க்கொண்டிருக்கும் வழியில் இந்த போலீஸ்காரர் மலவிசர்ஜ்ஜனம் செய்துகொண்டிருந்தார். அதைக் கண்ணுற்ற நானும் அங்கிருந்தேன். பின் என்னே ஒரு அணு கேட்க நான் தரமாட்டேனென்று சொல்ல அதின்பேரில் கோபங்கொண்டு என்னே இவ்விடத்திற்கிழுத்து வந்தார்.

நேசர்:—மித்திரா! வந்தனம். உன்னேக்கண்டு ஒரு வருஷமானது. இந்த ஒரு வருஷமும் ஒரு நிமிஷத்தில் கழித்து இவ்வளவு தூரிதத்தில் உன்னேக்கண்டு களித்ததைப்பற்றி எனக்கு மிக்க சந்தோஷமாயிருக்கின்றது.

மித்திரர்:—நேசா! இஃதென்னே, நவீனமாக கவின்றனே? நேற்றிரவு நெடுநேரம் நாமிருவரும் பேசிக்கொண்டிருந்து பிரிந்தோமே. அப்படியிருக்க இப்படிச்சொல்லுவது மிக்கவியப்பே.

நேசர்:—மித்திரா! அப்படியா? நேற்றென்னவருஷம்? இன்றென்னவருஷம்? கூறுதும்.

மித்திரர்:—நேசா! நேற்று 1903ம்-வருஷம். இன்று 1904ம்-வருஷம்.

நேசர்:—மித்திரா! 1903ஐ உன்னேக்கண்டு சம்பாஷித்து விட்டுச்சென்றயான் 1904ஐத்தில் தானே உன்னேக்கண்டேன். ஆகவே உன்னேக்கண்டையரடி ஒரு வருஷமாகவில்லேயா?

பிராசீன ஆசாரம்.

தற்காலத்தியநாகரீகர்களிற் பெரும்பான்மையோர் ஆங்கிலேயர்களேப் போல தமக்குத்தாமே தக்க மனேவிகளேப் புருடர்களும், தக்கபதிகளே ஸ்திரீகளும் தேடி மணம்புரிந்துகொள்ளுவது நன்றென நவில முன் வருகின்றனர். முன் வருவதிலும் குறைவில்லே. எடுத்துப்பேசுவதிலும் எழுதுவதிலும் தாழ்வில்லே. எது ஒரு விஷயத்தையும் தீரயோசித்தன்றே வெளிக்குக் கொண்டுவரவேண்டும். அதை விட்டுவிட்டு வாயில் வந்தபடி பேசுவதும் மனதிற்றத்தோன்றியபடி எழுதுவதும் புத்திமான்கட்கழகோ? நவயௌவனயுவதியொருவள் அச்சம் விடுத்து ஆடவனொருவனேயணுகி என்னே மணம்புரிகின்றனேயாவென்று கேட்கவாவது எழுதவாவது முன் வருவளோ? ஆடவன்றானேகட்டும், ஒரு தருணியிடம் என்னே மணம்புரி என்றுரைக்கத் துணிவனே? துணிவனேல் நாமுங் கலங்களேக் கணக்கிட முடியுமோ? அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, எனும் நான்கன்றோநாரீமணிகட்காபரணம்? அஃதில்லாத அவ்வனேயை ஸ்திரீயாக வரிப்பதாற் பயனென்னே? அதலுல் இகபரசுகசாதகமுண்டாமோ? எப்பேர்ப்பட்டவர்களும் தாங்கள் எவ்வளவு அயோக்கிய சிகாமணிகளாயிருப்பினும் புறத்தேதங்களேப் பரிசுத்தர்களென்று ஜனங்கள் மதிக்கும் வண்ணமே காட்டிக்கொள்ளுவர். இப்படி வெளிப்பகட்டைக்கண்டு மயங்கிய பருஷன், அல்லது ஸ்திரீ, பிற்காலத்தில் அடைவது துன்பமோ? இன்பமோ? துன்பந்தானே? இதைப்பின்னும் நிதர்ஸனப்படுத்த இதைப்பேலவே வெளிப்பகட்டைக்கண்டு மோசம்போனதாய் அங்கிலேயாகளும் முறையிடுகின்றார்களன்றே? நமதுஸ்திரீகட்கு உத்தமகல்வியாகிய அஸ்திவாரம் பலமாயிருந்தாலன்றே சுதந்திரங்களே அளிப்பதாகிய அஸ்திவாரம் பலமாயிருந்தாலன்றே சுதந்திரங்களே அளிப்பதாகிய பெரிய மாளிகைகளேக் கட்டலாம்? கல்வியாகிய அஸ்திவாரம் கெட்டிப்படாதிருக்கும்போழ்து மேல்மாளிகை கட்டுதலாகிய சுதந்திரங்களே அளிப்பினை அஸ்திவாரம் கெட்டியாய் இல்லாத காரணங்கொண்டு மேலே கட்டப்பட்ட மாளிகை இடிந்து கீழே விழுவதற்கிணங்க, கல்விப்பயிற்சி முற்றும் பெறாத காரிகையர்கட்கு சுதந்திரங்களேயளிக்க முயன்றால் அஃது அவர்களே முற்றுமன்றே கெடுத்துவிடும்? சுதந்திரங்களேயளிக்காதிருக்கும் இக்காலத்திலேயே உத்தமபத்தினிகளிடம் புருஷர்கள் படும் கஷ்டத்தை எடுத்துரைக்க எவராலியலும்? சிலர் தத்தம் புருஷர்களே வீடு கூட்டவும் அன்னம் சமைக்கவும் தங்கள் சேலைகளேத் துவைக்கவும் வீட்டு வேலேக்காரர்களாய் ஏற்படுத்தி கௌரதை சம்பாதித்துக் கொடுக்கின்றார்களே! எதிர்த்துப்பேசினால் முகத்திலிடிக்கவும் துணிகின்றனரே! இப்பேர்ப்பட்ட அக்கறணிகட்கு சுதந்திரங்களே யளிப்பின் சொல்லவேண்டியதில்லையே. தக்கவித்தியாவதிகட்கு சுதந்திரங்களே அளிக்கலாமென்று கூறவருபவர், பின்

வருவதைக் கவனிக்கக்கடவர். இவ்விருவர் (புருஷன், ஸ்திரீ) களும் எவ்வளவு தான் மேன்மை பெற்றவர்களாயிருப்பினும் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த முன்னோர்கட்கு ஈடாவரோ? ஆகார். ஆனதுகொண்டு அம்முன்னோர்கள் ஏற்படுத்தியபடி தான்றோன்றிகளாய்த் திரியாது பெற்றோர்கட்கடங்கியிருந்து தத்தம் கருத்தை அன்னவர்கட்கறிவித்து அவர்கள் மூலம் மணம்புரிந்துகொண்டு இன்பமாய் இல்லறத்தை நடாத்தி இதரசகாதக கருமங்களைப் புரிந்திலங்குவது எவ்வளவு சிரேயஸ்கரம்? ஆதிகாலத்தில் "சுயம்வரம்" ஏற்படுத்தி ஸ்திரீகள் தமக்குத்தாமே தக்க கணவர்களைத் தேடியடையும்படி செய்யவில்லையாவென்று கேட்க சிலர் முன் வருகின்றனர். அக்காலம்போயின, அந்நாட்களில் பிரகாசித்த அங்களுமணிகளடைந்திருந்த அறிவும் கல்விப்பயிற்சியும் பெரும்பாலும் இக்காலத்திய காரிகையர்கட்கு ஒரு சிறிதுமில. "காலத்திற்கேற்ற கோலம்" என்றபடி கல்விப்பயிற்சி பெரும்பாலுமில்லாதிருக்கும் இக்காலத்தில் முன்னோர்களனுசரித்த ஏற்பாட்டை விலக்கிவருவது நன்றன்று. பெரும்பாலும் பெற்றோர்கள் தம்மக்களின் கலத்தையே கோருபவராகலான் அன்னவர் சொற்படி நடந்து வருதலே நலம்.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

பெண்கல்வி.

பெண்கல்வி அவசியகரமென்பதைப்பற்றிப் பலர் எடுத்து விளக்கியிருக்கின்றனர். ஆயினும் தற்சமயம் பெண்கட்கு எத்தகைய கலவி வேண்டுமென்பதைப்பற்றிப் பேசுவோம். சிறுமியர்கட்கு இளமையிலிருந்தே தெய்வபக்தி, ஆலயந்தொழுதல், மாதா பிதா குருவணக்கம், நன்னடக்கை, ஸத்தியம், முதலியவைகளைப்போதித்து வரவேண்டியதவசியகரம். கந்தேயத்துச் சிறுமிகள் இளமையிலேயே பாடசாலைகட்கு அனுப்பப்படுகின்றனர், இதைப்பற்றி சந்தோஷப்படவேண்டியதே, அவ்விளமையில் இவர்கள் பாடசாலைகளில் பயிலும் பாடமியாது? யாளை, பசு, குதிரை, பணியாரம், ரேக்ளா, மிட்டாய்க்கடை, இவைகளைப்பற்றியவைகளைக் கற்கின்றனர். இவற்றால் விளையும்பயன் யாதோ? மேற்போந்த தெய்வபக்தி, நன்னடக்கை, யாதியவற்றைப் போதிப்பதைவிட இந்த ரேக்ளா, மிட்டாய்க்கடைகளைப் பற்றியவைகளைப் படிப்பதாலடையும்பயன் விசேஷமென்று கூற மந்தமதியும் துணியமாட்டான். இத்தகைய பாடங்களைப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு இப்பாலகிகள் இல்லத்தையடைந்ததும் எதைக்காண்கின்றனர்? கல்வியிலும் நாகரீகத்தோர்ச்சியிலும் மேன்மையடையாவிட்டாலும்; சண்டைகள் போடுவதிலும், குண்ணிகளாய்த் திரிவதிலும், கொண்ட கணவனைக் கண்டபடி திட்டுவதிலும் அவனுக்கு கௌரதையுண்டாக்குவதிலும், 10-வது தெருவில் நடந்த ஒரு சங்கதியை ஒரு கொடிக்குன் எறிவதிலும, வம்புகள் வழங்குவதிலும், நமது நாரீமணிகள் இளைத்தவர்களல்லர். இதில் தேர்ச்சி பெறக்கருதின் ஆங்லேய மாதர்களும் இவர்களிடத்தில் தான் கற்றுக்கொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்ட சாகஸிகளாக நாரீமணிகள் வழங்கும் வார்

த்தைகளையும் அன்னவர்கள் அனுசரிக்கும் நடைகளையும் கற்கமுயலும் இத்தருணிகளின் தனயைகளான அச்சிறுமிகளின் பிற்கால நிலைமையையும் அன்னவர்கள் பயின்ற கல்லியே அவர்களின் தற்குணங்களை அபிவிர்த்திக்கச் செய்து இறுதியில் அவர்கட்கேவாளாய் விடுகின்றதென்பதைப் பற்றியும் நாமெடுத்துக் கூறவேண்டியதில்லையே! இங்ஙனம் நிகழுமேல் "காமலோசனி படித்தாள், கள்ளப்புருஷனுக்குக் கடிதமெழுதினாள், இறுதியில் வேசியானாள்," என்னும் சொற்கள் மலிந்துபோகத்தடையென்னே? குடம்பாவில் ஒரு துளி விஷம் கலந்ததுபோல் இவர்களால் மற்றரமணிகட்கு ஓர் இகழ்ச்சியும், கல்வியைக் காரிகையர்கட்குக் கற்பிக்கத்துணிவதில் அச்சமுமுண்டாகின்றன. ஆகவே சிறுமியர்களை இளமையிலிருந்தே கல்வழியில் நடத்திபொய்சொல்லாதே களவுசெய்யாதே என்றெடுத்துக் கூறுவதைவிட தன் நடத்தையினால் அவர்கட்கு நன்னடக்கையை உண்டாக்கி நீதிமொழிகளையும் அனுசரிக்கவேண்டிய விதங்களையும் கற்றுக்கொடுத்து, நல்விஷயங்களைப் புகட்டும் நூல்களையும், புராணேதிகாசங்களையும் அவர்கட்குப் போதித்து உத்தமகல்வியிற் றேர்ச்சியடையும் வண்ணம் புரிவதே சிரேயஸ்கரம். இப்படிக் கற்றுத்திருந்தி நன்னடக்கையைக் கைக்கொண்டு கல்வழியிலொழுகும் நாரீமணிகளாலேயே நந்தேயம் சிறப்புறும். இந்தியுணராது நாகரீகர்களெனப் பெயர்பூண்ட சிலர் தத்தம் சிறுமியர்கட்குக் கல்வி கற்பிக்கப் பின் வாங்குகின்றனர். அன்னவரும் எனையரும் இதைக்கவனித்து இதன்படி ஒழுக முயற்சிக்க வேண்டுதல் மிக்க நலம்.

ருஷிய ஜப்பானிய யுத்தம்.

ஆறுண்டுகட்கு முன்னர் ஜப்பான் சிலருடன் சண்டையிட்டு வெற்றியடைந்தகாலத்தில் நியாயமாய் அடையக்கூடியதாயிருந்த பிரயோஜனங்களை ருஷியா குறுக்கிட்டு பயமுறுத்தி அதுகளையடைய வொட்டாமல் தடுத்தது. ஜெர்மனி ஒரு மாகாணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. போர்ட் ஆர்தரும் அதினடுத்த சிலநாடுகளும் ருஷிய இராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அத்துடன் வயிறு நிறம்பவில்லை. சீனா சற்று இளைத்திருப்பதை யெண்ணி ருஷியா பேராசையுள்ள முயற்சிகளைக் கையாட ஆரம்பித்து ஒரு உடன்படிக்கையின்பேரில் மஞ்சூரியாவைக்கைப்பற்றி அந்த உடன்பாட்டுக்கு விரோதமாய் மஞ்சூரியாவை விட்டு நீங்காமல் காலதாமதஞ் செய்துகொண்டிருந்து கடைசியில் அதைக்கைக்கொள்ள வேணுமென்ற கருத்தை வெளியிட்டது. ருஷியா மஞ்சூரியாவைக் கைப்பற்றினால் ஜப்பானியருடைய சுய ஆதிக்கத்திற்கு பின்னம் வருவதுடன் கொரியாவிலும் தம் அதிகாரம் மேற்கொள்ளும்படி ருஷியர்கள் செய்யத்துணிவர். இவையனைத்தையும் தீரயோசித்த ஜப்பானியர்கள் தங்கள் சுய ராஜ்ஜியாதிகாரத்திற்கு பின்னம் வராமற்காத்து ருஷியர்களை மஞ்சூரியாவினின்றும்ஓட்டிவிடவேண்டுமென்ற வெண்ணத்துடன் யுத்தசன்னதராயினர். இப்போது ருஷியாவுக்குத்தீர்த்திசையென்று உலகமெங்கும் ஒரே பேச்சாகி ஜப்பானியருடைய ஜெயங்களையே வெகு கீர்த்தியாக மதிக்கும்படியாக இருக்கிறது. கடற்சண்

டையில் ஜப்பானியர் வெற்றியடைந்தனர். தரைச்சண்டையிலும் அவர்களே பெரும்பாலும் வெற்றியடைந்து வருகின்றனர். ருஷியா தற்சமயம் கண் விழிக்கின்றது. இருபாலருக்கும் பெருஞ்சேதங்களேநேரிட்டிளவாயினும்ஜப்பானியரிலும்பதின்மடங்கு ருஷியர்கட்கே அதிகசேதமென நஸ்காரிக்கலாம். தற்காலநிலயம் சமாதானம் வெகுதூரத்தில் எட்டியிருப்பதாய்க்காணப்படுகிறது. எப்படியும் ருஷியாவானது கொரியா மஞ்சூரியாவை விட்டு விலகவேண்டிவரும். கூடியமட்டில் ருஷியரைத்தோற்கடித்து கொரியாவில் ருஷியருக்கு யாதொரு பிடிமானமும் இல்லாமல் செய்து கொரியாவை ஜப்பானிய ஈஜிப்டு ஆக்கிக்கொண்டு மஞ்சூரியாவை சீனருக்கு ஆதீனமாக்கி தங்கள் ஆதரவுக்கு அதை உட்படுத்திவிட வேண்டுமென்பதே ஜப்பானியரின் கருத்து. கொரியா, மஞ்சூரியா இவையிரண்டும் பூர்வகாலத்தில் சீனதேசத்தைச்சேர்ந்து அவர்கள் சுயாதிகாரத்திற்கு உட்பட்டிருந்த இராஜ்ஜியங்கள். சற்று முகதாக்ஷண்ணியத்தினுலோ அல்லேல் சோர்வினுலோ அன்னியஇராஜாங்கங்கட்கு சற்று இடங்கொடுத்தது காரணமாக தற்காலம் ருஷியரும் ஜப்பானியரும் சீனரின் சுய இராஜஜியங்களில் பிரவேசித்து போரிட்டுக்கொண்டனர். ஜப்பானியருக்குண்டான பல ஜயங்கள் ருஷியாவில் அச்சத்தையும் அதிககவலையையும் சந்தேகத்தையும் விளைவித்து சமீபத்தில் உண்டாயிருக்கும் தோற்றங்களினுல் நீண்டகாலத்திற்குக் கொடிய யுத்தத்திற்கு ஏதுவாகுமென்று அனுபோகஸ்தர்கள் பலர் நிகூயிக்கிறார்கள். ருஷியா மிகவும் பெரிய இராஜ்ஜியம். அவர்கள் யுத்தஞ்செய்வதில் வல்லமையுள்ளவர்களென்ற ஒரு பெயரும் உண்டு. அப்போப்பட்ட இராஜ்ஜியத்திற்குத் தற்காலம் ஜப்பானியர்களால் அவமானம் உண்டாயிருக்கின்றது. இந்த அவமானத்தை ஒரு பொருட்டென மதியாது தனக்கு நேரிட்டிருக்கும் பல நஷ்டங்களை யுத்தேசித்து சமாதானத்திற்கு வர முயற்சிக்குமென்று கூறுவது தற்கால நிலமைக்கு முற்றும் பொருந்தாத விஷயம். ஜப்பானியர்களுக்குத் தற்காலம் வெற்றிகளே பெரும்பாலும் கிடைத்துவருவதாயிருப்பதாலும், அவர்களது முன்யோசனையே இந்த யுத்தத்திற்குக் காரணமாக ஏற்பட்டிருக்கின்றவாகலானும் தமதாருயிரினும் தேசாபிமானமே பெரிதெனமதிக்கும் மதிவிசேஷ்டர்களாகலானும் அப்போப்பட்ட வல்லமைசாலிகள் தாங்கள் எடுத்த விஷயத்தைவிடுத்து சமாதானத்திற்கு முக்துவரென்று கனவிலும் கருதுதற்குக்கூட காரண மேற்படவில்லை. ஆகவே இவ்விருபாலரும் ஜெயத்தையேகோறி யுத்தாபேக்ஷிகளாய் இலக்குவரேயன்றி சமாதானத்திற்கு வராமலிருப்பார்களாயின் யுத்தம் முடிவடைவதெப்பொழுது? தற்கால நிலமையை நிதானிக்கில் பிரான்ஸ் வெகு தூரிதத்தில் ருஷியர்களுடன் சேரக்கூடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. ருஷியர் பக்கம் பிரான்சு சேர்ந்தால் ஜப்பானியர் பக்கம் உடனே பிரிட்டிஸ் சேரும். இது அனைவருக்கும் பெருங்கவலையை உண்டாக்கியிருக்கிறது. "இந்தியாவை ருஷியர்கள் பிரிட்டிஸாரிடமிருந்து கைப்பற்றி விடுவரோ" என்றெண்ணியிருந்த ஜயம் நீங்கியதே இந்த யுத்தத்தால் இந்தியா வெய்திய நன்மையாம். அத்துடன் ஜப்பானியர்கள் அடைந்து வரும் வெற்றிகளெல்லாம் இந்தியர்கட்குப் பெருமையைத் தரத்தக்கன. இந்த யுத்தம் எப்பொழுது முடிவடையுமோ தெரியவில்லை. ஜப்பானியருடைய ஜெயங்கள் ஒரு பெருஞ்சந்தமாய் உலகெங்கும் பரவி இருப்பதினுல் தற்கால போக்கத்தைக்கொண்டு அமைவாய் நிரூபிப்பதற்கு கூடாமையாயிருக்கின்றது. ருஷியா தற்சமயம் ஒரு நம்பிக்கையற்ற நிலமையிலிருக்கிறது. தண்ணீரிலும் தரையிலும் ஜப்பானியருக்குண்டான ஜெயங்கள் ஆச்சரியத்

தை விளைவிக்கின்றன. போர்ட் ஆர்தர் ஜப்பானியர்களால முற்றுகை பேசடப்பட்டிருக்கிறது. இதை ஜப்பானியர்கள் கைப்பற்றி விடுவரேல் இந்த யுத்தம் முடிவுபெற்றதென்னலாம். கொரியாவிலிருந்து ருஷியர்கள் துரத்தப்பட்டார்கள். ருஷியருக்கும் ஜப்பானியருக்கும் யுத்தம் காலதாமதமாய் நீடித்த நாள் வரையில் நடப்பதாயிருந்தால் எனைய இராஜாங்கங்கள் மத்திய ஸ்தத்திற்கு வரலாம். ஜன நஷ்டம், பொருள் நஷ்டம், வியாபார நஷ்டம், இதுகளுக்கு ஏதுவின்றி உபயவாதிகட்கும் ஒரு சமாதானம் சீக்கிரம் ஏற்பட வேண்டுமென்பதே நமது கோறிக்கை.

கலாப்பிரகாசனி.

முதல் பாகம்

முதலாவது அத்தியாயம்.

பயங்கரமான ஆரண்யம். அகோரமான காரிருள். நிர்மானுஷ்யமான பிரதேசம். சுற்றிலும் பருவதங்கள். வானளாவிய விருக்ஷங்களுடன் பிரசண்டமாருதமானது போர்புரிவதுபோலுண்டாகும சப்தம். அத்தருணத்தில் சிற்சில நக்ஷத்திரங்ள் பிரகாசிக்கின்றன. ஈயாத புல்லரின் மனம்போலிருண்ட இக்காணகத்தில் நவயௌவனயுவதி யொருவள் அழுது புலம்பலானாள். அரண்மனையில் ஸபலகதையாயிருந்த யான் இக்காரிருள்சூழ் கானில் எப்படி வந்தேன்? எனது தாயிகளெங்கே? ஐயோ! பயங்கரமாயிருக்கின்றதே! என்மீது ஆர்வமிக்குள்ள எனதன்பிற்குறிய என்பதி எங்கே? ஐயோ! பிராணேசா! எந்தன் ஆருயிர்த்தலைவா! எப்படியுமைப் பிரிந்திருப்பேன்! அந்தோ! என்னை எதோ இக்காளில் விடுத்து மறைந்தனரே! என் நாதா! உங்கள் பிரியை இவ்வனத்தில் மனம்பதறக் கதறிக் கண்ணீர்விட்டழுது தவிப்பதை உணர்கிலீரோ! ஹா! ஜெகதீசா! கமலாபுரியின் மன்னர் கலாலங்கிருதின் தனயையாய்க் காசினியிற்ஜனித்து சுந்தரபுரியின் மன்னராம் சுதுஜ்ஜைதய ரைப்பதியாயடைந்து பன்னாளோ நன்னாளாய் இகலோகத்தில் இன்புறப்போக்கி சுகவாழ்வுற்றிருந்தேனே! எனது பன்னிருபிராயத்தில் விதேச ஸஞ்சாரார்த்தமாய் பிறதூர்கட்குச் சென்ற என் தந்தை நவவருஷங்கள் கழிந்தும் இன்னும் வரக்காண்கிலேன். எங்கோ வங்கமுடைந்து வாரியில் மூழ்கி தேகவியோகமானதாய் வதந்தி. இவ்வதந்தியை உண்மையென கம்பி ஆற்றேணுத்துரெய்திய அன்பின்மிக்க என்னன்னை எவருடனும் சொல்லிக்கொள்ளாமல் எங்கோ ஆரண்யம்புக்கி மறைந்தனள். பரதேசம் சென்றிருந்த என் ஸோதராகளான வித்தியாதரன், நபசந்திரன், ஆகிய இருவரும் கமலாபுரியையடைந்து விஷயங்களுணர்ந்து சஞ்சலவதனர்களாய் அவ்விருவரையும் கண்டுபிடித்து அழைத்து வருகின்றேமென விளம்பி விடைபெற்றேகிய அன்னோர் ஆருண்கேட்கு மேலாகியும் வரப்பெற்றிலேன். இவ்வளவு கஷ்டங்களுடன் இன்றிரவு இப்பேரிய விபத்திற்குமாளாகி ஆருந்துணையின்றி அனுதையைப்போலிக்காடாந்தகாரத்தில் கதறியழுகின்றேன். என்னை எவனென்று வினவுவோர் இவ்வாவருளர்?

"தந்தையைப் பிரிந்தே னென்றன் ரூப்தனையும் பிரிந்தேன்
சுந்தர வதனரான சோதரர்தமைப் பிரிந்தேன்
தொந்தமாய் மணந்த நல்லத் துணையவறமைப் பிரிந்தேன்
அந்தகாரத்தில் மூழ்கிவ் வடவியிற் காப்பாரோ!"

பிரஜைகளில் அநேகர் யான் வெகுஆனந்திதையாய் சஞ்சலரஹிதையாய் காலங்கழித்து வருவதாய் கழருகின்றனர். இக்கிலவுலகில் அடையும் இன்பசந்தோஷம் வெகு சிறிது. இச்சொற்ப சந்தோஷத்தை யடையவெண்ணி இஃலோக விபரபாரங்களிலுழன்று திரிந்து அல்லற்படுவதைவிட என்றுமுள்ளதாயிருக்கும் பேரின்பப்பேற்றினை யெய்துதற்கேற்ற முயற்சிகளைக் கையாடி ஜகதீசனது சரணரவிந்தங்களில் நமது மனதை நாட்டி உள்ளன்பைக்காட்டி பக்திசெய்து முக்தியடைய முயற்சிப்பது நன்றென நினைக்கின்றேன். சுகம் என்பதென்னே? பாரமான சுமையொன்றைத் தூக்கிச் செல்லுவோன் "சுமைதாங்கி" யைக் காண்பனேல் அதின்மீது தனது சுமையை இறக்கி அவண் உட்கார்ந்து இளைப்பாறுதலாகிய இன்பமனுபவிக்கின்றான். அதே இடத்தில் ஒரு வேலையும் செய்யாது உட்கார்ந்திருக்குமொருவனுக்கு இவ்வித இன்பமுண்டாகிறதில்லை. இதனால் துக்கநிவர்த்தியே சுகம் என்பது பெறப்பட்டது. இப்படி அருகில் அல்லலைவைத்துக்கொண்டிருக்கும் இவ்வின்பத்தையனுபவித்து "நித்தியகண்டம் பூரணாயுசு" எனும் முதுமொழியை நிதர்சனப்படுத்துவதைக் காட்டிலும் சாஸ்வதமாய் என்றுமிருக்கப்பட்ட முக்தியை யடைவதற்குரியவற்றை யியற்றி கடவுள்மாட்டு அன்பைச்செலுத்தி மேன்மைபெறுவது சிரேயஸ்கரமன்றோ?

"நீரின் மேற்குமிழி யுயர்நீள் விசும்பின் மின்னலென நிலையாக் காயம்
பாரின்மிசைச்சதமெனவே பலர்நினைத்து மோசமெய்திப் பாழ்த்துப்போனார்
கோரியந்தப் பரம்பொருளைக் கோடிதரம் வேண்டி நலங்கொள்வார்க் கன்றி
காரியமே பலிக்காது கடவுளருள் சொலிக்காது காண்பாய் நெஞ்சே!"

நான் பூரண கர்ப்பிணியாயிருக்கின்றேன். இக்காரிருளில் இக்கானில் எவ்வணம் நடந்து செல்லுவேன்! என்செயற்பாலது? என்னுயிரன்னவும் பார்க்கிறேன். ஹர! ஜகதீசா! யான் எப்படி இவ்விரவைக் கழிப்பேன்! இதுவரையில் சற்றுதூரம் நடந்தேன். இஃதென்னே? சமீபத்தில் நதியொன்று ஓடுகின்றதுபோற் றோற்றுகிறதே! அந்தோ! என்செய்கிற்பேனியான்! காலில் முள்ளொன்று தைத்து இரத்தம்பிரவாகமாக வருகின்றதே! பொறுக்க ஆற்றலுமில்லையே.

"பேய்க் கணங்களுக்குங் கூடப் பிறங் கிடாவிருள் சேர்காரில்
பாய்க் கதிர்வேல்க ளன்னப் பதங்களில் முட்க ளேறக்
காய்க்கனிச் சினைகள் வீழ்த்துங் கனசண்ட மாருதந்தான்
மாய்க்குதே வெனினென் செய்வேன் வரந்தரு கடவுளானே!"

"மெத்தப் பயங்கரந் தருமிக் காட்டகத்தே யலகையென மேவும் காளை
நத்தியெனைக் காப்பாரின்றி நடந்திடவும் வலிமையின்றி நலியும் வேளை
கொத்துடனேமுட்கடைத்துக் கொடுமையுடன் மரமிடித்துக் குலைதுடித்துக்
கத்துகின்றேனித்தரையில்விழுந்துமனக்கலக்கங்கொண்டேன்கடவுளானே!"

ஹா! இஃதென்னே? சுற்றிலும் முட்களாகவே இருக்கின்றனவே! கையிலுமொரு முள்ளைத்துவிட்டனவே இச்சஞ்சலமனேதனும் சகித்தனுபவிப்பதற்கோ இம்மண்ணில் மன்னன் மரபில் பெண்ணுப்பிறந்தேன். இன்றுடன் எனதாயுளுள் முடிவடைந்தனபோலும். இஃதென்ன அருகில் ஜலம் வருகின்றதே! நான் நதியெனவெண்ணியது பிசிக்கடலாயிருக்குமோ! ஐயோ ஒன்றுமறிகிலேனே! இனி எனக்கு பேசசக்தியில்லை. ஹா! ஹா!! மூர்ச்சை வருகின்றதே!

முதலாவது அத்தியாயம் முற்றிற்று. (இன்னும் வரும்

சமாசாரக் குறிப்பு.

ஜப்பானிய சிறுவனொருவன் நிலபுலன்களை விற்று அதில் வந்த பணத்தை யுத்தத்திற்கு உதவியாக அனுப்புகிறனனும்.

ஷோலாப்பூரில் சுதேசி ஒருவனிடமிருந்து கவர்ண்மெண்டார் வாங்கிய ஒரு துண்டு நிலத்தை வெட்டியதில் ஏற்கனவே புதைத்து வைத்திருந்த புதையல் தற்செயலாய் அகப்பட்டதாம். "அதிர்ஷ்டமுள்ளவனுக்குக் கிடைக்கும்.

இப்பூமியை சந்திரன் மணியொன்றுக்கு சுற்றி வருவது 2273 மைல்களாம்.

ஒரு சிறுவனே இராணுவத்தில் சேருமுபடி ஜப்பானிய கவர்ண்மெண்டார் உத்திரவனுப்பியதருணம் குறிப்பிட்ட சிறுவன் வீட்டிலில்லாததால் அவன் தாயார் தன் வீடு முதலியவற்றை விற்று அதில் வந்த பணத்தை செலவுக்கு வைத்துக்கொண்டு தன் மகனைத்தேடிக் கண்டுபிடித்து அவனுக்குச் சங்கதியைத் தெரிவித்து பூர்ணசீர்வாதஞ்செய்து இராணுவத்தில் சேரும்படி அனுப்பினளாம். என்ன தேசாபிமானம்!

இவ்வருஷக்கடைசியில் பம்பாய் நகரத்தில் கூடப்போகும் காங்கிரஸைப்பற்றிய முயற்சிகளைக்கவனிக்க இப்பொழுதே முன்வந்துளா ரென்பதையறிய சந்தோஷிக்கின்றோம். ஸர்ஹென்றிகாட்டன், டாக்டர் குருதாஸ்பானர்ஜி, காளிசரன்பானர்ஜி, இம்மூவர்களில் யாராவதொருவர் சபாநாயகராக ஏற்படலாம்.

இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகள் அனைத்திலும் சென்ற வருஷத்தில் நிகழ்ந்த சேதம்; கொல்லப்பட்ட ஜனங்கள் 1143 என்றும் சாயமுண்ட பிரஜைகள் 1142 என்றும் தெரியவருகிறது.

சென்ற மதியில் சென்னையில் 2 செந்தலைப்பூச்சிகள் காலணு அரையணு லஞ்சம் வாங்கியதினிமித்தம் முறையே ஆறுமாதம் கடினகாவல் தண்டனையடைந்தனவாம். செந்தலைப்புலிகளே உங்கட்கிதோர் எச்சரிக்கை.

சில துருக்கியர்சினே சகாயார்த்தமாய் அனுப்பிவைக்க வேண்டுமென்று ருஷிய சக்கிரவர்த்தி கேட்டதற்கு துருக்கி சுல்தான் முடியாதென்று கூறிவிட்டனராம்.

லார்ட்கர்ஸன் தம இல்லத்தைவிட்டு வெளியே போகமுடியாத அளவுக்கிய நிலைமையிலிருக்கின்றாராம்.

மின்சார விசையினால் பால் கறப்பதற்கான இயந்திரமொன்று நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டுளதாம்.

கல்கட்டாவிலுள்ள ஜெமீன்தார் ஒருவர் அந்தப்புரத்துக்கு வந்துவிட்டனனென்கோபங்கொண்டு பிச்சைக்காரியின்மீது சோவை வீசி எறிந்த குற்றத்திற்காக 6மீ கடின காவல் தண்டனை யடைந்தனராம்.

திருச்சிராப்பள்ளி கோட்டை நீத்துக்காரத்தெருவில் உத்தேசம் 40-வயதுள்ள ஒரு பட்டுநூல்கார ஸ்திரீக்கு நாளது ரூன்மீ 24உ காலையில் ஒரு ஆணுகுழந்தை பிரசவமாகி 25உ மத்தியானம் இறந்துபோய்விட்டது. பிள்ளைக்கு விரையில்லாமல் ஆண்குறிமட்டும் இருந்தது. தலையில் 2 அங்குல நீளமுள்ள 2 கொம்புகள் இருந்தது. சிரசு சிறிதாயும் இருபினவாய் பிரிக்கப்பட்ட மண்டையோடில்லாத ரெத்தமும் சதையும் கலந்த குப்பல்களாயுமிருந்தது. இதுவும் ஓர் விசித்தையே.

பலதிரட்டுக்கோர்வை.

திருச்சியைச்சேர்ந்த வரகனேரி, புத்தூர், சிந்தாமணிரோட், உரையூர், முதலிய பல இடங்களிலும் நீர்ப்பிடித்தது காரணமாக நேர்ந்த விபத்துக்களும் நஷ்டங்களும் அனந்தானந்தம். நிகழ்ந்த உயிர்ச்சேதங்கள் மிகவும் பரிதபிக்கத்தக்கதே. இவ்விபத்திற்காளாகிய பிரஜைகளிடம் கவர்ண்மெண்டார் கருணை பாராட்டுதலவசியகர்ம். இத்தருணத்தில் முகந்த பிரயாசை எடுத்துக்கொண்டு இவ்விபத்திற்காளாகிய ஜனங்களுக்கு அன்னதானமாகிய பலநலங்கள் நல்கிய மகா-ன-ன-ஸ்ரீ அ. பெருமாள் ஐயரவர்களின் ஜீவகாருண்ணியம் மிகவும் கொண்டாடப்படத் தக்கதேயென்க. இக்நன்றியை நல்கிய இவரையாரே லொக்கியாதார்?

இறங்கூன் காரன்வி ஆபீஸ் பொக்கிஷதாரராகிய மகா-ன-ன-ஸ்ரீ T. M. பொன்னுசாமிபிள்ளையவர்கள் நமது பத்திரிகைக்கு போஷகராயமைந்ததைப்பற்றி நாம் சாலச் சந்தோஷிப்பதோடு நம் அனுகூலன், அபிவிர்த்தியைக்கருதி அன்னவர் நன்கொடையாக அனுப்பிய ரூபாய் பத்தையும் அன்புடனங்கீகரித்து அநேக வந்தனமளிக்கின்றனம்.

திருச்சி முனிசிபாலிட்டியின் செக்ரிடரியாகவிருந்த மிஸ்டர் A. சுவரிமுத்துபிள்ளையவர்கள் சென்ற மதியில் காலஞ்சென்றதற்கு மிகவும் துக்கிக்கின்றோம்.

திருச்சி முனிசிபல் தண்ணீர் குழாய்களில் அதிக சேறுகலந்த செந்தண்ணீர் வருகிறது. நல்ல சுத்தமும் தெளிவுமான சேறுவடிகட்டின தண்ணீர் கிடைப்பதருமையாயிவிட்டது. இதை முனிஸிபாலிட்டியார் கவனியாதிருப்பதேனே? நீவிபத்துகள் மிகுந்திருக்கும் இக்காலத்தில் இராக்காலங்களில் குழாய்களில் ஜலத்தை நிறுத்திவிடுவது சரியோ? தெருப்புழுதியடங்கக்கூடியமட்டில் தண்ணீர் தெளிக்காதிருப்பதின் காரணமென்னவோ? இதை இனியேனும் கவனிக்கலாகாதா?

திருச்சி கள்ளத்தெருவிலிருக்கும் இரத்தின வியாபாரம் T. B. சங்கரபாணி நாயுடவர்களையும், மதுரையிலிருக்கும் A. வேங்கப்பநல்லதம்பர்சாயபு அவர்களையும் நமது பத்திரிகைக்கு இடமதி முதல் கமிஷன் ஏஜண்டாக நியமனம் செய்துளோம். ஏஜண்டுகளிடம் பணம் செலுத்தி சந்தாதார்களாகச் சேருகிறவர்கள் 7 தினத்திற்குள்ளாக "உறுதிமொழிச்சீட்டு" பெற்றுக்கொள்ளவேண்டும்.

பிரஜாபந்துகூடலன் ஆபீசிலிருந்து அனுப்பப்படும் பத்திரிகைகள் அதின் விலாசதாருக்கு சரிவர சேர்வதில்லையென்று அன்னவர்களிடமிருந்து வருங்கடிதங்களாலறிகிறோம். இதை போஸ்டாபீசார் கவனிப்பார்களாக.

ஆந்திரோர்த்த பிரகாசிகை:—நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட இந்நூலை வரித்துணார்ந் தகமிகமகிழ்ந்தோம். இன்னுமிதுபோன்ற சிறந்த நூல்களை வெளியிட்டு பிரசோபகாரியாய் இலங்குவாராக. இதை நமது பார்வைக்கு அனுப்பிய மகா-ன-ன-ஸ்ரீ அ. சுந்தரேசம் பிள்ளையவர்களுக்கு காம் மிகவும் வந்தனமளிப்போமாக.

இம்முறை நமது பத்திரிகையுடன் அனுப்பப்பட்டிருக்கும் பிரஜாபந்துகூடலன் விளம்பரங்களை தத்தம் நேயர்களிடம் சேர்ப்பித்து இதனை அபிவிர்த்திசெய்வார்களென நம்புகின்றோம்.

பிரஜாபந்துகூடலன்.

பருவம் I. } திருச்சி. 1904ஜூலை ஆகஸ்டுமீ { இலக்கம் 5.

சுதேச கைத்தொழில்.

ஸ்வதேசத்தில் உற்பத்தியான அநேக கைத்தொழில்கள் நின்றுபோனதே இந்தியா தேசத்து ஜனங்கள் பெரும்பாலும் வறுமையை அனுபவிக்கிறதற்கு பிரதம காரணமாக ஏற்பட்டிருக்கின்றது. கைத்தொழில்கள் கண்ணுக்கு மறைந்ததினுல் அனேவரும் உழவு தொழில் செய்யப்புறப்பட்டு வேளாண்மையும் அதிக நெருக்கமான தொழிலாய் ஏற்பட்டுவிட்டது. இந்தியா தேசத்து ஜனங்களின் தரித்திரத்திற்கு இதுவே முதற்காரணம். கைத்தொழில் உழைப்பு எவ்வளவுக்கு விர்த்தியாமிஸத்திலிருக்கிறதோ அவ்வளவுக்கு தான் பிரஜைகளின் செல்வம் பெருகும். ஐரோப்பா, அமெரிக்கா, கண்டத்திலுள்ளவர்கள் தரவியவந்தர்களா யிருப்பதற்குக் காரணம் அவர்கள் கைத்தொழிலேயே சிறந்த ஜீவனமாகக்கொண்டு அதையே மேன்மேலும் அபிவிர்த்தி செய்துக்கொண்டு வருவதினுல் என்று "கரதலாமலகம்போல்" காணலாம். ஆங்கிலேயருடைய அரசாகி இந்தியா தேசத்தில் ஸ்தாபித்தகாலந் தொடங்கி நமது பூர்வீக கைக்தொழில் வேலைகளையெல்லாம் அடியோடு மாண்டுபோகச்செய்துவிட்டது காரணமாக இந்திய ஜனங்கள் நித்திய தரித்திரர்களாகிவிட்டார்கள். நமது தேசத்தில் ஜாதிக்கி ஒரு தொழில் அதிக ஊக்கத்துடன் செய்து வந்தார்கள். அவரவர்களுக்கு அந்தத்தொழில்கள் ஜீவனத்திற்குக்கட்டிவந்து எதோ மீறக்கூடிய நல்ல நிலைமையிலேயே இருந்துவந்தது. ஐரோப்பிய வியாபாரிகளுடைய பேராட்டியினுல் அரைவயிற்றுக்களுக்கே வழியின்றி கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைமையில் இருந்துகொண்டு தத்தளிக்கிறார்கள். இப்போது நாம் செய்துவரும் கைத்தொழில்கள் வெகு சொற்பமானது. கைவுதொழில், சாதாரண சித்திரவேலைகள், மண்பாண்டங்கள், வெண்கலம் ஈயம் இரும்பு பித்தளை செம்பு பாத்திரங்கள், மரச்சாமான்கள், சாதாரணமான பொன் வெள்ளி கைவேலைகள், இதுகளேதவிர மற்ற சகலத்திற்கும் ஐரோப்பியர் கைக்கு எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறது. நமது நாட்டு வேலைகளுக்கு மதிப்பு குறைந்துபோய் கேவலமான நெருப்புக்குச்சிக்கும் ஊசிக்கும் பிறர் கைக்கு எதிர்பார்க்கவேண்டிய காலமாகிவிட்டது. மஸ்லின் காலிகோ பட்டு அமைந்த வஸ்திரவகைகள் ஏராளமாய்நமது தேசத்து பாக்கியவந்தர்களும்ஐரோப்பாகண்டத்தாரும் ஆசியாகண்டத்து மேற்குப்பாகங்களிலுள்ளவர்களும் அதிக பிரியமாய் வாங்கி வந்தார்கள். கையினுல் செய்யப்படும் நெசவுத்தொழில் நல்ல அனுகூலமான சுகவாழ்வுக்குறியதாயிருந்தது. இதற்கு முந்திய காலங்களில் ஜனங்கள் உபத்திரவமின்

ளும் சகல வஸ்திராதிகளும் இந்தியாவிலேயே செய்யப்பட்டு விலையாகி வந்தது. வேறு தூணிகள் இறக்குமதி நமது தேசத்திலேயே கிடையாது. ஐரோப்பாகண்டத்து நூதன வஸ்திரங்களாதியவற்றால் நமது தேசத்து பூர்வீக தூணிமணிகள் லௌகீக நாகரீகத்திற்குரிய பாருள்கள் என்ற மேன்மையை யிழந்துவிட்டது. ஆகலான் பூர்வீக அபூர்வமாதிரிகளான வஸ்திரங்கள் மறைந்துபோகலாயிற்று. உப்புவியாபாரத்தின் சுதந்திரத்தைக் கவர்ன்மெண்டார் கைப்பற்றிக்கொண்டதினால் கல்உப்பு மண்உப்பு வியாபாரங்கள் அடியோடு தொலைந்துபோய்விட்டது. இறக்குமதி சாமான்களுக்காக நமது தேசத்துப் பணமெல்லாம் அன்னியதேசங்கட்குப் போய்விடுகின்றது. பூர்வத்தில் நம்முடைய பணத்திற்கு நமது தேசத்து சாமான்களையே கொள்ளுவதினால் நம்முடைய பணம் நமது தேசத்திலேயே இருந்தது. சவுக்காரங்கள் வாசனை சாமான்கள் இந்தியாவிலேயே பூர்வம்செய்யப்பட்ட தொழிந்து தற்காலம் ஐரோப்பிய சவுக்காரங்கள் பரிமளதிரவியங்கள் மிகுந்துபோச்சுது. ஜரிகைவேலைகளும் பொன் வெள்ளி வேலைகளும் அதிகமாய்க்குறைந்துபோய்விட்டது. ஐரோப்பியருடைய பட்டான சகைகளுக்கு விலை கிடைக்கிறது. உலகம் வெளிப்பகட்டிலேயே மூழ்கிப்போய்விட்டது. ஐரோப்பியர்கள் தாங்கள் சொந்தமுதல் எற்படுத்தி தங்கள் பார்வையிலும் பராமரிப்பிலும் வைத்திருக்கும் கைத்தொழில்களால் நமக்குக்கிடைக்கும பிரயோஜனம் மிகவும் அற்பமே. இன்னும் சிறிதுகாலத்திற்கு நாம் இந்த நிலைமையிலேயே இருப்போமாகில் நாம் இதனிலும் கேவலநிலைமையை எய்துதற்கு யாதொரு சந்தேகமுமிராது. ஆனதுகொண்டு கைத்தொழில்களை யபிவிர்த்திசெய்யும் விஷயத்தில் நம்முடைய புத்தியைச்செலுத்தி அதற்கேற்ற கருமங்களைக்கையாடக் கடமைப்பட்டிருக்கின்றோம். இதை தேசாபிமானிகள்கவனிப்பார்களாக.

நட்பு.

நட்பானது ஆதிகால முதற்கொண்டே யுளதாகையால் அதனைக்குறித்து எவ்வளவேனும் புகழ்ந்திராத பழமைபெற்றநூலில்லை. மனிதனைக்குறித்து கற்றறிவினையுடையோர் என்னசொல்லி இருக்கினும் அவன் தன்னையொத்தவர்களுடன் மருவுகின்றவனுமாய் அதற்குச்சக்தியும் ஆசையுமுள்ளவனுமாய் இருப்பவனென்று அறிந்திருக்கின்றோம். அன்றியும், சினேகமானது அதன் தன்மையின்படி மனிதனுக்கு வேண்டியதே யாகையால் அவன் சினேகிதன் இல்லாமல் எப்படி இருக்கமாட்டுவான் என்று எமக்குத்தெரியவில்லை. தெய்வகடாட்சத்தினாலே நமக்குத் தரித்திரம்போய் ஐசுவரியம் வருமாகில் அந்த சந்தோஷச்செய்தியை சினேகிதனுக்கல்லாது வேறு யாருக்கு நாம் சொல்லத்தகும்? அப்படியல்லாமல் மிகப்பெரிதாகிய மேன்மாடுபோய் அதிக இழிவாகிய தரித்திரம் வருமாகில் தெய்வத்தையுஞ் சினேகிதனையுமல்லாது யாரிடத்தில் நாம் ஆற்றல் தேடத்தகும்? உலகத்தில்சினேகிதம் வேண்டாதவ னொருவனுமிரான். இப்படிப்பட்ட அருமையான சினேகம் மனிதர்களிடத்தில விளங்காவிட்டால் அவர்கள் என்னத்துக்குஆவார்கள்? சினேகமானது மிகதுண்மையான தன்மையுடையதாதலால் இருவருடைய சுகதுக்கமும் ஒருவகையில் அதனையே சார்ந்திருக்கின்றன. நேசமானது இருபரமிரண்டிலும் பிரியாத விவாகத்திற்கு ஒப்பாயிருக்கின்றது. சினேகமானது தத்தம் மனதிலுள்ளதை யொருவருக்கொருவர்

சொல்லிக்கொள்ள உடன்படித்துகிறது. அவர்களுக்குள் ஒரு மறைவும் இருக்கத்தகாது. சினேகமெனுஞ் சொல்லினுள் அடங்காத இனிமையான தெய்வத்தன்மையும் அன்பான மனிதத்தன்மையுங்கிடையாது. ஈவு, தயவு, இரக்கம், மூதலியவைகள் அதற்குட்பட்டவைகள் தான். இக்காலத்தில் நயவஞ்சக நண்பர்களின் மயக்கிற்சிக்கி மதிகெட்டழியும் மாந்தர்கள் பலரையும் பார்த்தறிவதுபோல் உண்மையான உள்ளன்புகொண்டொழுகும் மித்திரரத்தினங்களைக் காண்பது மிகவும் அரிதேயாமென்க. சிலர் தாங்கள் நேயர்களென்பதாக புறத்தேகாட்டி மனதில் ஒன்றும் வாக்கில் ஒன்றுமாக வைத்துக்கொண்டு வஞ்சகமற்றவர்போல் நடிப்பர். இவர்கள் வார்த்தையில் மயங்கிய அம்மன மாசற்ற மித்திரர்கள் பிற்காலத்திலடையும் நிலைமை மிகவும் பரிதாபப்படத்தக்கதே. இன்னும் சிலர் லிகிதங்களில் வெகு வாஞ்சையுடன் அன்புபொருந்திய வார்த்தைகளுடன் எழுதுவதும், நேரில் வெகு பிரியமாய் வசனிப்பதுமாயிருந்து அம்மித்திரர்கள் சென்றவுடன் நேசஹீனர்களாகின்றனர். ஸ்வநகரத்திலிருந்து வேற்றூருக்குச்சென்ற ஒருவர் அவ்விடத்திலிருந்த தாம் அருமை மித்திரர் எனப்பாவித்திருந்த ஒருவர் தம்மை போஜனத்திற்கு வரும்படி வெகுவாய்க் கேட்டுக்கொண்டதின் பேரில் அதற்குச் சம்மதித்துக் குறிப்பிட்ட நேரத்தில் தமது மித்திரர் இல்லமடையவும் தம்மைக்கண்ட மித்திரர் திடீரென்று ஒளிந்துகொள்ளக் கண்டு வியப்புற்ற சமயம் பரிசாரகன் ஒருவன் அங்குவந்து வீட்டில் எஜமான் (அதாவது இவருடைய மித்திரர்) இல்லையென்று விளம்பவும், விஷயமறிந்த இவர் மெள்ளஞ்சாதித்து மிக்க நாணத்துடன் மறுமொழி மொழியாது தம தில்லமடைந்தனராம். இப்படியெல்லாமிருப்பதால் (நயவஞ்சக சினேகிதரின்வலையில் வீழ்ந்துவிடாமல்) உத்தம சிநேகிதரை மிக எச்சரிக்கையுடன் தெரிந் தெடுத்துக்கொள்ளவேணும். இதை யுணரப்பெறுத சிலர் தமக்கு ஊரில் இருப்பவர்களெல்லாம் சிநேகரென்பர். மற்றும் சிலர் தமக்கிருக்கும் இஷ்டகஷ்டங்களைக்கில்லையென்பர். இவையனைத்தும் அறியாமையின் காரணங்கொண்டு பிதற்றிய மொழிகள். உற்றுநோக்கில் சுகாநுபவத்திலிருக்கும்போழ்துமட்டும் இவர்கள் தங்களை நண்பர்களாய் காட்டிக்கொள்ளுவரேயன்றி கஷ்டதிசையுற்றிருக்குங்கால் அன்னவர்கள் அருகில்கூட நெருங்கார்களென்பது நிஷ்காரணை. ஒருவன் தன் மனதிற்கினைந்தமாது ஒருவளைத்தேடி மணம்புரிந்துகொள்ளுவதில் எவ்வளவு சிரமப்படவேண்டுமோ அதனிலும் பதின்மடங்கு கஷ்டத்தை ஒரு உத்தம மித்திரனைத் தெரிந்தெடுப்பதில் கொள்ளவேண்டும். காதலும் நேசமும் ஒரு தன்மைத்து. "ஆருமற்றதேதாரம் ஊரிலொருவனே தோழன்" என்று ஒருபழமொழியுமுண்டு. இவ்வுலகில் யாதாவதொரு இன்ப சந்தோஷத்தையனுபவிக்கும் ஒருவன் அதைத்தன் மித்திரனிடம் செப்பி அவன் அடையும் ஆனந்தத்தில் பாகியாவான். தானடைந்த சந்தோஷத்தை தனது மித்திரனுக்குத் தெரிவியாதோன் தான் அனுபவித்த இன்பத்தை இழந்தவனேயாவான். இதைச்சற்று உற்றுகவனிக்கில் செவ்வனே விளங்கும். இப்படியெல்லாமிருப்பதால் எதற்கும் ஒரு உத்தம மித்திரன் வேண்டுமென்பது பெறப்பட்டது. இதையுணர்ந்து நெடுகொளாராய்ச்சியின்பேரில் உண்மையான நண்பன் இன்னார்தானென்று உணர்ந்து அவன் உத்தமனென்று தன் மனதிற்பட்டதின்பேரில் அவனோடு உள்ளன்புடன் தருமன், பீதியஸ், என்பவர்களைப்போல் நேசிக்கவேண்டும். மனசாகஷிக்கு விரோதமாய் அனேயதியாது கள்ளகிலேவு முதலியவைகளைக்கொள்ளுதலும் அவனுக்குத்தெரியக்கூடாதென்று ஒரு காரியத்தை மறைப்பதுவும் நேசதருமத்திற்கேற்றதன்று. கூடிப்பிரியேல் என்

பதையுணர்ந்து நடக்கவேண்டியது. உள்ளன்பு பொருந்தி நிருந்திய காதலனும் காதலியும் எங்ஙனம் மனமொத்து வாழுகின்றனரோ அங்ஙனமே உத்தமமித்திரர்களும் ஒழுகுதலேகுணகரம்.

ஸ்திரீ வித்தியாப்பியாசம்.

பெண்கல்வி விஷயமும் ஸ்திரீகட்கு உயர்தரவித்தை கற்பிக்கப்பட வேண்டிய விஷயமும் நம்முடைய தலைவர்களும் சர்வ ஜனங்களும் தீர்க்கமாய் யோசிக்கவேண்டிய முக்கிய அமிஸங்களாயிருக்கின்றது. நந்தேயத்திய அங்கனைகட்கு தகுந்த வித்தையும் உத்தம கல்வியில் தேர்ச்சியும் இல்லாததே நமது தேசத்திற்கேற்ற அபிவிர்த்தி, செல்வம், சௌக்கியத்துக்கு ஒரு பெருங்குறைவா யிருக்கிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. பூர்வம் இருந்த நாகரீகரமணிகள் வித்தியாவந்தைகளாய் விளங்கினார்களென்பதற்கு யாதொரு அத்தாக்ஷியும் வேண்டியதில்லை. மகம்மதியர்களுடைய கொடுங்கோன்மை அரசாக்ஷிகளில் ஸ்திரீகளை வெளியில் விடாமல் காப்பாற்றவேண்டியது நமது கடமையாயிருந்தது. அந்த காலம் மாறிப்போய் ஆங்கிலேயருடைய ஆளுகைக்கு நாம் உட்பட்ட நாள்முதல் நமது பெண்களை அதிகமானம் மரியாதையாகவே இராஜாங்கத்தார் நடத்திவருகின்றார்கள். ஜனசங்கப்பிரியமுள்ள சகல விஷயங்களிலும் பெண்பாலருடைய கூட்டுறவும் சம்மதமும் அதிக அவசியகரமானது. இந்துக்கள் அதிக சௌரியவான்களென்று பெயரெடுத்திருந்த பூர்வகாலங்களில் பெண்கள் அநேக முக்கியகாரியங்களில் அவர்களுடைய ஹித்திப்பிரதாபங்களை நிலை நிறுத்தியிருக்கின்றார்கள். அன்னிய இராஜாங்கத்தாரின் படையெடுப்பும் அவர்களால் நேர்ந்த பல இடையூறுகளும், கொடுமைகளும் இந்துதேசத்து ஜனங்களை அதோகதிக்கு ஆளாக்கி பெண்கள் அவர்களுடைய சர்வ சுதந்திரங்களையும் இழக்கும்படி செய்துவிட்டது. ஸ்திரீகளை அடிப்பூதிகளாயும், வேலைக்காரர்களாயும், பின்னைகளைப்பெறும் உயிருள்ள பேசும் இயந்திரங்களைப்போலவும் ஆக்காமல் கூடியமட்டில் நற்கல்விப் பயிற்சியைக்கொடுத்து கண்ணேத்திறந்துவிடுவது கண்ணியமான காரியம். ஸ்திரீகட்கு உயர்தரவித்தையைக் கற்றுக்கொடுப்பின் தங்களை யெவ்வித பாவச்செயல்கட்கும் ஆளாக்கிக்கொள்ளாமல் புருஷருடைய மானத்தைக்காப்பாற்றி சற்குணிகளாய் நாகரீகாங்கனைகளாய் தேசாபிவிர்த்திக்குபகாரிகளாய் ஜ்வலிப்பர். "அரைப்படிப்பு அநர்த்தம்" என்பதை எப்பொழுதும் கவனித்தொழுகுதல் குணகரம். ஒவ்வொருவரும் தத்தம் ஸ்திரீகட்கு இலேமையிலிருந்தே ஸ்வமதக்கிரந்தங்களைக் கற்றுக்கொடுத்து ஆஸ்திக மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி செய்யவேண்டியது மிகவும் அவஸியகரம் முக்கியமாய் அவர்களுக்குத்தகுந்த உத்தம கல்விப் பயிற்சியை உண்டாக்கி வித்தியாவந்தைகளாய் சற்குணவதிகளாய் இலங்கும்படி செய்வதே நமது தேசம் உன்னத நிலைமைக்கு வருவதற்குரிய வழியென்பதைக்கவனித்து தற்காலத்தில் பெரும்பாலுமிருந்துவரும் உபயோகமற்ற கல்வியையும், அற்ப படிப்பையும் நீக்கி உத்தம கல்வியிற்றேர்ச்சி யடைந்து உத்தமாங்கனைகளாய் ஜ்வலிக்கும்வண்ணம் இயற்ற முன் வருதல் ஒவ்வொருவருடையும் முக்கிய கடமை.

தற்கால நாகரிகங்கள்.

அப்பன் நேடிவைத்த அரும்பொருளழியவும், அன்னையூட்டிவளர்த்த அழகுடம்புவடியவும், முன்னோர் உபதேசித்த கன்னெரிகள் கழியவும், பெரியோர்கள் மனம் நொந்து பழிப்புகள் சொறியவும், கல்லோர்தனைவிட்டுப்பொல்லாரை இணங்கவும், பொய், கோள், அசத்தியம், பாலும் பழமாகவும், மனவி சுற்றத்தார் மக்கள் வயிறெறியவும், கடைசமயனே மடிக்க வாய் திறக்கவும், ஒருவன் தன் னியல்பையுங் கடமையையும் மறந்து நடப்பதை என்னென்று கூறுவாம்?

தன்னிடமுள்ள பன்த்தையெல்லாம், ஜரிகை பட்டுவேஷ்டிகளிலும் டம்பத்திலும் சிலவழித்து தெருக்களில் கையில் ஒரு பிரம்பு சகிதம் உலாவி வருவது நாகரிகமென்று சிலர் எண்ணுகின்றனர். சில ரமணீமணிகள் தத்தம் வீட்டிலுள்ள பாத்திரங்களாதியவற்றை விற்றேனும் தங்கள் தேகமுழுவதும் நகைகளையணிந்து உற்சவகாலங்களில் கோயிலுக்குப்போய் வருவதும் வெளியிலிருப்பவர்கள் பார்க்கவேண்டுமென்றும் தெருவாசல்களில் நிற்பதும் ஒரு நாகரிகமென நினைக்கின்றனர். மற்றுஞ்சிலர் தத்தம் தாய்தந்தையர்களையும் உறவினர்களையும் இல்லத்தைவிட்டகற்றி தாமும் தமது பத்தினிகளுமாக காலங்கழிப்பது ஒரு நாகரிகமென வெண்ணுகின்றனர். பின்னும் சிலர் சோற்றுக்கில்லாவிடினும்தங்கள் வீடுமுழுவதும் படங்களாலும் கண்ணாடிகளாலும், ஐரோப்பியசாமான்களாலும் அலங்காரஞ்செய்து வருவது ஒரு நாகரிகமென நினைக்கின்றனர். விவாகத்திற்கு 1000, 10000, ரூபாய் செலவிட்டு நடத்துவதும், தாசி கச்சேரி வைப்பதும், அன்னிய மாதரைக்கண்ணெடுத்தும் பாரேனென்று பணவரையில் சத்தியம் செய்த தமது சுமாதானுக்கு தாசியின் சந்திப்பு செய்து வைப்பதும், அவள் பாடும் சிற்றின்பப் பாட்டுகளைக் கேட்கும்படி செய்வதும் நாகரிகமென நினைக்கின்றனர். சிலர் மொட்டையடித்துக் கொண்டு தொப்பிகள் போட்டுக்கொள்ளுவதும், மயிர் கத்தரித்துக்கொள்ளுவதும், ஆங்கிலோர்களைப்போல் உடையுடுப்பதும், ஸ்வபாஷையைத் துறந்து ஆங்கிலத்திலேயே சம்பாஷிப்பதும், தமிழ் பத்திரிகைகளென்றால் "யூஸ்லஸ்" என்று மொழிவதும், இங்கிலீஷிலிருந்தால் நலமாயிருக்குமென நவிலுவதும், சில பெரிய மனிதர்கள் கூடியிருக்கும் தருணம் அவர்கள் தங்களை இங்கிலீஷ் அறிந்த பிரபுவென்று மதிக்கவேண்டுமென்றெண்ணத்துடன் தத்தம் குமாரர்களை நோக்கி "அந்த உபயோகமற்ற தமிழையா படிக்கிறாய் அப்புத்தகத்தை எறிந்துவிட்டு இங்கிலீஷைப்படி"என்று கூறுவதும் நாகரிகமென நினைக்கின்றனர். பின்னும் சிலர்சீர்மை சாராயகைகளை வாங்கி கண்ணுடி பிரவுகளில் அடுக்கிவைத்துக்கொண்டு தத்தம் மனைவி மக்களுடன் அருந்துவதும், சிநேகிதர்கள் கூடியிருக்கும் காலங்களிலும்விருந்து சமயங்களிலும் வழங்குவதும், வேசிநேசர்களாய்ப் பிரகாசிப்பதும் நாகரிகமென நினைகின்றனர். கல்வி பயிலும் இளைஞர்கள் தாங்கள் கற்கவேண்டிய கல்வியை மறந்து காலத்தை வியர்த்தமாக்கி விளையாடுகளில் கழிப்பதும் பிறமதங்களில் சேருவதும் நாகரிகமென நினைக்கின்றனர். மற்றும் சிலர் தமக்கு மனைவியிருப்பினும் இல்லாவிடினும் உபபத்தினியொருவள் அவசியம் தன்னுடன் இருப்பதும் ஒரு நாகரீகமெனவெண்ணுகின்றனர். சிலர் ஆங்கிலேயர்களைப்போல் தாமும் நடக்கக்கருதி தமது பத்தினியைக் கோச்சி வண்டியிலேற்றி பீச்சியிலுலாவுவதும், மற்றுஞ்சிலர் ஆதியில் கணவரிஷ்டப்படி ஆடையாபரணங்களை உதித்தியது

அநாகரிகமென்றும், தப்பத்தினிகள் மனங்குளுகிலிக்குமாறுகடைவீதிகடோறும் கூட வழைத்துக்கொண்டு திரிந்து உனக்கிஷ்டச் சீட்டி வேண்டுமா இந்த சோஸ்கலர் புட்டாதாவணி வேண்டுமா, இந்த மஜிலீன் பாவாடை வேண்டுமா, என்று கேட்பதும் அதற்கவர்கள் கருப்பு வெல்வெட் ரவிக்கைக்கு வெள்ளைப்பாவாடையும் பச்சை சல்லா தாவணியும் தேவையென்று கேட்பதுமொரு நாகரீகமென நினைக்கின்றனர். சிலர் தமக்கு படிக்கத் நிறமையில்லாத உயர்ந்த புத்தகங்களைக் கையில் வைத்துக்கொண்டு நடப்பதுவும் ஓர் நாகரிகமென நினைக்கின்றனர். பலர் பிறபாஷாக் கியானமில்லாவிடினும் அப்பாஷா பத்திரிகைகளைக் கையில் வைத்துக்கொண்டு கண்ணுற்று பார்க்க காதொன்று கேட்ச கருத்தொன்று நாடவிருப்பதுமோர் நாகரிகமென்கின்றனர். சிறுவர்களிற் பலர் சிகரெட், பீடி, முதலியவைகளைக் குடித்துக்கொண்டு வீதியிலுலாவுவதும் பெரியோர்களிற் பலர் ஆங்கிலேயர்களைப் போல சகல விதத்திலும் நடந்து அநாசாரங்களைக் கைக்கொள்ளுவது ஒரு நாகரிகமென நினைக்கின்றனர். ஐயோ! முற்கால நாகரீகமெல்லாம் தற்கால அநாகரீகமென்னும் ஊழிக்காற்றிலடிபட்டு பஞ்சாகப் பறந்து ஒடுங்கியவிடந்தெரியாமற் போய்விட்டதே. நமது தேசம இப்படி கெட்டழியவும் வேண்டுமா? அந்தோ! இவர்கள் சீர்திருந்தி நலமடையுநா ளென்னுளோ? என்று நற்சேலம் உன்னத நிலைமையை எய்துமோ? என்று சரியான நாகரீகம் நிலைபெறுமோ? என்று தேசாபிமானம் பத்திரிகாபிமானம் மதாபிமானம் செழித்தோங்குமோ? அன்றே இக்காட்டிற்கு நன்னாள்.

அன்னியோன்னியம்.

மனிதர் வர்க்கமாகிய நமது தன்மையை நாம் ஆலோசிப்போமாகில் யாவரும் அன்னியோன்னியமா யிருக்கவே முதல்வராகிய கடவுள் நம்மைப்படைத்தாரென்பது நிச்சயமாகும். மனிதன்மற்றஜெந்துக்களைப்போல் ஏழ்மையும் ஆதரவின்மையும் இழிவான தன்மையுமுடையவனுகப் பிறக்தவனென்று நாமெண்ணலாமோ? ஒருவருக்கொருவர் நாம் சம்பந்த முள்ளவர்களென்பது முதலில் அறிபவேண்டியகாரியம். ஆதலால் ஒருவருக்கொருவர் உதவி செய்து உண்மைக்கும் நடு நியாயத்திற்கும் ஒவ்வியமட்டில் அவரவர்களுடைய கேஷமத்தைவிருத்திசெய்யவேணும். நமது கருத்துகளை ஒருவருக்கொருவர் சப்த மூலமாய்த்தெரிவிக்கும் ஆச்சரியமான சக்தியை மேலானகடவுள்நமக்குத்தந்தது வீணுக்கென்றுநாம்நினைக்கலாமோ? மனிதன் தனிமையாயிருந்து தன்னுலேயே சௌக்கியமடையலாமென்று நினைக்கியாயமுண்டோ? மிருகங்கள்நமதுபேச்சைக்கண்டுபிடிக்கவும்அதற்குஉத்தரம்சொல்லவும்தெரியாதவைகளாயிருக்கஅவைகளுடன்பேசுதற்கல்லவேநமக்குபேச்சைத்தந்தது? ஆகையல் அப்பேச்சோ தினமாகியநாம் ஒருவரோடொருவர்பேசுதற்கே என்பது நிஷ்டாந்தமாயிருக்கிறது. அன்றியும் அன்பும் பரிவும்ஆசையும் அச்சமும்சுகமும் துக்கமும் யாவருக்கும் பொதுவாயும் அவனவன்றன் குணத்திற்குதக்தபடி நடப்பதாயுமிருக்கின்றன. ஒருவனை மனிதர்சம்பந்தமும்துணையும் நேசமும்இல்லாத வெகுதூரமாகியகாட்டுக்குள்ளே துரத்திவிட்டால் அவனுடைய நிலைமைஎன்னவருத்தமானதாயிராது? காட்டிலுள்ளஜெந்துக்களைப்பிடித்து அங்குவிளையும்காய்கனிபூண்டுகளைப்பறித்து ஜீவனம் செய்வானுலும் பேசுதற்கொரு சிநேகிதனும் அக்காட்டிலுள்ள துஷ்டமிருகங்கள்வாயில் போட்டுக்கொள்ளாமல்தன்னைகாக்க ஒருமனிதனும், வலியும்நோயும் வந்தடுக்கும்போது சௌக்கியத்திற்கேற்றஔஷதமும்கொ

டுக்கஒருவைத்தியனும்இல்லாமையைப்பற்றி பிராணனுக்காக ஓயாத்திகிலும் எக்கமும் அனுபவித்து படுந்துன்பத்திலை உயிரைவைத்திருக்கச்சகிக்காமல் இருக்குந்துக்கத்தோடு அதைப்போக்கிக்கொள்ள மரணத்தை எதிர்பார்ப்பானல்லவோ? இஷ்டத்தையும் சௌக்கியத்தையும் பற்றி நாமெல்லாம் ஒருமித்திருக்கவேண்டியபடியால் அவனவன் யாவருக்கும் உபயோகமுள்ளவனுகவும் அவரவர்கள் நன்மைக்குத்தன்னுல் ஆனதை யெல்லாம் செய்யவும் அவனுக்குக்கடனுயிருக்கின்றது. ஆகையால் நாம் ஒருகாரியத்தை ஆரம்பிக்கு முன்னே அதனுல் நமக்கு வரும் சுகதுக்கமேபிறருக்கும் வருமென்று நினைத்து அதை ஆலோசிக்கவேண்டியது. அறிவுள்ளவனுக்கு துர்விஷயத்தைவிட வருத்தமும் நல்லவிஷயத்தையிட சந்தோஷமும் கொடுக்கத்தக்கதொன்றுமில்லை. இவ்வெச்சரிக்கை உண்டாயிருக்குமாகில் நமக்குள் உபகாரமும் நிநேகமும் நிலைமையும் உண்டாயிருக்கும். இல்லாவிட்டால்நமது ஆசாரங்களின் துஷ்டவழிக்கு உட்பட்டு விசுவாசமில்லாதவர்களாயும் துஷ்டராயும் நிலையற்றவர்களாயும் துரோகிகளாயும் ஆகின்றோம். நாம் ஒருமைப்பாடாயிருக்கவேண்டுமென்று தெரிந்திருப்பதால் சஞ்சலமற்றிருக்க நல்லவர்களாயிருந்தாலொழிய மற்றொரு வகையிற்கூடாதென்பது உண்மையாயிருக்கிறது. அன்றியும் நாம் படைக்கப்பட்டிருக்கும் வகைக்கு ஒருவரையொருவர் அன்பு வைத்து உதவிசெய்து காப்பாற்றவேண்டியதே. நாம் உலகத்திலிருப்பதெல்லாம் சுகத்துக்காகவேதான். ஒருவனுகிலும் துன்பப்படவேணுமென்று கடவுள் எண்ணியவரல்ல. கருத்திற்கும் கண்ணுக்கும் தோற்றப்படுவதையுமனரும் தன்மைக்குத்தகுவதாய் நமக்குச்சந்தோஷமுண்டாயிருக்கும். ஒருவனுக்கு ஒன்றின்பேரிலுள்ள அபேக்ஷை மற்றொருவனுக்கு இராது. ஆகிலும் நமக்குள் ஒருமைப்பாடில்லாவிட்டால் ஒரு சந்தோஷமுமில்லை. ஆகையால் சௌக்கியத்திற்காக நாம் ஒருமைப்பட்டு அவ்வொருமையால் உண்டாகும் நன்மைகளை அவரவர் அனுபவிக்கச்செய்யும் சகலகாரியங்களையும் கிரமப்படுத்தவேண்டும்.

(இன்னும் வரும்.)

நல்லுரை.

கல்வியைச் சிறுகச்சிறுகக் கிரஹிப்பதே முக்கிய காரியம். மிகுதியாய்க்கற்கவேண்டியவைகளைச் சிறிது சிறிதாய் அடுத்தடுத்துக் கற்கவேண்டியது. மகா அரிதான சாஸ்திரத்தையும் ஒவ்வொரு காரியமாக உணரவேண்டியது. பின்னுல் அதிக செல்வம் வருமென்று எதிர்பார்த்து பின் வரா தொழிந்ததைப்பற்றி விசனப்படுவதிலும், பேராசைகொண்டு "உள்ளதும் போச்சே கொள்ளைகண்ணு" என்று நஷ்டப்படுவதிலும் விட கடவுள் தந்திருப்பதே போதுமென்று உள்ளதைக்கொண்டு திருப்தியடைவதே நன்று. அதுவே மன சமாதானத்திற்குரியவழி.

சிலர் தாம் பிறந்தது வளர்ந்தது தங்கள் புருஷருடன் சண்டையிட்டது, மாமியுடன்மல்யுத்தம்தொடுத்தது, நிந்தாஸ்பதமான வசனங்களையடுக்கியது, வழங்கியது அப்படியிப்படி என்று தம்மக்களுக்குச் சொல்லுகின்றனர். இப்படி இளமையிலிருந்தே இவ்வுபதேசங்களைப் பெற்றுக்கொண்ட அந்தப்பின்னைகள் முன்னுக்கு வருவதெங்கே? நல்லவர்களென்று பெயரெடுப்பதெங்கே? இத்துர்வழக்கத்தை இனியேனும் அறவே நீக்கி ஈஸ்வரபக்தி நன்னடக்கை, முதலியவைகளுண்டாகும்படி நல்விஷயங்களைப்புகட்டுவது மிக நலம். பெற்றோர்கள் எப்போதும் தங்கள் சிறுமியர்கட்கு கடவுள்

உங்களையமைத்திருக்கும் அந்தஸ்துக்கு மேற்பட்டஆசைகளை நீங்கள்கொள்ளாதிருக்கவேண்டியதென்றும், புத்திசாலியானவள் பட்டையும் சரிகையையும் விட மெய்யான ஒடுக்க வணக்கத்துடன் அணியும் சாதாரண வஸ்திரமே மேலானதென எண்ணுவாளென்றும், வீட்டை அலங்கரித்து வைத்துக் கொள்ளுவதில் அளவற்ற திரவியம் சிலவழிப்பதைவிட அவ்வீட்டை தினமும் குப்பைகள் ஒன்றுமின்றி கூட்டி சுத்தமாய் வைப்பதே மேலென்றும், நகைகளையணிந்து நகைக்காளாகி கள்ளர்களால் அபகரிக்கப்பட்டு அவதிப்பட்டலைந்து அல்லலையனுபவிப்பதைவிட அதையகற்றி சற்குணங்களையே பூஷணங்களாகப்பூணுதல் சர்வோத்தமமென்றும், பிறர்மீது குற்றஞ்சொல்லத்தணிவதைவிட முதலில் தனிடத்தில் காணப்படும் குற்றங்களைத்திருத்திக்கொள்ளுவது நலமென்றும், பெரியோர்கள் கோபிப்பினும் அவர்கள் மீது சினங்கொள்ளாமல் அதுவும் நமது நன்மைக்கே என்றெண்ணவேண்டுமென்றும், முற்காலத்தில் நமக்கு ஒரு உதவிசெய்தவன் பிற்காலத்தில் நமக்குத் தீங்குகளே செய்தாலும் ஏற்கனவே செய்துள்ள நன்றியை மறவாது தன்னுற்கூடியமட்டும் பொறுமை பாராட்டி பெருமை பெறவேண்டுமென்றும், இதுபோன்ற பலவற்றைப் போதித்து சற்குணவதிகளாகும்படி செய்யவேண்டும்.

விஞ்ஞாபனம்.

இரயில் வண்டிகளில் ஏறிப்பிரயாணம் செல்லுவோர் அடையும்கஷ்டங்கள் அனந்தானந்தம். இதைப்பற்றி பிரசுரியாத பத்திரிகைகளையும் வாயாத நிருப நேயர்களையும் காணுதல் மிகவும் அரிதே. என்னசொல்லினும் செவிடன் காதில் சங்கூதியதுபோலவே முடிகின்றது. இனியேனும் கவனிப்பின்நலமாயிருக்கும். வண்டி ஒருஸ்டேஷனில் ஒருமணிநேரம் நிற்பதாயிருப்பினும் அதையறிந்துகொள்ளவகையில்லாதகாரணங்கொண்டு வண்டி எங்கே போய்விடுமோவென்ற அச்சத்துடன் கீழேயிறங்கமிகவும் பயந்து பலவித கஷ்டங்கட்காளாகின்றனர். இதைச்சற்றுகவனித்து ஒவ்வொரு ஸ்டேசன்களிலும் வண்டி நின்றவுடன் இத்தனைமணி நேரம் நிற்குமென்ற உதாரணமாக தீநிச்சினுப்பள்ளி அரைமணி நேரம் என்று தெரிவிக்கும்படி செய்தால் மிகவும் நலமாயிருக்கும். இத்துடன் ஒவ்வொரு வண்டிகட்கும் ஒவ்வொரு நெம்பர்கொடுத்து அல்லதுமிருக்கம், பகுதிமுதலியவற்றின் ரூபங்களை ஒவ்வொருவண்டிகளிலும் வெவ்வேறுமாதிரியாக எழுதிவைக்கவேண்டும். இதனால் வண்டியைவிட்டு இறங்கும் பிரயாணிகள் வண்டிகளெல்லாம் ஒரேவிதமாய் இருப்பதால் தானேறிய வண்டிஎதுவோ வென்று திடுக்கித்தவிப்பது நீங்கி தனது வண்டியிலிருக்கும் அடையாளத்தை குறிப்பிட்டுக்கொண்டு இத்தனைமணிநேரம் நிற்குமென்ற அவ்விடத்தில் சொல்லியகணக்கிலுல் உணர்ந்துதைரியங்கொண்டுகீழேஇறங்கி தனது தேகசௌகரங்களை தீர்த்துக்கொள்ளவும் பிறகுபாதொரு கஷ்டமுமின்றி முன்னர் குறிப்பிட்டுவைத்துக்கொண்டிருக்கும் அடையாளத்தினால் தானேறியவண்டி இதுதான் என்று சுலபமாய் அறிந்து கொள்ளவும் பிரயோஜனகரமாயிருக்கும். இரயிலில் பிரயாணம்செய்யவரும்ஸ்திரிகள் போக்கிரிகளிடம்பணம்தந்து மோசம்போகாமல் அவர்கட்கு உதவியாகபிரத்தியேகமாகடிக்கட்டுகொடுக்கும் அறைஒன்று ஏற்படுத்தவேண்டும். இம்மூன்றையும் இரயில்வே கம்பேனியார் கவனிக்கக்கோருகிறோம்.

ஓர் பிரயாணி.

தேசாபிமானம்.

ஆதியில் இவ்விந்தியாவிருந்த மாகதியும், தற்காலமிருக்கும் தாழ்ச்சியும் நினைத்த தெள்ளறிவுடைய தேசாபிமானிகள் பலகாலும் முயன்றும் முன்னுக்குக்கொண்டுவரமுடியாது "விழலுக்கிறைத்த நீர்" போல் பயன்பெறாதுபோயினர். ஆனால் அம்மட்டில் விட்டொழித்தனரோ? இல்லை! இல்லை!! "முயற்சியுடையோரிகழ்ச்சியடையார்" எனு முதுமொழியை நினைத்து அனுதினமும் பாடுபட்டு வருகின்றனர். அப்படியவர்கள் படும் பாடும் எதிர்த்துக்கொள்ளும் பிரயாசையும் "செவிடன் காதிலூதிய சங்கை" ப்போலாகி தினைதினை அமரபக்ஷத்துச் சந்திரனைப்போல் அவிர்த்தியடைந்து ஆரியாசாரம் முழுதும் தட்டுக்கெட்டுத்தடுமாறி தலையெடுக்காது தாழ்ந்துபோகின்றது. இதற்கெல்லாம் காரணமே நம்மவர்களின் அறிவீனமன்றே? இருள் சூழ்ந்த உலகத்திற்கு சூரிய னுதித்து இருளைவிலக்கி ஒளியைத்தருவதுபோல் அஞ்ஞானமான அந்தகாரத்தை சுஞ்ஞானமான தீபத்தால் விலக்க எவரே முன் வந்தார்களில்லை?

"இருவிழிகள் வான்முகத்திலிருந்தாலும் வாளீரவி யெழுந்தாலன்றி
கருதுகிலப் பலபொருளுங் காண்டலரிதா முலகிற்கண்போல் யாரும்
பெரிய செல்வமு மறிவும் பெற்றாலும் நூற்கேள்விப் பெறுவர்க்கன்றி
திருவருள் புண்ணியபாப மின்மை மறுமையும் வீடுந்தெரியாவன்றே."

எனும் நீதிக்கு முறணாக கல்வி மணமற்றவர்களாய்க்காலமெல்லாம் வீணுக்குழைத்து வீண்வாதம்வீண் டம்பம் வீண்பெருமைபேசி "கண்டதுகாட்சி கொண்டது கொள்கை" யென மண்ணுக்கும் பொன்னுக்கும் பெண்ணுக்குமாய் மனைதையொப்பிவித்து பேராசை யென்னும் பேய்பிடித்து மறுமைப்பலனையனுபவிக்காது மடிகின்றனர். அந்தோ! என்னபரிதாபம்!! இக்காலத்திலேயே நந்தேயமிங்ஙனமானதெனில் நம்மிலும் அறிவிலும் உருவிலும் சிறியவர்களின் செய்கைகளைப்பேசவும் வேண்டுமோ?

நன்றிக்குவித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்க
மென்றுமிடும்பைத்தரும்."

என்பனபோல் நன்மார்க்கங்களை விடுத்து துர்மார்க்கங்களைப் பிடித்து பின்தோன்று மக்களையும் முன்னுக்கு வராது கெடுப்பது எவ்வளவு கேவலமென்பதை எழுதவும் வேண்டுமோ?

கருமஞ்சிதையாமல் கல்விகெடாமல்
தருமமுந்தாழ்வுபடாமல்—பெரிதுந்தம்
இன்னலமுங்குன்றுமல் எரிளங்கொம்பன்னார்
நன்னலம் துய்த்தல் நலம்."

என்றபடி உலகவிபாபாரங்களிலுழன்றாலும் நம்முடைய காரியங்கெடாமலும், கல்விநாசமாகாமலும், பரோபகாரசகைங்காரியங்களில் தாழ்ச்சி நேரிடாமலும் இருக்கவேண்டும்.

"மழைக்காலிருட்டானாலும் மந்திகொம்புவிட்டுகொம்புதப்பாது" மாய்கையில்கட்டுப்பாடான பிரபஞ்சவாழ்க்கையானாலு மிதிலிருந்துகொண்டே தெய்வபக்தியையும் அனுசரிப்பது விவேகபக்ஷம். இதை விடுத்து கருத்து முழுவதும் காமத்திற்கொப்பிவிப்பது தகாது. நீர் குடத்தைத் தலைமேல்தாங்கி நீர்த்துறையிலிருந்து வீட்டிற்குவரும்பெண்களைகவனிக்கவேண்டும் வா

ய்பழமையாடிக்கொண்டும் வருவதில் குடத்திற்கு வீபத்து நேரிடாமல் வருகின்றனர்களல்லவோ? அதுபோல் அத்தரங்கம் ஒருநாட்டம் ஒப்புயர்வில்லாத ஒரு பொருளுக்கு ஒப்புவிக்கவேண்டிய கடமையே புருஷார்த்தம்.

"சருகரிக்க நேரமல்லாமல் குளிர்காய நேரமில்லை" என்று வாளா வீணாளாக்காது "அவப்பொழுதிலுந்தவப்பொழுது" என்பதைக்கண்டு பிடித்து சுதேசாபிமானம் பாராட்டி சகல கலாவல்லர்களாய் சத்தியவந்தர்களாய் நித்திய முத்தர்களாய் இலங்குவாராக.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

கலாப்பிரகாசனி.

இரண்டாவது அத்தியாயம்.

உன்னதமான உத்தியானவனம். புவனமோகினியானசுந்தராங்கனையொருவள் விம்ஹாஸனரோஹிணியாய் சோகாகுலத்துடன் வீற்றிருக்கின்றாள். சுந்தர சந்திரன் வீசும் நிலவின் இன்பம். மந்தமாருதம் பரவுவதினாலுண்டாகும் மகிழ்ச்சி. நிர்த்தனம்புரியும் விவித விருகூங்களின் சப்தம். பூம்பொழிலின்கண் னிலங்கும் நறுமணங்கமழும் நானாவித புஷ்பங்களின் சுகந்தம். இம்மனோகரமான நந்தவனத்தில் அமரர்கள்பிரவேசிப்பரேல் அகமிக மகிழ்வுகொள்வர். அங்ஙனமிருப்ப அவண் வீற்றிருக்கும் அங்கனாமணி சந்தோஷரஹிதையாய் சஞ்சலவதனியாய் விளங்குவானேன்? இச்சிறுபிராயத்தில் இவ்வுலக இன்பத்தில் வெறுப்படையக் காரணமென்ன? இவ்வினாவிற்கேற்ற விடையை இனித்தெரிந்து கொள்ளுவாம். மாளவ தேசத்தை ஞானபரணன் எனும் அரசனொருவன் ஆண்டுவந்தான். இவனுடன் பிறந்தவர்கள் இருவர். அதில் மூத்தவன் சுந்தரபுரிக்கு அரசனான். இளையவன் வினோதார்த்தமாய் ஒரு நாள் கானகமார்க்கம்வர அருகில் பதுங்கியிருந்த கேசரி திடீரென்று அவன்மீதுபாய்ந்து அவனை தூக்கிக்கொண்டுபோய் வீட்டது. பல்லாண்டுகளாயும் அவன் திருமபிவராததால் கேஸரியால் மாண்டனனென்றெண்ணவேண்டியிருக்கிறது. இதைப்பற்றி ஒருநாட்காலையில் ஞானபரணன் சிந்தித்துக்கொண்டிருப்புழி ஆங்கொருவன் போந்து மன்னனிடம் நிரூபமொன்றளித்தனன். கடிதத்தினை வாசித்த காவலன் கவலைக்கடலில் மூழ்கி மூர்ச்சையானான். அது சுகுணேதையுடைய ஸ்வஹஸ்தலிகிதமாயிருந்தது. தக்ஷணமே எவருடனும் சொல்விக்கொள்ளாமல் சுந்தரபுரியைநாடி அடவியின் மார்க்கமாய் அஸ்வாரூடனாய் வெகுஅவசரமாய்ச்சென்றான். தசமதினமாகியும் இன்னும் தன் ஸ்வநகரத்திற்குத் திரும்பிவரவில்லை. இதையெண்ணிமனம்புண்ணுகியஞானபரணனின்பிராணப்பிரியையான பத்தினி தக்காக்கிரந்தையாய் ஆலோசிப்பளாயினாள். என்மீது அளவற்ற அன்புகொண்ட என் பிராணநாதர் சென்ற தெவ்விடமென் றுணரவல்லேனல்லேன். பெண்பாலாகிய யான் யாதுசெய்வேன். என்றிலவர் இந்நகரைவிட்டகன்ற சின்னாளவும் அமைச்சர்களாதியோர் நல்வழியிலொழுகிவந்தனர். தற்சமயம் சுயகாரிய துறந்தர பரகாரிய பராமுகர்களுமாகித் தமது ஸ்வதலத்தையே பெரிதென மதித்துவருவதுகாரணமாக அக்கிரமங்கள் பல நிகழ்வதாகத் தெரியவருகிறது. மதி ஒரேஷ்டரான பிரதம மந்திரி பிராணவியோகமானார். அவர் கர்ஸஞ்சென்ற நாண்முதல் இற்றை ஞான்றளவும் நடந்துவரும் கொடுமைகள் கணக்கில. அமைச்சர்களிற் சிலர் இதுவும் போதாதென்றெண்ணி என்னையும் மானபங்கப்படுத்த முயற்சிக்கின்றனர். இக்கிராதகர்க ளாட்சியிலிருக்கும் இந்நகரில் உறைவதைப்பார்க்கினும் பரதேசஞ்செல்லுவதே பரமோத்தமமென மதிக்கின்றேன். ஹா! பிராணேஸ்வரா! இப்பொழுது இந்த மாளவதேசத்தை விட்டகலுகின்றேன். நாதா! நீவிர் இருக்குமளவும் நலத்தை நல்கிய இந்நன்நாடு தாங்கள் ஒழியவும் எனது துரதிர்ஷ்டத்திற்கேற்ப தின்மையை படிப்பதாயிற்று புருஷர்களுமகமே! நீர் எங்குசென்றீர்! உமதடியாள் இப்பயங்கர அடவியில் அனுதையைப்போல் அலறியழுவதை இவ்வங்கனையின்மீது அர்வமிக்குற்ற அன்பீர், நீவிர் அறிகிலீரோ!

"அருமையுட னெனைப் பயந்த வன்னை பிதா யுறவைவிட்டே யகன்றவென்
கருணைமிகு வனைவேடன் கவலையுடன் நாடோறுங் காக்க வப்பா [னெக்
லொரு குடையி லாகுபுரி யுத்தம ஞானபரண னுறவைக் கொண்டு
மருவி சுகம் பெற்றதும் போய் மாபாவி யீங்கீதனி மயங்குறேனே!"

எனக்கு ஒரு சகோதரியும் இரு சோதரர்களு மிருந்ததாக என் நினைவிற்கு வருகின்றது. நான் எனது சுகரத்தைவிட்டு வெகு தூரம் வந்துவிட்டேன். நிர்மானுஷ்யமான இவ்வாரண்யத்தில் யான் நடந்து செல்வதினாலுண்டாகும் பயனென்னை? அதோ ஒரு லெளிச்சம்தோற்றுகின்றதே! எனக்கு மனதில் அச்சமுண்டாகின்றது. இஃதென்னை! அவ்வெளிச்சம் நடந்து வருதற்போல் தோற்றமுண்டாகின்றதே! இவ்விருக்ஷத்தின்பேரில் ஏறிப்பார்க்கின்றேன்.

"ஒருதுணையு மில்லாம லோலமிட்டே யலறுமித்த வொண்கானத்து
பரிதி யுதித்ததுபோல பலபேர்கள் வெளிச்சமுடன் பரிந்துவாரார்
திருவழகு பெற்றவனே தேவியெனை விட்டகலாச் சித்தையோனே
வருக விதுசமய மினிவருத்தம் பொறுக்கேன் முடிகொள்மன்னரேறே!"

ஐயோ! நாதா! பயங்கரமாயிருக்கின்றதே! வருகின்றவர்கள் துஷ்டர்களோ இஷ்டர்களோ ஒன்றும் அறிகிலேனே! ஹா! இஃதென்ன! இவர்கள் யார்? என்ன பேசிக்கொள்ளுகின்றனர்? நிதானித்துப்பார்க்கலாம். அமைச்சர்களா இவர்கள்? நராதமர்கள்! உங்கட்கேனித்துற்புத்தி? என்னைக்கொலைசெய்தற்கோ? இந்நள்ளிருளில் தேடிச் செல்லுகின்றீர்கள்? நான் புறப்பட சற்று தாமதப்பட்டிருப்பனேல் இந்த கராதமர்களால் நமனுலகு சேர்ந்திருப்பேன் போலும்! என் நாதா! இத்தகைய துன்பங்களை யானனுபவிப்பதற்கோ வெனைப்பிரிந்து சென்றீர்! தங்களின் பிரிவைப்பொறுக்க எனக்காற்றலில்லை. இனியான் இப்புவியின் மீதிருந்தென்னபயன்?

"தாங்கொணாத் துயரமெனுஞ் சமுத்திரத்திலுனித் தழலுஞ் சடலந்தன்னைப்
பாங்காக வளர்த்திட்டேன் பாவியமைச்சரையுந் தப்பிப் பதுங்கிக்கொண்டே
னிங்கினிமே லுயிர்வேண்டே னிவ்வுலகவின்பமது மெண்ணமாட்டேன்
பாங்குளப் பூங்கிளையிற் றூக்கை வீக்கிப் பாவி நானுயிர்நீங்கப் பண்பு
[தானே!"

இத்தக்கயிற்றை இந்த மரத்தின் கிளையிற்கட்டிவிட்டேன். இதன் மற்றொரு முனையஞ் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு இம்மரத்தின் மீதிருந்து குதிக்கின்றேன். (இன்னும்வரும்)

(இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.)

விவாகம்.

பிரதிருதத்தில் இந்துக்களுள் நடக்கும் விவாகங்களெல்லாம் பெரும்பாலும் பிரதிகூலமாகவே முடிகின்றன. சில மற்றோர்களால் மதிக்கப்படவேண்டுமென்ற அற்ப ஆசை பிடித்தவர்களாய் சின்னஞ்சிறு குழந்தைகட்கெல்லாம் கலியாணஞ்செய்துவிடுகின்றனர். வேறு சிலர் பணப்பிசாசு பிடித்தவர்களாய் எவ்வதமாயினும் பொருள் சேர்க்கவேண்டியதே கடமையெனவெண்ணித் தம் அருமைப்புதல்விகளை அநியாயமாய் நடக்கச்சக்தியற்ற கிழவர்களுக்கு கலியாணம் செய்துகொடுத்து ஆஸ்திவந்தர்களாக முயல்கின்றனர். ஐந்தவயதுப்பெண்ணுக்கும் பத்துவயது பையனுக்கும் விவாகம்செய்தால் அவர்களுக்கு தாம்பத்திய அன்யோன்யமும் சிநேகமும் பிரீதியும் எப்படிப்பாராட்டத்தெரியும்? இதற்கநுகுணமாகவே நம் தேசத்து உஷ்ணத்தால் பெண்கள் சிறுபிராயத்திலேயே புஷ்பவதியாகின்றனர். உடனே புருஷனுடன் கூடிவாழவும் தலைப்பட்டு சொற்ப காலத்திற்குள் அளவற்ற குழந்தைகட்கும் அன்னையராய் விடுகின்றனர். குழந்தைகள் பிறக்கப்பிறக்கச் சரீரமும் கிருசமாய் 20 வயதிற்குள் கிழவியாய் விடுகிறார்கள். கிரமமாய்க் கணவனுடன் உல்லாசமாய்க் காலங்ழிக்கவேண்டிய காலத்தில் விருத்தாப்பிய ஸ்திதியை யடைந்து தள்ளாமை பாராட்ட வாரம்பித்து விடுகிறார்கள். வித்தியாப்பியாசஞ்செய்து உலகவழக்கங்களைத் தெரிக்துகொள்ளும்காலத்தில் பிள்ளைவளர்க்கும் கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்க நேரிடுகிறது. கலாசாலையிற்படிக்கும் 28 வயதுப்பையனுக்கு இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன. உடலும் கரம்புகளும் பலப்பட்டு வளருங்காலத்தில் ஸம்ஸார தருமத்தில் பிரவேசிப்பதால் பெண்டு பிள்ளைகளை வளர்க்கும் கஷ்டத்திற்குள்ளாகி சரீரத்தைக்கெடுத்துக்கொண்டு தர்ப்பலராகிறார்கள். இவர்கட்கு ஐரோப்பியரைப்போல் ஸம்ஸார ரக்ஷணைத்தச் சக்திவந்தாலன்றி கலியாணம் செய்கிறதில்லையென்ற விதியும் கிடையாது. ஸ்திரீகட்கும் அன்னவஸ்திரத்துக்குள்ளவர்களைத்தான் கலியாணம் செய்துகொள்வதென்ற ஸ்வபாவமில்லை. புருஷர்களிற்பலர் அம்மிவிற்றே அறிவாயணவிற்றே எப்படியாவது கலியாணம்செய்துகொண்டு, பிறகு மனைவிமக்களை ஸம்ரக்ஷிக்க ஜீவனோபாயமின்றித் திண்டாடுகிறார்கள். சரீரம் முற்றுவதற்குள் ஸம்ஸார தர்மங்களை கைக்கொள்வதால் விதவைகளும் பார்பாலியோகிகளும் அதிகரிக்கக் காரணமாகிறது. மனைவியிழந்தோராவது திரும்பவும் கலியாணஞ்செய்துகொள்கின்றனர் விதவைகளோ, திருட்டுத்தனமாய்க் குழந்தைகளைப்பெற்று கழுத்தை முறித்து காடுகளிலும் மதில்களிலும் சாக்கடைகளிலும் எறிந்துவிடுகிறார்கள். இத்தகைய சிசுஹத்திகளுக்கெல்லாம்காரணம்பால்யவிவாகமேயாகும். ஆரியமதாசாரப்படி புஷ்பவதியாவதற்குமுன் கலியாணம் செய்தாலும், பின்னால் ஸம்பவிக்கும் கஷ்டங்களினின்றும் தப்பித்துக்கொள்ளவாவது முயலவேண்டுமாதலால் புஷ்பவதியாகுமும் கொஞ்சகாலம் சாந்தி செய்யாமலிருப்பது நலமாகும். கிழவனை மணர்ந்த கன்னிகையின் கதி சொல்லவேண்டியதில்லை. புருஷனை இழந்துவிட்டாலும் தொந்திரவற்றுவதிருப்பார்கள். அக்கேடுமில்லை. இவர்கள் மனமொப்பி தம் புருஷனுக்கு விருத்தாப்பியமானகாலத்தில் தொண்டு செய்வதற்கும் உடன்படுகிறதில்லை. இப்படி அவர்போல் வயதுசென்ற இம்மதியற்ற கிழவன், தன்னாமையால் நடக்கச்சக்தியற்றும், ஒருகுடையை தும்மினாலும் அல்லது இருமினாலும் உயிரிழக்கக்கூடிய ஸ்திதியிலிருந்துகொண்டு விதிண்டாவாதம்பிடித்துக்கொண்டிருக்கும் தன் சிறுமனையாளை தனக்கு ஆகவேண்டிய கைங்காரியங்களைச்செய்யச்சொல்லி சகமடைய அபேக்ஷிக்கிறான். இச்சிறுமியோ கிழவனிடம் சற்றும் மதிப்பற்றவளாய் தனக்கு அனுகுணமான நாயகனைத்தேட ஆரம்பிக்கிறாள். ஆயிரக்கணக்கான ரூபாய்களைச்சிலவிட்ட கிழவனுக்கும் ஒருவிதமான அனுகூலமில்லை. எளிய சிறுமியும் காள்தோறும் அவஸ்தைப்படுகிறாள். கன்னிகையின் தகப்பனோ பெண்விற்ற காசைக்கண்டு சந்தோஷம் பொறுக்காமல் கும்மாளம்போடுகிறான். பெண்படுங்கஷ்டம் அவனன்றோ அறிவான்? இவ்விதம் விவாகங்களால் உலகத்தில் விதவைகளின் தொகையும் வியபசாரமும் காளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. சில குறிப்பிட்ட ஜாதியாருக்குள்ளேயே இம்மாதிரியான விவாகங்கள் அதிகமாய் நடந்துவருகின்றன. சமயம் வந்தபோது இன்னுரென்று அம்பலத்தில் இழுத்துவிடுவோம். அன்பர்காள்! இனியாகிலும் உங்களருமைப்புதல்விகளை வீணப்பண ஆசைபிடித்துக்கொண்டு கிழவர்களிடம் காட்டிக்கொடுத்துத்திண்டாடாதிர்கள்! முன் ஜாக்கிரதையாயிருத்தலே நலமென்பதைத் தெரிவித்தோம்.

T. S. தியாகராஜஞானியார்.

காலமறிந்து குற்றங் கடிதல்.

குணங்கள் நற்குணங்களென்றும் தீக்குணங்களென்றும் இரண்டுவகையல்லவா? அவற்றுள் நற்குணங்களைப்பயிருக்கும் தீக்குணங்களைக்களைக்கும் ஒப்பாகச்சொல்லலாம். நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி நாற்று விட்டு நட்டுப்பயிரை வளர்ப்பது போலவே முதலில் பிள்ளைகளுடைய மனதை நன்றாய்ப்பண்படுத்தி அதில்நற்குணங்கள் உண்டாகுமபடி பாடுபடவேண்டும். அப்படிவளர்க்கப்பட்ட பயிரோடு களானாலுகவே உற்பத்தியாகி அப்பயிரைமூடிக்கொள்வதுபோலவே ஒருவராலும் கற்பிக்கப்படாமலே தீக்குணங்கள்தாமாகவேதோன்றி நற்குணங்களை மேலோங்கவிடாமல் அடக்கிவிடும். ஆதலின் எற்றகாலத்தில் களைபறிப்பதுபோல சிறுவர்களுடைய மனதில் தோன்றும் தீக்குணங்களாகியகுற்றங்களை உடனுக்குடனே களைந்துகொண்டுவரவேண்டும். நகத்தால் கிள்ளியெறிவதைப்பிறகு கோடாரிகொண்டு வெட்டும்படி வைத்துக்கொள்ளலாகாது. இளமையில் அக்குற்றங்களைக் கண்டிக்காமல் உபேக்ஷையாக விடப்படுகின்றவர்களே கடையில் கிறைச்சாலைக்கும் தூக்கு மரத்திற்கும் இலக்காகின்றனர்கள். அவ்வாறன்றிக் குற்றங்கள் காணப்படும்போதே தாக்ஷண்ணியமின்றித் தண்டிக்கப்படுகின்ற பிள்ளைகள் நாட்டிலே நல்லவர்களென்ற பெயரெடுத்துச் சிறப்பாக வாழ்வார்கள். இதற்குத் திருவிடாந்தமாய் ஒரு கதையை இதனடியில் கூறுவோம்.

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தா நகரத்தில் ஒரு ஸ்திரீ ஒரு நான் மாலவேளையில் பத்து வயதுள்ள ஒரு சிறுவனைக் கையில்பிடித்துக்கொண்டு ஒரு கடைக்குச் சென்றாள். அவள் மனதில் ஏதோ ஒரு தீர்மானங்கொண்டு கொஞ்சம் விசனத்துடனே போகிறாளென்பது அப்போது அவள் முகக்குறியால் காணப்பட்டது. அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா? அவள் படாடோபமாய் உயர்ந்த ஆடையாபரணங்கள் ஒன்றுமில்லாமல் சாதாரணமான உடையொன்று தரித்துக்கொண்டிருந்தாள். அவளுடன் போன சிறுவன் என்னவோ புலம்பிக்கொண்டு முகத்தை வெளியே காட்ட வெட்கி அவளுக்குப் பின்னால் தலைகுனிந்துகொண்டே போனான்.

அவன் குறித்துவந்த கடைபோய்ச் சேர்ந்து அங்கிருந்த கடைக்காரனைக்கூ வியழைத்து அவனுக்குத்தன் பிள்ளையைக்காட்டி, ஐயா! இத்தப்பையன் உங்கள் கடையிலிருந்து ஒரு பொருளைத் திருடிக்கொண்டு வந்துவிட்டா னென்றான். இவ்வாறு சொல்லும்பொழுதே அவள் கண்களிலிருந்து பலப லவென்று தண்ணீர் பெருகத்தொடங்கியது; அவள் சொன்ன பேச்சைக் கேட்டுக்கடைக்காரன் தன் கைவேலையை நிறுத்திவிட்டு அவளை நோக்கி அ ம்மா, இந்தக்குழந்தை அப்படி ஒருபோதும் செய்யமாட்டான்; நீ ஏன் வீ ணாய் பழிபோடுகிறாயென்று வணக்கமாய்ச்சொன்னான். அதன்மேல் அந்த ஸ்திரீ நான் சொல்லுவது பொய்யன்று, இவன் இப்பொழுதுதான் திருடி எடுத்துக்கொண்டுவந்தான். அவன் திருடின பாவை இதோ இருக்கிறது பாரும் என்று தான் கையில் கொண்டுவந்த பாவையைக்காட்டினாள்.

(இன்னும் வரும்.)

ருஷிய ஜப்பானிய யுத்தம்.

பெருங்குழப்பத்திற்கு இடனுயிருக்கும் இந்த யுத்தம் முடிவடையும் நாளென்னளோ தெரியவில்லை. போர்ட்டு ஆர்தரை ருஷியர்கள் விட்டு விடுவரேல் (இந்த யுத்தத்தில் இவர்கள் பெற்ற கீர்த்திதான் தெரிந்திருக் கிறதே) இந்த ஜப்பானிய யுத்தத்திற்கு முன்னுல் ருஷியர்கள் பெற்றிரு க்கும் கீர்த்தி அடியுடன் தொலையும். இதையுணர்ந்த ருஷியர்கள் கொடூ கண்டராய் போர்ட்டு ஆர்தரை வெகுபலமாய் அரண்செய்துளார். விடா கண்டராகிய ஜப்பானியரோ அதை எப்படியாவது கைப்பற்றவேண்டுமெ ன்ற கருத்துக்கொண்டு பல பிரயத்தனங்கள் செய்து வருகின்றனர். ருஷி ய உள் நாட்டில் பல கலகங்கள் நிகழ்கின்றன. சிறையிலிருக்கும் கைதிக ளையும் இராணுவத்தில் சேர்க்கின்றனர். இதனுல் ருஷியாவின் இராணுவ பலம் செவ்வனே விளங்கும். ஜப்பானியர்களைப்பற்றி நாமொன்றும் எழுத வேண்டியதில்லை. அவர்கள் சிறந்த தேசாபிமானிகளென்பதாதிய நமது நேயர்கட்குத் தெரிந்த விஷயமே. ஜெப்பானிய மாதர்கள் பலரும் வெகு சாஹஸங்கள் செய்துவருகின்றனர். யுத்த தந்திர நிபுணர்களான ஜப்பா னியர்கள் செய்யும் தந்திரங்களில் ருஷிபர்கள் மயங்கி அறிவழிந்து அல்லற் படுகின்றனர். இந்த யுத்தத்தின் முடிவு இப்பொழுது சொல்லுவதற்கில்லை. சமீபத்தில் ஒரு பெரிய யுத்தம் நிகழும்போல் காணப்படுகிறது.

திபேத்து படையனுப்பு.

வியாபாரத்தை அபிவிர்த்திசெய்யவேண்டுமென்ற கருத்துடன் லா ர்ட் கர்ஸனால் அனுப்பப்பட்ட திபேத்து படையனுப்பு திபேத்து படையெ ழுச்சியாகமாறின. இருதரத்தார்கட்கும் பல சண்டைகள் நிகழ்ந்தேறின. இதற்கிடையில் சமாதானப்பேச்சுகள் நடப்பதாக சில தந்திகளும் வந்து மூ ளைத்தன. அதின் முடிவு ஒன்றும் தெரியவில்லை. இந்த யுத்தத்தால் இ ந்தியா அடையும் பயன் ஒன்றுமில்லை. அப்படியிருக்க இந்த யுத்தத்திற்காகு ம் செலவை இந்தியாதான் பொறுக்கவேண்டுமென்று MR. பிராட்ரிக் கூறிய து மிகவும் விந்தைக்குரியதே. இந்தியாவின் கூன் முதுகு பின்னும் வ ளையவேண்டியதுதான்.

காங்கிரஸ்.

நடைபெறுமாண்டினிறுதியில் பம்பாய் நகரத்தில் கூடப்போகும் 20-வது வருஷத்திய காங்கிரஸ் மகாசபை மிக்கமேன்மையாக நடைபெற்றி

லங்குமென நிரூபிப்பதற்குரிய முயற்சிகள் நடந்துவருகின்றது. பல ஜ னங்களும் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு மனமொத்து உழைத்துவ ருகின்றனர். நமது நாட்டில் ஒன்றையும் காண்கிலோமே. இன்னும் 3 மா தங்கள்தானே இருக்கின்றது. நம்மவர்கள் இனியேனும் கண்விழிக்கலா காதா?

தந்தையும் தனயனும்.

வாலாடியிலிருக்கும் ஒரு பிராமணன் முதல் மனைவி இறந்துபோன தால் அவளுக்குப்பிறந்த ஆண்குழந்தை யொன்றை தனது மாமனூர் வசம் ஒப்புவித்துவிட்டு மறுமணம் முடித்துக்கொண்டு வாழ்ந்திருந்தானும். குழந் தையைப்பெற்ற மாமனூர் தன் பேரனை மிக்க மேன்மையாய் கல்விச்செல்வ ம்சத்து வளர்த்து வரும்பொழுது முன் சொன்ன பிராமணன் தன் மாமனூ ரிடம் இற்றைக்குச் சின்னுள் மூன்னர் மாலை 6-மணிக்கு வந்து தன் குழந் தையை இரண்டொருநாள் வைத்திருந்து அனுப்புவதாய் சொல்லி விடை பெற்றுக்கொண்டு காவிரிநதிப்பாலம் வந்து எதோ தோட்டத்தில் சத்தம் ஒ ன்று கேட்கிறதென்று சொல்லி பாலத்தின்மீது இருந்த சரளைக்கற்களின்மீ து தன் மகனை ஏற்றி தானும் அதிலிருந்துகொண்டு பார்க்கிறவன்போல் பா வனைசெய்து தோட்டத்தின்மீது கண்ணுயிருக்கும் சமயம் தன் மகனைத் திடீ ரென்று காலைத்தூக்கி ஆற்றில் தள்ளிவிட்டு வண்டியை ஒட்டிக்கொண்டு அ திவேகமாய் போய்விட்டானும். அந்தோபரிதாபம்! சிறுவன் ஆற்றில் விழு ந்துவிடவும் அத்தருணத்தில் கடவுளின் கருணையைப்பாருங்கள் அவ்விட த்திலிருந்த மூங்கிலைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு பாலத்துக்கு அடி யில் இருக்கும் கல் தளவரிசையில் ஆற்றிற்கு இரையாகாமல் எமனுடன் போராடிகொண்டு நிற்கின்றனன்! பத்துபிராயமுள்ள சிறுவன் அவ்வந்த காரத்தில் தண்ணீர் பிரவாகத்தினிடையில் தன்னுயிரை வைத்துக்கொண்டு எப்படி தவித்தானே! எவ்விதங்கதறினனே! கடவுளையன்றியாரறிவர்! பிறகு அவ்வழியே சென்ற வண்டிகாரர்கள் இச்சிறுவனது சத்தங்கேட்டு அவ்விடம் வந்து பார்த்ததில் பாலனைக்கண்டு பரிதபித்து பிறகு மாட்டின் க யற்றையவிழ்த்து ஒரு முனையை தாங்கள் பிடித்துக்கொண்டு மற்றொரு மு னையை பையனிருக்குமிடம் எறிந்து அக்கயிற்றை இடுப்பில் பலமாய்கட்டி க்கொண்டு கயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்துக்கொள்ளும்படிகூற பாலியனும் அப்படியே செய்ததின்பேரில் கயிற்றை பலமாயிருக்க அக்கயிற்றுடன் அவ னும் வெளியில்வர பின் சிறுவனைக்கரையேற்றி விஷயமுணர்ந்து பாட்ட னூர் வீட்டில் சேர்ப்பித்து அவர்கள் தரவந்த வெகுமதியையும் வேண்டாமெ ன்று மறுத்துவிட்டார்களாம். அய்யோ வண்டிக்காரர்களுக்கு இருந்த பரிதா பமகருணைகூட பெற்றதந்தைக்கு இல்லாமற்போய்விட்டதல்லவா? சிறுவன துகெதியைக்கண்டு அவனைவளர்த்த பாட்டனூரின்மனம் எவ்விதம்கலக்கியி ருக்குமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? முந்திய நாளிரவில் தன் னுல் தள்ளப்பட்ட பாலனிறந்திருப்பானென்று சந்தோஷங்கொண்ட தந் தைமறுநாள்மாமனூர் வீடுசேர்ந்து தன்மகனைக்காணுமென்று பாசாங்காயழத் தொடங்கி விஷயமுணர்ந்து மௌனம்சாதித்தானும்.

சமாசாரக்குறிப்பு.

திரான்ஸ்வாலின் மாஜி பிரதமந்திரியான மிஸ்டர் குருகர் சென்ற மாஸியில் பிராணவியோகமானுர். மிஸ்டர் திலகர் மீது வந்த கேஸில் அன்ன னவர் செலவழித்த தொகை ரூ. 25000 என்று தெரியவருகிறது—நிந்தி

ராபங்களுள்ளவர்கட்குதவியாக ஒருவிதமான தலையணையை இங்கிலாந்திலுள்ள ஒரு கம்பேனியார் செய்து ரூ. 4-8-0 க்கு விற்கின்றனர். இதில் தலையைவைத்துச் சயனிப்பின் சுகமான நித்திரை வருகிறதாம். அமெரிக்காவிலுள்ள ஒரு தனவானுடைய குமாரரின் விவாகத்திற்கு வந்த வெகுமதிகள் 15 லக்ஷம் ரூபாயாம்—உரலொத்த உருவங்கொண்ட பற்களுடன் 37½ அடி நீளமும் 18 அடி அகலமுமுள்ள சரீரத்தையுடைய இராக்ஷதரூபமொன்று கோதாவரி நதியில் நாவிக் நகரத்தருகில் அகப்பட்டதாம்— இரங்கூன் முனிஸிபாலிட்டியார் காக்கைகளைக்கொல்லும்படி உத்திரவு பிறப்பித்துள்ளார்—பயிரிடுதற்கு உபயோகிக்கப்படும் நிலமுகம் நமது இராஜதானியில் உளதாம்.—ஜப்பானிய நாட்டில் 4000 பத்திரிகைகள் கடைபெற்று வருகிறதாம்—சீமைக்காடியை கடியுண்ட இடத்தில் 2 மணி நேரம் வரை சேய்ப்பின் பாம்புக்கடி விஷம் நீங்கிவிடுமாம்— ஆஸ்திரியாவிலுள்ள வைத்தியரொருவர் கண்டுபிடித்துள்ள பீரங்கியை பிரயோகஞ்செய்தால் அது வெடித்து பலரைக்கொல்லுவதில்லையாயினும் அதினின்று கிளம்பும விஷக்காற்று ஆகாயமெங்கும் பரவி 20000 எதிரிகளிருப்பினும் மூர்ச்சிக்கச் செய்வதால் அத்தருணம் அவர்களைச்சிறை பிடிப்பதற்கு அதிக சுலபமாயிருக்குமாம்.—ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டில் பிரசுரிக்கப்படும் பத்திரிகை தினியாக இருப்பதால் பத்தபின் ஜலத்தில் நனைத்தால் எழுத்தக்களெல்லாம் மறைந்து எதற்கும உதவக்கூடிய சுத்த வஸ்திரமாக ஆகிவிடுகிறதாம். சீனதேசத்தில் அபினைகள் 10000000 பேர்களும், இந்தியாவில் பிச்சை எடுப்பவர்கள் 50 லக்ஷம் பேர்களும், ஜப்பானிய நாட்டில் 4½ கோடிஜனங்களும், ருஷியாவில் 12¼ கோடி ஜனங்களும், சீனதேசத்தில் 400000000 ஜனங்களும் வசிக்கின்றனராம்.— ஜாம் நகர சமஸ்தானத்தில் காஷ்டத்திலேற்றிய பிணங்களின் பேரில் நிரோதின் வண்ணையை ஊற்றி தகனம் செய்வார்களாம்.—இங்கிலாந்திலொருவர் தமது நாயை அபேக்ஷித்த தமது மைத்துனருக்கு இரயில் மார்க்கம் அனுப்ப அது தன் எஜமானனை பிரிந்திருக்க ஒப்பாது 40-மணி நேரத்துக்குள் 70-மைல்களையும் கடந்து தன் எஜமான் வீட்டையடைந்ததாம.—அமெரிக்காவில் ஒரு வக்கீலுக்கு ஒரு கேஸில் கிடைத்த வருமானம் ஆறுலக்ஷம் ரூபாயாம்.—லண்டனில் பிரகடனமாகும் "லண்டன் டைம்ஸ்" 120 வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதாம்— சமீபத்தில் நடக்கப்போகும் ஆசார சீர்திருத்த சபையில் பரோடா கெயிக்வார் மகாராஜா அர்கள் அக்கிராசனம் வகிப்பார்களாம்.—கள்ளநாணயம் செய்வதாய் துப்பறிந்து அஸிஸ்டெண்டி கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டெண்டு முதலிய வர்களால் அதற்காதாரமான சாமான்களுடன் ஸ்ரீரங்கத்தில் பிடிபட்ட கலசேகர ராமாநுஜதாஸ், ஷேயார் சமசாரம் ரெங்கனுயகி முதலிய இருபரும் விசாரிக்கப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டுளார். வெயுபீலட் எனுமிடத்தில் 1½ அடி உயரமுள்ள 39 பிராயம்கொண்ட ஒரு ஸ்திரி வசிக்கின்றாராம். சங்கீதம் தலைமயிரை வளர்க்கிறதென்று ஒரு அமெரிக்கமாது சொல்லுகிறாள். லண்டனில் ஒரு பெண்ணுடைய காயத்தை ஆழமாக அறுத்து சோதித்ததில் சரீரத்துக்குள் உயிருடன் வண்டொன்று இருந்ததாம். ஒருமுறை சாவி தந்தால் 15 வருஷகாலம் சரியாக செல்லும் கடியாரமொன்றை சுவிட்ஸர்லேண்டில் ஒருவன் கண்டுபிடித்திருக்கிறானும்.

பிழைதிருத்தம். 75-வதுபக்கம் கலாப்பிரகாசனிசரித்திரத்தில் 3வது செய்யுள் 4-வது அடியில் நீங்கப் என்பதை நீங்கல் எனத் திருத்தி வாசித்துக்கொள்க.

பிரஜாபந்துகூலன்.

RECEIVED 2 SEP 1904 S.

பருவம் I. } திரிச்சி. 1904வது செப்டம்பர் மீ { இலக்கம் 6.

நம்மவர்கள் நகையணிந்து நகைக்காளாகி நாசமடைவதேன் ?

இந்து தேசமானது பூர்வ காலங்களில் நாகரீகத்திலும் செல்வசம்பத்திலும் மிகவும் சிறப்புற்று கீர்த்திபெற்றிருந்தது. பதினெண்ணூவது நூற்றாண்டில் மகம்மதிய அரசாக்ஷியில் மிதந்த கொடுமைகளையனுபவித்து நமது சொத்து மானவி மக்கள் விஷயத்தில் நமக்கு யாதொரு சுதந்திரமுமின்றி தட்டுக்கெட்டுத் தடுமாறி தத்தளித்துக்கொண்டிருந்த விஷயங்கள் எக்காலத்திலும் மறக்கத்தக்கவைகளன்று. அநேக கொள்ளைக்காரர்களால் பலவித கொடுமைகளை அநுபவித்து பொருள் நஷ்டம் மானநஷ்டங்கட்கு ஆளாகி மனக்கிலேசமுற்றிருப்பழி நம்மவர்களின் அதிர்ஷ்ட வசத்தினால் ஆங்கிலேயர் நமது நாட்டிற்குப் போந்து காளடைவில் இந்தியா தேச முழுவதையும் கட்டியாளும்படியான நல்லகாலம் வந்து அவர்கள் காருண்ணியமுள்ள அரசாக்ஷியில் சகல சுதந்திரங்களையும் சுகவாழ்வையும் அடையப்பெற்றவருகிறோம். ஆயினும், நம்முடைய தேசத்தில் செய்யப்பட்டு வந்த முக்கியமான கைத்தொழில்களெல்லாம் ஆங்கிலேய வியாபாரிகளுடைய போட்டியினால் நிலைபெறாது மறைந்து போயினமையாலும், பிரஜைகளிற் பெரும்பாலோர் நிலவரி முதலிய பலவரிகளினுயர்வாலும், காலமழையின்றி கட்டுப்பாழாகியதின் காரணமாக நேரும் பஞ்சத்தாலும், அதிவிருஷ்டியினால் அளவற்ற அல்லல்களுக்காளாகியும், நமது தேசத்தில் உற்பத்தியாகும் பணமெல்லாம் நமது நாட்டில் தில்லாமல் வஸ்திரத்திற்கு, கெருப்புக்குச்சிக்கு, காகிதத்திற்கு, அதற்கு, இதற்கு, என்று ஏராளமான தொகை அன்னிய நாடுகளுக்குப் போய்விடுகிறபடியாலும் நம்மவர்கள் வறுமைக்காளாகி அரைப்பட்டினி முப்பட்டினிக்காரர்களாய் கஷ்டம் வந்து இஷ்டஞ்செய்ய ஆரம்பித்து வறுமையால் வாடிவருந்துகிறார்கள். இப்போப்பட்ட நிலைமையிலிருக்கும் நம்மவர்கள் நாகரீகமெனவும் அழகெனவும் நினைத்து நகைப்பைத்தியம் பிடித்து நகைகளணிவதும் 1000, 2000, என்ற நகைகளில் முதலிடுவதும் மிகவும் விசனத்தக்குரியதே. நகைகளணிவதினால் உண்டாகும் கெடுதிகள் அநேகானேகம். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பிரயாணம் செல்லும்போதும் தேவாலயங்கட்கும் உற்சவங்கட்கும்விசேஷங்களுக்கும்போகும் போதும் நகைகளணிந்துகொள்ளுவது நகைப்புக்கிடமே. கள்ளர்கள் நகைகளுக்கு ஆசைப்பட்டு அதுகளை சாவதானமாய்க்கழற்றுவதற்கு அவகாசமின்றி காதையறுத்தும், மூக்கைமுறித்தும், கை கால்களை வெட்டியும், நகைக

ளை கொண்டுபோய்விடுகிறார்கள். முடிச்சுமாறிகள் கூட்டங்களிலே கத்தரிக்கோலால் கத்தரித்தும் நகைகளைத் திருடிக்கொண்டு ஓடுகிறார்கள். ஜனத்திரளின்றி தனியாய் இருக்கும் காலங்களிலும் நகையினால் உயிரிழந்தவர்கள் அநேகர். ஆள் அடையாளம் தெரிந்துபோகுமென்று பாதகர்கள் கொலைசெய்தே நகைகளைப்பறிப்பார்கள். சிறுவர்களுக்கு நகைகளை யணிவித்தது காரணமாக நிகழ்ந்த கொலைகளும் கணவுகளும் அனந்தானந்தம். கலியாணகாலங்களிலும் பந்து மித்திரர்கள் வீட்டுக்குப்போகும் போதும் நகைகளை யணிந்துகொள்ளுவது ஒரு வேடிக்கையான வாடிக்கையா யிருக்கின்றது. கோழித்திருடி கூடக்குலாவுவதுபோல திருட்டுத்தொழில்புரியும் அந்தரங்கத்திருடிகள் பிடித்துறங்கும் அயர்ந்த நித்திரை சமயங்களில் நகைகளைக்கழற்றிக்கொள்ளுவதுமுண்டு. அத்தருணத்தில் குழந்தைகளுமூலம் அவர்களைத்தட்டிக்கொடுத்து நித்தரித்த தருணத்தில் நகைகளைக் கழற்றிக்கொண்டும், எவராவது பார்த்துவிட்டால் நகைகளை யாராவது திருடிவிடுவார்களே எனும் அச்சத்தால் முன் ஜாக்கிரதையாக நகைகளைக் கழற்றியதாய்க் கூறுவதும், விஷயம் வெளிக்கு வந்துவிட்டால் பல்லையிளித்துவேண்டுவதும், சாதாரணமாய் நாம் காணக்கூடிய விஷயங்களே. இரவல் நகை வாங்குவது முற்றும் தகாத காரியம். ஏழையின் நிலைமை உலகத்தாருக்கு மறைவானதல்ல. அவர்களுக்கு வீண் மினுக்கு தளுக்கு வேண்டியதில்லை. இரவல் நகைகளை வாங்கி அதைப்போக்கடித்து அதின் விலை கொடுக்க வகையின்றி காலமெல்லாம் கஷ்டப்படுவோர் அநேகர். அதற்கு இதற்கென்று காதில் அநேக ஓட்டைகளை யுண்டாக்கி அழகைக்கெடுத்து அருச்சாரத்தை யடித்து அழியும் நம்மவர்களின் ஹீனமதியையும், ஒன்றுமறியாத பாலர்கட்கும் நேற்று பிறந்த குழந்தைகட்கும் நகைகளையணிவித்து நாசத்தை வருவிக்கும் நம்மவர்களின் அறிவீனத்தையும் என்னென்று கூறுவாம். ஊசியும் நூலுமாக சதைக்குள் ஊடுறிவிச்செல்லும்போது உண்டாகும் வலியை எவரால் எடுத்துரைக்க இயலும்? இதனால் பல கஷ்டங்கட்களாகிய சிறுவர்கள் கணக்கிலர். நகையாசையினால் நம்மவர்கட் கிருந்த ஜீவகாருண்யம், சத்தியம், தெய்வபக்தி, விருந்தோம்பல், உற்றாரை உபசரித்தல், விரதாதிகளை யனுசரித்தல், பரோபகாரம், ஸ்திரீகட்கிருக்கவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, ஆகியநற்குணங்களனைத்தும் அநேகமாய்நிலைபெறுதொழிகின்றன. நகையாசையினால் தேசம் க்ஷீணதிசைக்கு வருவதாயிருக்கின்றது. ஆபரணபேக்ஷையால் பொய், கொலை, களவு, காமம், மதுபானம், சண்டை, டம்பம், தன் வயிற்றுக்கே துரோகஞ் செய்தல், லோபித்தன்மை, குரோதம், மோகம், முதலிய பல துற்குணங்களே தழைத்தோங்குகின்றன. நிலம் முதலிய ஜீவித முதல்களையும்கூட விற்று நாகரீகம் நாகரீகம் என்று கூறி நகைகள் செய்யும் நம்மவர்களின் ஹீனமதி இருந்தவாறு என்னே! என்னே!! மேனாட்டினரை யொப்ப நடிக்க முயற்சிக்கும் நம்மனோர் அன்னவர்களிடத்துள்ள தேசாபிமானம், பாஷாபிமானம், ஆபரணத்தில் முதலிடுதலின்மை, வரவுக்குள்ளடங்கிய நிலவு, டம்பமின்மை, முதலியநற்குணங்களைக்கிரகித்து நலமடையாததேனோ? நகைகளில் 1000, 2000, என்று முதலிடுவதைத்தவிர்த்து அதைக்கொண்டு தேசோபகாரமாயும் தன் ஜீவனத்திற்கு உதவுகின்றதாயுமுள்ள விஷயங்களில் சிலவழித்து நலத்தைத் தேடிக்கொள்ளலாகாதா? நமது தேசத்தில் ஜாதிக்குத்தக்கபடியும் வயதுக்குத்தக்கபடியும் அவரவர்கள் சக்தியாநுசாரம் அணிந்துகொள்ளக்கூடிய நகைகள் இன்னின்னதென்று ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அவைகளில் தற்கால நிலைமையை சிந்தித்து அதி அவசியகாமாய் வேண்டதுபோலதா யுள்ள - இரண்டொரு

நகைகளைமட்டும் சொற்பவிலையில் செய்தணிந்துகொண்டு ஆபரணத்தில்முதலிடும் வழக்கத்தை அறவே போக்கவழிதேடலாகாதா? சிறையிலிருக்கும் கைதிக்கும் அறையிலிருக்கும் அங்களுமணிக்கும் என்னபேதம்? அவனும் கைகால்களில் இரும்புக்கொலுசு போட்டுக்கொண்டிருக்கிறான். சுத்தரயுவதியும் தன் கால் கரங்களில் காப்பு கொலுசு போட்டுக்கொண்டிருக்கிறாள். அவனிருப்பது சிறை, இவளிருப்பது அறை. இவ்விருவருக்கும் பேதமென்ன விருக்கின்றது. விலை உயர்வு குறைவுதான் வித்தியாசமாகலாம். ஆகவே நம்மவர்கள் நகையின்மீது சொண்டிருக்கும் ஆசையை அறவே விட்டொழிக்கவேண்டும். அதிலும் இரவல் நகை வாங்கித்தரிக்கும் இழிவான குணத்தை முற்றிலும் தவிர்க்கவேண்டும். சிறந்த திரவியவந்தர்களான பிரபுக்கள் தங்களுக்குவேண்டிய ஆபரணங்களைச் செய்துகொள்ளுவதில் ஆக்ஷேபனை ஒன்றுமில்லையே யென்று சிலர் வாதிக்க முன் வருவர். உலகத்தில் கடவுள் ஒருவருக்குச் செல்வத்தையளிப்பது உலகோர்க்குதவுவதற்காகவேயன்றி தான்மட்டும் அனுபவிப்பதற்த மாத்திரமன்று. நமது தேசமோ கைத்தொழில்களையெல்லாமிழந்து வெளிப்பதட்டிலேயே மூழ்கிநாசமடைந்துவருகிறது. இதையுணர்ந்தும் நற்தேயத்திய தனிகர்கள் ஆபரணங்களில் முதலிலுவது அழகன்று. நகைகளில் நம்மவர்கள் முதலிடுவதைப்போல் வேறு எதிலும் முதலிடக்காணோம். தற்காலத்தில் எவ்வளவோ தொகை நகையில் மூழ்ப்பபோயிருக்கின்றது. இது போதாதென்று இன்னும் சிலவழிக்க முயற்சிப்பது விவேகமன்று. நமது தேசத்தில் 50 லக்ஷம் பிச்சைக்காரர்களிருக்கின்றார்கள். பல குடும்பங்கள் ஜீவனத்திற்கு வழியின்றித் தவிக்கின்றன. நற்தேயத்தியதனிகர்கள் தாங்கள் அளவற்ற தொகையை ஆபரணங்களுக்காக சிலவழிப்பதை நிறுத்தி நமது தேசத்தில் இயற்திரங்களைத்தருவித்து இவ்விடத்திலேயே காதித்துச்செய்தல், வஸ்திரம் நெய்தல், நெருப்புக்குச்சி கண்ணுடி பிங்கான் சாமான்கள் உபயோகமான பாத்திரங்கள் உண்பெண்ணுதல், முதலிய பல கைத்தொழில்களைச் செய்வதில் தங்கள் திரவியத்தை முதலிட்டு வேண்டியவைகளை உற்பத்தி செய்து சுதேச கைத்தொழில்களை ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவருவார்களானால் எவ்வளவுதேசோபகாரமாயிருக்கும்! எத்தனை ஜனகைகள் பிழைப்பார்கள்! நமது தேசமும் கைத்தொழிலும் எவ்வளவு சிறப்படையும்! ஆபரணத்தில் முதலிடும் தொகையை விவசாயத்தில் சிலவழித்து சீர்திருத்தத்தினால் எவ்வளவு மேன்மைக்கு வரலாம்! பஞ்சமும் பஞ்சாய்ப்பறந்துபோகுமன்றே! ஆகவே தனிகர்களும் ஆபரணத்தில் முதலிடுவது கூடாது. மற்றவர்களும் அப்படியே. ஆனதுகொண்டு மேற்போந்த விஷயங்களைக்கவனித்து பணத்தைப் பாழாக்கி நகைகளையணிந்து நகைக்கானாகி நாசமுறுமல் நற்தேயம் உன்னத நிலையை எய்தும் மார்க்கத்தை நாடி அதற்குறியவைகளை இயற்றி நலமடைய நம்மனோர் முன்வருவார்களாக.

பாலிய விவாகத்தின் கேடு

நமதாரிய தாய்தந்தைமார்களே! கவனியுங்கள். உங்கள் அருமைமக்களை பால்ய விவாகப்படுகுழியில் தள்ளிவிட்டுத் தத்தளிக்கவிடாதீர்கள். தற்காலம் நமது இந்துதேசத்திற்நாட்பட்ட, எண்டிசாமுகங்களிலும் இப்பால்யவிவாகம் நாளுக்குநாள் வளர்பிறைச்சந்திரனைப்போல் ஏறுமுகங்காட்டிக்கொண்டே வருகின்றது. இவ்வளவு அதி பால்யத்தில் விவாகம் செய்யும் நம் இந்தியரின்

தர்வழக்கம் நம் தேசத்தில் தவிர வேறெங்குமில்லையென நிச்சயமாய்ச்சொல்லலாம். பிணஞ்சிறுமிகளுக்கு தக்க வயது வந்தவுடன் விவாகம் செய்கிறதென்ற வழக்கம், அறியாமையென்னும் பிரசண்டமாருதச்சூராவளிக்காற்றினால் அடியோடு தகர்ந்துவிட்டதுபோலும். இக்காலத்திலோ பத்துப்பதினைந்து வயதுடைய கன்னிகைகள் கிடைப்பது அருமையாய்விட்டன. என்றாலும், வீட்டுக்குவீடு பால்யவிதந்துகள் மாத்திரம்ஏராளமாய்ப்பெருகி சிறைக்காவல்கள் மேலிட்டுச் சோருலந்து, சித்த பேதத்தினால் சீச்சீ யென்றே சச்சரவெடுத்துத்திரிந்து வருவது விந்தையிலும் விந்தையாய் முடிகிறது. முற்காலத்திலோ இருபது இருபத்தைந்து வயதுடைய, பெண்களுக்கும் விவாகமாகாமலே இருந்திருப்பதாக பன்முறையும் கமது தாதாக்களால் சொல்லக்கேட்டிருக்கிறோம். இப்பொழுதோ பன்னிரெண்டுபதின்மூன்று வயதிற்கெல்லாம் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விடுகிறார்கள். பொதுவாய் விவாகமென்பது ஸ்ரீபராபரசாக்ஷியாய், பக்குமமித்திரர்களறிய ஸ்திரீ புருஷாளைப்பொருத்துவித்து இல்லறம் நடாத்துவிக்கும் ஓர்விதகருமம். இதைப்பற்பலதேசத்தார் பற்பலதேசாசார, நியமனப்படி செய்துமிருக்கிறார்களாகையால் அவையனைத்தையும் இக்கெடுத்துவிஸ்தரிப்பது நீரைக்கழுவி, நிழலைப்புதைப்பதைபோல் நிஷ்பிரயோசன மாகுமாதலால் நம்மவர்களாகிய இந்துகளுக்குள் வழங்கிவரும் கிரிகைகளின் குணகுணங்களை மாத்திரம், பரிபாலோசிப்போமாக. நம்மவர்களிற்பலர் வயதுவராதபெண்களை விவாகம்செய்து அனர்த்தத்துக்கு இடமாகிறார்கள். அப்படிச்செய்வது சரியாயென்பதைச்சற்று கவனிப்போம். தர்மசாஸ்திரத்திலும் அதிபால்ய விவாகம் செய்யும்படி ஆக்ஞாபிக்கவில்லை. ஆதிகாலத்திலே ரிஷிகளும், இராஜாக்களும், ஸ்திரிபுருஷர்களுக்குப்பக்குவகாலம்வந்தபிறகே, விவாகம் செய்ததாகத்தெரியவருகிறது. பின்னும் தங்களுடைய, நாயகர்களைத்தாங்களே சம்மதித்து ஸ்வயம்வரம் செய்துகொண்டதாகவும்புராணங்களிலேசொல்லப்படுகின்றது. ஆகையால் பூர்வகாலத்திலில்லாதஇக்கெட்டவழக்கம் இப்போது நம்மவர்களுக்குள்ளாக மட்டும், எப்படிவந்துபிரவேசித்ததெனக்கண்டு பிடிப்பது அசாத்தியமாயிருக்கின்றது. அதிபால்யவிவாகம் அநுசிதமானதென்றும், அதனால் வருந்தீமைகளையும், ஒவ்வொன்றாய் அடியில் விஸ்தாரமாயெடுத்துக்கூறுவோம். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஈடுஜோடிபார்த்து விவாகம் செய்யவேண்டியது எவ்வளவோமுக்கியமானகாரியம். இளமைப்பருவத்தில் நெட்டையாய்த்தோன்றுகிற பிள்ளைகள் பிறகு குள்ளமாகிவிடுகின்றன. இளமையில் குள்ளமாயிருக்கிற பிள்ளைகள் பிறகு நெட்டையாய்ப்போகின்றன. இளமையில் அழகாயும், நிரோக சௌக்கியமாயும் தோன்றுகிறபிள்ளைகள் பிறகு விகாரமாய்போகின்றன. ஸ்திரீகளுமவ்வாறே. ஆனதுபற்றியே அதிபால்யத்தில் விவாகமாகிற பெண்கள் புருஷனுக்கு அக்கான் அல்லது தாய்என்று சொல்லும்படியாய் அவ்வளவு நெட்டையாகவளர்ந்துவிடுகிறார்கள். அவர்களுக்கோர் இரகசியம் சொல்லவேண்டின் எண்ணமாம் தேடவேண்டியிருக்கிறது. சில சமயங்களில், ஸ்திரீகளுக்குப் பக்குவகாலம் முந்தி வந்துவிடுகின்றது. புருஷர்களுக்கு யௌவனகாலம் வரத்தாமதப்படுகிறபடியால் ஸ்திரீகள் சிலகாலமவரையில் காத்திருக்கும்படி சம்பவிக்கிறது. அல்லது புருஷர்களுக்குப் பக்குவகாலம் முந்திவருவதால் அவர்களாவது சிலகாலமவரையில் காத்திருக்கவேண்டியதாயிருக்கிறது. அக்காலத்தில் புருஷர்கள் ப்ராஸ்திரீகமனம் முதலிய தூமார்க்கங்களில் பிரவேசிக்க இடமுண்டாகின்றது. வயது முதிர்ந்த பிள்ளைகளுடைய குணதணங்களை மட்டும்நிச்சயிக்கலாமேயல்லாமல் அதிபால்யத்தில் பிள்ளைகளுடைய, குணதணங்களை

அறிவது அசாத்தியம். சிறுபிள்ளைகளுடைய தேஜசும், குணகுணங்களும், தேகஸ்திதி முதலியவைகளும், நாளுக்குநாள் மாறிப்போகின்றன. ஆதலால் ஆண்பெண்களினுடைய குணதணங்கள் தேகஸ்திதி முதலியவைகளை அறியாமல் அதிபால்யத்தில் விவாகம்செய்வது மண்குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்குவதுபோலாகிறது. ஆனதுபற்றியே சில ஸ்திரீ புருஷர்களுடைய குணதணங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் நாயும் பூனையும்போல் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்வதைப் பலகாலுங் காண்கிறோம். அதிபால்ய விவாகம்செய்வது ஆபத்தை விலைக்கு வாங்குவதற்கு சமானமாயிருக்கிறது. அதிபால்யத்தில் விவாகமாகிற புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பருவகாலம் வர குறைந்தபக்ஷம் 14-அல்லது 16-வருஷம் சென்றுவேண்டும். அவ்வளவுகாலஞ் சென்றபிறகுதான் அவர்கள் கலியாணத்தின் பிரயோசனத்தை அடைய வேண்டியதாயிருக்கும். அவ்வளவு காலத்துக்குள் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வளவோ விபத்துக்கள் சம்பவிக்கும். அந்த ஆபத்துகளெல்லாம் தப்பி யிருப்பார்களென்பது என்ன நிச்சயம்? இக்காரணத்தைப்பற்றியே சிசுவிவாகம் செய்வது உசிதமன்றென்று நன்கு விளங்குகின்றது. பின்னுமித்தேசத்தில் சில பெண்கள் பிஞ்சிலே பழுப்பதுபோல் அதிசீக்கிரத்தில் ருதுவாகி புருஷன் வீட்டுக்குப்போய்த் தம் தேகம் உறுதிப்படுவதற்கு முன் சமுசார வாழ்க்கையிலே பிரவேசித்து பிள்ளைகளைப்பெற ஆரம்பிக்கிறபடியால் அவர்கள் வயிற்றில் பிறக்கிற பிள்ளைகள் தலைமுறைதலைமுறையாய், தூர்ப்பலமுடையவர்களாயிருப்பார்களென்று ஆயுள்வேதபாஸ்கரர்கள் சான்று பகருகிறார்கள். அதுஉண்மையென்று அநுபோகத்திலும் தெரியவருகின்றது. தங்களே தங்கள் தாய்தந்தையர்களின் போஷணையிலிருக்கவேண்டிய பாலியப்பெண்கள் பிள்ளைகளைப் பெற்று நிர்வகிக்கும்படி செய்வது "தேனீயின் தலையின்பேரில் தேரைக்கட்டுவது" போலாகின்றது. அஃதாவது அந்தகனையே நித்துப்போகிறதாயிருக்கின்றது. விவரிக்கிற்பெருகும். பெற்றோர்களாகிய பெரியோர்காள்! இனியாவது சற்று நிதானித்து தமதருமைக்கண்மணிகளாகிய பெண்மணிகளுக்குத் தகுந்த வயது வந்தவுடன் தகுந்த வரனுக்கு விவாகம் செய்துகொடுத்து இந்நிலவுலகில் லபிவிர்த்தியாகி இபரசுகத்தையும் அடையும்படியான விதத்தைச்செய்து, வாழ்வாங்கு வாழ்விப்பீர்களெனைக் கோருகிறோம். "பெருமையுடன் வாழ்கிற பெண்ணைப் பெற்றோர் கெடுத்தார்" என்னும் குறைச்சொல்லுக் கிடங்கொடுக்காதீர்கள். சொன்னோம்! சொன்னோம்!! சொன்னோம்!!!

"தஞ்சைபுரிநேசன்."

நல்லொழுக்கம்.

நல்லொழுக்கத்தை யனுசரிக்கவேண்டியே ஔவை "சான்றோரினத்திரு" என்று கூறியிருக்கிறாள். அதாவது பெரியோர்களின் சகவாசத்தால் நல்ல ஆசாரமுண்டாகுமென்பது ஔவையின் கருத்து. பெரியோர்கள் எப்போதும் புண்ணிய காரியங்களையே செய்துகொண்டிருப்பர். ஆதலின் அவர்களைப்பின்பற்றுவதும் நேசிப்பதும் நலத்தை விளைவிக்கும். ஒருவன் செய்யுங்கருமத்தைக்கண்டவுடன்தானும்செய்யத்துடங்குவதுபிராணிகளினியல்பு. இதற்கு ஒன்றுமறியாத குழந்தையின் காரியமே உதாரணமாகும். தாய் செய்யும் வேலைகளைக்கண்டு குழந்தைகள் செய்வதும் தாய் சிரித்தால்

சிறிப்பதும் அழுதால் அழுவதும் வழக்கம். இந்த காரணங்களால் ஸகவாச மானது பெரும்பயனை விளைவிக்கிறதென்றறியலாம். ஆதலின் நல்லொழுக்கத்தைக் கைப்பற்றுவதற்காகப் பெரியோர்களைப் பின்பற்றவேண்டும். அதாவது கீழ்மக்களின் நட்பை அடியோடே தொலைத்து மேன்மக்களின் நட்பை நாடவேண்டுமென்பது கருத்து.

வாதம்.

வாதாடுவதால் விளையும் துன்பம் அதிகம். சிலர் எல்லாவிஷயங்களிலும் தங்களுக்குப்போதுமானதிறமையிருப்பதாய் தப்பெண்ணங்கொண்டு உண்டவுடனே பிறருடன் வாதாடுவது வழக்கம். இந்த வாதத்தால் யாதொரு பிரயோஜனமும் உண்டாகாது. வாதிப்பவனை வாயாடி என்று யோக்கியர்கள் நினைத்து அவனைக்கண்டால் மௌனமாயிருப்பர். இதனால் அவன் சற்சனர்களுடைய சகவாசத்தை இழக்கின்றான். பிறரால் மதிக்கப்பட விரும்புவோன் வீண்வாதம் செய்வதையொழித்து தனக்கும் பிறருக்கும் உபயோகமான காரியங்களைப்புரியவேண்டும். இதுதான் பெருந்தன்மைக்கு இலக்ஷணம்., பேசும்போதும் எழுதும்போதும் பிறருடைய மனம்வருத்தமடையாதபடி நடந்துகொள்ளுவது நன்மை. பெரியோர்கள் சூதும் வாதும் வேகனை செய்யுமென்று கூறியிருப்பதால் எப்போதும் சூதைப்போலவே வாதையும் எண்ணி ஒழிப்பது நன்று.

உலகம் பலவிதம்.

சிலர் சன்மார்க்கத்தையனுசரிக்கின்றனர். சிலர் துன்மார்க்கத்தையனுசரிக்கின்றனர். சிலருக்கு ஞான விஷயங்களில் பிரீதி. சிலருக்கு சிற்றின்ப விஷயங்களில் இச்சை. அவரவர்கள் தத்தம் கையிலகப்பட்ட காசை இஷ்டமான விஷயங்களில் செலவிடுகிறார்கள். குடிகாரனுக்கு காலணா அகப்பட்டால் அதைக்கள்ளுக்கடையில் கொண்டுபோய்க்கொடுத்து மதுவையுண்டு மயங்கிவிழுவன். மயக்கம் தெளிந்தவுடன் ஐயோ! காசைச் செலவழித்து லஜ்ஜையின்றி தெருவில் விழுந்து புழுதியிற் புரண்டோமேயென்று பச்சாத்தாபப்படுவான். இந்த பச்சாத்தாபம் கள்ளுக்கடையைக் காணுமட்டுமிருக்கும். அதைக்கண்டவுடன் வைராக்கியம் தொலைந்துபோம். நல்லவர்கள் தங்களுக்குக் காலணா கிடைத்தால் அதற்கு சற்பூரமவாங்கி பகவானுக்கு உபயோகப்படுத்துவார்கள். அல்லதுயாரேனும் ஒரு ஏழைக்குக்கொடுப்பார்கள். ஒரே விதமாய் உலகமிருக்கிறதில்லை. அது பலவிதம். ஆதலின் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதை யறிந்து புத்திமான்கள் அறிவாளிகள் கொண்டாடும்படியான காரியங்களையே செய்யவேண்டும்.

தேசயாத்திரை.

நம்மவர்கள் இந்ததேசத்தை விட்டு அப்பாற்போனால் ஜாதியை இழக்க நேரிடுமென்று சும்மாவிருக்கின்றனர். இதனால் நமது தேசத்தில் வியாபாரவிருத்தியில்லாமலும் வெளிநாட்டாரின் ஆசார சம்பிரதாயங்கள் தெரியாமலும் போகின்றன. ஓர் தேசத்துக்குச்சென்று அங்கு சிலநாளிருந்து ஜனங்களுடன் பழகினாலன்றி அத்தேசத்தில் இன்ன சரக்குகள் கொண்டுபோனால் விலையாகுமென்று எப்படியறியலாம்? இதன்றி தேசயாத்திரையால் புத்தி விருத்தியாகி மனதிற்குத் தைரியமும் உற்சாகமும் உண்டாகுமென்பது வைத்தியர்களின் கொள்கை. ஆதலின் அவகாசமிருக்கும்போழ்து பற்பல தேசங்கட்கு யாத்திரை போவது நன்று.

அவசியமெவை?

நோயுணாமல் மனிதன் தன்னைக்காப்பாற்றிக்கொள்ள சுத்தமான காற்றும், சுத்தமான ஜலமும், சுத்தமான ஸ்தலமும், வெகு சுலபமாய் ஜீரணிக்கக்கூடிய நல்ல ஆகாரமும், இருக்கவேண்டும். இத்துடன் மனதுக்குசந்தத்தைத் தரக்கூடிய பாபகர்மங்களைச்செய்யாமல் வீண்காலம்போக்காமல் பொருளைத்தேடிப்போற்றி ஈசுவராராதனை செய்தால் மிக்கநலமாயிருக்கும். தேகத்திலுள்ள அசுத்தங்களைப் பலவகையிலும் கழித்து சுத்தமான வஸ்திரமுடுத்தி சரியானகாலத்தில் ஆகாராதிகளைப்புசித்து ஒழிவானநேரங்களில்நல்லசிந்தங்களைப் புடிப்பது வெகு சிலாக்கியம்.

மனமும் குழந்தைகளும்.

குழந்தை வாழப்பழத்தைக்கண்டால் கொடுவென்று கேட்கிறது. கூச்சல்போட்டழுகிறது. கொடாவிட்டால் தரையிற்கிடந்து புரளுகிறது. அதைச் சமாதானப்படுத்துவதற்காகப் பழத்தைத்தருகிறோம். அது தின்று அஜீரணத்தையடைந்து வியாதியை சம்பாதித்துக்கொள்ளுகிறது. அதுபோல் நமது மனம் போகும்போக்கில்விட்டால் அயோக்கியமான தொழில்களைச்செய்து பாபிகளாவோம். நானா மரணதுக்கத்தையடைவோம். குழந்தைகளிஷ்டப்படி விடும் பெற்றோர்கள் அவர்கள் துஷ்டர்களாய் போவதைக்கண்டு பிற்காலத்தில் தன்புறுகின்றனர். அதுபோல் நம்முடைய மனதை அதன் இஷ்டம்போல் அலையவிட்டால் பிற்காலத்தில் அது நமது வசப்படாமல் கெட்டவழியிற்செல்லும்போது அதிக வருத்தமடைகிறோம். ஆகலான் "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று கூறிய ஔவையின் வாக்கியத்தைச் சிந்தித்து அதையனுசரித்தொழுகுதல் குணகரம்.

மனைவி.

ஓர் மனிதனுக்குத் தன் மனைவியைத்தவிர வேறு துணையில்லை. எல்லா பந்துக்களிலும் தாய் தந்தையரே சிறந்தவர்களென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம். தாய்க்குப்பின் தாரமென்று பழமொழி வழங்குகிறதே. ஆதலின் பெற்றோர் நீங்கலாக மனைவியே முக்கிய பந்துவாகிறாள். இளமைப்பருவம் நீங்கி குடும்பம் பிரிக்தகாலத்தில் மனைவிமட்டுமே துணைவியாயிருத்தலின் புருஷன் அவள் மாட்டு அன்புசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். பொற்றாலியோடு எவையும் போமென்னும் ஔவையின் வாக்கியத்திற்கிணங்க ஸ்திரீகள் புருஷனையே சகல பாக்கியங்களின் ரூபமென்றெண்ணியிருப்ப

லும் அவனிதந்தால் அமங்கலியாகி ஸர்வஸுகங்களையும் இழப்பதாலும் எப்போதும் புருஷனே விட்டுப்பிரியாது அவன் சொற்படி கேட்டு நடப்பதாலும் அப்புருஷனுடைய சந்ததி விர்த்திக்கு அவளே காரணமாயிருப்பதாலும்தயைக்கும் அன்புக்கும் அவளே முதற்தர பாத்தியமுள்ளவள். இதை ஒவ்வொரு புருஷரும் கவனித்து தத்தம் மனைவிகளிடம் அன்பு பாராட்டி அவர்களைப் பக்ஷமாய் நடத்தும்படி கோறுகிறோம்.

பொறுமை.

பொறுமையே சிறந்த பூஷணம். புருஷன் ஸ்திரீ ஆகிய இருவருக்கும் இக்குணம் இன்றியமையாதது. பொறுமையால் அனேக காரியங்களைச் சாதிக்கலாம். எவரையும் நிந்தியாமல் பொறுமையாயிருப்பவன் கஷ்டமண்டையான். பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார் என்ற பழமொழியுமுண்டு. உலகத்தில் எத்தனையோ விதமான மைகளிருக்கின்றது. அவைகளெல்லாவற்றிலும் சிறந்தது பொறுமைதான். கோபியோ பாபியோ என்ற ஜனங்கள் சொல்லுவது பொய்யல்ல. அதனல் கொலை சண்டை முதலிய அநேக பாபங்களுண்டாகின்றன. பொறுமையால் தலை, இரக்கம், பச்சாதாபம், முதலிய புண்ணியகுணங்கள் விர்த்தியாகின்றன. பொறுமையென்றால் அசட்டுத்தனமென்றர்த்தமல்ல. ஒருவர் செய்யும் குற்றத்தைப் பாராட்டாமல்சகித்து அவரை மன்னிப்பதே பொறுமையாகும். இவ்வித பொறுமையவதித்து பெருமையைப் பெறுவது ஒவ்வொருவருடையவும் முக்கிய கடமை.

தந்தையும்தனயனும்

திருச்சியில் 18 பிராயமுள்ள சிறுவனொருவன் பெற்றோராலும் உற்றோராலும் கைவிடப்பட்டு மைத்தனால் காப்பாற்றப்பட்டு கௌரவமான அலுவல் ஒன்றை வகித்துவர இச்சிறுவனைக் கெடுக்கவேண்டுமென்ற இவன் தந்தை பல சூழ்ச்சிகள் செய்துவந்தார். தன் பொறுமையே தன்னை நாசமாக்கும் என்பதை யுணரவில்லை. சாக்ஷி கையெழுத்து, ஸ்டாம்பு, முதலியவைகள் ஒன்றுமில்லாத வெறுங்காகிதத்தைப் பத்திரம் என்றசொல்லி அதில் தான் வாங்கிய இரவல் நகையைத் தந்து ரூ 10 பெற்றிருப்பதாயும் 4-மீக்குள் செலுத்திவிடுவதாயும் செலுத்தத்தவறினல் நகையையே தந்துவிடுவதாயும் எழுதி அந்தப்பத்திரத்தை தன் மகனிடம் தந்து இதை யெவருக்கும் காட்டாமல் தீயே வைத்துக்கொண்டு ரூ 10 கொடு, நான் அதிசீக்கிரத்தில் தந்துவிடுகிறேனென்றார். பத்திரமும் நகையும் வேண்டாம் என்னிடமில்லாவிட்டாலும் எங்கேயாவது வாங்கித்தருகிறேனென்று இச்சிறுவன் சொல்லப்போகுந்தருணத்தில் "நகை இப்பொழுது இவ்விடம் இல்லை. ஆயினும் பாதகமில்லை. இந்தப்பத்திரத்தை வைத்துக்கொண்டு பணம் கொடு, நான் அதிசீக்கிரம் தந்துவிடுகிறேனென்று சொன்னதந்தையின் வார்த்தையைக் கேட்டு நிஜக்கிட்டு ஆலோசிக்கலானுன். தந்தையோ நகையைத் தரப்போகிறதில்லை. பத்திரத்திலோ 70 ரூ மதிப்புள்ள நகை தந்திருப்பதாய்க் கண்டிருக்கின்றது. இந்தப் பத்திரத்தை வைத்துக்கொண்டு பணம் தந்தபின் நாம் இந்தப் பத்திரத்தைக்காட்டி பணம் கேட்டால் நான் தந்த நகை எங்கே

யென்று நிருபிக்கேட்பார். நீ நகையை ஸ்வப்பிரயோஜனப் படுத்திக் கொண்டு என்னிடம் நீ நகையைத் தந்திருப்பதாயும், அதற்கு சாக்ஷியாக இந்தப்பத்திரமிருக்கிறதென்றும் காட்ட ஆரம்பிப்பார். நகையைத் தரவில்லையென்று நடந்த சங்கதியைச் சொன்னலோ எவரும் நம்பார். அன்றியும் அது வோ இரவல் நகையென்றும் சொல்லியிருக்கின்றது. இரவல் நகையைப் பெற்றுக்கொண்டு பணம் தருவது நியாயவிரோதமாயிருப்பதுமன்றி தருவோர் தண்டனைக்கும் ஆளாகின்றனர். கடைசியில் ரூபாய் பத்தையும் இழக்க வேண்டியதோடு தண்டனைக்குமாளாகி நான் நிலைக்கவேண்டிவரும். ஒரு வரிடமும் காட்டாதே என்றதின் கருத்து இப்பொழுதுதான் தெரிந்ததென்று கூறி "இப்படி எனது தந்தை என்னை நாசப்படுத்த நினைத்தது பூர்வகர்மம்" என்று தன்னையே நொந்துகொண்டு பத்திரத்தை தந்தையிடம் எறிந்து விட்டு இல்லமடைந்தானும். இப்படி தன் மகனைக்கெடுக்கச் சூழ்ச்சிகள் செய்வது தான் தந்தை தனயனுக்குச் செய்யும் உதவிபோலும். மக்களுக்குச் சத்திரு மாதா பிதா என்பது இதைப்பற்றித்தானே!

பிசகு.

—:o:—

தேகம் பருக்குமென்று அளவுக்கு மிஞ்சி அதிகமாய் அன்னமருந்துவதும், குழந்தை பள்ளிக்கூடத்தில் இன்னும் ஒரு மணிநேரம் கூடப்படித்தால சீக்கிரம் வித்வானுவானென்பதும், தேகப்பயிற்சி அவசியமென்று அளவுக்குமிஞ்சி சரீரப்பிரயாசைப்படுவதும், தூக்கத்திலிருந்து திருடும் ஒவ்வொரு மணியையும் லாபமென்று நினைப்பதும், இன்றையதினம்வேண்டியகெட்ட காரியங்களெல்லாம் செய்துவிடுவோம் நாளைமுதல் சற்குணசம்பன்னராயிருப்போமென்றெண்ணுவதும், பிறர்மீது தோஷாரோபணம் சொல்லிக்கொண்டே திரிவதும், எவ்வளவு சிறிய விடுதியாயிருப்பினும் அங்கே படித்துக்கொள்ளலாமென்று நினைப்பதும், தான் சாப்பிட்ட மருந்தை பிறருடைய தேகத்திற்கேயறியாமல் அவர்களுக்குக்கொடுப்பதும், ஊறறிய நாடறிய மணமுடித்த மனைவியைத் தடிகொண்டு பொத்துவதும், பசியில்லாமல் ருசிக்காகமட்டும் பகணங்களையுண்பதும் பிசகுகளாம். இக்குற்றங்களை நீக்கிக்கொள்ளவேண்டியது முக்கிய கடமை.

குறிப்புகள்.

ஸத்விஷயத்தில் பாடுபட்டுழைப்பவர்களுக்கு விரோதமாய் காலத்திற்குகந்தபடி கடருளும் சோதிப்பதியற்கையே. அதற்காகப் பின்னடையலாமா? ஆகையால் குறித்தபடி எவ்வித கஷ்டத்திலேயாவது யடைந்து பொதுநலதத்தைக்கோருதல் சிரேயஸ்கரம்; கடவுளும் துணை நிற்பர். உலகத்திலே ஒரு மனுஷ்ய ஜனனத்திற்கு அத்தியாவஸ்யகரமாய் வேண்டியது நற்கருமங்கள். அதைய தாமொருவர் இடைவிடாதும் சிரமம் பாராட்டாமலும் அதிக ஊக்கத்தோடு இயற்றுவிப்பார்களோ அன்னவர்கட்கு இகபரசாதனம் உண்டாகுமென்பது நாம் சொல்லாமலே எற்பட்டவை. ஒரு அரிய காரியத்தை முடிக்க முயற்சிப்போமேயாகில் அதற்கு ஸ்வதேச நாகரீகர்களின் நேசமும் போதுமான திரவிய சகாயமும் இருந்தாலன்றி நடைபெறுதென்பது திண்ணமல்லவா? இவையனைத்தையும் பிரதமத்திலேயே எற்படுத்திக்கொண்டு ஒரு விஷயத்தை முடிக்க ஆரம்பிப்பதே அறிவுடையோர்க்கழகு.

ஆரியரும் ஆங்கிலேயரும்.

நம் தேச வாசிகளுக்கு தங்கள் தங்கள் ஜாதி, மதம், பாஷை, நாகரீகம், இதுகளெல்லாம் வித்தியாசப்படுதற்குக் காரணம் மேல் நாட்டாரின் சம்சர்க்கமென்பது எலோருக்குந் தெரியுந்தானே. ஆனல் அன்னவர்கள் நம் ஆரியரோடு கலந்து சில நூற்றாண்டுகளாகப் பழகியிருந்தும் தங்கள் ஸ்வதேச வழக்கத்தை விட்டார்களோ? இல்லை. ஏன்? தங்கள் இராஜ்ஜிய நாகரீகத்திற்கு அவச்சொல் லுண்டாகுமென்றுதானே? அதனலே காமெல்லாம் அவர்களைப்பூசிக்கவும் அன்னேர் நம்மைத் தூஷிக்கவும் காலம் வாய்த்தது. அதைக்கண்டாவது இன்னேருக்கு வெட்கமுண்டா? அதுவுமில்லை. எல்லப்பலெக்க ஏகலெக்க யென்ற நினைத்து மேன்மேலும் நாசமடையக்கணம் கட்டியிருக்கும் நந்தேயவாஸிகள் இனியேனும் சீர்திருந்தி நற்கீர்த்தியுடன் வாழ முன்வருவார்களாக.

ஐந்துவிரோதிகள்.

அறியாமை, அகம்பாவம், அபிமானம், அருயை, ஆசை, ஆகிய ஐவரும் நமக்கு விரோதிகள். இவர்களை நம்மிடம் வரவொட்டாமல் தூரத்தினல் ஆத்ம ஞானத்தையடையலாம். அறியாமையானது இன்னது நித்யம் இன்னது அநித்யம் என்றும், இன்னது பிரயோஜனம் இன்னது அப்பிரயோஜனமென்றும் தெரிந்துகொள்ளாதிருப்பது. அகம்பாவம் என்பது எல்லாம் தான் செய்வதாயெண்ணி கர்வமடைந்து ஈஸ்வரனை மறப்பது. அபிமானம் என்பது மனைவி மக்கள் பொருள் முதலிபவற்றில் பிரீதிவைப்பது. அருயை என்பது பிறருடைய பெருமை பொருள் சேர்த்தி இவற்றைக்கண்டு வெறுப்படைவது. ஆசை என்பது பிராணனைக்காப்பாற்றவேண்டுமென்றும் இவ்வுலகத்தில் நெடுநாள் வாழவேண்டுமென்றும் விரும்புவது. மேற்போக்த ஐந்து விரோதிகளையும் ஜெயிப்பவனே முக்தியடைவதற்கு யோக்கியனவன்.

மனிதன்.

பூர்வத்தில் நாமியற்றிய தீவினையின் சேஷத்தால் இப்பிறவி எடுக்கலானேம். என்றாலும் அத்துடன் நாமியற்றிய புண்ணிய விசேஷத்தினல் "அரிதரிது மானிடராதலரிது" என்றபடி பெறுதற்கரியதான இந்நரஜென்மம் கிடைக்கப்பெற்றோம். ஆகலான் வாணாள் வீணாளாக்கி இப்பிறவியால் காமடையக்கூடியதாயிருக்கும் நலங்களை அடையப்பெறுது மோசம்போகாமல் முன்னெச்சரிக்கையுடனிருத்தல் அவஸ்யகரம். இலோகசாதனத்திற் குரியவைகளைத் தேடிக்கொள்ளுவதைவிட பதின்மடங்கு பரசாதகமான கருமங்கள் இன்னதென்றுணர்ந்து அதில் சிரத்தை வகித்து அதின்படி இயற்றுதல் வேண்டும். மனிதர்கள் கற்கவேண்டிய சகல விஷயங்களிலும் வேதாந்த விஷயமே சிறந்தது. அவ்விஷயங்களைக் கற்பதால் திவ்ய ஞானமுண்டாகும். பரலோக சுகமும் சித்திக்கும். மனதிற்கு ஆனந்தமும் புத்திக்குத் தெளிவும் ஏற்படும். மீன்குட்டிக்கு நீச்சும் சுந்தரியனுக்கு சண்டையும் வைசியனுக்கு வியாபாரமும் கட்டுவனுக்குத்தாளமும் வேசிக்கு மினுக்கும் எப்படி சுபாவமாகவே அமைந்திருக்கின்றனவோ அதுபோல் ஸத்துலத்தில் ஜநித்த உத்தமர்கட்கு வேதாந்த விஷயங்கள் இயற்கையாகவே தெரிகின்ற

னவாதலின் அவர்கள் மூலமாகவே எல்லோரும் கேட்பது முறைமை. அதாவது பெரியோர்கள் மூலம் ஞானவிஷயங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்பது கருத்து.

கலாப்பிரகாசனி.

மூன்றுவது அத்தியாயம்.

சர்வலோக சரண்யரின் செயலை யறிந்தார் யார்? எனக்கும் இப்பேர்ப்பட்ட காலம் வந்ததல்லவா? பாராளுமன்னன் பாலகனுய் யான் பிறந்து மென்ன சுகத்தையனுபவித்தேன்? என்னைப்போல துன்பமனுபவித்தவர்கள் இந்நிலமிசை எவருமிரார்! இத்த சொற்ப காலத்திற்குள் எவ்வளவு கஷ்டங்களுக்காளானேன்! இளமையிலாவது இன்புற்றிருந்தேனு! அதுவுமில்லை. அக்காலம் விதேச விஜ்ஞானங்களையறிவான் கருதி புவன சஞ்சாரம் செய்ய விருப்புற்று ஸோதரருடன் பரதேச சஞ்சாரியாய்த் திரிந்தேன். அளவற்ற அல்லல்கட்காளாகி இறுதியில் தேசயாத்திரையை முடித்துக்கொண்டு ஸ்வதேசமடைந்தேனே! அப்போதாவது சுகரத்திலிருந்து நலமடைந்தேனு! சுபசெய்தியைச் செவியுற் ருனந்தித்தேனு! இல்லையே! தந்தை ஆழியில் அமிழ்ந்ததாயும் அது கேட்ட அன்னை அடவியிற்புக்கி மறைந்ததாயுமுணர்ந்து ஆற்ருெணுத் துயரமெய்தினேன். பின் நகரிலிருக்க மனமொப்பாது தாய்தந்தையரைக் கண்டுபிடிக்க வந்து காசினியெல்லா மலைந்து இலவங்காத்த கிளிபோலாகி யொருநாள் பிராதக்காலத்தில் கானகமார்க்கம் வருமுழி இடையிற் குறுக்கிட்ட காளுருண்டினை நீக்கிக்கடந்து செல்லுங்கால் அந்தோ எனது ஸோதரரான வித்தியாதரர் நதியிலமிழ்ந்து மறைந்து போனர். அனேவரையும் பறிகொடுத்தது போதாதா! எனது ஸோதரரும் எனை விட்டுப்பிரிபவேண்டுமா! எனக்கும் இப்பேர்ப்பட்ட காலம் வாய்த்ததா! நான் பட்ட துன்பத்திற் கெல்லையுமுண்டா! ஐயோ! ஜெகதீசா! யான் அனுபவிக்கும் இன்னலை உன்னையன்றியாரறிவர்! எனது தரித்ர்ஷ்டம் இருந்தவாறு என்னே! என்னே!! வீணில் விசனப்பட்டுப் பயனென்ன? ஏதோ ஒருவாருக இவ்வாக்கியத்தை முடித்துவிட்டேனெனினும் என் மனங்கேட்கவில்லையே! பிரிந்து முறைந்தாரைப் பிற்றை நாட்களிலாயினுங் காணவியலுமா வெனத்தவித்த வெனை ஸகோதரா நீயுமா தனித்திருக்கச் செய்து விட்டுப் பிரிந்தாய்!

"மெத்த மிடியுற்றவருக்கொரு பொழுதேனுஞ் சுகமுண்டென்பர் மெலோரத்தினையு மென் பொருட்டிற் பொய்யெனவே தீர்க்கமுட னறிந்தேனந்தோ பத்தியுதா யெமையின்ற தந்தை யன்னையைத் தேடப் படர்கானத்திற் சித்தமுடன் வருமாற்றிற் ருனேவினையே பறிகொடுத்துத்தவிக்கின்றேனே!"

இனி செயற்பாலதென்னே? இற்றைப்போழ்தில் தற்செயலாய் இந்நகரடைந்தேன். இந்நன்னகரின் நாமதேயமியாதோ? நகராதிபன் எங்குளனே? உணர்கிலேன். இப்புராதனவாஸிகள் நாகரீகர்களாய் இலங்குகின்றதையும், இப்புராலங்காரத்தையும், நினைத்துக்கொண்டால் பழய ஞாபகம் வருகின்றது. நானிலத்தில் சரஜென்மமெடுத்து நானுகஷ்டங்களுக்காளாகி நாசமடைந்தவன் நானெருவன்ருன்! எல்லாம் ஈஸ்வராக்ஞை. சூரியாஸ்தமனமாய்விட்டது. இருளும் நெருங்கியது. இந்நகரின் வர்த்தமானங்களையறிந்துவரலாம். இஃதென்னே? கயிறென்று தொங்கவிடப்

பட்டிருக்கின்றதே! இக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலேறிப்பார்க்கின்றேன். சுத்தரபுவதியொருவள் பயனுதையாய் சுகநித்திரையிலிருக்கின்றாள். எதோ சப்தம் ஒன்று வருகின்றதே! அஃதென்னவெனக் கவனிக்கலாம். ஓகோ! வந்தது மோசம்!! இவண் நித்தரித்துக்கொண்டிருக்கும் ரமணியை சிறைபிடித்துக்கொண்டேக 30 கள்ளர்கள் கீழே தொங்கவிடப்பட்டிருக்கும் கயிற்றினுதவியால் இவ்விடத்திற்கு வருவார்களெனவும் அரண்மனை பரிஸாரகரிருவர் அவர்கட்கு அந்தரங்க மித்திரர்களாயிருப்பதாயும் அவ்வுபரிஸாரகர்கள் தான் இவ்விடம் பேசிக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இவ்விருவரும் கீழே இறங்கிப்போய்விட்டனர். இவண் எவருமில்லை. இதேது கயிறு ஆடுகின்றதே! சோரர்கள் கயிற்றைப்பிடித்துக் கொண்டு இவ்விடம் எறிவருகின்றனரெபோலும். இக்கள்ளர்கள் இவ்வளவு சீக்கிரம் கயிற்றினுச்சியை சமீபித்துவிட்டார்களே! இவர்களனைவரையும் ஒரு யுக்தியால் ஒருங்கே மரிக்கும்படி செய்கிறேன். எனது மோசனை முடிவடைவதற்குள் திருடர்கள் வந்துவிடுவர்போலிருக்கின்றதே! இதோ வந்தேன். கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டேன். சோரர்களனைவரும் கீழிருந்த கற்பாறையிற் முக்குண்டியிர் நீத்தனர். இனி சுந்தரி சயனித்திருக்கும் இடத்திற்குச்சென்று அன்னவளுக்கு நிகழ்ந்த விஷயங்களை யறிவிக்கின்றேன். எங்கே அங்ஙனையைக்காணேம்! இவ்விடத்திற்றானே சயனித்திருந்தாள். அதற்குள் எப்படி மறைந்தாள். மனம் பலவாறு எண்ணித்தவிக்கின்றதே! ஒருசமயம் சோரர்களெவரேனும் எனனையறியாது இவண் போந்து சிறைபிடித்தேகினரோ. ஒன்று முணர இயலவில்லையே!

இதென்ன சப்தமொன்று கேட்கிறதே! அவ்விடத்தில் பிரகாசிப்பதென்ன? இஃதென்ன பயங்கர உருவம்? போய்ப் பார்க்கின்றேன்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

விதேஸ ஸஞ்சாரார்த்தமாய் யான் எனது ஸ்வதரவீட்டைப்போந்து ஈராண்டுகட்கு மேலாகின்றன. எனது தனயை வனஸ்லோஸனி யும் எனது அன்பிற்குரிய பிரியை சுகுணமாலினியும் யான் வராத்தையுணர்ந்து சோகாகுலித்தனரோ! எக்கெதியாயினரோ! ஒன்றுமுணர்கிலேன். இனி உங்களைக் காண்பதெப்பிறப்போ! எவ்வுடம்புகொண்டோ! எவ்விடத்திலோ! என்னுளிலோ! தெரிகிலேனே! ஐயோ! ஜெகதீசா! எங்கொளித்தாய்? ஆற்றொணாத் துயரையா எனக்களித்தாய்? என் செய்வேன் யான்!

"தேச சஞ்சாரஞ் செய்யத் திறங்கொடு வந்த வென்னை
மாசறு கள்ளர் கொள்ளை வழிதனி லடித்துக் கொண்டார்
நேசமார் மகளும் பெண்மை நினைத்தெனை மனதுவாடித்
தேசுறு நகரத்தன்னிற் றியங்கியே மாண்டிட்டாரோ!"

இவ்விலவுலகில் இன்பத்தை யனுபவிக்கவேண்டுமென்று கொள்ளும் அபேக்ஷையில் கோடியிலொருபங்காகிலும் துன்பத்தில் வைப்பதில்லை. துக்கம் என்ற வார்த்தையைக் கேட்பதற்குக்கூட எவரும் இஷ்டப்படார். அங்ஙனமிருப்பினும் அவரவர்கட்கு அந்தந்தக்காலங்களில் அந்தந்த இடத்தில் விளையவேண்டியவைகள் அவர்கள் விரும்பினும் விரும்பாவிடினும் வந்தேயடைகின்றது. இப்புவியில் நாமனுபவிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்

இலக்ஷக்கணக்காகப் பொருளீட்டிசேகரித்து வைப்பினும் நாமியற்றிய வினைக்கீடாக நமக்குக் கிடைப்பனவற்றிற்கு மேலாக அனுபவிக்கவேண்டுமென்று எவ்வளவுதான் முயற்சித்தாலும் முடியுமா?

"ஒட்டைப் பாண்டத் துதக மொரு பொருளுக் குதவாம லுலையு மாகம்
கோட்டமுறு காற்றடைத்துத் துரித்தியிதைக்கோரிமனக் கொள்வதென்னே
தேட்டமலி மறுமைப்பல ஞென்றேதா னென்னுளுந் திகட்டா வின்பம்
நாட்டமிதிலென்ன விந்த நானிலத்தாசை யென்னநஞ்சுதானே!"

கமலாபுரிக் கிறைவனுயிருந்தேன். பலவற்றையும் பெற்றனுபவித்திவ்விய க்ஷேத்திர யாத்திரார்த்தமாய் வெளிப்பட்டேன். இடையில் வங்கசோரர்களால் துன்புற்று அனேத்தையுமிழந்து அழியையும் நீந்திக்கடந்து இற்றை ஞான்று இவ்விடவியின் மார்க்கமாபோந்து தேற்றவாரொருமினித் தேம்பித்தேம்பியே சதறுகின்றேன். இன்றுடன் அன்னமருந்தி தசதினங்களாகின்றன. என் செய்வேன். சற்று நேரத்திற்கு முன்னர் இக்காணகமார்க்கம் தீவட்டிகளோடு சென்றவர்களையாவது கேட்டிருக்கலாம். பயத்தால் பீடிக்கப்பட்டிருந்தது காரணமாக அதற்கும் என் மனம் துணிபவில்லை. கொஞ்சம் உதகமாவது கிடைப்பின் நலமாயிருக்கும். இக்காளிருளில் எங்கு சென்று ஜலமருந்துவேன்! ஐயோ! இஃதென்ன! என்மீது விருக்ஷத்தின் கிளைதொன்று வீழ்ந்ததே! இதை எடுத்தெறிந்துவிட்டு எழுந்திருப்பதற்கு ஆற்றலுமில்லையே! மூர்ச்சையும் வருகின்றதே! மரணமும் சமீபிக்கின்றனவோ! நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

நல்லுரை.

(1) இராக்காலத்தில் ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களைப் பார்கின்றீர்கள். ஆனால் சூரியோதயமானபிறகு அவைகள் தென்படுகிறதில்லை. அதனுலேயே பகற்காலங்களில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் இல்லையென்றுரைக்கலாமா? ஆகையால் ஓ மனிதனே அக்ஞானத்துடனிருக்கும் நாட்களில் நீ கடவுளை பாராதிருக்கிறாய் என்ற காரணத்தினுலே கடவுள் இல்லையென்று சொல்லாதே. தண்ணீரை ஒரு வெறும பாத்திரத்தில் கொட்டினால் ஜல ஜலவென்ற சப்தம் உண்டாகின்றது. பாத்திரம் நிறம்பினுல் அந்த சப்தம் உண்டாகிறதில்லை. அதைப்போலவே கடவுளைத் தரிசிக்காத மனிதன் வீண் வாக்குவாதம் செய்கிறவனுயிருக்கிறான். அவரை தரிசிப்பானுனலோ எல்லா அகங்காரத்தையும் விட்டுவிட்டு மௌனமாய்பிரம்மானந்தத்தை யடைகிறான். (2) குரங்குக்குட்டி தன் தாயாரைத்தழுவி அணைப்பிடித்துக்கொள்ளுகிறது. பூனைக்குட்டியோ அந்தப்படி தாயாரைத் தழுவிக்கொள்ளமாட்டாமல் தாயார் சமீபத்திலிருக்குமபோது மாத்திரம கொஞ்சியழுகிறது. குரங்குக்குட்டி தன் தாயாரை பிடித்துகொண்டிருக்கிற பிடி நழுவிவிட்டால் கீழேவிழுந்து துன்பப்படுத்திக்கொள்ளுகிறது. எனெனில் இக்குட்டி சொந்த பலத்தைநம்பிக்கொண்டிருப்பதினுல்தான். பூனைகுட்டியோ அப்படி மோசமபோகிறதில்லை. ஏனெனில் தாயாரே அதை ஒரு இடத்திலிருந்துமற்றொரு இடதிற்குக்கொண்டுபோகிறது. சுயநம்பிக்கைக்கொள்ளுவதற்கும் பகவானுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டிருப்பதற்கும் உள்ள வித்தியாசம் இதுதான். (3) ஒருவன் கடவுளை எப்படி நேசிக்கவேண்டும்? கற்பாலங்காரியான உதம பதினி யொருவள் தன் கணவனை எப்படி நேசிப்பாளோ அதைப்போலவும், அதிக கேவலமான உலோபி தான் சேர்த்து வைத்த திரவியத்தை எப்படி நேசிப்பானே அதைப்போலவும், பத்தன்யனப் பூர்வமாய் பூரணமனதுடன் கடவுளை நேசிக்கவேண்டும்.

க ல் வி .

கொட்டை முட்டை பிந்து வேயர்வை யென்னும் நால்வகை யோனி எழுவகைத்தோற்றம்எண்பத்து நான்குலக்ஷஜீவஜெந்துக்களுள் உத்கிருஷ்டமான மானிட சரீரமெடுத்தவர்கட்குக கல்வியே பிரதான ஆபரணமாயிருத்தலால் அஃதை கைவிடாது கற்றல்வேண்டும். அங்ஙனமல்லாது முதியோரால் ஆர்ஜிக்கப்பட்ட பொருள் நமக்கேகாளமாயிருக்க நாமேன் கல்வி கற்கவேண்டுமென்றும், நமக்கேன் உத்தியோகமென்றும், பேசி தம் வேலைக்காரர் செய்யுந்திருட்டையுங் கணக்கர்கள் செய்யும் புரட்டையுங்கண்டுபிடித்துத் தண்டிக்கக்கதியற்றவராய் டம்புத்தினும் வேசிக்கும் கட்டுடியர் முதலான பஞ்சமாபாதகர்கட்கும் பெருஞ்சம்பளவிட்டுக் காலியாய்ப் போனபின்பு ஜீவனத்துக்கேதுவின்றி "ஐயோ தெய்வமே! நானென்னசெய்வேன்! புலியகந் தள்ளுகிறதே! காலபின்னுகிறதே! கண் புஞ்சடைகிறதே! காவரளுகிறதே! வாழ்ந்தகாலத்தேனு அன்ன சத்திரம் முதலாகிய பரோபகாரஞ் செய்தேனு! படித்தாவதிருந்தேனு! கூலிவேலைசெய்யவாவது ற்றேனு! ஒன்றுக்குமுதவியில்லாது போனேனே! என்று கண்போனபிறகு சூரிய நமஸ்காரம் செய்யத்தலைப்பட்டு கஞ்சிக்கும் கூலுக்கும் தாளம்போட்டுக் கெஞ்சித்திரிந்து பலர் தூஷிக்கக்கேட்கின்றனர், அந்தோ எனை பாபம்,

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

என்னும் ஆன்றோர் நீதியைக்கருதாது நிரக்ஷரகுக்ஷியாய்ப் படிப்பென்னும் வாசனையறியாத காசியாய் தெய்வத்திருவிளையாடல் கேட்காத காதனும் அன்னவர் திருமந்திரம் ஜெபிக்காத வாயனும் அருள் பொங்கி நீர்தத்தும்பாக்கண்ணனுய் கடவுளைப்பணிந்து கூப்பாத கையனும் இகத்திலும பரத்திலும் சுகத்தையேயடையாது எடுத்த ஜென்மம பாழ்படச்செய்துகொள்ளுகின்றனர். கடவுளின் திவ்ய கல்யாண குணங்களை யறிவதற்குக் கல்வியே காரணம். அக்கல்வி சேர சோழ பாண்டியர் காலத்திலடைந்திருந்த அபிவிருத்தியையும் தற்காலம் குடத்துள் விளக்காயிருப்பதையுமறிந்து பிரஜோபகாரமாய் மதுரைப்பதியில் நாட்டிய சேந்தமிழ்க்கலாசாலையைப்போல ஒவ்வொரு பிரதான நகரங்களிலும் ஸ்தாபிக்க கருதுவரேல் நம்மந்தியாதேசம் எவ்வளவோ முன்னுக்கு வருமென்பதிற்றடையில்லை. ஆகலான், கனவான்களிதைக்கவனிதது "பலதுளிபெருவெள்ளம்" என்பதா யுதவிபுரிந்து நந்தமிழ் மாதைக்காத்து ரக்ஷிக்குமாறு கோருகின்றேம்.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

ருஷிய ஜப்பானிய யுத்தம்.

இன்னகாலத்திற் முன் முற்றப்பெறுமென்று கூறுதற்கியலாதிருக்கும் இந்த யுத்தம் தொடங்கி ஆறுமாதங்கட்கு மேலாகின்றன. இதுவரையிலும் வந்திருக்கும் தந்திகளைக் கவனிப்பின் ஒவ்வொரு யுத்தத்திலும ஜப்பானியர்களே வெற்றி பெற்றார்களென்றும், ருஷியர்களுக்குப் பிரதிசண்டைகளிலும அபஜெயங்களே கிடைத்திருகின்றன வென்றும் தெரியவருகிறது. லோவர் யுத்தத்தில் லார்ட் ராபர்ட்ஸ்விடம் ஜெனரல் பிராஞ்சே அகப்பட்டுக்கொண்டு முழித்ததுபோல் ருஷியசேனதிபதியாகிய ஜனரல் குரோபாட்கின் மஞ்சூரியாவில் மூன்று பக்கங்களிலும ஜப்பானியர்களால் வளைக்கப்பட்டு தப்பித்துக்கொள்ள வழியின்றி திகைத்துக்கொண்டிருக்கின்றார். ருஷிய பத்திரிகைகளும் ஜப்பானியர்களிடம் ஜெனரல் குரோபாட்கின் அகப்பட்டுக்கொள்ளுவாரென்றே கூறுகின்றன, வெகு சிரமத்துடன் ருஷியாவிலிருந்து யுத்த தந்திர நிபுணரென மதித்து பொறுக்கியெடுத்தனுப்பப்பட்ட மாற்றரசர் கருவறுத்துப்பகை முடிக்கும் இணையற்ற ரணசூராகிய இந்த சேனுதிபதியின் கதியே இப்படியானுல் இவர் கீழடங்கியுள்ள மற்றவர்களின் முடிவைப்பற்றிக் கூறவேண்டியதில்லையே? ருஷியாவில் தேசாபிமானம் என்பதே அநேகருக்கு இன்னதென்று தெரியாது. ருஷியர் செலுத்தும் கொடுங்கோலைச் சகிக்கமுடியாமல் பலர் தங்களுக்கு இன்னலே விளைவிக்கும் அதிகாரிகளை த்வம்சம் செய்யத்துணிவற்று ருஷியர்களின் அரசை வெறுத்து இராஜவைரிகளாய்க்கினம்பியுள்ளார். அவர்களால் சென்ற சூன், சூலை, இரண்டு மாதங்கட்குள் மூன்று பெரிய ருஷிய உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டனர். இதனல் ருஷிய பிரஜைகளுக்கும் இராஜாக்கத்தாருக்குமுன்ள ஒற்றுமை செவ்வனே விளங்கும். ஜப்பானிய நாட்டிலோ தேசாபிமானமென்னும் பயிர் செழித்தோங்குகின்றது. கேவலம் கேசெள்கூட தங்கள் தேகத்தை விற்று யுத்த நிதிக்குதவுகின்றனர். இளைஞர்களெல்லாம் தங்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பமனுப்புகின்றனர். அத்தேசத்திய மாதர்கள் யுத்த சன்னத்தராய்ச் சென்ற தத்தம் கணவர்களை சந்தோஷத்துடன் வழிவிட்டனுப்புவரென்பர். விருத்த ஸ்திரீ யொருவள் தானிருப்பதால் தன் தனயன் இராணுவத்தில் சேரப்பின்வாங்குகிருனென்றுணர்ந்து தற்கொலை புரிந்து கொண்டனளாம். இளைஞனும் உடனே இராணுவத்தில் சேர்ந்துவிட்டானும். என்ன தேசாபிமானம்! போர்ட் ஆர்தரை வெகு கடுமையுடன் ஜப்பானியர் சூலை 24உ முதற்கொண்டு தாக்கி வருகின்றனராயினும உயிர்ச்சேத மதிகமுண்டாகுமேயென்று ஜப்பானிய சக்கரவர்த்தி பரிதபிப்பதால் போர்ட் ஆர்தரைக் கைப்பற்றும் முயற்சிகன்சற்றுத் தாமதமாகவே நிகழ்வதுகொண்டி இன்னும் ஜப்பானியர் கைவசமாகாமலிருக்கின்றது. ஆயினும் அதிசீக்கிரத்தில் போர்ட் ஆர்தரைக் கைப்பற்றிவிடுவரென்ற துணிந்து கூறுவதற்கு பல காரணங்களிருக்கின்றன. போர்ட் ஆர்தர் ஜப்பானியர் கைக்குள்ளாவது நிமிஷக்கணக்கிலிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இத்துறைமுகப்பட்டணத்தின் மொத்த விலை மதிப்பு 40 கோடியே 80 லக்ஷம் பவுனும். ஜப்பானியர் பக்கத்தில் இங்கிலண்டும் அமெரிக்காவும், ருஷியர் பக்கத்தில் பிரான்ஸும் ஜர்மனியும், சேர்ந்து ஆக 6 இராஜியங்களுக்கும் பெரிய யுத்தமுண்டாகி 1906ஆம் கடைசியில் முடிவடையுமென்றும் இறுதியில் பிரிட்டிஷாரும் அவர் பக்ஷத்திலிருந்தவர்களுமே வெற்றியடைவரென்றும் ஜோசியர்ஒருவர் முன்வந்துரைப்பது எம்மட்டில் உண்மையோ!

தியேத்து படையனுப்பு.

எடுத்தகாரியத்தை முடிக்காமல் விடுகிறதில்லையென்று கங்கணங்கட்டியபடியே பிரிட்டிஷார் இடையில் நேர்ந்த கஷ்ட நிஷ்ரேங்களையெல்லாம பொறுத்தக்கொண்டி கடைசியில் திபேத்தின்முக்கிய பட்டணமாகிய லாஷா போய்ச்சேர்ந்து விட்டனர். பிரிட்டிஷாருக்கு ஆகார வசதிக் குறைவொன்றுமில்லையென்றும் சேகிரத்தில் சமாதானத்துக்கு வருவாரெனவும் சொல்லப்படுகிறது. டிபெட்டர்கள்பிரிட்டிஷார்களை ஏமாற்றிவிடலாமெனவும்கஷ்டநஷ்டநாமலே தப்பித்துக்கொள்ளலாமெனவும் தங்களிஷ்டப்படியே அவர்க

வே ஆட்டிவைத்து சாதகமான உடன்படிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வாமெனவும் மண்பால் குடிக்கிறார்களாம். பிரிட்டிஷாரோ அப்படி இப்படி என்று காட்களை கழித்துக்கொண்டு போவர். கடைசியில் சமாதான உடன்படிக்கை நிறைவேற இன்னும் எத்தனை நாட்கள் செல்லுமோ தெரியவில்லை. இதற்கென்று குறிப்பிடப்பட்டிருக்க 1300000, பவுனுக்கு மேலாகவே சிலவாகக்கூடுமென்று மதிக்கஇடந்தருகிறது. இவ்வளவுதொகையையும் எழை இந்தியாவின்மீது சுமத்தி அதன் கூன்முதுகை ஒடித்துவிட முயற்சிப்பது நியாயந்தானு?

விஞ்ஞை விசித்திர விஷய விளக்கம்.

லண்டனுக்கு வந்திருக்கும் லோபீரியா தேசத்து இளைஞரொருவர் தம்மிடமிருக்கும் செடியிலுள்ள இலை ஒன்றை சாப்பிடும் மனிதனுக்கு இருக்கும் ஆயுளோடு 10 முதல் 20ஞ் அதிகப்படுமென்றும் ஒரு இலையின் விலை 100 முதல் 500 பவுண் வரையிலுமிருக்கின்றதென்றும்கூறுகின்றாராம். பூஞ்வில் தனது எஜமானரான ஒரு ஐரோப்பிய பிரபுவுக்குத் தேவையாயிருக்கும் குதிரை ஒன்றை கிரயத்துக்கு வாங்க வந்திருப்பதாய் அறிவித்து தான் பொறுக்கியெடுத்த குதிரையின் வேகத்தைப் பரீக்ஷிப்பதாய்க்கூறி அஸ்வத்தின்மீது ஆரோகணித்த மகம்மதியனொருவன் குதிரைக்காரனின் சொந்த க்காரரை ஏமாற்றிவிட்டு குதிரையோடு அப்படியே போய்விட்டானும். ஆஸாமில் ஒருவன் தான் ஆக்பூர் நவாபின் வேலைக்காரனென்றும் நவாபின் பத்தினிக்கிருக்கும் அசௌக்கியத்தை வந்துபார்க்க தினமொன்றுக்கு 50ரூபாய் தருவதாயும் ஒரு சர்ஜனிடம் புகன்று நவாபினிடம் வந்ததுபோலொரு கடிதத்தையும் தந்து அவரையனுப்பிவிட்டு அவ்விடத்திலேயே அன்ன மருந்து பிறகுபல கடைகளுக்கும் சென்று அங்குள்ளவர்களையும் மயக்கி ஆகவேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு ஓடத்தயாராயிருந்த சமயம் மேரசம் போன சர்ஜன் திரும்பி இல்லமடைந்து இவனைக்கண்டுபிடித்து அதிகாரிகளிடம் ஒப்புவிக்க அவன் விசாரிக்கப்பட்டு வருகிறானும். கல்கத்தாவிற்கடுத்த ஹரினு எனுமிடத்தில் ஒரு பதிவிரதாங்கனை பகவத் பக்தியின் மகிமையால்தனது பதிக்கிருந்த நேத்திரஹீனத்தை ஔஷதப்பிரயோகம் ஒன்றுமில்லாமலே நீக்கினளாம். ஜ்வரம், பிளேக், முதலியன சிலவிஷப்பூச்சிகளால் உண்டாவதுபோலவே அன்ப காதல் உண்டாவதும் ஒரு வகை விஷப்பூச்சிகளாலென்றும் அப்பூச்சிகளையழித்துவிட்டால் அவை யிரண்டும் அற்றுப்போகுமென்றும் ஒரு டாக்டர் கூறுகிறார்.

விதேஷ வர்த்தமானங்கள்.

இருட்டுக்குற்றங்களொன்றும் நடவாத நாடு அயிஸ்லண்டாம். 5 அடி 4 அங்குலத்திற்குமேல் உயரமுள்ள ஜப்பானிய சோல்ஜர்கள் இடையாதாம். சீனர்களின் தல்ல அபிப்பிராயத்தையடையலாமென ஆசைகொண்டு சீனா பாஷையில் பத்திரிகையொன்று பிரசுரஞ்செய்ய ருஷியர்கள் ஆரம்பித்துளராம். ஸ்பெயினில் பிக்ஷாடனம் செய்பவர் 19,227பேர், அவ்விடத்திற்கும் பல பாகங்களில் பிச்சைக்காரர்களுக்கு லேசென்சு ஏற்படுத்தியிருக்கின்றனராம். லண்டனில் ஒரு ஆங்கிலேய மாது இரட்டை இரட்டையாக 15 தடவை 30 குழந்தைகளையுடன் ஒற்றையாக 2 குழந்தைகளையும் பெற்று சுகஜீவியாயிருந்து சினைஞள் முன்னர் காலஞ்சென்றனளாம். வர்த்தா பத்திரிகைகள் அதிகம்உள்ள தேசம் ஜர்மனியாம். புகையிலை உபயோகிப்பவர்களை பிளேக் பெரும்பாலும் அணுகாதென் றொருவ ருரைக்கின்றார்.

பிரஜாபந்துகூடலன்.

பருவம் 1. } திருச்சி 1904ஹ்ரு அக்டோபர்மீ { இலக்கம்7

நம்மவர்கள் முன்னுக்குவருவதெப்படி

இந்துதேசமானது பல நூற்றாண்டுகட்கு முன்னர் எனைய தேசங்களெல்லாவற்றிலும் உயர்ந்து கைத்தொழில் முதலியவற்றில் சிறந்து நாகரிகத் தேர்ச்சியடைத்து குன்றிவிட்ட வினக்கைப்போல் பிரகாசித்தது. அக்காலத்தில் இந்தியர்கள் விடாமுயற்சியுடையவர்களாய் தங்களுக்கு வேண்டியவற்றைத் தங்கள் தேசத்திலேயே உற்பத்திசெய்து மற்ற நாடுகட்கும் எற்றுமதியாக்கி வந்தார்கள். நாட்டில் ஜனங்கள் தேசாபிமானம், ஸ்வஜனாபிமானம், ஒற்றுமை, முதலியவைகளே வகித்தவர்களாய் மெய்வருந்த உழைத்து தேசோன்னதிக்குக்காரணர்களாயிருந்து வந்தார்கள். இந்தியர்களின் கைத்தொழில் பல இடங்களிலும் பரவி அவர்களால் செய்யப்பட்ட பொருள்களின் வேலைத்திறமை அரசர்கள் முதல் அனைவராலும் வியக்கற்பாலதாயிருந்தது. அன்னவர் அடைந்திருந்த கைத்தொழிற்றேர்ச்சியும் பெருமையும் சகலராலும் கொண்டாடப்பட்டு வந்தன. அக்காலத்தில் இவ்விந்தியா இருந்த சிறப்பைக்கண்டு வியந்தே ஆசையுற்று பலமன்னர்களும் படையெடுத்துவரலாயினர். இவ்வளவு உன்னத நிலைமையிலிருந்த நம்மனோர் தற்காலமிருக்கும் பயங்கர நிலைமையையும் இவ்விந்தியா யடைந்த தெதியையும் கேவலம் காடுகளிற் சஞ்சரித்து அநாகரீகர்களாய்த் திரிந்து வந்த ஆங்கிலேயர்களைச்சுட்டிக்காட்டி "அவர்களைப்போல" என்று உவமையாக எடுத்துக் கூறும்படி நேர்ந்த காலத்தையும், இந்தியாவின் கைத்தொழில்கள் மாண்டுபோன விதத்தையும் நினைத்துக்கொண்டால் எவர் தான் ஆற்றொணாத் துயரமெய்தாதிரார்? ஐயோ! இப்படி கைத்தொழில்களெல்லாமிழந்து உழவுதொழில் இழவு தொழிலாகி வறுமையால் வாடி அடிக்கடி பஞ்சத்திற்காளாகித் துன்புறவேண்டிய காலமும் நம்மவர்சட்கு சேர்ந்ததல்லவா? இங்ஙனமாயதற்கு நம்மவர்கள் கைத்தொழில்களை அலக்ஷியித்து தன் நயம் பாராட்டும் குணம் மிகுந்து ஒற்றுமையின்றி சோம்பலே மேற்கொண்டிருந்ததும் கற்றுணர்ந்தவர்கள் சேவாகாபீவித்தியில் மனதைச்செலுத்தி தேச நன்மையைக் கருதாதொழிந்ததுமே காரணம். மிகவும் கேவல நிலைமையிலிருந்துவந்த "ஜெப்பான்தேசம்" இச்சொற்பகாலத்திற்குள் எவ்வளவு அபிவிர்த்தியடைந்துவிட்டது? அதைப்பார்த்தாகிலும் நம்மவர்கள் முன்னுக்கு வரவேண்டிய மார்க்கத்தைத் தேடிக்கொள்ளலாகாதா? இந்தியா எவ்வளவுதான் ஏழைதேசமாயினும் தனிகர்கள் ஒருவருமில்லையென்றுசொல்ல நியாயமில்லையே. நமது நாட்டில் எத்தனையோ தனிகர்க ளிருக்கின்றார்களே? இவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து தேசாபிவிர்த்திக்குரிய விஷயங்களைவ

னித்து நமக்கு தேவையான சாமான்களை நமது தேசத்திலேயே உண்டாக்கி சுதேச கைத்தொழில்களை ஆதரித்து அபிவிர்த்தி செய்யலாகாதா? வித்தியாபிவிருத்திக்கும் ஞானாகத்தோர்ச்சிக்கும் தேசோன்னதிக்கும் காரணமாயிருப்பது காஞ்சிதம் என்பதில் தடையென்னே? இவ்வின்றியமையாத வஸ்துவை செய்வதற்குவேண்டிய பொருள்களெல்லாம் நமது தேசத்திலும் சாகுகளிலும் எவ்வளவோ இருக்கின்றது. அவைகளெல்லாம் கவனிப்பாரின்றி அழிந்து மண்ணுக்கிரையாகின்றன. இவைகளையெல்லாம் ஐரோப்பியர் தங்கள் தேசத்திற்குக்கொண்டுபோய் அவ்விடத்தில் அதைக் காஞ்சமாக மாற்றி ஒன்றுக்கு இருபதாக லாபம் வைத்து நமது நாட்டில் மறுபடி இறக்குமதி செய்து நமது தேசத்தின் பணத்தை வாரிக்கொண்டுபோய்விடுகிறார்கள். தமது தேசத்தில் காஞ்சிதம் செய்வதற்குவேண்டிய பலபொருள்களுமிருக்க அவைகளைக்கொண்டு உற்பத்தி பண்ணி தாமும் அனுபவித்து பிறநாடுகட்கும் ஏற்றுமதிசெய்து பயனடையாமல் சோமபலை மேற்கொண்டு தமது தேசத்திலிருந்து கோடிக்கணக்கான திரவியத்தைக் கொள்ளைகொடுக்கும் நம்மவர்களின் அறிவீனத்தை என்னென்போம்? வஸ்திரம் நெய்வதற்கு வேண்டிய பருத்தி நமது நாட்டில் விளைகிறது. அப்படியிருந்தும் பிறதேசங்களிலிருந்து வரும் வஸ்திரங்களையே அபரிமிதமான விலைகொடுத்து வாங்கி உபயோகப்படுத்துகின்றோம். நமது தேசத்தில் எவ்வளவோ தெங்குகள் உற்பத்தியாவதாயிருக்க இவைகளைக்கொண்டு பயனடைய முயற்சிக்காமல் இவ்விடமிருந்து கொண்டுபோகும் தேங்காய் எண்ணெயைப்பக்குவப்படுத்தி மெழுகு திரியாக மாற்றி மறுபடியும் இவ்விடமனுப்ப அதற்கு நாமகூர்கள் ஒன்றுக்கு நான்காக விலை தந்து வாங்குவது எவ்வளவு வியசனிக்கத்தக்க விஷயம்? நமது நாட்டில் இரும்பு முதலிய லோகங்கள் வேண்டியவரையில் அபரிமிதமாகக்கிடைப்பதாயிருக்க அவற்றால் சுதேசத்தில் தேவையான கத்தி முதலிய சாமான்கள் செய்துகொள்ளாமல் செய்தாலும் அவைகளை ஆதரிக்காமல் ஐரோப்பாவிலிருந்து சாமான்களைத்தருவிப்பது நம்மவர்கட்கேன் வெட்கமாகத் தோற்றவில்லை? பீங்கான் கண்ணாடி சாமான்கள் செய்வதற்குவேண்டிய பொருட்கள் நமது தேசத்தில் ஏராளமாயிருக்கின்றது. ஐரோப்பிய சாமான்களின் இறக்குமதியைத் தடித்து இவ்விடத்திலேயே இவைகளைக் கொண்டு பீங்கான் கண்ணாடி சாமான்கள் உற்பத்திசெய்து என் பயனடையலாகாது? ஐரோப்பாவிலிருந்துவரும் "பிஸ்கோத்" முதலிய உணவு பதார்த்தங்களை இவ்விடத்திலுண்டாக்க எந்த வஸ்துக்கள் இந்தியாவில் அகப்படாமற்போயிற்று? காஞ்சிதபென்சல், சிலேட், பொத்தான், முதலிய உபயோகரமான பலவற்றையும் இந்தியாவிலேயே உற்பத்திசெய்யக்கூடாதோ? குடைகள் பொம்மைகள் முதலியவற்றை இன்னும் அபரிமிதமாய் உண்டாக்கி பிறதேசத்தாரின் சாமான்களுடைய இறக்குமதியை என் முற்றிலும் தடுக்க வகை தேடக்கூடாது? அனாவசியமான சாமான்கட்குப் பணத்தைக்கொட்டி வீடு முழுதும் நிறப்புவதாலுண்டாகும் பிரயோஜனமென்னே? ஒரு வீட்டிற்குள் அல்லது ஒரு கடைக்குள் பிரவேசிப்போமானால் எல்லாம் ஐரோப்பிய சாமான்களாகவன்றோ இருக்கின்றது? இதைக்கண்ணுறும் நம்மவர்கட்கு அவமானமாகத்தோற்றவில்லையா? வீண்பகட்டான சாமான்கட்குப் பணத்தை இறைப்பதி என்ன மதியோ? தற்காலத்தில் வழங்கிவரும் "எனாமல்" சாமான்களால் என்ன பிரயோஜனம் உண்டு? அதை எவ்விடமாகவும் அடைவுவத்து ஒரு அணு பெறுதற்ற வழியுண்டா? பார்வைக்கழகாயிருக்கின்றதே என்று அதிக பணம் கொடுத்து வாங்கும் அச்சாமான்கள் உறுதியாகவாவதுளதா? நீரிரத்தில் தேய்ந்துபோகும் அவற்றில் வீணை

பொருளைச்செலவிடுவது புத்திமானாகவல்லவோ முடியும்? வெண்கலம் பித்தளை சாமான்களைப்போல பல வருஷங்கட்கு நிலைக்கக்கூடியதாயிருக்கின்றதா? இவ்விடத்திலிருந்து அனுப்பப்படும் தோல்கள் ஐரோப்பாவில் "பிஸிட்டுகள்" முதலிய பல சாமான்களாக மாறி இங்கு இறக்குமதியாக அதற்கு ஏராளமான தூகையை நம்மவர்கள் விலையாகத் தந்து வாங்குவது எவ்வளவு பரிதாபிக்கத்தக்க விஷயம்? இப்படி எவ்வளவோ எடுத்துக்கூறலாம். கவனிப்பாரெவருமில்லையே! பல்லாண்டுகள் வரையும் நிலை நிற்பதாயிருக்கும் சாமான்களைச் செய்யக்கூடிய திறமை தங்கட்கிருந்தும் அதில் தங்கள் பணத்தைச் செலுத்தாமல் சின்னஞ்சிறிய அழிந்துபோகத்தக்க சாமான்களை வெளிப்பகட்டில் மயங்கி வீணே விலைகொடுத்து வாங்குகின்றனரே! அந்த எனாமல் பாத்திரந்தான் இந்த செய்து சொற்ப விலைக்குக் கொடுக்கக் கூடாதா? அதற்குத் தேவையான பொருள்கள் நமது நாட்டிலில்லையா? நமது தேசத்தில் கைத்தொழில் உபயோகத்துக்குரியதான எந்தப்பொருள் கன்தான் இல்லை? "எல்லாமிருக்கின்றது பெட்டியிலே இலைக்கறிதானே சட்டியில்லை" என்பது போல தேசாபி விர்த்தியைக்கோரி மெய்வருந்த உழைத்து நமது நாட்டிற்குத் தேவையானவற்றை காமே உற்பத்திசெய்து நமது தேசத்திய பணம் நமது நாட்டைவிட்டுப் போகாதிருக்கும் வழியைத்தேடி "பிழைக்கவழியில்லையே" என்று தவிக்கும் ஏழை ஜனங்களையும் ஹீனஸ்திதியில் உள்ள சூத்திரர்களையும் ஆதரித்துத் தாமும் பலகலைகளைப்பெற்று ஸ்வ தேசத்திற்கும் பெருமையையளித்துதவக் கூடியவர்களாயிருக்கும் தனவான்கள் தான் சோம்பலை மேற்கொண்டு இவ்விஷயத்தில் பிரவர்த்திக்க முன் வராதிருளார். முன் வந்தாலும் "வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்" காயிருப்பதால் பிரயோஜனப்படாதொழிகின்றது. கலியாணத்திலும் ஆபரணத்தில் முதலிடுவதிலும் பிரயோஜனமற்ற விஷயங்களிலும் கௌரவம் சம்பாதிப்பதிலும் அளவற்ற தொகையை அறிவீனமாய் செலவழிப்பதில் மட்டும் நம்மவர்கட்கிணை எவருமில்லை.

(மறுசஞ்சிகையில் முடிவு.)

வாய்மை.

இம்மை முக்கியம் மானிடர்கட் கவலியகரமான பூஷணம். இதன் பெருமையை அறியார் பலர். அறிந்தார் சிலர். ஆனால் சமயங்களில் பொய்யைச்சொல்லிவேண்டிய காரியங்களைச்சாதித்துக்கொள்ளுகிறோமென்று நிடங்கொண்டு பல ஜோடனைகளைச் செய்து மெய்யைப் பொய்யாக்கவும் பொய்யை மெய்யாக்கவும் வலிமை பெற்றிருக்கிறார்கள். அங்ஙனமவர்கள் முடிவையாராயுமிடத்து இம்மையில் பலநரகத்துன்பத்தை யனுபவிக்கின்றரென்பது உறுதி. உலகில் செய்யப்படாத பஞ்சமாபாதகங்கட்குள் பொய்யை விட பாதகமொன்றிருப்பதாய்த் தெரியவில்லை. அவற்றின் பயனே நினைக்கிலகற்றத்தக்கதாம்.

"முன்ன மொரு பொய்யுரைக்க வப்பொய் வெளியாகாமல் மூடவேண்டிப்
பின்னுமொரு பொய்யுரைக்க வதவும் வெளியாகாமல் பெரும்பொய்சொல்ல
வின்னவகை பொருபொய்யே இருநூறு பொய்களுக்குமிடமாம் வாய்மை
தன்னையே முன்னுரைக்கில் சங்கடமே யாயதுவே தகுதிநெஞ்சே."

என்று முறையிடும் நீதிநூற்கருத்தை யுற்றுநோக்கி சிலா சாசனமாயிதயத்திற் பதித்து முன்னோர் சென்றமுறை பிழாது நிற்பதே சிரேயஸ்க

ரம். இதற்கென்றே நம்பாட்டியாரும் "பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவு" என்றும் கூறினர்.

"நிலைபோய் வனத்தினிற்போய் வஞ்சநீசனுக்கு
வீலைபேரய் அரிச்சந்த்ரன் மெய்போகவில்லை இந்தமேதினியில்
மலைபோலுங் கீர்த்திப் பிரதாபமேவிய மானபரர்
தலைபோயினுஞ் சொல் தவறுர்கள் * * * ".

அயோத்தியை ஏக சக்ரேஸ்வரஸ்தானமாயாண்டு வந்த ஹரிச்சந்திரன் முதலாய மகுடமுடிவேந்தர்களும் மெய்யையன்றே ஆதாரமாய்க் கொண்டு வாழ்ந்து வந்தனர்? மாக்ஷிமைதங்கிய மன்னுதிமன்னனே பொய் எனும் பிரளயத்திற்குப் பயந்து தனக்குள்ள நாடு, நகரம், ரதம், கெஜம், துரகம், பதாதை முதலானவனைத்தையுந்துறந்து மனவி மக்களை விற்றேனும் வாய்மையைக் காப்பாற்றிக்கொண்டானெனில் கேவலமாகிய நாம் நடக்கவேண்டியதியதிக்கு முடிவுமுண்டோ?

"வாய்மை தப்பினுர்களிந்த மாநிலத்தி லீனராய்த்
தீமையுற்று மேலுலோர் பழிக்கவே திரிந்துபின்
நாய்மையுற்ற கும்பியுட் னிலைத்தழுங்குவாரென
வாய்மனுப் பகர்ந்த வேத சாகை முற்றுமறையு மால்"

என்னுங் கருத்தின்படி கஷ்டப்படுவதென்பது காதலாமலகமாய்த் தெரிந்ததால் உள்ளதைச்சொல்லி உளமகிழ்வதே உத்தமர் லக்ஷணம்.

"ஞாலங்கருதினுங் கைகூடுங்
காலங்கருதி யிடத்தாற்செயின்"

என்றபடி காலதேச வர்த்தமானங்களையொட்டி நாகரிகம்பெற்ற நம் முன்னோர்களால் ஏற்படுத்திய குலாசார சீர்திருத்தங்களைப்புரிந்து நம்மைக் கண்டு பின்னவரும் பழகி நன்மார்க்கமடையும்படி நிற்பதாலுண்டாகும் நலமும் பெருமையும் உளமகிழ்வும் உலகங்கொண்டாடுமுயர்வும் சிறப்பும் செல்வமும் மெத்தவுண்டே? இதைப்பற்றியே

'மெய்யரெனப் பெயர்பூண்டார் வதிஞரேயெனினு நிகிமிகவுமன்னுர்
கையதனிற்கொடித்துவைக்கவெவருமஞ்சார்பொய்யரெனக்கல்வையுண்டார்
செய்யபொருண் மிகவுடையாரெனினுமவர்கையிலொருசெல்லாக்காசு
மையமின்றியொருவர்கொடாரெனிற்படிறின்றன்மைதனையறைவதென்னே'

என்னும் ஆன்றோர் கருத்தினமைகியாகலான், 'தசமண்ணுயினும் வைத்குலசிகாமணியாயினுந்தனதனுக்கொப்பான செல்வனுயினும் தெள்ளறக் கல்வியிற்றேர்ந்தோனுயினும் நிகரிலா பலத்தில் நிறைந்தவனுயினும் மாதர்மனத்தையுருக்கும் வசனசாதுர்ய முகவசீகரபால மன்மதனுயினும் மற்றுமெத்திறத்தானுயினும் வாய்மை என்னும் உறுதியான சத்தியவாக்கில்லாவெனிலுலகம் பழிக்குமன்றே? மேற்கூறிய விடயத்திற் சற்றும் பொருத்தமில்லாத வறிஞனுயினும் ஒருவன் வாக்குறுதி யுள்ளானெனில் பலராற்கொண்டாடப்பட்டுப் பாக்கியம் பெறுவனன்றே? ஏ ஆப்தமித்திர சத்தினங்காள்! கடவுளுற் கொடுத்திருக்கும் இச்சொற்ப ஆயுளையும் வீணுக்கிக்கொள்ளாது இகத்திலும் பரத்திலும் இன்புறவேண்டி நற்கருமங்களிலேதேனு மொன்றைக் கைப்பற்றி பொய்யுலகில் மெய்யை நாட்டி நல்லொழுக்கம், நாகரிகம், சர்ச்சனர் நேசம், முதலியனப்பெற்றுக்கீர்த்தியை யடைந்து கிரிவளத்தா யிலங்கி சத்தியவாக்கைத்தரித்து இறந்தமிறவாதவர்களாய்ப் புகழுடம்பைக்கொண்டு புண்ணிய புருஷர்களாய் புருஷோத்தமர்களாய்க் கண்ணியம் பெறுவீராக.

க. வீ. சந்தானகிருஷ்ணநாயுடு.

161978

கற்பலங்காரமாட்சி.

சகோதரிகாள்! நீங்கள் உங்கள் வீட்டுக்காரியங்களை கிர்வகிப்பதில் சாமார்த்தியம் உடையவர்களாயிருங்கள். எனெனில் நீங்களுணவருக்கும் செல்வப்புதல்வர்களுக்கும் சுகமுண்டாகத்தான். எப்போதுணவருக்கும் புதல்வருக்கும் சுகமில்லையோ நற்குணமுடைய உங்களுக்கு வீட்டில் சுகமுண்டாக எதுவில்லை. கணவரும் புதல்வர்களும் சுகவீனர்களாயிருக்க சந்தோஷத்தை அனுபவிக்கும் ஸ்திரீகளும் உங்களில் இருப்பார்களோ? ஒருக்காலும் இருக்கவேமாட்டார்கள். இருந்தாலும் அப்பேர்ப்பட்ட நங்கையை சற்குணவதிகளாகிய உங்களோடு சேர்த்துப்பேசுவதற்கு இஷ்டமேயில்லை. நீங்களும் அப்படிப்பட்ட நங்கையை சிநேகிக்காதீர்கள். கள் முதலிய வஸ்துக்களை யுண்ணலும், தன் பிரிய நாயகரைப்பிரிந்து தனியாய் வசித்தலும், நாலுமின்றி அடிக்கடி அயல்வீடுகளுக்குச்செல்லுதலும், அன்னிய புது புருடர்களது செய்கைகளைப்பற்றி அதிக கவனமாய் ஆராய்தலும், துஷ்ட ஸ்திரீகளுடைய சேர்க்கையும், அறவே விட்டொழிக்கவேண்டும். ஆதலின் அவைகளின் உறவை நீக்கி "தற்காத்துத் தற்கொண்டார் பேணி தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள்பெண்" என்றபடி கற்பினின்றும் வழுவாமல் உங்களையுங் காத்துக்கொண்டு, உங்கள் கணவர் புதல்வர்களையும் உண்டி முதலியவற்றால் காப்பாற்றி, உம்மிருவர் புகழும் இந்நிலத்தில் நிலைபெறும்படி நடந்து நற்குண நற்செய்கைகளினின்று சிறிதும் வழுவாது வாழ்க்கடவீர்கள்! 'கற்பிலாப்பெண்—கணவர் மனப்புண்' என்றவாறு அத்தீப்பெண்கள் தங்கணவருக்கு விரோதிரூபமாயிருக்கிறார்கள். ஆதலின் உங்கள் பதிவிரதாப் பிரபாவத்தால் உங்கணவரின் மனதை உற்சாகப்படுத்தி அப்படியே அவர்களது தேகத்தையும் உண்டி முதலியவற்றால் பேணி இருமை இன்பத்தையுமடையுங்கள். ஆனால் இதற்காக நீங்கள் யாதொரு அரியதவமும் புரிய வேண்டியதில்லை. பஞ்சாக்கினி மத்தியில் நிற்கவேண்டாம். ஆகாதிகளை ஒடுக்கவேண்டாம். இன்னும் எவ்வித துயரத்தையும் வகிக்கவேண்டாம். சுகமாக வீட்டிற்குள்ளேயே இருந்துகொண்டு நிவ்யமான உணவுகளைப் புசித்துகொண்டு உங்கள் கணவரது கட்டளையை மீறாது நடக்கவேணுமென்னும் சிக்தையோடிருப்பீர்களாயின் அஃதொன்றே கலிபர சுகத்திற்கு மேதுவாகும். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என ஔவையாருங் கூறினரன்றே? தங்கணவரது சொல்லுக்கு மாறுதலின்றி கற்பினின்றும் வழுவாமல் இல்லறத்துக்குரிய நற்குண நற்செய்கைகளுடையவர்களாகி வரவுக்கேற்ற சிலவுசெய்து வருதலே இல்வாழ்க்கைக்குத்துணையாகும். இல்லறத்திற்குரிய நற்குணங்களுஞ்களிடத்தில்லையேல் அவ்வில்வாழ்க்கை செல்வத்தாலெவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயன்படாமல் இழிச்சி பெற்று வறுமைபடைந்து வருந்திக்கவிக்க எதுவாய்விடும். கற்பின் மிகுந்து நற்குண நற்செய்கைகளுடையவர்களாகில் ஒன்றுமில்லாத அவ்வில்வாழ்க்கை எல்லாமுடைத்தாகி மங்களமாய் சிறப்புற்று விளங்கும். அறம்பொருளின்பத்துக்கேதுவாகிய கற்பென்னுங் கலங்கா நிலைமையுண்டாகப்பெறின் அதுவே ஒருவாஅரிதுன்பெறுதற்குரிய பொருள்களுக்குள் முக்கியமாய் விளங்கும். 'காவலனே பாவையர்க்கழகு', 'சிறைகாக்குங்காப்பெண் செய்யுமகளிர் நிறைகாக்குங் காப்பேதலே', மதிற்காவல், வாயிற்காவல் முதலிய சிறைக்காவல்களாற் பிரயோஜனமென்ன? கற்புடைய மகளிராகிய உங்களுடைய நிறைகாப்பொன்றே தலைமையாகும்.

உட

புருஷனுடைய முகத்தைக் கண்ணெடுத்துப்பாராமல் தலைவணங்கி நடப்பதே உங்கள் சிரசிற்குப்பூஷணமாகும். கணவருடைய நடையை அனுசரித்து நடப்பதே கால்களுக்கு ஆபரணமாகும். அவருக்கு பணிவிடை செய்தலே கைகளுக்கணிகலமாகும். அன்னவருடைய கட்டளையைக்கேட்டு அதன்படி நடத்தலே உங்கள் செவிக்குக் காரண பூஷணமாகும்.

(மறுசஞ்சிகையில் முடிவு.) (தஞ்சைபுரி நேசன்.)

இந்தியர்களின் தூக்கமும் இந்திய பத்திரிகைகளின் நிலைமையும்.

தெல்வத்தாலும் நாகரீகத்தாலும் கல்வியபிவிர்த்தியாலும் மேம்பாடடைந்து சிறந்து ஒங்கி விளங்குவதற்குள்ள பலவகைக் காரணங்களுக்குள் பத்திரிகாபிவிர்த்தியும் ஒன்றும். அது முக்கியமாய் அதிகாரிகளாலும் தனவான்களாலும் கனவான்களாலும் கற்றுணர்ந்தவர்களாலும் கைத்தொழிலாளிகளாலும் பெண்மக்களாலும் குருமார்களாலும் சிறுவர் சிறுமியர்களாலுமே பெரும்பாலும் ஆதரிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கிலாண்டு தேசத்திலோ ஒவ்வொரு வகுப்பினரும் வாசிக்க விரும்புமபடியான பல பத்திரிகைகள் உண்டு. சமாசாரப் பத்திரிகைகள் ஆங்காங்கு நிகழும் வர்த்தமானங்களையே தெரிவிக்கும். அரசாங்க சம்பந்தமாக பத்திரிகைகள் குடிகளின் முறைகளையும் பல நீதிநெறிகளையும் நியாயவழியையும் நிலைநிறுத்திப் பேசும். சாஸ்திர சம்பந்தப்பத்திரிகைகள் வர்த்தமானத்தில் நூதனமாக ஆராய்ந்தெடுக்கப்பட்ட விஷயங்களையும் சாஸ்திராபிவிர்த்தியையும் அதைப் போல்வனவற்றையும் அறிவிக்கும். இளந்தையர் குழாதத்திற்கு ஏற்பட்டிருக்கும் பத்திரிகைகள் சிறுவர் சிறுமியர்களின் மனமுவக்கும் கதைகளையும் அவற்றின் சாரங்களையும் நற்குண நல்லொழுக்கங்களையும் கதாரூபமாயும் விளக்கிக்காட்டும். இம்மிங்கனமிருக்க முக்கியமாய் இங்கிலாண்டையும் இந்தியாவையும் ஆராயுமிடத்து அவற்றின் மக்கள் நடையுடைபாவனைகளில் ஒன்றுக்கொன்று வேறுபட்டே நிற்கிறார்களென்பதை இங்கிலாண்டிய விபரங்களைத் தெரிந்தவர்களும் அவரால் கேள்விப்பட்ட மற்றைய சிலரும் அறிவார்கள்.

இங்கிலாண்டியர் பத்திரிகையில் விருப்புடையர். இந்தியரோவெனில் அப்படிக்காணப்படவேயில்லை. இங்கிலாண்டியரில் தினம் இரண்டணா சம்பாதிக்கும் எளிய கூலியாட்களுங்கூட மற்ற சிலவுகளைப்போல பத்திரிகையையும் எண்ணி அதற்கும் நாளொன்றுக்கு காலணாவீதம் வைத்துவிடுவார்கள். இந்தியரோ இக்காலணாவிருந்தால் மூக்குப்பொடிக்கு உதவுமே என்பார்கள். இங்கிலாண்டியர் பத்திரிகைகளே லௌகீக ஞானகாரத்தை அறிவித்து அவற்றில் ஞானத்தை யூட்டி தங்கள் வாழ்நாட்களை சுகத்துடன் நடத்தவல்ல கருவி என்பர். இந்தியரோவெனில் பத்திரிகையென்றால் "அக்கப்போர்" என்றும் "வீண்வேலை" என்றும் "காசு பறிக்கும் வித்தை" என்றும் பொழுது போக்கத்தந்தென்றும் பேசித்திரிவர். இங்கிலாண்டியர் பத்திரிகைகள் தங்கள் கைக்கெட்டும்போது "காணுதுகண்டவராய்" களிப்புடன் பத்திரிகை எப்பொழுது வருமென்று எதிர் பார்த்திருப்பர். இந்தியரோ பத்திரிகைகள் தங்கள் கைக்கெட்டும்போது மாமியுமகளைப்பார்ப்பதுபோல சலிப்புடன் தங்கள் சொத்தைப்பறிக்க வந்த நமன்போல் பாவிப்பதுடன் "அக்கப்போர்" வருங்காலம் வந்துவிட்டதென்று

நினைத்து உடைத்தாலும் அவசரமாய் மேல் மகுடங்களை மாத்திரம் பார்த்து விட்டு விஷயங்களை அறியப்போகாமலும் அறியப்புகினும் அழுதுகொண்டு அங்கொன்று இங்கொன்றாய் பலவகைக் கீறை பறிப்பதுபோல் பார்த்துக்கவனியாமலும் கவனிப்பினும் அவற்றிற்சொல்லியபடி அனுஷ்டிக்கும்படி அடுத்தவர் சொல்லினும் நமக்குத் தெரியாததற்கு இதைப்பார்த்தாலு நடக்கவேணுமென்றும் வீண் பிதற்றலுடன் டாம்பீகமாய்க்கூறுவர்.

(மறுசஞ்சிகையில் முடிவு.) (தஞ்சைபுரிநேசன்.)

புத்தக வரவு.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் சரித்திரச்சுருக்கமும் அவர் திருவாய் மலர்ந்தருளிய மொழிகளும்:— அடங்கிய ஸத்பிரசுரமொன்று நமது பார்வைக்கு வந்தனத்துடன் வரப்பெற்றோம். வாசித்ததில் யாமடைந்த ஆனந்தத்திற்கெல்லையில்லை. தக்தமிழ்நாட்டிலெவர் சிறுமியர் நல்வழியில் நடந்து ஆஸ்திக பக்தர்களாய் ஜ்வலிப்பதற்கு இப்புத்தகம் இன்றியமையாதது. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் பல அரியவிஷயங்களை கற்றோரும் மற்றோரும் எழுதிலுணருமாறு தக்க உதாரணங்களுடன் நமக்கு அருளியிருக்கிறார். இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டியது அவசியகரம். 139 பக்கங்கள்கொண்ட இவ்வரிய ஸத்பிரசுரத்தின் பிரயம் அணா-8. இதை நமதுபார்வைக்கு அன்புகூர்ந்தனுப்பிய வாணியம்பாடி புதூர் இராமகிருஷ்ண மடம் ஸ்வாமி விவேகானந்தர் சங்கத்தின் பிரஸிடெண்டு மகா-ள-ள-ஸ்ரீ C. வெங்கிடசாமி நாயுடு அவர்களுக்கு ஹிருதய பூர்வகமாய் வந்தனமளிக்கின்றோம்.

காலமறிந்து குற்றங்கடிதல்.

(முன்தொடர்ச்சி,)

கடைக்காரன் அதை வாங்கிப்பார்த்து ஆம் இது இந்த கடையிலிருந்த பொருள்தான். சற்று நேரத்திற்குமுன்புதான் வெளியில் எடுத்துவைக்கப்பட்டது. நான் பின் பக்கமாய்த் திரும்பி இருக்கும்பொழுது யாரோ எடுத்துக்கொண்டுபோய்விட்டார்களென்றான். அதைக்கேட்டு அந்த புத்தியுள்ள பெண்மணி ஐயா! நீர் சொல்லுகிறது என்மனதுக்கு மிகவும் சங்கடத்தைத் தருகிறது, நீர் யாரோவென்று சந்தேகிக்கவேண்டாம், இந்தத்திருட்டுப் பையனே எடுத்துக்கொண்டு வந்துவிட்டானென்றாள். அந்த வார்த்தையைக் கேட்டுக் கடைக்காரன் ஆச்சரியப்பட்டு அம்மா உமக்கு மன உறுதி அதிகம் கடையில் இந்தப்பாவை காணுமற்போய் ஒரு மணிநேரங்கூட ஆகவில்லை அதற்குள் மனோப் பொருளுங்கையுமாய்ப் பிடித்துக்கொண்டுவந்துவிட்டீரே உம்முடையதைரியமல்லவா தைரியமென்று சொல்ல அந்தப்பெண், ஐயா! இதில் தைரியமென்னவிருக்கிறது. தைரியமுமில்லை, மனவுறுதியுமில்லை. நாம் கடவுளுக்குப்பொதுவாய் உண்மை தவறாமல் நடக்கவேண்டுமல்லவா? அந்தக் கடமைப்படி உள்ளதை நான் ஒளியாமல் வெளிப்படுத்தினேனேயல்லது மற்றொன்றுமில்லை. பையன் கையில் பாவையைப் பார்த்தவுடன் எனக்கு பிராணன் போவதுபோலிருந்தது. உண்மையான தாயாயிருந்தால் சுலபமாய்த் தோன்றினாலும் வருத்தமாய்த்தோன்றினாலும் அவள்செய்யவேண்டிய கடமையைச் செய்தே தீரவேண்டுமல்லவா? அப்படிச் செய்யா

மையல்தானே "மக்களுக்குச் சத்துரு மாதா பிதா" என்கிறார்கள். இப்போது இந்தப்பயல் செய்த காரியம் கெட்டகாரியந்தான். அதற்காக இவனை உடனே காவல்கிடங்குக்கு அனுப்பிவிடவேண்டும். இதற்கு நானே சாக்ஷியாகுதேன். இவன் தகப்பனார் வந்தாலும் அவரும் அதற்குச்சம்மதிப்பார். என்று சொல்லி தன் கையைப் பிடித்துக்கொண்டிருந்த பிள்ளையைக் கையை வாங்கிக்கொண்டு கடைக்காரன் வசத்தில் தள்ளிவிட்டுத் திரும்பிப்போகப்பார்த்தாள். அது கண்டு பையன் அழுதுகொண்டே அவள் துணியை விடாமல் பிடித்துக்கொண்டு அம்மா நான் இனிமேல் இப்படிப்பட்ட காரியம் ஒருபோதும் செய்வதில்லை என்னை இங்கே தனியே தள்ளிவிட்டுப்போகாதே. தெரியாமல் திருடிவிட்டேனென்று சொல்லி கோவென்று கதறியழுதான். கடைக்காரன் அதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, அவளைக் கூவி அம்மா அவசரப்பட்டுப்போகவேண்டாம், ஒரு பேச்சு கேட்டுவிட்டுப்போம் என்று அவளைக்கிட்ட அழைத்து காரியர் நாயகமே! உம்மைப்போல்த்தருமமே ஜெயமென்று நீதி மார்க்கத்தில் நடப்பவரை நான் எங்கும் கண்டதில்லை. உம்மைப்போலவே உம்முடைய புத்திரனையும் கடவுளுக்குப் பயந்து நடக்கும்படி கற்பிக்கநீர் பாடுபடுகிறீர். இவன் செய்த காரியத்திற்கு இப்போது நீர் செய்ததே போதுமான சிக்ஷையாம். இனி ஒருபோதும் இவன் இப்படிப்பட்ட தீச்செய்கை செய்யத் துணியானென்று நான் உறுதியாய்ச்சொல்லுவேன். சிறு பிள்ளைகளைக் காவற்கிடங்குக்கு அனுப்புவது சரியன்று. முக்கியமாய் இவ்வளவு ஜாக்கிரதையாக நல்வழிற்படுத்தப்படுகிறவர்களது அது தேவையில்லையென்றான். பிறகு அவன் அந்தப்பையனைப்பார்த்து மகனே! இருட்டுப் புரட்டு இல்லாமல் நல்லபிள்ளையென்று பேரெடுப்பது நல்லதா, காவலில் அகப்பட்டு அவமானப்படுவது நல்லதா, என்றுகேட்டான். அதற்கந்த சிறுவன் நல்லவனென்று பெயரெடுத்து பிழைப்பதுதான் சரியானதென்று வணக்கமாய்ச் சொல்ல, அப்படியானால் இப்பொழுது நேரிட்ட அவமானத்தை இனி ஒருபோதும் மறவாதே. இப்பொழுது நீ செய்த காரியம் மிகவும் அற்பமானதாயிருந்தாலும் இதுதான் கடைசியில் பிராணந்தத்துக்குக் கொண்டுபோய்விடுவது, "இன்று தவிட்டுக்கு வந்தகை நாளை தனத்துக்கும் வரும்" என்று சொல்லக்கேட்டதில்லையா? திருடன் பெண்சாதி என்றும் நல்லபெண்தான். ஆதலால் இனிமேல் உன் தற்ரூய் சொல்லும் நல்லுபதேசங்களைக்கேட்டு கடவுளுக்குப்பயந்துநட, என்று புலிதமாய் அந்தப் பையனுக்கு புத்தி சொல்லியனுப்பினான். அந்தச்சிறுவனும் இனி நான் அப்படியே நடந்துகொள்ளுகிறேன் என்று சொல்லி சிலவுபெற்றுக்கொண்டுபோனான். தாயும் மகனும் ஒன்றும் பேசாமலே கைகோத்துக்கொண்டு வீட்டுக்குப்போக, அங்கு தாய் தனியே அந்தப்பையனை ஒரு அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய்க்கதவை மூடிக்கொண்டாள்.

(மறுசஞ்சிகையில் முடிவு.)

அன்னியோன்னியம்.

(முன்தொடர்ச்சி.)

இளமையிலே செய்கைகள் நமது இளம்புத்திக்குத்தோற்றப்படும் இன்பதுன்பத்திற்குத் தகுவதாய் நடந்தபோதிலும், கௌமாரத்தில் புத்தி பரிக்ஷையினாலே பலப்பட்டிருப்பதால் அச்செய்கைகள் நன்மை தீமை தெரியப்பட்டு நடக்கின்றன. இதனால் மனதுக்கேகமும் செய்கைக்குக் காரணமாயிருக்கின்றது. எனெனில் மனதுக்குத் தீயதாயிருப்பது தேகத்துக்குத்தீயதாயும் தேகத்துக்கு நல்லதாயிருப்பது மனதுக்கு நல்லதாயுமிருக்கும். ஆகையால் நல்லதந்தீயதும் புத்திக்கியல்பாக நியாயத்தினாலறியாற் றெரிகின்றது. இவ்வாறே அந்தந்தப்பொருளின் தன்மையை மேற்சொல்வியபடி நல்லது தீயது என்னுங்காரணத்தைக்கொண்டே தெரிந்துகொள்ளலாம். குழந்தைகளாயிருக்கும்போழ்து நமது புத்திபோனபடியும் பெரியோர்களானபிறகு நியாயம்போனபடியும் நடக்கிறோம். நமது தன்மைக்கடையாளமாகிய அந்த நியாயத்தைக் கைநெகிழாமல் அது கற்பிக்கின்றபடியே நாம் நடக்கவேண்டியது. மனிதனுக்குத் தன் இஷ்டம் தாராளமாயிருந்தாலும் அதினாலே நியாயமற்றவனுகி தன் பொல்லாத இச்சைகள் வருவிக்கின்ற துஷ்ட காரியங்களை யவன் செய்யக்கூடாது. இஷ்டமும் இச்சையும் நியாயத்துக்கடங்கி யதின்படி நடக்கவேணும். ஆகையால் மனிதராகிய நாம் என்னாளும் நியாயத்திற்கடங்கவேண்டியவர்களென்று தீர்மானமாய்ச்சொல்லத்தகும் நியாயமென்னும் அக்கட்டே நமது தன்மைக்கு மிகவுமுவந்ததாகையால் அதையே முக்கியமாய் நாம் பாராட்டவேண்டியது. பரம கடவுளுடைய நியாயானுசித்தமும் அவர்மக்கே நிரூபித்துக்கொண்ட ஒருவகைக் கட்டுப்பாடேயாகும். பிரபஞ்ச நிபந்தனைப்படி சூழலுமண்டசக்கரங்களுக்குகடையும் நியையும் ஒன்றையொன்று நிரகித்தலும் நிக்கிரகித்தலும் விதிக்கப்பட்டிருப்பதுபோல மனிதனுக்கும் நியாயம் விதிக்கப்பட்டிருப்பதால் எல்லா செந்துக்களுக்கும் இந்தக்கிரமமே யுண்டென்று நினைக்கத்தகும். மேற்சொல்லிய வண்ணமாய் மக்கள் ஒருவைப்பாடே சௌக்கியத்திற்குக் காரணமாயிருப்பதுமல்லாமல் மிகவும் அவசியமானதாயுமிருக்கின்றதென்றும் ஒரு கட்டுப்பாடில்லாமல் அது நிலையாதென்றும் தெரிகின்றது. முதன்மையாகிய சிருஷ்டி கர்த்தரே தமது செய்கைகளை ஒரு கட்டுப்பாடுகொண்டு நடத்திவருகின்றமையாலும் நீங்காத அவருடைய தன்மையானது ஆதிமுதல் நடந்துவருவதுமன்றி நீடூழியும் நடப்பதாயிருக்கின்றமையாலும் மனிதனுனவன் தன் ஆசாபாசம் சொல்லுகின்றபடி நடவாமல் நியாயக்கட்டுக்கடங்கி நடப்பது அடிமைத்தனமென்றெண்ணவேண்டியதில்லை. ஆகையால் நியாயக்கட்டுப்பாட்டுக்குச் சரியாக நாம் நடக்கக்கூடாததேன்? சுகத்தை விரும்பத்தகுமானுலும் அந்த நியாயத்தின்படி நடந்தே யதை யடைதற்காசைப்படவேண்டும். அதற்கு விரோதமாக நாமனுபவிக்குஞ் சுகங்கள் அவ்வனுபசந்தோஷத்திற்கு மிஞ்சிய துக்கத்தை விளைவிக்கின்றன. ஆதலால் என்னாளும் நியாயத்தின்படி நடக்கவேண்டியதுமல்லாமல் பிறர்நமக்குச்செய்யநாம் விரும்புகின்றபடி அவர்களுக்கு நாம் செய்யவேண்டுமென்னும் நல்லநியை என்றும் மறவாமலிருக்கவேண்டியது. இவ்விதியொன்றே புண்ணியாத்துமாக்களுடையும் விண்ணுலகத்திற்காக மரணமானது மனிதனை இவ்வுலகத்தை விட்டுப்பிரிக்குமளவும் அவன்பரிசுத்தனுயும் யாவரிடத்திலும்அன்னியோன்னியமுள்ளவனுயும் கடவுளுடைய அன்பிற்கு முதற்றர பாத்தியனதையுள்ளவனுயுமிருப்பதற்கேற்றபடியும் இங்கு நடக்கப்போதுமானதாயிருக்கின்றது.

முற்றிற்று.

கலாப்பிரகாசனி.

ஐந்தாவது அத்தியாயம்.

ஜனவிஹீனமானகானனம். வானளாவிய விருக்ஷங்களைருங்கிய பிரதேசம். பனியுமொழியுங் காலம். பாரிருள் சூழும் நேரம். மாசுறு

சோரா அகமக மகிழுந்தருணம். இருளும் தன்னே யொத்த அகத்தினர்க் குதவப் போதரும் வேளை. பயங்கர மாருதத்தின் கோரதரமான சப்தம். அச்சுறுத்து மளவற்ற மிருகங்களின் கர்ஜ்ஜனே. நெறுப்பொடி காத்தென வெழுந்த காளுற்றின் பயங்கரத்வனி. இவற்றின் கொடுமையைப் பொறுக் ஆற்றலற்ற விருகங்கள் பல பனிபாகிய கண்ணீருதிர்க்கின்றன. இருண்ட மனத்தினரு மிக்கானம் புக்கில் மருண்டழுவர். வனசரரும் வழிதெரியா துதிகைப்பர். இவ்வத்தியந்த கோராரண்யத் திடைவருமோர் காளுற்றின் நடுவில் களங்கமற்றத் தூய்மையுற்ற மனத்தின ளெருவன் துயர்க்கடலிடை பட்டுக் கலங்கித் தானடையவேண்டிய மார்க்கமும் பிசகி அலைகடற் றருபபா தி வெம்புதழலின் மேனின்ற மெழுகெனக் கரைந்து மனமழிகின்றான்.

ஐயோ! என் கரங்கள் சோர்கின்றனவே! விழிகளும் சுழலுகின் றதே! மார்க்கமும் பிசகிப்போயினவே! சித்தத்திற்கொண்ட சிந்தை ய னைத்துஞ் சிதறிபெற தொழிந்தனவே! என்போலிடையூறுவாற மிம் மண்டலிகத்துண்டோ? களியாட்டயர்ந்த காலமெலாம் போய்க் காளுற்றிடை யிற் கதறிக் கலங்குங் காலமு முற்றதே! ஊழ்வலியின் றிறந்தானே! இ ன்நிலையைக் கடந்தியாங்ஙனம் செல்வேன்? ஐயோ! "ரூபசந்திர" னேயுங் காணேனே! ஹாஹோதரா! எங்கேயினே? நதியின் வசமாயினேயோ? இளமையில் உலகிய லுணர்வானவாவுற்று பன்னரிய பற்பல தேயங்களோ று மேகிய ஞான்றும் மலரும் மணமும் போலிருந்தனையே! இன்றிபாங்க னே பிரிந்தனை? மந்தகாச பூர்ண சந்திரவதனு! வஞ்சக வன்மைபொருந் திய நின் மதுர பாஷணமென்ற கேட்பேன்! தீனஜநபாகரா! என்மீது ரோஷத்தேனு மனமிரக்கமில்லையோ? உய்ய ஒருவழியுங் காண்கிலேனே! சாகும் வரையிற் சஞ்சலமனுகிற் சந்தோஷிப்பதென்னுள்? சாந்தகுணபூ ஷணு! இன்னலுற் றுயிருடனுய்வதிலும் நீத்தல் குணகரமெனக் கருதினே யோ! உனதுயிர் கடவுளிடம் சேரவும் நினதுடலமிவ்வாற்றி லடங்கவு மாயதோ?

"அலைமோதி யிருகரையு மடித்துவரும் காளுற்றிலக்தோ பாழும் [ன்னும் கொலையே செய் முதலேபற்றிக் கொள்ளவதைத் தந்திரமாய்க்கொன்றேன்பி நிலையே கொள்ளாத புனல் நீந்திடவும் வகையறியேன் நினைக்கின்றே னற் கலைமேவு ரூபசந்திரன் கதியெனவோ செய்தியொன்றுங்காண்கிலனே!"

அகிலமங்கள குணஸ்வரூபா! அகிலலோகநாயகா! இவ்விருள்தருமா ஞால த்தி லிவ்வெளியனேன்றன்னே இங்ஙனம் துன்புறுத்தவு முமக்குள்ளந் துணி கிறதா! ஆகிமத்தியாந்த ரஹித ரென்மீ தருள்பாலித்தனர் போலும். அதினுல ன்றே இக்கரையை யடைந்தேன். கனிஷ்டா! நினைக்கண்டு பிடித்தேனிலலே யே! இவ்விடத்திலாகினும் கண்காணிக்கலாமெனக் கருத்துற் றிருந்தது மட வியிலெறிந்த நிலவாயினவே! ஒரி மிந்நதிக்கு மூடிவுகடலுண்டு, வாடுமெனக் கில்லையே விடிவு! தேடாதவிடமொன்றுமிலதே! வாடாத ஞான்று வருவது மென்றே? ஒருத்திடினும் வெறுத்திடினுஞ் ஜகபரிபூரணு! மறுத்தினியு ண்பாதமலாற் புகலிடம்வேறுமுளதோவெனக கிங்கிலமிசை. அடியேனே ஆ ராது ஆற்றெணுத்துயரத்தினி லமிழ்த்துவதுஞ் சரியோ! ஐயோ! நெஞ்ச ம் நெகிழ்ந்துருகுன்றதே! என் செய்கிற்பேன்!

"உடன்பிறந்த சஞ்சீவி யுனையலாற் தொகிகடல் சூழுலகமீது
கிடைப்பதரிதன்றே நற்கினர்மதியே விருதிதியே கிளைமரக்கா[வேண்யான்
விடையுனையான்றேடியு மென்னெதிர் கிடைத்தாயில்லை யந்தோஎன்செய்
றடையின்றியுயிர்விடுவேன்றம்பியுனைப்பிரிந்து மினிதரிப்பேன்கொல்லோ"

கனிஷ்ட வியோகனுனேனே! அந்தோ! சுந்தரா! ரூபசந்திரா! நினதன்பு இறப்பினுலன்றி மறப்பரியதோ! நினையனவாகிலு மென் மனதி ற் கொன்றுந்தோற்றிலதே! நினைக்கண்டுபிடிக்க பல பிரயத்தினங்களியறறி யும் பலமாக வில்லையே! காமிருவரும் ஒன்று சேர்க் கினிதிருக்கிற தின மு மினியுளதோ!

மதியும் தனது ஷோடஸ கலைகளுடன் பிரகாசிக்கின்றன். இதெ ன்ன தரகோஷம்? ஹா! இஃதென்னே? இக்கோரதர வனப்பிரதேசத் தில் அத்தரமளாவிய சந்தன மரங்க ளிறம்பிய நறுமணம் வீசும் விதித மண மலர் மயமாயுள்ள சுந்தர நந்தவனத்திடை அற்புத மந்திரமொன்று ஜ்வலிக் கின்றதே! தேவரிர்மிதமோ! நிசப்தமாயிருக்கு மித்தருணம் மதுரத்வனி ஒன்று கேட்கின்றதே! போய்ப்பார்க்கின்றேன்! பல பிரஜாகுழாங்களி டையில் சுப்ரவஸ்திர தாரியான நாரியர் நாயகமொருவன் நிராபரணியாய் நிலகமணிபோல் வீற்றிருக்கின்றனள். அம்மதிமுகமங்கை "ஸ்திரீவித்தியாப்பி யாச" விஷயமாய் உயநியசிக்கப் போவதாய்த்தெரிகிறது. கோவிழந்த கு ருடனுயிவண் கதறுமெனக்கிப் பிரவசனத்தா லாகினுஞ் சோக பரிகார முண் டாகுமா! இக்கூட்டத்தில் எனது ஸோதரனேக்காணுமதிர்ஷ்டமு மெனக் குகிக்குமா! எதோ அதில் எனது கருத்திருத்திப் பார்க்கின்றேன்.

"ஜனகுண தராதர நிதான மதியுகநாகரிக வித்தியாவிஜோத சத்தி யாபிமான சீலர்காள்! தற்காலத்தில் நமது ஸோதரிகளடைந்திருக்கும் கி லைமையை உற்றுநோக்கில் எனக்கு மிகவும் பரிதாபகரமா யிருக்கின்றது. பெண்கல்வி உலகெங்கும் பரவிவருவதின் பயனுகவுத்தமாங்கனைகளானவி த்தியாவதிகள் பலர் ஜ்வலிக்கின்றார்க ளென்றாலும், அதைப்பற்றி அகமிக ளிப்பதானுலும், அதைவிட எவ்வளவு அபிவிர்த்தியடையவேண்டுமோ அ வ்வளவிற்கது பரவாதிருப்பதைப்பற்றி யானெய்துஞ்சோகாகுலமே மிகவு மதிகமாயிருக்கின்றது. நற்தேயத்திய பாலிகைகள் நல்லொழுக்கத்துடன் உத்தம கல்வியைப்பெற்றுயர்வுற்று சுசீல சுந்தரிகளாய் வித்தியாவதிகளாய் விளக்குவது சொற்பத்திலும் மிகச்சொற்பமே. நன்னடக்கையற்ற கல்வி யைப்பெற்று நலமற்ற நாரிகளால் நாகரிகாங்கனைகட்கும் அவச்சொல் ஏண் டாகின்றது. நமது சிறுமியர்களிற்பலர் "காற்படிப்பும் அரைப்படிப்பும்" படித்து வித்தியாலயத்தை விட்டோழிகின்றனர். இன்னுரால் "அற்பபடி ப்புஅனர்த்தம்"எனுமான்றோருரையிலுண்மைசெவ்வனேவெளியாகின்றது. இவற்றுலதிக்குக் தீங்குகட்கெல்லையில்லை. கற்றகல்வியே அவர்களேக்கெட ச்செய்கின்றது. ஞானமில்லாத கல்வி கேட்டை விளைவிக்குமென்பதிலைய மென்னே? வித்தியா விஷயத்தி லிக்கீழ்நிலைமையுற்றிருப்பினும் ஏனையவ ற்றில் நமது ஸ்திரீகள் இளைத்தவர்களல்லர். இவ்விஷயத்தில் இவர்கள் செய்யும் ஸாகஸ மாதியலை மதிஹீனர்களால் புகழ்ந்துரைக்கற்பாலதே யா யினுமன்றே ரென்னேயொத்த அகத்தினசெய்தும் பரிதாபகரத்திற் குரிய வரேயாவர். மாமி மருகியிருவர்தம் மல்புத்தத்தை பிரதமத்திலெடுத்துக் கொள்ளுவாம். மருகியைக்கொள்ளுமளவுங் கொண்டாட்ட முற்ற மாமி பி ற்றைநாளிற் றிண்டாட்டமனடவானேன்? மருகியர்கட்கு நல்லொழுக்கமா தி நலங்களே நல்கி ஸதாசார சம்பன்னைகளாயிலங்குமாறு புரிதலுதிதமே யாயினு மம்மை யாகிரிபர்போ லன்றோர்க் கோதுவதைவிட தானியற்றும் நற்கிரியைகளினுலேயே அவர்கள் நிருந்தி நல்வழியில் நிற்கும் வண்ணம் செ ய்தலன்றே சிரேயஸ்கரம்? மலருடன் சேர்ந்த காரும் நறுமணங் கமழ்கின்ற னவன்றே? ஸுகந்த பூரிதமான புஸ்பத்தை அனுபவித் தின்புறக் கருது

வோர் அமைவரை மெதுவாகவன்றே எடுக்கவேண்டும்? அங்ஙனமின்றி நசுக்கிப்பறிப்பின் வீசுவது தற்கந்தமன்றே? அதைப்போலவே மருகியரை அன்புமிகுந்த இன்சொற்களால் தன் வசப்படுத்திக்கொண்டு அவர்கட்கு புத்திகூற உபாத்யாயனிகளாய் ஏற்படுவதைவிட தமது நடத்தையினாலேயே அவர்கட்கு நன்மாதிரியைக் காட்டி நன்னடக்கை, நற்சுகவாசம், பதிபக்தி இவைகளாலுண்டாகும் நலங்களைத்தெளியவிளக்கி நல்விஷயங்கள் செறிந்துள்ள ஸத்கிரந்தங்களை ஒய்வுகாலங்களில் வாசிக்கச் செய்து குணவதியாகுமாறு புரிதலன்றே குணகரம்? இங்ஙனம் நல்வழியிலொழுகும் வனிதாரத்னங்களை வாழ்க்கைத்துணைவிகளாயடைந்த ஸத்குலசிகாமணிகளிருக்கும் இல்லறமன்றே நல்லறம்? ஏனையவை தொல்லறமே. சற்குணலயமான மாமியாரின் கீழமர்ந்திலங்கும் மருகிய ரெய்துஞ் சிறப்பிற்கெல்லையுமுண்டோ? பதிக்கடங்கிய பாவையும் மாமிக்கடங்கிய மருகியுமான இச்சுகுணபூஷணியால் இல்லறம் நல்லறமாகப்பிரகாசிப்பதுடன் அஃதாற்பெறவேண்டிய இகபர சுகமும் ஸாதகமாகத்தடையென்னே? இதை அறவே விட்டொழித்து மலரை நசுக்கிப் பறிப்பதற்கிணங்க குணபூரணிகளான மருகியரை ஹிம்சைக்குள்ளாக்கி அன்னவர்களையுங்கெடுத்து "ஸத்ஸாமோ ஸாகரமோ" வெனத்தன் தனயனும் வியசனிக்கச் செய்து இவ்விரு ஸதிபதிகளும் இல்லறத்தாலடையக் கூடியதாயிருக்கும் இகலோக சுகமும் பரலோக சரம்பிராப்ஜியமும் பெறுதிழக்குமாறு செய்து இறுதியில் தானுமழிந்து அவச்சொல்லையே நிதியெனக்கொண்டு அழிவதா லெய்திய பயனியாது? தான் சுகுணரணியமாயிருந்து தன் மருகியையும் சற்குணலயமாக்கி உயர்வுறுவது நலமா? அல்லது மருகியையும் சுகுமாரனையும் மற்றுமுள்ளவர்களையும் துன்புறுத்தி சந்தோஷ ரஹிதர்களாக்கி ஈற்றில் தானுமழிவது நலமா? இஃதில் நலத்தை நல்கத் தக்கதெஃ தென்பதைத் தீர்க்காலோசிக்கக் கடவர். மாமியாரால் மருகியர்கட்குச் சஞ்சலங்கள் விளைவதுபோக மருகியரால் மாமிகள் கஷ்டநிஷ்ரேமுறுதற்குமுகாந்தரம் "வரவரமாமி கழுதைபோலானாள்" என்ற முதுமொழிக்கொக்க நடக்க முயற்சிப்பதால் நற்குணமுள்ளமருகியரும்வெறுப்புற்று மாமியுடன் எதிர்க்கதுணிந்து "மாமிக்கோர் சாமிடா" ராகி இறுதியில் அதன் பயனை நற்குணிகளாய்விடுகின்றனர். கடைசியில் "அக்கினி மலையிற் கற்பூரபாணம் தொடுத்தது" போலாய்விடுகிறது. "வல்லடி வழக்கை சொல்லடி மாமி" என்ற விவாதப்புரியும் பெண்களும் பலருளர். இது இளமையிலிருந்தே நன்னடத்தையிற் பயிற்றுவிக்காதது காரணமாக நேரிட்டதெடுதி. மற்றுஞ்சிலர் கல்விமணமற்றவர்களாய் கலாஸ்பதமான கடுஞ்சொற்களைக்கூறிபீரமாய் வழங்கி ப்ரம்மீது தோஷாரோபணங்கூறி ஸதாகாலமும் பரதாபபிரியர்களாய் காலங்கழிக்கின்றனர். பின்னுஞ்சிலர் நானுவிதகிரீடாவிசேஷங்களிலுலே பாலியமும், சந்தனகுசுமவனிதாதிபோக பரவசத்திலுலேயவ்வனமும், அசத்தியலுலே வார்த்திக்கமும் போக்கிக்கொண்டு இறுதியில் ஆத்மஹிதஞ்செய்துகொள்ளாதழிகின்றனர். இங்ஙனெல்லா மாயதற்குக்காரணம் கல்வியில்லாமையே. வித்தியாவதிகளான மாமி மருகியர்கட்குள் கலகங்களிகழக்காரணம் நேருமோ? கலாவதிகளான காரியகர்த்தாக்கள் கலாவினோதத்திலேயே தமக்குள்ள அவப்பொழுதைக் கழித்து தவப்பொழுதாக்கி அதற்கும் பெருமையை நல்கி சற்குணலயம் விளைகளாய் ஜ்வலிப்பார்களேயன்றி பிறர்மீது குற்றக்கூறி நிந்தாஸ்பதமான பதங்களை வழங்கி அறனை மறந்து மறனை வேண்டி துராசார மோஹிதர்களாய் ஸ்வய நல துறந்த பரநலவ்ரதத்தர்களாய் விளங்குவரோ? இவ்விதத்தியாவிஹீனர்களே இல்லறத் துணைவிகளாய்ப் பெற்ற புமான்கள் ஸில்வாழ்க்

கையிற் சிறந்தவரெனக் கருதுவது மலடிபெற்ற மகனெற்ற முயற் கொம்பேறிக் காய்களி பிழங்குகளாதியன பறித்ததற் கொக்கும். ஆகவே "ஸ்திரீவித்தியாப்பியாசம்" நாட்டில்பரவி அபிவிர்த்தியடையவேண்டியது அத்தியாவஷ்யகமென்று பின்னுமோர் முறை இயம்புகின்றேன். கல்வியானது ஒரு தீபத்திற்குச் சமானமாயிருக்கின்றது. விவிதவிசித்திர பண்டங்களிறம்பியுள்ள இருள் சூழ்ந்த அறையொன்றில் விளக்குடன் செல்லுவோன் சன்மார்க்கப் பிரவர்த்தகளையிருப்பனேல் அங்கிருக்கும் பொருள்களை வெளிச்சத்தினுதவியாற் கண்ணுற்று பரமாச்சரிய பரிதபித்து, இவைகளை சிருஷ்டித்து மாய்கையிற் சிக்குண்டு மதிஹீனர்களாய்த் தம்மை மறந்திருக்கும் பிரஜைகட்கு அப்பொருள்களின்மீது அபேக்ஷையை உண்டாக்கி அவற்றை லாகினும் இவ்விவித விசித்திரங்களை உண்டுபண்ணிய முதல்வ ரொருவ ரெனன் றுணர்ந்து இதின் மூலமாக வேனும் உலகபாசங்களி லுழல்வதினின்று மகன்று தம்மிடம் போந்தடையானவெனக்கன்றையிழந்து கலங்கும் பசுவைப்போல் மனமிரங்கி மக்களுடைய ஆகமனத்தை அன்புடன் நிரீக்ஷிக்கும் பகவானுடைய கருணையையும், கிளியொன்றினைக் கூட்டிலடைத்து இன்பமான மொழிகள் பலவற்றைக் கற்பித்து அதனிடத்து அம்மதுரபாஷணங்களைக் கேட்டு ஆனந்திப்பாரைப்போல, பிரஜைகளை மாயை எனுங் கூட்டிலடைத்து பகுத்தறிவையும் விவேகத்தையுமீந்து அதினைக்கொண்டன்னவர் உண்டாக்கும் வஸ்துக்களையும் இயற்றுங் கருமங்களையுங் கண்ணுற்று களிப்புறும் கடவுளின் அளவற்ற அன்பையுமுணர்ந்து ஆனந்திதனுகின்றான். தன்மார்க்கனொருவன் விளக்கினுதவியால் அப்பொருள்களைக் கண்ணுற்றவிடத்து அதைக் கவர்க்கேகக் கருத்துற்று அதற்கேற்ற வஞ்சனைக்கிரைச் சிந்திகின்றான். (கல்வியாகிய) ஒரே விளக்கைக்கொண்டு சென்ற இவ்விருவரும் வெவ்வேறு நிலைமையை அடைவதற்குக் காரணமென்னே? அவரவர்களிடத்திருந்த நற்குண துற்குணங்களேயன்றே அவ்வீருவர்களையும் விவிதவண்ணங்கொள்ளும்படி செய்தது? ஆகவே கல்வியுடன் நல்லொழுக்கமும் வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆனதால் பிரதமத்தில் நமது சிறுமியர்கள் நல்லொழுக்கத்தை யனுசரிக்கும்படி செய்து பின்னர் நற்கல்வியைப் பூரணமாய் பயிற்றுவிக்கவேண்டியது அவசியகரம். அத்துடன் நல்வழியில் நிற்கும்படி கூறுவதைவிட தாங்களே யப்படி நடத்திக்காட்டி ஏதித்து விளக்கும்படியான உத்தமசீலர்கள் அப்பெண்மணிகளுக்குப் பெற்றோர்களாய் ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லேல் "ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவா" தென்பதுபோல அவர்கள் கற்ற கல்வியும் பயன்படாமல் நடத்தையிலும் காட்டமுடியாமல் பட்ட பிரயாசையனைத்தும் "விழலுக்கிரைத்த நீராய்" பிரயோஜனப்படாதொழியும். ஆகலான் இத்தகைய நலன்களுடன் பயிற்றுவிக்கப்படும் கல்வியே நன்மையை நல்கத்தக்கது. அதினுல் உபயலோக சுகமும் விளைக்கும். இவ்வுத்தமகல்வி உலகெங்கும் பரவி அபிவிர்த்தியடைதற்கேற்ற முயற்சிகளை ஆசரித்தாற்றுன் கலாவதிகளும் நாகரிகாங்கனைகளும் சுகுணவதிகளும் ஜ்வலிப்பர். நந்தேயமும் சிறப்புறும். இச்சுகுண சுந்தரிகளை ஸஹிதாக அடையும் பதிகளெய்தும் பரமானந்தத்திற் கெல்லையுமுண்டோ?! இவர்களிடம் வளரும் பாலர் பாலிகைகளாகியோர் அடையு முன்னதநிலைமையைப்பற்றியும் இந்த ஸ்திரீரத்னசிரோமணிகளால் இகபரமிரண்டிலுமின்புறலாமென்பதைக் குறித்தும் நான்எடுத்துச்சொல்லவும் வேண்டுமா? ஞாலமெங்கும் கலாவதிகளாய் பிரகாசிப்பதேல் நம்மனைவரினவரு மெவ்வளவு பயனடைவர்? அன்பீர்! இதை ஆழ்ந்து நினைமின். ஆகலான் தேசோன்னதிக்குக் காரணமாயிருக்கும் நல்லொழுக்கத்துடனமைந்த பெண்கீல்

வியை நீலகேங்கும் நிறப்ப முன்வரவேண்டியது ஒவ்வொருவருடையவும் முக்கிய கடமை. இங்ஙனம் இயற்றிலன்றே ஆனந்தமழை பொழியுமுலகில்? ஆனதுகொண்டு, ஸபையில் விளங்குஞ் சீரியர்காள்! நீவிர் அனைவரும் இவ் விஷயத்தில் மனமொத்துழைக்குமாறு பிரார்த்தித்துக்கேடுக்கொள்ளுகின் றேனென்றதோடு நிறுத்தி உங்களனைவருக்கும் வந்தனம் ஸமர்ப்பிவித்து யானின்று எடுத்துக்கொண்ட "ஸ்திரீ வித்தியாப்பியாஸ" த்தைக் குறித்த வியாஸத்தை இத்துடன் ஸமாப்தி செய்கின்றேன்.

இவ்வுபன்னியாஸத்தைச் செவியுற்ற அனைவரும் ஈடில்லா இன்பப் பெருகடைந்து ஆனந்தபரிதர்களாகி பெண்கல்வி விஷயத்தில் இனி எங் கள் மனதைச் செலுத்தாதிரோமெனக்கூறி கலாப்பிரகாசனி எனும் பெய ருனக்கேதகும் தருமென வாழ்த்தினர். பின்னர் கரகோஷத்துடன் சபை கலைய அனைவருமுறைவிடமேகினர். இப்புத்திசாதுர்ய புனிதவதியின் கலா வினோதத்தை என்னென்று புகழ்வேன்! இம்மதிமுகமங்கை தரித்த காடி தேயமு மலட்டுகந்ததே. இச்சர்வாங்க சுந்தராங்கனையை திருஷ்டித்துப்பர் ர்த்தில் எனது ஸோதரி "வனஸலோஸனி" யின் வதனம் நினைவிற்கு வரு கின்றது. அந்த ரூபம் என்னகத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டது. பழ ய நினைவுகள் மனதிலுதிக்கின்றன. அச்சுந்தரியைக் கண்டுரையாடவேணு மென்கிற ஆவலதிகரிக்கின்றது. அக்கலாவதியோ உபன்னியாச முடிந்ததும் உள்ளே போய்விட்டனள். அவளுடன் ஸம்பாஷிப்பதியாங்ஙனம்? இல் லிற்குட் பிரவேசஞ்செய்ய அச்சமாயிருக்கின்றது. நான் கன்வஞ்யிருப்பி னன்றே அச்சமுறவேண்டும்? அக்கலாப்பிரகாசனியுடன் ஸம்பாஷிப்பதோடு கூட அவ்விடத்திலேயே தற்செயலாய் எனது ஸோதரனை ரூபசந்நிதானே யுங்கண்டு களிக்கமாட்டேனா! எதற்கும் பகவானிருக்கிறார். ஏதோ போய்ப் பார்க்கின்றேன்

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

நல்லுரை.

(1) வில் (spring) உள்ள மெத்தையானது யாராவது அதின்மேரி ல் உட்கார்ந்தால் தாழ்கிறது. பாரம் நீங்கியவுடனே முன்னிருந்த நிலைமைக் கு வந்துவிடுகிறது. உலகமாய்கையில் உள்ளவர்களும் அப்படியேதான். தெ ய்வீகமான சங்கதிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறவரையில் தான் அவர்களு க்கு பகவத்விஷயம் இருக்கின்றது. தங்களுடைய நித்திய கருமங்களைச்செ ய்வதில் பிரவேசித்துவிட்டாலோ முன்னிருந்த பகவத் விஷயத்தை எல்லா ம் மறந்துவிட்டு அசுத்தராகிவிடுகிறார்கள். (2) நூலை ஒரு ஊசியில் கோர் க்கவேண்டுமானால் நூலை முறுக்கி வேறு தடையில்லாமல் உள்ளே போகும படி செய்துக்கொண்டு பிறகு ஊசிக்காதில் விடுத்தால் எளிதில் செல்லும். அதுபோல கடவுளின்பேரில் உன் மனதை நில நிறுத்தவேண்டுமானால் ஆ சை என்பதை மறந்துவிட்டு சாந்தம், அமைதி, பேதமை முதலிய குணத் தை வளர்த்து மனதைக்கடவுளின்பேரில் செலுத்து. (3) தாபசுரத்துட ன் அதிகதாக அவஸ்தைப்படும் ஒரு மனிதனை குளிர்ந்த ஜலம் நிரம்பிய கு டங்களுக்கும் வாசனையுள்ள குழம்பு அடங்கிய திறந்த பாத்திரங்களுக்கும் மத்தியில் விட்டு விட்டால் தனக்கு அதிலுல் கெடுதிவருமென்று தெரிந்தா லும், அச்சமயத்தில் அந்தத்தண்ணீரைக்குடிக்காமலும், வாசனையுள்ள குழம் டை உருசிக்காமலுமிருக்க அவனுல் சாத்தியமா? ஒரு பக்கத்தில் பெண்ணு

சை மற்றொரு பக்கத்தில் பொன்னுசை இவைகளுக்கு மத்தியிலிருக்கும் போது, சஞ்சலப்பட்டு வழிதவறும்படிச்செய்யும் ஆசையுடன் அவஸ்தைப்ப டும் மனிதனுடைய சங்கதியும் மேற்சொன்னதைப்போலாம். நிரமப்படி ந டக்கமுடியாமல் உண்மை வழியிலிருந்து தவறிக்கெட்டுப்போகிறான். (4) அப்போது பிறந்த கன்று தான் நிடமாய் நிற்கத்தெரிந்துகொள்ளுகிறவரை அது அடிக்கடி தடுமாறி விழுந்துகொண்டேயிருக்கிறது. அதுபோல பக்தி மார்க்கத்தில் கடைத்தேறுவதற்கு முன்னி நேரிடும் தவறுதல்கள் அநேகம்.

உருஷிய ஜப்பானிய யுத்தம்.

இந்த யுத்தம் கடந்துகொண்டேதானிருக்கின்றது. இது முடிவுபெ றும் காள் என்றே உணர்கிலோம். தேசாபிமானமெனும் வியாதியால் பிடி க்கப்பட்டு இருவர்பக்கத்திலும் அநேகர்மாண்டு போகின்றனர். போர்ட் ஆர்த ருக்குள் ஜப்பானியர் பிரவேசித்துவிட்டனரென்றும், ஜலம் கோட்டைக்குள் வராதபடி தண்ணீர்வேலைகளை ஜப்பானியர் பிடித்துக்கொண்டனரென்றும் 5-வாரத்துக்குதான் போர்ட் ஆர்தரில் ஆகாரமிருக்கின்றதென்றும் அடைப் பட்டிருக்கும் துருப்புகள் ஜப்பானியரை சரணடையத் தயாராயிருக்கிறதெ ன்றும் சொல்லப்படுகின்றதாலும் பெரும்பாலும் யுத்தத்தைப்பற்றி வரும் தந்திகள் நம்பக்கூடியதாயில்லை. லயோ யாங் எனுமிடத்தில் பலமான சண் டையொன்று நிகழ்ந்தது. இந்த யுத்தத்தில் ஜெனரல் குரோபாட்கின் தப் பித்துக்கொண்டது மிகவும் மெச்சத்தக்கது. ருஷிய துரைத்தனத்தார் தங் கள் சைனியத்திற்காக ஒரு வாரத்துக்கு செலவழிப்பது 10-லக்ஷம் பவுனும் கடைசியில் எப்படி முடிகிறதோ தெரியவில்லை.

காங்கிரஸும் பொருட் காட்சியும்.

இவ்வருஷக்கடைசியில் பம்பாய்நகரத்தில் கூடப்போகும் காங்கிரஸ் வெகு விமரிசையாக நடைபெறுமென்று தோற்றப்படுகிறது. அத்துடன் பொருட்காட்சியும் பம்பாய் கவர்னரான லாமிங்டன் பிரபுவால் டிசம்பர்மீ 10உ திறக்கப்படுவதால் அதுவும் மிகச்சிறப்பாக நிறைவேறுமென்று தெரிகி ன்றது. பரோடா மஹாராஜா அவர்கள் இப்பொருட்காக்ஷிக்கு 5000ரூ கன் கொடையளித்துளராம். இதற்சென்று காட்சிப்பொருள்கள் அனுப்ப இஷ் டப்படுவோர் இம்மதி 15-தேதிக்குள்ளாக தமது சாமான்களை அங்கு வைப்ப தற்கு உத்திரவு பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அனுப்பும் சாமான்கள் நவம்பர்-மீ 30-உகளுள்ளாக அவ்விடம் போய்ச் சேரவேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தமானங்கள்.

இந்தியாதேசமானது 15-லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமும் மூவா யிரத்து நானூறலக்ஷம் ஜனத்தொகையும் கொண்டுளது. லார்ட் கர்ஸன் இம்மதி 14-உயில் பம்பாய்க்குவந்து சேருவாரெனவும் இம்மதி 18-உயில் மெல்லாவைவிட்டுலார்ட்ஜும்தில் சென்னைக்கு புறப்படுவாரென்றும்தெரிகிறது நாகையில் காலையில் விவாகமான மங்கையொருவன் மாலையில் ஒரு குழவி யை ஈன்றனளாம். மைசூரில் வாரம் ஒன்றுக்கு சுமார் 1000 பேர் பிளேக் குக்கிரையாகினறனர். இப்பிளேக்கு மைசூருக்கு வந்து 6 வருஷங்களாகிற து. இந்தியாவிலுள்ள சகல இருப்புப்பாதைகளிலும் மெயில்வண்டிகளுடன் சாப்பிடுதற்கனுகூலமானவண்டிகளும் இனி சேர்த்துவிடப்படுமாம். திருக்க ழுக்குன்றத்திருவிலுள்ள ஒரு குகையில் யோகி ஒருவர் 45 காள் வரையில் அ ன்னாகாரமின்றி சமாதி நிலைமையிலிருந்தனராம்.

திருச்சிராபுர சம்பவ மஞ்சரி.

திருச்சி முனிஸிபாலிட்டிக்கு மிஸ்டர் K. S. கணபதிஐயர் M. A. M. L. சேர்மனாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். தந்தை தனயனைக் காவிரி நதியில் தள்ளிவிட்ட கேஸ் விசாரணைக்கு வந்திருக்கின்றதாயினும் இன்னும் முடிவு பெறவில்லை. இதுவரையில் இங்கரில் நடைபெற்று வந்த "ஹிந்து ராயல் டிராமாடிக் கம்பெனி" கும்பகோணத்திற்குப் போய்விட்டன.

விநோத விசித்திர விஷய விளக்கம்.

காதிதத்தாற் செய்யப்படும் பொய்ப்பற்கள் ஒரு மனிதனுக்கு இறக்கு மளவும் உறுதியாய் நிற்கத்தக்கதாம். தென்அமெரிக்காவில் கருங்கல்லின் மீதுபயிராகும் ஒருவிதமரத்திலிருந்து மஞ்சள் நிறத்துடன் சுறக்கும் பாலில் பசும்பாலுக்குள்ள குணமெல்லாம் பொருந்தியிருக்கிறதாம். ஒரு மணியை ஜலத்தினுள் அமிழ்த்தி அடித்தால் 5200 அடிதூரமும், வெளியில் காற்றுள்ள இடத்தில் அடித்தால் 456 அடிதூரமும் அதிசப்தம் கேட்குமாம். பல்லினு லும் காலாலும் எழுதத்தெரிந்தவரொருவர் அமெரிக்காவிலுளராம். அவர்பெ யர் லூயிஜீல்கி என்றும் இளமை முதற்கொண்டு கரங்களாலெழுதப்பழகவி ல்லையென்றும் தெரிகிறது.

விதேச வர்த்தமானங்கள்.

எட்வர்ட்டரசர் அவ்வமிஷத்து 39-வது தலைமுறையாம். நெட்டா லிலுள்ள இந்தியர்களில் பலர் தற்கொலைபுரிந்து கொள்ளுகின்றனராம். ரு ஷிய சக்கிரவர்த்தியிடத்திலுள்ள கைக்கெடியாரமொன்று 6300-ரூபாய் ம திப்புளதாம். ஆப்கானிஸ்தானத்து அமீர் தமது குடிகளிடமிருந்து வரி வ சூல்செய்த 3-லக்ஷம் ரூபாயுடன் ருஷியாவுக்கு ஓடிப்போன மிர் ஜாதர்வே சைமீண்டும் கண்டுபிடித்து அவனையும் அவனுடன் சம்பந்தப்பட்டவர்களையும் சிறையிலடைத்து அவர்களின் கண்களைப்பிடுங்கி காதுகளை யறித்தெறிந்த னராம். ரயில்மார்க்கம்போகும் தம்பதிகட்கு 2-டிக்கட்டுக்குப் பதில் 1½-டிக் கட் கொடுக்கும் வழக்கம் நார்வே தேசத்திலுண்டாம்.

டிபெட் படையனுப்பு.

சென்ற மீ 7உ யன்று லாஸாவில் டிபெட்டாருடன் சமாதான உ டன் படிக்கை நிறைவேறிவிட்டது. இனி அவ்விடமிருக்கும் ஆங்கிலேய ப்படைகள் பிறப்பட்டு வந்து சேரும். வரும் வழியில் எத்தனை உயிர்ச்சேத ங்கள்உண்டாகுமோ அறிகிலோம். படையெடுப்பு நஷ்ட ஈட்டை மூன்றுமு றையாக டிபெட்டார்கள் தரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள தென்று ம் இப்படையெடுப்புக்காக இதுவரையில் 8 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டி ருக்கிறதென்றும் தெரியவருகிறது.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்				
101	9	தீர்.கள்	தீர்கள்.	ஷை	41	கா,வல்	காவல்,
ஷை	28	கலி	இக	102	21	குழாதத்துக்கு	குழாத்துக்கு
				ஷை	41	தகங்கள்	தங்கள்

பிரஜாபந்துகூடலன்.

பருவம் 1. } திருச்சி 1904-ஆவது நவம்பர்-மீ { இலக்கம்8

நம்மவர்கள் முன்னுக்குவருவதெப்படி.

முன்தொடர்ச்சி.

பொதுநல விஷயமென்றால் அதுவா ... ... பின்னு ல் பார்த்துக்கொள்ளுவோம் என்று அலக்ஷியமாய் பதில் சொல்லுவதில் ந ம்மவர்களே மிகத்தேர்ந்தவர்கள். இனியேனும் இந்த வார்த்தையை இன் னொருவர் உரைக்கும்படி இடந்தராமல் தேசநலத்தைக்கருதி முன்வருவார் களானால் நலமாயிருக்கும். சிலந்தி, பரு, குருவி, காகம், முதலிய அற்ப ஜ ந்துக்கள்கூடவன்றே தங்கட்குத்தேவையானவற்றைசரீரப்பிரயாசைப்பட்டு ழைத்துத் தாங்களே செய்துகொள்கின்றன? அக்கேவல ஜந்துக்களுக்குந் தாழ்வானவர்களாகவன்றே நம்மவர்களிருக்கின்றார்கள்? இவர்களுக்குப்ப குத்தறிவும் விவேகமும் இருந்தென்ன பயன்? "இத்தேசத்தியவர்கள் த ங்களுக்கு வேண்டியவற்றை எவராவது சேகரித்துக்கொடுத்தால் ஆயாசமின் றி அனுபவிக்கத் தகுந்தவர்களாக இருக்கின்றார்களென்று "டாக்டர் மர்டா க்" சொல்லியது" உண்மையாகத்தானே இருக்கிறது! முற்காலத்தில் மி கவும் கொண்டாடப்பட்டுவந்த உழவு தொழிலானது தற்காலத்தில் வெகு கேவல நிலைமையிலிருக்கின்றது. அதைவீன முறைகளையநுசரித்து இ யந்திர உபயோகம் நூதன கலப்பை முதலிய உபகரணங்களைக்கொண்டு உறமான எருவிட்டு சீர்திருத்தினால் எவ்வளவோ பிரயோஜனமடையலா மே? இவைகளனைத்தையும் சீர்திருத்த போதுமான பணம் சேகரமாகவே ண்டும். இதற்கு தனவான்களுடைய உதவி வேண்டியிருக்கிறது. அவர் கள் பொதுநலப்பிரியர்களாய் தேசாபிமானிகளாயிருக்கவேண்டும். இதோடி கூட ஒற்றுமை மிகவும் அவஸ்யகரம். அத்துடன் தன்னயம்பாராட்டும்கு ணத்தை அறவே விட்டொழித்து ஒருவரையொருவர் வஞ்சிக்காமல் சத்தி யத்துடன் நடந்து தேசநலத்தைக்கருதி ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பொருளைச்சேகரித்து "பண்ட்" எனும் பாதுகாப்பில் வைத்து கவர்ன்மெ ண்டில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டு சேர்ந்திருப்பவர்களனைவரும் உத்தமசீலர்க ளாயிருக்கவேண்டும். அதில் வந்த பணத்தைக்கொண்டு சுதேசகைத்தொ ழிலையும் வியவசாய சீர்திருத்தங்களையும் மற்றுமுள்ள தேசாபிவிர்த்திக்குரிய பலவற்றையும் கவனித்து காளடைவில் அதை முன்னுக்குக்கொண்டுவரவே ண்டும். இத்துடன் நமதுநாட்டின் வீண் பட்டையொழித்து அன்னிய தே சசாமான்களை வாங்கும் வழக்கத்தை நிறுத்தி ஸ்வதேசத்தில்உற்பத்திசெய்த வற்றையே அனுபவிக்கவேணுமென்ற வீரவிரதங்கொள்ளவேண்டும். இவ் வளவிற்கும் சுதேச நாகரீகர்களான தனவான்களுடைய நேசமும், போது

மான தொழில விசயமும், வியாபாரமுயற்சியும், ஒற்றுமையும், தேசாபிவிர்த்தியில் நோக்கமும், பத்திரிகாபிமானமும், உயர்தரக்கல்வியும், சத்தியமும், அத்தியாவசியகரமாய் வேண்டற்பாலது. சனதேசமொன்றுதவிர வேறெந்த தேசமும் இந்தியா தேசத்தின் விஸ்தீரணத்தை புடையதாயிருக்கவில்லை. இவ்வளவு பெரிய இந்து தேசமானது சீர்திருந்தி கல்வி, கைத்தொழில், வர்த்தகம், வியவசாயம், நாகரிகம், ஒற்றுமை, தேசாபிமானம், பத்திரிகாபிமானம், முதலியன நிறைந்து பிரகாசிக்குமாறுல் இந்தியர்களடையும் மேண்மைக்களவுமுண்டோ? இவ்விந்தியா தேசத்திற்நேயான தேசமும் உலகிலிருக்குமா? நம்மவர் இதைக்கவனித்து அதின்படி செய்ய முயற்சிப்பார்களாயல் அதின் பயன்களை ஒருக்கால் இப்பொழுதடையாவிட்டாலும் நமக்குப்பின் னிருப்பவர்களாவது பெறுவார்களென்பது உண்மையல்லவா? அவர்களடையும் கீர்த்தி உலகெங்குமிலங்குமாகலான் அதற்குக் காரணமாயிருந்த நம்மவர்கள் இறந்தும் இறவாப்பெயர்பூண்டு நிற்புறுவார்களன்றே! இராஜ்ஜிய சுதந்தரங்களைப்பெற காங்கிரஸ் சபையார் முன்னின்று உழைக்கின்றனர். அதைப்போலவே நாடு செழிப்பதற்குரியவற்றை நம்மவர்கள் கவனிக்கவேண்டியதவசியகரம். இது மிகப்பெரிய விஷயமாயிருப்பினும் "ஏறம்பூரக்கல்லுந்தேயும்" எனு முதுமொழியைச்சிந்தித்து இவ்வளவு தூரம் நாம் எழுதியதை "எட்டுச்சுரக்கா", யாக்காமல் ஒவ்வொருவரும் தங்களாலியன்றவு பிரயாசப்பட்டு தேசோன்னதிக்குகாரணர்களாய்இலங்குமாறுகோறுகிறேம்.

முற்றிற்று.

கற்பலங்காரமாட்சி.

முன்தொடர்ச்சி.

மூற்காலத்துப் பதிவிரதா ஸ்ரோன்மணிகளில் சுக்கிரமதியினுல் காட்டுத்தீயைக் குளிரச்செய்ததுங்கற்பே! தயரதராயினுல் தன்னே இச்சித்த வனவேடனை எரித்து நீராக்கியதுங்கற்பே! அதருபையினுல் தன் கற்பைச் சோதிக்கவந்த திரிமூர்த்திகளையும் மழலைமொழிச் சிறு குழவிகளாக்கி ஸ்தன்னியபானம் பண்ணுவித்ததும் கற்பே! சாவித்திரியினுல் தன்னுயகனுயிரை யமன்கொண்டுபோகிற தருணத்தில் அவ்வந்தகனுடனே வாதாடி உயிரை மீட்டதும் கற்பே! நளாயணியினுல் ஆணிமாண்டவியர் சாபத்தால் தனக்கு வைதவியம் வராது பொழுவிடியாதிருக்கப் பிரதிசாபமிட்டுப்பின் தேவர்கள் வேண்ட சூரியனுதயமாகும்படி அனுக்கிரகித்ததும் கற்பே! திருவள்ளுவநாயனரின் மனைவியார் தங்கணவரது பணியிலிருக்கையில் ஓர் தபசிவந்து பிச்சை கேட்க பிச்சையிடத்தாமதமானதால் அத்தபசி கோபங்கொண்டு எறிக்கும்படி உற்றுப்பார்க்கு மங்கினவைக்கண்டு "இளைய கொக்கென்று கினைத்தாயோ கொங்கணவா" என்றுரைக்கச்செய்ததும் கற்பே!

இவ்வாறெல்லாம் கற்புடையமகளிரின் பெருமைகள் இவ்வுலகத்தின் கண் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிப்பிரகாசித்தலினுலன்றே முனிவர்களாலும் அனவிடற்பாலதென்று அறிய நூல்கள் கதறுகின்றது.

ஆகையால் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நற்குணங்களுடைய உத்தமப்பெண்மணிகளே! இப்புத்திமதிகளைக்கேட்டு அதன்படி நடந்து இருமை யின்பத்தையுமடைந்து மங்களகரமாய் வாழ்க்கடவீர்களாக.

முற்றிற்று,

"தஞ்சைபுரிநேசன்"

இந்தியர்களின் தூக்கமும் இந்தியப் பத்திரிகைகளின் நிலைமையும்..

முன்தொடர்ச்சி.

இங்கிலாண்டியர் பத்திரிகைகளைச்சீர்திருத்தவைத்து அவர்களைக்கெடவிடாது அவைகளைத் தங்களின் மூலசாதனமெனக் காப்பாற்றுவர். இந்தியரோ அவற்றை அடிக்கடி சர்க்கரை மடித்தாவது மூலையிலெறிந்தாவது அல்லது ஆடிப்பட்டங்கட்டிக் காற்றில் பறக்கவாவதுவிடுவர். இங்கிலாண்டியர்பத்திரிகையில்சொல்லியவிஷயங்களை சத்தியவாகென்றகம்புவர். இந்தியரோ இந்தப்புழுருக்கு ஈடு எங்குமில்லையென்பர். இங்கிலாண்டியர் பத்திரிகைகளை டம்பத்துக்காயினும் வீண்விஷயமென்றுயினும் கருதி அவற்றிற்காக மாத்திரம் வாங்குவதில்லை. இந்தியரோ பத்திரிகைகளைப்பார்த்தால் தங்கள் பயனடைவோமென்றுயினும் பல ஜனங்களின் நன்மைக்கு ஏதுவாகிற பத்திரிகையை பலபேரும் ஆதரிக்கவேண்டுவது அவசியத்தானே என்றுயினும் கருதி வாங்குவதில்லை. இங்கிலாண்டியர் பத்திரிகைக்கு செலுத்தவேண்டிய சந்தாத்தொகையைச்செலுத்தக் குறித்த காலத்துக்கு முந்தியே அனுப்பிவிட எதிர்பார்த்துக்கொண்டு தாம் தொகையை அனுப்பத்தவறினுல் தம்மைப்போன்ற மற்ற கையொப்பக்காரர்களும் அவ்விதமே செய்ய நேரிட்டு அதனுல் பத்திரிகை நஷ்டத்திற்குட்பட்டு நின்றுவிடக்கூடுமேயென்றுநினைப்பர். இந்தியரோ குறித்த காலத்தில் சந்தாதுகையை செலுத்தாதிருத்தால் வரும் மோசம் யாதென்றும் "அக்கப்போர் ஆட்கள் கொடித்து வைத்தமாதிரி பணத்தை அனுப்புங்கள், அனுப்புங்கள்" என்று பலமுறையும் கதறுகிறார்களென்றுஞ்சொல்லுவர்.

ஆகவே இவ்விருநிறத்தாருள் பத்திரிகையில் அபிமானமுற்றராகிய இங்கிலாண்டியர் தங்கள் தேசத்தை நாளுக்கு நாள் நன்னிலையாக்கி வருவதுடன் தாங்களும் நாளுக்கு நாள் நாகரீகமடைந்து சுகஜீவனத்துடன் பொன்னுலகத்தாரும் மெச்சும்படி வாழ்ந்துவருகிறார்கள். இந்தியரோவெனில் ஒற்றுமை குலைந்து கேவலமாக மதிக்கப்பட்டு வறுமை வயத்தராய் வாடித்தவிக்கிறார்கள். காரணம் பத்திரிகாபிமானமும் அதைப்படிக்கும் விருப்பும் யாதொன்றையும் ஆராய்தலும் இல்லாமையே. இதனுல் இந்தியர் அனேவரையுமே அவ்விதம் சொல்லவந்தோமில்லை. பதினுயிரத்திலொருவர் பத்திரிகாபிவிர்த்தியின் நிருவாகமும் பரிபாலனமும் உடையவர்களாயிருக்கலாம். அம்மட்டில் நின்றால் போதுமானதா? அளவற்ற தொல்லைவரம்பாயிய பத்திரிகா நிருவாகத்துக்கு இவ்வொரு சிலர் உதவி எம்மாத்திரம்? அது பற்றியே பதினுயிரத்திலொருவரைக்கொண்டு இந்தியாவைச் சொல்லக்கூடாமல் முழுவதும் இல்லையென்றே இதுவிஷயத்தில்சொல்லத்தணிந்தோம். இப்படியிருப்பின் இந்தியாவில் எப்படி க்ஷேம சுரியன் வெளிப்பட்டு பிரகாசிக்கும்?

ஆதலின், பலவிதத்திலும் பத்திரிகைகளைப் பரிபாலித்து பொதுஜன நன்மையை நாடவேண்டியதே நம்மவர்களின் கடமையென்று பல முறையும் பல பத்திரிகைகளிலும் எடுத்தோதியவாறு நாம் இங்குங்கூறுகின்றேம். கடவுள் கிருபை பரிபூரணமாக. ஓம் சுபம். சுபம்.

தஞ்சைபுரிநேசன்.

முற்றிற்று.

காலமறிந்து குற்றங்கடிதல்.

(முன்தொடர்ச்சி.)

அங்கே அவள் அம்மகனை என்ன தண்டித்தாளோ அது ஒருவருக்கும் தெரியாது. இவ்வாறு அந்தப்பையன் பாலையை திருடிக்கொண்டுவந்த வெட்கக்கேடான செய்தியை அவர்கள் அப்புறம் மற்றொருவரோடும் சொல்லவில்லை. சுகதுக்கங்களுக்கு உடன்பட்டவனை கணவனுக்கு மாத்திரம் அவள் தெரிவித்தாள். அன்றுமுதல் அச்சிறுவன் "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்ற தாய்சொல்லுகிற ஒவ்வொரு வாக்கியமும் வேதவாக்கியம்போலக்கொண்டி அவள் சொற்படி கேட்டு நடந்துவந்தான். அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அவளுக்குத் துணையாயிருந்து தன் சகோதர சகோதரிகளுக்கும் வேண்டிய நீதிநன்னெறிகளைக்கற்பித்து வந்தான். இவ்வாறே எழெட்டு வருஷகாலம் சென்றது. இதற்குள் அவனுடைய யோக்கியதை எங்கும் பரவியது. அரசனுல் அவன் ஒரு பெரிய உத்தியோகசாலையில் பொக்கிஷதாரனுக நியமிக்கப்பட்டான். அவன் சத்திய வாக்கு உடையவனென்று எல்லோரும் அவனை நம்பத்தொடங்கினர்கள். அவனிடத்தில் எந்த விஷயத்தைப்பற்றியும் சந்தேகப்படுகிறவர்கள் ஒருவருமில்லை. அதனுல் அவன் வெகுசீக்கிரத்தில் இன்னும்மேலான அதிகாரங்களைப்பெற்று மேன்மேலும் விருத்தியடையலானன். பின்பு ஒரு சமயத்தில் இவ்விஷயங்களைப் பற்றித்தாயுடன் பேசும்பொழுது ஒரு நாள் பொம்மையும் கையுமாய் என்னை நீ கடைக்காரனிடத்திற்ற இழுத்துக்கொண்டு போனையே, அது எனக்கு காலத்தில் கனைப்பித்ததுபோலாயிற்று, அந்தச்சமயத்தில் நீ அப்படிச்செய்திராமற்போனுல் இந்த மேலான பதவிக்கு நான் ஒரு போதும் வந்திருக்கமாட்டேன். நீ அவ்வாறு செய்தபிறகு எனக்குவேண்டியபொருளைப் பெற்றுக்கொள்ள கையில் ஒரு காசுகூடக் கிடைக்காமல் நான் வருத்தப்பட்ட சமயங்கள் பலவுண்டு. அப்படிப்பட்ட காலங்களில் நீயவழியில் மனஞ்செல்லாமல் அதைத்தடுப்பது மிகவும் கடினமாயிருந்தது. அத்தருணங்களில் மனதுபோனபடி போக ஒட்டாமல் என்னைக்காப்பாற்றி முன்னுக்குக்கொண்டுவந்தவர் கடவுளே. இதன் பெருமை அக்காலத்தில் எனக்குச்சிறிதும் தெரியாமற்போயிற்று. இப்படி ஏற்றகாலத்தில் கண்டிக்கப்படாமையாற்றான் அநேகம்பின்னைகள் அநியாயமாய் அழிந்துபோகிறர்களென்னும் உண்மையை நான் அறிந்துகொள்ளலானேன். அந்தக்காலத்தில் நீ ஐயோ பாவமென்று என்னைச் சும்மாவிட்டிருந்தால் இப்போது நான் என்ன கதியாயிருப்பேனே? இப்படியெல்லாம் பாடுபட்டு மக்களை முன்னுக்குக்கொண்டுவருவதினுலேதான் "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என சொல்லப்பட்டிருக்கிறதென்று கூறி தாயினுல்தான் முன்னுக்குவந்ததை நினைத்து அவளைத் தெய்வமாகக்கொண்டாடினன். ஆதலால் பெற்றோர்களெல்லோரும் தமது மக்களிடத்தில் குற்றங்கண்டபோதே அவர்களை இவ்வாறு சண்டித்து வருவார்களானுல் அவர்கள் கல்வழிப்பட்டு சுகமாக வாழ்வார்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

முற்றிற்று.

ஓர் உபந்நியாசம்.

"மலர் மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்றபடி ஒப்புயர்வற்ற கடவுள் பாதமே துணையெனக் கொண்டோர்கள் எவரோ அவரே நீடுழிவாழ்வார். மற்றபடி முடிசார்ந்த மன்னரும் மற்று முள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பலாய் வெந்து போவா ரென்பது நிண்ணம். எத்தனை நாளிருந்தாலும் ஒரு நாளிறப்பது சத்தியம். "நெருநலோ அசன்றதின்று விடிந்து பகலாயிற்று நிமிஷந்தன்னில் அருணனே அஸ்தமிப்பான் நிசிவரும் பின் போம் மறுநாளாகு மிவ்வாறொரு நாளைப் பல நாளாய்த் தின்களாய் உண்டதுவாய் உறவுகொண்டிங் கருநாளாம் ஆயுள்நாள் அழிவதனை உணராயோ அவலநெஞ்சே" என்றபடி நாள், வாரம், மாதம், வருஷம் இப்படியே விருதாவாகக் கழித்து முடிவில் இறப்ப தன்றி இருப்பதுண்டோ? "நீரிற் குமிழி இளமை நிறை செல்வம், நீரிற் சுருட்டு நெருநிரைகள், நீரில் எழுத்தாகும் யாக்கை." என்றபடி இளமைப் பிராயம் நீரிலெழுந்த குமிழி போற்கடிதகலும். அருகுதுளி பனியனைய சிறியதுளி பெருகியொரு வாலருபமாகிய நாம் சற்குரு கடாக்ஷத்தால் சகலகலைகளையுங் கற்கவேண்டும். "கற்கக் கசடற கற்பவை கற்றபின் நிற்கவதற்குத் தக" என்றபடி நின்று அக்கல்வியால் தர்மார்த்த காம மோக்ஷமெனும் சதுர் வித புருஷார்த்தங்களையு மடையவேண்டும். அப்படிக்கடையக் கற்ற கல்வியின்படி நின்று சன்மார்க்கம் பற்றி யொழுகல் வேண்டுமன்றே? இதை விடுத்து மூவாசையான மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்பதில் மனம்வைத்து, பிரபஞ்ச லௌகீக வஸ்துக்களை விருத்திசெய்ய வேண்டுமென் றேங்கி, புல்லருக்கிதஞ் சொல்லித்தாங்கி, புண்ணியநெறிநீங்கி, பொல்லாங்குவாங்கி, பொழுததவருமல் உண்டு வீங்கி, உயிர் மாண்டார் உலகங் கட்டியாண்டார் உயிர்கொண்டு மீண்டாருண்டோ? ஆதலால் தெய்வசித்தம் போலன்றி, யதுதாண்டார். இந்த உலகவாசிகளின் செல்வமோ சமுத்திரத்தின் அலைபோல் வருவதும் போவதுமாயிருக்கும். "உடமையும் வறுமையு மொருவழி நில்லா, குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் கண்ணிலும் நண்ணுவர், அறத்திடு பிச்சைக் கூவியிறப்போ ரரசரோடிருந் தரசாளினுமாளுவர்." வண்டி ஓடத்திலேறும். ஓடம் வண்டியிலேறும். நாள்தோறும் நாம் கொண்ட பொருள் கை மாறும். என்று வேதங்கூறும். எம் சொல்லோ நிறைவேறும். சட்டென்று தேகந்தான் பொட்டென்று வீழ்ந்திட்டால் கிட்ட ஒருத்தரும் நில்லரே. குழிவெட்டென்பார் பிரேதத்தைக் கட்டென்பார் கட்டைமேல் கொட்டென்பார். ஆதலால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுதல் அவசியகரம். கல்வியின் பிரயோஜனத்தைச் சுருக்கி ஆராயுமிடத்து நித்யாநித்யவிவேகமொன்று, இகமுத்திரார்த்த பரபோகவிராகமிரண்டு, சமாதி கட்டசம்பத்துமூன்று, மூமுக்ஷுத்வம் நான்குதான். தனதான்ய முதலான சம்பத்துசாஸ்வதமோ? அதற்காகயிரத்தை. தினமும்கவலைவீளைந்திடெவித்தி. சிச்சி இதனை விரும்புதல் விபத்து. நித்யத்தைப் பற்றி நிற்பது சத்து. கடவுளின் உபய சரணாரவிந்தங்களை இடைவிடாது பஜித்து நெக்குவிட்டுருகி ஆனந்தபாஸ்பமிரு கண்களிற் பெருகப் பரவசமாகி நிற்பது தான் பக்தி. இதுவே முக்தி. ஜென்மமெடுத்த பிறகு செய்யவேண்டிய முக்கியமான விஷயத்தை விடுத்து ஏதேதோ விருதாவான காரியங்களைச் செய்வது மானுஷ்கரீதியாகுமோ? உடம்பினு லாயபயனுவதெல்லாம் "உடம்பினுத்தமனேக்கண்"

என்றபடி மற்றவர் தன்னிடத்து பல நற்குணங்களைக் காணுமாறு உத்தமனுய் நடந்து கொள்வதே மாண்பு. கலியாண சந்தடியில் தாலிகட்டின மறந்தையைப்போல் ஜென்மலாபமான தெய்வாராதனையை மறந்து இருந்தவர்கள் என்பெறுவார்கள்? நரசம்பெறுவார்கள். இது சரதலாமலகமன்றே? தாயென்றும், தந்தையென்றும், அண்ணன் தம்பியென்றும், மாமன் மாமியென்றும், நிற்றப்பன் பெரியப்பனென்றும் பல விதமான முறைகளைக் கொண்டு தொந்தம் பாராட்டுகின்ற இப்பிரபஞ்சமுழுதும் கண்கட்டு ஜாலவித்தையல்லால் வேறில்லை. அண்டஜம், சுவேதஜம், ஜராயுஜம், உற்பிஜம் என்னும் சதுர்வித தியோனிகளில் தேவர், மனிதர், மிருகம், பக்ஷிகள், நீர்வாழ்வன, தாவர ஜங்கமமெனப்படும் எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு லக்ஷஜீவராசிகள் பேதப்பட வகுத்த இப்பிரபஞ்ச ருஷ்டியில் கர்மானு பந்தப்பிரகாரம் இன்பதின்பங்களை யனுபவித்து இறப்பதும் பிறப்பதுங்கொண்டு ஊசாலாடுவதை விட்டு ஒரு நிலைமைத்தான நற்பதவியில் ஜென்ன மரணமென்பதின்றி நித்யத்தைப் பெறுவது மகாதூர்லபம். ஆனதினால் பெறுதற்கரிய பேரானந்தத்தையடையக் கருதித்தம் மறபுக்கேற்ற நியதிவழுவாது ஸத்கருமங்களைப் புரிந்து இன்புற வாழ்ந்து சர்ஜ்ஜன மித்திரர்களாய் சாதுசங்கமர்களாய் சன்மார்க்கப் பிரவர்த்தகர்களாய் பரநாரீசோதரர்களாய் இலங்கி இகபரசுக சாதனமடைவீராக.

☞ க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

கலாப்பிரகாசனி.

ஆறவது அந்தியாயம்.

அமளியறையி லென தருகிற் றுயின்ற தூய்மையுற்ற மனத்தினளா மென் பிராணேஸ்வரி எகுது சென்றனள்? யான் நித்ராகத்தையிருப்புழி செப்பரிதாய கொடுமைச் செய்கைத் திறலுடைய வஞ்சமிக்கா ரெவரோ இவண்போந்து கட்டிலொடு காரிகையையும் கவர்ந்தேகினர் போலிருக்கின்றதே! பலவீடங்களிற் றேடியும் பயனிலதே! நவமணியிலு மரிய குணமணியாமென் கண்மணியே! கண்குளிர மனமுவக்க வுனைக் கண்ணுறு ஞான்றுமுனதோ! பரியாலோசித்த மென் மனதிற்கொன்றுந் தோற்றிலதே! வாழ்க்கைத் துணைவியைப்பிரிந்து வையகத்தினி லிபாங்கன மூய்வேன்! என்னின்னுயிர் நாயகீ! கண்ணினுண்மணியே! உனைப்பிரிந் நியானிவ்வேலை சூழலகிற் கண்ணிழவன்போலானேன்! ஊன்றுகோலு முற்ற துணையுமற்றேன்! எட்டுத்திக்கும் மட்டில்லாக் கீர்த்தி பெற்றக் கோற்ற ஞமெனக்குமிவ் வவகதி வந்துற்றதே! அம்மெல்லியலாள் எங்கு அன்னேதகமின்றி சஞ்சலமுற்ற பிரலாபித் தலறுகின்றனளோ? பிராணகாந்தையைப் பீதியுறச்செய் திவண் மனம் புழுங்கிப் புலம்பு மென்றன் வீரமிருந்தவாறு தானென்னே! என்னே!! வனஸலோசனீ! வனிதாசிரோமணீ! சௌந்தர்யசரீரிணீ! கருணவரூபினீ! நவகுமாரீ! என்றனுயிர்த்தோழீ! என்மாட்டெனின்னமும் வந்திலாய்? உனைப்பிரிந்தினி யானுய்தலாற் பயனென்? யானுமினி யிவ்வில்வாழ்க்கையிற் சிறந்துய்வனே? இன்றட னுன்னுடனுரையாடி ஸப்த தினங்களாயினவே! ஸ்வர்க்காரோகணமாயினேயோ! இதுவுமென் காலவேற்றுமையோ! மனைவியின் மதிமுகத்தைக்கண்டன்றே மனம்பொறுத்திருந்தேன்! அந்தோ! என் காலகதியைப்பற்றி யாரிடமியம்

புவேன்! எற்சனவே என் மாதாபிதாக்களை யிழந்து மனைவியே சதமெனக் கருதி இல்வாழ்க்கையை நடத்தி வந்தேனே! அதுவும் ஒட்டாமற்போனதே! எனக்களவற்ற செல்வங்களிருப்பினும் யாது பயன்? "காடுஞ்செடியு மவளாகத் தோற்றுசென் கண்கட்கே" என்றபடி எவ்வுருவைக் கண்ணுறினு மென்னில்லாளெனக் கருத்தழிந்து கவலைகொடுக்கின்றதே! ஐயோ தெய்வமே! கற்புடைமாதர் கணவரைப் பிரிந்தொரு கணமுந் தரியாரன்றே? என் மனதுக்கினிசந்த மதிமுக சுந்தரி எங்கு தவிக்கின்றனளோ? எக்கெதியாயினளோ? ஒன்று மறிகிலேனே! பாவையர்க்கரசே! நினைப்பார்ப்பது மென்றே? இஃதும் பிறவா நெறி தரு பெருமானருளோ? மேதினியின் வாழ்வதனை மெய்யென்றிருந்தேனையோ! இஃதெவரியற்றிய சதியோ! அன்னஞட் பங்கயத்தோனிட்ட விதிப்பயனே? அற்றேல் முற்பிறப்பிலியற்றிய பாபமோ? வானவர்க்கரசே! என்றுயிரை வலோயறுத்தரைக்க வல்லனல்லேன்! அநுதாகுகா! அடஞ்செய் தகற்றிடலடிமையாலுய்ய இடம்வேறு தானுளதோ?

"விதிதனை விலக்க வல்ல வீரனு மொருவ னுண்டோ
கதியிது வெனக்கு வாய்த்த கஷ்டத்தை யாற்றப் பாற்றே
மதிதனிற் சிறந்த வென்றன் மனைவியின் பிரிவை யெண்ணி
நதியெனக் கண்ணீ ரோட நலிந்துமே கரைகின்றேனுல்!"

இப்பிறப்பி லிழந்த என்ற ஞாயிர்க் காதலினை யெப்பிறப்பிலு மென்றனுக் கீக்தருள்வாய் ஜெகதீசா! பிறவி பெறுதற்கும் பின் வாங்கேன்! பெற்றல் மறவாதன்னருளே வழுத்த வருள் ஜகதீசா! ஐயோ ஞானபரணனுக்கெழுதிவைத்திருந்த கடிதமும் காணமற்போய்விட்டதே!— — —

[மந்திரிகளிருவர் வருகின்றனர்]

ஹே அமைச்ச திலகர்காள்! யாதியம்புகின்றீர்?

அமை:—சுகுணேதயமன்னவ! உமதுஸோதரர், மாளவதேசாதிபர்— —

சுகுணேதயர்:—ஹா! ஸோதரனு! வந்திருக்கின்றனு! இவ்விடத்திற்கா! எப்பொழுது?

அமைச்சர்:—சுந்தரபுரி மன்னவ! இல்லை. உமதுஸோதரர் ஞானபரண மகாராஜாவை— — — — —

சுகுணேதயர்:—ஞானபரணனையா! என்ன செய்தார்கள்! சொல்லட்டென்ன! அருக்கின்றனு! இதந்தானு? ஐயோ! சகோதரா!

அமைச்சர்:—இல்லை மகாராஜ! ஞானபரணர் ஒருகா லுஷத்காலத்தில் ஏதோ காரியார்த்தமாக தூராடூராய் சென்றவர் தசமதிகளாகியும் இன்னும் ஸ்வகார் வரவில்லையென்றும், இதையுணர்ந்து சித்தக் கிராந்தையான நவமாலிகை அரண்மனையை விட்டகன்று நவதிவசங்களாகின்றன வென்றும் இற்றை ஞான் நின்னகர் போந்த அவ்விடத்திய தூதர்களியமபுகின்றனர்.

சுகுணேதயர்:—ஐயோ! ஞானபரனு! உன் பத்தினி நவமாலிகையைப் பிரிந்து செலண சென்றாய்? ஏனை என்னை மறந்தாய்? நீ எனின்னுட்டைத்தறந்தாய்? ஸோதர னொருவனுவ துனரனென் றெண்ணியதும் பாழாயினவே! எனதுள்ளம் தழலபோ லெரிகின்றதே! முடிமன்னரடிபணிய மண்டலிக மெலாமாண்ட மன்னவா! எனதன்பிற்குரிய அரசே! காணிலபரிபால சிலகண்ய திண்யனே! நினைப்பின்னு மொருதரங் காண்பனுனே? வசனசாதுர்ய மூசவசிகர பாலசுந்தரீ! நவமாலிகா! நீயும் நினதுயிர்க்காதலனைக் கண்ணுறுவா னவாவுற்று ஸ்வகாரினின் றகன்றனையோ?

[மந்திரிகளிதவநம் விடைபெற்றேகல்]

சீர்கொண்ட நவரத்ன கிதமணி மாடநிறை மாளவதேசந்தனிலுறை
யு மன்பதைகாள்! நீவிர்மாளாத் துயருக்காளாயினீர். இறக்குமளவு மின்ன
லுறுகி லின்புற நாளென்னுள்? எனதன்பே! நினைப்பிரிந்து இனியானிந்
நிலமிசையுயிர்வாழ்வனே! ஆரண்யமேகி ஆங்கு வுயிர் நீத்தலே குணகரம்.

[உயிரை வெறுத்துக் காட்டிற்குவந்துவிடுகிறார்.]

அடைந்ததோர் துயரமாற்றுமையினல் ஆவிதடுமாறிட இவ்வடவியு
ற்றேனெனினும் ஆத்மஹத்தி பாவஞ்சித்தி யாகலா னென்மனம் துணிந்தில
து. ஜகபரிபூரணு! இதுவரையிலு மென்னைப் பரீக்ஷித்ததும் போதாதா?

"என்னே நின்றிருவுளந்தா னிரும்புதானே
விளகாத வன்கல்லோ வீரேழூர்க்கு
மன்னே யானேழையன்றே மானிலத்திம்
மாறுத மிடிபொறக்க மாட்டேன் நற் செம்
பொன்னே யிக்கணமெனை நீயாளொணுதோ
போற்றுமடியேன் பிழைபைப் பொறுத்தல் வீணே
தன்னே நிலாச்சுடரே பரம்பொருளே
தயவுட னிதய மகிழ்ந்து தற்காப்பாயே!"

நூறவது அத்தியாயம் முற்றிற்று.

பொய்.

பொய்யாவது யாது காரியத்தைக் குறித்தெனினும் தன்னுள்ளத்தி
லுள்ள எண்ணத்திற்கு உள்ளபடி ஒத்திருக்கப்பேசாது வேறுமென்று உள்
ளத்திற்கு மாறுக வினங்கலைத்தலம். இது மெய்க்கு எதிரானது. பொய்
வாக்கினுல் மாத்திரமல்ல. மாந்தர் தன் மனக்கிடக்கையை வெளிப்படு
த்த இயன்ற மற்றெவ்வழியாலும் பேசக்கூடும். ஒருவன் உண்மையைப்பொ
ய்யெனவும் பொய்யை உண்மை யெனவும் தன் அறியாமையினுல் நம்பிக்
கையுற்று அங்ஙம்பிக்கைப்படி பேசுவானுயின் அது பிறர்க்குமாறுபாடாய்த்
தோன்றினும் அவனே பொய்யனல்லன். ஒருவன் தன்னுள்ளத்திலுள்ள
எண்ணத்திற்கு மாறுபப் பேசக்கருதி உண்மையை உண்மை எனவும் பொ
ய்யை பொய் எனவும் புகன்றுனுயினும் பிறர்க்கு அது மெய்யாகத் தோன்றி
னும் அவனே மெய்யனல்லன். மெய் பேசலே முழு நோக்கமாயிருக்க தெ
ளிந்த புத்தி வாக்கு வல்லபம் முதலியவற்றின் குறைவால் அவனது சொற்க
ள் காரியத்தை விகர்ப்பித்துக்காட்டினும் அவனே பொய்யனல்லன். குறி
த்த காலத்தில் நிறைவேற்றவேணை உறுதிமொழி கூறுதலும் பொய்
யே. இனி நம்மிந்திய மித்திரர்கள் அத்தியாவசியம் உய்த்துணரவேண்டிய
புத்திகளில் யான் கற்ற நூல்களிற் கண்டவற்றை முற்றும் ஈண்டுரைத்தால்
முடியாதெனவென்றெண்ணி அவற்றில் பலவற்றை விடித்து சிலவற்றை எ
டுத்து இயன்ற அளவு சுருக்கித் தீட்டலுற்றேன். "பொய்யாமை யன்னபுக
ழில்லை எய்யாமை எல்லா வரமும் தரும்" என்றும் "எல்லாவிளக்கும் வி
ளக்கல்லச் சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" என்றும் தெய்வப்
புலமைமந்த திருவள்ளுவ நாயனுர் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்.

பொய்சாட்சி சொல்லிச்சீவனம்பண்ணிய எத்தனையோபேர் யாதொ
ரு கெடியுமின்றித் தெருத்தெருவாய்த் திரிவதை நீங்கள் காணவில்லையா?
தாங்கள் பெரும் வியாபாரிகளென பாசாங்கு பண்ணிப் பிறர் பொருளை அ
பகரித்துப்பின்னர் நஷ்டம் வந்ததே காம் என் செய்வோமென வாய்கூசா
து பொய்கூறித்திரவியம்தேடி அநேகர் அவைகளைத்திருடர், தீ, ஆழி, முத
லியவற்றிற் கிரைகொடுத்து ஆகா! ஐயையோ! என அலறித்திரிவதை நீங்க
ளறியீர்களா? பேராசையால் அரசாகுபியாருக்கு பொய் புகன்ற உத்தியோக
ஸ்தர் பலர் உத்தியோகமும் இழந்து சிறைச்சாலைக்கேகினதை அறியீர்களா? பெறுவத
ற்கரிய மானிட தேகத்தைப்பெற்ற நாமெல்லாம் பொய்சொல்லா தொழிவ
மேல் அடையும் பயன் யாதெனச் சொல்லவும் வேண்டுமோ? முற்காலத்தில்
வத்தியமே நிறைந்து அஸத்தியம் மிகக்குறைந்திருந்தது. தற்காலத்தில்மெ
ய்தளர்ந்து பொய் வளர்ந்துவிட்டது. மகான்களான நம்முன்னோர்கள் அ
டியில் வருமாறு கூறியிருக்கின்றனர். ஆயிரம் பிராமணர்களைக்கொல்லலா
ம். ஒரு பசுவைக் கொல்லலாகாது. ஆயிரம்பசுவை வதைக்கலாம். ஒரு சி
ஹத்தி செய்யலாகாது. ஆயிரம் சிஹத்தி செய்யலாம் ஒரு பொய் சொல்ல
லாகாது. அக்காலத்தில் இருந்தவர்களும் வே வாக்கியத்திற் கூறியபடி ய
னுஷ்டித்து வந்தார்கள். உதாரணமாக ஒரு பொய்சொல்ல விருப்பமில்லா
மல் சொல்லிமுடியாத கஷ்டத்தை அரிச்சந்திரன் அனுபவித்தானல்லவா?
தவிரவும் தமது சத்துருக்களாகிய துரியோதனுதியர் சுவர்க்கத்தில் இருப்ப
தாகவும் அருமையாகிய தமது தம்பிமார்கள் நரகத்தில் கிடப்பதாகவும் ஒரு
முகூர்த்த காலம் யுதிஷ்டிரர் கண்களுக்குத் தோற்றியதாகப் பாரதத்தில்
படித்திருக்கிறோமன்றே? ஒரு பொய் சொன்னதற்கே பலனிதுவானுல்
தற்காலத்தில்,ஒரு நாளைக்கு ஆயிரம் பொய்க்குக் குறையாமல் சொல்லுகிற
வர்களின் கதி எதாகுமோ வறிகிலேன். எனதுகண்பர் ஒருவர் சொல்லக்கே
ட்டு இருக்கிறேன். அவர் ஒரு சமயம் எகோதிஷ்டம் ஸைண்டிமாசிகம் சாப்
பிடுகிற ஒருவிப்பிரனைச்சந்தித்தபொழுது அவனிடம் நீர் செய்கிறது பாவமல்
லவா, பாவநிவர்த்திக்காக சாஸ்திரங்களிற் கூறியிருக்கிறபடி யேதாவது பிரா
யச்சித்தம் செய்கிறதுண்டோவென்று கேட்டதற்கு விடையாக அவர் "என்
னைக்காணும் ஒன்றும் தெரியாதவரைப்போல் பேசுகிறீரே ஒரு சவண்டி இ
ண்ணைக்கா நாம் செத்துப்போன பிற்பாடு ஒற்றை யிரிழைப்பாலத்தால் வை
தரணிகணியைக்கடக்கவேணுமென்ற கருடபுராணத்தில் சொல்லியிருக்காம்,
நான் இதுவரையும் குறைந்த பக்ஷம் 2400 சவண்டி சாப்பிட்டிருப்பேன்
அப்போது 2400 மயிரிழையால் பாலம்போட்டிருக்கும், ஈமேவிழாமல் சுல
பமாய் நதியைக்கடந்து போகலாமல்லவா" வென்றராம். இத்தகையோருக்
குப்பொய்சொல்வதரிதாமோ?பொய்சொல்வதினுல் இவ்வுலகத்திலடையும்
பயன்யாது? பிரதினமும் மகா பாவத்தை மூட்டை மூட்டையாகத் தலை
யிற் கட்டிக்கொள்வதும் தாய் தந்தையர் மனைவிமக்கள் உற்றார் மற்றோர் இ
வர்களுக்கிடையில் விசுவாசமற்றுக் கலகம் நேரிடுவதல்லாமல் வேறென்ன கி
டைக்கும்? அன்பர்களே! சிந்தியுங்கள். சிந்தியுங்கள். பொய்சொல்லார்க்கு
யாதிதாண்டித்தியாகாது? எவரும் தம்பிள்ளைகள்சகோதரர்களே இளமையிற்
றனே யேடித்தைக்கேனும் பொய் பேசாது பழக்குவித்து தாமும் அப்படி
யே நடந்துவந்தால் எவ்வளவு சீக்கிரத்தில் பொய்யென்றென்றிலே எனத்
தக்கதாக வந்துவிடும்? அங்ஙனமாயின் பொய்யென்னுஞ்சொல்உலகில் வழ
க்காது ஒழிந்துவிடுமே.

ஒருவன் பொய்யை மறைத்து நிற்பானாயின் அவன் புகழ் உலகெங்கணுமெட்டும். அவனது புகழுக்கு யாதும் நிகரில்லை. அவன் வேறு தர்மஞ் செய்யவேண்டியதுமில்லை. உதாரணமாக அரிச்சந்திர மகாராஜனின் சரித்திரம் உணர்க. இவை விவரிக்கின் வரம்பின்றியோடும்.

ஒருவன் வாக்கு வல்லபத்தாலும் பிறவற்றாலும் பொய்யை மெய்யாக்க அல்லது மெய்யைப் பொய்யாக்க இயலுமென்ற எண்ணுதல் பேதமை. இருள் ஒளியாகாது, ஒளி இருளாகாது. அங்ஙனமே பொய் மெய்யாகாது. இது எவருமறிந்த சத்தியம். இவர் கூறிய இது உண்மையா? எத்தனை பொய்வழக்குகள் மெய்போல ஒப்பேறின? எத்தனை மெய் வழக்குகள் பொய்யெனத்தள்ளுபட்டன? ஆதலின் இது 'பொருந்துதல் எவ்விதமென ஒரு ஆக்ஷேபனை நிகழும். பொய்வழக்குகள் முற்றறிவிலா மனிதருக்கு முன்தோன்றி ஒப்பேறினும் அவைபொய்யே. மெய்வழக்குகளும் அவ்வாறே.

"பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே"
"மெய்யுடை யொருவன் சொல்லமாட்டாமையாற்
பொய்போலும்மே பொய்போலும்மே" என்றார்

கல்விக்கடலாகிய அதிவீரராமபாண்டியரும். மெய்போலுமே பொய்போலுமே எனக்கூறினாரேயன்றி மெய்யாகும் பொய்யாகுமென அவர் கூறினர் அல்லர். ஆதலினாலே வாக்கு வல்லபத்தாலும் பிறவற்றாலும் ஒருவன் பொய்யை மெய்யாக்கல் அல்லது மெய்யைப் பொய்போலகாட்டல் இயலுமேயன்றிப் பொய்யை மெய்யாக்கல் அல்லது மெய்யைப் பொய்யாக்கல் கூடாதென்பது பசு மரத்தாணிபோல் நாட்டப்பட்டது.

ஒருவன் பொய் சொல்லுவானுயின் அவனை அறிவுடையார் மாத்திரமல்ல. அவன் உற்றார் பெண்டீர் பிள்ளைகள் மித்திரர்களாகிய ஒருவரும் நம்பார். பொய்யனுக்கு போஜனமும் அற்பமாகும். அவனை அற்பனென உலகத்தார் எண்ணுவார். அவனுக்கு வறுமை வந்தாலும் அவனை வறியவனென உலகத்தார் நோக்கி அவனுக்கு எதுவும் உதவிபுரியார். அறியாமையாலெனினும், வேறியாது காரணம் கருதி எனினும் ஒருவன் ஒரு பொய்யைச் சொல்லியபின்னர் அப்பொய் வெளிவந்ததெனக் காணும்போது தான் கூறியதை சாதிக்கக்கருதினுனுகின் பின்னும் பலபொய் கூறவேண்டிவரும். அது வெளிவருமுன்னர் அல்லது வெளிவந்த பின்னரேனும் தான்கூறினதுபொய்யே எனக்கூறிப் பச்சாத்தாபப்பட்டு அது முதல் பொய் பேசுதலை நீக்கி நடப்பானுனால் அவனை உலகத்தார் மேலானவன் எனக்கொள்வார். நம்மவரில் அநேகர் தாம்பொய்யை வழக்கமாகப் பேசுதலாலும் தாம் பேசுவதில் பொய் எது மெய் எது எனப்பருத்தணர வியலாமையாலும் தாம் எத்தொழில்செய்யினும் பொய்யின்றிபிழைத்தல் கூடாதெனக்கூறுவர். இது அவரிடமுள்ள தப்பான எண்ணமேயன்றி வேறல்ல. எத்தொழிலாளரெனினும் ஒருவன் பொய் பேசாமல் இருப்பானேயாயின் அவனை யோக்கியனென எல்லாரும் நன்குமதித்து அவனிடமே விரும்பிச்செல்வர். ஒருவன் பொய்யுரைப்பானேயாயின் அவன் பொய்யனென் உலகத்தார் யாவரும் கருதி அவனிடம் செல்லாது ஒழிவர். செல்லாது ஒழியவே அவன் பிழைப்புங்கெடும். கெடவே அவன் பொய்யினுல் சம்பாதித்து வைத்திருப்பானெனினும் அவை சீக்கிரத்தில் அழியும். அழியவே பிழைப்புக்கு வகையின்றி வறுமையினுல் பீடித்து அலைந்து திரிவன்.

அசத்திய வாசகர்க்கு எவ்விதமும் நயம், கனம்முதலிய எவையும் உண்டாகா. நம்மவர்களெல்லாம் மேன்மேலும் நித்தமாயிரம் பொய்க்குறையாது புகல்வதுயாது காரணங்கருதியோ?! இப்பாரில் தப்பான மொழியைக்கொண்டு சாற்றுவித்து மெய்ப்பொருளாய்க்காட்டினும் மேலுலகில் இம்மொழியோ நன்மொழியாயிலாது. நின்மயமாய், நந்தமெனும் தன்மயமாய் விளங்குகின்ற தாப்பரத்தில் இம்மொழியு நில்லாது.

அன்பர்களே! யான் இங்கு இதுகாறுங்காட்டிய நியாயங்களைச்சற்று சிந்தித்துப்பாலியனுன என்மீது கோபம் வையாது பொய் பேசாதொழியுமாறு பலதரமும் உங்களை வேண்டுகின்றேன்.

☞ நட்புக்கோடி.

நல்லுரை.

செல்வம் நிரம்பினதர்களைச் சேர்ந்து துவைக்கும், வறுமையோ அவர்களை நீக்கிவைக்கும்.

பகை சாந்தித்துப்பழிவாங்குவதைப் பதைவிட யாதொரு சச்சரவுக்கிடமின்றி அதைத்தவிர்ப்பதே புத்திசாலித்தனம்.

வாடிக்கை என்பது மூடர்களுக்கு ஒரு அரிய பூஷணம், அது புத்திமான்களுக்கு ஒரு வியாதி.

மாந்தராய்ச் சனித்து மானிலத்துள் வசிப்போர் அனைவரும்குற்றஞ் செய்வது சகஜமாயினும் மன்னிப்படைவது தெய்வயத்தினம்.

கோபத்தை மனதில் இரகசியமாய் வைத்திருப்பதைவிடகேரில் கண்டிப்பது உத்தமம்.

உழைப்பு, முயற்சி, காலத்தை வீணில் போக்காமல் நிரமமான வழியில் உபயோகப்படுத்தல், ஈஸ்வரபக்தி, கீழ்ப்படிதல் இதுகளே சிறுவர்கள் கவனிக்கவேண்டியமுக்கியகடமைகள்.

புத்திமானுக்கு கோபம்வராது. மூடர்களிடம் கோபம் குடிகொண்டிருக்கும்.

யதார்த்தமும் கிருஷ்டமும் எல்லா கருமத்திற்கும் அஸ்திவாரமானது.

அளவிற்கு மிஞ்சி விசனப்படுவது புத்தியீனம், விசனப்படாதிருப்பது உணர்ச்சியின்மை.

என்ன சங்கதி அல்லது வியாகூலம் வந்துற்றாலும் அதிகள் சம்பவிக்கும்போது ரனதை அதிக சங்கடத்திற்கு இடமக்கலாகாது.

பிறருனக்கு எவ்வளவு செய்யவேண்டுமென்று கருதுகிறாயோ அவ்வளவுமட்டில் நீபிறருக்கு உதவிசெய்.

ஒரு மனிதனுக்கு அறிமுகமானவர்கள் ஆயிரம்பேரிருந்தாலும் அவர்களில் ஒருவன்கூட சிநேகிதனுயிருக்க மாட்டான். நண்பரில்லாத வனுக்கு யாதொரு சந்தோஷமுமில்லை.

உழைப்பே சகல மேன்மைக்கும் சிரேஷ்டதரமானது. வாசித்தறிந்து மனப்பழக்கத்திற்குக் கொண்டுவராத தால் புத்திவைபவமுள்ள அநேக அரியதூல்கள் மறைந்துபோயின. ஒவ்வொரு அழிவுக்கும் காரணம் சோம்பேறித்தனமே. தற்காலம் நெல்விலைவு குறைந்துவிட்டதெனினும் இந்த விலைவுமட்டும் குறையவில்லை.

அறிவுவிளக்கமானது சிறுவர்களுக்கு ஒருகௌரதையான உத்தியோகம்.

ஒருவனுடன் நீ சினேகஞ்செய்தால் அவனுக்கு சினேகிதனும் எப்போதும் இருக்கப்பிரியாசைப்படு.

"கூடிப்பிரியேல்" என்பதை மனதில் வை. அடிக்கடி சினேகிதர்களை வீட்டிலிலகும் மனிதர்களுக்கு உண்மையான சினேகிதர்கள் கிடைப்பதரிது.

இளமை முதல் கிரம வழியில் புத்திரனைச் செலுத்துகிறவன்பெரிய வனாய் பின்பு மிகுந்த சிறப்பையடைகின்றான்.

கெடுதி செய்தவனுக்கு நன்மைசெய்து காட்டுவதைவிட சாமர்த்திய செய்கை வேறொன்றுமில்லை.

எருவை நிலங்களுக்குப் போடுவது போல் பணத்தைச் சிலவிட்டால் பலன் உண்டு.

நல்லவிஷயத்தில் சிலவழியாத பணம் அப்பிரயோஜனமே, பணம் இருக்கின்றதென்பதும் பாவனையே.

பிரிய வசனம் நமக்கு மேற்பட்டவர்களுடைய மனதிற்கு இனிமையாயும், சமானஸ்தர்களுடைய மனதிற்கு இதமாயும், நமக்கு கீழ்ப்பட்டவர்களுடைய மனதிற்கு உவப்பாயுமிருக்கும்.

இளைஞர்கட்கோர் இதமொழி.

ஒருவனுடைய வாழ்நாள் ஒரு தினத்திற்கொப்பாயிருக்கின்றதாதலால் அதில் முதல் பகுதியாகிய இளமைப் பருவத்தை ஒரு தினத்தின் முதற்காலமாகிய காலைப்பொழுதிற்குச் சமானமாகச் சொல்லலாம். "உபயோகமான நற்காரியங்களைச் செய்ய நமக்கு நன்றாய்த் தெரியாதாதலால் நாம் நமது பொழுதை எப்படிப் போக்கினோம் கெடுதியில்லை" என்று இளமைப்பருவத்திலிருக்கும் சிறுவர்கள் அநேகர் சொல்லிக்கொண்டு திரிவார்கள். யோசித்துப் பார்க்குமளவில் பெரியோர்களைப்பார்க்கிலும் சிறுவர்களுக்கே பொழுது மிகவும் அருமையானதென விளங்குகின்றது. ஒருவன் ஒரு தினத்தில் தனக்குவேண்டிய சகல சாமான்களையும் காலையிலேயே சமபாகித்து வைத்துக்கொண்டாலல்லவோ அன்றையதினம் அவன் செய்யவேண்டிய காரியங்களைச் சீர்பெறச்செய்யக்கூடும். அவ்வாறே ஒருவன் தன் வயது நாளில் நன்றாக வாழ்வதற்கேற்ற கருவிகளைச்சேர்த்துவைத்துக் கொள்ளுவதற்கு ஏற்றகாலம் இளமைப்பருவமேயாம். தச்சன் கருமான் முதலிய தொழிலாளிகள் தம்கையில் ஆயுதங்கள் சித்தமாயில்லாவிட்டால் எதாவதுவேலைசெய்யக்கூடுமா? கூடாதே; அவ்வாறுதான் நல்வாழ்க்கைக்கு வேண்டிய கருவிகள் ஒன்றும் கையிலில்லாவிட்டால் இவ்வுலகில் நன்றாக வாழ்வதும் முடியாது. நல்வாழ்க்கைக்கு வேண்டிய கருவிகள் எவையெனின் நல்லறிவு, நல்லொழுக்கம், நற்பழக்கம், நன்முயற்சி முதலியனவாம். தோட்டத்தில் நாம் நல்ல பயிர்களைப்பயிரிடாவிட்டால் புல்பூண்டுகள் தாமே முளைத்து அதை மூடிக்கொள்கின்றனவல்லவா? அதே விதமாகத்தான் நாம் நமது பொழுதில் நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வராவிட்டால் தீச்செயல்களுக்குரித்தாயகிய சோம்பல் உற்பத்தியாகி நமது காலத்தைக் கெடுத்துவிடும். பிற்காலத்தில் உபயோகமாகும்படி சிறு பருவத்தில் கற்றுக்கொள்ளத்தக்க முக்கியமான விஷயங்கள் யாவையெனில் எழுத்தும் படிப்பும் கணக்குமாம். இளமைப்பருவத்தில் இவைகளைக்கற்றுக்கொண்டால் பின்பு ஒருநாளும் மறவாதபடி கல்லெழுத்துப்போல் அவை புத்தியில் நன்றாய்ப்பதிந்துபோம். கயதமுதிர்ந்தபோதல்லவோ எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளுவதுமிகவும்கடினமேயாம். இப்படி நல்லறிவாகிய கருவிகளை இளமைப்பருவத்தில் சேர்த்துக்கொள்ளாதவர்கள் பிற்கு தம்மிடத்திலுள்ள அற்பக் குறைவுபாட்டையுணர்ந்து எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் அவற்றைச் சகித்துக் கொண்டு முக்கியமாய்த் தமது பிள்ளைகள் இளமையில் கல்விகற்கவேண்டுமென்றுபாடுபடுகிறார்கள். இவற்றிலும்

அதின் அருமையை நன்றுயுணரலாம். ஆயினும் சிறுவர்காள்! பற்பல விஷயங்களையும் மறவாமல் உங்கள் மனதில் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டியதுஅவசியகரமென்றிலும்அவற்றைஉபயோகிக்கவேண்டியகல்வழிகளையுங்கடைக்கற்றுக்கொள்வது மிகவும் கலமாயிருப்பதேதடி அதைவிட அத்தியாவசியகரமாயுமிருக்கின்றது. எதையும் ஒருவன் கற்றுக் கொள்ளுவதற்கு ஏற்றகாலம் இளமைப்பருவமே. ஆனதுபற்றியே ஔவையும் "இளமையிற்கல்" என்று கூறினள். இளைஞர்காள்! இவ்விளமையில் நீவிர் வீண பொழுதுபோக்கினால் பிற்காலத்தில் நீங்கள் ஒரு போதும் சவுக்கியமாக வாழ மாட்டீர்கள். உபயோகமான பல கல்விகளையும் இப்போது கற்றுக்கொண்டால் தான் பின்னால் சுகப்படலாம். ஆரம்பத்தில் படிப்பு ஒருவேளை உங்களுக்குக் கொஞ்சம் கடினமாய்த் தோன்றும். அதனால் பயந்து விட்டு விடாதேயுங்கள். "தொடங்குங்கால் துன்பமா யின்பம் பயக்கு-மடங்கொன்றறிவகற்றுங்கல்வி" என முன்னோர் கூறியது உங்கள் மனதில் உறுதியா யிருக்கவேண்டும். உங்களது இளமைப்பருவத்தை வேண்டிய ஆஸ்திகள் சேர்த்து வைக்கத்தக்க பெட்டியென்று நினையுங்கள். உங்களிடத்தில் அன்புள்ளவர்கள் இனிப்பாயும் அழகாயு மிருக்கின்ற கல்ல பொருள்களையெல்லாம் அதில் கொண்டுவந்து வைப்பார்கள். அத்தன்மையான பொருள்களையே நீங்களும் அதில் சேர்த்துவைக்கும்படியாகப் பாடுபட்டவேண்டும். முக்கியமாய் நீங்கள் நல்லறிவுக்கு வேண்டிய விதைகளைச் சேர்த்து வைக்கவேண்டும். அங்ஙனம்சேர்த்துவைத்தால் அவை ஒருகாலத்தில் மிகச்செழிப்பான செடிகளாகி வேண்டியபலனைத்தரும். அவ்வாறு நிறைக்கப்பட்ட பெட்டிகள் வெகுஅழகாய்த் தாமேஉங்கள் மனதாகிய பண்டசாலையில் ஒழுங்கு பட்டு வந்து அமையும். அந்தப் பெட்டிகள் அப்படி நிறப்பப்படாவிட்டால் அவைஒன்றுக்கும் உபயோகமில்லாமல் சென்று போன காலங்களாகிய குப்பைமேட்டில் கொண்டுபோய் எறியத்தக்கவையாம். இம்மை நற்தேயத்திய சிறுவர் சிறுமிகள் கவனித்து இளமைப்பருவத்தை வீணில் போக்காதிருக்கக்கடவர்.

நன்றி யறிதல்.

நன்றியுணர்வைவிட மனதுக்கு இனிய விஷயம் வேறொன்றுமில்லை. அது ஹிருதயத்திலிருந் துண்டாகும் களங்கமற்ற உண்மையான திருப்திகரம். தானடைந்த பிரபோஜனத்திற்குத் தக்கவாறு எடுத்துக்கூறும் உபசாரவார்த்தை. மற்ற நற்கருமங்களைப் போல் கடினமும் கஷ்டமுமானதல்ல. அதற்கு இயல்பாகவே அதிக மனமகிழ்ச்சியுண்டு. நன்றியுணர்வு ஒரு அதிகாரம் அல்லது கட்டாயத்தின் பேரில் உண்டாகாமலும் இனிமீது பிரதி பிரயோஜனமடைவோ மென்று எதிர் பாராமலும் இயற்கையாகவே உண்டாகும் மனோரம்மியமுள்ள ஒருவிஷயம். அதைத் தரும குணமென்றும் சொல்லக்கூடும். உலகத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்யும் நன்றி இவ்வாறிருக்குமானால் நம்மைப்படைத்த பகவான் நமக்களித்திருக்கும் அளவற்ற நன்மைகளுக்கு நாம் எவ்வளவுதூரம் நன்றி பாராட்டவேண்டும்? ஜகதீசனால் நமக்களிக்கப்பட்ட நன்கொடைகள் நேராய் அவரிடத்திலிருந்தே பெறுவிட்டாலும் மற்றொருவர் மூலமாக சர்வ நலங்களையும் அடைகிறோம். நன்மைக்கு மூலப்பொருளும் இரக்கத்திற்கு உறைவிடமுமாயிருக்கும் நமது பரம பிதாவின் அரிவாதமேபலவித வெகுமதிகளாக வேறுமனிதர்கள் மூலமாய் நாம் பெறுகிறோம். நன்றியறிதலானதுபலாத்காரமாய்எடுத்து அல்லது

அபஹரித்துக் கொள்ளத் தக்கதாயிராமல் சுபாவமாகவே மனதில்தோன்றும் ஒருசந்தோஷ்டியான விஷயம். அது ஆத்துமாவிற்கு அதிக திருப்தியை விளைவிக்கிறது. தேவனுல் யாதொரு குறைவுமின்றி சகலநன்மைகளையும் அடைத்தும்அனுபவித்தும் வருகின்றோம். இனிமீத நமதுமனதுகோரும் சகலவித நன்மைகளுக்கும் பகவானையே பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்ஙனம் கடவுளிட மிருந்து சகல நன்மைகளையும் பெற்றவரும் நாம் அவரிடத்து நன்றி யறிதலுள்ளவர்களா யிராமற் போய் விடுவதும், நமது காரியமானவுடன் அவரைமறந்து ஸ்வயநலதுரந்தராகளாக மாறுவதும்எவ்வளவுவியசனிக்கத்தக்க விஷயம்! இப்பிறவி எடுத்தது ஜகதீசனைப் போற்றுவதற்காகத்தானே? அங்ஙனம் போற்றுவிடினும் அவர் நமக்குச் செய்துவரும் எண்ணிறந்த நன்மைகளை நினைத்தாவது அவரை மனதில் தியானிக்கலாகாதா? நமது மனோவிகற்ப விஷயத்திலும் நம விஷயத்திலுமே எவ்வளவோ சிரத்தையுள்ளவர்களா யிருக்கும் நாம் கடவுளிடமிருந்து அடைந்த கணக்கற்ற உதவிகட்காகவாயினும் அவரிடத்து விசுவாசமுள்ளவர்களா யிருக்கவேண்டு மல்லவா?. "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" "நன்றிமறவேல்" "காலத்தாற் செய்தநன்றி சிறி தெனினும் ஞாலத்தினுமாணப் பெரிது" என்றார் பெரியோர். கேவலம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் சொற்பத்தினும் சொற்ப உதவிகட்கே இங்ஙனங்கூறலரேல் கடவுளிடமிருந்து நாம்பெற்றுவரும் உபகாரங்கட்குத்தக்கைம்மாறுபுரிய ஆயுள்நாள் முழுவதும்முயன்றாலுங்கோடியிலொருபாகமாகிலும் முடியுமா? தனகுத்தின்பம் நேர்ந்த விடத்து அதை யகற்றுமாறு கடவுளைப் பிரார்த்திக்கு மொருவன் அக்கஷ்ட மகன்றதும் ஜகதீசன் செய்த நன்றியை மறந்து விடுகின்றான். இதென்ன நீசத்தனம்? கேவலம் மிருகங்கள் கூடவன்றே பிறரால் தாமடைந்த நன்றியை என்றும் மறவாதிருக்கின்றன.? விருக்ஷங்களும் அப்படியே. இப்படியிருக்க நாம் சர்வலோக ரக்ஷகாகிய கடவுளை மறப்பது நீதியாகுமா? இதைவிட இழிவு கடுக்கு வேதென்ன வேண்டும்? ஆகையால் நாம் ஜகதீசனிடத்து நமது அன்பைச் செலுத்தி அவரிடமிருந்து அடைந்திருக்கும் அடைந்து வரும் அளவற்ற நலங்களுக்கு நன்றி யறிதலுள்ளவர்களாய் ஸதாதெய்வத்தியான ஸம்பன்னர்களாய் இனியேனும் இருக்க முயலக்கடவோமாக. கதவைழுடு.

பெரியோர்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்தக்காரியஞ்செய்தாலும், எந்தபேச்சுபேசினாலும்அப்போதைக்கப்போதுவாய்க்கிறதருணங்களில்சிறுவர்களுக்குச்சிற்சிலவாய் இயன்றமட்டும் நீதிகளைக்கற்பிப்பதிலேயே கண்ணுயிருப்பார்கள். இப்படிச்செய்துசிறுவர்களைகாக்காதபெரியோர்கள் அவர்களுக்குப்பகைவர்களேயன்றிவேறல்ல. இளைஞர்களுக்குஎளிதிலேயேநீதிகற்பிக்கும்விதம்இத்தன்மையதென்றறுதியில்குறிக்கிறசம்பாஷணையினுல்தெளிவாய்த்தெரியவரும். மாரிகாலத்தில்ஒருநாள்ஒருசிழவன்தன்வீட்டுநடைத்திண்ணையில்உட்கார்ந்திருந்தான். அத்தருணம்தில்லென்றகுளிர்ந்தகீழ்காற்றுவீசவே,அவன்அந்தக்குளிரைத்தாளமாட்டாமல்அண்டையிலிருந்தபேரப்பிள்ளையைஅழைத்துகுழந்தாய்! கதவைழுடுஎன்றான். அம்மகன் அதைக்கவனியாமல்விளையாட்டுத்தனத்தால்பாராக்காயிருக்கவேபாட்டன்மறபடியும்பேரனுக்குகூவிஅப்பா! கதவைச்சாதெனன்றான். அச்சிறுவன் அதையும்கவனிக்காமல் எங்கேயோஒருமூலையைப் பார்த்துகொண்டு கிற்கவே கிழவன் அவனைக் கொஞ்சம் அதட்டி அடா! கதவைமூடு என்று பலதாஞ் சொல்லுகிறேன் நீ எங்கேயோபார்த்தநிற்கிறையே. எனக்குக்குளிரால் உடம்பு நடுங்குகிறதே

யென்றான். அதின்பேரில்பேரன்:—ஐயா! நான் விளையாட்டுத்தியால்தங்கள்பேச்சைகவனியாமற்போனதுபிசகுதான். இப்போது மாத்திரம் பொறுத்துக் கொள்ளுங்கள் இனிச் சரியாய் நடக்கிறேன். பாட்டன்:-குழந்தாய்! நான் இப்போது என்னவோசொல்லுகிறேனென்றஎண்ணிடத்தில்கோபங்கொள்ளாதே.இப்போதுநான் சொன்னபேச்சுஉனக்குஒருநற்புத்திபோதிக்கின்றது. நீ உன்வாழ்நாளில்பிறருடையசெய்கியத்தையே பெரிதாய்ப்பார்த்து வரும்படியாகக் கற்கவேண்டும். இதுமாத்திரமேயல்ல, இச்சிறுவிஷயத்திற்குசொன்னசெய்தி இன்னும்பெருத்தபலவிஷயங்களுக்குங்கூட மிகவும் உபயோகமாகும். இந்த விட்டுவாயிற்கதவு மாத்திரமேயல்லாமல் நீ பத்திரமாய்த் திறவாமல் மூடிவைக்கவேண்டிய வேறு சில கதவுகளுமுண்டு. பேரன்:—அவை எவ்வகைக்கதவுகள் ஐயா? பாட்டன்:—ஒரு நிமிஷம் இங்கே உட்கார், அவற்றிலிலவற்றை உனக்குஎடுத்துச்சொல்லுகிறேன். நிட்டுமுதலியகெட்டபேச்சுகளும், துஷ்டச்சிறுவர்களுடையதீராலோசனைகளும் உள்ளேவந்துபுகாதபடி உன்காதுகளின் கதவைக்கவனமாய் மூடிவைக்கவேண்டும். இல்லாவிட்டால் நீசகப்படமாட்டாய். எப்போதாவது ஒருதடவைகொஞ்சம்அஜாக்கிரதையாய்உன்காதில் அவற்றிற்கு இடங்கொடுப்பாயானுல் பின்புஅவைஒருபோதும்வெளியேபோகாமல இன்னுமந்தநேசர்களையும் அநேகமாய் உள்ளேவரவழைத்துக்கொள்ளும். இப்படியே உன்கண்களின் கதவுகளைபற்றியும் நீகொஞ்சம்கவனமாய்இருக்கவேண்டும். கெட்டவிஷயங்கள்வீண்கதைகள்முதலிய அடங்கியபுத்தகங்களைபார்க்கக்கூடாது. அவைகளைப்பார்க்கத்தலைப்பட்டால்அவசியமானபடிப்பில் ஆதரவுகுறைந்துகடைசியில் மூடனுய்ஒன்றுக்கும்உதவாமற் போவாய். மேலும் கெட்டகாட்சிகளைப்பாராமல்கண்களைமூடிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால்விவேகமற்றஅழுத்தபோவாய். இவைமாத்திரமேயன்றி விற்பனைக்காகக்கடைத்தெருவில் பரப்பிவைத்திருக்கும்அற்புதப்பொருள்களிடத்தில்அதிகமாய்க்கண்ணைத்திறந்துவிடக்கூடாது. அப்படிச்செய்தால்கையிலிருக்கும்பணத்தைசேர்க்கவேண்டியவழியும் இன்னதென்றதெரியாமற்போம். பஞ்சைபரதேசிகளுக்கு பொருள்கொடுத்துதவுவதற்கும் கையில்காசுஇட்டாது. முக்கியமாய் உன்உதடுகளாகிறகதவுகளைப்பற்றிநீ மிகக்கவனமாயிருக்கவேண்டும்.எனெனில் அந்தக்கதவுகள், காதுகண்இவற்றின்கதவுகளை உறுதியடித்திறக்கச்செய்வதானபலசெட்டவிஷயங்களை அதிகமாய்உபயோகிக்கின்ற ஒரிடத்தைப்பற்றிமாய்க்காகின்றன. அந்தக்கதவுகள் தமக்குத்தாமேவெகுசுலபத்தில்திறந்துகொள்ளுந்தன்மையுடையவை. ஆதலின்நாமும்அந்த வாயிலைப்பத்திரமாய்க்காத்துகொண்டிராமல் கொஞ்சம்உபேக்ஷைசெய்துவிட்டால்" தீயினுற்சுட்டபுண்ணுள்ளாறு மாருதேராவினுற்சுட்டவடு" என்கிறபடி பலபோக்கு மனவருத்தம் உண்டாகத்தக்கவையுமதனக்கே கெடுதிவிளைவிக்கத்தக்கவையுமான பலதுர்ப்பாவனைகள்தாமேவெளிப்படும்.ஆதலால்நீஉனக்குவேண்டியஅறிவாவதி அல்லதுநன்றாப்பேசுவதற்கு வேண்டியபலவிஷயங்களாவதுபூர்த்தியாய்த்தடிக் கொள்ளுகிறவரையில் நீ அதைத் திறவாமல் மூடிவைப்பதாகில்மிக்க நன்மையடைவாய். இவற்றையெல்லாம் நீகாப்பது ஒரு பெரியகாரியமன்று. உன்தேகத்தின் உட்புறத்திலிருக்கிற மனதின் கதவை இவ்வீடுகொட்டாமற் காப்பதே மிக்க வருத்தமான காரியம். துராசை முதலியவை மனதில்வந்து புகாதபடி அக்கக்கதவு காக்கின்றது. அப்படிப்பட்ட கெட்ட எண்ணங்கள் ஒன்றும் உள்ளே நுழையாமல் மனச்சாட்சி வாசற்காப்போனுய் காத்துக்கொண்டிருக்கும். [இன்னும் வரும்]

வர்த்தமானம். மின்சாரசகாயத்தால் மையின்றி அச்சிடும் உபாயத்தை தலண்டனில் ஒருகம்பேனியார்கண்டுபிடித்துளராம். கௌசதல் எனுமிடத்தில்தற்கொலை செய்துகொள்ளத்தணிவுற்ற இத்தாலியனொருவன்தன்வாயில்டைனமட்டைபோட்டுத்தானேகொளுத்திக்கொண்டதில்தேகம்வெடித்து அலங்கோலமாகிதறிவிழுந்தஎலும்புகளைப்பொறுக்கிஎடுக்க 3 மணிநேரம்பிடித்ததாம். பர்மாவிலுள்ள கூமினையின்எனுமிடத்தில் ஓர்குழந்தைபிறக்கும் பொழுதேதலையில்தொப்பியுடன்ஜனித்ததாம். லேடிகர்ஸனுக்குஞணமாகிவருகிறது. வ்ருஷம் 1க்கு இந்தியாவில் 4 லக்ஷம்ஸர்ப்பங்கள்கொல்லப்படுகின்றனவாம். பொட்டாசியம் எனுமருந்தை அரவுகடியுண்டயிடத்தில்வைத்துதேய்ப்பின்விஷம்அகன்றுவிடுமாம். லண்டன் நகரத்தையும்பிளேக் எப்படிப்பார்க்கிறதாம்.

யுத்தம். போர்ட்ஆர்தரின் நிலைமையும் ஜப்பானியர்களின் சாகஸமும் தேசாபிமானமும், ருஷிபர்களின் பிடிவாதமும் அறிவீனமும் யோசனைக்குறைவும், அபஜெயப் புதலும் ருஷிய சக்கரவர்த்தியின் மனோ சஞ்சலமும், முன்போலவேதானுள. சமீபத்தில் நிகழ்ந்த அதிகோரதரமான லயோயங் யுத்தத்தில்இருதகூயிலும் மாண்டவர்கள்லகூத்திற்குக்குறையமாட்டாதெனவும் பிணங்களின்மீது நின்று யுத்தம்செய்தனரென்றும் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ்—ம்போருட்காட்சியும். பம்பாய்காங்கிரஸ்விற்குவர்ஹென்றி வெட்டர்பான் பிரசிடெண்டாகவீற்றிருப்பரெனவும் ஸ்வதேசோன்னதிக்குரியமுக்கிய விஷயங்கள் கவனிக்கப்படுமெனவும் பொருட்காட்சியில் இந்திய மாதர்களால் செய்யப்பட்ட சாமான்களை வைப்பதற்கென பிரத்யேகமாய் மாதர் பிரிவு (Ladis Department) ஒன்று நவமாய் அமைக்கப்படுமெனவும் அதற்கு 100க்கு மேற்பட்ட ஸ்திரீ ரத்னசிரோமணிகள் சேர்ந்தசமிட்டிஒன்று தயாராய்விட்டதெனவும் ஸ்வதேசகைத் தொழில் அபிவிர்த்தியைஉத்தேசித்து பிரதிஜில்லாக்களிலிருந்தும் 20 பேருக்கு மேற்படாத கிராமபிரதிநிதிகள் ரயில்சார்ஜ்முதலிய யாதொன்றுமின்றி கவர்ன்மெண்ட்சிலவில் பம்பாய் பொருட்காட்சிக்குப் போய்வரலாமென்றும் அவ்விடம் தங்கும்காலத்திற்குப் படியும் கொடுக்கப்படுமென்றும் அந்தநடக்கும் ஆசார சீர்திருத்தசபைக்குபடியும் கொடுக்கப்படுமென்றும் பரோடாமகாராஜாஅவர்கள்பிரசிடெண்டாய் இருப்பரெனவுமறிகிறோம்.

பத்திராதிபர்களுக்குறிப்புகள். திருச்சியில்சிலதேசாபிமானிகள் ஒன்றுசேர்ந்துஉபயோகத்திற்கு வேண்டியயாவும் ஸ்வதேசத்திலேயேஉற்பத்திசெய்து அனுபவிக்கவேண்டுமேயன்றி பிறநாட்டாரின்சாமான்களை வாங்கலாகாதென நிஷ்காரிஷித்து பிரதமத்தில் 25ரூபீதம் 400பங்குரூபாய்சேர்ந்து 10000ரூ முதல்வைத்து "காதலின்வியாபாரசங்கம்"என்றபெயருடன் ஸ்வதேசகைத் தொழிலைஆதரிக்க முன்வந்துளா ரென்பதையறிய மிழ்கின்றோம். யாழ்ப்பாணத்தினின்றும் வெளிப்போந்துலாவும் சுதேசநாட்டியம் 3வது புத்தகம் 3 வது சஞ்சிகையில்"கடிதம்" என்றதலைப்பின்கீழ் நிந்தாஸ்பதமான விஷயங்கள்பல் கண்டிருக்கின்றன. ஸ்வவிஷயமாகஒருவருக்கொருவர் கொள்ளும்பொறுமையே காரணமாகக்கொண்டு கௌரவஹீனபதங்களை வழங்கிவிடுக்கும் அனுசிதமானவியாசங்களைத்திரஸ்கரிக்கவேண்டியபத்திராதிபர் அவ்வீண்விஷயங்களை ஏற்றுபத்திரிகையில் பிரசுரஞ்செய்வதுஉசிதமாகத்தோற்றவில்லை. அறிக்கை.

கனம்பத்திராதிபரவர்கள்இவ்வகேஷத்திரயாத்திரார்த்தமாய்சென்றிருந்த காரணங்கொண்டு இம்மாதமுதல்தேதியில் பத்திரிகைவெளியிடத்தடைபட்டதென்பதை நேயர்கட்குவந்தனத்துடன்றிவிக்கின்றோம். எடிட்டர்.

பிரஜாபந்துகூடலன்.

பருவம் 1. } திருச்சி 1904-ஆம் டிசம்பர்-மீ { இலக்கம்9

இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகா சபை.

இந்தியன் நேஷனல் காங்கிரஸ் மகா சபையானது 1885ஆம் டிசம்பர் மாதத்தில் பம்பாய் நகரில் சுபஜெனனமாகி அதற்குப்பின் நாளது வருஷங்கள் வரையிலும் பிரதி ஆண்டினிறுதியில் ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும் கூடப்பட்டு வருகின்றது. இதற்கு இப்போது 19வது வயது கழிந்து 20வது பிராயம் பிறக்கப்போகின்றன. இந்த சபையில் பேசும் காரியங்கள் பொதுவாய் சகலத்திராஜ்ஜுடைய நன்மைக்கும் அபிவர்க்ஷணத்துக்கும் கஷ்டநிஷ்ரோங்களைக் குறித்தும் ஜாதிமதபேதமின்றி எல்லோரும் ஏகமனதாய் சகோதரவாத்சல்யத்தை வளித்து ஒருவரோ டொருவர் கலந்து பேசி சகல தீர்மானங்களையும் செய்து அதைப்பற்றி நமது அரசருக்கு அறிவித்து சர்வ பரிகாரங்களையும் அடைய வேண்டு மென்பதே காங்கிரஸ் பிரதிநிதிகளின் முக்கிய கருத்து. இந்ததேச ராஜீகத்தில் பெரும்பாலும் நம்முடைய பேச்சைக்கேட்டு ஒன்றும் செய்கிறதில்லை யாதலால் நமக்குள்ள குறைகளையும் நமக்கு வேண்டியவைகளையும் வருஷ மொருமுறை எல்லா தேசாபிமானிகளும் ஒன்று கூடி ஆலோசித்து தங்கள் கோறிக்கைகளைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பதற்கு காங்கிரஸ் சபை ஒரு பெரிய சாதகமாயிருக்கிறது. மன மென்னும் தகளியில் அன்பு, தேசாபிமானம், பொது நலம் ஆகிய நெய்யை வார்த்து ஒற்றுமையாகிய திரியையிட்டு எச்சரிக்கையாகிய ஜ்வாலைகொளுத்தி அவிவேகம் என்னும் அந்தகாரத்துளசூழ்ந்து கஷ்ட நிஷ்ரோங்களாகிய இருளை நீக்கும் பிரதைகள் தங்களுக்கு வேண்டிய சர்வஸாதகங்களையும் அடையத் தக்க மார்க்கமிது வென உணரும்படி விளக்கைக்கொளுத்தி அறியாமையெனுமிருளையகற்றி அவர்களின் கண்களைத் துடைத்து புத்திபுகட்ட காங்கிரஸ் மகாசபை எனும் ஜோதிதோன்றியிருக்கிறது. இந்தியா ஒரு சிறந்தபெரிய இராஜ்ஜியம். அதை ஆங்கிலேயர் யாதொரு கலகமும் மின்றி அமைதிக்கையான நிலைமையில் வைத்து ஒழுங்கு முறைமை விதி விலக்குகள் ஏற்படுத்தி நீதியான சகல சட்டதிட்டங்களையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்; எதற்குறைவில்லை. சற்று மனஇரக்கம் வைத்து கோர் விசாரணைபுரிந்து பரிபாலனஞ்செய்யவேண்டுமென்பதே நமது கோரிக்கை. பாரபக்ஷமின்றிகுடிகளின் உண்மையானநிலைமையையறிந்து அவர்கள் சுகமாய்வாழவேண்டியதற்குரிய அதிஜாகரூகமான காரியங்களில் இராஜாங்கத்தார் புத்தியைச்செலுத்தி கஷ்டகரமானவிஷயங்களைநீக்கி ஆதரித்தல் அவசியகாம். நாம் கோறுவதும் அதுவே. இமயகிரிமுதல் கன்னியாகுமரிவரையில் உள்ள தேசங்களில் பலர் பலபாஷைகளை வழங்கினலும் இராஜபாஷையையே நாம்

பாஷை யெனக் கொண்டு சகல பிரதிநிதிகளும் தங்கள் குறைகளைப் பற்றி ஒருவரோடொருவர் கலந்து சம்பாஷித்திருக்கிறார்கள். காங்கிரஸ் சகல ருள்ளத்திலும் குடி புகுந்து ஐக்கியமாய் ஒருமைப்பட்ட இந்தியா தேசத்தின் மகா சபையாகி விட்டது. "சர்வாணுகூலன்" எனும் நாமதரன் அதின்மீது அதி தேஜோன்மயனுய்ப் பிரகாசிக்க ஆரம்பித்து விட்டான். 1886ல் இந்திய ராஜப்பிரதிநிதியும் 1887ல் சென்னைக்கவர்னரும் காங்கிரஸ் பிரதிநிதிகளை வரவழைத்து அவர்களுடன் சம்பாஷித்து விருந்திட்டுபசரித்து சகல மரியாதைகளும் செய்து அனுப்பியிருக்கிறார்கள். மொத்த பாகத்திற்கு காங்கிரஸ் சபையின் கருத்தைக் கவர்ன்மெண்டார் கவனித்து நமக்கு அநேக நன்மைகளைச் செய்து வருகின்றனர். பல கலங்களைக் காங்கிரஸ் மகாஜன சபையாரின் முயற்சியினுல் அடைந்திருக்கின்றோம். இனியும் அடையப் போகின்றோம். அவைகளை விவரிக்கில் பெருகும். எழைக் குடிகளின் அதிகரித்திரமானது தேச க்ஷேமத்திற்கே ஒரு பெரும் ஆபத்து. தேசலக்ஷ்மியை அருகில் வரவொட்டாது திடித்துக் காவல் காக்கும் சிரேஷ்டர்களையே நாம் விரும்புகிறோம். இராஜாங்கத்தாருடன் எதிர்த்துப் பேசவந்தோமில்லை. மனக்கூர்மை, பதத்தறிவு, நிதானிப்பு, விவேகம் என்ற ஆயுதங்களைக் கொண்டே நாம் போராடுகிறோம். காங்கிரஸ் அபிமானிகாள்! இந்தியதேசநிவாஸிகாள்! உங்களால் இயன்றவரை வாக்குசாயம் திரவியசாயம் புரிந்து எடுத்த கருமத்தை நிலை நிறுத்துங்கள். பலகொடுங்கோல் அரசாளிடமிருந்து நம்மை விடுவித்து நமக்கு சகலஸ்வதந்திரங்களையும் அளித்து அன்னிய இராஜாங்கத்தார் படையெடுப் பென்ற பயத்தை மனதிலிருந்து முற்றிலும் நீக்கி விசனமின்றி கௌரவமாய் காலக்ஷேபம் செய்யும்படி நம்மைப்பாதுகாத்து வரும் ஆங்லேய அரசாக்ஞையையே நமபி இன்னும் அவர்களிடமிருந்தே காம பலகலங்களையும் அடையவேண்டியவர்களாயிருக்கிறோம். அரசாக்ஞைக் கேற்ற ஸ்வாதீன மென்ற கல்லுணையை உண்டு களித்து எச்சரிக்கையினுல் தூண்டிக்கப்படும் தைரியத்துடனும், அமர்ந்த புத்தியினுல் மிருதுவாக்கப்பட்ட உற்சாகத்துடனும், தர்ம குணத்தால் மனம் இளகக் கூடிய கஷ்டிகாரராய் தேவஅன்பு தேசாபிமானம் என்ற நிலைமையான உணர்ச்சிக்குக் கீழமர்ந்திலங்கும் இந்தியப்பிரதிநிதிகளின் சங்கமாகிய "இந்தியன்நேஷனல் காங்கிரஸ்மகா சபை" என்றும் நிலைபெற்று குடிகளின் குறைகளை யகற்றி "கற்பகத்தரு" வென ஜவலிக்கும்படி சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் கருணை புரிவாராக.

நட்பு நிலைமை.

நண்பர்கள் உத்தமரென்றும் மத்திமரென்றும் அதமரென்றும் மூன்று வகையாயிருக்கின்றனர். ஆதலின், நாம் ஒருவருடன் நேசம பண்ண வேண்டுமென்றால் தராதரமாயாராய்ந்து நேசங்கொள்ள வேண்டும்; நிமிஷமென்ற ஒரு லருடனும் நேசித்து விடலாகாது. உத்தமர்களுடைய நேசமானது ஒருவன் வெகு அருமையாய்த் தேடிக்கொண்டதக்க பொருளைவும், அவ்வாறு அதைத் தேடிக்கொண்டால் அதைவிட அவனுக்கு வேறு காப்பு வேண்டியில்லை யெனவும் பெரியோர் கூறியிருக்கின்றனர். கவ்வி கேர்விகளிற் சிறந்த பெரியோர்களுடைய நேசம் ஒருத்தரிலிருந்து கரும்பு தின்றாற்போலப் போகப்போக இனபந் தருவதாகும்; அத்தகைப்பில்லாத மற்றவர்களுடைய நேசமோ அடியிலிருந்து கரும்பு தின்பதுபோலப் போகப்போக இன்பம் குறைந்தபோகும். ஆதலால் அப்படிப்பட்டவர்களுடைய நேசத்தை ஒரு போதும் தேடலாகாது. எப்படிப்பட்ட ஆபத்துவேளையிலும் கபமைக்கை விடாமல் காக்கவல்ல உத்தமர்களுடைய நேசத்தையே நாம் நமக்கு நற்றுணையாகத் தேடிக்கொள்ளவேண்டும். பாடலீபுரத்தில் பிரதாபசந்திரன் என்று ஓர் அரசன் அரசுபரிந்து வந்தான். அவனிடத்தில் கமலாகரன் என்றொருவன் அந்தரங்க ஸேவகனுயிருந்தான். அவனுக்கு கலியாணவர்மன் என்று ஒரு தணிகனுடைய மைசியப்பிள்ளையும், வீரகேசரி என்னும் இராஜவமிசத்தைச்சேர்ந்த ஒருவனும் சினேகிதர்களாயிருந்து வந்தார்கள். கமலாகரன் நான்தோறும் கலியாணவர்மனது திருகத்திலேயே புசித்துக்கொண்டு அங்கேயே குடியாயிருந்தான்; தன் வீட்டில் ஒருநாளும் புகிப்பதேயில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அவன் மனைவி, தாம் நான்தோறும் புசிப்பது எவ்விடத்தில்? எதனாலும் அதிகமாகக்கூடாதென்று பெரியோர் சொல்லுகிறார்களல்லவா? அவ்வுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சாம். அதிகமாக நெருங்கினுல் அவமதிப்புண்டாகுமேயென்றாள். அதற்குக்கமலாகரன், என்னின்னுயிர்காயகி! நீ சொல்லுவது சரிதான். ஆயினும் உத்தமர்களுடைய கூட்டுறவு அத்தன்மையதல்ல; எனக்கு இரண்டு நண்பர்களுண்டு; அவர்களிடத்திலேதான் நான் அடிக்கடி போய் உறவாடுவது; அவர்களில் ஒருவன் என்னை உண்டி உடைகள் அளித்து ஆதரிக்கிறவன்; மற்றவனை னைக்காகத் தன்னுயிரையும் கொடுத்து உபகரிப்பவன் என்று சொன்னன். அதுகேட்டு மனைவி நான் அவர்களிருவரையும் பார்க்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தாள். மறுநாள் காலையில் அவன் மனைவியை அழைத்துக்கொண்டு முதலில் கலியாணவர்மனது வீட்டிற்குச்சென்றான். அவன் இவர்களுக்கு அநேக உபசாரங்களைப் பண்ணி ராஜபோஜனம் செய்வித்து ஆதரித்தான். பிறகு இருவரும் வீரகேசரியின் வீட்டிற்குப்போனார்கள். அப்போது வீரகேசரி இவர்களைக்கண்டு கூடமா என்ற கல்வரவு விசாரித்துமாத்திரமே தவிர வேறே யாதொன்றும் சொல்லாமல் தன் காரியத்தில் நோக்கமாயிருந்தான். பிறகு கமலாகரனும் அவன் மனைவி கமலாட்சியும் வீடுபோய்ச்சேர்ந்தார்கள். வீட்டிற்குப்போனபின்னர் கலியாணவர்மனை உத்தமமான மித்திரனென்ற கமலாட்சியும், வீரகேசரியே உத்தமமித்திரனென்று கமலாகரனும் சொல்லிக்கொண்டு சிறிது கேரம் வாதாடினார்கள். கடைசியில் நிஜமாகிய பொன்னின் மாற்றைப் பரீக்ஷை செய்ய நினைத்து, அவர்கள் அதற்கு ஆபத்துவேளையே ஏற்ற உரைகல் எனத்தேர்ந்து அதற்குத்தகுந்த ஏற்பாடு செய்துகொண்டார்கள். அந்தப்படி மறுநாள் காலையில் கமலாட்சி எழுந்திருந்து கலியாணவர்மனதுவீட்டிற்குச்சென்று, என் பிராணநாதராகிய கமலாகரர்மீது அரசன் சிற்றங்கொண்டு சிரச்சேதம் செய்யும்படி உத்திரவு பண்ணிவிட்டார்; பேதைப்பெண்ணுகிய யான் என்ன செய்வேன்; நீங்கள்தாம் காப்பாற்றவேண்டுமென்று கதறினுள். அதுகேட்டு கலியாணவர்மன் ஐயோ! இதற்கு என்னசெய்வது! இராஜாரோஷஞ் செய்தால் அதைநாம் எப்படித்தணிக்கக்கூடும்? தனம்வேண்டுமானுல் எவ்வளவாயினும் யான் கொடுப்பேன்; மற்றபடி உயிர்க்கலகிய எனக்கு, ராஜசமுகத்தில் செல்வாக்கில்லையே என்ற சொல்லி அவளுடன் தானும் அழத்தொடங்கினன். பின்பு கமலாக்ஷி வீரகேசரியினிடம் சென்று கலியாணவர்மனிடம் சொன்னதுபோலவே தன் புருஷனுக்கு விபத்து வந்துவிட்டதென்று சொல்லி அழுதாள். அதைக்கேட்டவுடனே சாப்பிட்டுக்கொண்டிருந்த வீ

ரகேசரி அதைவிட்டுத் திடீரென்று எழுந்திருந்து கண்களில் கொப்பளிப்பொறிபறக்கக் கத்தியை உருவிக்கையில் எடுத்துக்கொண்டு அரசனைக் கொலை செய்துவிடுவதாக உத்தேசித்து அரண்மனையை நோக்கி விரைவாய்ச்சென்றான். அவன் அப்படி ஓடிவருவானெனத்தெரிந்து கமலாகரன் எதிர்கொண்டுபோய், மித்திரா! மந்திரிமார் அரசனுக்குச்சொல்லி அலனுக்கு என்மீதுண்டான கோபத்தை ஆற்றி என்னை விடுவித்தார்கள்; நீ வீட்டிற்குப் போகலாமென்று சாரதானஞ்சொல்லியனுப்பினன். பின்பு கமலாகரன் தன்னில்லத்திற்குப்போய்த் தன் மனைவியை நோக்கி, இப்போது நீ என் மித்திரர்களின் தாததம்மியத்தை அறிந்தாயா? கலியாணவர்மன் உபசாரங்கள் செய்யும் மித்திரன்; வீரகேசரியோ தன் பிராணனைக் கொடுத்தாகிலும் என்னைக்காப்பாற்றவேண்டுமென்றுகருத்துக்கொண்டவன்; அன்றியும் அன்பை அதிகமாய் வெளியில் காட்டிக்கொள்ளாமல் உள்ளத்தில் ஒன்று சேர்த்து வைத்திருப்பவன். இவர்களில் வீரகேசரியே உத்தம மித்திரன், கலியாணவர்மன் அவனைவிட ஒரு படி குறைந்தவனே என்று சொல்லித்தெளிவித்தான். இவ்விதமாகத்தன் மித்திரனுக்கு ஒரு விபத்து வந்ததென்று சொல்லக்கேட்ட மாத்திரத்தில் அதைத்தீர்க்க முயல்பவனே உத்தமமான கணபனும். இக்கருத்துக்கோக்கியே "உடுக்கை யிழந்தவன் கைபோலவாங்கே—இடுக்கண் களைவதா கட்பு" என்று பெரியோரும் கூறியிருக்கின்றார்கள். ஆதலால் அத்தன்மையானவர்களோத்தமக்கு நற்றுணையாகத் தேடிகொள்பவர்கட்கு எக்காலத்திலும ஒரு குறையுமுண்டாகாது.

கதைமுடிவு.

(127-ம் பக்கத்தொடர்ச்சி).

அதன் வலிமையையுந்தடுத்து எதாவது ஒன்று உள்ளே புகத்துணியுமானால் அத்தருணத்தில் அது பலகடவை உறுத்தியுறுத்தி நமக்குத் தெரிவிக்கும். அதன் அறிவிப்பை நாம் அலட்சியஞ்செய்தால் அதுவும் நம்மிடத்தில் உதாசினமாய்க்கடைசியில் கண்டவர்களுக்கும் வழிவிட்டுக்கண்ணயர்ந்துபோம். ஆதலால் அப்படி ஒரு நாளும் நேராமலிருக்கும்படி நாம் ஜாக்கிரதையாய் இருப்பதுடன் கடவுளையும்பிரார்த்திக்கக்கடமோம். சர்வலோகரக்ஷகனுடைய ஜோதீசனுடைய பொற்பாதங்களைப்போற்றுவாருக்கு ஒருகுறைவும் உண்டாகாது. இதைவிட வேறென்ன நான் உனக்குச்சொல்லப்போகிறேனென்றான். அதைக்கேட்டுப்போன பாட்டன் சொற்படி நடந்து பெருமையாய் வாழ்ந்திருந்தான். முற்றிற்று.

அப்புறமென்ன?

ஒரு நகரத்தில் பிரசித்தமான கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த தனக்கு அறிமுகமான மாணக்கனொருவனை நோக்கி மிகுந்த புதுநிசாலியும் சமர்த்தனுமான ஒரு பண்டிதன் நீ படித்தானபிறகு என்னசெய்யப் போகிறயென்றுகேட்க அதற்கு மாணக்கன் நான் உக்கீலாய்ப்போவேனென பண்டிதன் "அப்புறம் என்ன செய்வாயென்று" கேட்டான். அதற்கு பிறவன் நியாய விசாரனைக்குக் கடினமான வியவகாரங்கள் வந்தால் அவற்றை ஏற்றுக்கொண்டு நியாய மெடுத்துப்பேசி ஜெயம்பெற்றுப் பேரும் பிரசித்தியும் சம்பாதிப்பேனென்று மறுமொழிகவில "அப்புறம் என்ன செய்வாய்" என்று

மீண்டும் பண்டிதன் வினவ அப்பறம் மிகுந்த செல்வமும் சிறப்பும் பெற்றுள்ளதாலத்தில்என்ன செய்கிறதென்றுவிசாரப்படாமல் வாழ்வதற்கேற்ற வழி தேடிக்கொள்வேனென்ற மாணக்கன் விடையளிக்க மறுபடியும் பண்டிதன் "அப்புறம்என்ன செய்வாய்" என்ற கேட்க மாணக்கன் அப்புறமா? அப்புறம் என்னசெய்கிறது? சுகமாய் வாழ்ந்து பின் இறக்கவேண்டியதுதானென்றான். அந்தப்பண்டிதன் அவ்வளவோடு அவனை விடவில்லை. "அப்புறம் என்னசெய்வாய்" என்று மறுபடியும்கேட்க அதுவரையில் சரியாகச்சமாதானம்சொல்லிக்கொண்டுவந்த சிறுவனுக்கு அதற்குமேல் மறுமொழி ஒன்றும் கூறத்தோன்றவில்லை. ஆயினும் கேட்டவனுடைய கருத்து இன்னதென்பதைமெல்லத்தெரிந்துகொண்டு அவன் அதேசிந்தையாய் வீட்டிற்குச்சென்றான். வீட்டிற்குப்போய் அதைப்பற்றியே அவன் வெகுநேரம் ஆலோசித்துக் கொண்டிருந்து கடைசியில் அவன் தெரிந்துகொண்ட விஷயமாவது:—

ஒருவன்தான் இவ்வுலகில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் பெற்றதே பேறு என்று அவ்வளவோடு திருப்தியடைந்திருக்கலாது. இத்தகைய அற்பமாயிய தேகமொழிந்த பிறகு பெறத்தக்க பேரின்பமே ஒன்று இருக்கிறதென்பதையுணர்ந்து "அந்த வீடுபெறுதற்குக் கடைத்தேறுவதற்கு வேண்டிய வழிகளை முக்கியமாய்த் தேடிக்கொள்ளுதல் அத்தியாவசியகரம்; அதுவே தன் வாழ்நாளில் ஒருவன் பெறத்தக்க பெரும்பேறு" என்னும் உண்மையைக்கண்டுகொண்டான். ஆதலால் இப்பூமியில் மனிதராய்ப்பிறந்தவர்கள் தமது வாழ்நாளை வீணிற் கழிக்காமல் தம்மால் வஞ்சனையின்றிப் பாடுபட்டுக் கல்வி செல்வம் முதலிய பொருள்களைத்தேடிக்கொள்ளுதலவசியகரமேயாயினும், அவைகளே நமக்குப் பரமபுருஷார்த்த மென்றிருக்கலாகாது; அவைகளைக் குறியாகக்கொண்டு, இம்மாணாக்கன் கண்டறிந்த விதமாகவே மறுமை ஒன்றுளது என்பதை நன்றுயறிந்துகொண்டு பிற்காலத்தில் நாம் நரகிற்கு ஆளாகாமல் நல்லகதியடைவதற்கு வேண்டிய வழிகளை முதன்மையாய்த் தேடிக்கொள்ளவேண்டும். பரலோக ஸாம்பிராஜ்யம் பெறுவதற்கு வேண்டிய வழிகளைத்தேடிக்கொள்ளாத மனிதன் இப்புவியில்பிறந்தும்பிறவாதவனேயாம். விவேகமுள்ள ஒருவன் இவ்வுலக வாழ்க்கைக்குவேண்டிய கல்வி செல்வம் முதலியவைகளைத்தேடுகிறவிஷயத்தில் தன்னைச்சிறுஈவி போல நினைத்து அவற்றைத்தேடிக்கொள்ளவேண்டும்; பறமைக்கு வேண்டிய தருமங்களைத் தேடிக்கொள்ளுகிற விஷயத்திலோ நமக்கு இறப்பு இக்கணமே வந்தாலும் வரலாமென்று அதை எதிர்பார்த்துக்கொண்டு அவற்றை விரைவிலேயே சித்தமாய்த் தேடிவைத்துகொள்ளவேண்டும்.

நல்லுரை.

கன்றிசெய்த ஒருவனைக்காணுவதைவிட மேலான சந்தோஷம வேறொன்றுமில்லை. உனை உபகாரி என்று ஒப்புக்கொள்ளுகிற ஒரு மனிதனுடைய வார்த்தையானது சங்கீதத்தைவிட காதுக்கு அதிக இன்பமாயிருக்கும்.

புத்திசாலித்தனமாய் உபயோகப்படுத்தி மனதிற்கு சந்தோஷமாய் எல்லோருக்கும் பங்கிட்டுக்கொடுத்து கிடைத்தமட்டில் போதுமென்ற மனத்திருப்தியுடன் நல்வழியில் கிடைக்கும் லாபத்தையே புத்திமான் விரும்புவான். இங்ஙனம் கிடைத்தது போதுமென்ற மனத்திருப்தியையும் நல்ல மனசாக்ஷியையும் உடையவன் தன்னுயுள் காலமெல்லாம்மனச்சந்தோஷத்தோடிருப்பான்.

நன்றி மறப்பது ஒரு வெட்கக்கேடான குற்றம். இக்குற்றம் செய்த

தாக உலகில்ஒருவனுப்ஒப்புக்கொள்ளமாட்டான். உன்னைக்குறித்துப் புகழ்ந்து பேசுகிறவர்களுடைய நடித்தையைப்பற்றிஅவர்களுடைய யோக்கியதையை நீ மதிப்பிடுதற்கு முன், யோசிக்கவேண்டும்.

புத்திமான் தர்மகுணமுள்ளவனையும் சன்மார்க்கப் பிரவர்த்தகனையும் மெச்சிக்கொள்ளுவான். மற்றவர்கள் பாலாஷ்டியனையும் பாக்கியவந்தனையும் புகழ்ந்து பேசுவர்.

ஒருவன் சம்பூரணமாய். நீதிமான் என்ற பெயரெடுப்பதற்குக் கடவுளினருள்வேண்டும். நம்மால் கூடியவரையில் நீதி மார்க்கத்தில் நிற்பது மனிதனுடைய மஹிமைக்கு உரித்தானதாயிருக்கிறது.

பிரதமத்தில் நம்பிக்கையான வார்த்தைகளைச்சொல்லி பிறகு வஞ்சிப்பதிலும் பெரிய தூரோகம் இவ்வுலகத்தில்வேறொன்றுமில்லை.

அதிக ஆசையில்லாதவனுடைய சந்தோஷம் சாஸ்விதமானது. எவ்வித பிரயத்தனத்திற்கும் யுகம் அறிவுக்குமுன் நிற்கவேண்டுமே. ஒவ்வொரு செய்கைகளுக்கும் நியாயம் நமக்குத்துணையாகவேண்டும்.

முன்பின் யோசியாமல் ஒருவர்மீது அதிக அபிமானம் அல்லது நம்பிக்கை வைக்கலாகாது, ஏனெனில் உலகில் ஸ்வயப்பிரயோஜனதீதைநாடியே நம்மை வந்து அடுப்பார்கள். அவர்கள் ஆபத்துக்குதவார். நாம் செல்வ வந்தர்களாய் இருக்கும் காலத்தில் சேர்களின் உள்ளன்பு தெரியமாட்டாது. மனிதர்களுடைய அந்தரங்கங்களைத் தெரிந்துகொள்ளவல்லமையுள்ளவனுக்கு தன் மனதுக்கிஷ்டமான உண்மையான சினேகிதர்கள் கிடைப்பதரிது. நமது கடமையைத் தெரிந்துகொள்ளுவதுமுதற்காரியம். அதன் பிறகு அதைச்செய்யும் முறைமையை யறிவது கன்ம. அறிந்தபின்னர் அம்முறைப்படி கடமையைத் தவறாது செய்து முடிப்பதரியம். இம்மூன்றும் நாம் தினந்தோறும் நினைவிற்கொள்ளத்தக்க முக்கிய விஷயங்கள்.

மிதமிஞ்சினதைரியம் மூட்டான்தனமாயும் மிதமிஞ்சின பிரேமபலஹீனமாயும் மிதமிஞ்சின செட்டு பேராசையாயும் முடிகிறது.

எந்த விஷயத்தையும் நிச்சயம் நிச்சயம் என்று சொல்லாதே. நிச்சயம்போல் தோன்றி பொய்யாகமாறும் சங்கதிகளுமுள. வழவழ சமாச்சாரம் கெழு கெடுதல். கண்டிப்பாயிருப்பது நன்மை. இல்லாதவன் தரித்திரனல்ல. இல்லையென்பவனே தரித்திரன். கொஞ்சமிருப்பவன் ஏழையல்ல. அதிகம் வேண்டுமென்போனே பரம ஏழை.

ஒருவனுக்குச்செய்த ஒரு சொற்ப கெடுதி தான் கடைசியில் பெருக்கே டாக வந்து முடியும். இதுகவனத்தில் வைக்கத்தக்கது.

மன்னிப்பு.

தேவ நிர்மாணத்தின்படி நீதிநிறையின் தெளிவான கருத்துக்கு இணங்கி பிழை பொறுத்தல் என்னும் கடமையை நிறைவேற்றுகின்றோம். அக்கடமை எக்காலத்தில் இருவகையான பிரயோஜனத்தைவிளைவிக்கிறது. மன்னிப்படைந்தவனுக்கு மனரம்மிய சந்தோஷமும் தான் செய்த பிழையை நினைந்து அனுதாபப்பட்டு மனந்திரும்புவதற்கு மார்க்கத்தையும் உண்டாக்குகின்றது. குற்றம்குறைகளைச் செய்திருக்கிறோமென்று தன்குற்றத்தைத்தான்உணருகிற ஒவ்வொருவனும் தான்அடைந்த மன்னிப்பை ஒருவரிடமிருந்துவாங்குகிறதுடன் சுமையைப்போல் எண்ணிநடக்கக்கடவன். சாதாரண மானசிறுபிழைகளில் மன்னிப்படைவதை அன்னியோன்னியசாந்தகுணத்தின்

பொருள்பாடமாயெண்ணவேண்டும். இந்தசகிர்தகருமத்தைமனிடர்அறியாதிருப்பதேல் ஒழுங்கு,முறைமை,சகானுபவம், மனசமாதானம், இவைப்போறதல் இதுகள் மானிட ஜென்மத்திற்கு அன்னிய பொருள்களாய் ஏற்படும். கோபத்துக்கு இடங்கொடுத்து அளவுக்குமிஞ்சி நமக்கு ஒருவன் புரிந்த தீங்குக்கு பதிலுக்குபதில் செய்யநினைப்போமாஞல் அதிதீவித்தகுரோதம், மனக்கடுப்பைத்தூண்டிவிடும். துன்பமடைந்தவனே துன்பத்தைச் செய்தவனும் விடுகிறான். இவ்விதமாய் குற்றங்கள், பிரதிகாரங்கள், நூதன துன்பங்கள், ஒப்லின்றி அடுத்தடுத்து உண்டாகிக்கொண்டே வந்து உலகமெங்கும் இரத்தக்காடாகிவிடும். மனிஷராய்ப் பிறந்தோர்க்கு இயல்பாக உண்டாகக்கூடிய கோபமென்னும் குணவிகாரங்களில் பகைசாதித்துப் பழி வாங்கவேண்டுமென்று கொள்ளும் சித்தவிருத்தி அதிக பயங்கரமானது. கோபத்திற்குப் பூரண அதிகாரத்தைக்கொடுத்து அதுபோன போக்கேயாதொரு தடையின்றி விடுத்தோமாஞல் அது மனிதனுக்த தற்கால நிலைமையில் உள்ள சொற்ப இன்ப சந்தோஷங்களையும் கெடுத்து துன்பதுதுக்த ஆளாக்கிவிடும். அதினியினுல் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் துன்பத்துக்த ஆளாவதாயிருந்தபோதிலும், வன்முகுணத்தால் பகை சாதிக்கும்படியான செட்ட எண்ணத்துக்கு இடங்கொடுப்பின் இன்னமும் அதிக கஷ்டப்படும்படியான இடையூறுகளுக்கே ஆளாகிறான். அகோரமான கோபத்திற்கு தன் மனதில் இடம் தந்தவன் தன் பத்தியீனத்தினுல் செய்துகொண்ட காரியத்தில் தான் அனுபவிக்கப்போகும் தீங்கும் துன்பமும் ஒரு சத்துருவினுல் உண்டாக்கூடிய தூரக்கிருதத்துக்கும் அதிகமாகும். துன்பமென்னும் பிரதேசங்களில் வசிக்கும் பாபாத்மாக்கள் கொடுமையிலும் பழி வாங்குவதிலும் சந்துஷ்டியடைவதாய்ச் சொல்லப்படுகிறது. அகண்ட இவ்வுலகதில் பெரிதும் நன்மையுமான விஷயம் ஜீவகாருண்யமும் இரக்கமுமே. மனிதன் தன் அவபத்தியினுல் நீண்ட காலங்களாய் சர்வசக்தியுள்ள தேவனுடைய நீதி தர்மத்துக்குத் தவறுதலாய் நடந்தபோதிலும் நமது பரமபிதா நம்மீது சினத்தைச்சாதிக்காமல் பொருமையுடனிருப்பார். சான்றோர்கள் தங்கள் மூடர்களுடைய தர்ச்செய்கைகளினுல் எவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும், ஆஹகீதா! இந்த மனிதர்கள் தாங்கள்செய்யும் தூர்க்கிருத்தியங்களின் பிரயோசன மின்னதென்னவறியாது மதியீனமாய் பிசகான காரியங்களைச் செய்கிறார்கள். ஆதலால் அவர்கள்மீது மனமிரக்கம் வையுமென்று கடவுளைநோக்கி பிரார்த்திக்கிறார்கள். சாதுஜனங்களுடைய சரித்தைகளைக் கவனித்துவருவோமாஞல் பிழைபொறுத்தலென்னும் அபூர்வகுணம் நீண்டகாலமாய் அவர்களிடமிருந்தாய் கண்டறியக்கூடுவதுமன்றி அவர்களையே அவர்கள் தர்ம குணத்துக்காக அவர்களைப் பெரியோரென்றும் சற்பாத்திரங்களென்றும் மரியாதையாய் மதிக்கப்பட்டு வந்ததையுமறிகிறோம். பேதை மதியுள்ளவர்கள் தெரிந்தில்பட்டும் பகை சாதிக்கும்படியான தற்குணங்களுண்டாகும்.மகத்துவமுள்ள மேன்மக்களுக்கு எப்போதும் சிறந்த புத்தியே உண்டாயிருக்கும். அவர்களுக்கு ஒருவரும் எவ்வித தீங்கையும் செய்யமாட்டார்கள். மற்றவர்களைப்போல் நிகைப்பு மனக்தமோஸல் அவர்களுக்கு உண்டாகமாட்டாது. புத்தியீனர்களுடைய பல ஹீனமான எதிர்தாக்குப் போருரட்டங்களினுல் யாதொரு இடைஞ்சலுக்கும் ஆளாகாமல், தங்களுக்குத்துன்பம் செய்தவர்களின்மீது தயானகுணத்தையும் பரிதாபத்தையும் வகித்து அவர்கள் தூர்செய்கைகளுக்கு கோபப்படாமல் அவர்கள் பிழைகளைப்பொறுத்தருளுவார்கள். உலகத்தில் தெரிந்தோ தெரியாமலோ ஒருவன் ஒரு தவறுதலான காரியத்தைச் செய்த காலத்தில்

அந்தக்குற்றத்தை மன்னிக்கும்படியான மனதையுடைத்தாயிருக்கும் மனிதனே கல்லவனென்றும் பெரியவனென்றும் உலகம் அவனைப் புகழ்ந்துகொண்டாடுகின்றது. ஆனதால் நாம் பெரியோர்கள் சென்ற வழிபையனுசரித்தும் கோபத்திற்கிடங்கொடாமலும் நமக்குத்தீங்குசெய்தவர்களுக்கு நாம் நன்மையேசெய்தும் அவர்கள் அறிவீனத்திற்குப் பரிதாபப்பட்டு இரங்கி மன்னித்தும்ஸதாசாது சிரோமணிகளாய் இலங்குவதற்கேற்ற முயற்சிக்கொக்கையாடக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்விதம் சிறக்க அத்தல்துக்கு நாம் வருவோமாஞல்இதிலுள்ள மனமகிழ்ச்சி வேறெதிலுமிருக்கமாட்டா.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

ஒரு நியாய விசாரணை.

[ஞானபுரி நகரில் நடந்த ஒரு விசாரணையில் கீழ்கண்ட ஜூரிகள் கோர்ட்டாராலும் பிரதிவாதியின் வக்கீலாலும் நீக்கப்பட்டனர்.]

(1) பெருமை:—இவன் அகங்காரத்தின் சகோதரன். என்னேரமும் பாவ வழியில் புத்தியைச்செலுத்துகிறவன். இவனுக்கு நியாயாணியாயம் தெரியாது. சகல குற்றங்கட்கும் இவனே அஸ்திவாரம். இவனுக்கு அன்பு கிடையாது. வீண்செலவுக்காரன். இவனுக்கு அன்பில்லாவிட்டாலும் பொருமை மட்டும் ஏராளமாயுண்டு. இவன் ஜூரிக்கு உதவமாட்டான்.

(2) அன்பன்:—இவன் சினேகிதத்தை உண்டுபண்ணுகிறவன். இளநெஞ்சன். கடிவாளங்களை நேராய்ப்பிடித்து அஸ்வ ஸாரத்தியம் செய்யவல்லவனல்லன். திடமான மனது இவனுக்குக் கிடையாது. ஒரு சமயம் தவறிவிடக்கூடும். ஜூரியில் இவனை நியமிப்பது உசிதமல்ல.

(3) சம்பந்தன்:—அன்பு சினேகபந்தத்தால் இரண்டுபெயரையும் சேர்த்துவைக்கிறவன். பாரபக்ஷமின்றி நடவான். சுயலாபதிருஷ்டியுள்ளவன். இவன் இந்தவேலைக்கு உதவான்.

(4) ராஜ பிரபு:—இவர் அரசனுடைய சமீப பந்து. உலகதந்திரம் செய்கைகள் லோக வியவகாரங்கள் முதலியன இவருக்கு ஒன்றும் தெரியாது. உண்மை பொய் என்பதைக் கண்டுபிடிக்கத்தக்க அனுபவமுமில்லை. இவருடைய நியமனம் அநுகூலத்திற்குரியதல்ல.

(5) வெறுப்பு:—இவருடைய பெயரேவிருப்பத்தைக்கொடுக்கவில்லை. அனைவராலும் இகழப்படுகிறவர் இவர்தான். இவர் குணம் ஒருவருக்கும்பிடிக்காது. மரியாதையாய் இம்மகாபுருஷரை அனுப்பிவிடுதல் குணகரம்.

(6) கடனிருக்கநிருவாகமில்லாதவன்:—இவன் வாங்கின கடனைகொடுக்கக் தெரியாதவன். தன் அஜாக்கிரதையினால் ஸ்வபொருளை இழந்தவன். தன்னுடைய வியாபாரத்தையே ஒழுங்காக நடத்த வல்லமையற்றுப் போன இவன் ஜூரிவேலைக்கு அருகனுவதியாங்ஙனம்?

(7) உடன்படிக்கை:—இவன் உடன்படிக்கை சாத்தின்படி தன் சினேகிதனுக்கு உதவிசெய்யவும் உறவுபாராட்டவும் கடமைப்பட்டவன். இவனுக்கு ஸ்வயேச்சை, ஸ்வாதீனம் கிடையாது. தனக்கு இஷ்டமில்லாத காரியத்திலும் உடன்படிக்கையின் நிபந்தனை நிற்பந்தத்தால் தன் உறவினனுக்கு தவிபுரிய வேண்டியிருக்கிறது. இவன் தேவையில்லை.

(8) ஜாதி:—இவன் தான் கடவுளிடமிருந்து உற்பத்தியான தாக வீண் டம்பமான லக்ஷணங்களை வழங்குகிறவன். இவன் ஒற்றுமைக்கு ஒரு பெரிய சத்துரு. ஆயுளாவும் ஒரு கட்டுக்கு உட்பட்டவன். சுய இச்சையாய் இவன்செய்யுங்காரியங்கள் தண்டனைக்கு உட்பட்டதாயிருக்கும். அவன்சொந்த உறவினரே சொற்ப குற்றத்திற்கும் அவனை நீக்கிவைப்பார். உலகினுடன்தாராளமாய் சினேகமசெய்ய சக்தியற்றவன். இவன்வேண்டியதில்லை.

(9) ஏலம்போடுகிறவன்:—இந்த மனிதனை அதிகமாய் நம்பகியாயமில்லை. அவன் வசம் ஒப்புவித்த சொத்தில் அவனுக்கு அதிக லாபமில்லை. தன் தொழில் அவ்விதமானதென்றும் தன்னை ஒருவரும் ஞாஷிக்க குற்றஞ் சாட்டகியாயமில்லை யென்றும் எண்ணுகிறவன். 10ரூபாய் சாமானை 1ரூக்கும் 1 ரூபாய் சாமானை 10 ரூபாய்க்கும் விற்பான். எவத்தில் உயர்ந்து கேட்பவர்கட்கே கொடுப்பான். இவனுக்கு இவ்விடம்வேலையில்லை.

(10) பிரம்மாச்சாரி:—இவன் தனிமனிதன், இவனுக்கு குடும்ப கஷ்ட சுகம் தெரியாது. இவனை நம்பி வர்த்தகர்கள் எவரும் கடன் கொடுக்க அஞ்சுவார்கள். இவன் நடத்தையில் எல்லோருக்கும் திருஷ்டியுண்டு. இவன் சன்மார்க்கப் பிரவர்த்தகனுயிருப்பானென்று நினைக்கப் பெரும்பாலும் கியாயமில்லை. இவன் (ஒருவனுக்கு) புருஷன் அல்ல. இப்படிப்பட்டவனை ஜூரிவேலைக்கு நியமிப்பது கூடாது.

(11) கள்ளச்சீனேகிதன்:—இவன் ஆட்டுத்தோல் போர்த்த ஒனாய். இவனை நம்பி மோசம் போனவர்கள் அநேகர். மூன்று ஒன்றின் ஒன்றுபேசுவது இவன் இயல்பு. இவன் உதட்டில் உறவு. நெஞ்சில் பகை. இவன் வாய்மட்டும் வாழைப்பழம். இவன் எந்த வேலைக்கும் உதவான். அப்படிப்பட்டவனுக்கு இவ்விடத்தில் என்னவேலை?

(12) மதுபானி:—இவனுக்கு ஸ்திரமான புத்தியில்லை. நேற்றுபட்ட உதைகளை இன்று மறந்துவிட்டு மறுபடியும் மதுவருந்த ஓடுகிறவன். இவன் முன்னுக்கு வருவது மிகவும் அரிது. கடைசியில் இரப்பது அல்லது இறப்பது தான் இவன் அடையும் லாபம். இவன் வேண்டியதில்லை.

[இவர்களை நீக்கிவிட்டு விசாரணை ஆரம்பிக்கத் தொடங்கினர்.]

ஆங்கிலேயரின் பூர்வ சரித்திரச் சுருக்கம்.

ஆங்கிலேயர் பிரான்ஸ தேசத்திலிருந்து வந்த செல்டிக் ஜாதியார். இவர்களுக்கு காகரீகம் கிடையாது. குடிசைகளில் குடியிருந்து மிருகங்களின் தோலைப் போர்த்துக்கொண்டிருப்பார்கள். நிலம் உழுது பயிரிடுவது ஆடு மாடு மேய்ப்பதும் சாங்கமேலை செய்வதுமே இவர்களின்தொழில். மதம், பெரிய விருக்ஷங்களை வணங்கும் தரியிட்டமம். கிறிஸ்து பிறக்க 55 வருஷத்திற்த முன் ரோமர் இங்கிலாந்து மீதுபடை யெடுத்துவந்து கிறிஸ்து பிறத்து 410வருஷங்களாய் ஆண்டுவந்தனர். அவர்களால் தான் கிறிஸ்தி மதம இங்கிலாந்தில் பரவியது. பிறகு ஸ்காத்லாண்ட் தேசத்தார், சாக்சனிஷ்தேசத்தார் ஆண்டுவந்தார்கள். 1017முதல் 1042வரையில் டேனிஸ் ஜாதியாருடைய ஆளுகையிலிருந்தது. மீண்டும் சாக்சனி ஜாதியார் 24வது வரை அரசாக்கியசெய்தனர். 1066ல நாமென் ஜாதியார் இங்கிலாந்தைக் கைப்பற்றினர். இந்தக்காலத்தில் அரசனும் குடிகளும் நிலக்கோப்பங்குபோட்டுக்கொண்டு உம்பளிக்கைப் பிரமாணம் எற்படுத்தினர்கள். அப்போது நியாய விசாரணை பழுக்கக்காய்ச்சின இரும்பை எடுத்தல, கொதிக்கிற தண்ணீரில் கையிட்டு அதில் போட்டிருக்கும் கல்லை யெடுத்தல், சண்டைக்கு உபய கக்ஷிக்காரர்களையும் வட்டுப்பார்த்தல் முதலிய பலகடும்பரீக்ஷைக்கு உட்பட்டிருந்து. 1164ல் அரசியல் சட்டம் ஏற்பட்டன. 1215ல் "மீக்ஞ

சார்டா" எனும் மகாசாசனப் பத்திரம் உண்டாயிற்று. இதற்கு 50 வருஷங்கட்குப்பிறகு குடிகள் சங்கமும் பார்லிமெண்டும் ஏற்பட்டது. பார்லிமெண்டு வெகுபரியந்தம் சேர்பெற்றிருக்கவில்லை. 16வது நூற்றாண்டில் இராஜ்ஜியம் கொடுங்கோன்மையாயிருக்கது. 1625 முதல் 1649 வரையில் சாரளஸ் அரசன் பார்லிமெண்டில்லாமலே ஸ்வயேச்சையாய் ஆண்டுவந்தான். அதினால் அதிக கலகங்களுண்டாகி அரசனை மரணதண்டனைக்கு ஆளாக்கி சொற்ப காலம் குடியரசாயிருந்து மறபடியும் கொலையுண்ட இராஜனின் குமாரன் பட்டத்துக்கு வந்தான். 1687 ல் "காரணமின்றி காவல்கூடத்திற்கு அனுப்புவதுகூடா"தென்று சட்டமேற்பட்டது. பதாரிகைகளுக்கு சுதந்தரம் கொடுக்கப்பட்டது. இரான்ஜியத்தில் மதப்பிரட்டர்கள் உண்டாகி அரசனை நீக்கி அன்னியதேசத்தரனுடைய ஆரேஞ்சு சிற்றரசன் ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தான். 1782 ல் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சுதந்தரத்தைப் பெற்றன. அமெரிக்காவை இழந்ததில் ஆங்கிலேயர் பலஹீனர்களாய்ப்போயினும் இந்தியா தேசமானது தக்சமயத்தில் கைதூக்கிவிட்டது. 1877 ல் காலஞ்சென்ற விக்டோரியா ராணியவர்கள் "இந்திய சக்கிரவர்த்தினி" பட்டத்தைப் பெற்றார்கள். பிறகு சக்கிரவர்த்தினியவர்கள் 1901ல் மரணமடைய அன்று சொட்டு எழாவது எட்வர்ட் மகாராஜா அவர்கள் இராஜ்ஜியபரிபாலனம்செய்துவருகின்றார்.

S. G. N.

உலக வாழ்க்கையில் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல.

இப்பூவுலகத்தின்கண், இடம், பொருள், ஏவல், முதலிய எதுக்களைக்கொண்டு அனுபவிக்கும் இன்பம் பூரண இன்பமாகமாட்டா. இத்தரை மீதில் மன்பதைகள் சுகம்பெறக் கருதிச் சம்பாதிக்க முயலும் எவ்வகைச் செல்வமும் பொருட்செல்வம, புகழ்ச்செல்வம், என இருவகையாகும். அவ்விரு செல்வங்களுக்கும் மூன்று நிலைமைகள் உண்டு. முதலாவது தேடும் நிலைமை, இரண்டாவது அனுபவிக்கும நிலைமை, மூன்றாவது காக்கும நிலைமை. இதில் முதன்மையாயுள்ள தேட முயலுஞ் செல்வத்தை நாம் கருதிய வாறு அடையாமல் பிரதிகூலப்படுகிறோம். விடாமுயற்சியால் அடைந்தும் அதை அனுபவிக்கும் திறமின்றி அதிர்ப்தியடைந்து மனக்குறைபடுகிறோம். அனுபவிக்குங்காலமும் நம்பிறும் நிதைவின்றிக்காக்கலாகுமா என்ற திடநம்பிக்கையில்லாமல் சந்தேகக் கடலில் மூழ்கி வாடித்தவிக்கிறோம. இத்தகைய மூன்று நிலைமைகளிலும் இன்பம் சம்பந்தப்பட்டிருத்தல்பற்றி லௌகீகப் பொருள்களால் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்லவெனநிச்சயமாய்ச் செப்புவோம்.

1. தேடமுயலும் செல்வத்தைக் கருதியவாறு அடையாமல் பிரதிகூலப்படுவது:— சர்வ தேசத்தார்களும் தங்கள் தங்கள் குறைவு, நிறைவு, விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்றவாறு வெவ்வேறு அபிப்பிராயங்களைக்கொள்வதும், அரசவர்கள் யுக்திக்கு உசிதமாகத்தோன்றும் பதறுத ஊக்கமும், அஞ்சாதசீரமும், சக்திர சாமர்த்திய முதலிய உபாயங்களால் அவ்வபிப்பிராயங்களை நிறைவேற்றி முடிக்க ஓயாமல் உற்சாகத்துடன் முயற்சி செய்வதும் இயற்கையே. முயற்சித்தும் பிரயோசனமென்ன? தடையன்றி யாவரும் சித்தி அடைகிறார்களா? எந்த முயற்சியிலாவது தவருமல் அனுகூலம் பெறுவதற்கு, ஏற்ற சாதனங்களை இதுவரையில் ஊகித்தறிந்தவர்கள் யார்?

வது இருக்கிறார்களா? ஒருவருமில்லையே. "கேடுமுள்ளவர்களுக்குப்பங்கமில்லை, பாரக்கிரமசாலிகளுக்குச் செயலில்லை, புத்திமான்களுக்குச் செல்வமில்லை." நாம் எக்கருமத்தைச் செய்யினும், அதிருஷ்டிபாகத் தேர்ந்து நிச்சயித்து, சிறிதும் இடையூறு வராதபடி காப்பதற்கு மிகுந்த ஜாக்கிரதையுடையிருந்தாலும், நம்புத்திக்குத் தோன்றுதவிக்கினம் எப்படியோ இடையில் சம்பவித்து, தொடர்ந்த கருமத்தைச் சித்திக்காமல் தடுத்து மனம் வருந்திச் செய்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாய்ப்போய்விடுகிற விஷயம் யாவருக்கும் அனுபவசித்தமாய்த் தெரிந்தவைகளேயாம். இவ்வாறே நாம் விரும்பித் தேடும் விஷயங்களே அடைபாமல் பிரதிகூலப்படுகிறோம். தமக்குள்ள செல்வமும், செழிப்பும், அதிகாரமும், போதாதென்று சாவலோகத்துக்குச் செல்வப்பொருள்களையும் கைக்கொண்டு சர்வாதிகாரிகளாகும்படி கர்வித்திருந்தவர்கள் கடைசியில் காரியசித்தி பெறாமல், தலைகீழாய் விழுந்து மடிந்தார்கள். யாவருக்கும், அவரவர்கள் செய்யும் முயற்சி பலிக்காமல், அப்போதைக்கப்போது பிரதிகூலம் நேரிட்டுவருகின்றது. இதைத்தவிர்க்கும்படியான திராணி எவருக்குமில்லை. மிகுந்த விரைவாய் ஓடும் வெள்ளத்திற்கு எதிர்பட்டதிரும்பானது அதற்கு எதிர்முகமாய்ச் செல்லாமல் தள்ளுண்டு நேர்ந்த துறையில் அடைவதுபோல மன்பதைகளும் உலகவாழ்வு என்னும் சமுத்திரப்பிரயாணத்தில் எடுத்த கருமத்தைத் தவறுமல் கருதிமுடிக்க வல்லமை யற்றவர்களாய் கால இயற்கை காரண காரிய சம்பந்த முதலிய தடுக்கப்படாத நூலேகளின் வழிச்சென்று யாதேனுமோர் துறையில் போய்ச்சேரவேண்டுவதுதான். இந்த நிச்சயம் எவருக்கும் சாதாரணமாய் இருக்கின்றது.

[இன்னும்வரும்] "தஞ்சைபுரிநேசன்".

கலாப் பிரகாசனி.

ஏழாவது அத்தியாயம்.

எத்தனை நாள் இத்தன்பத்தை யனுபவிப்பேன். இவ்வுலகில் யுறவோ சந்திரகிரியின் மன்னர் வீரகேசரியின் புதல்வியாய் இப்பூவுலகில் பிறந்தேன். ஆதிதேவா! அன்னளில் அடியோரைக் காத்தாய். திருவருளே வார்த்தாய். பக்தர்கள் பிழையைப் பொறுத்தாய். இன்னளில் பேதை யெனே யேனை வெறுத்தாய்? ஏழைபங்காளா! எனைவெறுப்பதுஞ் சரியோ? எந்தன் மீது னக்கென்ன குறையோ? இங்ஙனமெனைச் சோதிப்பதும் முறையோ? ஐயோ! ஈதத்தன் தலைவிதியோ? வீரசூர சௌரிய துராஜலக்ஷண ஸம்பன்னரான கலாபுரியின மன்னரை மணாளனுப்பெற்று மனமகிழ்வுற்றிருந்தேனே! திவ்ய கேஷத்திர யாத்திரார்த்தமாய் சென்றோராண்டில் கமலாபுரியையடைவேனென்றென் பதி னித்த உறுதிமொழியும் பாழாயினவே! பிராணேசா! நீவிர் அசத்திய வசத்தரல்லீர் அங்ஙன மிருக்க தாங்களளித்த மொழி பொய்த்த திபாங்ஙனமோ உணர்கிலேனியானும். வாழ்க்கைத் துணைவர் வருமுன்தொடர்ந்து வாரிதியில் மூழ்கி வையகத்தைத் துறக்சாரெனக் கேட்டலானேனே! நீதியாக மேதினியாண்ட என்றன் மன்னர்க்குத் தீதற்றலேது செய்குணன்? என்மனவசிகர மனோகர மணாளா! சுகுண சுகிர்த சுந்தரா! பிராணகாந்தா! திரைஜலதிலகா! பரநாரீ சோதரா! தர்மதுரந்தரா! எனதாருகைக்கனியே! எனமீ தனைக்கப் பகைமை என்னே? எனை இனிப் பாராதியோ? ராணியுனைக்காணேனே! சுகுணமாலினீ! என்றெனை யழைப்பது மென்றோ! நாதா! யுமைப் பிரிந்து பன்னீராண்டுகளாகியும் உமது சுந்தரவதனம் என்மனதில் இன்னும் சித்திரமாயிருக்கின்றதே!

"ஏனையே தனித்து விடவே நினைத்த வெனதாவி யொத்த துணைவா
மன மேதுனக் கெள்ளளவா மிரக்க மரிதாக வுற்ற தெனவோ
உனைதான் வெறுப்ப னெனநீ நினைக்கி லுயிரே விடுக்க முயல்வேன்
இனியே தெனக்கு கதி யேது சுற்ற மிது வேலை பற்றல் முறையே!"

பன்னெடு நாளாய் முயலருந்தவத்து முற்றிய பயனே வடிவு கொண்டாங்கு வந்துதித்த வனஸலோசனி எங்கதியாயினளோ? தேஸாந்திர சஞ்சாரஞ் செய்ய விரும்புற்றேறிய ரூபலாவண்ய ஸோபிதர்களான புத்திரரிருவரும் ஸ்வகரதடைந்தனரோ?, இலலேல் விபத்துக்காளாயினரோ? பிரதம பாலிகையைத்தான் பணிகிளருடன் பறிகொடுக்கலானேன். பின் பிறந்த மக்களாவது மகிழ்வுடன் வளர்த்தேனு? கடவுள், எனக்கு விதித்தபடி வேறெவருக்கும் விதிக்கவில்லை. சாந்தனையுஞ் சஞ்சலந்தானு? என் மீஸாக விமோசனமாவதென்றோ? அநிஷ்டஞ்நீனையாய் மிக்க இடுக்கண்களையே அனுபவித்து வருமெனக்குதித்த மாசறு மக்களு மிக்கதி யுறகேண்டுமா?

"மன்னனது புத்திரியாய் மாநிலத்தி லுதித்தென தான்மகிழப்பெற்றேன்
கன்னல் மொழிதேக் கெனது காதலனையுங் கடலிற் கையைவிட்டேன்
இன்ன மெனக் கெதவருமோ இங்ஙனமே துயர்தருமோ என்னைமைந்தர்
நன்னய கேஸ்திரங்ஙள் கண்டு மீண்டனரோ காஞ்ஞென்று மறிகிலேனே!"

ஈரேழுலகிற்கு நாதா! எந்தன் மீதித்தனை வாதா! ஐயோ எந்தன் தாவியும் பிழைக்கொணுதா! இஃது மிவளயற்றிய வினையின சூதா! ஸஸ்தாதாரபூதா! இனியாகிலு மனமிறங்காதா! என்றன் றுய ரறு கரந் தர தகாதா! பதியையிழந்து பாரி லின்புறுவதிலும் வனசஞ்சரியாய் வுதிதலே பங்கெனமதித்து அனைத்தையும்விடுத்து உலகசுகத்தையெறுத்து பன்னெடு நாட்களாய் படாதபாடுபட்டு பரதேசவாசம்பணி ஆலையருந்தி யடவிகடோறு மலைந்து இன்று இக்காட்டகம் வரலானேன். கதிரவனு மறைந்தான் குடதிசைதனில். இருளுஞ் சூழ்ந்தனவே நீலகெலாம்.பேதையானுமென் செய்கிற்பே னிப்பயங்கரா ரண்யந்தனில். ஐயையோ! ஆருந் துணைகாணேன்! நிலமிசையலங்கோலமாஞேன்! இப்பெருவனத்தினூடேயாங்ஙனம் செல்வேன்! என்செய்வேன்!

"ஆற்றெருணத் துயரமெய்தில் வடலியிற் றணியே வந்தத்
தேற்றுவா ரின்றித்தேம்பித் தேமபியே கதறு மீங்குக்
கூற்றுவன் போல சப்தம் கொடியமா மிருகக் கூட்டம்
நாற் றிசைகளிலு மோட நடுகுதே யுடலம் நாதா!"

பேரிடர்க்கடலி லமிழ்ந்திப் பரதவிக்கு மென்றுயரை யகிரிக்க இவ்விருளும் துணை செய்கின்றதே! வனவிலங்குகளின் வரவும் அகரிக்கின்றதே! பதியைப் பிரிந்து பார்தனில்நொந்தே, தேடாதவிடமெங்கும் பேதை தேடி பாவிபட்டு மெலிந்தே, ஈஸ்வரா! இருப்பதைநீ நன்றாயறிந்தே, நீனிலத்தே இவ்வல்லலுறச் செய்தல் நீதியாமோவெனை மறந்தே? இனி செயற்பாலதுயாது? விசும்பில் பிரகாசிக்கும நக்ஷத்திரங்ஙளையே துணையெனக் கொண்டு ஏதோ என்னுலாவளவும் இக்காள்விருளில் நடந்து செல்லத் துணிகின்றேன். வெகுதூரம் வந்துவிட்டேன். என்தயரைக் கண்டிரங்கி வழி காட்ட சந்திரனுமுதயமாகினனுன். பிராணநாதா! சந்திரனுக்குண்டான இரக்கங்கூட உங்களுக்கில்லாமற் போய்விட்டதே! இங்ஙன மெனைத் தனியே தவிக்கச் செய்தல் நீதியா?————இக்கோரரண்யத்தில் சப்தமொன்று வருகின்றதே! சற்று உற்றுக்கேட்கிறேன்.

"எனது சோழர்காள்! நமது பிரார்த்தனை நிறைவேறுவதற்காக ஸ்ரீதேவதைக்கு ஒரு நரபலி தரவேண்டுமென்ற யோசித்திருந்த விஷயம் நேரித்து வந்ததற்கு மிகவும் சந்தோஷிக்கிறேன். உங்களிஷ்டப்படி இன்று கனவாடிய இக்குழந்தையை நரபலியாவு பலிகொடுக்க யாதொரு தடையுமில்லை."

இக்ராதமர்களிடம் சிக்கி ஒன்று அகப்படக்கொண்டு தவிக்கிற தபோற் றோற்றுகின்றதே! இவர்கள் எனக்கென்னகெடுதி விளைவிப்பரோ? இப்புல்லர் செல்லோராயினும் இன்னோல் எனக்கென்ன இன்னல் நேருமோ! ஜகதீசா! இம்மனிகெட்டு சோழியத்தடிக்கும் கிராதகர்களிட மிருந்தெனை மீட்பிக்காயோ! அருகில் வந்துவிட்டனரே! ஐயையோ! யானென் செய்வேன்! இத்தயா ரஹிதர்களால் வாட்டமுற்ற வதங்ஙமீங் கெனக்குத் தேட்ட முரைப்பா ரெவருமில்லையே! எனக்கு அகலானகாலம் வந்திற்ற தோ! பதிவிலோக மோருபக்கம். பாலர் பாலகிளைப் பறிகொடுத்த துயரம் மறுபக்கம். இதற்கிடையில் காணிலுறும் கஷ்டநிஷ்டூரங்கள் மற்றொருபக்கம். இதுவும் போததென்றெண்ணியோ ஜகதீச! இக்கோரசர்மிகளிடமின் றெனைக் காட்டிவிட்டனை? கையில்லா வசைச்சொற்கள் மிகைபட வுரைத்து நகைமிகவாடி கமிள்போலெதருவில் நெருங்குகின்றனரே. துயருழந் தயர்ந்திருக்குமென் கரத்தைப்பிடிக்க வருகின்றனரே. பரபுருஷர் எனைத் தீண்டுதலு மொக்குமோ? பாவிகாள்! பத்தினிவாக்கு பொய்க்காது. பாதகர்காளுங்கட் கித்திறம்புரிவு யாகாது. நீவி பெண்களுடன் பிறக்கவில்லையா? இப்பேருலகில் வாழ்வதும் நிலையா? அனுதரக்ஷகா! இருகரமுஞ் சிரமீது கூப்பி வணங்குகின்றேன். இத்தருணடி எனக்கு உனையன்றி அடைக்கலம் வேறுகாண்பதரிது. நிகில நிரதோஷகா! நீயிரேகைவிட்டால் மற்றியாரே காக்க வல்லாரித்தருணமெனை? அவர்களிஷ்டத்திற் கிணங்கிச்செல்வாவிடில் சிரம் சேதிப்போமெனக் காவாளையுருவுகின்றனரே! ஐயோ!!

"பட்டபலமிடிக்கேயஞ்சிப் பதைத் தழுகின்றவேளைத்
துட்டர்களான கள்வர் தொட்டெனையிழுக்க முன்னு
ளிட்டவன் விதியோ மீங்கனெய்தது பாவிகால்வர்
கெட்டுயிர் விட்டுநீங்கி நிலத்தினில் வீழ்வர்கொல்லோ."

ஹா! இஃதென்னை? என்னை கெட்ட வந்தவன் தன்னை மறந்து அருகிலிருந்தவனை வெட்ட, இதைக்கண்டு சினமுற்ற மற்றொருவன் இவனை வெட்ட, வேறொருவன் வெறுப்புற்று வெட்டினவனை வெட்ட, அத்தருணம் அவ்விடத்தில் வைத்திருந்த துகள்வரின் துப்பாக்கி வெடித்துவெறுப்புற்றவன்மீது தாக்கி அவனைக்கொல்ல இங்ஙனமாக என்னை ஹிம்சிக்கவந்த நால்வரும் உயிர் நீத்தனரே! என்ன ஆச்சரியம்! இதுவும் பகவானுடைய கருணையோ! ஹா ஹா! கடவுளின மஹிமை காணுவதருமை! இதென்ன குழந்தை? கள்வர் நரபலிகொடுக்க நிச்சயத்த குழந்தை இதுதானே? ஹா! பெண்மகவாயிருக்கின்றதே! வதனம அதிதேஜோன்மயமாய்ப் பிரகாசிக்கின்றதே! நானுவது சின்னஞ் சின்னபுற்றேன்! ஐயோ! மதலைமொழிச் சிறு குழவியே! உனக்குப் பிறக்கும்பொழுதே கஷ்டமுற்றுயாய் நிற்கின்றதே! நீ எப்படியுன்றன் வரவுனை உய்காய்? எங்கு சென்னுள்ள னென்னசெய்கேன்! உனைப்பறிகொடுத்த நினைதன்னை எங்கு அரற்றுகின்றனளோ! ஹா! நித்திரையிலும் சிறிக்கின்றயோ! ஐயோ வனஸலோசனியின் வதனம்போலிருக்கின்றதே! இதென்ன மார்க்கமொன்று போடப்பட்டிருக்கின்றது? இவ்வழியிலே

யே நடந்து செல்கின்றேன். ஹா! மாடமாளிகை கூட கோபுரங்கள் பலவுந் தோற்றுகின்றதே! கடைசியில் குழவியுடன் கடவுளருளால் ஒரு நகர் வந்து சேர்ந்துவிட்டேன் போலிருக்கின்றதே! மணி மூன்றிருக்கலாம். எதிரில் தோன்றும் கட்டிடம் அரசனது அரண்மனைபோல் காணப்படுகிறது. ரதகஜ துரக பரிவாரங்கள் பலவும் சூழ்ந்திருக்கின்றன. அனைவரும் நித்திரா தேவியின்மீது காதலுற்றிருக்கின்றனர். இவரபாலகரிருவரும் தூங்கிவிழுகின்றனர். இதுதான் இவர்களுடைய அலுவல்போலும். எனது அதிர்ஷ்டத்திற்கேற்றபடி தெய்வச்செயலாய் கதவும் திறந்திருக்கின்றது. இனி பயப்படாமல் உள்ளே பிரவேசிக்கவேண்டும். இதோ அரசனும் அரசியும் சுகநித்திரையிலிருக்கின்றனர். இவர்கள் இங்ஙனமே என்றும் ஒற்றுமையாயிருப்பார்களாக. இவர்களுக்கு நடுவில் இக்குழவியை வைத்துவிட்டுச் செல்லுகின்றேன். இதோ வைத்துவிட்டேன். ஜகபரிபூரணி! இச்சிறுமிக்கு நீயே துணை. அதோ மேஜையில் மைக்கூடும் எழுதுகோலுமிருக்கின்றது. இதோ ஒரு கடிதம் மேஜை மிடக்கிறது. இதில் இப்பெண் குழந்தைக்கு இன்ன பெயரிடவேண்டுமென்பதையும் இன்ன பெயருடையவளை இவள் பதியாய் வரிக்கவேண்டுமென்பதையும் எழுதி எனது கையெழுத்தும் வைத்துவிட்டேன். இக்கடிதத்தை இக்குழந்தையின் கையில் கொடுத்தாய்விட்டது. அதுவும் அக்கடிதத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது. இனி தாமதித்தல் கூடாது. அரண்மனைக்கு வெளியில் வந்துவிட்டேன். காலைக்கடனை முடித்துக்கொள்ள நதிக்குச் செல்லுகிறேன்.

ஏழாவது அத்தியாயமும் முதற்பாகமும் முற்றிற்று.

சன்மார்க்கபோதினி.

நாணயமே நமக்கு முதற்பணம்:—என்னுடைய நாணயத்தின் பேரில் நல்ல அபிப்பிராயங்கொண்டவன் கெடுவுகடந்த பிறகும் சிறிதுகாலம் என்னிடமே தன்பணத்தை வைத்தனுகுகிறான். அதினால் எனக்கு வட்டிலாபமாவதுடன் அத்தப்பணத்தைக்கொண்டு நான் செய்யும் வர்த்தகத்தின்லாபமும் எனக்குக்கிடைக்கிறது. பலதுளி பெருவெள்ள மென்பது போல் நாளடைவில் இவ்வித சொற்பலாபங்கள் பெருத்தகையாய்த திரண்டுபோவதுடன் நம்முடைய நாணயத்தின் பேரில் அதிக நம்பிக்கையுண்டாகி பெருத்தகைகள் நமக்குக் கடன் கொடுக்கவும், அதினால் நாம் பாரிவர்த்தகங்கள் செய்து பாக்கியவானுகும்படிக்கும் செய்விக்கிறது.

வருஷத்திற்குத் 90 ரூபாயென்பது ஒரு தினத்திற்குக் கால்ரூபாயே:—இந்த நான்கணுவை ஒரு தினத்தில் சிலவழித்துவிடலாம. நாணயமுள்ளவனுக்கு அதுவே முதலாகும். நாளடைவில் அதனே 1000, 2000, கொடுக்கல் வாங்கல் செய்யும்படியான யோக்கியதையைச் சம்பாதிக்கலாம். இதற்கு நேரான வழியில் நிற்கவேண்டியதுமட்டும் அவசியமான குணம். ஜாக்கிரதையுள்ள உழைப்பாளியின் சொற்ப முதலே அவனுக்கு அதிக லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும்.

நாணயமாய்தான் வாங்கின கடனைச் செலுத்துகிறவன் அண்ணியருடைய முதலுக்குச் சொந்தக்காரன்:—கெடுவு தேதி தவறுமல் தன வாக்குத்தத்தின்படி பணம்செலுத்துகிறவன் எந்தக்காலத்திலுஎந்தசமயத்திலும் தன் சினேஹிதர்களிடமிருந்தாலும் அல்லது மற்றெவர்களிடமிருந்தாலும் உவ்வளவு பணமேனும் பெற்றுக்கொள்ள ஹேதுவுண்டு. இதனால் அதிக

பிரயோஜனங்கள் அடையலாம். கெடுவு தவறுதல் நியாயமாய் தன் கடன் காரர்களுக்கு பணத்தைச் செலுத்திதிதவன் உலகத்தில மேன்மையுள்ள பதவியையடைய அருஹனுவான். உழைப்பைபட்டாய்ச் செலவிதெலுக்கு அடுத்த கற்கிரிகை காணியமே. ஆனதால் ஒருவரிடமிருந்து கடன் வாங்கின பணத்தை ஒரு மணி நேரகாலம் கூட தாமதமின்றி செலுத்தல் கடமை. தவறுதல் நம் நாணயம் கெட்டுப்போய் இனி ஒரு சமயத்திற்கு உதவி ஒருவரிடமிருந்தும் பெறுவதற்கு சாத்தியமில்லாத நிலைமைக்கு வந்துவிடுவோம்.

உன் வசமிருக்கும் பொருளெல்லாம் உன்னுடையென்று வீணெண்ணம் கொள்ளாமல் எச்சரிக்கையாயிருந்து அதற்குத் தக்கபடி காலக்ஷேபம் செய்து வரவேண்டும்:—அநேக தக்க மதிப்புள்ள நாணயஸ்தர்களும் இந்தப் பிசகுக்கு ஆளாகிறார்கள். இவ்வித பிழையிலிருந்து உன்னைத் தப்புவித்துக் கொள்ளுவதற்குக் கொஞ்சகாலத்திற்காவது உன்னுடைய வருமானத்திற்கும் செலவுக்கும் விவரக்கணக்கு வைத்துப் பார்க்கவேண்டும். பின் வரவு செலவு விவரங்களின் கணக்கை கவனித்துப் பார்த்துவருவதில் உனக்குப் பிரயோஜனமுண்டு. சொற்ப செலவுகளே யெல்லாம் கூட்டிப் பார்க்கும்பொழுது எவ்வளவு பெரிய தொகைகளாகிவிடுகிறதென்பதைத் தெரிந்துகொள்ளுவதுடன் பின்னல் உனக்கு எவ்வித அசௌக்கியங்களும் நேரிடாதபடிக்கு இனிமீது எத்தெத்த செலவுகளே நிறுத்தலாம், எவற்றை மிகுதியாக்கி வைக்கலாமென்பதைதேர்ந்துகொள்ளஉனக்குமிகவும்உபயோகமானதாயிருக்கிறது. பெறுக்கிச்சொல்லாமல் சுருக்கிச்சொல்லுகிறேன். பணம் சம்பாதிக்கும் வழியும் கடைத்தெருவுக்குப் போகும் வழியும் ஒன்றே. உழைப்பு, முயற்சி, சேடு, இதுகளே பிரதானமானவைகள். அதாவது பணத்தையும் காலத்தையும் வீணில் போக்காதே. அவை பிரண்டையும் நன்மார்க்கத்தில் செலவிடு. இதன்படி நடப்பவன் சிரேஷ்டதரமான பதவியையடைவான்.

உருக்குமணி.

முன்னுரை:—இந்து தேசத்தில் பிறந்து பதிவிரதாதர்மத்தில் சிறந்து குணம், அறிவு முதலிய வற்றிலுயர்ந்து, அநேகவாயிர வருடங்களாயினும் எந்நாட்டாரும் புகழ்ந்துவரும் சாவித்திரி, உருக்குமணி, சீதை, தமயந்தி முதலிய மடமல்லாள் சரிதங்களே எழுத எண்ணங்கொண்டு, உருக்குமணியென்பதை மாதர்மஞ்சரியின் இரண்டாமிதழாக நான் இன்று வெளியிடுகிறேன். நம் பெண்மக்கள் இக்கதைகளே வாசித்துப் பயன்பெற வேண்டுமென்பதே என் முக்கியகருத்தாதலால் அவர்களில் ஒருவரிருவரேனும் தக்கடையும், குணமு முயர முயற்சிப் பாராயின் அதுவே என் கஷ்டத்திற்குக் கைம்மாறுகும்.

முதலதிகாரம். உருக்குமணியின் பிறப்பு.

விதர்ப்பதேசத்தை யாண்ட பீஷ்மகராஜனுக்கு ஐந்து ஆண்களும், ஒரு பெண்ணும் உவர். அவர்களில் மூத்தோனுக்கு உருக்குமி யென்றும் பெண்ணுக்கு உருக்குமணி யென்றும் பெயர். ஒரே பெண்ணுதலால் உருக்குமணியை தாய்தந்தைதாக்கள் சோட்டிப்பாராட்டிச் செல்வமாக வளர்த்துவந்தார்கள். அவள் சிறந்த அழகும் உயர்ந்த குணமும் வாய்ந்தவள். கருத்தட்சுமையிருமை, பொருத்தமுள்ள அங்கங்களு முள்ளவள். தக்கம் என்பது இன்னதென்றறியாமல் தாய்தந்தையருடனும் தகைவண்மாருடனும் மற்றைத் தோழிகளுடனும் விளையாடி விநோதமாகத் தன் காலத்தைக்கழித்து வருவாள்

அவள் தந்தையிடம் வரும் பெரியோர்கள் அவளைக் காணும்போதெல்லாம், துவாரகைக் கரசனுமிருஷ்ணனே அவளுக்குத் தக்கவனென்றும், அவ்விருவரும் மணந்தால் மல்லிகை மருவிய மாஞ்செடியாவரென்றும் கூறி, கிருஷ்ணனுடைய வடிவழகையும், குணநலத்தையும் புகழ்வார்கள். உருக்குமணி அதனைக்கேட்டு ஆரம்பத்தில் நாணங்கொண்டாளெனினும் அந்நாணம் நீங்கி ஆசைதோன்றி அத்தகைய அழகிய புருஷனைப்பெறுவது கூடுமோ என்று சந்தேகித்தாள். அவ்வாறு அடிக்கடி சிந்தித்ததால் கிருஷ்ணனுடைய வடிவமானது அவள் மனதிற்பதிய நாளடைவில் காதலென்பதும் குடிகொண்டது. அவள் கிருஷ்ணனேமணந்து அவனோடு இன்புறும்நாளை எதிர்பார்த்து வந்தாள். மகளுடைய மனத்தையறிந்த பீஷ்மகனும், அவர்மனைவியும் அவளைக் கண்ணனுக்கே கடிமணஞ் செய்யக் கருத்தாயினும், அவளுடைய அண்ணனாகிய உருக்குமி அக்கருத்திற் கிசையவில்லை. உருக்குமிக்கும் கிருஷ்ணனுக்கும் ஆதியிலிருந்து விரோதமுண்டு. அவன் அவ்விரோதத்தை யெண்ணித் தன் தங்கையைக் கிருஷ்ணனுக்குத் தரலாகாதென்றும், தனக்கு நண்பனும், கிருஷ்ணனுக்குப் பகைவனுமாகிய சேதிநாட்டுச் சிசுபாலனையே அவள் மாலையிட வேண்டுமென்றும் தீர்மானித்தான். பெற்றவரும் பின்னைக் கிணங்கலாயினர். (இன்னும் வரும்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

இந்திரா.

கல்யாணம் நடந்த வெகுநாளைக்குப் பின், நான் எனது மாமியார் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். எனக்கு வயது பத்தொன்பது வருஷமாகியும், இதுவரையில் மாமியார் வீட்டிற்குப்போய் சம்ஸாரம் பண்ணினதில்லை. ஏனெனில் என்னுடைய தகப்பனார் பெரும் பணம் படைத்தவர். மாமனாரோ ஏழை. கல்யாணமான ஒன்றிரண்டு வருஷத்திற்குள்ளேயே எனது மாமனார் என்னை அழைத்துப்போவதற்கு, அவருடைய சுற்றத்தாரில் சிலரை அனுப்பினார். ஆனால் என்னுடைய தந்தை என்னைபனுப்பாமல் வந்தவருடன், "மருமகப்பிள்ளை பண்டிகை சம்பாதிக்கட்டும் அதன்பின் அழைத்துப் போகலாம், இதற்கு மத்தியில் பெண்ணை யழைத்துப்போய் அவன்தான் என்னசகப்படப்போகிறான் என்ற சம்மந்திகள் இடத்தில் கூறுங்கள்" என்று சொல்லியனுப்பிவிட்டார். இதைக்கேட்டதும் என்னுடையகணவர்மனதில், ஒரு வெருப்பும் கோபமும் உண்டாயிற்று. அப்போது என்னுடைய நாசனுக்கு வயது இருபது வருஷம். அவர் "வருந்தி நானே பணத்தைத்தேடி உறவினரைக் காப்பாற்றவேன்" என்று ஆணையிட்டு மேற்குத்திக்கை நோக்கிப் ப்ராயணம் போய்விட்டார். அக்காலத்தில் புகைவண்டி யென்பதில்லை. அந்தத்திக்கில் இருக்கும் நாடுகளுக்குப் போகும் வழிகள் கடப்பதற்கு மிகவும்அரிது. காலால் நடந்து மழையால் நனைந்து வெய்யலால் உலர்ந்து ஒரு காசும் கையிலில்லாமல், வேறு உதவியும் அற்றவராய் அவ்வழிகளைக் கடந்து கடைசியாக பாஞ்சால தேசத்தை யடைந்தார். இவ்வளவு சாகஸங்களைச் செய்தவருக்கு பணம் சம்பாதிக்க முடியாமற் போய்விடுமா? என்னுடைய பர்த்தா பணம் சம்பாதிக்கத்தொடங்கினார். வீட்டிற்கு ரூபாய்களை அனுப்பவும்ஆரம்பித்தார். ஆனால் ஆறு ஏழு வருடங்கள் மட்டும் ஊருக்கு வரவேயில்லை. என்னுடைய கஷ்டநஷ்டங்களைப்பற்றிக் கேட்கவுமில்லை. நான் என்னைப்பற்றிய கதையை எழுதத்தொடங்கிய காலத்திற்குச் சிலநாளைக்குமுன் அவர் ஸ்வகாரம் வந்து சேர்ந்தார். (இன்னும் வரும்.)

பிரஜாபந்துகூடலன்.

ஸர்வஜனம் ஸுகினோபவந்து.

பருவம் 1. 1905-வது ஜனவரி-மீ. இலக்கம் 10.

கல்வியும் நடக்கையும்.

அதிக கல்வியுள்ளவர்கள் அதிக குணவான்களாக இருக்கவேண்டும். இப்படி இராமல் அநேக விதத்தில் மிகப் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள். தங்கள் ஹிருதயத்தைச் சுத்தி செய்யவும், ஆசாபாசங்களை யடக்கவும் தாங்கள் கற்ற கல்வியைப் பிரயோகிக்காமல் புகழ்ச்சி தேடவும், சுய நலம் செய்துமோசம் பண்ணவும் பிரயோகிக்கிறார்கள். அதை வீண் பெருமைக்கும், பொல்லாங்குகளுக்கும் உபயோகிக்கிறார்களல்லாது தங்களைச் சரியான வழியில் நடத்த உபயோகிக்கிறதில்லை. ஒருவனுடைய குணத்தை அவனுக்கிருக்கும் புத்தியைக்கொண்டுங் கருத்தைக்கொண்டுந் தீர்மானிக்க நம்மாலொருபோதுங் கூடாது. ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்வதை விட மனிதருக்கு அதிக வழக்கமொன்றுமில்லை. தங்களுக்கிருக்கும புத்தியினால் யோக்கியமான காரியங்களைப் பேசினபோதிலும், இழிவான குணத்தினால் அயோக்கியமான காரியங்களைச்செய்கிறார்கள். நற்கல்விகளையடைந்து உயர்ந்த உத்தியோகங்களைச் செய்கிறவர்கள் மெத்தக் கெட்டவர்களாயும் அயோக்கியர்களாயுமிருக்கிறதை பல சமயங்களிலும் காண்கிறோம். ஆகையால் உள்ளத்தில் அணுவத்தனை மெய்யானசுகுணமில்லாமல் நமதுபுத்தியில் மாத்திரம் சகல கல்வியும், விசுவாசமும் உண்டாயிருக்கலாமென்பது மறுக்கக்கூடாத நிச்சயமே. இப்படிப் பெரும்பாலும் கல்வி யொருவழியும், செய்கையொருவழியுமாயிருப்பதற்கு நம்மிடத்திலுள்ளஒவ்வோரிச்சையும் காரணமாகி அது நம்மை யக்கல்விக்கு விரோதமாக நடக்கச் செய்கின்றது. இதனால் நமது புத்தி யொருவழியும், இச்சை யொருவழியுமாய் நம்மை நடத்துகின்றன. நியாயமானது புத்தியோடுங்கிரமத்தோடும நடக்கச்சொல்ல; மூடவிச்சையும், லோகமயக்கமும் நம்மை புத்தியற்ற துன்மார்க்கத்தில் செல்விக்கின்றன. இவ்விதமாக அந்த துன்மார்க்கமே நம்மிடத்திற் குடிகொள்ள நாமும். கெட்டு நமது வித்தையும் உபயோகமற்று நமது வாழ்நாள் அவ்வித்தைக்கும் கடந்தைக்கு மொவ்வாமையாகின்றது. நமது கடமையை நமக்குத் தெரிவித்திருப்பது அதின்படி நடப்பதற்கே யொழிய வேறல்ல. நடக்கையே சகலத்திற்கும முக்கியம். இல்லாவிட்டால் நாம் கற்றும் காரியமில்லை. கல்வியும் சாமர்த்தியமு முடையவர்களை யவைகள் மற்றோரைப்பார்க்கிலும் குணவான்களாக்காவிட்டால் அவைகளால் அவர்களுக்கு உபயோகமில்லை. புத்தியுங் கல்வியும் குணத்தோடிசைதலே உள்ளபடி அவைகளைப் பூஷணமாக்கிப் புகழ்செய்யும். தகுந்த நடக்கையை யொத்திராத கல்வியானது தன் பயனையே யழிக்கின்றது. மேலும் அது பழுது பட்டு வீணைப் பிரயோஜனமில்லா

மற்போகின்றது. நாம் கற்றவர்களாகப் பிரகாசமும் பெருங்கீர்த்தியும் அடைந்திருந்தாலும் மெய்யான யோக்கியதை யொன்றுமில்லாதிருப்போம். உள்ளத்திலிருக்கு மொருசுகுணமானது மாப்பிரகாசமான புத்தியைப் பார்க்கிலும் மிகச்சிரேஷ்டமாம். ஹிருதயத்திலுள்ள ஒரு நற்குணமானது புத்தியிலடங்கிய அருமையான அனந்தமாயிரஞ் சாஸ்திரங்களைவிட மேலானதாம். நாம் அருமையான சாமர்த்தியத்தைக் கண்டு எளிதாகப் பிரமித்து அப்புத்தியைத் தகாதவிதமாய் மதிக்கிறோம். ஆனால் ஹிருதயத்தின் குணங்களுக்கு முன்னே புத்தியின் குணங்கள் அதிசயத்திற்குப் பாத்திரமல்ல. சுகுணமொன்றே யுள்ளபடி என்னுமும் மேன்மையும் அதிசயமுமுள்ளது. இதனாலேயே மற்ற குணங்களனைத்தும் மேன்மைபெறும். கல்வியில் உண்மையாகவேஒரு மேன்பாடுண்டு. ஆயினும் அது கல்வியும் நடக்கையும் சம்பந்தப்பட்டாலெழிய சிறப்புறாது. அன்றியும் அந்தக்கல்வியில் ஒரு பெருமையுமுண்டு. அப்படியிருந்தாலும அந்தக் கல்வி சுகுணத்தைத் தழுவியதாயாகிடில் அந்தப் பெருமை பைசாசுக்குரிடதே யல்லாதுவேறல்ல. கல்வியானது அருமையும் பெருமையும்உள்ளதாயினும், அதன்பெருமைடங்கியிருப்பது உபயோகத்திற்கான வழிபாடுந்திறமும் நமக்களிப்பதிலல்லாது மற்றதிலல்ல. நற்காரியங்களைச் செய்ய அவசியம் சொஞ்சம கல்வி வேண்டியதே. ஒருவனுக்கது எவ்வளவு அதிகமாயிருக்குமோ அவ்வளவு அதிகமாய் அந்த நன்மைக்குரிய காரியங்களைப் பரிபாலனம் பண்ணவும் அதனால் சௌக்கியத்தையடையவும் வல்லவனுயிருப்பான், இந்தக் காரணத்தைப்பற்றி மனிதனுடைய சகல மேன்பாட்டிற்கும்அந்தக்கல்வியே அஸ்திவார மென்றெண்ணப் படுகின்றது. அதைக் கூடியமட்டும் சம்பாதிப்பது நமக்குக் கடமையாயிருக்க வேண்டியதுமன்றி அதைக்கொண்டு நாம் செய்யும் காரியங்களால் அதை நல்ல பொருளென்று எண்ணச் செய்யவும் வேண்டியது. அதை நாம் உபயோகப்படுத்தும் வகைக்குத் தக்கபடிதான் அது நமக்குச் சிறப்பும் இழிவும் உண்டாக்கும். தகுந்த நடக்கையோடு கூடிய கிஞ்சித்து வித்தையானது துர்விஷயத்தில் செலுத்தப்பட்ட உயர்ந்த வித்தையைப் பார்க்கிலும் அதிக மேன்மை பெற்றிருக்கிறது. உலகத்திலே மிகப் புத்திசாலியும் கல்விமானுமிருந்து, கெருவமும் தற்குணமும் பொறுமையும் உள்ளவனுய் இருப்பதைப் பார்க்கிலும், அதிக மூடனுயிருந்து சுகுணமுடையவனுயிருப்பது மிகவும் உத்தமம். நடக்கைக்குச் சரியாக ஒத்திராத கல்வி பிரயோஜனமற்றதாயிருப்பது மன்றிக் கெட்டதாயும் பொல்லாததாயு மிருக்கின்றது. அது குற்றத்தையே பெரிதாக்கி நம்மையதிக இழிவும் அசங்கியமும் படுதலிவ்கின்றது. மேலும் நம்மை சுகப்படுத்தஉதவாமல் சஞ்சலமும்சாபனேயுமாக்கி நம்மைபதிகமாய்க் கெடுத்துவிடும். கற்றுணர்ந்தவன் இழிவும் அபத்தமும் பொருளிச்சையுமுள்ளவனுயிருப்பானுகில் அவ்வளவுக்கும் அதிக நிஷ்தமு மருவெருப்பு மடைவான். உயர்ந்த கல்வியோடு துர்நடக்கை சேர்ந்தால் ஒன்றுக்கொன்று எப்போது மொவ்வாமையாயிருப்பதுமன்றி அது அசங்கியத்தையும் கனக்குறைச்சலையும் அதிகரிப்பிக்கின்றது. ஒருவனெவ்வளவுக்கதிகமாய், கற்றிருப்பானே அவ்வளக்கு அதிகமாய் நன்மார்க்கத்தின் கனத்தை யறியவேண்டியது. (இன்னும் வரும்.)

பெண் கல்விக் குள்ள பிணி.

நம் காட்டில் பாடசாலைகளிற் பத்து அல்லது பதினேராண்டளவும் கல்வியிலும் சிறுமிகள் அம்மட்டோடு தங்கள்கடையைக் கட்டிவைத்து விடுவ

தால் அடையும் பயனைச் சிறிது யோசிப்போம். அவர்கள் அறிவு முதிர்ந்து கல்வியினுல் தமக்குப் பிற்காலத்திலுண்டாகக் கூடிய உபயோகங்களையும் அவசியத்தினையும் சரிவர உணர்ந்து அதிற் கவனம் செலுத்தும் ஆவலையும் ஊக்கத்தையும் அடையச் சாதாரணமாய் 12அல்லது 13வயது செல்லுகின்றது. தாகமெழுகையில் தண்ணீர்ப் பாத்திரம் தவறிவிழுவதுபோல் அத்தகைய நல்ல தருணத்தில் கல்விப் பயிற்சியும் தடைப்படுகின்றது. அதிக சூட்சுமபுத்தியும் சுறு சுறுப்பு முள்ள சில பெண்களைத் தவிர சாமான்ய புத்தியையுடைய பல பெண்கள் தாங்கள் இயற்கையாகவும் அவசியமாகவும் அறிந்திருக்கவேண்டிய வீட்டு வேலைகளையும் குடும்பகிர்வாக முறைமையையும் செம்மை பெறத் தெரிந்துகொள்ள வெகு சிரமப்படுகின்றனர். இந்த நிலைமையிற்றானே இவர்கள் புருஷன் வீட்டுப் புதுக்குடும்பத்திற் கனுப்பப் படவேண்டியவர்களாய்ப் பருவமடைகின்றனர். அந்தத் தடை கடந்தால் அதன்பின் இவர்கட்கு நம்நாட்டு அயுக்தமான இடைக்காலவழக்கப்படித் தாய் வீட்டில் தாமதிக்க சுதந்திரங் கிடையாமற்போகின்றது. கல்விச் சாலைகளில் அப்பியவனிக்கும் மாணுக்கர்கட்கும் தங்கள் வருப்பிற்குரிய பாகங்களிற்றும் தேர்ச்சியடைந்து பரிசிலனைகளுட்பட 1 அல்லது 2 என்கிற வருஷத்தவணைகள் உண்டு. கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பெற்ற கடன்காரனுக்கும் அவன் தொகையைச்செலுத்த செடுவு இவ்வள்வுகாலமென்று அறியச் சவுகரியமுண்டு. அத்தன்மையும் இதுவிஷயத்தில் நம்பாலிலைகட்கு வாய்த்திராதது எவ்வளவு அயுக்தம்? ஆகவே தாய்வீட்டில் உள்ள பெரியோர் இப்பெண்கள் புருஷன் வீட்டில் சமர்த்தியாக நிர்வகிக்கவேண்டிய கடமைகளையும் முறைமைகளையும் இன்னின்னவென பன்னிப் பன்னிப் போதிக்கவும் பயிற்றவும் தாராளமான அவகாசம் கிடைப்பதில்லை. இடையிற்றானே புருஷன் வீட்டிலிருந்து வாயுதாவுள்ளதாகவோ அதுவுமின்றியோ முகூர்த்த பத்திரிகையாகிற நோட்டீஸ் கிடைத்துவிடுகிறது. இத்தருணத்தில் சமயிறுமிகள் அதி அவசியமாகுடும்ப தர்மப்பயிற்சியிலும் பாடிதர்மியமன்றி அதியுபயோகமான கல்விப்பயிற்சியிலும் குறைவுற்று புக்ககத்தினராலும் பிறராலும் பல சமயங்களில் இகழவும் கடியவும் பாத்திரமாகி உற்சாகங்குறைந்து தன்புறுகின்றனர். புக்ககத்தில் நிர்ப்பந்தங்கள் தற்காலம் அநேகமாய் நீங்கவிட்டதாயினும் இந்துதேச மாதர்களின் தொன்மையியல்பிற்குத்தக்கவாறு திறமையுடனும் சாதுரியவிநயங்களுடனும் திருப்தியுண்டாக நடந்து தம்பதி நேசத்தை விர்த்திசெய்துக் கொள்ளவும் புக்ககத்து முதியோருக்குப் பணிவாகவும் அடக்கமாகவும் ஒழுகவும் 15 வயதிற்கு முன் ஒருநாளும் நம்பெண்கள் யோக்கியர்களாகமுடியாது. அப்படியாகும்படி கட்டாயப்படுத்துவது தர்மமுமல்ல. இதுவுமன்றி மேற்கண்ட வயதிற்குள் ஒன்றிரண்டு பிராயங்கட்குமும் இவர்கள் உட்பட்டவர்களாகச் சிலவிடங்களில் சம்பவிக்கின்றது. இதுவும் சேர்ந்துவிட்டால் பிறகு இவர்கள் முன்னர்விட்ட கல்வியை வீர்த்திசெய்துகொள்ள எந்தச்சந்தவழிபார்த்தாலும் இடமில்லையென்பது தெரிந்த விஷயமே. இவ்வாறு தெய்வகதியால் தாய்மார்களாகாமல் தப்பியிருக்கும் இதரபெண்களில் அபூர்வமாய் இரண்டொருவர்க்குமட்டில் புருஷன் வீட்டில அப்புருஷனுலேயே இவர்கள் கல்வி அபிவிர்த்திக்குத் தக்க சாதனங்கள் கிடைத்திருப்பது இப் புதுநாகரீக உணர்ச்சியின் பயனுய் உண்டெனினும் அதில் பலவித ஒழுங்கீனங்களும் விளைகின்றதுடன் போதிய பலனும் துரிதவிர்த்தியும் உண்டாவதரிதாகின்றது. (இன்னும் வரும்.) அலமேலுபிகை அம்மாள்.

உலக வாழ்க்கையில் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல.

(முன் தொடர்ச்சி.)

2. அனுபவிக்குந் திறமின்றி அதிர்ப்தியடைந்து மனக்குறைப்படுவது:—நாம் இடைவிடாது முயன்ற எவ்வகையான இடையூறுகள் சம்பவித்தாலும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் அதிக ஜாக்கிரதையாயிருந்து நம் முயற்சியின்பயனை அடைகிறோம். அடைந்தும் பிரயோசனமென்ன? சம்மியமுண்டாகிறதா? நாம் அபேட்சித்த பொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைந்து ஆறித்தேறி, இனி நமக்கு யாதுங் குறைவில்லையென்ற எண்ணிப்பூரண சந்தோஷமுள்ளவராகிறோமா? இல்லையில்லை. எந்த ஸ்திதியிலிருப்பவர்களும் தாம் தேடிய பொருள் சித்திக்குமானால், நம்மைப் போலொத்த பாக்கியவந்தர் ஒருவருமில்லையென்ற நினைப்பதும், இன்றேல் மனக்குறைகொண்டு விசாரப்படுவதும் இயற்கையே. நாம் கொண்டகருமம் சிதறினாலும் துக்கம், சித்தித்தாலும் துக்கமே. கல்விப்பொருள் செல்வப்பொருள் இரண்டையும் கூடியவளவில் குறைவறப்பெற்ற பிரதாபமுடையவர்களாயிருக்கும் பெரியோர்களும் தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று கருதி விசனப்படுகிறார்கள். செயலற்ற சோம்பேறிகளோ தமக்கும் யாதேனும் ஒரு முயற்சி வேண்டுமென்றுகருதுவார்கள். சாதாரண ஸ்திதியிலிருப்பவர்களும் அதிக தனமும் கனமும் பெறுவதற்கு வகை தேடுவார்கள். உயர்ந்த உத்தியோகஞ்செய்து மிகுந்த வருமானம் பெறுகிறவர்கள் ஒருவருக்குதன் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதீனம்பெற்றுச் சுகித்திருப்பது எத்தனை பாக்கியமென்று நினைத்துப் பெருமூச்செரிவார்கள். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைத் தேடி அடைந்த பின்னும் அதினால் உண்டாகும் இன்பத்தைத் துன்பமாகக்கொண்டு மற்றொன்று பூரண இன்பம் பயக்குமென்று கருதிப்பிரயாசைப்பட்டு அதைத்தேடித் தினந்தினமனக்குறைப்பட்டுவிசனமுறுவார்கள். உள்ளத்தில் கொண்ட ஒருகுறை நீங்க மற்றொரு குறைஉண்டாகிறது. ஆகவே பூரண இன்பம் பெற்று சுகித்திருந்தவர்கள் ஒருவருமில்லை.

இம்மைக்குரிய விஷயங்களில், மானிடர்களுக்கு உண்டாகும் இன்பம் எவ்விதத்திலும் சாஸ்வதமல்ல. வர்ணமிட்ட சித்திரப்பதுமைபோல வசிகரசக்தியாயுள்ளதாகத் தூரத்தில் தோன்றும் இன்பப் பொருள்கள் அனுபவத்தில் வரும்போது அதன் அழகு குன்றி விகாரமாகி வெறுப்புத் தருகின்றது. நிழலைப் பொருளென்றும் நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மன்பதைகள் இம்மாயத் தோற்றத்தை மெய்யென்றெண்ணி தமது ஆவலின் வசத்தராகி தம்மாலாகாத்தக்க முயற்சிகள் அசாத்தையும் செய்து அப்பொருள் தேடிக் கிட்டியவுடன் அவர்கள் ஆசையானது அப்பொருளைவிட்டு மற்றொன்றைத்தாவ முன் தேடிய பொருளும் கெட்டு துக்கம் சம்பவித்து துன்பக்கடலில் மூழ்கி வருந்தித் தவிக்க இடமுண்டாகிக் கதறி அழுதுக் கடவுளைக்கடிந்து நிற்பார்கள்.

இவ்வாறே லௌகீகப் பொருள்கள் யாவும் மனுஷரை வஞ்சிக்குந் தன்மையுள்ளது. குறைவற்ற செல்வமும், குன்றாத வாழ்வும், உடையவர்களென்று பலராலும் மெச்சப்படும், பெரியோர்கள் தங்கள் செல்வத்தை அனுபவித்துச் சந்தோஷிக்கிறார்களா? அவர்களுக்கு விசாரம் இல்லையென்று யார் சொல்லக்கூடும்? பெரும்பாலும் சீமான்களே நிர்ப்பந்தப்படுகிறார்கள். ஏதாகிலும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால் அவர்களுக்குச் சஞ்சலந்தோன்றும், சஞ்சலமானது, சாவாத புழுப்போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக் குறைக்கின்ற கூரியவாள் போலவும் இருக்கின்றது. சஞ்சலமில்லாதிருப்பினும் உலக இன்பம் உள்ளதைக் கெடுக்கின்றது. துர்க்குணத்தை வளர்க்கின்றது.

3. தேடி அனுபவிக்கும் பொருள்களைக் காக்குந் திறமின்றிக் கவலைப்படுவது:—தேடி அனுபவிக்கும் இன்பத்தைக் காத்துக்கொள்வது மிகுந்த கஷ்டமான காரியமாயிருக்கிறது. உலகப்பொருள் ஒன்றுவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித்தலங்கி, மங்கி மறைந்துபோகின்றன. செல்வம் வண்டியுருளைப்போல மாறியும், யானையுண்ட விளாங்கனிபோல் நைத்தும், பட்சிபோல் பறந்தும், வெயில்முன் பனிப்போல் கரந்தும், மின்னல் போல் கொடியில்மறைந்தும், போகின்றன. உலகஇன்பம்மாறியும்,பறந்தும், மறைந்தும், கரந்தும், போவதால் அவ்வின்பத்தைக் காப்பதற்கு எவராலும் இயலாது. நெடுகான் வரையில் சமைத்து நிறைவேற்றிய, விசித்திரசாலமாளிகைகளும், சடதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள், முதலிய இடையூறுகளால், கொடிக்குள்ளே விழுந்து பொடிப் பொடியாய் தரைமட்டமாவதுபோல, இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எவ்விதஇன்பமும் எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதால் அதைச்சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியம்.

இத்யாதி விஷயங்களினாலே, உலகவாழ்க்கையில் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்லவெனச் செவ்வனே விளங்குகின்றன வாகலான் இனியேனும் இவ்லோக பாசங்களில் பந்தப்பட்டு உடலிலிட்டு எடுத்தபிறவியைப் பயன்படுத்திக்கொள்ள வகையின்றி மோசம்போகாமல் எச்சரிக்கையாயிருந்து பரசாதகமான கருமங்களைப் புரிந்து சதாதெய்வத்தியான நிரதர்களாய் இலங்குவோமாக. முற்றிற்று. தஞ்சைபுரிநேசன்.

தமிழ்ப் பாஷை.

மேற்றிசையோர் தத்தம் சொந்த பாஷைகளே எவ்வளவோ கௌரவமாய்ப் பொன்போற் போற்றி அபிவிர்த்திசெய்துவர நம்மவருட்பலர் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாராய்த் தமது தாய்ப்பாஷையாகிய அமிழ்தினும் இனிய தமிழ் முது மொழியை அநாதரவு செய்து "நறவிய வாயினு மேனும் உமிழ்த்து கடிந்தின்னும் தீய விலங்கிற் சில" போன்றும், "திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும் பிறர் மனைக்கே பீடழித்து நிற்பார்" போன்றும் கேவலம உத்தியோக பதவி பொருளீட்டல் முதலிய அக்கியபாஷைக் கற்றுவருவது காலக்கொடுமையோ? ஞாலக் கொடுமையோ? அறியேம்.

கூ! கூ!! தங்கள் கையெழுத்துக்களைக் கூடப் பிழையற எழுதத் தெரியாதார் எத்தனை பேர்கள் இருக்கின்றனர்! தமிழ்ப்பாஷை தெரியாமல் இருப்பது தங்களுக்குப் பெருங் கௌரவம் என்றும், எவ்வளவுக் கெவ்வளவு தெரியவில்லையோ அவ்வளவுக் கவ்வளவு தங்களுக்கு ஆங்கிலபாஷாஞானம் அதிகமாய் உண்டென்று உலகு நினைக்கும் என்றும் எண்ணும் பேதைமாக்கள் எத்தனை பேர்கள்! தமிழிற் பேசினும் முக்காற்பங்கு இங்கிலீஷும் கற்பங்கு தமிழுமாய் மணிப்பிரவாள நடையிற் புகல்வோர் எத்தனை பேர்கள்! "சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழி பெயர்க்கலாம் என்றால் சில விஷயங்களை அறிவிக்க ஏற்ற மொழிகள்

கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது" என்று சொல்வதற்கு ஹிஸ்ட்ரீஸ் களையும் ஸயன்ஸ்களையும் டமில் லாங்வேஜில் ட்ரான்ஸ்லேட் பண்ணலாம் என்றால் சில இங்ஸ்களை எக்ஸ்ப்ரஸ் பண்ண டெக்னிக்கல் டெர்ம்ஸ்களை ப(f)யிண்ட் ஔட் பண்ணுகிறது பெரிய டிபிகல்டியாக இருக்கிறது" என ஒரு சாரார் சொல்வர் என்ற மிஸ்டர் திருச்சிற்றம்பலம்பிள்ளையின் வாக்குப் பெய்யின்றே. ஏனெனில், இற்றைக்கு ஐந்தாறு வருடங்களுக்கு முன் மதுரை அமெரிகன் மிஷன் ஹைஸ்கூலைச் சார்ந்த பாலதிராவிட சங்கத்தின் வருஷோற்சவ தினத்தில் மதுரை வாயொகிய ஓர் பிரபல வக்கீல் எழுந்து "Chairman and கனவான்களே english mix பண்ணுமே இந்த little fellows, nay, young men அதாவது சிறுவர்கள் என்ன speech கொடுக்கிற நம்ப ரெண்டு words கூட continual ஆய்ப்பேசுறது எம்பிட்டு impossible ஆருக்கு. What do you think? என்னைப்போல் difficulty experience பண்ணியிருக்கிறவா இந்த assembly லே இருப்பாளே. அவளுக்கு என் words tru என்றுபடும் ... ... " என்ற இவ்வாறு பலர் கரகோஷஞ்செய்ய அமைமணி கோம் பொழிந்து நீர்த்தது யாம் அறிவோம். நிற்க, தமிழினைப் பெரிதும் உபேகை செய்யும் புண்ணிய புருஷர்களே "என் ஐயா தமிழ் கற்கப் பிரியம் கொள்வதில்லே?" என்று கேட்டால், அவர்கள் "தமிழ்லே என்னருக்கு?" என்றுவாய்கூசாமற்சொல்வர். "தமிழில் என்ன ஐயா இல்லே?" என்றால் அதற்குத்தரம் சொல்லார். சிறிது வற்புறுத்திக் கேட்டாலோ "ஒண்ணும் இல்லே" என்ற நீட்டி முழக்கி அடித்தொண்டையோடு அலறுவர். அதிகமாய் வற்புறுதலிக் கேட்க ஆரம்பித்தால் "னேக்கு வாண்டாம் ஐயா, ஒக் தமிழ் நீயே வச்சுக்கோ" என்று இருப்பிடம் விட்டு எடுப்பர் ஓட்டம். ஆதிச்சுடி கூடப் படித்திரா அநேகர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தம் ஜாத்தைவாய் திறந்து பழுது கூற முன் வருவது எவ்வளவு மௌடீகம்?

ஆ! ஆ!! தொன்ற தொட்டுச் சிரும் சிறப்பும் பெற்று அறம் பொருள் இன்பம் வீடு அடைவதற்கேதுவாயுள்ள எண்ணிறந்த நூற்பெருக்கத்தையுடையதும்; கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய பாஷைகளுக்குப் பெற்றோர் நிலைமையிலிருந்து பேருதவிபுரிந்துவரும்பெருமையுடையதும் திராவிட முழுதும் எகசக்ராதிபத்தியம் செலுத்தி வந்ததுமான நம் தமிழ் அணங்கு இக்காலத்தில் கவீணநிசையடைந்து போற்றப்படாது நிற்றற்கு முதற்காரணம், அதன் அருமை பெருமை தொன்மை முதலியன அநேகர்அறியாதிருத்தலேமாம். ஆதலின் இனியாம்அதன்வரலாறுகூறுவாம்.

தமிழ் மொழியின் வரலாறு.

"தமிழ்" என்ற பதத்திற்கே ஓர் சரித்திரம் உளது எனில் அப்பாஷையின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்போம். தமிழ் என்ற சொல்லுக்கு முடிவும் பொருளும் பலர் பலவாறு கூறுவர்:—

1. பிரயோக விவேகத்தார் நிகனம் என்பதன் திரிபு தமிழ் என்பர்.

2. சென்னை மாகாணக் கல்லூரி பாஷா விற்பன்னராய் இருந்த சேஷகிரி சாஸ்திரியார் போல்வார் பிரயோக விவேகத்தாரது கூற்றை ஆதாரமாகக்கொண்டு திராவிடம் என்னும் பதமே திரமளம் என்றும், பின் அது நிகமளம் என்றுக் கடைசியில் தமிழ் என்றுயிற்று என்பர்.

3. கால்டுவெல் பாதிரியார் தமிழ் என்பதும் திராவிடம் என்பதும் திரமளம் என்னும் மொழியினின்று தோன்றியவை என்பர்.

[இம்மூவரது கூற்றும் ஒப்பத்தக்கனவல்ல. ஏனெனில், தமிழ் வழங்கிய இடத்தில் தமிழ்த் கோர் பெயர் இருந்ததில்லே என்று சொன்னல் யார்தாம் ஒப்புவர்? தவிரவும் தமிழில் தமிழ் என்னும் பதம் வருவதற்குமுன் திராவிடம் என்ற ஆரியமொழி இருந்திருக்குமானால், அப்பெயர் எப்பொருளே உணர்த்திற்று? இன்னும் பார்ப்போம்: ஒன்றன் பெயர் அது வழங்குமிடத்திற்றான் பிறந்திருக்கக்கூடுமேயன்றி அஃதில்லாப்பிறிதொரு தேசத்தே பிறந்திருக்கக்கூடும் என்பது சிறிதும் பொருந்தாதே.]

4. ஒரு சாரார் "தமிழ்" என்னும் பதம் "திராவிடம்" என்றுபிற்றேயன்றி "திரவிடம்" என்பதன் சிதைவு அன்று "தமிழ்" எனச் சாதிப்பர்.

[இவர் கூறுவதும் சரியெனக் கொள்ளமுடியாது. ஏனெனில் "திராவிடம்" என்னும் பதம் தேயத்தைக் குறிக்குமேயன்றி பாஷையைக் குறிப்பதன்று. திராவிடம் என்னும் பதம் திரா என்னும் அடியாய்ப்பிறந்து மகாநதி முதற்கோடி மண்டலம் வரை ஓடி ஸ்ரீகாந்த பூமியை உணர்த்தும். [திரா=ஓடி வளர்ந்த]

(இன்னும் வரும்)

M. கோபாலகிருஷ்ண ஐயர்.

அக்ரிகல்சரல் பிரஸிடென்ஸி மாணவர் செந்தமிழ்ச் சங்கம் மதுரை.

பிள்ளை வளர்ப்பு.

குழந்தைகளை மிகவும் செல்லமாய் வளர்க்கக்கூடாது. வளர்க்கும் பகுதியில் பெரியவர்களாகும்போது அவர்கள் கஷ்டங்களைப் பொறுக்கச்சக்தியற்றிருப்பார்கள். மேலும் அவர்களை அதிகமாய்ச் சோட்டக்கூடாது. பிள்ளைகள் பயபக்திகெட்டவர்களாய் படிப்பொட்டாமல் கடைசியில் உப்புக்கல்லுக்கும் உதவாக்கரையாய்விடுகிறார்கள். ஆதலால் மனம்போனபடி வளரவிடாமல் பிள்ளைகளுக்குத் தகுந்த அடக்கவணக்கங்களுக்குஉட்படுத்தி வரவேண்டியது. சிறுபிள்ளைத்தனத்திலேயே பிள்ளைகளுக்கு வீண பயங்களையும் கீழ்ப்படிவும் மரியாதையும் கற்பிக்கவேண்டியது. பாலியத்தில் காட்டிக்கொள்ளும் அப்பியாசங்கள் தவறுமல் விருத்தியடையுமாதலின், கற்குணங்கள் பிறிவதாறும், தற்குணங்கள் தொலைந்துபோகுமாறும் தாய்தந்தையர்கள் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. தாய்தந்தையர்களிடத்துப்பயபக்திகள் காட்டி அவர்கள் சொல்லியவண்ணம் பிள்ளைகள் கடந்துகொள்வது மிகவும் ஆவியகமான்று. ஆதலால் அவர்களுக்கு எவ்வளவு அன்பு நிறைந்திருந்தபோதிலும் பயபக்திகளுடன் கூடியிருக்க வேண்டியது. மேலும் பிள்ளைகள் விஷயமாய் எடுத்துக்கொள்ளும் ஜாக்கிரதைகளில் தாய்தந்தையர்களிருவரும் ஒற்றுமைப்பட்டிருக்க வேண்டியது.

ஒருவர் செய்வதை இரண்டாம்போர் என்றைக்கும் கெடுப்பது கூடாது. தாய் குற்றங்கூறுகையில் தகப்பன் குறுக்குப்படுவதும், தகப்பன் குற்றங்கண்டபொழுது தாய்தடுக்கவருவதும் சரிப்படாது. அன்றியும் அவர்கள் பிள்ளைகளுக்கு அசாத்தியமான வேலைகளாவது கீழ்ப்படிய முடியாதகட்டளைகளாவது எற்பாடுசெய்து அந்தவண்ணம் அவர்கள் செய்யாவிடின் கீழ்ப்படிவில்லாமையாகப் பாவிப்பது கூடாது. பிள்ளைகளிடத்துத் தாய்சந்தையர்கள் அன்புகூர்ந்திருக்கவேண்டும். அன்பே பிள்ளைகளுக்கு அமிர்தம். அன்பில்லாவிடின் அவர்கள் செவ்வையாய் வளராமாட்டார்கள். குற்றங்கள் செய்தபொழுது அன்புடனேயே அவர்களுக்கு கல்லொழுக்கத்தைப்போதிக்கவேண்டியது. கோபித்துக்கொண்டபொழுதும் அடம்பிடித்

தபொழுதும் அவர்களையண்புடனேயே மீட்கவேண்டியது. அன்பில்லாவிடின் பிள்ளைகளுடைய மனதிற்குக் குதூகலமிருக்கமாட்டாது. இவ்வுலகத்தில் பிள்ளைகளுக்கு அன்பே எல்லாவற்றிலும் அதிகமான சவுக்கியம். மூக்கியமாய்த்தாயினுடைய அன்புக்குச்சமானமானது எதுமில்லை. எத்தனை வேலைகளிருப்பினும் தகப்பனுவன் பிரதினமும் கொஞ்சகாலத்தைத் தன்னுடைய பிள்ளைகள் விஷயமாய்ச் செலுத்தவேண்டியது. அவ்வாறு செய்தாலே அவர்களுடைய புத்தியுத்தங்களும் இயற்கைகளும் அறிந்துகொள்ளுவதற்கும் அவர்களைச் சன்மார்க்கத்தில் நிறுத்துவதற்கும் அனுகூலமேற்படும். மேலும், தகப்பனுவன் எவ்வளவு பெரியவனுனபோதிலும், தன்னுடைய குழந்தைகளுடன் சற்றுநேரம் விளையாடிக்கொள்வது தன்னுடைய பெரிய மனுஷத்தனத்திற்குக் குறைவாய் எண்ணக்கூடாது. சொல்லிய வண்ணம் சரியாய் நடந்து கொள்ளும்போது குழந்தைகளுக்குப் பழங்கள் பணியாரங்கள் முதலியவற்றைபாவது தட்டேளாவது வெகுமானமாய்க் கொடுக்கக்கூடாது. அவ்வித வெகுமானங்கள் கொடுப்பதினுல் சொல்லிய வார்த்தைகள் கேளாதிருப்பதற்கு அவர்களுக்கு இன்னும் சொஞ்சம் தூண்டு கோளாய் விடும். குழந்தைகள் நல்ல காரியங்களைச்செய்தபொழுது அவர்களைப் புன்சிரிப்புடன் நோக்கி மெச்சிக்கொண்டு சந்தோஷடையலாதே அவர்களுக்குப்பெரிய வெகுமானம். அதினுல் பிள்ளைகளுக்கு ஆனந்தம் பெருகுவதுபோல் வேறெதனுலும் உண்டாகமாட்டாது. தாய்தந்தையர்களின் புகழ்மொழிகள் பிள்ளைகளுக்கு அத்தியந்தமகிழ்வு. நல்ல வேலைகளைச்செய்வதற்கு அவை தூண்டுவதுபோல மற்றேதொன்றும் செய்யமாட்டாது. புகழத்தக்க வேலைகளைச் செய்யும்பொழுது பிள்ளைகளை ஒழியாமல் துதிப்பதற்கூடாது. (இன்னும் வரும்.) M. S.

ஆரோக்கிய மார்க்கங்கள்.

ஆலோசித்துப் பார்க்குமிடத்தும், பிறந்தது முதல் சரீர ஆரோக்கியத்தைக் கருத்துடன் காப்பாற்றிக்கொண்டு அதல் விஷயமாய்த் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்வதே தீர்க்காயுளுக்கு ஒரே வழியாகக் காணப்படுகின்றது. ஆதலின் எவ்வெந்தக் காரியங்களினுல் ஆயுட் சீணத்திற்குக்காரணங்கள் ஏற்படுமோ, எப்படிப்பட்டவை ஆயுள் விர்த்திக்குச் சாதனங்களாயிருக்குமோ அவைகளைத் தெரிந்திருப்பது உபயோகரமானது. தீர்க்காயுளுக்குப் பரிசுத்தம் ஆவசியகமானது. சரீரத்தையும் வஸ்திரங்களையும் வீட்டையும் மற்றெல்லாவற்றினையும் பரிசுத்தமாய் வைத்திராதபக்ஷத்தில் வியாதிகள் தவருமல் பிறக்கும். ஆரோக்கியத்திற்கு நித்தியஸ்நானம் அத்தியந்த ஆவசியகம். அப்போதப்போது சமுத்திரஸ்நானம் செய்வதினுல் சரீரத்துக்கு உறுதியுண்டாகும். ஆகாரத்தை வேளைதவருமல்புசிப்பதும், போசனசமயத்தில்எவ்விதவிசாரமும் மனத்தினில் வைத்துக்கொள்ளாமல் உல்லாசமாயிருப்பதும், மிதமாயும் அமைதியுடனும்புசிப்பதும், இராத்திரியில் இலகுபோஜனம் செய்வதும்—இவையெல்லாம் தீர்க்காயுள் பெறும் வழிகள். சாப்பாட்டு ராமத்தனத்தினுல் சேண சக்தி குன்றி ஆயுட்சீணம் ஏபிக்கும். மச்சமாமிசங்களைப் புசிப்பவர்களைக்காட்டிலும் காய் கறிகளைத் தின்பவர்கள் அதிக காலம் சீவித்திருப்பார்களென்று சில்பெருமன்வைத்தியர்கள் தணிவுற்றிருக்கிறார்கள். குடியினுல் ஆயுள் குறைவுற்றுப்போகும். பிராந்தி புட்டித் தோழர்கான்! இதினுண்மையை மனதில் நிறுத்துங்கள். தீர்க்காயுள் அபேக்ஷிக்கு

மவர்கள் நித்திரை விஷயமாய்த் தகுந்த ஜாக்கிரதை மேற்கொண்டிருப்பதி மிகவும் முக்கியமானது. விழித்துக்கொண்டிருக்கும் காலத்தில் சீவசக்தி யதிகமாய்ச் செலவிடப்படுமாதலின், அது மறுபடியுங்கூடி வருவதற்கும், அவயவங்களுக்குக்கோதீர்ப்புண்டாவதற்கும் நித்திராதிகளுவசியகமான்று. அதிக நித்திரையினுலும் அற்ப நித்திரையினுலும் ஆயுள் க்ஷீணமடையும். கண்டபொழுதெல்லாம படுக்கையிலேயே கிடந்திருக்கும் மானுபாவர்களது சரீரங்கள் சோம்பேறித்தனத்தினுல்போய் வியாதிகளுக்குறைவிடங்களாய் விடும். அற்பநித்திரையினுல் இளைப்பாற்றம் போதாமல் தேகமுறுதி கெட்டுச் சீக்கிரமாய் வீருத்தாப்பியம் வந்து சேரும். பிரதினமும் 6-மணி நேசுகாலத்திற்குக் குறைவுபடாமலும் 8-மணிப் போழ்துக்கு அதிகப்படாமலும் நித்திரை செய்யவேண்டியது. பகலில் நித்திரித்து இரவுகளில் விழித்திருப்பது அற்பாயுளுக்கு மூலகாரணமாகும். இராத்திரிச் சமயங்களில் கெடுநேரமட்டும் விழித்திருக்கக் கூடாது. மூன்று மாசத்தில் படுக்கப்போய் விடியற்காலத்தில் துயலெழுவது தீர்க்காயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும் நல்லவழியென்று பெரியோர் கூறுகிறார்கள். சீக்கிரத்தில் படித்து அருணோதயத்தில் எழுந்திருந்தால் சரீரத்தில் உற்சாகம் நிலை உற்பத்திக்கும். பொழுதேறியபிறகு எழுந்திருக்கும் வழக்கமுள்ளவர்கள் அற்பாயுசுக்காரர்களாவதேயன்றி வீருத்தாப்பியத்துக்கூட வராமல் மூதேவித் திருப்பிடமாய் விடுவார்கள். போஜனம்செய்தவுடனே சயனிக்கக்கூடாது. சயனித்தால் சேண கோசத்திலிருக்கும் பாரவேற்றத்தினுல் நித்திரை கலக்கப்பட்டதாகி கனவுகளும் பிதற்றுகளும் அதிகமாகும். மேலும் நித்திரை நீங்கியபொழுது உற்சாகத்தினுக்குப் பதிலாய்த் தளர்ச்சியும் சிதமூஞ்சித் தனமும் சொட்டிவழியும். படித்துக்கொள்ளுகிலையிலேயே படுத்தத்தூங்குவது பெரிய தரப்பியாசம். படிக்கப்பட்ட விஷயங்களை தூக்கத்தில் நினைவுக்குக் திரும்பி மனவமைதியைக் கெடுத்து விடும். சயனிக்கும் பொழுது மனத்தினில் எவ்வித விசாரங்களையுமாவது ஆலோசனைகளையாவது வைத்துக் கொள்ளக் கூடாது. நிர்மல நெஞ்சுடன் நித்திரிக்க வேண்டியது. எவ்வளவேனும் சஞ்சலமிருந்த போதிலும் நன்றாய்த் தூக்கம்பிடியாது. மேலும் பிரதினமும் எதவோ குறையவோ சரீரப்பழக்கமில்லாவிடினுஞ் செவ்வையாய்த் தூக்கம் வராமாட்டாது. சரீரத்தைக்கஷ்டப் படுத்தாமல் வீட்டிலேயே கிடந்திருக்கும் பணக்காரர்களுக்குப் பட்டுப்பஞ்சணைகளின் மேற்சயனித்தாலும், உண்ணுக்கு இணைப்பாடேனும் வராதிருப்பதும், பாடுபட்டுழைத்துப் பிழைத்து வரும் கூலிச் சேவகக்காரர்கள் காடுமுரடான கற்றரைகளின் மேல் படித்தாலும் அயர்ந்து அறிவு கீங்கி உறங்கிச் சுகிப்பதும், அனைவரும் அறிந்த விஷயமே யல்லவா?

(இன்னும் வரும்.) M. S.

உருக்குமணி.

இரண்டாமதிகாரம். உருக்குமணி கிருஷ்ணனிடம் தூதனுப்புதல்.

உடனே கலியாணத்திற்குச் சித்தமாயிற்று. ஊரெங்கும் விழாவாயிற்று. குடிகளனைவரும் தம் கோமகளின் கலியாணத்தை நோக்கிக் களித்தாராயினும், உருக்குமணி மட்டும் கவலைக் கடலிலாழ்ந்தாள். சிறையதிலிருந்து காதலித்து வந்த கண்ணனை நீங்கி என்னுயிரும் கேட்டிராத சுபாலனை எவ்வாறு மாலையிடலாகும்? ஐயோ! தன் உடலையும், உயிரையும் கிருஷ்ணனுக்கு அர்ப்பணஞ்செய்ததைத் தன் அண்ணன் அறியாளோ? ஹரு

ஷ்ணனின்றித் தான் உயிர் வைத்திருப்பது கூடுமோ? இதுவரைக்கும் உருக்குமணி தன்அண்ணனே உன்னண்போடு நேசித்து வந்தானெனினும், அவளுடைய வேறபட்ட எண்ணத்தையறிய அவளுக்கு வெறுப்புண்டாயிற்று. ஆயினும் அச்சிறுபெண் என் செய்வாள்! அண்ணனிடம் போய்த் தன் அந்தரங்கத்தைச் சொல்லி அவன் மனதைத் திருப்ப முடியுமோ? அவன் ஒன்றுஞ்செய்யத் தேரன்றுமல் மயங்கி நின்று முடிவில் தனக்கு வேண்டிய ஓர் அந்தணரை யழைத்து, தன் ஏழ்மைநிலைமையை விசாரித்து, கிருஷ்ணனுக் குஓர் கடிதமெழுதிக்கொடுத்து, "சுவாமி, கிருஷ்ணனைக்கண்டு என்நிலைமை யை யுள்ளபடி உரையுங்கள். என்போன்ற இளம்பெண்கள் அச்சத்தையும், நாணத்தையு மகற்றி அகத்திலுள்ளவை யெல்லாம் அந்நியர்க் கறிவிப்பது ஆகாதே. என் ஆசைக் கண்ணனே நான் இராப்பகல் எண்ணி யெண்ணி ஊணையும், உறக்கத்தையும் ஒழித்தேனென்று சொல்லும். காதன் மிகுதி யால் உள்ளம் நைந்து உடல் மெலிந்து உயிர் விடுந்தருவாயி லுள்ளேனென்று சொல்லும் என்றுள்.

ழன்றமஹிகாரம். அந்தணர் கிருஷ்ணனைக் காணுதல்

அந்தணர் அநேக ஊர்களைக் கடந்து மதுரையை யடைந்து கிருஷ்ணனைக் கண்டபோது பொழுதுபோகும் வேளையாயிற்று. கிருஷ்ணபகவான் சுவமணிகளிழைத்த அநேக அணிகள் பூண்டு, அவ்வணிகளின் காந்தியால் அவரது கார்மேனி தூலங்க, கைபூத்த முகத்துடன் தம்மரண்மனையில் அழகிய சிங்காசனத்தில் லமர்ந்திருந்தார். அந்தணரைக் கண்டதும், கிருஷ்ணன் ஆசனத்தை விட்டெழுந்து அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து தாம் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் அவரை யுட்காருவித்து அடுத்த நின்று, வந்த சங்கதி யதெனக் கேட்டார். வேதியர் தாம் கொண்டுவந்த கடிதத்தைத்தர, கிருஷ்ணன் வாங்கி அதனைப் பிரித்துப் பார்க்க அடியில் வருமாறு எழுதியிருந்தது:—

(இன்னும் வரும்.)

ப. சீ. கோவிந்தசாமி ராஜா.

நல்லுரை.

(1) ஆயிரக்கணக்கான காகித படங்கள் ஆகாயத்தில் பறக்க விடப்படுகின்றன. அவைகளில் ஒன்று அல்லது இரண்டுதான் கயிற்றிலிருந்து விடுபட்டுப் போய்விடுகிறது. அதுபோல் நூற்றுக் கணக்கான சாதுக்களில் ஒருவர் அல்லது இருவர்கள் மாத்திரந்தான் உலகபந்தத்திலிருந்து விடுபடுகிறார்கள். (2) ஒரு கயிற்றைச் சுட்டாலும் அது சோக்கையாய் முந்திய ரூபத்துடனிருக்கிறது; ஆனால் சாம்பலாகி எதையும் கட்ட உதவாது. அதுபோல கடைத்தேறின ஒரு மனிதன் அகங்காரமுள்ள தேகத்துடனே இருக்கின்றான்; ஆனால் அவனிடத்தில் அந்த அகங்காரத்தின் சத்து இல்லை. (3) எவன் சத்தியமாயும் அதிக ஊக்கத்துடனும் கடவுளிடம் சொல்லக் கூடியவனுயிருக்கின்றானே அவனுக்கு குரு அவசியமில்லை. அப்படிச் சத்தியமும் ஊக்கமும் பொருந்தியிருப்பது தாலபமாகையால் வழி காட்டுகிறவர் அல்லது குரு தேவையாயிருக்கின்றது. (4) தேமல் அல்லது பூச்சிக் கடியைச் சொறியும் போது அதிக இன்பமாயிருக்கிறது; பிறகு உண்டாகும் எரிச்சல் தொந்திரவாயும் பொருக்க முடியாததாயுமிருக்கிறது. அதுபோல உலக இன்பம் ஆரம்பத்தில் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறதெனினும் பிந்திய அநுபோகத்தில் அதை நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. (5) கம்பம் அல்

லது தானே ஒரு பையன் பிடித்துக்கொண்டு விழுந்துவிடுகோமென்ற பச்சரிசிமின்றி எப்படி வேகமாய் சுற்றுகிறதோ, அதுபோல கடவுளின்பேரில் நிடமாய் உன்பிடியை நிறுத்தி உன்னுடைய உலககாரியங்களை நடத்தினால் யாதொரு அபாயமுமில்லாமல் செய்து முடிக்கலாம்.

மாமிஷ போஜன மறுப்பு.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

கடவுளாலாக்கப்பட்ட ஐந்தறிவினையுடைய மன்பதைகளொவ்வொருவருக்கும் இயற்கையில் ஜீவகாருண்யம், பகுத்தாராய்தல், தயை, இனியவை கூறல் முதலியன உடைத்தாய், ஜீவவதை செய்யாது, புலால் மறுத்து, அறத்தினைக் கடைப்பிடித்து, தவநெறி பற்றி, ஈஸ்வர தியானத்தால் அருட்பேறு பெற்று, மோக்ஷ சாம்பிராஜ்யமடைய விரும்புவதே இம்மானிட தேகமெடுத்ததற்குரிய கற்பெயராம்.

அன்றியும், மனமானது பொறிவழி செல்லாது நிற்க, விரதங்களிலே புலாலை மறுத்து உண்டி சுருக்கி, தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களைக் கொல்லாது காப்பாற்றுவதில் ஜீவகாருண்யம் மேலிட்டு அண்ணலின் அருள் சுரந்தவிடத்தே இன்ப வீடு பெறுதல் இயல்பாதலால்; பரமசாம்பிராஜ்யமடைவதற்கேதுவாகிய கொல்லாமையும், புலாலுண்ணுமையுமே ஐந்தறிவினையுடைய மன்பதைகளுக்குச் சிறந்த சான்றாகும். இதைத் தவிர்த்து, (தமக்கு) முன்செய் தீவினையினுல் பிணிவந்துற்றுதாம் வருத்தமடையுங்கால் ஆஹா முற் பிறப்பிற் செய்த கொலை பாதகத்துக் கேதுவாகிய புலாலுண்ட வினையன்றே இங்ஙனே வந்து மூண்டதுவெனச் சிந்தித்து புலாலை மறுத்துவிட்டொழியாது கண்மவினைச் சாபத்தாலுண்டான அந்தகாரமென்னும் அஞ்ஞான விருள்போர்த்த மாந்தர்கள்; அருட் கடவுளைப் போற்றித் துதியாது அன்னியவைகளை நினைத்து தமக்குற்ற பிணிக்காதுதீரின் மரிக்காவு தருவோமென்றும், ஏவல் வஞ்சனைதீரின், சேவல் பலியிடுவோமென்றும், மூடமதியினுல் சிந்தித்து நரகவாதனைப் படுகுழியில் வீழ்ந்து வருந்தி வாடித்தவித்து கரைபோறுந் துறை தெரியாது, கவலையுறுகின்றனர். அதை யுணர்ந்தன்றே கொலைபடும் ஜீவஜெந்துக்கள் யாவும் கொற்றவனைநினைந்து கொல்பவனைக்கடிந்து கோ கோ வெனக்கதறி கூவிக் கூவிக கூக்குரலிட்டுக், கண்ணீர் சொரிந்தழுது

"உங்கள் மக்களுக் நீங்களும் கோய்பட
எங்கள் மக்களுக நாங்களு மென்செய்வோம்".

என, அதி விசனத்துடன் ஆதிமாதாவை நோக்கி "அம்மே அம்மே" என்றலறி ஏ! கொலைபாதகப் புலையர்களே! நீங்கள் சுகமடைவீர்களா? உங்கள் பெண்டீர் முண்டையாகார்களா? நுங்கள் மக்கள் நீங்குமுர்களா? நுங்குடி ஈடேறுமா?, என்றும்,

"மலமென்னும் வினைநீர மலவற்ற புனல் மூழ்கி
அலைகின்ற முழுமூடா அறிவென்ன பிறவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெனையுண்ணும் புலையர்க்கு
குலமென்ன நலமென்ன கூகூவென்றன கோழி"

அதாவது ஏ! மாமிஷமுண்ணும் மடமை குடிகொண்ட மாந்தர்காள்! கேண்மின் கேண்மின். மலியினும்பெரிதாகிய பாவங்களைத்தாங்கத்தேடியவை

யொழியுமாறு பரிசுத்தமாகிய குற்றமற்ற கெங்கை, காவிரி, முதலியபுண்ணிய நதிதீர்த்தங்களில் ஸ்நானம் செய்து அலைகின்ற மூடமூடர்களே! உங்களுடைய புத்தி என்ன புத்தி? அற்ப புத்தியேயாம். ஜாதியில் தாழ்ந்தவனென்று உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட பறையனது மலத்தைப் புசித்துப் பசி நோய் நீக்கிக்கொழுப்படைந்திருக்கிற என்னைக் கொஞ்சமும் மஞ்சமில்லாமல் புசிக்கின்ற பஞ்சமாபாதகப் பெரும் புலையராகிய உங்களுக்கு ஜாதிபேதமென்ன? ஆசாரமென்ன? இதை நோக்கில் ஆச்சரியமாகவே யிருக்கின்றதெனச் சொல்லுவதுபோல ஒவ்வொரு நாளும் வைகறைத் துயிலெழுமுன் (சேலலானது) தன்குஞ்சுகள் எவ்வாறுமோ! காமெவ்வாறுவமோ! என்றஞ்சிலே போற்கொண்டு துக்கத்துடன் ஆற்பரித்து, ஆரவாரித்துக்கொண்டு கண்களில் நீர் சொரியக் கதறிக்கதறி அழுதுகொண்டு சிலநாழிகைக் கொருதரம் "கொக்கரக்கோ" "கொக்கரக்கோ" (ஐம்தாவது என்னைக் "கொல்லுறதற்கோ" "கொல்லுறதற்கோ") எனக் கூவுகின்றதைக் கேட்டிலீர்களா? (இன்னும் வரும்.)

தஞ்சைபுரிநேசன்.

நல்லொழுக்கம்.

"ஒழுக்கம் உயர் குலத்தின் ஒன்று" என்னும் உலகத்துப் பழமொழி யொன்றை யாரையுமிடத்து உண்டாகுங் சற்பனைக்கோர் முடிவில்லை யன்றே? ஒருவன் கவ்வியாகரண பண்டிதனுமிலும், அளவிடுவதற்கரிய ஜீவசியப் பெருக்கத்தை யடைந்தவனெனினும், அட்டதிசையிலுங் கொட்டை பறப்புச் ரணவீரகேசரியாயினும், அன்னவன் பல்லக்கு. என்னும் ஒர் ஈடில்லா ஆபரணமில்லையாகில் அவனை யுலகம் வந்திக்கப்படாது நந்திக்கப் படுமன்றே? இதை யெட்டியே "அடக்கம் அமரர் பொன்" என்னும் ஓர் மொழி இவ்வாறிருழ் வையகத்தில் யாவர் வாக்கிலும் வெகு இலேசாகப் போந்துலாவுகின்றன. இதன் பெருமையை பேணும் புகழ்து மிகுந்து கண்டு உவகைகொண்டாரில்லையே! எத்தனையோ திவ்ய கேஷத்திரங்கள் சென்றும் புண்ய நதிகளாடியும் தரைமீதுண்டிம் அன்ன சத்திரம் தண்ணீர்ப்பந்தல் சாலை மரங்கள் தேவாலயங்கள் முதலிய தருமங்களைச் செய்தும் பின் தெய்வாலுக்கிரகத்தாலோர் புத்திரனை மன்றெடுத்தி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து ஐந்தாம் வயதில் பள்ளிக்கனுப்பி ஐந்தாரு முகமாய் வித்யாப்பியாசம் பயின்று வைதிக நாலைந்து குரான் அபிவிர்த்தி யடைவதைக் காமுறக் கண்டுகளித்தும் மாதா பிதாகுரு க்கு அபவாத மேற்படாமற் காத்து குலமுறை ஒழுக்கம் பிசகாது "இவனே சத்யன் இவனே சத்குல சிகாமணி இவனைப் பெற்ற அன்னை தந்தையர் என்ன தவம் செய்தனரோ" என்று கண்டோர் பேசப்பாழ் பெறவேண்டும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பைக்கரும்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் சுருக்கிக் கூறிய வீரிந்த விடையத்தை நன்மதியாகக்கொண்டு நயம் பெறுகிலையே! பூர்வஜென்ம புண்யவசத்தால் இப்பூவுலகில் மானிடருய் அவதரித்து ஏனைய ஜீவகோடிகட்குக் கிட்டாத உசித கைவல்யமான பகுத்தறிவைப் பெற்றும் நல்லொழுக்கத்தில் மனதை நாடவிடாது, சூதாடல், கட்குடித்தல், பொய் பேசல், களவாடல், பரதாரி கமனஞ்செய்தல், புறமததூஷணம் பேசல், பெரியோரை நிந்தித்தல், முதலிய வேதவிலக்கைத் தழுவி நேசம் பாராட்டி கண்டவர் நகைக்கக் காலங்கழிப்பானேன்? இதை நாம் மட்டும் நவீனமாய்

கவில முன் வந்தோமில்லையே! இவ்விஷயமாய் தக்கவர்மிக்கக்கூடிவரோலப் பேசியும் கையோய வெழுதியுமிருப்பதை நோலும் பலபத்திரிகை வாயிலாகவும் பார்த்திருக்கின்றோம். அதை அணுஷ்டானப் பிரமாணத்திற்குக் சீர்கண் டுவராது விடுப்பதி னிழுக்கு எழுதவும் வேண்டுமோ? பல எண்ணங்கள் கொண்ட படிகளினின்றும் ஒருவனிறங்கும்போது ஒரு படி தட்டிவிட்டால் மற்றதுந் தட்டி மண்கௌவத் தரையில் வீழ்ந்து அவஸ்தை கொள்வதுபோல பிரமசாரியம், வைகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாசம் என்னப்படும்நான்கு படிகளுக்கும் உரிய ஒழுக்கத்தினின்றும் வழுவில் ஒன்றுக்கும் உதவியற்றவனாய் கொடிய கர்மங்களே யனுபவிக்கிறன். எக்குலத்தில் பிறந்தாலும். "உதர நிமித்தம் பெருகிரத வேஷம்" என்று தன் ஜீவனுர்த்தமாய் எத்தொழிலைச் செய்தாலும் தாம் தாம் நிற்கவேண்டிய நிலமையைக் கெடுத்துக் கொள்ளப் போகாது ஆரிடப்பாவையாடினும் காரியத்திற் கண்ணிருப்பது போல் தம் ஒழுக்கமாகியமுக்கிய சாசனத்தைச்சைவிடாது காத்துக்கொள்ளல்வேண்டும். ஒருவன் அனுபவிப்பதற்கு முடியாத பெருஷ்டங்கள் வந்தெய்தியபோதும் அதனைத் திரணமா யெண்ணி எல்லாம் வல்லகருணை நிதியான கடவுளொருவருண்டென அவர்மீது பாரத்தை யேற்றி வணங்கல் வேண்டும். ஆகவான் ஒவ்வொருவரும் தந்தங்குல ஒழுக்கத்தினின்றும் வழுவாது சன்மார்க்கரெனப்பெயர் பெற்றுவாழவேண்டுமென்பதே இவ்வெழுத்தினின் சாரவிறுதி.

க. வீ. சந்தானகிருஷ்ணநாயுடு.

கலாப்பிரகாசனி.

இரண்டாம் பாகம். எட்டாவது அத்தியாயம்.

சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன் அதாவது பிரதமபாகத்திற் கண்ட சம்பவங்கள் நிகழ்வதற்கு நாற்பது வருஷங்கட்கு முன்னர் சந்திரகிரி எனும் நகரை வீரகேசரி என்ற வேந்தனொருவன் செங்கோலோச்சி வந்தான். அவனது ஆஸ்தானத்தில் பிரஸ்தாபிக்கவேண்டியவைபற்று ஸதா ஸந்தோஷ வதனர்களாய் வித்வான்கள் பிரசித்தி பெற்றிருந்து வந்தனர். அவர் காலத்தில் அந்நகரம் நீர்வளம் நிலவளம் நிறைந்து நினைத்தபொருள் மிகநிறைந்து நிலவி மும்மாரி பெற்ற பூதலம் புகழ்ப்பிரகாசித்தது. இம்மன்னனுக்கு சுகுணமாலினியெனும் பெயரிய புதல்வியொருவளைத் தவிர வேறு புத்திரர்களில்லை. இதை யுணர்ந்திருந்த ஸ்வயகலப் பிரியர்ஞான பிரதாபன், துன்மதி, என்ற இவ்வரசனது அமைச்சர்களிருவரும் சந்திரகிரியைக் கவர்ந்து கொள்ளக் கருத்தற்று அதற்கிடையூறாயிருந்தவரும் அரச புத்திரியைக் கொன்றுவிட பல வஞ்சனைகளைச் செய்து வந்தனர். இங்ஙன மிருப்புழி சுகுணமாலினிக்கு நசவருஷங்கள் கழிந்து பதினென்றாவது பிராயம் பிறந்தது. அச் சுபதினத்தை பிரஜைகளனைவரும் பிரியமுடன் கொண்டாடி மகிழலாயினர். புராலங்காரம் மிகவும் கேந்திராணந்தமா யிருந்தது. சுகுணமாலினியின் புரப்பிரவேச மகோற்சவத்தைப் புகழாதவரெவருமில்லை. அந்நகரிலுள்ள ஐரோப்பியர்களும் புராதனர்களும் ஒருங்குகூடி தமளித்தனர். அன்றிரவு அரண்மனையில் கொப்பிணிகளாயிருந்த [illegible] சி மன்னனது இருமனைவிகளும் நவமாச பரிபூரணமாகி பட்ட மகிஷியான சுலோசனைக்கு இருகுழந்தைகளும் இரண்டாவது மனைவியான மைனாவதி

க்கு ஒரு குழந்தையும் பிறந்தது. ஜனித்த மூன்று குழவிகளும் ஆண்மகவா யிருந்தன. வீரகேசரிமன்னன் மந்திரிகளை நவருடையவும் தூரெண்ணத்தை யறிந்து இக்குழந்தைகள் அரண்மனையிலிருப்பின் அதற்கு அபாயம் சித்திப்பது திண்ணமென்று ஆலோசித்துத்தனது ஆப்த மித்திரனுகிய கருணாகரனை அழைத்து அவனை நோக்கி என் பிராணநேசா! இப்பொழுது இக்குழந்தைகளை உன் வசம் ஒப்புவிக்கின்றேன்; என தமைச்சர்கள் தேசஹித சிந்தர்களல்ல வென்பதையும் அவர்களுடைய துராலோசனைகளையும் நீ அறிந்திருக்கின்றாய்; உன்னைத்தவிர இக்குழந்தைகளுக்கு வேறு போஷகரில்லை; இன்று தொட்டு இக்குழந்தைகட்குத் தாயும் தந்தையும் நீதான்; என்மீது நீ எவ்வளவு பிரியம் வைத்திருக்கின்றாயோ அதைவிட பதின்மடங்கு அன்பை ஒன்று முணராத இப்பாலகரிடம் பாராட்டி இவர்களைக் காப்பாற்றவேண்டும். பலவாறு சொல்லியென்ன, கடைசியில் உன்னிஷ்டத்திற்கு இதை ஒப்பிக்கொடுக்கின்றேன் என்று கண்ணீர் விட்டழுது அம் மூன்று குழந்தைகளையும் அவன் வசம் ஒப்புவித்தான். கருணாகரன் அரசனுக்குப் பலவாறு தேறுதல் கூறி விடைபெற்று பின் அவ்விரவிலேயே தூணிகரஸ்தனுகலான் தானிருந்த கிராமத்திற்கு ஸகாயநிமித்தம் மூன்று குழந்தைகள் சஹிதம் வந்து கொண்டிருந்தான்.

இம் மிவ்வண மிருக்கபிரதாபனும் துன்மதியும் சுகுணமாலினி யறைக்குச் சென்று அங்கு ஒருவருமில்லாதிருப்பதைக் கண்டு அதுதான்தக்க தருணமென்று நினைத்து வீரகேசரி மன்னன் அழைப்பதாய்க் கூறி அவளை எவரும் அறியாதபடி கூப்பிட்டுக் கொண்டு வந்து வண்டியிலேற்றி ஒரு பெருவனத்தினூடே சென்று கொண்டிருக்கும்போது மத்தியமார்க்கத்தில் குதிரை ஒரு வெளிச்சத்தைக் கண்டு மிரண்டு ஸ்வயேச்சையாய் ஓடத்தொடங்கிற்று. உடனே பிரதாபனும் துன்மதியும் அஸ்வத்தை அடக்கமுயல்வதில் கவனஞ் செலுத்த அத்தருணத்தில் சுகுணமாலினி தன்னை வஞ்சனை செய்து ழைத்து வந்திருக்கின்றார்க ளென்றறிந்து இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளஇதுதான்சமயமென்றெண்ணித்தனுக்குற்றவண்டியினின்றும்கீழே குதிக்க அங்கிருந்த கல்லில் விழுந்து கபாலத்தில் பலமான அடிபட்டு அவ் வேதனையைப்பொறுக்க ஆற்றலற்றவளாய்அவ்விடத்திலேயேமூர்ச்சையானாள். இவள் குதித்ததை அமைச்சர்களிருவரும் கவனித்திலர். தன்னிஷ்டப்படி ஓடிய குதிரை கடைசியில் வண்டியுடன் கருணாகரனுடைய சிருகத்தருகில் நின்றது, இருவரும் கீழே இறங்கி சுகுணமாலினியைக் காணது வ்யப்புற்றவர்களாய் யோசித்துக் கொண்டிருக்கும்போழ்து தற்செயலாய் கருணாகரன் மூன்று குழந்தைகள் ஸஹிதம் தன்னில் லிற்குள் நுழைந்தான். இவனைத் தான் சுகுணமாலினி தப்பித்துக்கொண்டு போயிருக்கலா மென்றெண்ணி உடனே துன்மதி அவனை வாளால் இருதுண்டாக வெட்டி யெறிந்தான். அப்பொழுது சுமார் இரவு இரண்டு மணி இருக்கலாம். கடுந்தகாரமாயிருந்தது. கருணாகரனை வெட்டிய தருணத்தில் அவன் தன்னுடன் கொண்டு வந்திருந்த விளக்கானது தன்னிச்சையாக எங்கோஓடுவது போல் தோற்றிற்று. இதைக்கண்டு அச்சமுற்ற இவ்விருவரும் உடனே வண்டியேறி தாங்கள் சென்ற காரியம் சித்திக்காமற் போனதைக் குறித்து விசனப்பட்டுக்கொண்டு அன்றிரவே சந்திரகிரி வந்து சேர்ந்து விட்டனர். அரசனுக்கு குழந்தைகள் பிறந்த விஷயம் மருத்துவச்சி, கருணாகரன், வீரகேசரிமன்னன் இம் மூவரைத்தவிர வேறெவருமறியார், பரதமத்தில் பட்டமகிஷிகள் செற்பமானதே. ஒருவருக்கும் தெரியாது. அவ்விஷயத்தை அவ்வளவு அந்தரங்கமாய் வீரகேஸரிமன்னன் வைத்திருந்தான். மறுநாட்காலையில் சுகுணமாலினியைக் காணேமென்ற சப்தம் எங்கும் பரவியது. அரசனிதையுணர்ந்து விஜயனுக்கிராந்தனும் அநேக இடங்களில் ஆட்களைவிட்டுத் தேடியும் அவள் சென்ற இடம் தெரியவில்லை. அவளும் அகப்படவில்லை. எவ்வளவோ பிரயாசை எடுத்தும் பயன்படாமற் போயிற்று. வேந்தன் ஒன்றுக் தோன்றாது நிகைத்துப் புலம்புவானுயினன்.

"எனதுயிர்க்குத் துணை யுனை யல்லாதிந்த வுலகமதில் லில்லையென்ற
மனதிடத்தை யிழந்திடவெவ் விடமொளித்து நிற்கின்றாய் மங்கைநல்லாய்
புனிதமிகப் பெறுசுகுண மாலினியென் னும்பெயரைப் பொருந்தப்பெற்ற
வனிதையர் சிகாமணியே யெனைத்தனியில் விடுக்ஷமனம் வந்ததென்னே!"

தொடர்ச்சியுண்டு.

ஸ்ரீசார சீர்திருத்தக்காரர்கூட்டம்.

மேன்மை குணங்களால்நிறைவுற்ற நமது இந்தியாநாடானது மென்மேலும் விருத்தி யடைந்து கொண்டே வருவதை நாம் கண்ணுறுகின்றோம். சரித்திரங்களால் நாம் அறியப்பெற்ற ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த நமது நாட்டின் நிலைமையையும் இப்பொழுது இருக்கப் பெற்ற நிலைமையையும் உற்று நோக்குவோமேயாகில் வித்தியாசத்தை நன்கு அறியலாம்.

நூற்றுக் கணக்கான மைல்களுக் கப்பால் இருக்கப்பெற்ற ஒருமனிதனிடமிருந்து சமாசாரங்கள் அறிய விரும்பினால் ஒரு நிமிஷத்தில் அறியலாம். அவ்வண்ணமே நமது சமாசாரங்களையும் அவர்களுக்குத் தெரிவிக்கலாம். ஆறுமாதம்வேண்டியிருந்த பயணங்களையெல்லாம் ஒருவாரத்தில்செய்துமுடித்து விடலாம், வாணாளைக்கொடுத்துச் செய்யவேண்டிய ஸ்தலயாத்திரைதீர்த்த யாத்திரைகளை எல்லாம் சிரம மன்னியில் செய்யலாம், இம்மாதிரியான நன்மைகள் அநேகம் இருக்கின்றன. இதைக் காட்டிலும் அதிகம் நமது நாடு விருத்தியடைய வேண்டுமென்று பலர்பிரமப்படுகிறார்கள். நாடுவிருத்தியடையநாட்டார்க்ஷேமமாக இருக்கவேண்டுவது அவசிக மென்றறியாதோர் இல்லை, அதற்காகாட்டோர்களது க்ஷேமத்தைக் கருதிப்பாடுபடுபவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். அயலார்கள் விருத்தியடைவதையே தங்களுடையதாக எண்ணி அவர்கள் சந்தோஷிக்கின்றார்கள். பிறர் துன்பப்படாதிருக்கப்பார்ப்பதே தங்கள் சந்தோஷ மென்றெண்ணி அத்துன்பங்களை நீக்க அவர்கள் வழி தேடுகிறார்கள். இவர்களதுசெயலை நோக்குங்கால் சந்தோஷத்தையடைத்தவர்களாக ஆகின்றோம், மனக்கவலையினின்றும் நீக்கினவர்களாகத் தோற்றுகின்றோம். இவர்களுக்கு ஒவ்வொருவரும் வந்தனமுடையவர்களாகவே இருத்தல் வேண்டும். அதுதான் அவர்கள் செய்கின்ற உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக நம்மால் செய்யக் கூடுவது. காலத்தில் நன்றி செய்பவர்களிருக்கின்றவர்கள். நமது நாட்டில் எவ்வளவு சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் குறைகள் இல்லாது போகவில்லை. சிற்சில ஸ்திரீகளினது நிலைமை மனதுக்குமிக்க வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதாகவே இருக்கிறது. பொதுவாக நமது நாட்டுஸ்திரீகளினது நிலைமையே அவ்வண்ணந்தான் இருக்கின்றது என்று அநேகர் சொல்லுகின்றார்களே யொழிய அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறவர்களாகக் காணேம். மேற் கூறியவர்கள்தான் ஏதோ ஸ்திரீகள் விஷயத்தில் இரக்கங்கொண்டு வருந்துகின்றவர்களாகத் தெரிகின்றது, அன்னவர்கள், சங்கங்கள் கூடி ஸ்திரீகள் விருத்தியடைய வேண்டிய மார்க்கங்களைப் பற்றிப் பேசுவதாகவும் தெரிகின்றது.

நமது இந்தியநாடோ இப்பொழுது பால்ய விதவைகளால் நிறைந்த நாடாக மாறிக்கொண்டு வருகின்றது. எல்லாவிஷயங்களிலும் சீர்திருத்த மடைந்திருப்பதுடன் நமது நாடு இவ்விஷயத்திலும் விருத்தியடைந்து கொண்டேவருகின்றது. காரணங்களைக் கண்டுபிடித்து நீக்க முயலினும் பயன்பட்டதாகவும் காணேம். பால்யவிதவைகளினது கஷ்டங்களை நீக்கக்கருதி ஏடுத்த முயற்சிகள் எதாயினும் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி விசாரிக்க நாம் இங்குவாவில்லை. வேறு விஷயத்தைக் குறித்துத் தெரிவிக்க வந்திருப்பதால் மேற்கூறியசங்கதியை மற்றொருசமயத்துக்கு வைத்துக்கொள்வோம். இப்பொழுது சொல்லக் கருதுகின்ற விஷயம் ஒருவரும் அறியாததல்ல. எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடியதே. அப்படியிருக்க ஜனசார சீர்திருத்தக்காரர்களது கண்ணுக்குப்புலப்படாதிருப்பது மிக்க ஆச்சர்யமே! அதுவும் அச்சிற் சிலஸ்திரீகளினது துர்ப்பாக்கியமென்றேசொல்லவேண்டும்.

பருஷனிருந்து மிறந்தவனே யென்று சொல்லக்கூடிய கணவர்கள் வாய்க்கப்பெற்ற ஸ்திரீகள் அநேகர் இருக்கின்றார்கள். சம்பாதித்துப் போட முடியாது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புருஷர்களை யடைந்த ஸ்திரீகளைப்பற்றிச் சொல்ல வரவில்லை. வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு வருந்துகின்ற கொழுநரைப் பெற்றிருக்கின்ற ஸ்திரீகளைப் பற்றிக் கூறவும் வரவில்லை, இவ்வண்ணம் எவ்விஷயம் இருப்பினும் அவ்விஷயத்தைப்பற்றிக்கூறவுமல்லவில்லை. நான் சொல்லப்புகும் விஷயத்தைப்பற்றி நோக்குங்கால் இயமாதிரி யிருக்கப் பெற்றஸ்திரீகளினது நிலைமையெல்லாம் சர்வசிலாக்கிய மென்று நினைக்க வேண்டிவரும். இவர்களது நிலைமையையும் நான் சொல்லப்புகும் பெண்பாலரின் நிலைமையையும் ஒத்துப்பார்த்துங்கால் மட்டும் இவ்வித்தியாசம் எற்படுமே யொழிய வேறு காலத்தில் புலப்படாது.

தான் விவாகம் செய்து கொண்டதின் பின்னர் விவாகம் செய்து கொண்டதாகவே ஞாபகம் இல்லாத பேர்களைக் கணவராகக் கொள்ளப் பெற்றிருக்கின்ற மாதர்களது நிலையையைப்பற்றித் தான் நான் கூறவந்தது. ஞாபகமில்லாதவர்கள் என்று சொல்வதற்கும் இடமில்லை. ஞாபகமிருந்து செய்கிறவர்களாகவேதான் தோன்றுகிறது. அப்படி ஞாபகமற் றிருப்பவர்களை நமது நண்பர்கள் ஞாபகப் படுத்த முயலுவார்களென்று நமபுகிறேன். அப்படி ஞாபகப் படுத்துவதுடன் காரியம் சித்திபெறும் வண்ணம் கொஞ்சம் முயற்சியும் எடுத்துக் கொள்வார்களென் றெண்ணுகிறேன்.

(இன்னும் வரும்.) S. N. மீனாக்ஷியம்மாள்.

இந்தியா. (முன்தொடர்ச்சி.)

ஜனங்கள் சொல்லிக்கொண்டதில் அவர் ஆங்கிலேய சேனைக்கு ஊண் உடையளிக்கும் இலாக்காவாகிய கமிசாரியெட் (Camesireate) என்பதில் வேலையாகி, அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாரென்பதை மாத்திரமே கேள்விப்பட்டேன். என்னுடைய மாமனார், எனது தந்தைக்குத் "தங்களுடைய மங்களாசீர்வாதத்தால் உபேந்திரன் (எனது கணவருடைய பெயர் உபேந்திரன்—பேரைச் சொல்லிவிட்டேன், பெரியவர்களான சமங்கலிகள் நான் செய்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும். ஆனால் இக்காலவழக்கப்படி "என்னுடைய உபேந்திரா" வென்று அழைக்க வேண்டுமெனத் தோன்றுகிறது) தன் மனைவியையும் மற்றெல்லாரையும் பரிபாலிக்கும்படியான சக்தியையுடையவனாயிருக்கிறான். பல்லக்கு, ஜோடிகள், போகிகள், மற்றும் வேண்டுவனவெல்லாம் அனுப்பியிருக்கிறேன்

சௌபாக்கியவதியை தயவுசெய்து அனுப்பவேணும், அப்படியில்லாவிட்டால், உத்திரவானால் பின்னேக்கு வேறே விவாகம்செய்யவேண்டும்." என்றகாகிதம் வரைந்து ஏவலாளருடன் அனுப்பினார். என்னுடைய தந்தையானவர் காகிதத்தைப்படித்ததும் தலையெடுத்துப்பார்த்து, "இவர் புதிதாய் பெரிய மனுஷரானவர்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். பல்லக்கின்உட்புறம்ஸ்வர்ணநிர்மிதமானபட்டாடையினால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேற்புறம் கணையின் இருமுனைகளிலும் சிம்மத்தினுடையமுகங்கள் வெள்ளியினால் செய்து அமைக்கப்பட்டிருந்தது. அதனுடன் கூடிருந்த தாதிகழுத்தில் மிகவும் விலையுயர்ந்தஸ்வர்ணாபரணங்களை யணிந்திருந்தாள். இன்னும் இவளுடன் நான்கு புருடர்கள் வேண்டும் பணிவிடைகளைச் செய்வதற்கு வந்திருந்தார்கள். (இன்னும் வரும்.) T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

வர்த்தமானங்கள்:—லார்ட் கர்ஸன் இராஜப்பிரதிநிதிஸ்தானத்தையும் லார்ட் ஆம்தில் சென்னைக்கவர்னர் ஸ்தானத்தையும் ஒப்புக்கொண்டுவிட்டனர். காங்கிரஸும் பொருட்காட்சியும் மிகவுமினிசையாக நடந்தேறின. ஜப்பானியர் போர்ட் ஆர்தரை இன்னும் கைப்பற்றவில்லை. மலபாரில் கலெஞரொருவன் மீனைத்தூண்டிலிருந்து எடுக்கும்போது அது கடித்தது காரணமாக இறந்துபோயினனும். அமெரிக்காவை யடுத்த சால்வடேக்கிலுள்ள ஜோஸப் ஸ்மித் என்பவனுக்கு 5 மனைவிகளும் 45 பிள்ளைகளும் 150 பேரப்பிள்ளைகளுமுளராம். ஜித்தாக்கடலில் 8 அடி நீளமும் 2½ அடி சுற்றளவும் பாதி மனுஷரூபமும் மறுபாதி மச்ச ரூபமும் கலந்துள்ள மீன் ஒன்று அகப்பட்டதாம். 1000ஐ வரை கெட்டுப்போகாது ஒடத்தக்க கெடியாரமொன்றை ஜர்மெனியில் ஒருவன் செய்துளனும். பம்பாய் பொருட்காக்ஷியில் 70000சாமான்கள் வைக்கப்பட்டிருந்ததாம்.

சில அபிப்பிராயங்கள்:—பிரஜாபந்துகூடலன். இது அநேகவிநோத சரித்திரங்களையும் பொது நீதிகளையும் எளிய நடையில் இன்புறக்கூறும் திறம் வாய்ந்துளது. இந்து வர்த்தமானி. நாகப்பட்டணம்.

புத்தகவரவு:—"சன்மியாசி கீதம்" எனும் சிறப்பெயர் தரித்த சிறு நூலொன்றினை மகா-ள-ள-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணைய ரவர்களிடமிருந்து வரப்பெற்றோம். ஸ்ரீவிவேகாநந்தஸ்வாமிகள் ஆங்கிலத்திலியற்றிய இக்தையை இனிய தமிழ் நடையில் மூலநூலின் கருத்தை முற்றிலும் தழுவி அகவல் ரூபமாக அச்சிட்டதவியது மிகவும் ஸ்லாக்கத்தக்கதே. இதையனுப்பிய ஆசிரியரவர்கட்கு நமது வந்தனத்தைச்செலுத்துவோமாக.

மிஸ்டர் P. M. இராஜாமுதலியாரவர்களால் தயார் செய்யப்பட்டு நமது பார்வைக்கனுப்பப்பட்ட 1905-ஜூத்திய புலிப்பாக்கேட்பஞ்சாங்கம் ஒன்றை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். இது ஜனங்கள் முக்கியமாய் அறிந்துகொள்ளவேண்டியதாயுள்ள உபயோககரமான அநேக விஷயங்களும், இங்கிலீஷ் தமிழ்பஞ்சாங்கமும், அடங்கியதாய் உயர்வானவெள்ளிய கடிதத்தில் மிகச்சுத்தமான எழுத்துகளால் பதிப்பிக்கப்பட்டு சிறந்தபைண்டுடன் இலங்குகின்றது. இவையன்றியும் 6 பாரஷதங்களில்தினக்குறிப்புகள் அச்சிடப்பட்டு பிரதிதினத்திற்கும் ஒவ்வொரு பக்கமும், வரவுசிலவு கணக்குகளும் ஞாபகக் குறிப்புகளும் எழுதுவதற்கு அச்சிடப்பட்டகாகிதங்களும் பலவும் விடப்பட்டுள்ளது. 1896-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஸம்வத்ஸரங்களாக பிரதி வருஷத்திலும் 5000 க்கு குறையாமல் 7000, 8000, வரையில் வெளியிட்டு வருவதும் இதின் அருமையையும் அவஸ்யத்தினையும் நன்கு விளக்கும். ஆகவேகம் காட்டார் இதனை ஆதரிப்பார்களாக.

பிரஜாபகூடன்.

பருவம் 1. { 1905-வது பிப்பிரவரி-மீ } இலக்கம் 11.

கல்வியும் நடக்கையும்.

முன் தொடர்ச்சி.

புத்தியிருந்தும் அதின்படி நடவாதிருப்பதைவிட அப்புத்தியில்லாதிருப்பதும், கல்வியிருந்தும் நல்லொழுக்கத்தை யனுசரியாமலிருப்பதைவிட நிற்மூடனயிருந்திறப்பது மிகவுமுத்தமம். மேன்பாடும் கல்வியும்நன்னடக்கையோடு சேர்ந்தாலது என்ன பெருமையைத்தராது! கல்வியினல் அலங்கரிக்கப்பட்ட புத்தியோடு கூடிய கெட்ட நெஞ்சைப் பார்க்கிலும் பொல்லாத தொன்று மில்லாததுபோல நன்னெஞ்சோடு கூடிய கல்வியைப்பார்க்கிலும் நன்மையான தொன்றுமில்லை. சாஸ்திரங்களில் தேர்ந்தபுத்தியோடு, பக்தியினலும் குணத்தினலும் சீர்பட்ட நடக்கையானது கூடி அப்புத்தியாலும் கல்வியாலும் உண்டாகிய அருமையான சாமர்த்தியங்களைப் பரிசுத்தமனதோடும் தயவு தயாளத்தோடும் செலுத்துவதிற்முன் மனிதனுக்குச் சர்வ மேன்பாடும் நன்கு மதிப்பு மடக்கியிருக்கின்றன. கல்விக்கொத்த நடக்கையே முக்கியமாய் உலகத்தில் உபயோகமான காரியங்களைச் செய்யவல்லது. கற்ற கல்வியை நன்மை செய்யச் செலுத்திப் புத்திக்குத் தேர்ந்த யோசனைக்குத் தகுந்தபடி நடப்பவனைப் போல கடவுளுக்குச் சிறந்தவனெருவனுமில்லை. அப்படிப்பட்டவனுக்குத் தன்னிலே மிருந்த திர்ப்தியும் உள்ளத்திலே வற்முத சந்தோஷமும் இன்பமும் உண்டாயிருக்கும். சரியான தின்னதென்று தெரிந்தும் அதின்படி செய்யாதவர்களுக்குள்ள மனோவேதனை யவனுக்கிராது. தன்புத்திக் கொவ்வாத செய்கைகளையுடையவன் ஒயாத கிலேசத்திற்கும், மனவருத்தத்திற்கும் பீடமாயிருப்பான். தன் யோசனை எவ்வளவு நியாயமாயும் கல்விஎவ்வளவுவிரிவாயுமிருக்குமோ அவ்வளவுக்கு (செய்கை யொவ்வாத போது) தன்னையே யவன் வெறுத்துக் கொள்ள வேண்டியவனவான். ஆனல் தெளிந்த புத்தியுடையவனுமாய், நியாயம் தனக்குக் கற்பிக்கின்றதை யறிந்து செய்பவனுமாயிருப்பவன் உண்மையையும் தன் கடமையையும் நன்முயறிந்து அதற்குத்தகுந்த சந்தோஷத்தை யடைகின்முன். ஆகலான் மந்தரீர்! நமதா கல்விக்கொத்து நடக்கப் பிரயாசைப்படுவதற்கு எவ்வளவு பலமான நியாயங்களிருக்கிறதென்று உங்களுக்குத் தெரிகின்றதல்லவா? நடக்கையை யொத்திராத கல்வி பெருமையும் பயனின்மையுமாய் இருப்பதைப் பார்க்கிலும்; அதிகக்கெடுதியுமாய், விஷமுந்தூஷணையுமாய் அதனையுடையவர்களை அதிக நிந்தனையும் இழிவும் படுத்திவிப்பதுமாய், குற்றத்தைப் பெரிதாக்கி நமக்கினி யுண்டாகும் மதிப்பை யழித்து

மாதுன்பத்திற்குள் நம்மையமிழ்த்துவதுமாய் இருக்கின்றதென்று ஏற்கனவே சொல்லி யிருக்கின்றோமன்றோ? ஆனதுகொண்டு உலகீர்! இந்த நியாயங்களைப் பற்றி உங்கள்கல்வியை முக்கியமாய் நடக்கையிற் காட்டக்கடவீர். கல்வி யபிவிர்த்தியாக்க நாமுள்ளபடி பிரயாசைப்படவேண்டியதுதான். இதை உத்தம வகையிற்செய்ய விரும்புவது மிகவும் நலம். அதற்குவழியொன்றும் காண்பிக்கின்றோம். கல்வியைக் கற்கவிரும்புங்கள். ஆனால் அதின்படி நடக்கவேயதனை விரும்பக்கடவீர். கல்வியையிரும்பி உங்கள்கவலையை முக்கியமாய் நன்மைசெய்யச்செலுத்துங்கள். இதுஒன்றேஉங்களை விரும்பவும் மதிக்கவும் செய்து மறுமையின்வேதனையினின்றும், உங்களை இரகூபிப்பதுமல்லாமல் நித்திய செல்வத்தையும் உங்களுக்குக் கிடைக்கும்படிசெய்யும். நற்காரியத்தைச்செய்வதே மனிதனுக்கேற்ற தொழில்என்பதை என்னாளும் மறக்கக்கூடாது. இதற்காக நம்மை இவ்வுலகில்வைத்திருப்பதே யொழிய சாஸ்திரங்களை யாராய்ந்து கற்பதற்காகவல்ல. ஹிருதயத்தைச் சுத்திசெய்து நமது ஆத்துமத்தை சஞ்சலமில்லாத பரிசுத்த நெறியில் நிறுத்த உதவும் சன்மார்க்க நூல்கள்தான் அவாவுடன்உணருவதற்குத் தகுந்ததாயிருக்கிறது. இதற்குப் போதுமான புத்தியைக்கடவுள் நமக்குக் கொடுப்பாராகில் தெரியாத மற்ற காரியங்களுக்காகநாம் விசனப்படவேண்டியதில்லை. கல்விகற்க நாம் இச்சிக்கவேண்டியதுதான். அன்றியும் விசாலமான புத்தியை யுடையவர்கள் சாஸ்திரங்களில் அநேக காரியங்களை நன்றுயறிய விரும்பாமலிருக்கமாட்டார்கள். கல்வியினுடையான நன்மையும் மேன்மையுமுள்ளதே. அதை நல்லொழுக்கத்துக்குத்தகுந்த முறையிற் காப்பாற்றுவோமாகில் அதற்காக எவ்வளவுஆசைப்பட்டாலும் போதாது. இதுகாறும் நாம் சொல்லிவந்த விஷயங்களை நன்குணர்ந்த அறிவிற் சிறந்த அன்பர்காள்! நீங்கள் மெய்யான கல்வியைத் தேட விரும்பினால், இந்நேரமுங்கட்டிருக்கும் சந்தேகங்களையெல்லாம் நிவர்த்திசெய்துகொள்ள ஆசைப்படுவீர்களானால், பிரபஞ்சவமைப்பையும் சிருஷ்டியிலடங்கிய ஞானத்தையும் தெய்வச் செயலையும் அதிசயங்களையும் தெரிந்துகொள்ள இச்சிப்பீர்களானால், அந்தகாரமூடத்தன்மையுமுடைய இவ்வுலகத்தைவிட்டுப் பிரகாசமும் நித்தியானந்தமுமுள்ள பேரின்ப வீட்டினைப்பெற அபேக்ஷிப்பீர்களானால் கல்விக்கொத்து நடக்கவேண்டியது அத்தியாவஸ்யகரமென்பதை அறிந்து அங்ஙனமே ஒழுகி அஃதால் விளையுமின்பங்களை யனுபவித்து இகலோகத்தில் இன்புற வாழ்ந்து இறுதியில் பரமசாம்பிராஜ்ய பதவியையடையும் வண்ணம் முயற்சிக்கக்கடவீர்களாக. முற்றிற்று.

பத்திராதிபர்.

சன்மார்க்க சாரம்.

சர்வலோக நாயகனும் அகண்டபரிபூரண வஸ்துவாய் தோஷரஹிதனும் நிர்மல ஸ்வரூபனும் நித்தியானந்த பூரிதப் பிரகாசனும் விளங்கும் கடவுளின் செயலை யறியாது கண்ட கண்டபடி வாயில் வந்தனவெல்லாம் பிதற்றி பாழான நரக வியாதிக் குடன்பட்டு நாசமடையும் துர்மதி வீணர்க்கோர் நன்மதி பாணம்.

என்றும் சாஸ்வதமாய் உலகமுள்ளளவும் அழியப்படாத கீர்த்தியை யாவர்களும் அடையவும், திவ்யாலங்கார மோக்ஷ சாம்பிராஜ்யத்தைப்

பெறவும், வேண்டு மென்பதுமே அறிஞர்களின் கொள்கை. இதற்கு முக்கியசாதன மூலதனமாகிய தெய்வபக்தி யில்லாவிடில் என்பெறுவார்கள்? நிரயம் புகுந்தழல்வார்கள். அறிலோ "கண்டதுகற்றப் பண்டிதரா வரென்று" ஒரு நூலேயேனும் முற்றிலுமறியாது மேற்பூச்சுக்கு நுணிப்புல் மேய்வதுபோல் யாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்துகொண்டு உலகம் மயங்கத்திரிவார்பலர். உண்மையானஞானம்'பயின்று நிரிவார் சிலர். இங்ஙனம் ஞானவான்களாய்த் திரியும் சிலரைக் காண்பதரிதாய் இலைமறைந்த காய்போல் தெரிந்தும் தெரியாமலும் நிற்பர். இவரே ஜீவன்முக்தர். ஆனால் இவரும் ஐந்தறிவோடு ஆறுவதான பகுத்தறிவையடைந்த நம்போன்று மனிதர் தாமே? இவர்மாத்திரமேன் இந்நற்கதியுக்கவேண்டுமென்றால் "விளையும் பயிர் முளையில்" என்பதுபோல் பிறந்தபோதே வளரும் தோற்சியிலும் ஒழுகும் நடக்கையிலும் நிற்கும் அடக்கத்திலும் நன்கு புலப்படுவர். இதுகளில் சற்றும் தவறுது ஆத்ம சுத்தியோடு.

"ஏத்தொழிலைச் செய்தாலும் எவ்வகைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்றபடி

"வாணிபஞ் செய்யினுஞ் செய்வர் மாதவஞ் செய்யினுஞ் செய்வர்
பூதலமெங்கு மோடிப் புரிந்தன்பர் ஜீவன் முக்தர்" ஆதலால்

அவ்வித மகான்களுக்கே இஷ்டானுபூதியாகு'மல்லது மற்றவர்க்குச் சற்றுமாகா. அன்னவரே சாஸ்வத,தேகிகள் என்பதற்குச்சான்று,

"தாமாம் மனிதராயுட் டசமுறை சரிக்குங் காலம்
காலமாம் முறைகள் பத்துங் கடந்திடுங் கழற்கா லுகை
கூகை தன்முறைகள் பத்தாங் கொடும் விட நாக மந்த
நாகமோ ரனந்தங் கண்டும் ஞானயோ கிருக்கின்றாரே"

நூறுவயது கொண்ட மனிதரின் பத்து ஜன்மங்கொண்டது ஒரு காக்கை. அக்காக்கையின் பத்துஜன்மங் கொண்டது ஒரு கூகை. அக்கூகையின் பத்து ஜன்மங்கொண்டது ஒரு நாகம். அந்நாகங்கள் அனந்தங்கண்டும் ஞானயோகிகளிருப்பதினால் அத்தகைய சக்தி பெறுவதற்கு பக்தியே முக்கியம். ஆனால், துன்பம் பிணி மூப்பு சாக்காடு இவ்வாறுங்கருவில் அமைப்பு என்றும். "அவனேயன்றி யோரணுவு மசையா தென்றும்" பேசி பலர் வாதிப்பர். அங்ஙனம் வாதிப்பவருக்கு விடை நமது மாகூமை தங்கிய இந்தியா கெவர்ன்மெண்டாரவர்கள் பிரஜோபகாரமாய் கீழ்வகுப்பிலிருந்து மேல்வகுப்பு வரையில் பற்பல பேதந்தோன்ற வித்தைகளைக் கற்பித்து அதினின்று சோர்வில்லாது தேர்ந்தவருக்குத் தொழில் மார்க்கமாய் நற்பதவியைக் கொடுப்பது போல் எல்லாம் வல்ல கடவுளொருவர் தாம் சிருஷ்டித்த எண்ணிறந்தவகையில் நன்மை தீமை யென்னும் இரண்டில் நன்மையைக் கடைபிடித்து தெய்வ விஸ்வாசம் பெற்ற சீர்த்தியோருக்கே இகபரசுகசாதன மளிப்பர். ஆதலால் தமக்குக்கிடைத்திருக்கும் உன்னதமான இப்பிறப்பில் கவலை கொண்டு தினம் ஒருக்கணப்பொழுதேனும் கடவுளைத் தியானித்து பக்திப்பிரகாச பாகவதோத்தமர்களாய்ப் பாக்கியம் பெறுவாராக.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

சரித்திரப் பயிற்சி.

நம்மனோர் தத்துவ சாஸ்திரங்களிலும் சோதிடம், கணிதம், கலை ஞானம் முதலியவற்றிலும் அன்பு வைத்ததுபோல் தேச சரித்திரத்தை எழுதிவைப்பதில் ஒரு சிறிதும் அன்பும் எண்ணமும் உடைத்தாயிருந்ததாகத் தோற்றவில்லை. அதனால் இந்தியாவின் சரித்திரத்தைச் சரியாகக் கூறுவதற்கு இடமில்லா தொழிந்தது. சரித்திரங்கள் எழுதிவைக்கப்படாத குறையால் கர்ண பரம்பரையாலே முற்கால நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கின்றது. சிலாசாசனங்களாலே சில அரிய சம்பவங்கள் ஒருவாறு உணர்க்கூடியவையாயிருக்கின்றன. இச்சிலா சாசனங்களும் பெரும்பாலும் ஆலயங்களிலே காணப்படுகின்றன. சரித்திரங்களை முன்னோர் எழுதி வையாதிருந்ததின் காரணம் யாதாயிருக்கக்கூடும்? பெரும்பாலும் தேசசரித்திரம் என்பதை முன்னோர் கவனித்திரார்; அல்லது அவர்களுக்கு அது தெரிந்தே யிராது; அல்லது அநித்திய பிரபஞ்ச விஷயங்களை யெழுதுவதால் வரும்பயன் என்னவென்கிற எண்ணம் உண்டாயிருந்ததாக நினைக்கலாம். நமது புராணங்களிலே எல்லாம் தெய்வ சம்மந்தமான மகிமைகளும், அவற்றை வினக்கும் பக்திமான்களின் சரித்திரங்களுமே காணப்படுகின்றன. இராமாயணம், பாரதம் என்னும் இரண்டு சரித்திரங்கள் தான் நாம் காணக்கூடிய வெளகிக சம்மந்தமுள்ள சரித்திரங்கள். சில சரித்திரங்கள் இராஜதரங்சனீ, மகாவம்சம்என்பவைகில நூற்றுண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவையாகவுண்டு. தேச சரித்திரமாவது தேசத்தின் வளம், நிலைமை, கல்வி, ஞானம், நடை, காலதேச வர்த்தமானம், பண்டிதர் சரித்திரம், வர்த்தகம், கைத்தொழில், சாமார்த்தியம் முதலியவற்றை எடுத்துக்காட்ட வல்லதாம். இவ்வெளகிகாபிவிருத்தியின் பலதுறைகளையும் முற்காலத் திருந்தபடி காட்டவேண்டுமானால் தக்க சரித்திரங்கள் இடையா? அவ்விலேயர் தேச சரித்திர மெழுதுவதிலும் அவ்வாறே காப்பதிலும் மிக வல்லவர்கள். 1000-வருடங்களுக்கு முன்னடந்த சரித்திரங்களையும் காட்டும்படி புத்தகங்களிருக்கின்றன.

எல்லா ஞான நெறிகளிலும் மற்றச் சாதியாரினும் மேம்பட்டவராக இருந்த இந்துக்களுக்கு இவ்வொன்றில் மாத்திரம் குறைவு நேரிட்டிருக்கின்றது. அந்திய தேசத்தார் படையெடுப்பினால் இவ்வாருயிற்றோ அல்லது மற்றெவ்விதத்தாலோ தெரியவில்லை.

காணக்கூடிய சில சரித்திரங்களோ ஒட்டலங்காரங்களாலே கட்டப்பட்டிருக்கின்றன. பூர்வீக வித்துவ சிரோரத்தினங்களின் சரித்திரமும் சரியாய்க்கிடைக்கவில்லை. ஆயினும் கர்ணபரம்பரையாய்க் கிடைத்த சரித்திரங்களும், செப்போடுகளில் எழுதப்பட்டனவாயும், சிலா சாசனங்களை யடைந்தனவாயும் இருந்த சரித்திரங்களுமே தேசசரித்திரங்களாய் இருக்கின்றன வென்பதுண்மை. பூர்வீகக் கல்வி முற்றும் கர்ணபரம்பரையாக இருந்தபடியினாலேயே கிரந்தங்களை யெழுதும் பழக்கம் சிறிதாக இருந்திருக்கவும் கூடும்.

சரித்திரம் இல்லாதகுறைவானது இந்துக்களின் நிலைமையை வெகுவாய்த் தாழ்த்தியது. இப்போதும் தேசநிலைமையையும், அதின்வளங்களையும், சரித்திரங்களையும் உணர்ந்தத் தக்கபடி சரித்திரங்களை யெழுதுவதில்

சிரத்தை யற்றவர்களாக விருக்கின்றார்கள். முற்காலத்துச் சரித்திரங்கள் இருக்குமாயின் அவற்றைப் பின் வரும் சந்ததியார் படித்துணர்ந்து நாகரீகத்திலும் தங்கள் நிலைமையிலும் உயர்வார்கள். அவ்வாறே அங்கிலேயரும் பிறரும் அபிவிருத்தி யடைந்தார்கள். அவ்வபிவிருத்தியடைந்தசாதியார்களை நாம் நோக்கும்பொழுது அவர்களுடையகல்லகொள்கைகளை நாமும் பின்பற்றவேண்டும். வித்துவான்களும் முன்னிருந்த அரசர்களும் இந்நோக்கம் கொண்டிருந்ததாக எந்த கிரந்தங்களிலும் புலப்படவேயில்லை. தற்காலத்து வித்துவான்களுடைய சரித்திரம் யாதும் புலப்படும்படியாய்கிடைக்கவில்லை. வித்துவான்களுக்கு தேசாபிமானம், ஒற்றுமை என்னுமிருகுணங்களும் கிடையா. இதனாலேயே தேசசரித்திரம் எழுதும் ஆசையும், அன்பும் அவர்களுக்கு ஜனிக்க வில்லை யென்பது நிச்சயம். இக்குணங்களைவிட்டு இனியாவது நமது தேசசரித்திரங்களைச் சுதேசபாஷைகளில் எழுதத்தொடங்குவாராயின் மிகவும் அனுகூலமாயிருக்கும். அவ்வாறு செய்யாமலிருந்தால் வித்வான்களால் தேசத்திற்கு யாதொரு பிரயோசனமும் இல்லை.

தமிழ் முதலிய சுதேசபாஷா வித்வான்கள் இனித் தம்முடைய வித்துவச் சிறப்புகளைத் தேசசரித்திர சம்பந்தமான புத்தகங்களில் வைப்பார்களானால் நாட்டுக்குப் பெரும் புகழ் தேடிக்கொண்டார்களென்று அங்கீகரிக்கலாம். வித்துவான்களின் லோகோபகாரமான செய்கைகள் இன்னும் நன்றாக விளங்க வில்லை. (இன்னும் வரும்)

டி. வி. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரி.

டங்டிங் ரமாமணி.

முகவுரை:—ஒரு காரியத்தைத் தனியாய் ஒருவன் செய்து முடிப்பதைக் காட்டிலும் பலர்கூடி அக்காரியத்தை முடித்தால் மிக்க மேன்மையாயிருக்குமல்லவா? தற்போது தமிழ் பண்டிதர்களால் அநேக கதைகள் எழுதப்பட்டுள. அவையனைத்தும் ஒரே கைப்பாடாயிருப்பதன்றிப் பலர் சேர்ந்து செய்த வேலையல்ல. ஒரு கதை யெழுத ஆரம்பிப்பின் நவரஸங்களும் சேர்ந்திருந்தால் படிப்போருக்கும் கேட்போருக்கும் இனிமையைத் தரும். ஒருவனுக்கே நவரஸங்களும் தெரிந்திருப்பது அசாத்தியமாகும். தற்போது என்னால் ஆரம்பித்திருக்கும் "டங்டிங் ரமாமணி" என்னும் இச்சரிதையை முதல் அத்தியாயத்துடன் சொல்லி நிறுத்துகிறேன். அதன்பேரில் தொடர்ந்தேதித்தியாய் நிரூபகேயர்களும் மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராய் சரிதையை முடிக்கப் பிரார்த்தனை.

முதல் அத்தியாயம்.

ஓராலெரு காலத்தில், சத்தியபுரியை பரிபாலனம் பண்ணுகின்ற சத்தியவரன் என்ற அரசனும், சாந்தசீலன் யென்ற மந்திரியும், நெடுநாளாய் புத்திரப் பேரில்லாமல் மனம் வருந்தி, அநேக தான தருமங்களைப் புரிந்ததாலும், பரமனைக்குறித்துச்செய்த தபோ மகிமையினாலும் நல்ல சுபமுகூர்த்தத்தில் இருவரும் இரு குழவிகளைப் பெற்றெடுத்தார்கள். குழந்தைகளுக்குள்ள ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், ஜனனம், உபயனம் முதலிய சடங்குகளை விதிவழுவாது நடத்தி, ஒரே குருவின் கீழ் சகல வித்தைகளையும் பயிலுவித்து, வயது பதினைது கழிந்த

வுடன் சபமுகூர்த்தம் ஒன்று நிச்சயம் செய்து தமது பட்டங்களை புத்திரர்களுக்குக் கட்டிவித்து துறவறம் பூணவேணுமாய் எண்ணங்கொண்டு புத்திரர்களைத் தருவித்தார்கள். அச்சமயத்தில் அங்குவந்த தம் புதல்வர்களைக் கண்டு தமது எண்ணத்தை வெளியிட, அரச மந்திரி குமாரர்களிருவரும் ஏகமனத்தினராய், உலக விஷயங்கள் யாவும் நன்குணராமல் எவ்விதம் ராஜ்ய பரிபாலனம் செய்வது, சிறிதுகாலம் தேசசஞ்சாரத்திற்கு உத்திரவு கொடுத்தால், அவ்விதமே சென்று ஆங்காங்குள்ள ஆச்சரிய விசேஷங்களை யெல்லாம் கவனித்துப் பிறகு தங்களெண்ணத்திற் குடன்படுவோம் என்று, பிதாமார்கள் எவ்வளவு சொல்லியும் கேளாமல் தமதுதந்தைகளிடம் பலவந்தமாய் விடைபெற்றுக்கொண்டு தேசாடனம் செய்யப்புறப்பட்டார்கள். அவ்விதமே ஜயசிங் என்னும்அரசகுமாரனும் மோகன சந்திரன் யென்னும் மந்திரி குமாரனும், உயிரொன்று உடலிரண்டாய் அநேக தேசங்களைச் சுற்றிக்கொண்டு காம்யதேசம் என்னும் ராஜ்யத்தில் வந்து ஒரு வீட்டில் தாமசித்தார்கள். மறுநாள் இராஜகுமாரனை மனையிலிருக்கச் செய்து மந்திரி குமாரன் கடைவீதிக்குச் சென்றிருக்கும் சமயத்தில், அங்கு வெகுகாளாய் புத்திரப் பேறில்லாமல் அநேகவருடகாலம் ஈஸ்வரனைக் குறித்து தவம்புரிந்து சகலவித லக்ஷணங்களுடன்கூடிய ஓர்புதல்வியைப் பெற்றெடுத்து, வயதுபன்னிரண்டாகியும் தகுந்த மணவாளன் கிடையாததுபற்றி எங்கும் தேடித்திரிந்து வரும் ஓர் கனவான் இம்மந்திரி குமாரனைப் பார்த்து, நீவிர் யார், இருப்பிடம் எது என்று கேட்க, நான் சத்தியபுரியை பரிபாலனம் பண்ணுகின்ற சத்தியவரன் யென்னும் அரசனின் மந்திரி குமாரன், நானும் இராசகுமாரனும் தேசாடனம் செய்யும் பொருட்டு வந்திருக்கிறோம் என்று சொல்ல அக்கனவான் தனது எண்ணத்தை வெளியிட, அதற்கு மந்திரி குமாரன் தனது நண்பனுகிய இராஜ குமாரனிடம் கூறி அவன் சம்மதத்தின் பேரில் பதிலளிப்பதாய்ச் சொல்லி அக்கனவானுடன் இல்லத்திற்குச் சென்று ஜயசிங்கின் சம்மதத்தின்பேரில் அக்கனவானின் குமாரத்தியாகிய டங்டிங் ரமாமணி யென்பவளை மந்திரி குமாரனுகிய மோகன சந்திரனுக்குப் பாணிக்கிரகணம் செய்வதாய் நிச்சயம் செய்து சுபமுகூர்த்தத்தில் விவாகமும் நடந்தது. பிறகு அக்கனவானிடம் விடைபெற்று, புஷ்பவதியானதின் பேரில் பெண்ணை யழைத்துப் போவதாய்ச் சொல்லி அங்கேயே விட்டுவிட்டு இருவரும் புறப்பட்டுச் சென்றனர். சுமார் ஐந்தாறு வருடங்கள் வரையில் அநேக தேசங்களைச் சுற்றிக்கொண்டு மறுபடியும் இந்த காம்யதேசம் வந்து சேர்ந்தார்கள். ஆனல் தாங்கள் முன்பு வந்த தேசமென்றும் மந்திரி குமாரனுக்கு விவாகம் நடந்த இடம் இதுவென்றும் ஞாபகமேயில்லை. (இன்னும் வரும்.)

டி. வி. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

கலாப்பிரகாசனி.

எட்டாவது அத்தியாயம் முன் தொடர்ச்சி.

நீ கன்னித்கண்டு காதலித்த கலாலங்கிருதனையே நினக்குமணஞ்செய்க்கிமணைற்சவம் காணலாமென்றிருந்தேனே! நிகழ்ந்த சம்பவமிஃதென விநிதமாய் விளங்கவைப்பா ரெவரு மிலரே! எண்ணு முன் காணுகின்

ருய் என்னிரு விழிகளில் நீயும்! கண்ணின்மணியே உன்னைக் கருதிடக் கலங்கு தெந்தனுவி! இம்மணணி லுனையீன்ற மாபாவி வயிற்றிலிட்டையே தீயை! பாதிவயதில் பாலகியைப் பறிகொடுக்க வேதனமைத்திட்டதுவும் விதிதானே? பிறவா நெறிதரு பெருமானியற்றுஞ் சோதனை இதுதானே? மிக்கப் பெருஞ் செல்வமு மிழக்கலாம். தக்கதோர் தாரங்கள் தனையுமிழக்கலாம். இகபரசுக மியற்றிடு மக்களை யிழத்தலிலும் மரணம் கன்மையே!

இவ்வனமாக துக்கித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் கருணாகரரை எவரோ கொன்றுவிட்டனரென்றும், அருகில் மூன்று குழந்தைகள் இறந்து கிடக்கின்றனவென்றும் பிரதாபனும் துன்மதியும் அங்குவந்து கூறிகருணாகரனுடைய பிரேதத்தின் மடியிலிருந்தெடுக்கப்பட்டதென்று ஒரு கடிதத்தையும் வீரகேசரி மன்னனிடம் அளித்தனர். அதைப் பிரித்துப்பார்க்கப் பின் வருமாறு எழுதியிருந்தது:—

வீரகேசரிமன்னவ,

என் நிரகத்தருகில் பதுங்கியிருந்த இரு சண்டாளர்கள் என்னையும் உன் மக்கள் மூவரையும் வாளால் வெட்டிவிட்டனர். எழுதுவதற்குச் சக்தியில்லை. எனதுயிர் உடலினின்றும் நான் உன் தேசத்திலிருந்தும் பிரிகிறதருணமிதுவே, உன் ம-னை-வி-க-ளி-ரு-வ-ல-ர-யு-ம் — —

கருணாகரன்.

கையெழுத்தைக் கவனித்ததில் சிறிதும் சந்தேகத்திற்கிடமேயில்லை. கருணாகரனுடைய கையெழுத்துதானென்பது நிச்சயம். இதை யுணர்ந்தவுடனே வீரகேசரி மன்னர் "கருணாகரா உனைப்பிரிந் தெங்ஙனமுயிர் தரிப்பேன்" எனக் கதறினர்.

"அய்யோ யிவ்வுயி ருமெனக் கருணாகரனே யானறியேன் பாவி
பொய்யான வாழ்க்கை யினிப் போதுமெனப் புகுந்தனையோ புண்யலோகம்
கொய்யாத பருவமலர் மொட்டில் கொய்தேறிதைக்குங் கொடியோர்போலச்
செய்பவரார் சிறு குழந்தைகளு மாளச் செய்தவரார் தெரிகிலேனே!"

நிலந்தரு பெரும்புகழ் நிறை பெறு ஞான நலந்திகழ் கருணாகரா! எந்தக் கிராதக னுனைக் கொன்றனனே! ஜென்மமெடுத்த மாந்தர் யாவர்க்கும் சிறிது காலத்திற்குள்ளே சிறு மரண முண்மையாதலால் கன்மதேகமெடுத்த நீயும் கூற்றங் களிக்குமிந் நாற்றச் சடலத்தின் தோற்றத்தை விடுத்து இப்புவியின் வாழ்க்கையைத் துறந்து நற்கடவுள் பதமடைந்தையோ! ஜென்ம மேவியிருக்கின்ற யானு முனைப்போல் சேருங்கால மெந்த நாளிலோ! மாலினியும் எனை மறக்கலானுன். கருணாகரனு மிறக்கலானுன். நேற்றிரவு ஜனித்த மக்களையும் நள்ளிருளில் நமன் கொள்ளை கொள்ளலானுன். ஐயோ! மக்காள்! உங்கட்கு இறப்பும் பிறப்பும் ஒரு காளில் வந்துற்றதோ! என் பெயர் செதுக்கிய மூன்று மோதிரங்களையும் உங்கள் மூவருக்கும் நேற்றிரவு விரலிலிட்டு என்றும் அதைக் கழற்ற வேண்டாமென்று கருணாகரனிடம் கூறினேனே! எனதெண்ணமெல்லாம் வியர்த்தமாயினவே! உனை நினையாமலுன்மஹிமையோராமல் கன்வினையெலாம் கணித்தேன் ஜகதீசா! ஆசை வலைக்கு எழுந்தியது போதுமினி மோசம் வருமுன் னெனக்கு மோக்ஷமீவாய் ஜெகதீசா! மோக்ஷ மருளாவிடினும் மோசம் போகாவழியைக் காட்சிபெற வந்தெனக்குக் காட்டுவாய் ஜெகதீசா! தொல்வினையால் தோழன் கருணாகரனைத் தொல்லுலகில் வல்விரைவாய் யானிழந்து வருகின்றேன் ஜெகதீசா! இழந்த

இஷ்டனே, இறந்த மக்களே, மறைந்த மாலினியை யென்றும் துன்பத்தை மூன்றாம நின்பதம் வைத்தான்வாய் ஜகதீசா! என்று பலவாருகப் பிரலாபித்து ஐயோ! என்னல் பொறுக்கமுடியவில்லையே என்று அலறிக்கொண்டு வீரசேசரி மன்னர் மூர்ச்சைபோய் சிம்ஹாஸனத்தினின்றும் கீழே விழுந்தார். பின் அருகிலிருந்தவர்களால் தேற்றப்பட்டு அந்தப்புறத்திற்குச் சென்றதில் சுலோசனையையும் கமலாக்ஷியையும் அவ்விடத்திற் காணுததால் ஒன்றும் தோன்றாது திகைத்து மீண்டும் கருணாகரனுடைய கடிதத்தைவாசிக்க அதில் எழுதியிருந்தவைகள் இரண்டுவித அர்த்தத்தைத் தருவனவாயிருப்பதையறிந்து,எல்லாம் ஈஸ்வராக்ஞை என்றெண்ணி அன்றிரவே ஒருவருடனும் சொல்லிக்கொள்ளாமல் உலகசுகத்தை வெறுத்துத்துறவறத்தைத்தழுவிஸ்வகரைத்துறந்து ஆரண்யம்புக்கிமறைந்தனர். நாட்டிற்கு மன்னனில்லாமற் போனதை யுணர்ந்த வேற்றரசர்கள் சக்திரஹிர இராஜ்யத்தை முற்றுகை போட்டுக் கைப்பற்றிக்கொண்டு பிரதாபன் துன்மதி இவ்விருவர்களுடையவும் துரெண்ணத்தை யறிந்து அவ்விருவரையும் காராக்கிருகத்திலடைத்து பிரஜா பரிபாலனம் செய்து வரலாயினர். எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்திராதிபர்.

ஜனசார சீர்திருத்தக்காரர்கட்கோர் கடிதம்.

முன்தொடர்ச்சி.

தங்கள் மனைவிமார்களைக் கதறும்படி விட்டு விட்டு பிறருக்குப்புத்தி சொல்லவும் புகுந்து விடுகின்றீர்கள். தன் அகத்தைக் காத்துக்கொள்ள முடியாதவன் ஊர் காவலனாக இருக்கின்றேன் என்று கூறுவது போல இருக்கின்றது. தங்கள் செய்கைகளால் புத்தி புகட்டட்டுமே. தாங்கள் தங்கள் மனைவிமார்களுடன் ஒன்றுபட இருந்து பிறருக்கு புத்திசொல்லப் புகுந்தால் பயன்படுமே யல்லாது வேறு விதமாகச் செய்தால் பயன்படாதென்றே எண்ணுகிறேன். தன்னை வந்து தஞ்சமென்றடைந்தவர்களைக் கஷ்டத்துக் குள்ளாக்குபவர்களா பிறர் கஷ்டத்தை நீக்குபவர்கள்? அவர்களால் சாத்தியமாகு மென்று எனக்குத் தோன்ற வில்லை. நமது நாட்டுப் பெண்களது சுகதுக்கங்கள், அவர்கள் தாங்கள் அடையப் பெறுகின்ற கணவர்களைப் பொறுத்ததாகவே யுள்ள தென்று யாவருமறிவார்கள். நேர்படக் கணவனில்லா திருந்தால் மடந்தையரது கதி அதோகதி தான். இவ்வண்ண மிருக்க ஸ்திரீகளை நிர்க்கதியாய் விட்டு விட்டு தமது இஷ்டப்படி கவலையில்லாது லோகசஞ்சாரம் செய்ய எப்படித்தான் மனந்துணிகின்றனர்களோ? அவர்கள் ஏதாவது காரணங்கொண்டுதான் அவ்வண்ணம் செய்வார்கள். காரண மில்லாது செய்வதற்கு அவர்களுக்கு என்ன பைத்தியமா? அதுவும் இம்மாதிரியான விஷயங்களெல்லாம் கற்றுத் தேர்ந்தோர்க ளிடத்தே தான் அதிகமாகப் புலப்படுகின்றது. எப்படி இருந்த போதிலு மென்ன? ஆயுசு காலம் வரை அவர்களை வருந்தும் வண்ணம் அவர்கள் என்ன தப்பிதம் செய்திருக்கப்போகின்றார்கள்? இவர்கள் கூறும் குற்றங்களெல்லாம் அழகில்லை யென்பதும் படிப்பில்லை யென்பதும் சமர்த்தில்லை யென்பதுமே. கல்யாண காலத்திலே இவர்களுக்கு புதுதிஸ்வாதீன மில்லா திருந்திருத்தல் வேண்டும். அல்லது புத்தி மாறுபாடா யிருக்கவேண்டும். வேறு மாதிரி சிறுகுற்றங்கள்

செய்தால் தான் என்ன? தப்பிதம் செய்வது மானிடர்களது சுபாவமே. அப்படி நினைத்து சீர்திருத்துவது நமது கடமையென்று எண்ணுவது மேலாகுமே யொழிய இவ்வண்ணம் செய்வது நிலாக்கிய மாகு மென்று நான் எண்ண வில்லை. புருஷர்கள் என்றால் என்ன? தப்பிதம் செய்யாதவர்கள் என்றருத்தமோ? கணக்கில்லாது பெரிய குற்றங்களே யெல்லாம் அவர்களில் அநேகர் புரிகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் ஸ்திரீகள் எம்மாதிரி புருஷர்களோத் தண்டிக்கின்றார்கள்? இவ்விஷயத்தில் அவர்களே மேம்பாடையவர்க ளென்றே சொல்லவேண்டும். நமது நாட்டில் ஸ்திரீகளுக்கு மறுவிவாகம் கூடாதென்று சாஸ்திரத்தினால் தானே அல்லது வழக்கத்தினால்தானே ஏற்பட்டுவிட்டது. புருஷர்களினது நிலைமை அப்படியல்ல. இவர்கள் எத்தனை விவாகம் வேண்டுமென்றாலும் செய்துக்கொள்ளலாமென்று ஏற்பட்டிருக்கின்றது. வேறுவிவாகம் செய்துகொள்வதென்றால், ஒரு மனைவி வருத்தமுற்று வயிறு பசித்துத் தெருவிலிருக்க மற்றொரு மனைவியை விவாகம் செய்து கொள்வதென்று பொருளோ? கொண்டோர்கள் காப்பாற்றாவிடின் பெற்றோர்கள் காப்பாற்றவேண்டும். கொண்டோர்களாலும் கைவிடப்பெற்று பெற்றோர்களுமில்லாது வருந்துகின்ற ஸ்திரீகளினது நிலைமையை என்னென்று கூறுவது! அவர்களது வருத்தங்களோப்பற்றி நன்கு எழுதப் புகுங்கால் கை நடுங்குகின்றது. ஆகலான் அதை வரையாது விடுகின்றேன். ஆகையால் ஜனசார சீர்திருத்தக்காரர்களே, நீங்கள் சீர்திருத்த வேண்டுமென் றெண்ணி எடுத்துக்கொண்டு உழைத்துவருகின்ற விஷயங்களுடன் இதையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். இப்படி முயலுவது நன்மைக்கு முயல்வதே யாகுமென் றெண்ணுகிறேன். யாதொரு பிரயோஜனமும் ஸ்திரீகளுக்கில்லாத இறந்தவன் போலிருக்கப்பட்ட கணவர்களைத் திரும்பி ஸ்திரீகளுக்கு அடையச் செய்ய முடியாது போகுமேயானால் அதாவது ஸ்திரீகளுக்கு இவர்களைப் பயன்படும்படி செய்ய முடியாது போகுமேயாமாகில் உண்மையிலேயே கணவர்கள் இறந்துள்ள ஸ்திரீகளுக்கு (அதாவது விதவைகட்கு) வேறு விவாகம் செய்து வைப்பது சாத்தியமாகுமா? முதல் விஷயத்தில் கணவனிருக்கின்றான். அவன் புத்தியைச் சீர்படுத்தி அவனை நல்ல வழிக்குக் கொணர்ந்து தன் மனையியுடன் சேர்ந்திருக்கச் சொல்வதே. இரண்டாம் விஷயத்தில் வழக்கத்திற்கு விரோதமானதைச் செய்ய முயல்வது. சிலர் பின்புள்ளது கைகூடுவது எளிதென் றெண்ணக்கூடும். முன்னுள்ளதைச் செய்தால் பெருமை அதிகம். முதல் விஷயம் கஷ்டமில்லை. இரண்டாவது விஷயம் கஷ்டம். கஷ்டமில்லாததைச் செய்ய முடியாதவர்களுக்கோ கஷ்டமுள்ளதைச் செய்வது சாத்தியமாகும்? தக்க சாதனங்கள் இருக்கப் பெற்றனவும், அதைச் செய்வதால் நன்மையே விளையக்கூடியதாக இருக்கப் பெற்றதுமான இதுபோன்ற காரியங்களில் நம்மவர்கள் முயற்சி எடாதிருப்பது மிகவும் ஆச்சரியமே. இனியேனும் இதைக் கவனிக்கலாகாதா! (முற்றிற்று.)

S. N. மீனாக்ஷியம்மாள்.

மாமிச போஜன மறுப்பு.

முன்தொடர்ச்சி.

சிங்கம், புலி, நாய், பருந்து, கழுகு, பூனை முதலிய பிராணிகள் மாமிசத்தைக் கண்டதும் யாதொரு அருவெருப்பு மின்றி மிகுந்த அபே

கையுடன் அருந்துகின்றன வாகலின், அவைகளை மாமிச முண்ணும் ஜெந்துக்களென்று கூறலாம். மனிதனை மாமிசத்தைக் கண்டதும் அதில் வீசும் துர்வாசனையைச் சகிக்க முடியாதவனும், அந்த நாற்றத்தை யகற்ற வாசனைத் திரவியங்களையும், மசாலை வர்க்கங்களையும் உபயோகித் தும் இன்னும் எத்தனையோ விதமான காரியங்களைச்செய்து அருந்துகின் றவனுமிருப்பதால் அவனை 'மாமிச போஜனி' என்று கூறுவதியாங்க னம்? தன்னுடலிற் காணும், புண் முதலியவற்றி னின்றும் ஒழுகும் இரத்தம் சீழ் முதலியவற்றைக்கண்டு அருவெறுப்படையும் மனிதன் ஆடு ஆதியவற்றின் இரத்தத்தை எப்படி அருந்தத் துணிகின்றான்? ஸர்வ பாபங்களையும் பாவபரிகாரம் உண்டெனினும் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யும் மாபாவிகட்கு பிராயச்சித்தம் இல்லையென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்நானமிருக்கத் தூண்டிலிட்டு மீன் பிடிப்பது என்ன மதியோ? இரையைத்தேடி ஆசைப்பட்டு வந்த மீன் கழுத்தில் தூண்டில் அகப்பட்டுக்கொள்ள அது திக்கு முக்காடி இறக்கின்றது. இதைவிட நிஷ்டூரகரமான செயல் வேறியாதுளது? ஆகாரமிருக்கிறதென்று காட்டி அருகில் வந்தவுடன் கழுத்தை முறிப்பது என்ன பாதகச்செயல்! ஹே மூடா! நீ சாப்பிட்டுத் தொண்டிருக்கும்பொழுது உன் கழுத்தில் முள் ளொன்று அகப்பட்டுச்சென்றாலும் உன் அவயவங்களில் ஒன்றை வெட்டி விட்டாலும் நீ எவ்வளவு துன்பப்பட்டு அழுகின்றாய்? உன்னைப் போற்றுனே மந்தப் பிராணிகட்கு மிருக்குமெனும் விஷயம் உனக்கே னே தெரியவில்லை? ஊனைத் தின்றுதான ஊனைப் பெருக்கவேண்டும்! சாக பதார்த்தங்களிலுள்ள இனிமையும் உருசியும் ஸுவாசனையும் மாமி சத்திலுண்டா? எத்தனை மகான்கள் புலாலுண்ணலை யொழித்து சாக பதார்த்தங்களையே புசித்து பூர்ணயுள் பெற்று புண்ணிய புருஷர்களாய் சிரகால சுகிகளாய் வாழ்ந்திருக்கின்றார்கள். புலாலருந்தாதவர்கள் பல சாலியாயிருக்கவில்லையா? மனிதனுக்கு ஜீவகாருண்ணியம், பச்சாத்தாபம் முதலியன இல்லையேல் அவன் பிறந்து பயனென்ன? ஒரு பிராணியை வதை செய்யும்பொது அதன் உயிர் எவ்வாறு துடிக்கின்றது! எங்ஙனம் பதைக்கின்றது! எத்தனை தடவை மூர்ச்சையாகின்றது! எவ்வளவு கஷ் டப்படுகின்றது! இதைப்பார்க்கும் மனம் கரையுவில்லையா? உன்னையா வது உன்பிள்ளைகளையாவது தொன்றுவிட்டால் நீ எவ்வளவு துன்பப்பட மாட்டாய்? உலகில் கடவுள் படைத்த அனைத்தையும் நேசித்து வரவேண் டியதாயிருக்க அதற்கு விரோதமாக கடைக்கு முன்னைவிட சண்டாளர்கள் வேறியாருளார்? உனக்குப் பகுத்தறிவிருந்தும் பயனென்ன? எத்தனை யோ பிறவிகளில் நீ செய்த அளவற்ற புண்ணிய விசேஷத்தால் கிடைக் கப்பெற்ற அரிதினு மரிதான பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைக் கொண்டு கடைத்தேறும் வழியைக் கடைபிடித்து இப்பிறவியினால் அடையவேண்டிய மோன்பத்தைப் பெற வழிதேடாது மகா பாதகரமான பாவச் செயல்களைப் புரியும் உன்னைவிட மூடனுடன் வேறு யாருண்டு? "தன்னுயிர்போல் மன்னுயிரை நினை"யாது ஒழுகுதல் என்ன பேதமை?

தன்னான் பெருக்கற்குத் தான்பிறிது ணபா
[illegible]

இனியேனும் இவ்வநுசிதமான வஸ்துவை புசியா தொழிப்பதற்குட னே முயற்சிக்கக் கடவாய். ஒவ்வோர் சந்தர்ப்பங்களில் மாத்திரம், விரத காலமென்றும் அந்நான்களில் மட்டும் மாமிஸ் போஜனம் கூடாதென்

றும், வெகு சுலபமாயிழுத்துவிட்டுக் குளித்து முழுகி முடித்திருந்த மந்தி ரத்தை வெளியிட்டுச் சொல்லி உருஜுபித்து பட்டினி கிடந்துண்ணும் ஒரு தினத்திலுல் தமக்கு ஈஸ்வராநுக்கிரகம் கிடைத்து கோரிய காரி யம் இலட்யூதின்றி முற்றுந் தவருது முடிவுறுமென வெண்ணிச்செ ய்யு மாந்தர்கள், கொலை பாதகத்துக் கேதுவும் புண்ணிய விருக்ஷத் தைக் கொல்லும் விஷமுமாயுள்ள மாமிஸ போஜனத்தை தீங்கினுக் தீங்கென வெண்ணி அறவே விட்டொழித்து விட்டால் எவ்வளவு பெரும் புண்ணியத்தை அடைவார்கள் அடையவே தினதயாளர் அன்பு கூர்வார். அன்பு மிகுதியாக தயை கடாக்ஷிக்கும். தயை மேலிட திருபு அதிகரிக்கும். கிருபை வளரவே, அருள் சுரக்கும். அருளீர் சுரந் து செழிக்க, அண்ணலின் திருவடிக்கேகும் அற்புதங்க வழி கிடைக்கும். அவ்வழியே சென்று சேரின், அன்னவரின் தரிசனம் கண்டு மகிழ்ந்து ஆனந்தப் பேரின்ப வீடு பெற்று, அழிவில்லாமல் எஞ்ஞான்றும் வாழ் வாங்குவாழ்ந்துவிளங்கலாம். மாமிஸத்தைவாங்குவோரின்றேல், அஃதை விற்பா ரெவரு மில்லை யாதலால், கொலைத் தொழிலுக் கேதுவாகிய மாமிஸ முண்ணலை நீக்கி நிற்பதே நியாயமான நிறையாகும். பயனில் லாத தன் சரீரத்தின் மாமிலத்தை வளர்ப்பதின் பொருட்டு மற்றொரு ஜீவ ஜெந்துவைக் கொன்று, அதன் மாமிஸத்தை உண்ண விரும்புவது, அறிவில்லாத மூடர் மூடரின் தன்மையேயாம். கொலை செய்தற் கேதுவா கிய, மாமிஸ போஜன முண்பவரின் முதுகின்மேல், யமன் எப்பொழுதுங் குடியிருந்து சமயம் வாய்க்கும்போது, மாய்த்துத் தள்ளி விடுவான். ஒரு பிராணி வதை படும்போது கண்ணாரக் கண்டும் அதை மறுக்காமல் வெறு மனிருந்தால், முன் செய்த புண்ணியமும் போய், கொலை பாதகத்தி லும் கொடியதாகி, பாவப் பெட்டியைச் சுமந்து நரகத்தில் வீழ்ந்து வாடித் தவிக்க நேருவதாகும். "கோ" பந்தன முதலிய யாகஞ் செய்வ திலும், தேவதா பிரார்த்தனையிலும், ஜீவ வதை செய்வது கொலை யுண் டென்று சுருதிகளில் சொல்லப்பட்டிருப்பினும், இக்கால்த்து வேதியரில் பலரும் நிஷேதிக்கிறபடியாலும், புலாலுண்ணலை நீக்க முடியாதவர்களை யாகாதிகளில் புகுத்துமாறு கூறியதே யன்றி வேறெந்தற்கு மன்றுகலாணும் எக்காரணங் கொண்டும், கொலைசெய்யாமையும் மாமிஸமுண்ணுமையுமே புண்ணிய புருஷருக் கழகாகும். இஃதின்றி, ஜீவவதை செய்தும், புலா லுணவும், தம் தொந்தியை நிரப்பி, திரேகங் கொழுப்படைத்து, மதோ ன்மஸ்தராகி, மதப்பித்தந் தலைக்கேறி கிருகிரு வென்று சுழலவும், அத்துடன் சமஸ்புரிந்து, வீரவெற்றி பெறுது தோற்றுப்போய் மாயை வசத்தாகி மாயைக் கட்டளையிட அதற்குக் குற்றேவல் புரிந்தும், மாயை தூண்டிவிட விரகதாப சோகத்தால் தலை தடுமாறித் திரிந்தும் மாயப் பிசாச வழி மனம் சொக்கி மகிதலத்துள்ள அன்னிய மாதரைத் தேடி யலைந்தும், சிதனையால் வரும் பீதாஸ்தத்துக் குள்ளாகி பார்வையிற் பாவங்கள் மேலிட்டு மீளா நரகத்திற் காளாகும் காரணங் கொண்டு மாமிஸ போஜன முண்பது கூடாதென அன்றோர் மறுத்துச் சொல்லி யிருப்பதால் இனியேனும் இக்கொடிய வழக்கத்தையகற்றி ஜீவகாருண்ய சீலர்களாய் இலங்கிடுதற்கு வழிதேடக் கடவீர்களாக. (முற்றிற்று.)

தஞ்சைபுரிநேசன்.

பெண்கல்விக்குள்ள பிணி.

மூன் தொடர்ச்சி.

ஒழுங்கீனமென்றது யாதெனில் கணவன் தன்பால் அதிக அன்புடைத்தாயிருப்பதாக இவ்விளமைப் பருவமுள்ள மனைவி நினைந்து அதன் வழிமுதியோரிடம் அசட்டை பாராட்ட எளிதாக மார்க்கமுண்டாதலே. அது பொருமல் அப்பெரியோர் இவர்களே நிந்திக்கவும் இவர்கள் கல்விக்குத் தடைசெய்யவும் இதன் வழி குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து ஆடவன் மனம் நோகவும் இடமேற்படல் இயல்பே. கல்விமான்களாகிய நம் சோதரர்கள் நந்தேச மாதர்கள் அடக்கம், பொறை, ஒழுக்கம் இவைகளில் மூற்பட்டு பிரகாசிக்கவேண்டியதே மற்றெல்லாக் கல்விகளிலும் முக்கியமான தென்பதை ஆட்சேபிக்க மாட்டார்களென்றே நம்புகின்றோம். புருஷர்களும் அன்பை அகத்தடக்கி நயபயத்துடன் இப்பாலிய மனைவிகளே நடத்தி இவர்களேக் குணவதிகளாக்கத் தக்க வயதுவராத பாடசாலே மாணாக்கர்களாகவே பெரும்பாலும் அமைந்திருப்பதும் பிரதான கோணல்களுள் ஒன்றென்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் மறப்பதற்கில்லே. இவைகளுமன்றி தரித்திரத்தியும் போதியபலனும் உண்டாகாமைக்குக் காரணம் யென்னவன பருவத்தின் கூத்தே. பொருள் தேடிக் குடும்பத்தை ரக்ஷிக்கக் கடமைப்பட்ட இளைஞர்களே பாலிய மனைவி வீட்டிற்கு வந்தால் ரிசல்ட் (Result) பார்க்க வேண்டாதவர்களாய்விடல் பிரத்யக்ஷ பிரமாணமாதலின், பொருள் தேடும் பொறுப்புமில்லாத இப்பெண்கட்குக் கணவர்களது ஸந்தானத்தில் எக்கே கல்வியிற்கவலே சித்திக்கக்கூடும்! இக்காரணங்களால் பெண்கட்கு 14 வயது நிரம்புமளவும் இன்றியமையாதன வாகிய இருவகைப் பயிற்சிகளும் (கல்வி, குடும்ப முறைமை) பிறந்தவீட்டிலிருந்தே பெற்றோர்களது முழுக்கவனமுள்ள மேற்பார்வையாலும் ஊக்கத்தாலும் பாலாரிஷ்டங்களின்றி விர்த்தியடைந்து சிறப்பிக்கவேண்டும். புக்ககத்தில் சவுகரியக்குறைவுகள் அதிகமில்லாத பெண்மணிகளின் வியாபாரம் இதுவாஞல் அவைகளுமுடைய பேதையர்களின் சவுகரிய சாதனங்களேப்பற்றி விசாரணையும் வேண்டுமோ? இளமையில் சிலகாலம் பாடசாலேக் கிவர்களேயனுப்பியதற்காக இவர்கள் பெற்றோர்களேப் புருஷன் வீட்டார் நிந்திப்பதொரு பக்கமும் தன்னெத்த பெண்கள் பலர்தன்னைவிடக் கல்வியிற் தேர்ந்திருப்பதைக் காணும்போ துண்டாகும் வெட்கமொருபக்கமும் பாதிப்பதுமன்றித் தாங்கள் குடும்பவேலைகளேயே செய்வதால் ஏதோ பெரிய அலௌகரவம் இருப்பதாக எண்ணும் வண்ணம், தற்காலத்தில் அநுபவக்குறைவும் ஆராய்ச்சியுமில்லாத சிற்சிலர் தம் மனைவிகளேத்தாம் அருமை பாராட்டுவதற் கறிகுறியாக வீட்டு வேலைகள் எதிலும் பிரவேசிக்க வொட்டாமற் றடுத்து மேல் நாட்டு மாதர்கள் நம் தேசத்தில் வந்து எவ்வாறு கணவர்களுடன் சுகசாலிகளாய் வாழ்கின்றனரோ அதே நிதானத்தில் இருப்பது நாகரிகமென்றும் கண்ணியமென்றும் மதித்து நாடகம் புரிவதும் சமயம் வாய்த்தபோது வெளிப்பட எடுத்துரைப்பதும் நாம் செய்த தூர்ப்பாக்கியந்தான். எவர்களேக் கண்டு மேற்கண்ட நம் சோதரர்கள் தாமும் அவ்விதமாக உருமாற ஆசைப்படுகின்றனரோ அவ்வன்னியர் அவர்கள் சொந்த தேசத்தில் நடக்கும் விசித்திரனையும். ஆடவனேப் போலவே பெண்பாலும் நாள் முழுதும் ஓடியலேந்து பொருள் தேடிக்குடும்பப் பாதுகாப்புஞ்செய்து நிர்வகிப்பது இயல்பென்பதையும் அப்பெண்கட்கு எடுத்துரைப்பா ரின்மையால் தங்கள் கல்வி யபிவிர்த்திக்குத் தடையாக விருந்த இக்குடும்ப வேலையைச் செய்வது மிகக் குறைவென்று மனந்தளர்வதும், இதைக்கொண்டே பெண்கல்வி கூடாதென மருண்டுரைப்பார் சிலரும் கல்வியிற்கவனமுள்ள பெண்கள் குடும்ப வேலைகட்குப் பயன்பட மாட்டார்களென்று ஆதியில் கற்ற அற்ப கல்வியின் மேலும் அபவாத மேற்படுத்திக் குதர்க்கஞ்செய்யத் தலேப்படுகின்றனர். இத்தகைய அபவாதங்கட்கும் தப்புக் கொள்கைகட்கும் இடமுண்டாகாத வண்ணம் நம்மாதர்கள் கணவன் வீட்டிற்குச் செல்லுமுன்பே கல்வி யபிவிர்த்திக்குக் கூடியமட்டில் அவகாசமிருக்கும்படி நம் கனவான்கள் தயைகூர்ந்து பருவம் வந்ததும் மனைவிகளாக்கும் அயுக்த வழக்கத்தை அடியோடு பரிகரித்து வருதலே பெண்கல்விக் குண்டாம் பிணிக்குப் பிரதான ஔஷதமாகும். அவர்கட்கு அவகாசம் கொடாமல் படிப்பது அவசியம் அவசியமென ஓயாமல் எடுத்துரைத்து வருவதினுல் மட்டில் யாது பயன் உண்டாகக்கூடுமென்பது ஆலோசிக்கத் தக்கதே.

முற்றிற்று.

அசலாம்பிகையம்மாள்.

தமிழ் பாஷை.

முன் தொடர்ச்சி.

". தமிழ் என்பது "தென்மொழி" என்பதன் திரிபாயிருக்கலாம் என ஊகிப்பர். ரெவரண்ட் டாக்டர் G. U. போப்.

[ஒரே நாட்டில் வடக்கிலும் தெற்கிலும் வழங்கி வந்த காரணத்தால் ஆரியமும் தமிழும் முறையே வடமொழி, தென்மொழி என்னப்பட்டன. ஆதலின், தமிழ் ஓர் தென்மொழியேயன்றி "தேன்மொழி" என்பதன் சிதைவு எனக்கூறல் எவ்வாறு பொருந்தும்?]

6, வேறு சிலர் தமிழ் என்பது நமி என்னும் அடியாகப் பிறந்து முகரமெய்யை எழுத்துப் பேறுப்பெற்று தமிழ் என்றுயிற் றென்றும், தமி என்னும் பதத்திற்கு ஒப்பற்றது எனப் பொருள் என்றும், அது ஆகுபெயராய் ஒப்பற்ற பாஷை எனப் பொருள் படும் என்றும் கூறுவர்.

[" இஃதுண்மையாயின்,

இரு மொழிக்கும் கண்ணுதலார் நூற்கு முவர்-இயல் வாய்ப்ப
இரு மொழியும் வழிப் படுத்தார் முனி வேந்தர்--இசை பரப்பும்
இரு மொழியும் ஆன்றோரே தழீஇனர் என்றுல் இவ்
இரு மொழியும் நிகர் என்னும் இதற் கையம் உனேயோ?"

என்ற சிவஞான யோகிசுவரர் வாக்கு அங்கீகரிக்கத் தக்கதோ எனின் அம்மகான் வாக்கு சிறிதும் பொய்யில்லேயென்றே சொல்லலாம். ஏனெனில், வடமொழிக்கும் தென்மொழிக்கும் உள்ள சம்மந்தங்கள் சுருங்கெடுத்துக் காட்டப்பட்ட மட்டில் பொருந்த முடையனவேயாம். ஆயினும், இவர் ஒப்பிடாது விட்ட வேறு சில விஷயங்களேக் கொண்டு வடமொழியினும் தென்மொழி சிறந்ததென்னலாம். எங்ஙனமெனில், வடமொழியில் இல்லாப்புணர்ச்சி இலக்கணங்களும் சொல்லிலக்கணங்களும் செய்யுள் இலக்கணங்களும் ஏனைய பிறவும் ஆதி இலக்கணமாகிய அகத்தியத்

திலேயே கூறப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது. தவிரவும், தென் மொழிக்குக் கடவுளார் சம்பந்தமும் திருத்தொண்டர்கள் சம்பந்தமும் ஏற்பட்டுள்ளதுபோல் வடமொழிக்குக்கிடையா.]

7. தமிழ் என்பதற்கு அறியாமை நீக்குவதுஎன்று பொருள் எனச் சாதிக்கின்றார் ஒரு சாரார்.

8. பின்னும் சிலர் "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்." என்ற பிங்கலந்தை சூத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு "தமிழ்" என்பதற்கு இனிமை என்று பொருள் என்றும், அது பண்பாகு பெயராய் இனிய தமிழ் பாஷையை உணர்த்தும் என்றும் கூறுவர்.

[தமிழ் இனிமைப்பொருளில் வருதற் குதாரணம் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், புறநானூறு, பெருங்கதை முதலியவற்றிற் காணலாகும்.]

9. இன்னும் சிலர் தமிழ் என்பதை தமி+ழ் எனப்பிரித்து தனித்த (அதாவது வேற்றுமொழிகட்கில்லாத ழகரத்தை தனக்கேயுடைய பாஷை எனப் பொருள் கூறுகிறார்கள்.

[தமிழைத் தவிர வேறு எப்பாஷைக்கும் ழகரம் கிடையாதன்றோ?]

10. முதுநூலாசிரியர் பாணினீயம் சம்பந்தப்பட்டமட்டில் தமிழ் என்னும் பதத்தைப்பற்றிய வரலாறு கூறினுஞ்சுல்லாதலின் தமிழ் காரணப் பெயராகாது. அப்பாஷையை உணர்த்தும் ஓர் இடுகுறிப்பெயரேயாகும் என்று துணிவாரும் உண்டு.

["பின்னையோர் கூறுவன யாவும் உண்மையாய் இருந்திருப்பினும் அல்லது அவற்றுள் ஒன்றேனும் ஏற்றதாயிருந்திருப்பினும் முதுநூலாசிரியர் கூறுது விட்டொழிவரோ?" என்பது இவர்கள் கட்சி.]

இது சிலர் கூறும் வண்ணம் காரணப் பெயரே யாயினு மாகுக. அல்லது வேறு சிலர் என்னும் வண்ணம் இடுகுறிப் பெயரே யாயினுமாகுக. தமிழ் என்னும் பதம் திராவிடம் என்பதினின்றுவது அல்லதுவேறு எவ்வடமொழியினின்றுவது பிறக்கவே இல்லை. இஃதோர் இனியபாஷை என்பதற்கும், ஒப்பற்றபாஷை என்பதற்கும், ழகரத்தைத் தனக்கேயுடைய பாஷை என்பதற்கும், அறியாமையை நீக்கக்கூடிய ஒரு பாஷை என்பதற்கும் சிறிதும் ஐயமின்று. [இன்னும் வரும்.]

M. கோபாலகிருஷ்ண ஐயர்.
அக்கிராஸனாதிபதி மாணவர் செந்தமிழ்ச் சங்கம், மதுரை.

நல்லுரை.

இளமையிலேயே விவேகமுஞ் சிருஷ்டானுபூதியில் இயல்பாகவே பிரமத்துடன் நடப்பதற்கு அது மிகவும் உதவியாயிருக்கும். பிரதமத்தில் நடந்து கொள்ளத் தொடங்கிய நன்னடக்கையை என்றுந் தவறவிடாமல் சாதித்து வந்தால் அது நம்மை கடவுளுடைய கிருபா கடாக்ஷத்திற்கு உரியவர்களாகி உலகோர் நம்மிடம் பிரீதி கொள்ளும்படி செய்து கடைசியில் நமக்குள்ளாகும் ஸர்வ மங்களங்களும் அதுவே காரணமாயிருந்து தரும்.

இவ்வுலகத்தில் மெய்யான செல்வங் கிடையாது. உலகபாசங்களில் உழலுங் காலமெல்லாம் இவைகளைக் கொண்டு நம்மைக் கடவுள் பரிசோதித்து வருகிறார் என்பதை மறந்துவிடக்கூடாது.

புருஷனும் ஸ்திரீயும் விவாகத்தால் ஒருமித்து வாழவும், ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவும், குழந்தைகளுண்டானால் அவர்களுக்கு நல்வித்தை கற்பிக்க இருவரும் துணைபடவும் கடவுளே விதித்திருக்கின்றாரென்னு மிவ்வுண்மையை யறியாது ஒழுகும் ஸ்திரீ புமான்கள் விவேகிகளுடைய பரிதாபத்திற் குரியவரே யாவர்.

விவாக விஷயத்திலே ஒரு பிசகு வந்தால் அது உலக செல்வத்தினாசையை யெல்லாமழிப்பது மல்லாமல், பின்னும் மஹா கெடுதியாயிருப்பதென்னெனில் சித்திய செல்வத்தையும் கூடக் கெடுத்துவிடும். இதனால் மனிதரும் கெட்டு மிகவும் இச்சிக்கத்தக்கதாயிருக்கும் இல்வாழ்க்கையின் மீதும் வெறுப்புண்டாகின்றது. ஆகலான் பதராத காரியஞ் சிதராதென்பது மனதில் வைத்து மிகவும் ஜாக்ரதையாய்ச் செய்வன திருத்தச் செய்யவேண்டும்.

உலகத்தில் மஹா நன்மையான காரியங்களைக் கெட்ட காரியங்களாகக் காட்டுதலும், மஹா யோக்கியமான மனிதர்கள் பேரில் நிந்தைகள் சொல்லுவதுமுண்டு. அன்றியும் பிப்படியெல்லாம் அந்தஸ்துடையவர்களையுங் குறித்துப் பேசுகிறார்களேயொழிய ஒருவரை மாத்திரம் குறித்தல்ல. இந்த விஷப்பேச்சு பரிசுத்தரை மூதலர்ய்க் குற்றவாளியாக்கினபோதிலும், விவேகிகள் அதை யதற்குத் தகுந்த நியாயப்படி கண்டிப்பார்கள். நல்லவர்களுக்கு நன்மையே பலன். இந்தத் திருப்தியுள்ளவர்கள் மூடர்கள் சொல்லுக்குச் செவிகொடாமல் மனச் சமாதானத்தையே தேடுவார்கள்.

யோக்கியமும் தனமும் ஒன்றுக்கொன்றிருப்பது பெரும்பாலும் அரிதாயிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு துரதிர்ஷ்டத்தால் தனமில்லாவிட்டாலும் அவளை யலங்கரிக்க வேண்டிய குணதிஷயங்களுக்குக் குறைவொன்றுமில்லாதிருக்கும் பக்ஷத்தில் அவளுக்கு ஸத்கீர்த்தியை வருவிப்பதற்கு அதுவே போதுமானது.

கடவுள் என்னை இக்கதியில் விட்டனரே என்றேசுவார் ஒரு சாரார். தெய்வமே உன் கோயிலிடியாதா வென்பார் மற்றொரு சாரார். இவைகளெல்லாம் அறியாமையின் காரணங்கொண்டு பிதற்றிய மொழிகளேயாகும். நம்மை நேசிக்கும் நமது கடவுளானவர் நமது சந்தோஷத்தோடு கொஞ்சம் விசனத்தைக் கலக்கச் சித்தமானால் அதையும் நமது நன்மைக்காகவே யனுப்பியிருக்கின்றாரென்பதை யுணராது கடவுளைப் பலவாறாகநொந்து கொள்ளுவது எவ்வளவு பேதமை? இருந்த ஒரு நன்மையையவர் நீக்கியது மற்றொன்றை யளிப்பதற்காகவே யிருக்கலாம். இதபரமிரண்டிலும் நம்மைப்பிரியாதிருந்து நம்மீது பேரன்பு வைத்து சதாகாலமும் நன்மையே செய்து எக்காலத்திலு முற்ற துணையாயிருந்துவருகிறவர் கடவுளன்றி மற்றியாரே யுளார்? நிமிஷ அளவே நமக்கிருக்கும் அற்ப சஞ்சலமானது அதிக பெரிதாகிய நித்தியானந்த சந்தோஷத்திற்கு நம்மை வழிப்படுத்தி அதை யடைவதற்கு வேண்டிய குணங்களே நமக்குண்டாகி சிறப்பை யளிப்பதற்குக் காரணமாயிருக்கின்றது. அவனவன்

தனக்குக் கடவுள் அமைத்திருக்கும் நிலையும் ஜீவனமும் இவ்வளவே யென்றெண்ணி மனச் சமாதான மடைவதுடன் அவ்வமைப்புக்கு மிஞ்சி நம்மை மயக்கு மிச்சைகளுக்கு இடங் கொடாமல் எம் மாத்திரம் எச்சரிக்கையா யிருப்போமோ அம்மாத்திரத்துக்கு மறுமையில் நமக்கு அதிக பலனுண்டென்றும் அறிந்துகொள்ள வேண்டியது. தன்னந்தனியனுக்கு எவ்வளவுஞ் சம்மந்தப்படாமல் அன்னியமாயிருக்கும் காரியங்களிற் புத்தியை எக்கேரமும் செலுத்திக் கொண்டிருப்பவன் ஒருக்காலும் சுகப்படமாட்டான். லோக மேன்பாட்டைப் பகுத்தறிய மனிதன் புத்தியாற் கூடாதிருப்பதுபோல இனிவரத் தரும் பொல்லாத காலத்தைக் காத்துக்கொள்ள அவன் விவேகத்தால் எவ்வளவும் பிரயாசைப்பட்டாலும் முடியாது. ஆகையால் திரவியத்தின்பேரில் ஒரு நம்பிக்கையும் வையாமல் அதை நமக்குத் தந்தருளிய ஜகதீசனுடைய பொக்கிஷக்காரனாக மாத்திரம் நம்மை யெண்ணி நடந்து கொள்வது சர்வோத்தமம். நித்திய செல்வமாகிய மோக்ஷமெனு மக்கரையை துன்பமாகிய சமுத்திரத்தை நீந்தியடைய வேண்டுமென்று நிருமித்திருக்கும் பரம கடவுளின் சித்தத்திற்கு நாம் கூடியமட்டும் பிரயாசைப்பட்டு வணங்கி நடக்கக் கடவோம்.

பத்திராதிபர்.

நமது விஞ்ஞாபனம்.

அன்பிற்சிறந்த ஆப்த நண்பர்காள்!

உங்களனைவருக்கு மெமது பக்ஷமுள்ள வந்தனம். நமது பிரஜாபந்துகூடலனின் பிரதம ஸம்வத்ஸரம் ஸம்பூர்ணமாகி நவ வரு- முதித்து முதல் பிராயம் முடிவடைந்து இரண்டாவது வயது பிறக்கப் போகும் காலம் நெருங்கி வருகின்றது. சர்வ லோக ரக்ஷகனுகிய ஜகதீசனது ஸம்பூர்ணனுக் நிரகத்தாலும், ஆன்றோர்களின் மங்களாசீர்வாத மஹிமையினாலும், ஸ்வதேச ஹித சிந்தகர்களான நமது சந்தா நேயர்கள் கொண்டுள்ள பரிபூரணபிமானத்தாலும் இப்பத்திரிகை யாதொரு தடையு மின்றி நடை பெற்றிலங்கி வருகின்ற தென்பதும், நமது கையொப்ப நேயர்களுடைய ஆதரவினால் நமது சிற்றறிவும் சிறு முயற்சியும் பயனடைந்தனவென்பதும்; "பலதுளி பெருவெள்ளம்" என்பதற் கிணங்க நமது சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் முன்பணமாகச் செலுத்தும் மிகவும் சொற்ப தொகையாகிய இரண்டு ரூபாயானது நமது அனுகூலனே உலகெலாமுலாவி ஜ்வலிக்கும்படி செய்கிற தென்பதும் நாம் சொல்லாமலே அமையும்.

குறித்த காலங்களில் வண்டிகள் வந்து சேரும்படி ரெயில்வே கம்பேனியார் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருந்தும் சிற்சில தருணங்களில் தவறி விடுவது போல் இவ்வருடத்தில் அதிக ஜாக்கிரதையா யிருந்தும் சில அசந்தர்ப்பங்களாலும் அப்போதைக் கப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் சிற் சில காரணங்களாலும் இப் பத்திரிகையைக் குறிப்பிட்ட தினம் தவறியே வெளியிடும்படியாக நேர்ந்துவிட்டது பற்றி மிகவும் வியசனிக்கின்றோமாயினும், இனிமேல் இப் பத்திரிகையைத் தாமதப்படாமல் உடனுக்குடன் குறிப்பிட்ட தினத்திலேயே [அதாவது பிரதி மாதமும் முதல் தேதியிலேயே) பிரசுரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதால் மறு மதி முதலாய் சரியான காலத்தில் வெளிப்பட்டு

எல்லோருக்கும் ஒரே நாளில் அனுப்பப்படுமாகலானும், கலாசாலையில் கல்வி பயிலும் இளைஞர்கள் ஒரு நாள் மாலை பாடம் ஒப்புவியா விடில் நாளை முதல் செவ்வனே கற்கின்றோமென்று சொல்லும் வார்த்தையை நிலாக்கியமான மொழி யென்று ஆசிரியர்கள் ஆதரித்துப் பிரீதி பாராட்டுவது போலவும். சிறு குழந்தைகள் நிற்பதற்கு முயன்றும் முடியாமல் பல தடவைகளில் தவறி கீழே விழுவது போலவும், இவ்வருடம் நமக்கு இடையிடையே யுண்டான சரீர அசௌக்கியத்தால் நம் நண்பர்கள் எதிர்பார்த்தபடி சிலாக்கியமான பல அரிய விஷயங்களை எழுதப் படாத குறையை நிவர்த்தி செய்து இரண்டாவது ஸம்வத்ஸரமுதல் சர்வ ஜனங்களுக்கும் சந்தோஷத்தைத் தரக்கூடியதாயுள்ள் ஸ்வாரஸ்யமான விஷயங்களை அதிமேன்மையாய் எழுதிவருவோமாகலானும் சாந்தகுண பூஷண கலாவிநோதர்களான நமது மித்திரர்களுக்கு இப்பத்திரிகையின் மீதுள்ள இடையறாத அபிமானம் இன்னும் அதிகமாமென்பது திண்ணம். அனைவருடைய முயற்சியும் ஒன்றுகூடினால் இது அபிவிர்த்தியடைந்து சிலாக்கியமான விஷயங்கள் நிறம்பிப் பிரகாசிக்கத் தடையென்ன?

நிச்சயமான புத்தியற்ற சிலர் ஒரு வருஷம் பத்திரிகையை வாங்குவதும் மறு வருஷம் அதை நிறுத்திவிடுகிறதுமா யிருக்கின்றனர். வேறு சிலர் எவராவது பத்திரிகையை வாங்கினால் அவற்றைப் படித்துவிடலாமென்று நினைக்கின்றனர். பின்னும் சிலர் 'பத்திரிகைகளென்றால் நம் நிரூபர் திலகமாகிய 'தஞ்சைபுரிநேசர்' எழுதியிருக்கும் "இந்தியர்களின் தூக்கமும் இந்தியப் பத்திரிகைகளின் நிலைமையும்" எனும் வியாசத்திற் கண்டிருக்கின்றபடி குறைகூறுவோரா யிருக்கின்றனர். இங்ஙன மெல்லாமில்லாமல் பத்திரிகாபிவிர்த்தியைக் கோறும் உத்தம சிலர்கள் நமது பிரஜாபந்துகூடலன் பத்திரிகைக்குச் சந்தாநேயர்களாய்ச் சேர்ந்ததும் நமது பாக்கியவசமேயாம்.

'குடித்தன துரைத்தன சம்மந்தமான அநேக அரியவிஷயங்களும்,' நீதி நியாய சாஸ்திர சம்பிரதாய விஷயங்களும், மனோற்சாகத்தையுண்டு பண்ணும்வேடிக்கையான பலவிஷயங்களும்' அடங்கியதாய்'சொல்நோக்கம், நடை நோக்கம், பொருள் நோக்கம் முதலியவாவும், அதிக மேம்பாடுள்ளனவாய்' பத்திரிகைகளுக்கு வேண்டிய சொற்சுவை, பொருட்சுவை முதலிய யாவும் பொதிந்துள்ளதாய்' மிருக்கின்ற 'பற்பல வரிய நூதன விஷயங்களைத் தன் னங்கத்திற் றெரிவித்துக்கொண்டு வெளிப்போந்து' தேசமெலாமுலாவி 'பெயருக்கேற்றபடியே வினங்கிப்' 'பெரும்பயன் அளித்து' எல்லோர் பல்லோராலும் கொண்டாடப்பட்டு ஸத்கீர்த்திபெற்றுப் பேருபகாரியாய் ஜ்வலித்துவரும் "பிரஜாபந்துகூடலன்" என்னும் உத்தமமான பத்திரிகையைப் பிரகடித்து வரும் பத்திராதிரியரின் முயற்சியை சந்தாநேயர்கள் முன்னுக்குக் கொண்டு வந்து பயன்படச் செய்து பரோபகாரிகளாய்ப் பிரகாசிப்பதற்கு அத்தியாவஸ்யகரமான பிரயத்தினங்களைப்புரிந்து பிரதிஸம்வத்ஸரமும் நிருத்த சொற்பதொகையான ரூபாய் இரண்டையும் முன்பணமாகச் செலுத்தி அவ்வருட முழுவதும் ஆனந்தித்து வருவது மிகவும் சிரேயஸ்கரமா யிருக்கு மாகலான் இவற்றை அத்தியந்த மகிழ்வுடன் அங்கீகரித்து "அனுகூலனே" அபிமானித்து அபிவிர்த்தி யடையச்செய்யவேண்டியது பெருமைதங்கிய நமது நேயர்களின் கடமை.

இந்த ஸத்கருமம் ஸர்வ தர்மங்களிலும் சிரேஷ்டதரமானது. அதே நன்மைகளை யடைவதற்கேதுவாகியும், நவீனசாரங்கள் தோன்றி

நாளுவிதத்திலும் நம்மவர்கட்கு சஞ்சலத்தை விளைவிப்பதாயுமுள்ள இக் காலத்தில் அன்னிய அரசாங்கத்தார்களுக்கு உட்பட்ட நமக்குப் பத்திரி ஙகளைப் போல் உற்றதுணைப் பிறிதொன்றுமில்லை. அவற்றில் புத்தக ரூபமாகப் பிரகடனமாகும் பத்திரிகைகளே யாதரிப்பின் தற்காலத்தில் நா ம சன்மார்க்கத்தை யனுசரித்து பல கலங்களைப் பெருவதுடன் கூடி சஞ் சிகைகளானது வருஷமுடிவில் ஒரு புத்தகமாகப் பைண்டாய்விடுவதால் நமக்குப் பின் வரப்போகிறவர்களுக்கும் பிரயோஜனப்படத் தக்கதாயும் எக்காலத்திலும் கெட்டுப் போகாமல் உதவக்கூடியதாயு மிருப்பதுபற்றி இவற்றை ஒவ்வொருவரும் அபிமானிக்கவேண்டியது அவஸியகர மென் பதைச் செவ்வனே யுணர்ந்திருக்கும் நமது சந்தா நேயர்கள் இத்தகைய உத்திருஷ்டமான கருமங்களை அபிவிர்த்திக்கச் செய்வதில் தங்கள் மன தைப் பிரவர்த்தித்துத் தாமும் அவைகளை யாதரித்து அகமிக மகிழ்வுறுத தற்குச் சிறிதும் பின்னடைய மாட்டார்களென்றே நமபுகின்றோம்.

ஆதிமத்தியாந்த ரஹிதனும், அகில லோக நாயகனும் சித்தியானந் தபூரிதப் பிரகாசனும் விளங்கும் சர்வாந்தர்யாமியாகிய ஜகதீசன் நாகரீ கம், விவேகம், ஈஸ்வரபக்தி, தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபி மானம், பத்திரிகாபிமானம் பூண்ட சன்மார்க்கப் பிரவர்த்தகர்களான ந மது சந்தா நேயர்களின் ஹிருதயத்தில் ரசம் பொருந்திய நல்விஷயங்க ளடங்கி இச் சொற்ப காலத்திற்குள் பெரும் பிரக்யாதி பெற்று ஜ்வலித் துவரும் பிரஜாபூகூலன் பத்திரிகையின் மீதுள்ள பரிபூரணமான அ பிமானத்தை என்றும் நிலை நாட்டி என்னாளும் ஆதரித்து பிரஜாபூகூல னுக்கு அனுகூலம் செய்யும் சர்வானுகூலர் களென் றுரைக்கும் வர் ணம் விளங்கி இகபர மிரண்டிலு மின்புறுமாறு அனுக்கிரஹிக்கும் படியா கவும், இப்பத்திரிகையைத் தங்கள் ஸ்வந்த பத்திரிகையென்று பிரீதி பா ராட்டி யாதரித்து வரும் நேயர்களின் அபிமானம் மற்றோரிடம் செல்லா மல் இப்பத்திரிகையிலேயே நிலைத்திருக்கும்படி செய்யுமாறும், சர்வலோ க சரண்யராகிய ஜகதீசனைச் சார்வதா காலமும் நித்ய பிரார்த்தனை செய் து வருவது மன்றி நமது கோரிக்கையை ஈடேற்றுமாறு அன்பிற்சிறந் த நம் நண்பர்களையும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சென்ற வருடத்தில் நமது பத்திரிகையின் சந்தாதாரர்கட்கு ஜெய விஜயன் எனும் கதைப் புத்தகமொன்றை இனாமாயனுப்பி வைத்தோம். தற்காலம் கடைபெற்று வரும் மாதாந்திரத் தமிழ் பத்திரிகைகளின் சந் தாதாரர்களுக்கு புத்தகங்கள் இனாமாயனுப்பும் வழக்கமில்லை. அங்ஙன மிருந்தும் நமது நேயர்களின் மனதைச் சந்தோஷப் படுத்துவதிலேயே கவனத்தைச் செலுத்திவரும்காம்அவர்கட்கென்று பிரயாசைப்பட்டு இய ற்றி யனுப்பிய புத்தகத்தைப் பற்றி நமது சகோதர பத்திராதிபர்களும் மற்றவர்களும் ஸ்லாகித் தெழுதி யிருப்பதோடு நமது கையொப்ப நேயர் கட்கும் நிர்ப்பிணை விளைத்ததையுமறிய மிகவும் சந்தோஷிக்கின்றோம். ஆயினும் கதையின் தொடர்பு மாத்திரம் திருப்திகரமாயிருக்குமென்றும் இதற்காகவேண்டிய காலத்தையும், யுக்தியையும், சாதுர்யத்தையும் செல விடாதது குறைவென்றும் எமது மனதில் தோன்றுகிறது. இக்குறை வை இவ்வருடம் இனாமா யனுப்பப் போகும் ஹிருதயானந்தினி என் னும் புத்தகத்தில் நிவர்த்தி செய்து வாசிக்குந்தோறும் மட்டற்ற மகிழ் ச்சியை விளைக்கும்படி நவரசங்களும் அமைய போதமான கவனத்தைச் செலுத்தி எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தின் மேன்மையைப்

பற்றி வரைவதென்றால் இப்பத்திரிகையே இடங்கொள்ளாது. இதற்காக எங்கள் மீது மனவருத்தப்படவேண்டாம். உங்கள் மனம் ஒருவாறு தி ருப்தி யடையும்படியாக ஏதோ சிறிதளவு கூடியமட்டும் சுருக்கி அடுத்த சஞ்சிகையில் எழுதுவோ மாகலான் அதை அத்யந்த பிரீதியுடன் வாசித் து அவ்வருமையான ஸத்விரகத்தை இனமாய் அடையும்படியான கால த்தை எதிர்பார்க்கும்படி கோறுகிறோம்.

நமது நேயர்கட்கு ஆனந்தகரமாயுள்ள நமது அனுகூல னின் இர ண்டாவது வருடத்தில் அநேக கற்கதைகளே வெளியிடுவதாயும் ஹிரு தயானந்தினி யுடன் இனி வெளியிடப்போகும் புத்தகங்களில் ஒன்றையும் சேர்த்து நம் நண்பர்கள் இரு நேத்திரங்களாக நினைத்துக் கொள்ளும்படி இரண்டு ஸத் கிரந்தங்களையும் இனமாய் யனுப்புவதாயும் உத்தேசித்திரு க்கின்றோம். அன்றியும் எமது காலத்தை இத்தேசோபகாரமான விஷய த்திற்கென்றே செலவிடுவதாய் நிச்சயித்திருப்பது போல், நமது ஆப்த ரும் பிரஜாபூகூலன் பத்திரிகையின் உதவிப் பத்திராசிரியருமான க. வீ.சந்தானகிருஷ்ண நாயுடு அவாகளும் இப்பத்திரிகைக்காகத் தம தது காலத்தை முற்றிலும் உபயோகப் படுத்தத் தீர்மானித்திருப்பதுமன்றி, மைசூர் போலீஸ் இனிஸ்பெக்டர் ஜனரல் மகா-ரூ-ரா-ஸ்ரீ A. இரங்கசா மி ஐயங்காரவர்கள், மைசூர் டிஸ்திரிக்ட் முன்சிப் மகா-ரா-ரா-ஸ்ரீ B.வெங்கிடாசாரியாரவர்கள்,மைசூர்மகாராணி காலேஜ் கௌரவ செ க்ரடரியாகவும், மைசூர் அரண்மனை மேலதிகாரி (Place Controller) யா கவும் இருந்த மகா-ரா-ரா-ஸ்ரீ இராய் பஹதூர் V. N. நரஸிம்ஹ ஐ யங்காரவர்கள், ஈரோடு டிஸ்திரிக்ட் முனிஸீப் மகா-ரா-ரா-ஸ்ரீ வாசு தேவ சாஸ்திரியாரவர்கள், முதலான சிறந்த கௌரவமும் பிரக்யா தியும் வகித்த அநேக கனவான்களாலும் நன்குமதிக்கப்பட்டு ஸத் கீர்த்தி பெற்ற நமது பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிட்டராகிய T. V. கி ருஷ்ணசாமி சாஸ்திரி யாரவர்களும் நமது சந்தாதாரர்கட்கு அத்யந்த மகிழ்ச்சியை விளைவிப்பதிலும், பிரஜாபூகூலன் பிரசுரங்களாகவும் நீதி போதினி யின் தொடர்பாகவும் இரசம் செறிந்த அருமையான பல க தைகளை வெளியிடுவதிலும் தம் வாணாளைப் பயன் படுத்த வெண்ணியு ளிருப்பதால் நமது பத்திரிகையின் இரண்டாவது வருஷமுதல் "பிரஜாபூ கூல" னிலுள்ள விஷயங்களே வாசிப்பதற் குரியவைகளென்றும், அவை கள் தான் ரஞ்சிக்கத் தக்கவைக ளென்றும், மனதில் வைக்கத் தகுந்தவை என்றும், "அனுகூல" னை அபிமானிப்பதே ஆனந்த கரமென்றும் செவ்வ னே விளங்கும்படியாக ஏகமனதாயிருந்து ஆராய்ச்சி செய்து முதற்றர மான அநேக அரிய நல் விஷயங்களை அதி சிரத்தையோடும் மிகுந்த சா மார்த்தியமாகவும், வெகு ஜாக்கதோடும் ஸ்வாரஸ்யமாயும் எழுதிவரப்ப டி மாகலான் இஃது என்றும் நம் நேயர்கட்கு அத்யந்த மகிழ்வை யளிக்க த் தக்கதா யிருக்குமென்பதை மிகுந்த பிரியத்துட னறிவிக்கின்றோம்.

கடைசியாக, இவற்றை யெல்லாம் பிரியமுடன் வாசித்துணர்ந்து ந மது சந்தா நேயர்கள் "பிரஜாபூகூலன்" பத்திரிகையை என்றும் அபி மானித்து வரவேண்டுமென்னும் சர்வ சிலாக்கியமான கருத்தை மனதி லிருத்தி இதை யாதரிப்பதில் சிரத்தை வகித்து தங்களுடைய சந்தாக்க ளைச் செலுத்துவதோடு புதிய சந்தாதாரர்களையும் சேர்ப்பித்து பிரஜா பூகூலன் பத்திரிகாபிமானிகளாய் ஜ்வலிக்குமாறு பரமகருணை யாகா

ரான பக்தவத்ஸலனைப் பன்முறையும் பிரார்த்தித்து நமது முயற்சிக்கு என்றும் உற்ற துணைவர்களாயிருந் துதவி வரும் அன்பார்ந்த நண்பர் சி காமணிகளனைவருக்கும், நம்நிரூப ஸிம்ஹக்கட்கும், சந்தாநேயர்கட்கும், நமது ஆப்தரும் இப்பத்திரிகையின் போஷகரும் இரங்கூன் பேபர் கறன் ஸி ஆபீஸ் பொக்கிஷதாரருமாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ T. M. பொன்னு சாமி பிள்ளை அவர்கட்கும் உகந்த வந்தனமளித்து மிகுந்த நன்றி பாராட்டி இத்துடன் இவற்றை முடிக்கின்றேம். சுபம். பத்திராதிபர்.

பல திரட்டுக் கோர்வை.

மிஸ்டர் டி. வில்ஸன்:—நமது அருமைத்தோழரும், சேலம் "தக்ஷணதீபம்" பத்திராதிபருமாகிய மிஸ்டர் டி. வில்ஸன் அவர்கள் காலஞ் சென்றதை யறிய மிகவும் வியசனிக்கின்றேம்.

யுத்தம்:—ஜப்பானியர்கள் போர்ட் ஆர்தரைக் கைப்பற்றிக் கொண்டதின் பிறகு விசேஷமான சண்டைகள் ஒன்றும் கடை பெறவில்லை.

ருஷியாவில் கலகம்:—அடங்கிய இக்கலகம் மீண்டும் கிளம்பிவிட்டது. அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவதில் ருஷியா கவர்ன்மெண்டார் அதி சூரர்களா யிருக்கின்றனர்.

வர்த்தமானங்கள்:—10மணி நேரத்தாலுகவே விசிறிக்கொண்டிருக்கத் தக்கதான 8அடி உயரமுள்ள விசிறியொன்றை பம்பாயில் ஒருவர் கண்டுபிடித்துளராம். ஒரு மினிட்டுக்கு 200வெடி கிளம்பும் பிரங்கியொன்று டென்மார்க்கிலும், 21மைல் தூரம் சுடக்கூடியதும் ஒரு வேட்டுக்கு 175பவுன் செலவாகக்கூடியதுமான மற்றொருபிரங்கி நியூயார்க்கிலு மிருக்கின்றதாம். இங்கிலாந்தில் 62வயதுடைய பெண்ணுக்கும் 91 வயதுடைய கிழவனுக்கும் சமீபகாலத்தில் விவாகம் நடந்தேறியதாம். தேங்காய்ப் பால் பிழியவும் வெண்ணெய் கடைக்கத்தக்கதுமான இயந்திரமொன்றை பிரையாற்றில் ஒருவர் கண்டுபிடித்துளார். பில்வாஸ்டகரத்திலிருக்கும் ஓர் மாது முறையே மணம் புரிந்து வாழ்ந்த மாப்பிள்ளைமார் 13பேராம். இரங்கூனில் பிளேக் பரவுகிறது. இவ்வருஷக்கடைசியில் காசியில் கூடும் காங்கிரஸுக்கு இப்போதே பிரயத்நங்கள் நடக்கிறது. டிரஸ்டன் நகரில் ஒருவன் காகிதத்தினால் செய்திருக்கும் கடியாரம் உலோகவகையிற் செய்த கடியாரங்களைப்போல் உறுதியாயும் ஓடத்தக்கதாயு முளதாம். தொலை தூரத்திலுள்ள சினேகிதரை முகமுகமாய் பார்த்துக் கொள்ளத்தக்க ஓர் நூதன யந்திரத்தை ஒருவர் கண்டு பிடித்துளார். கடிதங்களை ரிஜிஸ்தர் செய்யும் விகிதத்தை 2 அணாவிலிருந்து 1 அணாவுக்குக் குறைத்துப் பல சீர்திருத்தங்கள் செய்யப் போகின்றனராம். ஜப்பானைக் காட்டிலும் 56மடங்கு பெரியதும் உலகத்தில் 6ல்ஒருபாகமுள்ளதுமான நாடு ருஷியாதேசமாம். மின்சாரத்தால் மழையுண்டாக்கும் வழியை ஜப்பானிய சாஸ்திரிகள்கண்டுபிடித்துளராம். பம்பாய் காகிதியில் எச்சிலவும் போகவத்த லாபம் 50000ரூபாயாம். ஒருமணி நேரத்தில் 8பக்கம் கொண்ட 96000 பத்திரிகைகளை அச்சிட்டு ஒட்டி அறுத்து மடித்து எண்ணிவிடத் தக்கதான பெரிய அச்சியந்திரமொன்று நியூயார்க்கிலுளதாம். சமுத்திரத்தின் அடியில் இருப்பவைகளைப் படம் பிடிக்கும்விதத்தை ருஷியரொருவர் கண்டுபிடித்திருக்கின்றார். ஒருமணி நேரத்தில் திராஜாளி 100மையில் தூரமும், காக்கை25 மைல் தூரமும் புறா 60மைல் தூரமும் பறந்துபோகக் கூடியதாம்.

பிரஜாபந்துகூலன்.

பருவம் 1. { 1905ஹ்ரு மார்ச்சு-மீ } இலக்கம் 12.

நமது பத்திரிகை.

அன்பார்ந்த நண்பர்காள்!

உங்கள் ஆசீர்வாதத்தால் நமது பிரஜாபந்துகூலனுக்கு இம்மாதத்துடன் ஓராண்டு நிறம்பியது. சென்ற பதினெரு மாதங்களிலும் யாதொரு தடையுமின்றி கடை பெற்றிலங்கச் செய்த பரமகருணாகரரான கடவுளைப் பலவாறு ஸ்தோத்தரித்து இதை ஆதரித்து வந்த அன்பர்களனைவருக்கும் நமது ஹிருதயபூர்வ விநய வந்தனத்தைச் செலுத்தி மிருந்த நன்றி பாராட்டுகின்றேம். உலகத்திற்கு உபகாரமா யிருக்கவேண்டு மென்னுங் கருத்துடனே இப்பத்திரிகையைப் பிரகடனஞ் செய்யத் தொடங்கியதற்கேற்றவாறு நமது பத்திரிகை பலவிதத்திலும் பயன்படத் தக்கதா யிருக்கின்றதென்றும், அனுகூலன் பிரஜாபந்துகூலனாகவே விளங்கி வருகின்றனென்றும் பலவாறு ஸ்லாகித்து நம் நேயர்கள் விடுத்த கடிதங்களையும் நம் சகோதர பத்திராதிபர்களும் பண்டிதர்களும் அளித்த நற்சாக்ஷிகளையும் கண்டுப் பெரிதும் மகிழ்கின்றேம். நமது பிரஜாபந்துகூலன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அநேகவிஷயங்கள் தேசாபிமானி, நாகை நீலலோசனி, முஸ்லிம் அபிமானி முதலிய பல தமிழ்ப் பத்திரிகைகளிலும் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. நமது ஆப்தமித்திரரான மகா-ரா-ரா-ஸ்ரீ T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A. அவர்களும் மகா-ரா-ரா-ஸ்ரீ இராமனுஜ ஐயர் B.A. அவர்களும் இன்னும் பலரும் நமது அனுகூலனுக்கு இதின் இரண்டாவது வருடமுதல் விஷயதானம் செய்ய முன் வந்துளார். அத்துடன் காமும் அநேக அரிய விஷயங்களைப் பிரதி தடவையும் எழுதி வருவதாய் நிச்சயித்திருப்பதுபோலவே நமது பத்திரிகையின் உதவிப் பத்திராசிரியரும், அஸிஸ்டெண்டு எடிடரும், மற்றுமுள்ள நிரூப சிரேஷ்டர்களும், தீர்மானித்திருப்பதால் பிரஜாபந்துகூலன் தனது இரண்டாவது வயதின் ஆரம்பத்திலிருந்து அதியுன்னதமாய் ஜ்வலிப்பானென்பதை மிகுந்த பிரியத்துடன் தெரிவிக்கின்றேம். அனுகூலனை 2-வது வருடமுதல் பல சீர்திருத்தங்களுடன் வெளியிடப்படும். ஆகலான் இப்பிரதம ஸம்வத்ஸரத்தில் நமது அனுகூலனை ஆதரித்து வந்ததைப்போலவே இனிமேலும் ஆதரித்துவருமாறு நமது கையொப்ப நேயர்களைப் பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றேம். இப்பத்திரிகையைப் பிரதமத்தில் பிரகடனஞ் செய்யும்பொழுது சந்தாதர

ரர்கள் சிலரே இருந்தனர். இப்பொழுதுதான் காளடையில் அதிகப்பட்டு வருகின்றனர். இவ்வருடம் நமக்கு சேர்ந்த பல அசந்தர்ப்பங்களாலும், சரீர அசௌக்கியத்தாலும் சிற்சில தருணங்களில் பத்திரிகையைக் காலந் தாழ்த்து வெளியிடும்படி நேரிட்டது. இனி அங்ஙனம் தவறுவதற்கு இடமின்றி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றோம். நமது பத்திரிகையின் முதல் வருஷத்திய 12 சஞ்சிகைகளையும் ஒன்றுசேர்த்து புத்தக ரூபமாகப் பயிண்டு செய்துகொண்டால் எக்காலத்திலும் எவர்களுக்கும் உபயோகப்படத்தக்க ஓர் அரிய பெரிய ஸத் திரந்தமாகும்.

பிரதமத்தில் நினைத்திருந்தபடி வாரப் பத்திரிகையாகப் பிரகடனஞ் செய்யப் போதுமான சந்தாதாரர்கள் சேராதகுறைவால் முடியாதுபோயின வெனினும் அவற்றை அம்மட்டில் விட்டுவிடாது நம்மாலியன்றனவும் முயற்சித்தும் அவ்விஷயத்தில் போதுமான கவனத்தைச் செலுத்தியும் வருகின்றோம். கருணாகரக் கடவுளின் பேரருளால் அது முற்றுப் பெறின் இவ்வருடத்திலேயே நமது அனுகூலன் மாத மிருமுறை யாக வெளிப் போந்துலாவி அனைவருக்கும்அத்யந்தமகிழ்வை யளிக்கத்தக்கனவாய் ஜ்வலிக்கக்கூடும். சென்றவருடத்தில் 3 இனாம் அளிப்பதாய்ப் பிரகடனஞ் செய்திருந்தோம். அவற்றில் அத்தியாவஸியகரபூஷணம் ஏட்டுப் பிரதியா யிருக்கும் போழ்தே கைதவறி விட்ட தாகலான் அஃது ஒன்றுபோக மற்ற இரண்டில் ஜயவிஜயன் புத்தகத்தை முதலிலேயே அனுப்பிவிட்டோம். இனி நம்மால் தரப்படவேண்டிய காலண்டரை இவ்வருடத்தில் சந்தாதாரர்கட்கு இனாமாய் கொடுக்கப் போகும் ஹிருதயானந்தினி எனும் அத்யத்புத புத்தகத்துடன் சேர்த்து அனுப்புவதாய் நிச்சயித்திருப்பதுமன்றி தவறிவிட்ட "அத்யாவஸியகரபூஷணத்திற்குப் பதிலாக இனி வெளியிடப் போகும் புத்தகங்களுள் ஒன்றையும் அளிப்பதாய் உத்தேசித்திருப்பதால் நமது சந்தாதாரர்கள் இதனால் திருப்தியடைவார்களென்று நம்புகின்றோம். இவ்வருடத்தில் கன்னட பாஷையினின்றும் மொழி பெயர்த்து அநேக கதைப் புத்தகங்களை வெளியிட நிச்சயித்திருப்பதைப்பற்றி விரிவாக மற்றோரிடத்தில் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். அப்புத்தகங்கள் இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டும் பாதி விலைக்குக் கிடைக்கும். இவ்வருடத்தில் இப்படிப் பலவிதத்திலும் பிரயோஜனங்களை யடையத் தக்கதாயிருப்பதால் நமது ஆத்மபித்திர ரத்தினங்களான அனைவரும் நம்மால் பிரசுரிக்கப்பட்டு வரும் பிரஜாபந்துகூலன் பத்திரிகை விஷயத்தில் அன்பு செலுத்தி இவ்விடமிருந்து அனுப்பப்படும் V.P.P. பார்கெட்டுகளைக் காலதாமதமின்றி உடனே பெற்று நமது முயற்சியை முன்னுக்குக்கொண்டுவந்து அனுகூலனை யதரித்து ஹிருதயானந்தினி யை யடைந்து இன்புறக் கோறுகின்றோம்.

பத்திராதிபர்.

சரித்திரப் பயிற்சி.

(முன் தொடர்ச்சி.)

இங்கிலாந்து தேசத்து உத்தமகவிகளுக்குள் ஒருவனொன்று சொல்லக்கூடிய ஷெல்லி என்னும் ஒரு மகாவித்வான் சரித்திரப்பயிர்ச்சியைப் பற்றி பின்வருமாறு சொல்லுகிறார். "முன்காலத்து விருத்தாந்தங்களை நானறி

வேன். அவ்வறிவை'நான் நன்னெறியிற்செலுத்துவதற்கு ஒருதவியாகச் செய்து கொள்வேன். இப்படி நானடையும் தெள்ளறிவினாலே என் குற்றங்களெவை, இதற்கு முன்னு லென்னிடத்திலிருந்த அறியாமை யாது என்றுஆராய்ந்து சுகமடையக்கடவேன்." இக்கவியின் இம்மெய்யானகருத்திற்கிசைய பூர்வகாலத்துக் கிரேக்கர் ரோமர், பாரசீகர், அரேபியர் முதலிய ஜாதியார்கள் சரித்திர ஆராய்ச்சி புத்தியைத்தெளிவாக்குகிற தென்பதை யறிந்து சரித்திரவிஷயமான கெத்திய காவியங்களை மிகுந்த ஆதரவுடன் விருத்தி செய்தார்களென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். கம்மவர்களோவென்றால், அவ்வாறு சரித்திர ஆராய்ச்சி செய்யாததினால் ஸ்வாதீன மற்றவர்களாய் தங்கள் நாட்டின் நன்மையின் பொருட்டு முயற்சி செய்யாமல் ராஜ்யாதிகாரத்திலும் விருத்தியடைய முடியாமலுமிருக்கின்றார்களென்பது யாருக்குத்தான் தெரியாது? எத்தகாகளாயினும் அவைகளின் வாழ்விற்கும் கேட்டிற்கும் காரணம் சரித்திர ஆராய்ச்சியினால் தான் அறியக்கூடும். முற்காலத்து வித்வான்கள் எளிய வாசகநடையில் நூல்கள் ஒன்றும் செய்யாமல் உத்திரேகமுள்ள கவிரூபமான இதிகாச புராண மகாகாவியம் முதலானவைகளால் நடந்த விருத்தாந்தங்களை ஒருவாறு வர்ணித்தார்கள். ஆகையால்;'எளிய நடையில் எழுதப்பட்டமுழுதும் நம்பத்தக்க சரித்திரநூல்கள் இப்பிரதகண்டத்தில் இல்லை. நம்முடைய தூர்ப்பாக்கிய வசத்தால் நம்முன்னோர்களின் பெருமையையும் திறமையையும் பற்றிய மெய்யான விவரங்களை நாம் வாசிக்கக் கொடுத்துவைக்காமற்போனோம். கம்மவர்களுக்குள் இக்காரணத்தினால்தான் தேசாபிமானம் விருத்தியடையவில்லை. "உண்மையின் பொருட்டும் தேசக்ஷேமத்தின் பொருட்டும் ஒருவன் மரணமடைவது இனிது"என்று ஆங்கிலேயர்கள் சொல்லுகிறார்கள். கீர்த்திமான்களாகிய மனுமாந்தாதா, விக்கிரமார்க்கன், சாலிவாகனன், முதலான நம் நாட்டு முன்னரசர்களின் சரித்திரங்களில் மெய்யான விவரங்களை நம்மில் கன்றுக உணர்ந்தவர் யார்? அப்படி யறிந்திருந்தால் நேற்றையவரைக்கும் நாகரீகமற்றிருந்த அங்கிலேயர்கள் இக்காலத்து நம்மவர்களை வென்றிருப்பார்களா? அமெரிக்கர், அங்கிலேயர் முதலியவர்கள் முன்னுளில் நடந்த சங்கதிகளையும், இப்போது நடந்துகொண்டிருக்கும் வர்த்தமானங்களையும் காலக்கிரமமான சரித்திரமாக எழுதிவிடுகிறார்கள். நம்மவர்களோ, அத்தகாலத்தில் நடக்கும் சங்கதிகளில் கவிச்சுவை உணரும் தன்மை உடையவர்களுக்குச் சந்தோஷந் தரத்தக்கவைகளையும் அலங்காரமாக எடுத்து வர்ணிக்கத்தக்கவைகளையும் வைத்துக்கொண்டு மற்றதை மறந்து விடுகிறார்கள். இதனால் காவியம் பண்ணக்கூடாதென்பது நமது கொள்கை அல்ல. ஆனால் சரித்திரம் செய்வதையும் மறக்கக்கூடா தென்பதே நமது முக்கிய கருத்து. நமது அரசன் எப்படிப்பட்டவன்? நமது நிலமை எத்தகையதானது? அரசாங்கி நியாயமாய் நடந்து வருகிறதா? இல்லையா? என்று கிராமாந்திரங்களில் பண்டிதர்கள் நன்றாக அறிகிறதில்லை. மடாதிபதிகளும் அறிகிறதில்லை. ஆதலால்தான் அவர்களுக்குச் சுதேசக்ஷேமத்தில்நாட்டமில்லை; உபந்நியாசங்களில்கவனமில்லை. சோமபானாதிகிருத்துக்கள் செய்யுங்காலத்தில் அனேகம் பண்டிதர்கள் சாஸ்திர விஷயங்களைப்பற்றிப்பிரசங்கம் செய்வதைப்பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். அப்பொழுது சரித்திராத்தியயனத்தினால் ஞானமுள்ளபண்டிதர்கள் தேசக்ஷேமம், மதாபிமானம், ராஜ்யநிர்வாகம் முதலிய விஷயங்களைப்பற்றிச்

சபையிலுள்ளோர் ஹிருதயத்தை உருக்கத்தக்க வார்த்தைகளினால் உபந்நியாசங்கள் செய்தால் மிகுந்த நன்மையுண்டாகும். இப்படிப்பட்ட நேசோபகாரமான விஷயங்களுக்குச் சரித்திரமே முதற்காரணமென்று ஆலோசித்து யாம் சிற்றறிவுள்ளோமாயினும், இப்பத்திரிகையின் மூலமாக "சரித்திரப்பயிற்சியை" சுருக்கமாக எழுதஉத்தேசித்து இறங்கலானோம்.

(இன்னும் வரும்).

T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

டம்டிங் ரமாமணி.

(முன் தொடர்ச்சி.)

இதற்குள் டம்டிங்ரமாமணி யென்னும் பிரமடையடைந்து தனது பிராணநாதரை எப்போது பார்ப்போம் என்ற மனோவியாகுலத்தினால் தினசரி நதிக்குச்சென்று நீராடி அங்குள்ள ஓர் விநாயகருக்கு பூஜை முடித்துக் கொண்டு வருகிற வழக்கம்போல் அன்றையதினமும் ஆற்றங்கரைக்குச் செல்லுங்கால், மந்திரிகுமாரனை விட்டுப்பிரிந்து தனியே மாடியின்மீது உலாத்திக்கொண்டிருந்த அரசகுமாரன் அவ்வடிவழகினை வெகுதூரம் தன் கண்ணுக்கு மறைகிற வரையில் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து பிறகு சும்மாயிருந்து விட்டான். வெளியே சென்றிருந்த மந்திரிகுமாரன் வந்து இராஜகுமாரன் மனம் வேறுபட்டிருப்பதையறிந்து அவனருகில் சென்று தினம்போலில்லாமல் இன்று ஒருமாதிரியா யிருக்கக் காரணம் யாதுயென்றும், அவ்விச வேறு பாட்டிற்குள்ள குறைகள் எவ்விதமாயினும் தீர்த்துக் கொடுக்க சித்தமாயிருக்கின்றேனென்றும் வற்புருத்திக் கேட்கலாயினன். அச்சமயத்தில் மந்திரிகுமாரனைப் பார்த்து இராஜகுமாரன் "உன்னுடன் சொல்லாத வார்த்தைகளும் உண்டா கேள். பூர்ணசந்திரனை நிகர்த்த முகவிலாசமும், மூன்றும் பிறையினைப் பழித்த புருவ விலாசமும், எள்ளிளம்பூவையும் சண்பகப் பூவையும் பழித்த காசியினையும், கண்ணுடியை இகழ்ந்த கன்னத்தையும், வள்ளக்கொடியோன் காதினையும், வலம்புரிச் சங்கத்தை நிகர்த்த கண்டத்தினையும், நீலோத்பலத்தைப்பின்னிடச்செய்யும் கண்களையும், கரியமணலோ கொடிய பாசியோ கரியமேகமோ மைக்கொத்தோ யுகாந்த காலயிருளோவென்று சந்தேகிக்கும்படியான அழகியகுந்தலையும், அகன்ற மார்பினையும், அன்னரேகை அரசரேகை நிலிரேகை மயில்ரேகை குயில்ரேகை புஷ்பரேகை முதலிய சிங்காரங்களைச் செய்யக்கூடிய கவிந்து குவிந்து திரண்டு உருண்டு நிமிர்ந்து அண்ணாந்து இருமாந்து புடைத்து பூரித்து சிறுத்து பருத்து அரும்பி வெதும்பி நெருங்கி வெருபனபளப்பாய் யானையது மத்தகமோ புஷ்பச்செண்டோவென்றையுறும் படியான கனகஸ்தனங்களையும், ஆலிலைபோன்ற வயிற்றினையும், நீர்சுழிபோன்ற நாபியினையும், அன்னபிக்கமலமுதல் ஸ்தனபரியந்தமுள்ள சிறு ரோமராசியினையும், மல்லிகைப்புஷ்பம் போன்ற கைகளையும், மருன்பிஞ்சுபோன்ற விரல்களையும், வாழைமரமோ யானைதுதிக்கையோவென்று ஊகிக்கும்படியான அழகிய தொடையினையும், ஞண்டைப்பழித்த முழங்காலினையும், ஆமையையொத்த புறங்காலினையுமுடைய கன்னிகைமானொன்று என் கண்ணெதிர்ப்பட்டு மனதைக் கவர்ந்துகொண்டு போயினள். அவள் யாரோ எங்குறைபவளோ அவள் மனவாளனெவனோ? அவளைக் கண்டது முதல் என்னுயிர் என்னிடத்திலில்லை. இதற்கு என்னசெய்வது என்று ஜயசிங்மன்னன் சொன்னதைக்கேட்டு, மந்திரிகுமாரன் அவனை என் கண்ணெதிரில் ஒருதடவை காண்பித்தால் போதும், அவள் எப்பேர்ப்பட்டவளானாலும் சரி, அவ்வண்ணங்கைத் தம்மிடம் சேர்ப்பிக்க நானியற்று என்றுகூறி, ஸ்நானபானாதிகள் செய்யச்சொல்லி உண்டு சுகித்திருந்தார்கள். மறுநாட்காலையில் இருவரும் மாடியின்மீது நின்றிருக்கையிலேயே அச்சுந்தரியானவள் வழக்கம்போல் குடத்துடன் ஆற்றங்கரைக்குச்சென்றாள். அதைப்பார்த்து அரசகுமாரன் இவள்தான் நான் சொன்ன ரமணீ! என்னநடை! என்னஉடை! என்னஒய்யாரம்! என்ன அழகு! என்ன சொகுசு! யாதொரு ஆபரணமுமில்லாமலே இவ்வளவு வடிவழகேற்பட வேண்டுமானால் நல்ல பூஷணங்களணிந்திருந்தால் எப்படியிருக்கவேண்டாம், என்றுசொன்னான். மந்திரிகுமாரன் தாங்கள் இங்கேயே இருங்கள் நான் போய் பார்த்து வருகிறேன் என்று சொல்லிமாடியினின்றும் கீழிறங்கி அவள்பின்தொடர்ந்து சென்றான். இராசகுமாரன் இங்கே ஏக்கம் கொண்டிருந்தான்.

(முதல் அத்தியாயம் முற்றிற்று.)

☞ இதன் மறுசஞ்சிகையில் இரண்டாவது அத்தியாயத்தை முடிக்க கண்பார்களைக் கோறுகின்றோம்.

டி. வி. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

காமியஞ் செய்துகாலங் கழியாதே.

இவ்வுலகின் கண் நாம் புரியும் கருமங்கள் இருவகைத்தாம். அவைகள் காமியமும், நிஷ்காமியமுமேயாம். காமியமென்றால் பலனை உத்தேசித்துச் செய்யுங் கருமம். பலனை உத்தேசியாது செய்யுங் கருமமென மற்றது பொருள் கொள்ளும். காமிய தருமத்தைக் காட்டிலும் நிஷ்காமிய கருமமே சிலாக்கிய மெனப் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, நமதுசொந்த அனுபவத்திலும் தெரிகின்றது.

பயனை உத்தேசித்துப் புரியுஞ் செய்கை நினைத்த வண்ணம் பலனைக் கொடுக்கத் தவறினால் நாம் மனத் துயரடைகின்றோம். இவ்வண்ணம் அநேக விஷயங்கள் சோகின் மனத்துயருடன் நமது தேகமும் கெட்டுச் சீர் குலைகின்றது. ஒவ்வொரு பொருளிடத்தும் வெறுப்படைகிறோம். சந்தோஷம் குன்றுகிறது. விசன மேலிடுகிறது. மனிதர்கள் கூட்டமே விஷமென நினைக்க ஏதுவாகிறது. அவர்களும் நம்மைக்கண்டு வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்வுலகின் கண் பிறந்தும் பிறவாதவர்களாக நாம் ஆகின்றோம். எல்லோரும் மெச்சும் வண்ணம் கடப்பதே பிறவிப் பயனாகும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

பலனை உத்தேசியாது புரியும் காரியங்களோ அவ்வண்ணமில்லை. அக்காரியங்கள் கைகூடாது போனாலும் நாம் விசனத்துக் குள்ளாவதில்லை.

"காமியஞ் செய்துகாலங் கழியாதே" என்றார் திருநாவுக்கரசு நாயனார். "கருமத்தில் பலாபேட்சையை விட்டிருக்கிறவன், ஆத்ம நிஷ்டையினால் பெறத் தகுந்த மோட்சத்தை அடைகிறான். ஆசையினால் லேவப்

பெற்று பலனில் இச்சையை வைத்து கருமத்தைச் செய்கின்றவன் பந்தத்தில் கட்டப் படுகின்றான்." என்று பகவத்கீதையிலும் சொல்லப் பட்டுளது. ஆகையால், நாம் பலனைக் கருதாது செய்யும் செய்கைகளே மேன்மை பொருந்தியது. மேலும் உற்று நோக்குவோம். பலனைக் கருதாது கடவுளின்பேரில் பாரத்தைவைத்து, கருமங்களைச் செய்யப்புகின் அவைகள் கைகூடு மென்பதற்குச் சற்றேனு மையமில்லை. "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்ற வாக்கியம் யாவரு மறிந்ததே. பலனை உன்னிச் செய்யப் புகுங் கருமங்கள் கைகூடுவது அருமையாகின்றது. குழந்தைப் பருவத்தை உல்லாசப்படுத்திய விளையாடல்களையே இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். "நமது எதிராளியைத் தோற்கடிக்க வேண்டு மென்று" யெண்ண யெண்ண நாமே தோல்வியடைகின்றோம்.

ஆசை யில்லாது நாம் கருமங்களைப் புரியின், பந்தங்களை நீக்கியவர்களாவோம், பற்றைத் துறந்தவர்களாவோம். மோட்சத்தை யெய்தியவர்களாவோம். "அற்றது பற்றெனில் உற்றதுவிடி." "பயனைக் கருதாது கருமம் செய்யின் மோட்சமடையலாம்" என்று எண்ணி பயன் கருதாது காரியங்களைப் புரியினும் பிரயோஜனமில்லை. மோட்சமாகிய பயனை எண்ணிக் கருமத்தைப் புரிந்தவர்களாகின்றோம்.

மேற்கூறிய இருவகுப்பினர்களுக்கு முள்ள வித்தியாசத்தை மறுமுறை கூறி முடிக்கின்றேன். பயன் கருதாது கருமம் புரிபவர்களை ஞானிகளெனக் கூறலாம். இன்ப சுகங்களைக் கவனியார்கள். கஷ்ட துக்கங்களைக் கருதார்கள். "கடந்தாலு மிருந்தாலு நடின்றாலுஞ் துயில் கொண்டு கிட்டினாலும் விழுந்தாலுங் கிளர் மூடி மன்னவர் முதலோர் தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு மவமதித்துக் கடக்தாலு மெய்ஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான்". மற்றவர்கள் விஷயம் அப்படியல்ல. மனம் வருந்தி துக்க சாகரத்தில் மூழ்கியவர்களாகவே யிருப்பார்கள்.

இவ்வுலகின் கண் நாம் துன்பங்களாலேயே சூழப் பெற்றிருக்கின்றோம். அத்துன்பங்களை நீக்க வழியறியாது மயங்கியிருக்குஞ் சமயத்தில் நாம் புண்ய கருமங்களைப் புரியினும் புரியலாம். ஆகையால் பயனைக் கருதாது எல்லாக் கருமங்களையும் ஈஸ்வரார்ப்பணமாகச் செய்வதே சிலாக்கியமாகும். தாமரை இலை எப்படி ஜலத்தால் ஒட்டப் படுகின்றதில்லையோ அவ்வண்ணம் அவன் புண்ய பாவங்களால் ஒட்டப்படுகின்றதில்லை. "வேண்டி வினை செயேல்" என்று ஔவை கூறியுள்ள மொழியும் இங்கு கவனிக்கத் தக்கது.

S. N. மீனாக்ஷியம்மாள்.

நல்லுரை.

1. பக்தர்களுடைய சரித்திரமானது நாம் நம்முடைய ஆயுள் காலத்தை மாகூமையான உன்னத ஸ்தானத்திற்குக் கொண்டு வரக்கூடுமென்பதை கினைப்பூட்டுகின்றது. 2. அறிவிற்கு மேம்பட்டது ஒன்றுமில்லை. ஆனால் அந்த அறிவைக் கல்வியினாலல்லது யடைய முடியாது. ஏனெனில் கல்வியே அறிவின் தாய். இம்மை, மறுமைப் பாக்கியங்களெல்லாம் கல்வியினால் தான் அடையலாம். கல்வி தான் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் பயக்கும். இப்

போர்ப்பட்ட கல்வியை பெண்களுக்கு கற்றுக் கொடுக்கக் கூடாதெனக் கூறும் மந்த மதிகளின் அறிவீனத்தை என் னென்போம். 3. நெறுப்பிடை படாத ஸுவர்ணமும், சாணையில் கருக்கிடப் படாத வைரமும் எங்ஙனம் மென்மையடையாதோ அதுபோல் சிறு பிராயத்தில் சோம்பலை மேற்கொண்டு திரிபவர்கள் ஒருக்காலும் சிறப்படையார். 4. உலகில் மானிட வாழ்க்கைக்கு விவாகம் அத்தியாவஸ்யமானது. இம்மையில் கற்பிற் சிறந்ததோர் உத்தமகன்னிகையை மணம்புரிந்து இல்லறத்திற்குரிய தர்ம நெறிகளில் தவறாது கிருஸ்தாசிரமத்திலிருந்து பின்பு தான வானப்பிரஸ்தம் அடையவேண்டும் (5) சப்தத்தால் மானும், பரிசத்தால் யானையும், ரூபத்தால் விட்டிலும், ரசத்தால் மீனும், கந்தத்தால் வண்டும், ஒவ்வொரு புலன்களாலே மரண மடைவதால் இந்த ஐந்து விஷயங்களும் கூடி ஒருருவாய் அமைந்துள்ள மாதர்களது வலையில் பட்டு விடுவித்துக் கொள்வது மிகவும் கஷ்ட சாத்தியமே (6) விவாகத்தால் விஷயாந்தரமும், விஷயாந்தரத்தால் மக்கட்பேறும் மக்கட் பேற்றால் பலவித கவலைகளும் உண்டாகும். பிறகு அவற்றால் பகவானிடம் நமக்குப் பக்தி குறையும். பக்தி குறைந்தால் பின் சாயுஜ்ஜிய பதவி கிடைக்காது. முக்தியடையாத மனிதர் பிறந்தென்ன, இறந்தென்ன? ஆகலான் இவ்வனம் சேரிடாதபடி ஒவ்வொருவரும் ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும். (7) விஷயங்களென்னும் தேன்களும், இந்திரியங்களென்னும் சர்ப்பங்களும், காமக்குரோத மென்னும் புலிகளும், எண்ணங்களென்னும் குரங்குகளும், அகங்கார மென்னும் யானைகளும், மமகார மென்னும் முட்பன்றிகளும், இச்சை யென்னும் கோலுய்களும், அஞ்ஞான இச்சையென்னும் இருள் கூட்டங்களும், சூழ்ந்ததேகம் என்னும் காட்டில் அகப்பட்டுக் கொண்டு தப்பிப்போக வழியில்லாமல் கஷ்டப்படுவதும் கடவுளுடைய சோதனையாலென்றுதான் சொல்லவேண்டும். (8) ஸத்கருமத்தால் பக்தியும், பக்தியால் வைராக்கியமும், வைராக்கியத்தால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமும் அடையக் கூடும். (9) பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமே காரணமாயிருக்கின்றது. அப்படியே பந்தத்தால் இச்சையும், இச்சையால் ஜனனமரண துக்கமும் உண்டாவதற்கு ஹேதுவாகின்றது. ஆகையால் எத்த விஷயங்களிலும் பேதாபேதத்தை முற்றிலும் நீக்கி சற்குருவை யடைந்து குருகடாக்ஷம் பெற்று நிஷ்காம்மியத்தை யடைந்து உலகில் சகல பொருள்களையும் சமமாகப் பாவித்து ஆத்ம ஞானமுற்று பரமசாம்பிராஜ்ய பதவியை படைவதே மோக்ஷமீடென்னப்படும்.

பக்தி யோகம்.

"பக்தி செய்தால் முக்தி கிட்டும்" என்னும் வேதவாக்கியத்தை நோக்க, நாமெல்லோரும் பக்தி செய்ய வேண்டியது அத்தியாவசிகமாயிருக்கிறது. மனுஷகோடிகளாகிய நாமெல்லோரும் இப்போதிருக்கும் நிலைமையானது, நாம் முற்பிறப்பில் செய்துள்ள கர்மங்களால் உண்டானது. மறுபிறப்பில் நாம் அடையும் நிலைமையானது, இப்போது திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயும், ஆகியவற்றால் செய்யும் கருமங்களாலான தென்பது நிச்சயம். சிலருக்கு வெளியிலிருந்து கிடைக்கும் உதவியினால் ஆத்மஞானம் சீக்கிரமாயுண்டாகி அதனால் அவர்கள் முக்தியடைகிறதுண்டு. இவ்விதமான அதிதீவிரபக்குவம் புஸ்தகங்க

ஆப்படிப்பதினால் லுண்டாகாது. அப்படி படிக்கிறதினால் மகா மேதாவிகளாகலாம். கடைசியாக நம்முடைய மனம் பக்குவமடையாமற் போய் விடும். புஸ்தகங்களைப் படிப்பதினால், நம்முடைய புத்தி விசாலப் படுமே யன்றி ஆத்மஞானம் உண்டாகாது. இதனாலன்றோ அனேக புராணிகர்களும், பாகவதர்களும், தத்துவமுணர்ந்தவர்களும் பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தாங்களனுஷ்டிக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆதலின் நாம் ஆத்மஞானத்தை, சீக்கிரமாக அடைவதற்கு ஓர் குருவை ஆதரிக்கவேண்டும். எவன் ஆத்மவிசாரணை செய்யத்தொடங்கு கிறானோ அவனுக்கு நிச்சயமாக ஓர் ஆசாரியர் கிடைப்பார். "பள்ள மிருக்கு மிடத்தில் தண்ணீர் தங்கும்" என்னும் பழமொழி போல், ஆத்ம விசாரணை செய்ய ஆசைப்படுவோனிடம் ஆசாரியன் தாமே சென்று போதிக்கத் தொடங்குவார். ஆசாரியர்களிலும், சிலர் கள்ள வேடந்தரித்து தங்களுக்கு அதிகமாய்த் தெரியுமென்று பாவனை காட்டி, சிஷ்யர்களுக்கு உபயோகமற்ற விஷயங்களைப் புகட்டி, அவர்களைக் கடைசியில் அநாதையாக்குகின்றனர். ஆகையால் ஒவ்வொருவனும் தனக்குத் தக்க நல்ல ஆசாரியனை யடைய வேண்டியது. நல்ல ஆசாரியன் இன்னானென்று நாம் அறிந்து கொள்வ தெப்படி? கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுவதில்லை. பகலில் பிரயாணம் செய்வதற்கு தீவட்டியின் வெளிச்சம் வேண்டியதேன்? உலகத்துக் கெல்லாம் உபதேசிக்க வல்ல ஆசாரியன் வந்தவுடனே ஆத்மா அவனைத் தானே அறிந்து கொள்ளுகிறது. ஆனால் ஆசாரியனுக்கு மூவகை லக்ஷணங்கள் அத்யாவசியம் இருக்க வேண்டும். அவை, சாந்தம், ஞானம், ஊக்கம் என்பவை. அசுத்தமான ஹிருதய முடையவன், ஒருபோதும் ஆசாரிய னாகமாட்டான். ஆசாரியனுக்கு மனோவாக்குகாயங்களாகிய திரிகரணங்களிலும் சுத்தம் வேண்டும். சில ஆசாரியர்கள் பாஷையில் நல்ல விற்பன்னர்களாய் வேதவாக்கியங்களில் லுள்ள, ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று மைல் நீளம் அர்த்தம் சொல்லி தங்கடயங்கள் சாமார்த்தியத்தை விளக்குகிறார்களே யன்றி உண்மையான ஞானத்தை அடைய வேண்டிய விஷயங்களை உபயோகிக்கிறதில்லை.

(இன்னும் வரும்.)

K. S. செல்லமய்யர்.

ஞானம்பாள்.

முதலாவது அத்தியாயம். கொள்ளைக்காரர் கூட்டம்.

"கொற்ற வெண்குடை யெனக் குளிர் வெண்டிங்கள்" நிர்மலமான விசும்பின்கண் மேலேறிச் செல்லா நின்றான். அக்காலை மணி சுமார் புதினென்றரை யிருக்கலாம். வெண்மதி தன் தண்கதிர்களைப் பரப்பிய விடம் ஓர் சிறு குன்றம். அதனின்று ஓர் நீர் வீழருவியானது மிகுந்த சப்தத்துடன் வீழ்ந்து கொண்டிருந்தது. திங்களின் இன்னிய வொளியால், அந்நன்னீரானது வெள்ளிப்பாளங்களைப் போர்த்தலாய ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அச்சமயம், சில்வண்டினங்களியும், நீர்வீழ்ச்சியின் சப்தமும், காற்றுனது தன் காயங்களான. விருட்சஜாதிகளினிடம், ஊடலாடலின் புங்களை நடத்துதலினாலுண்டாகும் ஒலியும், தவிரப் பிறிதொன்றிலது. அருவி வீழுமிடத்தில், வஞ்சகர் நெஞ்சம் போலிருண்ட குகையும், அதற்

குச் சற்று அப்பால், ஓர் பெரிய பசும்புற்களால் சூழ்ந்திரா நின்ற மைதானமும், அதன்கண் ஓர்காளிகோயிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்விடம், வருடத்திற்கோர் முறை சமீபத்துள்ள கிராமவாஸிகள் எல்லோரும் வந்து, அருவியில் நீராடி, அக்காளிகோயிலை வலம்வந்து, பூசை பொங்கல், முதலியன நடாத்திச்செல்லுதல் தொன்றுதொட்டவழக்கம். மற்றகாலங்களில் அதுபயங்கரமான ஸ்தலமாகவே கருதப்பட்டிருந்தது. நாம் மேற்கூறிப் போந்த குகையானது வெளியில் நின்று பார்ப்போருக்கு அனேக காட்டுப்பூண்டுகள் சூழ்ந்திருப்பதால் தெரியவராது. இக்குகையின்கண் சந்திரன்தன் கிரகணங்களை வீசுகாலையில், அதனுள்ளிருந்து ஒளியும் இருவர் பேரைரச்சலும் கேட்டது. உடனே ஓர் நெட்டையான மனிதன், தன் கையிற்றாங்கிய உடைவாளுடன் அவண் தோன்றினன். உடனே, அக்கூட்டத்தார் புலியைக்கண்ட புல்வாய்போன்று நிசப்தத்திலாழ்ந்தனர். அப்போது அத்தலைவன் "மீண்டும் குடித்து விட்டு சண்டையும் சச்சரவு மொழியலில்லையா" என சிங்கம் கர்ஜிப்பதைப்போல் கூறி, அக்கள்குடங்களை இங்கேகொண்மின் எனச்செப்பி, அதனை அக்கினிபகவானுக்கு ஆகுதி செய்துவிட்டனன். அப்போது இருவர் தோன்றி மிக்க வணக்கத்துடன் அம்மனிதனை இங்கே தொணர்ந்திருக்கின்றனம் எனக்கூவினர்.

"பணத்துடன் இல்லையா?"

"ஆம். குதிரைகளின் மீது பணத்தையும், அவனையும் மரத்தடியில் வைத்திருக்கிறோம்."

"தனியாய்த் தானே இருக்கின்றான்?"

"ஆம். கூடவேலைக்காரன் வருவதா யிருந்தும், நாங்கள் தடுத்து விட்டோம்."

அப்படியாயின் கூட்டாளிகளே! பொறுங்கள், நான் தனியாய்ச் சென்று சீக்கிரம் திரும்புவேன், என்னுடன் ஒருவரும் வரவொண்ணாதெனக்கட்டளையிட்டுச்சென்றான். நிற்க, இம்மனிதன் யாரென்பதும் இவன் சரிதைகள் எப்படிப்பட்டதென்பதையும், அறிந்து பின்னர் மேற்புகுவாம். நாம்கூறியவற்றால், இம்மனிதன் கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைவன் என்பது சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். இவனது நெட்டையான சரீரமும், பார்ப்போர் பயந்தலறுங்கி நாக்குளறுமிம் கம்பீரத்தோற்றமும் கறுத்திருள் படர்ந்த முகமும், ஆட்டுக்கொம்புபோல் வளைந்து, முறுக்கி வளர்த்த மீசையும், பகாசுரனே, கடோற்கசனே, எனுமாறு சிறந்து விளங்கும் உருட்டி வைத்தாற் போன்ற தேகதிடகாத்திரமும், வக்கிரதந்தங்களுடைய பல்வரிசையும், கண்டோரை நடுங்கவைத்தன. அவனே ஜாதியில் க்ஷத்திரியன். அவன் உண்மையான பெயர் வீரசிங்கு. கூட்டாளிகள் கூப்பிடுகின்ற பெயரோ துரைராஜ். அவன் அனேக இந்துமத சாஸ்திரங்களையும், புராணங்களையும் வாசித்துணர்ந்தவன். சகல பாஷையு மறிவான். அவன் அப்பிரதேசங்களில் செய்த கொலை, கொள்ளை முதலிய நீமைகளோ அளவற்றன. அவன் வெளியூர்களுக்குச் செல்லுவானில், கூர் பொருந்திய கோடாலியும், உடைவாளும், கொண்டேகுவான். சென்ற விடங்களிலெல்லாம், புராணங்கள் படிப்பதும், அதைக் கேட்போர் கொடுக்கும் பணத்தையும், சன்மானங்களையும் பெற்றுவருவான். அக்காலாண்டிருந்த மன்னர்கள், இவனைப் பிடிக்கப்பல சூழ்ச்

கள் செய்தும், பயனற்றவையாய்ப்போயின. இவன் கொணரும்சாமான்களை கள்ளத்தனமாய் விற்று, தானும்லாபத்தையடைந்து ஜீவித்துவருபவன் இவன்முக்கியகோளுயிருந்தான். அவன்தான் அன்று மரத்தடியில் குதிரைகளின்மீது பணப்பையுடன், இவனைக்கண்டு பேசவந்தமனிதனுவான்.அவன் இராமதாஸ் என்னும் சாவகாரி. (இன்னும்வரும்.)

K. S. வைத்தியனாதய்யர்.

அறம்.

படிபுகழும் "பிரஜாபந்துகூடலன்" பத்திரிகா நேயர்களாகிய மேன்மை பொருந்திய பெரியோர் சிறியோரும், ஆண் பெண்ணிருபாலரும் ஒதி மகிழ்ந்து இஃதின்படி யொழுகுவதற் கத்தியாவசியமாகிய அறமென்னும் தான விஷயத்தைச் சிறிது விவரித்துரைக்குமாறு தற்போது துணிக்தபடியால், பேரிற் பெரியோரும் பாரிற்சிறியோருமெனது கல்லுரையை நன்குடனேகி புல்லருக்கும் கல்லறிவுண்டாகுமாறு வற்புறுத்திப் பல்லோரையும் கல்லோராக்கப் பிரயத்தனித்துப் பாங்குடனிப் பூமிசைப் பல்லிசைபெற்றுப் புவனரக்ஷகனருளால் பல்லாண்டுவாழ்வீராக.

அறம்=தானம், தருமம், ஒழுக்கம், நீதி, நெறி, என விஷயத்துக்கேற்கப்பல பொருள்படும். இவ்வறம் சுருதி நூற்படி மூப்பத்திரண்டு வகைப்படினும் கல்விடயமாகப்புரியும்நெறிகள் யாவும் கல்லறமாதலின் காலெட்டினும் கனியுறப் பெறுவதால் அற நூலாசிரியரும் எண்ணுன்கறத்தையே முதன்மையாக விளக்கியிருக்க, எம்மாற் சகல வறத்தையும் மீண்டெடுத்துரைக்க வகையுளதோ? இல்லையாதலின் அன்னோர் கருத்திற்கேற்றவைகளிற் சில முதன்மைகளை நாமும் ஆராய்ந்தறியவேண்டுவது நமது கடனுதலால் நமக்கு சென்றபடி மொழிவோமாக.

அறவினம் இருவகையாம். அஃதெவை யெனின் இல்லறம் துறவறமென்பேம். இவ்வீரறங்களின் பன்மையே வேற்றறங்கள்; பிரதம மாவதிஃதிரண்டுன்.ஆயினும்,இவ்விரண்டினுட்சிறந்தது இல்லறமொன்று தானெனச் சீரிற் சிறந்தோரும், பலநூலைப் பகர்ந்தோருங் கூறியுள்ளார்.

இல்லறந்துறந்து பரம பதங்களையே தியானித்து நிற்கும் மகாயோகிகளுக்கே துறவறஞ் சிறந்தது. மேதினியுறும் மானிடப்பிறவியினர் யாவரும் துறவறமே இச்சிப்பாராயின்,அத்துடன் மானிடப்பிறவியே வேரற்றுப்போக, ஜனனங்குறைய ஜகதலம் சூன்யமாய் விடுமென்பது சகலருக்கும் தெளிவாய் விளங்கக்கூடிய விஷயம். ஆனதுபற்றியே தீனதயாளரான தரணிபாலகனருட்கருணைபூர்த்த வாரியிலாழ்ந்திய மூதோரும் மேலோரும் நூலோரும் இல்லறமே சிறப்பற மென்றும் இல்லறத்துய்பவர்க்கே பற்பல நல்லறம் புரியக் கூடுமென்றும் பக்குவமாய்ப் பகுத்தறிந்துரைத்தன ரென்பது நிண்ணம்.

இல்லறமில்லையே விவ்வுலகமில்லை என்பதற் குதாரணமாக, "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை-மழையும்- தவமிலாரில் வழியில்லை- தவமும்-அரசிலாரில் வழியில்லை- அரசனும்- இல்வாழ்வாரில் வழியில்" எனவும் "இல்லற மல்லது கல்லறமன்று" எனவும் பன்னெறிகளையாதரவாய்ப்கர்ந்தனர் சான்றோரும். ஆகவே, இல்வாழ்வுற்றவர்கள், தமது இல்வாழ்வை நல்வாழ்வாகக்கொண்டு செய் கருமங்களைச் சிறக்க முடித்து சக

திக் கேற்றவாறு தானதருமங்களைச் செய்து பல்லோருக்கும் தம்மாலியன்ற நன்மைபுரிந்து, புல்லரையும் நல்லோராக்க முயன்று ஐயமிட்டுண்டு சான்றோரினத்திருந்து ஓப்புரவொழுகி கேள்விமுயன்று நற்கலை கற்று நன்மதியுற்று, அறவுள்ளமதித்து ஆதியைத்தொழுது கல்லிசைபெற்று நீடு வாழ்ந்து வீடு பெறவேண்டுவதற்கு விரைவீர் என்பதைக்குறித்தே மூதாட்டியும் 'அறஞ்செயவிரும்பு' 'தானமதுவிரும்பு' என்றோதினள். ஆகவே நாம் புரியும் அறமானது "ஏதா சக்தி மஹாபலம்" என்றபடி நம்மாலியன்றமட்டில் ஐயமிட்டும் நற்கருமங்களுக்குரிய பல கல்லறங்கள் செய்தும் நமக்கும் பிறர்க்கும் உற்றூர் பெற்றூர் சுற்றத்தார் முதலிய பந்துவர்க்கங்களுக்கும் அன்றியும் மிருகபக்ஷி முதலியசகல ஜீவ ஜெந்துக்களுக்கும் நம்மால் தீரணமாவது யாதொரு அனர்த்தங்களும் நேரிடாது கூடியவரையில் நன்மையே பயக்குமாறு நல்லறம் புனைந்திருக்க முயற்சித்தலே மேன்மை. இதற்கு முதன்மையாக பொய்யைத் தவிர்த்து மெய்யைத் தழுவி மேலோர்க்குப் பொய்யா வினக்கு தான் திருவினக்கெனக் கொள்ளுமாறு உண்மையை அணிகலனுக உடைத்தா யிருப்பவனே கல்லறம் புனைந்திருப்பவனுவன். மற்றோர் சொற்பனத்திலு மாகார் என்பது திண்ணம். ஆனதுபற்றி பத்திரிகாபிமானிகளே! பல தொல்லுகளை மேற்கொண்டு உலக நயத்தை நாடி முழைக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் பத்திரிகாலிகிதர்களுக்கும் நம்மால் யாது கைம்மாறு புரியற்பாலது? இத்தகைய கல்விஷயத்தில் கல்மனம் பொருந்தி தம்மாலான பிரதியறமாக பத்திரிகைகளை விர்த்தி செய்யப் பொருளுதவி புரிந்தும் பத்திராதிபர் பத்திரிகாலிகிதர் முதலானோருக்கு சிரமம் தோன்றுதுழைக்கத்தக்க நீடுஆயுளையும், தகுமான ஆக்கத்தையும் அளிக்குமாறு கிருபாகடலாகிய கடவுளை ஸ்தோத்தரிப்பதும் முக்தியடைய வேண்டியதற் குரிய முயற்சிகளைச் செய்வதும் இகபர சுகசாதக கருமங்களைப் புரிவதுமே கல்லறமாகிய இல்லறம் புனைந்தோர்க்குரிய கடனுகும்.

P. S. அனந்தநம்பியார்.

தமிழ்ப்பாஷை.

(முன்தொடர்ச்சி)

இனி இதுவழங்கும் இடம் ஆராய்வாம். இத்தமிழ் செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவகைத்து. இவை வழங்குவன முறையே செந்தமிழ் நாடு கொடுந்தமிழ் நாடு என இருவகைப்படும். அவற்றுள் செந்தமிழ் நாடாவது "கன்கைவாழ் வேணிக்கடவுளும் குமரக்கடவுளும் அகத்தியனுரும் கலிமகள் வடிவப் புலவரும் மேன்மைகொளிய வேந்தரும் இருந்து சங்கமாப் பலகை யேறியே வளர்த்த" தமிழ்க்கிடமான பாண்டிவள நாடே. இந்நாட்டின் எல்லைகள் வடக்கே மருதயாறும் கிழக்கே மருவூரும் தெற்கே வைகையாறும் மேற்கே கருவூரும் என்று சேனுவரையர் வரையறுத்துள்ளார். செந்தமிழ் நிலத்தைச்சார்ந்த பன்னிரு நிலங்களும் கொடுந்தமிழ் நிலங்களாம். இவை இன்ன என,

"தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண் பூழி
பன்றி அருவாவதன் வடக்கு—நன்றிய
சீதமவாடு புனலுடை செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்". என்னும் வெண்பாவால்அறிக.

[செந்தமிழ் நிலத்தெல்லையும் அதனைச் சூழ்ந்த பன்னிரு நிலங்களும் வருமாறு காண்க:—



நிற்க.]

நன்னூல் இயற்றிய பவணந்திமுனிவர் இச் செந்தமிழ் நிலத்தையும் கொடுந்தமிழ் நிலத்தையும் பொதுவாய்த் தமிழ் நிலம் எனக்கூறி அத்தமிழ் நிலத்தெல்லை "குணகடல் குமரி குடகம் வேங்கடம்" என வரையறுத்தனர். (அதாவது வடக்கே திருவேங்கடமலை, கிழக்கே பங்காளக்குடாக்கடல், தெற்கே கன்னியாகுமரிமுனை, மேற்கே கடகம்.) ஆனால், தமிழ் நாடானது கன்னியாகுமாரிக்கும் அப்பால் விசாலித்திருந்ததென்றும், 2000 வருஷங்களுக்கு முன் அப்பூமி பிரளயத்தால் அழிந்து போயிற்றென்றும் கூறுகிறார்கள். நன்னூலார் குறித்துள்ள தேயங்கள் அவர் காலத்திய தமிழ் நாடுகளே. தற்போதோ சிலோன், சிங்கப்பூர், பினாங், மலாக்கா, ஆபிரிக்காவின் தெற்கில் உள்ள கேப்காலனி, நட்டால், பர்மா முதலிய இடங்களிலும் இப்பாஷை பேசப்பட்டு வரும் விஷயம் நாம் அறிவம். இப்பாஷையானது தற்காலத்தில் 14500000 ஜனங்களால் பேசப்பட்டு வருகிறதென்றும் அதற்கு சுமார் 58500 சொற்கள் உண்டென்றும் தெரியவருகிறது. இனி இத்தமிழ் மூல பாஷையா அல்லது கிளைப் பாஷையா என்று ஆராயப்புகுவோம். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற மொழி நூல் வல்லோர் பலர், உலகின் கண் வழங்கும் மொழிகளை "ஆரிய" மொழிகள் என்றும் "தூரானிய" மொழிகள் என்றும் இரு வகையாகப் பிரித்து, ஆரிய மொழிகள் பலவற்றுள்ளும் ஸம்ஸ்கிருதம் தலை சிறந்ததொன்றும்; அவ்வாறே தூரானிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ் மொழி தலை சிறந்ததொன்றும் எனக்கூறியிருக்கின்றார். ஆகவே, ஸம்ஸ்கிருதமும் தமிழும் வெவ்வேறு பாஷைகள் என்பது வெள்ளிடைமலை போல் தெள்ளிதிற் புலப்படும் அன்றே?

(இன்னும் வரும்.)

M. கோபாலகிருஷ்ணையர்
அக்கிராஸனாதிபதி "மாணவர் செந்தமிழ்ச் சங்கம்" மதுரை.

கலாப்பிரகாசனி.

ஒன்பதாவது அத்தியாயம்.

"உனது தந்தை யழைத்து வரச் சொன்னனென்று
உரைத்ததொரு பிரதாபன் சொல்லே கம்பி
கனத்துடனே வந்திந்த காட்டில் யானே
கவலை கொண்டு மோசத்தால் கதறலானேன்
இனி யெனது தாய் தந்தை கணவன் சேவை
யெங்ஙனம் யான் கண்டு களித்திடுவே னந்தோ
தனி வனத்தி லிருக்க மனத் தயிர்யமுண்டோ
சர்வ்பரிபூரணனே தர்க்காப்பாயே!"

"வானமது கருகருத்து வளர் பிறையைக் காணுத வல்விருட்டின்
கானமதில் பேய்க் கரடி புலி யானைக் கோட்டமதிற் காதடைத்து
யானுருகித் தனிமாள லிடித்தழுவுந் தெய்வகதியல்லால் வேறு
தானுரைப்ப தெனவினிமேல் தாய்தந்தைகணவனையுஞ் சாருவேனே!"

என்றொரு தருணீ சிரோமணி பலவாறு அழுது புலம்புவாளாயினள். வெகுதூரத்தில் ஒரு வெளிச்சம் தோன்றிற்று. பார்த்தாள் அஃ தென்னவென்று யோசித்தாள். இதற்குள்ளாக ஒரு ஜனஇரைச்சலும் கேட்டது. சிறிது உற்று நோக்கினாள். ரத கஜ துரக பரிவார ஸஹிதம் அநேக ஜனங்கள் யாரையோ தேடிக்கொண்டு வருகிறது போல் தோன்றிற்று. உடனே மனதில் பலவித சந்தேகங்களுண்டாயின. கடையாகத் அதிக பயத்துடன் ஒரு மரமேறினாள். "மேலே யாரோ உட்கார்ந்திருந்தது போல் காணப்பட்டது" "பேயோ பிசாசோ வென்றஞ்சினாள்" கடையில் சற்று தைரியத்துடன் ஏறிப் போய்ப் பார்த்ததில் தன்னைப்போன்ற ஒரு ஸ்திரீ அவ்விடம் உட்கார்ந்திருக்கக் கண்டாள். பிறகு இருவருக்கும் நடந்த சம்பாஷணையினால் "அந்த ஸ்திரீ வழிதப்பி இவ்விடம் வந்து சேர்ந்ததாயும் காட்டில் வாழும் துஷ்டமிருகங்களுக்கு அஞ்சி மரமேறியதாயும் அவள் பெயர் மனமோஹினி என்றும் தெரிய வந்தது. இதற்குள்ளாக வெகுதூரத்தில் காணப்பட்ட ஜனங்கள் அதிக சமீபத்தில் வந்துவிட்டனர். அவர்கள் இம்மரத்தையே நோக்கி வருகிறவர்கள் போல் தோன்றிற்று. நமது அங்கனமணி பலவாறு சந்தேகித்தாளாயினும் அவள் அருகில் உட்கார்ந்திருந்த மனமோஹினிமட்டும் அதிக சந்தோஷத்துடனேயே இருந்தாள். இதற்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை. கடையாக ஜனங்கள் இவர்கள் உட்கார்ந்திருந்த மரத்தைச் சுற்றிக்கொண்டனர். உடனே மனமோஹினி கீழே இறங்கினாள். அவளைக் கண்ட ஜனங்களனைவரும் அத்யானந்தபரிதர்களாய் அடிபணிந்து வணங்கலாயினர். பிறகு நமது அங்கனமணியைப் பலவாறு தேற்றித் தன்னுடன் அழைத்துக்கொண்டு ஜனங்கள் சகிதம் அக்காட்டின் வழியே சென்றாள். உஷத்காலமாயிற்று. திவாகரனும் உதயமானான். சமீபத்தில் ஒரு நகரமும் காணப்பட்டது. விசாரித்ததில் கமலாபுரி என்று சொல்லினர். மனமோஹினி நமது அங்கனமணி ஸஹிதம் அரண்மனைக்குச் சென்றாள். அநேக உபசாரங்களும் நடந்தன. காலை போஜனமும் ஆயிற்று. இருவரும் அந்தப்புரஞ் சென்றனர். அங்கு ம

னமோஹினி தான் அணிந்திருந்த ஆடைகளை யவிழ்த்தெறிந்து புருஷரூ பமானாள். இதைக் கண்டதும் நமது அங்கதமணி ஒன்றும் தோன்றாது பிரமித்தான். உடனே அவள் கையைப் பிடித்துக்கொண்டு ஹே சுகுண மாலினீ! நான் மனமோஹினி யல்ல. என்னைக் கலாலங்கிருத னென்று அழைப்பார்கள். நான் இந்த கமலாபுரியை யரசாக்ஷி செய்து வருகின் றேன். சுமார் இரண்டுமாதங்களுக்குமுன் ஒருமகான் என் கனவில் தோ ன்றி "நீ சுகுணமாலினியை விவாகஞ் செய்திடு" என்று கூறி மறைந் தார். அவர் மறைந்தவுடன் நீ எனதருகில் சயனித்திருந்ததுபோல் தோ ன்றிற்று. உடனே விழித்துக்கொண்டேன். பிறகு உன்னைக் காணவே ண்டுமென்ற ஏக்கமே பெரிதாய்த் தூக்கமின்றி காலங்கழித்தேன். நேற் றையதினம் வேட்டையாட வெண்ணி ஸ்வபரிவாரத்துடன் வனத்திற் குச் சென்றேன். வெகு நேரம் வேட்டையாடிக் களைசியில் ஒரு புலி யைத் துரத்திக்கொண்டு நானும் எனது சேவகனுமாக வந்தோம். புலி ஓருமலை மீது ஏறித் தப்பித்துக்கொண்டு போய்விட்டது. இதற்குள் இ ருளும் அதிகரித்து வரவே மனதிற்கு ஆயாசமுண்டாயிற்று. பிறகு நா னும் எனது சேவகனும் அவ்விடத்திற் கிடைத்த காய்கனிகளை யருந்தி அக்காட்டிலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்தோம். அத்தருண த்தில் நீ அழுத ஓசை கேட்டது. நீ சொல்லி வந்ததை யெல்லாம் கவனி த்தில் உன்னை இன்னுரென்று தெரிந்து கொண்டேன். உடனே மன தில் வியசன முண்டாயிற் றென்றாலும் இவ்வளவு சீக்கிரத்தில் உன்னை க்கண்ணைக் கிடைத்தது பற்றி பானடைந்த சந்தோஷமே அதைவிட அதி கமாயிருந்தது. அத்தருணம் அம்மரத்தின்மீது தற்செயலாய் அகப்பட் ட இரவிக்கையையும் சேலையையும் எடுத்து அணிந்து கொண்டு எனது பரிவாரங்களை யழைத்துவரும்படி என் சேவகனை யனுப்பிவிட்டுப் பெண வேட்டத்துடன் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது சிறிது நேரத்திற்கெ ல்லாம் நீவட்டிகள் சகிதம் எனது பரிவாரங்கள் வர அவைகளைக்கண்டு அச்சமுற்று நீயும் காணிருந்த மரத்தின் மீதே ஏறினாய். நானும் உன்னை அதிக பிரியத்துடன் உட்காரச்செய்து என்பெயர்மனமோஹினி என்று சொன்னேன். பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் உனக்கே தெரியவரும் என்று கூறினர். இதைக் கேட்டதும் சுகுணமாலினி அதிக ஆனந்தத் தோடு "ஹே ஸ்வாமி நீங்கள் தான் பிராணப்திபென்று கலாலங்கிருத ரின் பாதங்களில் நமஸ்கரித்தாள். அவரும் அதை யன்புடன் ஏற்றுக் கொண்டார். பிறகு சந்திரகிரி இராஜ்ஜியத்திற்கு ஆள் அனுப்பி விசா ரித்ததில் கருணாகரனிறந்த செய்தியும் வீரசேகரி மன்னர், கமலாக்ஷி, சு லோசனி ஆகிய இம்மூவரும் அரணமனையை விட்டகன்ற வர்த்தமானங் களும் தெரியவந்தது. சுகுணமாலினி இதைக் கேட்டு வெகுவாய் வியச னித்து இவ்வளவு காரியங்களும் பிரதாபன், தன்மதி இவ்விருவர்களால் தான் நேர்ந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்து சந்திரகிரியைக்கைப்பற் றும்பொருட்டி கலாலங்கிருதரிடம் கூறினள். அவரும் அப்படியே சந்திரகிரியின் மீது படையெடுத்துப்போய் அதைக் கைப்பற்றித் தன்மதி, பிரதா பன் இவ்விருவர்களையும் சிறையிலடைத்து சந்திரகிரியைத்தன் இராஜ்ஜி யத்துடன் சேர்த்துக்கொண்டு செங்கோலோச்சிவந்தார்.

(தொடர்ச்சியுண்டு.)

ஹிதோபதேசம்.

வாகோதரிகாள்! உங்களுக்கென்று நாம் கூறும் சிலபுத்திமதிகளை அ திக கவனமாய்ப் படித்து அதன்படி நடப்பீர்களானால் வெகு ஸுகிகளா வீர்கள். எல்லோராலும் கொண்டாடப்பட்டு நற்பெய ரெடுப்பீர்கள். ஆ னதால் இதைக்கவனியுங்கள். யாரிடத்தில் தன மில்லையோ அவர்கள் ஒ ரு காலும் சுகப்பட மாட்டார்கள். பூமி, தான்யம், மாடு, கன்றுகள், தங்க ம்,வெள்ளி,இரத்தினம் முதலியவைகளிருந்தாலும் அவைகளால் நாம் அ திக பிரயோஜன மடைந்து லாபத்தோடு வாழ்ந்தாலும் அவைகள் சாஸ் வதமான தனமல்ல. நமக்கு சாஸ்வதமானதும் ஸுகம் தரக்கூடியதுமா ன தனம் எது? வித்தியாதானமே. அது நாசரஹிதமானது. அஞ்ஞானத் தில் அகப்பட்டுத் தவிக்கும் மனிதனுக்கு வித்தையானது சூர்யனைப்போ ல் பிரகாசத்தைத் தருகின்றது. நமக்கு வெளிக்கண்ணிருப்பது நிஜமானா லும் ஞானக்கண் இல்லாவிட்டால் நாம் அந்தகர்கள் தான். ஞானத்துக் கு வித்தை தாயைப்போல் உள்ளது. உனக்கு ஞானம் வேண்டுமானால் நீ நன்றாய் வித்தைகற்கும்படி பிரயாசைப்படு. பாலோடு தண்ணீரைச் சேர்த்தால் பாலின் நிறம் தண்ணீருக்கு உண்டாகும். சேற்றோடு தண் ணீரைக் கலந்தால் அந்த நிறம் அதற்கு உண்டாகும். அதைப் போலவே நீங்களும் நல்ல ஸகவாசத்தால் உத்தமிகளாவதும் கெட்ட ஸகவாசத்தா ல் துஷ்டைகளாவதும். ஆனதால், ஆரம்பத்தில் வித்தையைக்கற்று அ வைகளிலுள்ள ஸத்போதனைகளையும் நீதிகளையும் மறக்காமல் அனுசரித் து வாருங்கள். பால்யத்தில் தான் பிரயாஸமான வித்தைகளை, கற்கக்கூ டும். அப்புறம் மந்தமதிகளாய் விடுவீர்கள். பிரதமத்தில் வித்தையைக் க ற்பதோடு கூட மரியாதைகளையும் கற்கவேண்டும். நீங்கள் புத்திசாலியாவ தோடு மரியாதையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். பெரியோர்களோ டு பேசும் போது நீ அவன் இவன் என்று ஏகவசனங்களைப் பிரயோகிக் காமல் பகுவசனங்களாகிய நீங்கள் அவர் இவர் என்று சொல்லுங்கள். யாரோடு பேசினாலும் சிடுமூகங்கொள்ளாமல் பிரஸன்ன முகத்தோடு பேசவேண்டும். ஸத்யமான வார்த்தைகளைத் தவிர பொய் சொல்லப்ப டாது. சோம்பேறித்தனமாயிருக்கக் கூடாது. அறுபது காழிகையும் புரு ஷனைப்போல் படிக்கப் படாது. அது பிசகு. உங்கள் தாய்மார்கள் செ ய்யும் கிருத கிருத்யங்களை நீங்கள் செய்யக்கற்றுக் கொள்ளுங்கள். அத்து டன் வினயத்தையும் கைக்கொள்ளவேண்டும். அது தான் உங்கள் ஸ்தி ரத்தி. அதைக் கொண்டு துஷ்ட மிருகங்களைக் கூட வசப்படுத்திக் கொ ள்ளலாம். அகங்காரத்தை சத்துரு வென்று நினைத்துக் கொள்ளுங்கள். யா ரோடு எந்த வார்த்தை பேசினாலும் மனதுக்குள் மூன்று தடவை யோசி த்து சொல்லலாமா வேண்டாமா வென்று கவனியுங்கள். நீங்கள் நல்ல ஸ கவாஸம் செய்யவேணுமே யன்றி அண்டை அயலார் வீட்டில் உட்கார்ந் து அவன் புருஷன் கொண்டி, இவள் நடத்தை இப்படி, அவள் மூக்குபெ ரிது, இவள் மாமியார் துஷ்டையென்று இல்லாதவம்புகளைப் பேசப்படா து. கம்மெல்லோருக்கும் விசார கர்த்தரான கடவுளிருப்பதால் அவருக் கு விரோதமாய் நாம் அன்னியரை குறை கூறப்படாது. இந்த ஸ்திதியில் நீங்கள் நடந்து கொள்வீர்களானால் உங்களுக்குத் தகுந்தாப்போல் ஒரு உத்தமபுருஷன் அகப்படுவான். அவனோடு பதிபக்தைகளாய் நீங்கள் ஸம் ஸாரம் செய்யலாம். அந்த ஸம்ஸாரகாலத்தில் இப்போ திருப்பதைவிட

அதிக ஜாக்கிரதையாய் கடந்து கொள்ளவேண்டும். பதியின் மனப்படி சன்மார்க்கிகளாய் உத்ஸாக, குணமுள்ளவர்களாய் பரஸ்பரத்து பரபுருஷகமனம் இவைகளைத் துறந்தவர்களாய் எப்பொழுதும் ஈஸ்வர ஞானத்தியானித்து தர்மமார்க்கத்தைக்கைவிடாமல் அனுஸரித்துவிவேகமாய் நடந்து கொள்ளவேண்டும். இப்படி யெல்லாம் நீங்கள் நடந்து வருவீர்களானால் உங்களை உத்தமிகளென்று எல்லோரும் கொண்டாடுவார்கள். இங்ஙனம் அனைவரும் உங்களைக் கொண்டாடத்தக்க வண்ணம் ஸன்மார்க்கத்தை யனுசரித்து நற்பெயரடைய முயற்சிக்கக் கடவீர்களாக.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

ஹிருதயானந்தினி.

அனேகருக்கு ஹிதோபதேசங்களைச் செய்து பரோபகாரமான பல விஷயங்களைப்புரிந்து நற்குண நற்செய்கைகள் நிறைந்த நாயகனுடன் கூடி நானிலம் புகழ வாழ்ந்திருந்த நாரியர் நாயகமான ஹிருதயானந்தினி எனும் பெயரிய பதிவிரதா ரமணியின் சரிதையாகுமிது. இதையும் இன்னுமிதுபோன்ற அனேக நற்கதைகளையும் பலவருஷங்களுக்குமுன் இந்தியாவின் சிருங்காரவனம் என்றழைக்கப்படும் வங்கதேசத்தில் மிகுந்த பிரக்யாதிபெற்றுத் திலகம்போல் ஜ்வலித்த பங்கிம் சந்திர சட்டோபாத்யாய ரவர்கள் வங்காளிபாஷையில் வெகு சமத்காரமாய் இயற்றி வெளியிட்டார். அக்கதைகள் பிரஞ்சு, கிரீக் முதலிய பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் கன்னட பாஷையு மொன்று. இப்பாஷையில் அக்கதைகளை மொழிபெயர்த்துப் பிரகடனஞ்செய்த கனவான் மைசூர் டிஸ்திரிக்ட்முனிஸீப் மகா-ரா-ராஸ்ரீ B. வெங்கிடாசாரியாரவர்களாவர். மேற்படி கதைகள் பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே அவற்றின் அருமையை கன்கு விளக்குவதற்குத்தக்க சான்றாகும். இக்கதைகளை அனைவரும் வாங்கி வாசித்து ஆனந்திக்க வேண்டுமென்ற அபேக்ஷையினாலும், நற்தமிழ் நாட்டார்மீது வைத்திருக்கும் அபிமானத்தாலும், நமது சந்தாதேயர்கட்கு சந்தோஷத்தை விளைவிக்கவேண்ணியும் நமது பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமிசாஸ்திரியாரவர்களை மைசூருக்கனுப்பி மகா-ரா-ராஸ்ரீ B. வெங்கிடாசாரியாரவர்களிடம் சுமார் 50க்கு மேற்பட்ட கதைகளை மொழிபெயர்க்க அனுமதிபெற்றுக்கொண்டு வரச்செய்தோம். இக்கதைகளை நமது அனுகூலனின் இரண்டாவது ஸம்வத்ஸராரம்பத்திலிருந்து (அதாவது ஏப்பிரல் மாதமொடங்கி) மாதமொரு கதையாக வெளியிடுவதாய் நிச்சயித்து அதற்கென்று பிரத்யேகமாய் டிபார்ட்மெண்ட்கள் ஏற்படுத்தி நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவரப்படுகின்றன.

இக்கதைகளிலெல்லாம் மிகச்சிறந்ததாயும் 50 கதைகளினின்றும் பொறுக்கி யெடுத்ததாயும் பின்னால் வெளியிடப் போகும் பரிமளா, கிருபதகுணகரி, கலாரஞ்சனி முதலிய பல கதைகளுக்கும் அஸ்திவாரம் போலுமிருப்பது ஹிருதயானந்தினி கதை என்றே நிச்சயமாய்ச்சொல்லலாம். மேன்மைதங்கிய இக்கதா நாயகியின் குணம் வெளிப்படும்போது இப்பெயர் இத்தருணி சிரோமணிக்கே தருமென்பதையும், இவளுடைய

உன்னதமான நடத்தைகளையும், உத்தமமான் குணங்களையும் நம் நாட்டு ஸ்திரீகள் பின்பற்றி நலமடைய வேண்டுமென்பதையும், மனிதர்களுக்குண்டாகும் கஷ்ட சுகலாப நஷ்டங்களுக்கு முக்கிய காரணமாயும் கல்லறுமாகிய இல்லறத்திற்கோர் திலகம்போலும் விளங்கும் மாதர்களின்மனதை நல்வழியில் பிரவர்த்திக்கச்செய்து ஞானத்தை யூட்டுவதற்கு இக்கதையே போதுமென்பதையும், ஈஸ்வர பக்தியும், நீதியும் நன்னெறியும், சொல்லியும், பொருள் லயமும், இப்புத்தகத்தில் ஏராளமாயிருக்கின்றனவென்பதையும், வாசகர்கள் வெகு சுலபமாய் அறிந்துகொள்வர். ஹிருதயானந்தினியைப் போல் ஒவ்வொரு ஸ்திரீயும் சுத்த மனதோடும் நல்ல நடத்தையோடும் ஏகரீதியான பிரியத்தோடும் தத்தம் நாயகரைச் சந்தோஷப் படுத்தினால் ஈருலகவாழ்க்கையிலும் இன்புறலாம். ஒவ்வொரு அத்தியாயத்திலும் அடங்கியுள்ள விஷயங்கள் மனதிற்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவனவாயும், இன்பம் செறிந்தவாக்கியங்கள் பல நிறைந்ததாயும் ரசம் பொருந்தியதாயும், அதிக முக்கியமானவைகளாயுமிருக்கின்றன. இப்புத்தகத்தில் இடையிடையே வரும் சாதுர்ய சம்பாஷணைகள் படிப்பதற்கு வெகு இனிமையாயும், விவேகத்தை விருத்தி செய்வனவாயும், சன்மார்க்கத்தைக் கற்பிப்பனவாயும் விளங்குவதுடன் வாசிக்குந்தோறும் ஆனந்தம் அதிகமாகிக் கொண்டே வந்து முடிவில் புத்தகத்தை கீழேவைக்க மனம்வராமல் பன்முறையும் திருப்பித் திருப்பிப்படிக்கும்படியாக அதிலுள்ள இன்பமே தூண்டும் வண்ணம் வெகு சாதுரியமாய் எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தில் இதுவரையிலும் நம்மவர்கள் கேட்டிராத வங்கதேச சம்பிரதாயங்களும் அக்காலத்திய மாதர்களின் கற்பும் அவர்கள் அனுசரித்த சன்மார்க்கமும் ராஜரிஷ்டர்களான புருஷஹிம்ஹங்களின் வாகஸங்களும் அடக்கியிருக்கின்றது. பிரதிநித்தியமும் நம்புகிக்கும் அன்னம் காய்கறி முதலியன ஒரேவிதமாயில்லாமல் பலவிதங்களாயிருந்து ருசியைத்தருவதுபோல் பலவிதரசங்களை செறிந்து ஸ்வீகரித்துக் கொள்ளத்தக்கதான கல்விஷயங்கள் நிறைந்துள்ள விதம் விதமான அத்தியாயங்களையடக்கி அதிக விசித்திரமாயும் சொகுசாயும் கதை அமைத்திருக்கும் விதமும், ஆங்காங்கு காணப்படும் வர்ணனைகளும், வாசிக்கவாசிக்க அத்யந்த மகிழ்வைத்தருவனவாய் ஜ்வலிக்கின்றன. ஸ்திரீபுமான்கள் இயற்ற வேண்டிய கருமங்களின் அவஸ்யமும் உத்தம புருஷர்கள் நாடவேண்டிய சன்மார்க்கமும் பாலர் பாலகிகள் அனுசரிக்கவேண்டிய நல்வழியும் தக்கஉதாரணங்களுடன் பலசந்தர்ப்பங்களிலும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. உலகில்வசிக்கும் மனிதர்கள் மற்றவர்களைச் சகோதரர்களாக எண்ணி நேசித்து ஒருவர் மீதொருவர் பாராட்டவேண்டியவிஸ்வாசமும், கடவுளை ஆஸ்ரயிக்கும் பக்தர்களின் மனோபீஷ்டங்கள் நிறைவேறும் விதமும், ஸந்நிதிகளிருவரும் ஒற்றுமையை மேற்கொண்டு பரிபூர்விஸ்வாசத்துடனிருந்து சன்மார்க்கத்தில் நடந்துகொள்ளும்படி செய்யும் சாதுர்யங்களும், கதாநாயகியான ஹிருதயானந்தினி. தன்கணவனிடத்தில் செலுத்தும் பதிபக்தியும், அவ்வங்களுமணி தன் கற்பைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டிப்புரிந்த பலவிதஸாகஸங்களும், மத்தியமார்க்கத்தில்கள்வர்களால் துன்பப்பட்டுக்கலங்கும் பரிதாபமும், திருடர்கள் செய்யும் சூழ்வினைகளும் தந்திரோபாயங்களும், பதியின் பிரிவாற்றுமையும், அதிலுலடையும்சோகமும், கடைசியில் கனவனைக்கண்டுபிடிக்கும் சாமார்த்தியங்களும், யுவதிகளைக்கண்டமாத்தி

ரத்தில் புருஷர்களுக்குண்டாகும் சுகதுக்கங்களும், சிறுவர் சிறுமிகளுக்கென்றே எழுதப்பட்டிருக்கும் அனேக நீதிமார்க்கங்களும், இன்பகரமான கதைத் தொடர்ச்சியும், "சக்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல்" இதற்கிடையிடையே சேர்த்திருக்கும் பலசரித்திரங்களும், கடைசியில் அவைகளனைத்தையும் அழகுபெற முடித்திருக்கும் விஷேதமும், படிக்கப் படிக்கப்பேரானந்தப்பெருக்கையும் அத்யாச்சர்யத்தையும் உண்டுபண்ணும். ஒவ்வொருவரும் தம் மக்கட்கு இக்கதைகளே வாங்கித்தருவது பெரிய ஆஸ்திசேர்த்து வைப்பது போலாகும் இப்புத்தகத்தை வாசிப்பவர்களின் மனதை கல்வழியில் செலுத்துவதற்கு மற்றொருஆசார்யனேயும், சந்தோஷத்தை விளைப்பதற்குவேறொரு மித்திரனேயும் தேடவேண்டிய அவஸியமில்லை. நவரசங்களும் செறிந்து கல்கடையில் எழுதப்பட்டிருக்குமிக்கதையானது வாசிப்பதற்கு வெகு ஆனந்தகரமாயும், அடங்கியுள்ள விஷயங்கள்ஸ்வாரஸ்யமாயும், கதையின்போக்கும் முடிவும் இன்பகரமாயும், அமைத்திருக்கும்முறை வெகுவிநோதமாயுமிருக்கின்றது. பலரும் கொண்டாடத்தக்கதான சிறந்த விஷயங்களடங்கி கல்லாசிரியர்களைப் போலிருந்து கல்வழி கற்பித்து படிப்பதற்கு அதிக இனிமையும் ரசமும்பொருந்தி வேதாக்திகட்கும் உவப்பாயிருக்கப்பட்ட அனேக ஞான விஷயங்கள் செறிந்து வாசிக்க வாசிக்க மகிழ்ச்சியையும், கேட்கக் கேட்கப் பிரீதியையும் உற்சாகத்தையும் மேன்மேலும் உண்டாக்கி, உலகத்திலுள்ள ஒவ்வொரு வருடையவும் கடையுடை பாவனைகளே கன்கு விளக்கி, படிக்கப் படிக்கப் பரவசமளித்து முடிக்கமன மெழாமுதன்மையைப் பெற்றுக் கற்றோர்,மற்றோர் எற்றோராலும் அபிமானிக்கப்படும்படியாக இருக்கின்றதாகலான் இஃதை நமது கையொப்ப யோர்கட்கு இனுமையனுப்பி எமது கன்றியறிவை வெளிப்படுத்தத் தீர்மானித்தனம்.

மைசூர் போலீஸ் இனிஸ்பெக்டர் ஜெனரல் மகா-ஸ்ரீ-ஸ்ரீ. A. இரெங்கசாமி ஐயங்காரவர்கள் மைசூர் அரண்மனை மேலதிகாரி (Place Controller) யாகிய மகா-ஸ்ரீ-ஸ்ரீ இராய்பஹதூர் V. N. நரசிம்ஹ ஐயங்காரவர்கள், முதலிய பல கனவான்களாலும் கன்கு மதிக்கப்பட்டு மிகுந்த பிரக்யாதி பெற்றுள்ள பிரஜாபந்துகூடலன் பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியவர்களால் திருவாங்கூர் சமஸ்தானம் திவான் ஸர் V. P. மாதவராவ் C. I. E. அவர்கட்கு இந்த ஹிருதயானந்தினி புத்தகமானது ஸமர்ப்பிக்கப்படுகின்றது.

இன்னும் இப்புத்தகத்தை வாசிப்பதாலுண்டாகும் உபயோகத்தையும் அதின் பெருமையையும் இனி நாம் சொல்ல வேண்டிய அவஸியமின்றி நமது அன்பர்கள் தாங்களே யறிந்து கொள்ளக்கூடும். ஹிருதயானந்தினி என்னும் பெயரினாலேயே இன்பத்தைவிளைவிப்பதாயுள்ள இச்சர்வ லொக்கியமான புத்தகத்தை இப்பொழுது அச்சிட்டு வருகின்றோம். எப்போதும் முற்காலத்திய பண்டித சிரோன்மணிகளால் இயற்றப்பெற்ற எச்சரிதைகளும் ஒவ்வோர் காரணங்களைத் தெரிவிக்கவே முடிவு பெற்றிருக்கின்றனபோல் நாம் இனி வெளியிடப் போகும் வநிதா ரத்தினத்தினுடைய சரிதையின்சாராம்சமும் அதிகமுக்கியமானதென மதித்து இக்கற்சமயத்தைக் கைவிடாமல் சென்றவருடம் முன்பணமீந்து ஆதரித்தது போலவே இவ்வருடமும் ஏப்பிரல் மாத முதலில் வெளியாகி

161978

சகல தபாற்சிலவுகளு முட்பட ரூ-2-4-0க்கு இவ்விடமிருந்தெறிவிக்கப்படும் உறுதி மொழிச்சீட்டடங்கிய ஹிருதயானந்தினி புத்தகத்தைப் பெற்று நமது பத்திரிகையையும் அபிமானித்து கம்மையும் பெருமைப் படுத்தி நாம் இனி செய்வதாய் நிச்சயித்திருக்கும் தேசோபகாரமான விஷயங்களுக்கும் தூண்டுகோலா யிருந்து இப்புத்தகத்தின் பெயர், இதற்கேற்றதே என்று சந்தோஷிக்கும்படியான காலத்தை எதிர் பார்க்கும்படி கோறுகின்றோம்.

பத்திராதிபர்.

பிள்ளை வளர்ப்பு.

பிள்ளைகள் சேஷ்டைகள் செய்யும் பொழுதும் சொன்ன வார்த்தைகள் கேளாத பொழுதும் பூச்சாண்டிக்குப் போட்டு விடுவேனென்று பல விதமாய் அவர்களே பயமுறுத்துவது மிகவும் அவிவேகமானது. அப்படிச்செய்வதினால் அவர்களுக்கு வாலிபத்திலேயே கோழைத்தனம் பிடிபட்டுப் பெரியவர்களான போது தைரிய குணம் குறைவாயிருக்கும். அன்றியும் அவ்வித பயத்தினால் ஒரு வேளை அவர்களுடைய சரீரத்துக்குக் கூடத் தீங்கு கேரிடும். இராத்திரி வேளைகளில் சொப்பனத்தில் பிதற்றிக்கொண்டு தூக்கத்தில் பயப்பட்டு அழுவதினால் ஆரோக்கியம் குலைந்துபோகும். பிள்ளைகளின் மேல் உறத்துச் சினத்துகொண்டு கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடாது. அவை அவர்களுடைய நெஞ்சுக்களில் காராசங்கள் போலேறி வேதனை செய்யும். அவர்கள் குற்றஞ் செய்யினும், கோபித்துக்கொள்ளினும், குளிர்ந்த சொற்களினால் மனமினக் புத்திகள் சொல்லி ஆதரவு படுத்தவேண்டியது. வாக்கண்டனம் செய்யும் பொழுது கூட கோபத்திற்குப் பதிலாய் விசனக் குறிகளைக் காட்டவேண்டியது. குற்றஞ்செய்த பொழுது அவர்களைத்தொடைமேல் உட்கார வைத்துக்கொண்டு தமக்கு மிகவும் விசாரமாயிருக்கிறதென்றும் செவ்வையாய் நடந்துகொண்டால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமென்றும் சொல்லும் பட்சத்தில் அவர்கள் வெட்கப் பட்டவர்களாய் அன்புடன் தழுவிக்கொண்டு இனிமேல் இப்படித் தவறு செய்யோமென்று கூறுவார்கள். ஒரு முறை குற்றத்தை யொப்புக் கொண்டதின் மேல், எப்பொழுதும் அதையே எடுத்துச் சொல்லிக் காட்டக்கூடாது. மேலும் பத்து குற்றத்துக்கு ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்து பிற்பாடு ஒரு தடவை பக்கென்று எரிந்து விழக்கூடாது. குழந்தைகளைப் பொய் சொல்லவிடக்கூடாது. ஏதாவது வஸ்துவை யுடைத்து விட்டபொழுது அவர்கள் மேல் சினந்து கொள்ளாமல் கல்ல வார்த்தைகளுடன் குற்றத்தை யொப்புக்கொள்ளச் செய்யவேண்டியது. அப்படி ஒப்புக் கொண்ட தக்ஷணமே அவர்களை யன்புடன் தடவிக் கொடுத்து முத்தமிட்டு இனிமேல் ஜாக்கிரதையாயிருக்கும்படி போதிக்கவேண்டியது. பிள்ளைகள் ஒருவரோடொருவர் சண்டை செய்யும் பொழுது அவர்களை கல்ல வார்த்தைகளுடன் அமைதிப்படுத்திக்கலகம் கூடாத காரிய மென்றும் ஒருவரை யொருவர் நேசிக்கவேண்டு மென்றும் சாந்தத்துடன் போதிக்கவேண்டியது. தப்பிதங்கள் செய்த பொழுதுகூடப் பிள்ளைகளை யடிப்பது கல்லதல்ல. சாத்தியமான வரைக்கும் கல்ல வார்த்தைகளையே பேசி கல்வழிக்குக் கொண்டுவரவேண்டியது. அடிக்கிறேம் பாரென்று யாதொரு காரணமுமில்லாமலே என்றைக்கும் அச்சுறுத்துவது கூடாது. பிள்ளைகளுக்கெதிரில்

கெட்ட வார்த்தைகளை உச்சரிக்கக் கூடாது. வேலைக்காரர்கள் கூட அப்படிப்பட்ட சொற்களை யுச்சரிக்காதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது. வேலைக்காரர்கள் மூலமாய் பிள்ளைகளுக்கு அநேக துரப்பியாசங்கள் பிடிபடுகின்றன. ஆதலின் கல்லவர்களை அமர்த்திக் கொள்ளவேண்டியது அதிமுக்கியம். பிள்ளைகளுக்குக் கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தும் மற்றவர்களெதிரில் சொல்லச் செய்து கொண்டாடுவது எள்ளளவும் நலமுள்ளதல்ல. (இன்னும் வரும்.) M. S.

யுத்தம்:— ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் யுத்தம் பலமாய் நடக்கின்றது.

பத்திராதிபர் குறிப்புகள்:— அடுத்த வருடத்திற்கு சந்தாதாரர்களாய் இருக்கப் பிரியப்படாதவர்கள் இம்மாதம் 22உ க்குள் தெரிவித்து விடவேண்டும். அங்ஙனம் செய்யாதவர்கள் சந்தாதாரர்களாகவே கருதப்படுவார்கள். சென்றதடவை குறிப்பிட்டபடியே 16—3—05 ல் பத்திரிகையைப் பிரசுரஞ் செய்துவிட்டோம். ஏப்பிரல்மீ தொடங்கி பிரதி முதியும் முதல் தேதியிலேயே நமது பத்திரிகை வெளிவரும். இனும்புத்தகமாகிய ஹிருதயானந்தினி, காலண்டர், உறுதி மொழிச் சீட்டு இவைகளுடன் ஏப்பிரல் மாதத்திய பிரஜாபந்துகூலன் பத்திரிகையையும் சேர்த்து 1—4—05 ல் V. P. P. மூலம் அனுப்பப்படி மாகலான் அதைத் தாமதமின்றி பெற்றுக் கொள்ளுமாறு நமது கையொப்ப நேயர்களை மிகவும் வேண்டிக் கொள்ளுகின்றோம். ஏப்பிரல் மாத முதல் பலவித சீர்திருத்தங்களுடனும் நவீன ஏற்பாடுகளுடனும் உயர்ந்த கடிதத்தில் அருமையான விஷயங்களை யடக்கி வெளியிடுவதுமன்றி அடிக்கடி சித்திரப் படங்களும் பிரசுரிக்கப்படும். அனிப்பதாகச் சொல்லிய மற்றொரு புத்தகம் மேமீ க்கடையில் அனுப்புவோம். நமது சந்தா நேயர்கள்நம்மீதும் பிரஜாபந்துகூலன் பத்திரிகையின் மீதும் வைத்திருக்கும் அன்பு என்னும் வளர்வதாக! மங்களமஸ்து.

கடிதங்கள்.

அடியில் வரும் கடிதம் மிகுந்த பிரக்யாதி பெற்ற ராய்பகதூர் வி. யென். ரவிம்ஹ ஐயங்காரவர்களால் பிரஜாபந்துகூலன் பத்திரிகையின் அஸிஸ்டெண்ட் எடிடராகிய T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரியாரவர்களுக்கு எழுதப்பட்டது.

THE ANANDASRAM HALSURPETE
Bangalore City 26th February 1905.

மகா-ரா-ரா-ஸ்ரீ கிருஷ்ணசாமி சாஸ்திரிகளுடைய சமூகத்திற்கு நமஸ்கார பூர்வகமான விஞ்ஞாபனம். தாங்கள்எழுதினகடிதம் சேர்ந்தது. மிக்க ஆவலுடன் பெற்றுக்கொண்டேன். * * * மகா-ரா-ரா-ஸ்ரீ வெங்கி டாசாரியாருடைய காவல்கள் இந்த கன்னட நாட்டில் ஜனங்களால் மிக்க ஆதரவுடன் வாசிக்கப்படுகின்றன. அவர் அந்த புஸ்தகங்களை எழுதினதற்கு வெகு பிரக்யாதி வாங்கியிருக்கிறார். நன்னெறிகளைப் போதிக்கிறதாகையால் ஜனங்களுக்கு விசேடமாக உபயோகமாயிருக்கின்றன. இப்புஸ்தகங்களைத் தாங்கள் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் நாட்டில் பரப்புவிக்க முயல்வது பரம சிலாக்கியமா யிருக்கிறது. தங்களுக்கு தகுமான காரியமாயுமிருக்கும் * * *.

(ஒப்பம்) வி. யென். நரசிம்ம ஐயங்கார்.

பிரஜாபந்துகூலன்.

பருவம். 2. } 1905 ஜூலை ஏப்பிரல்மீ { இலக்கம் 1.

விஞ்ஞாபனம்.

சர்வேஸ்வரனது கிருபா கடாக்ஷத்தால் நமது பிரஜாபந்துகூலன் பத்திரிகைக்கு சென்ற மாதத்துடன் ஒருவருடம் பூர்த்தியாகி இம்மாதத்தில் இரண்டாவது வயது பிறந்திருக்கின்றது. சென்ற வருடத்தைவிட இக்கடைபெறு மாண்டில் நமது பிரஜாபந்துகூலன் நமது கண்பர்களின் பிரீதிக்குப் பாத்திரனாகி அதியுன்னதமாய்ப் பிரகாசிப்பா னென்பதை யறிவிக்க மிகவும் சந்தோஷிக்கின்றோம். பிரதம ஸம்வத்ஸரத்தில் விஷய தானம் புரிந்து இப்பத்திரிகையை அலங்கரித்து வந்த நம் நிரூப சிரேஷ்டர்கள் இவ்வருடமும் இனிமேலும் அங்ஙனமேசெய்யச் சிறிதும்பின்வாங் கமாட்டார்களென்றேநம்புகின்றோம். இலேப்புற்று வருமொருபாட்டை சாரியானவன் சத்திரமொன்றைக் கண்டடையு மானந்தத்தைப் பார்க்கிலும்; தக்க தருணத்தில் இப்பத்திரிகைக்கு உதவிசெய்து போஷகராயிருந்துவரும் நமது கண்பர் மகா-ரா-ரா-ஸ்ரீ T. M. பொன்னுசாமி பிள்ளை யவர்கள் நமது அனுகூலன் விஷயத்தில் வைத்திருக்கும் அபிமானத்தை யறிய எய்தும் மகிழ்ச்சியே அதிகமாயிருக்கின்றது. கனம் கண்பரவர்கள் நமது பத்திரிகைக்கு என்றும் போஷகராயிருந்து சர்வானுகூலராய் விளங்கி ஸத்கீர்த்தியடைவாராக. சென்ற ஸம்வத்ஸரத்தில் இப்பத்திரிகையை ஆதரித்து வந்த சந்தாதாரர்கள் இதைக் கைவிடாமல் இவ்வருடமும் அபிமானிக்க முன் வந்திருப்பதை யறியச் சாலவும் சந்தோஷிப்பதோடு இப்படியே என்றும் ஆதரித்து வருமாறு அவ்வுத்தம சிலர்களை யாம் பெரிதும் வேண்டிக் கொள்ளுகின்றோம். நமது ஆபீஸ் வேலை அதிகரிப்பால் கேலண்டர் புதிதாக அச்சிடுவதற்கு சாத்தியப் படவில்லை யாகலான் இத்திருச்சிராபுரியின்கண் 'திருச்சிநேசன்' 'திராவிடபோதினி' பத்திரிகைகளின் ஆசிரியராயிருந்த நமது ஆப்த மித்திரர் மகா-ரா-ரா-ஸ்ரீ M. D. சுப்பிரமணியபிள்ளை யவர்களுடைய கம்பெனியின் கேலண்டரை அனுப்பியிருக்கின்றோம். நமது கண்பர்கள் நம்மீதும் நமது பத்திரிகையின் மீதும் வைத்திருக்கும் அபிமானத்தையும் அன்பையும் எம்மிதய பரிபூரணமாய்த் தெரிந்திருக்கின்றோ மாகலான் அவ்வுத்தம சீலர்களின் பேரானந்தப் பெருக்கை அபிவிருத்தியடையச் செய்யுமாறு அச்சிடப்பட்டிவரும் அத்யத்புத கதையாகிய ஹிருதயானந்தினி இன்னும் முடிவடையாத காரணங்கொண்டு இம்மாதத்திய சஞ்சிகையுடன் அனுப்பக்கூ

டவில்லை. அடுத்த மாதக் கடைசிக்குள் புத்தகம் அச்சிடப்பட்டு முடிவ டைந்து விடு மாகவின் ஜூன் மாதத்தில் அனைவருக்கும் அனுப்பப்படு மாதலால் நமது நேயர்கள் மன்னிப்பார்களாக. கடவுளுடைய பிரீதி பக்தினிடமே ஊன்றுவது போல் நமது சந்தாதாரர்களின் அபிமானம் பிரஜாபந்துகூலன் பத்திரிகையையே நாடியிருக்கவேண்டுமென்பது நமது பிரார்த்தனை. பயனுள்ள விஷயங்களை யடக்கிக் கொண்டிருக்கும் பிரஜாபந்துகூலன் பத்திரிகையின் அருமை பெருமைகளை யுணர்ந்த நமது அன்பர்கள் இப்பத்திரிகையை யெப்போதும் ஆதரித்து வருவார்க ளென நம்புகின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம் எல்லோ ரையும் இரக்ஷிப்பாராக. மங்களமஸ்து.

பத்திராதிபர்.

உள்ளது விள்ளல்.

வாய்மையாவது ஒருவனுக்கு எத்தகைய இடுக்கண் உறினும் உண்மையேபேசுதல். சுடியகடல்சூழ்ந்த இப்பூவுலகின் கண்ஒருவன் பொய்யனென்று ஐயப்படுவதற்கு ஆளாவதைப்போல், மனவேதனையை யுண்டாக்குவது பிறிதொன்று மில்லையென்பது திண்ணம். இப்பழிப்பை ஒருவன் ஒருகணமேனும் பொறுத்தலரிது. இதுநியாயத்துக்கும் ஒத்ததே; பொய்யனென்று புகலப்படுவது சாலவும் அவமதிப்பை விளைக்கத்தக்கது. அப்படியிருப்பினும் நாம் வாய்மை யுடையவர்களாக விருக்கச் சிறிதுங் கருத்துக்கொள்வதில்லை. நம்மை யுள்ளபடியன்றி வேறுவகையாகத் தோற்றுவிக்கவும் நமது மனத்தின் கண் இல்லாததை வாயினுரைக்கவும் நாம் முயலாத காலமில்லை நிமிஷமுமில்லை. நாம் யாதாயினும் ஒரு வழியில், எவ்வித காரணம் பற்றியோ, நம்மனத்தின் கண்ணுள்ள உண்மையென்னும் ஸ்படிகத்துக்குச் சமானமான வெண்மலரை மலினமாக்குகிறோம். இவ்வனமாவதற்குக் காரணமென்னவெனச் சற்று விசாரிப்போம். சிறுவர்களும், சிறுமிகளும் தாம் தாம் செய்த குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தினுலேயே பொய் புகலும்படி நேரிடுகின்றது. அவர்கள் ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்து அக்குற்றத்தை ஏற்றுக்கொள்ள அஞ்சி அக்குற்றமாவது அதனால் விளையும் கேடாவது பிறர்மேல் சாரும்படி ஒரு பொய்க் காரணஞ் சொல்லி மறைக்கின்றனர். தாம் செய்த குற்றமாவது, வேறு எவ்வகைப் பிழையாவது வெளிப்படுமாயின், நம்மைத்துன்பத்துக் குள்ளாக்கிவிடுமென்பதைத் தெரிந்தபோது சிலவேளை அவற்றைத் தாமே செய்ததாக ஏற்றுக்கொள்வது கடினமே. ஆயினும் அக்குற்றம் நாமே புரிந்ததாக ஒப்புக்கொண்டு தற்காலம் அதற்கேற்ற தண்டனைக்குடன்படுவது நல்லதா? அன்றிப் பொய் சொல்வதாகிய பெரும் பாவத்துக் குள்ளாகி என் செய்தோமென மனம் பரிதபித்து எப்பொழுது குற்றம் வெளியாய் விடுமோவெனப் பயந்துகொண்டிருப்பது நல்லதா ? ஆராய்ந்து பார்க்கு மளவில் முற்கூறிய படி செய்வதே நலம்.

தாம் செய்த பிழையை தைரியமாய் ஒப்புக் கொண்டு வெளிப்படையாய்ப் பொய் சொல்லப் பின் வாங்குகிறவர்கள் அனேகருளர். ஆயினும் அவர்கள் முற்றிலும் யதார்த்தவாதிகளாகார்கள். அதிசயோக்தியாய் அணுவை மேருவாகக் கற்பித்துக் கூறிவிடினும் பிதமிஞ்சிப் பேசுகிறவர்கள் பல்ருளர். அவர்களும் யதார்த்தவாதிகளாயிருப்பது அருமைதான். பலவகையான பொய்களினும் என்னளவு உண்மை கலந்த பொய்யே மிகப் பொல்லாத பொய்யாகும். முற்றும் பொய்யா யிருப்பதைக் கண்டுபிடித்து வெல்லலாம். பாதி மெய்கலந்த பொய்யை வெல்வது தான் வருத்தமானது. தான் பொய்யென்று தெரிந்தும் அதைப் பேசினுல் தன் மனமே தன்னைக் கெடுக்கும். உண்மை சொல்லுமொருவன் தவம் தானம் செய்பவரினும் மேலானவன், பொய்சொல்லாமையேபுகழ், அது வெல்லாத் தருமங்களையுங் கொடுக்கும். நீரால் உடம்பு சுத்தப்படுத்தப் படுமாறுபோல், அகம் வாய்மையால் சுத்தப் படுத்தப்படும். சந்திரன் சூரியன் எவ்வாறு உலக விருளைப் போக்குமோ அவ்விதம் அகத்திருளைப் போக்க வல்லமை யுள்ளதாம் வாய்மை. மெய் சொல்லுகிறவனுக்குஅதனுல் ஒரு கேடு வந்ததாயினும், அவனுள்ளத்தில் மகிழ்ச்சியே பெரிதும் உண்டாகும். அவன் பகைவர்களும் அவனை கன்கு மதிப்பார்கள். பிறராலே கன்கு மதிக்கப்படவும்தன் காரியம் சித்தி பெறவும் ஒப்பு மொருவன் மெய்யே பேசல் வேண்டும். ஒருவன் தன்மனம் அறிந்த தொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் பேசாதிருக்கக் கடவன். பொய் சொன்னுனுயின், அவன் மனமே அப்பாவத்துக்கு சாட்சியாய் நின்று அவனைச்சுடும். உண்மை சொல்லு மொருவன் இம்மையில் கீர்த்தியையும், பொருளையும், மறுமையில் புண்ணியலோகத்தையுமடைவான். உலகப் பிரசித்தமான அரிச்சந்திரன் கதையும் இங்கு கோக்கற்பாலது.

சத்தியத்தின் மிக்க தருமமும் அசத்தியத்தின் மிக்கபாவமும் இவ்வுலகில் ஒன்றும் இல்லை. க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

மதுபானம் மதியீனம்.

பஞ்சமகா பாதகங்களி லொன்றுகிய மதுபானஞ் செய்கிற மதியீனர்கள் பணத்தைக் கொடுத்துப் பைத்தியத்தை வீலைக்கு வாங்குவது போல் விலக்கற்கரிய பல துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். அவர்களுடைய குடியே குடியைக் கெடுக்கின்றது. தாயென்றும், தாரமென்றும், மேத்திய மென்றும், அமேத்தியமென்றும், நல்வினையென்றும், தீவினையென்றும், கீர்த்தியென்றும், அபகீர்த்தியென்றும், சாரமென்றும், அசாரமென்றும் பேதஞ்சொரியாமல் வீட்டை விற்று, மானங் கெட்டு, மரியாதை கெட்டு, மதிகெட்டு, விதி கெட்டு, பெண்சாதி ஒருபக்கம், பிள்ளைகளொருபக்கம், ஜனத்தா ரொருபக்கம், தாங்களொரு பக்கமாய்த் திரிகிற குடியர்களுடைய பெருமையை என்னென்று சொல்லலாம். அன்னூர்க்கு கள்ளுக்கடையே காணியாட்சி, சுப்பை மேடே குடியிருப்பு, பூமுடியே போர்வை, சாம்பலே சப்ரமஞ்சம், சாணியே தலையணை, ஆகாசமே ஆடை, மதுபானமே அவர்களுக்கு ஸ்நானபானம், வறுமையே அவர்களுக்குத்துணை. கள்ளையோ, சாராயத்தையோ குடித்தவுடனே அவர்கள் தங்கள் சரித்திரங்களைத் தாங்களே சொல்லிக்கொள்ளுகிறவர்களாதலால் நாம் இங்கே அவர்கள் மகத்துவத்தை விஸ்தரித்துச் சொல்லவேண்டுவதில்லை. "கள்ளைக் கொடித்து உள்ளதைக்கேள்" "சாராயத்தைக் கொடித்து பூராயத்தை யறி" என்னும் பழமொழிகள் வழங்குகின்றனவே. கள்ளுக்குச் சொல் விளம்பி யென்னும் ஒரு பெயருண்டன்றோ?.

"போதைக்காரன் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு" என்ற

படி சொல்லாததைச்சொல்லி தின்னுதைத்தின்று செய்யாததைச் செய்து, வாயில் வந்ததைக் கண்டபடிபிதற்றி, எங்குந்திரிந்து விழுந்து கிடந்து, எழுந்துகடந்தால் இடறிவிழுந்து, குடிக்க இல்லாதபோது கொள்ளையடித்து சூதாடி கண்டவர்களை வைது கன்னமிட்டு கடிந்தண்டனை அடையும் குடிகாரரின் பரிதாபஸ்திதியை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோமே.

மனிதருக்கும் மிருகத்திற்கு முள்ள பேதமெல்லாம் பகுத்தறிவுடைமை யொன்றேயாதலால் அந்த அறிவை மயக்கத் தக்க மதுவை யருந்துவோ ரெவரும் மிருகத்தன்மையடைவாரென்பது தோற்றம். அஃதெவ்வாறெனில், கள், சாராய மருந்துவோர்க்கு அறிவு மயக்கம் நேர்ந்தவழி தங்கள் முன்னிற்போர் இன்ன இயல்பினரெல்பதும், இன்ன முறையினரென்பதும், அவரிடத்துத் தாமிருக்கவேண்டியகிரமம்இத்தன்மைத்தென்பதும் அவர்களோடு இவ்வண்ணமாய் வார்த்தையாட வேண்டுமென்பதும், தாம் இருக்குமிட மின்னதென்பதும், தமது கோலம் இவ்வாறிருக்கின்றதென்பதும் அறிந்து கொள்ளாதிருக்கும்படி அறிவு மயங்கியிருப்பதால் அத்தருணத்தில் அவர்கள் தன்மை மிருகத்தன்மையே யென்று சந்தேக மறச் சொல்வது சர்வசம்மதிபற்கமேயாம்.

அந்தோ! மதுபானம் செய்வோர்கள் அறிவு மயக்கத்தாற் கண்ணிருந்துங்குருடாயும் காதிருந்துஞ் செவிடராயும் வாயிருந்தும் ஊமையாயும், கல்வியிருந்தும் மூடராயும் செல்வமிருந்துந்தரித்திரராயும் காணப்படுவார்களேயொழிய எக்காலத்தும்தங்கள் இயற்கை சுபாவத்தோடு விளங்க மாட்டார்கள். மேலும் இக்கள் சாராயம் அருந்துவதால், அறிவு, முயற்சி, மானம், மறியாதை அழிவதுடன் பரிவின் மிருந்த மாதாவும், பக்தியுடைய பத்தினியும், ஆர்வம் நிறைந்த சோதரரும், பிரியமேவும் பிள்ளைகளும் கோபித்து வெறுத்து அகுயை அடையும்படி நேரும். அன்றியும் மது மயக்கத்தால் மானங்கெட்டு நாணமிழந்து நிர்கையில் குடிகாசரைக் கண்டோர் அசோதன ஜந்துவைக் கண்டாற்போலும், நீயபாதகரைப் பார்த்தாற் போலும் அஞ்சிப் பயந்து இகழ்ந்துவிலகுவர். காமம் எவ்வாறு ஒழுக்கங்களைக் கெடுக்கின்றதோ அவ்வாறே குடியும் அறிவைக்கெடுத்து மயக்கத்தை விளைவிப்பதால் இக்குடி காமத்திற்கு முற்பட, வைக்குற்ற முடையதாகின்றது. செல்வராயினும், சிறந்த அரசராயினும், தேர்ந்த கற்றோராயினும், அன்னோர் மதுபானப் பழக்க முடையோராயின் சின்னாளைக்குள் அன்னோர் நன்னீர்மை முதலிய பன்னலமுங் கெட்டுப் பாழ்படுவர். தமது ஊழியராலுங்கூடத் தூஷிக்கப்படுவர்.

ஆகவே பெரியோர்களால் துன்மார்க்கனென்னும் பட்டப்பெயரடைந்து மதிப்புக் கெட்டுப் போகவேண்டுமென்று விரும்புகின்றீர் யாரோ அவர்களே இம்மதுவை யருந்துதல் வேண்டும்.

"உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப்படவேண்டாதார்"

என நீதி நூல் கூறுகின்றது. பிதுரார்ஜ்ஜிதமாகவோ, ஸ்வயார்ஜ்ஜிதமாகவோ தமக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு அறவழியே அபிவிர்த்தி செய்து, அறிவு விர்த்தியைத் தேடிப் புகழடைந்து பலராலும் கண்டு மதிக்கப்படுவதை விட்டு அப்பொருளைத் தகாத வழியிலழித்து, அறிவை மங்கெடுத்துக்கொண்டு, நிந்தாப்பழிப்புண்டு அசேதனராலும் இகழ்துரைக்கும்படி நடந்து வறியவராகி விடுவது எவ்வளவு மதியீனம்? மதுவுண்டு ஒருவன் மதுமயக்கத்தாற் காலுவையென்றும், சலதாரை யென்றும், வீதி

யென்றும், வீடென்றும், புறத் தின்னையென்றும், புழக்கடை என்றும் தெரியாமல் விழுந்து கிடப்பதைப் பலகாற் கண்ணுரக்கண்டும் ஐயோ, இதனை யுட்கொண்டால் நம்மையும் இப்படித்தானே நாசப்படுத்துமென்று கொஞ்சமும் உணராமல் மேலும் மேலும் அக்குடியை விரும்பும் கொடிய குடியரை எவர்தான் கையார்? இக்கள் சாராயங்களைக் குடிப்போர் நிச்சயமாகவே மீட்டுமிழ்கலா எரிவாய் நிரையத்தின் வாயிலை யணுகி நெருங்கிப் போகிறார்களென்னலாம். மதுபானம் அறிவை மயக்குவதால், மலத்தை அமுதமாகப் புசிக்கவும், அக்கினியை மலர்ந்த புஷ்பமென கையிலெடுக்கவும் கொடுமை விளைவிக்கத்தக்க விரோதிகளிடத்து நேராயகப்பட்டுக் கொள்ளவும் செய்யும். மதுபானிகளுக்கு விளையும் உரையாளப்பருந்தீமைகளை வரையறுத்துக்கூற எவர்தரம்? மதுவை யருந்துவோரடையுங் கஷ்டங்கள் கோடிகோடி பல்லாயிரங் கோடி என்போம். அத்தனை தீங்கும், கஷ்ட நஷ்டங்களும் இம்மதுவை யருந்துத லொன்றிலேயே நேர்ந்தன என்பதைச் சத்திய புத்தியுடன் தெள்ளிதில் தெரிந்துகொண்ட ஒருவன் மீண்டும் அதனை யருந்துவானுகில் அவனை மிருகங்களினும் கடைப்பட்ட மிருகமென்று சொல்வதில் ஆக்ஷேபமென்ன? குடி பழகிக்கொண்டவர்கள் அக்குடியால் வரும் கெடுதிகளையெல்லாம் பிரத்தியக்ஷ அனுபவத்திற் கண்டும் அக்குடியைச் சிறிதும் விலக்க முயற்சிக்கின்றார்களா? இல்லையே! துன்பத்தின்மேல் துன்பம் வரினும் மதுபானமே இன்பமென்று மகிழ்ந்து தன்னை மறந்து சன்னதங் கொண்டிருக்கிறார்கள். இதற்கோருதாரணம் அடியிற் கூறுவோம். [தொடரும்.]

நட்புக்கோடி.

ஞானம்பாள்.

இரண்டாவது அத்யாயம், வரவும் அதிர்ஷ்டமும்.

ராம்! ராம்!! மஹராஜ்!!! நாம் அதிக நேரம் எதிர் பார்த்தோம். ஏது இத்தனை நாழிகை? உட்காரலாம்! என வீரசிங்கு கூறினன்.

"தாங்கள் உட்காருங்கள் ஜமேதார்! எனக்கு இத்தனை மரியாதை செய்தது பயத்தை யுண்டு பண்ணுகிறது." என்று ராம்தாஸ் என்னும் சாவகாரி கூறிவிட்டு கொள்ளைத்தலைவன் உட்கார்ந்ததும், தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். உடனே கொள்ளைத்தலைவன் பேசத்துவக்கினன்.

வீரசி:—தாங்கள் வருகையில் மழை பொழிந்ததோ? அப்படியானால்நனைந்திருக்க வேண்டுமே?

ராம்தா:—மழை பெய்த சமயம் யான் வெளியேதவில்லை. பிற்பாடு சுத்திரோதயம் ஆனவுடன், இவ்விடம் வரலா மெனப் புறப்பட்டேன். யானின்றி தான் தங்களுக்கு ஒன்றும் ஓடாதே? எனப் புன்னகை புரிந்தான்

வீரசி:—சரி! அது கிடக்கட்டும். சில சமயங்களில், என்னுடைய சாவகாரிகளே! என்னை மோசப்படுத்தப் பார்க்கிறார்கள். அப்படியானாலும் அவர்களை நம்பாமல் நீரவில்லை, அதிருக்கட்டும். எவ்வளவு தொகை கொண்டுவந்திருக்கிறீர்? நான் கொடுத்த சாமானுக்கு ஜாப்தா என்னையிலிருக்கின்றது.

சாம்:—ஆ! ஜமேதார்! என்னுடைய சிறு கிராமத்தில் தங்கமும், வெள்ளியும் என்ன விலையாகப் போகிறது? முத்துக்கள் விலையே யாக வில்லே. இவ்வளவு அவசரத்திற்குள் விற்க முடியுமா?

வீரசிங்:—சரி! சரி!! என்ன கொணர்ந்திருக்கிறாய்? என் ஆட்களெல் லாம் குடித்து வெறிகொண்டு சண்டைபிடிக்கிறார்கள். அவர்களை கம்பக் கூடவில்லே. சீக்கிரம்! எவ்வளவு!!

சாம்:—(புன்சிரிப்போடு) இக்கே கணக்கிருக்கின்றது. பணம் குதி ரை மீது மூட்டையில் இருக்கிறது. எண்ண வேண்டாமா?

வீரசிங்:—போதுமானது! எனக் கூறி, சாவகாரியின் கையிலிருந்த கணக்கைப் பிடுங்கிக்கொண்டு "எவ்வளவு" என்று கேட்டான்.

சாம்:—அப்படியானால் மஹாராஜ்! எல்லாம் சேர்ந்து விற்றது மொ த்தம் இரண்டாயிரத்து அறுநூற்று காற்பது ரூபாயாகிறது. அந்த காலு மூட்டைக்கும் சேர்த்து.

வீரசிங்:—ஆ! பொய்யும் பிரட்டுமா? கூறுகின்றனே! உன் கணக்குப்படி யே பார்த்தாலும் கூட ஆயிரம் ரூபாய் மேல் வரும்படி யிருக்கவேணு மே? நீ திருடினயென்று நன்றாய்த் தெரிகின்றதே! மேலேயுமிருக்கலாம். இப்படி நீ செய்ததற்கு என்னுடைய ஆட்கள் பலியிட மாட்டார்களா? என்ன சொல்லுகிறாய்?

சாம்:—ஓ! மஹாராஜ்! என்னைப் பயப்படுத்த வேண்டாம். மன்னிக்க வேண்டும். நானே எளிய பலஹீனன். என்னுடைய சம்பாத்தியமோ மோசடியானதென்பது தங்களுக்குத் தெரிந்ததே. நான் சொல்வதெல் லாம் உண்மையென்று ஜகதீசன் மீது ஆணையிடுகிறேன்.

வீரசிங்:—இதோ! உற்றுக்கேள்! எது எப்படியிருந்தாலும், இப்போது 1000ரூபாய்க்கு கைச்சீட்டு யெழுதிக்கொடு. விலையாகாத சாமானுக்கு இது ஆதாரமாயிருக்கும்.

சாம்:—பிரபுவே! நன்றாய் யோசியுங்கள்! என்னுடைய தரித்திரத் தின் மீது தயைசெய்யுங்கள்.

வீரசிங்:—நான் மோசம் போகவில்லே. சண்பனே சீக்கிரம் எழுதவாய். தக்ஷணமே சாவகாரி மிகுந்த மனக் கிலேசத்துடன் சீட்டெழுதினன். உடனே தலேவன் நான் வேண்டும் போது இப்பணத்துக்கு வருவேன். ஞாபகமிருக்கட்டும்.

சாம்:—மஹாராஜ்! நான் கூறுவதைக் கேளுங்கள். என் வியாபாரத் தில் கொஞ்சம் உஷார்க்குறைவா யிருப்பேனையின், நிறைச்சாலேயே வீ டாகக் கொள்ள வேண்டியிருக்கும்.

வீரசிங்:—ஆஹா! ஹா! ஹா! (எனச் சிரித்துக்கொண்டு) இவ்வளவு பே டியா நீ. இவர்களால் என்ன ஆகும்! நானிருக்கிறேன். பயப்படுவதனு வசியம். (இன்னும் வரும்.) K. S. வைத்தியனாதய்யர்.

ஆரோக்கிய மார்க்கங்கள்.

(முன் தொடர்ச்சி.)

இரவும் பகலும் ஓய்வொழி வில்லாமல் வேலேசெய்வதினால் ஆரோக் கிய மழிந்து ஆயுட் சீணம் வந்து சேரும். வேலே வித்தை யில்லாமல் சோ ம்பேறித் தனத்தில் மூழ்கி யிருப்பதும் அற்பாயுளுக்குக் காரணமாகும். சந்தேகத்தினால் ஆயுள் விருத்தி சித்தியாவதோடுகூட வாழ்ந்திருக்கும்

மைபடி மூட்டை வரையரா வயது எவ்வளவு மனுஷ்ய? மதுவுண்ட ஒருவன் மதுமயக்கத்தாற் கால்வாயென்றும், சலதரரை யென்றும், வீதி

காலமெல்லாம் சந்தோஷமும் கூடியிருக்கும். பெரிய பெரிய பட்டணங் களிலிருப்பவர்கள் அப்போ தப்போது பச்சையான பயிர்கள் முதலியன செழித்திருக்கும் பள்ளிப்புறங்களுக்குப் போய்க் கொஞ்சகால மிருப்பதி னால் உல்லாசமும் சந்தோஷமும் விளேவதோடு சரீரமும் மனமும் கூடச் சுகப்படும். அகேக தேசங்களைப் பார்த்து வருவதினாற் கூட ஆயுள் விருத் திப்படும். பிரயாணத்தினால் உண்டாகும் சந்தோஷமும் அவ்வகைப்பிர தேசங்களிலிருக்கும் விஷேத விசித்திரங்களைப் பார்ப்பதினால் ஆனந்த மும் மனதில் நிறைந்து அறிவைமதப்பிக்கும். சவுக்கியமும் அதிகரிக்கும். வேலேக்கு ஸ்தானமாவது, சோருவது, துயிலாவது இடைக்காமல் சகல விதமான கஷ்டங்களேயும் பட்டுப் பிரயாணம் செய்வதினால் ஆயுள் விருத்திக்குப் பதிலாய் ஆயுட் சீண முண்டாகும். அமைதி, திருப்தி, தயவு, நினேகம், உற்சாகம், தைரியம்—இவை சந்தோஷத்தைப் பிற ப்பித்து ஆயுளே விர்த்தி செய்யும். முக்கியமாய் விருத்தாப்பியத்தில் சந் தோஷத்துடன் கூடியிருக்கு மிடத்து ஆயுள் விருத்தி யடையும். பேரா சை, அருவெருப்பு, பகை, உற்சாகமின்மை, நிராசை, விசாரம், சஞ்ச லம், துக்கம், கோபம், பயம்,—இவற்றினால் சீவசக்தி கெட்டு ஆயுட் சீண முண்டாகும். முக்கியமாய் மரண பயத்தைப் பாவித்துப் பாராட்டக் கூடாது. இதனால் ஆயுள் குன்றுவது போல வேறெதினாலும் குன்றாது. இவ்வச்ச மிருப்போருக்கு எவ்வித சுகங்களாயினும் சந்தோஷத்தைத் தாண்டமாட்டா. எத்தனேலே செய்த போதிலும் என்ன நேரிடுமோ வென்னும் சம்சயமானது இடை விடாது வருத்திக் கொண்டிருக்கும். அடிக்கடி மரண பயத்தைப் பாராட்டுபவர்கள் சீக்கிரமாய் பரலோகபதவி யடைவார்கள். நிரகஸ்தாசிரமம் அதாவது இல்லற வாழ்க்கையானது ஆயுள் விருத்திக்குச் சாலவும் அனுகூலமானது. அதினால் மனம் சஞ்சல ப்படாமலிருப்பதே யன்றிச் சந்தோஷமும் சவுக்கியமும் அதிகப்படும். புருஷனுக்குப் பெண்ஜாதிக்குறைவு போன்றது மற்றேது மில்லே. எத்த னே சவுக்கியங்களிருப்பினும் பெண் திக்கில்லாதவனுக்கு ஆழ்ந் தறியாக் குறைவு தோன்றிக் கொண்டிருக்கும். உலகத்தின்மீது ஆசையின்மையும் அருவறுப்பும் பிறக்கும். கணவி கணவர்களின் அன்யோன்னியநேசத்தை க்காட்டிலும், தாய் தந்தையர்களுக்கும் குழந்தைகளுக்கும் உள்ள பரஸ் பர பிரிய பந்தத்தைக் காட்டிலும் இனிமையானது இவ்வுலகத்தில் வேறி யாதனது? இந்தப் பிரேமாமிர்தத்தைக் காட்டிலும் ஆயுள் விருத்திக்குப் பரமெளஷதம் மற்றேதுண்டு? குணவதியாயிருக்கும் மனைவியையும் சற் குணமுள்ள சந்தானத்தையும் பெற்று ஆரோக்கிய மார்க்கங்களேக் கல விதது கடக்கும் மனுஷ்யன் சாலக்காலம் ஜீவிப்பதன்றி எக்காலும் ஆன ந்த சமுத்திரத்தில் நீந்திக் கொண்டும் சுகதரங்களில் லயமாடிக்கொண்டி ருப்பான். (முற்றிற்று.) M. S.

பக்தியோகம்.

(முன் தொடர்ச்சி.)

இப்படிப்பட்ட பாண்டித்துவத்தினால் ஞானத்தையடைய விரும்பு கிற சிஷ்யனுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லே. பகவான் ஸ்ரீ ராமகி ருஷ்ண பரமஹம்ஸர் ஓர் கதை சொல்வார். அதாவது மெ மனிதர்கள் ஓர் மாந்தோட்டத்திற்குட் சென்று அங்கே யிருக்கும் மரங்களேயும் அ

வைகளிற்குள்ளகிலேகளேயும் பழங்களேயும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்களெல்லோரிலும் புத்திசாலியான ஒருவன் தோட்டக்காரனே மெள்ளச் சிநேகஞ் செய்து கொண்டு, அவனிடமிருந்து பழங்களே வாங்கியுண்டு பசி தீர்ந்தான். இதைப்போல ஞானியானவன் பதங்களேக் கவனியாமல், ஆத்மா ஒன்றையே நாடி சதா விசாரணை செய்கிறான். வீணை வாய்ப்பிகள் காரியத்தில் உபயோகமற்றவர்களாயிருக்கிறார்கள். நாம்இப் பொழுது ஆசாரியர்களுடைய லக்ஷணங்களேப் பற்றி சில கூறுவாம். ஆசாரியருக்கிருக்க வேண்டிய மற்றொரு குணம் பாவம் செய்யாமை. சிலர் ஆசாரியன் பாவஞ் செய்தா லென்ன; புண்ணியம் செய்தாலென்ன; நாமேன் அவருடைய நடத்தையைக் கவனிக்க வேண்டுமென்பார். ஆசாரியன் குணகுணங்களேக் கவனியாமல் அவர் சொல்வதை மட்டும் கவனிப்போ மென்பது தப்பு. ஏதேனும் ஓர் புதிய சாஸ்திரம், அங்கணிதம் முதலிய புஸ்தகங்களேக் கற்றுக் கொடுக்கும் ஆசாரியர்களானால், அவர்களின் நடத்தையைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லே. ஆனால் மத சம்பந்தமான ஞானத்தை யுபதேசிக்கும் குருவிடம் பாவ காரியங்களிருக்குமானால், நாம் கெட்டுப்போவோ மென்பது நிச்சயம். பாவியான ஒருவன் மதபோதனே செய்ய அருகனன்று. ஆனதினால், மத விஷயத்தில், மட்டும் முதலில் ஆசாரியன் எப்படிப்பட்டவனென்று தெரிந்த பின்னர் அவன் உபதேசிப்பதைக் கவனிக்கவேண்டும். பணத்தையாவது, கீர்த்தியையாவது பெருமையையாவது உத்தேசித்து கற்பிக்கும் ஆசாரியன் ஞானாசாரியனன்று. உலகத்தினிடத்தில் கொண்ட பிரியாலும் கருணையாலும் மதாசாரியர்கள் பிரசங்கம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட கருத்தில்லா ஆசாரியனிடத்தில் உபதேசம் பெறுவதும் பிரயோஜன மற்றது. ஆகையால் நன்குணர்ந்த ஆசாரியனிடம் பயின்று, பக்தியை எங்களும் பறவானின் பாதார விந்தத்தில் சேர்ப்பித்து உடல்நெக்குருக ரோமஞ் சிலிர்ப்ப கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரியக் கடவுளேப்போற்றி நற்கதியடையஎந்நாளும்முயற்சித்தால் நாம்பெறற்கரிய பேறுகளிலொன்றும். பக்தியே பரமசாதனம். முத்திக்கு வித்து சித்தசுத்தியான பக்தியேயாம்.

(இன்னும் வரும்.] K. S. செல்லமய்யர்.

பொருள்.

கடல் குழ்ந்த இப்பூவுலகத்தின் கண் உண்டாக்கப்பட்ட கால்வகைத்தோற்றம் எழுவகைப் பிறப்பினுளடங்கிய எல்பத்துநான்கு லக்ஷம் ஜீவ்ராசிகளில் சர்வோத்திருஷ்டமாகிய மானிடப் பிறப்பையடைந்தால் மீண்டும் ஜனனமரண துன்பங்களுறுத வகையைக் கைக்கொண்டொழுகுதலே மேன்மை. அதாவது புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் முதலாவதாகச் சொல்லப்பட்ட அறமும் மூன்றுவதாகச்சொல்லப்பட்ட இன்பமும் சரியாய் நடத்திவர இன்றியமையாத துணைக்கருவியாயுள்ளது இரண்டாவதாகச்சொல்லப்பட்ட பொருளே. அப்பொருளில்லாவிடின் "வடவிலாவையத்து மன்னிய மூன்றில் கடவுளெய்த இறுதலேயும் எய்தும், நடவுள் செய்தாதான் எய்தும் உலேப்பெய், தவெதுபோலுந்துயர்", என்றவாறு பலவித்தகாலும் துன்பமுண்டாமென்பதில் சிறிதும் ஐயமில்லே. இதுயாவருக்கும் பிரத்தியக்ஷ அனுபோகமாயுள்ளது. அப்படிப்பட்ட பொருளேச் சம்பாதிக்குமிடத்து மெய் வழியைத்தழுவவேண்டுவது முக்கியமான விஷயம். பாவத்திற்கு ஏதுவான காரியங்களேக்கொண்டு பொருள் தேடல் மிகவும் அநுசிதம். தன்குலாசாரத்திற்கும் மற்ற யோக்யதைக்கும் குறைந்த காரியங்களேச் செய்தாவதுமதுமாம்சம்விற்றல் சூதாடல் திருடல் ஒருவனுக்குஹிதமான வார்த்தைகளேச் சொல்லி கம்பும்படியாகச் செய்து மோசம் பண்ணுதல் முதலியதீச்செயல்களேச் செய்தாவது பொருள் சம்பாதித்தால் பழியும் பாவமும் உண்டாகும். எவ்விதத்தினுலாவது பொருள்கிடைத்தால் சரியென்று நினேப்பது கொடுமையினும் கொடுமையே. கள் சாராயம் குடிப்போர் மதிமயங்கி கன்மைதீமை அறியாது தடுமாறுகின்றனர். சோற்றுக்காக ஒருபணம் யாசக மூலமாய்ச் சம்பாதிப்பவன் சோற்றுக்கு வேண்டியன வாங்காமல் குடித்துவருந்துகின்றனன். வீற்பவரில்லே யெனின் குடிப்ப வருமுண்டோ? குடியினுல் சூது திருட்டு முதலியன செய்து இராஜ தண்டனேக்குப்பாத்திரராகிப்பின்பு தேவதண்டனேக்கு மாளாகின்றனர். மதுபானம் செய்வோரைக்கண்டு இத்தீச்செயல் செய்யலாமாவென வினவினுல் ஒளவையாரே " குணமது கைவிடேல்" (குணமுள்ளதாகிய மதுவைக் கைவிடாதே) என்று சொல்லி இருப்பதால் தோஷம் யாதுமில்லே யென்று அவர்களுக்கு அனுகூலமானவிதமாக அர்த்தம் செய்துகியாயம் சொல்லுகின்றனர். (குணம்+அது) என்றுபதம்பிரிக்கவேண்டியதை விட்டு (குணம் + மது) என்று பதம்பிரித்துக் கொண்டு தள்ளாடுகின்றனர். தங்களுக்கிஷ்டமான வழியில் பதச்சேதம் பண்ணிக்கொள்கிறதென்ற நியாயம் போலும். இலக்கணத்தில் புணரியல்விதி பிவர்கட்கனுகூலமாக அமைந் திருப்பதாய் ஆனந்தம் கொள்கின்றனர். அந்தோ! இவர்கள் விதி தலேவிதியே. குடிப்போர் கெட்டுப்போகக் காரணபூதமாயேற்பட்டுப் பொருள் தேடல் கூடாத விஷயம். மாம்சபக்ஷணமாகா தென்று பெரியோர்கள் பலவாருக முறையிடுகின்றனர். "கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே," " கொல்லா விரதமதைக் கொண்டோரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே," என்று தாயுமானசுவாமிகளும், "புலேயுங் கொலேயுங் களவுந் தவிர்," என்று ஔவையாரும் மற்றும் பட்டணத்துஸ்வாமிகள் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் முதலாயினேரும் திருவாய்மலர்ந் தருளியிருக்கின்றனர். அப்படியிருக்கும் கற்றோரிலும் பெரும்பான்மையோர் மாம்ச பக்ஷணம் செய்கின்றனர். கல்லாத மூடர் விஷயத்தைப்பற்றிக் கவலேப்படுவது அனுவசியமேயன்றோ? ஆடு கோழி முதலியவற்றை உயிர் துடிக்கும்படி வாளோங்கி வெட்டி மாம்சபக்ஷணம் செய்து பாவத்திற் குள்ளாகின்றனர். இவர்கட்கும் காரணபூதமாயேற்பட்டுப் பொருள் தேடுதல் கூடாது. உயர் குலத்தினராயினும் மற்றெக்குலத்தவராயினும் நீதிசாஸ்திர ஆராய்ச்சிசெய்து இவ்விஷயங்களேப்பற்றித் தீர்க்காலோசனேயோடு கன்னெறியைக் கடைப்பிடித்து நடப்தே மேன்மை. பொருளீட்டலொன்றிலேயே மனதைச்செலுத்தவொண்ணாது. களசக்காவர்த்தியும் பஞ்சபாண்டவர்களும் சூதாடித் தமது இராஜ்யத்தை யிழந்து பட்ட பாட்டை யாராம் கல்வி கேள்விகளா லறியாதார்? சிலர் அநியாயவழியில் கடன் கொடுப்பது, (அதாவது, கடன் வாங்குவோன் தன் அவசர நிமித்தமாகக் கேட்ட வட்டி கொடுக்கச்சம்மதித்தாலும் கேட்டுக்கொண்டதொகைக்குத் தக்கவிதமாகக் கொஞ்சம் பிடித்

துக் கொண்டு பத்திரத்திற் கண்ட தொகை முழுதும் குறைவறவட்டியுடன் செலுத்த வேண்டுமென்ற கண்டிப்பாய்ச் சொல்லிக் கொடுத்தல்), நூற்றுக்கு இரண்டு மூன்றெனவட்டியேற்படுத்தல், முதலிய தன்பங்கள் செய்து எத்தகையோரையும் மான பங்கப் படுத்தித் தரித்திரஸ்திதிக்கு வரும்படி செய்துவிடுகின்றனர். தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமாய் நடப்பது குறைவு. ஸ்வயலாபத்தையே முக்கியமாய்க் கருதிப் பிறரைக் கெடுக்க முயலுவது பாவத்திற் கிடமேயொழிய வேறொன்றுமில்லை. எப்பொழுதும் எப்படிப்பட்டவரும் மேலான குணத்தை வகிக்க வேண்டுமேயொழிய அற்பகுணத்தை வகித்தல்கூடாது. அப்படியாயின் பழிப்பும் பாவமுமாம். கம்பீரமுள்ள யானையின் மேல் ஒருவன் பாணப்பிரயோகஞ்செய்து ஒருக்கால் அது தவறிப்போனலும் பெருமையுண்டாமேயொழிய இழிவுண்டாகாது. குள்ள நரியின் மீது பிரயோகம் செய்து அதனைக் கொன்று விட்டாலும் பெருமை யேதேனுமுண்டோ? அதுபோல் ஒருவன் தன் செல்வத்திற் கஞ்சிக் கீழ்ப்படிந்து கடப்பவனைப் பலவிதமான தன்பத்திற் குள்ளாக்கிப் பொருளீட்டுவதாற் பயனென்னே? பெருந்தகையோர் பிறரைக் கெடுக்கத்துணியாமலும் ஏழைகள் விஷயத்தில் இரக்கப்பட்டுத் தம்மாலியன்றமட்டும் உதவி செய்து கொண்டும் வரவேண்டும். சிலர் குபேர சம்பத்தினரென யாவரும் மதிக்கத்தக்கதாக வாழ்ந்தாலும் அவர்கள், தங்கட்குக் கீழடங்கினவர்கள் ஒருவர்க்கொருவர் ஏதோ வொரு காரணார்த்தமாக வழக்கிட்டுக்கொண்டு தங்களிடம் நியாய முடிவுக்காக வந்தால் இருதிறத்தாரிடமும் பொருள்பறித்துக் கொண்டு ஒருவிதமாய் வழக்குத்தீர்த்து விடுகின்றனர். சிலர் பெண்களைமாட்டித் தூது சென்று பொருள் தேடுகின்றனர். சிலர் பணியென்று வந்தவர்க்கு அன்ன முதலாமலும் தாங்களும் சுகபோஜனம் செய்யாமலும் கல்லவஸ்திரமுடுக்காமலும் பொருள் தேடுகின்றனர். "உடா அது முண்ணுதற் தம் முடம்பு செற்றும், கெடா அத நல்லறமுஞ் செய்யார்—கொடா அது, வைத்தீட்டினுழிப்பர் வான்றோய் மலைகாட, உய்த்தீட்டுக்தேனீக்கரி" என்று நாலடியாரிற் கூறியதை கண்குணர்க்திலர் போலும். இப்படிப் பற்பலர் பற்பலவிதமாகக் கெட்டவழியில் பொருள் தேடுகின்றனர். பஞ்சபாண்டவர்கள் சுகமாய் வாழக் கூடாதென்றும் தான் மட்டும் சுகமாய் வாழவேண்டு மென்றும் சூது நினைத்துத் துரியோதனன் அவர்களைப் பலவிதமான தன்பத்திற் குள்ளாக்கினனன்றே! பின்பு அவன் தானது இளைஞரோடு அடைந்த கதியாது? இதனைத்தெரிந்திருந்தும் இக்காலத்திலும் மோசஞ்செய்து கெட்டவழியில் பொருள் தேடுவோரும் தர்மவழியில் பொருளைச்செலவிடாதோரும் நினைத்துப் போவதைப் பிறத்தியக்ஷ அனுபோகமாகக் கண்டிருந்தும் சிறுசெயலாயிரமென்பது தெரிந்திருந்தும் பலவாறு நீச்செயல்கள் புரிந்து இழிவான வழியில் பொருள் தேடுகின்றனர். அந்தோ! கலிகாலக் கொடுமையையென்னென்று சொல்வோம் கன்னெறி நீகெறிமுதலியவை முன்யுகங்களிலும் உண்டென்றாலும் இக்கலிகாலக் கொடுமைக்கு வக்காலக் கொடுமையும் நடாகாது,

(இன்னும் வரும்)

திருச்செங்கோடு. } கே. சு. விசாகப்பெருமாள்முதலியார்.

தமிழ் பாஷை

(முன் தொடர்ச்சி.)

அன்றியும் "தமிழ் நற்பாஷையே. இளைபாஷை யன்று" எனற்குப் பூர்வாசிரியர் கீழ்வாய்க் கணக்கிற்கும், விரவியல் செய்யுட்கும், மணிப்பிரவாளத்திற்கும், வேற்றுமை வகுத்த இலக்கணமே சாக்ஷி பகருமே. இம்மட்டோ?

"இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் இயல்வேலர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇயினர். என்றுல் இவ்
இருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உனதேயோ?"

என்ற காஞ்சிபுராணச் செய்யுளும்,

"வடமொழியை பாணினிக்கு வகுத்தருளி அதற்கினையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வகுத்துரைத்தார் கொல்லேற்றுப் பாகர் எனில்
கல்வரப்பின் இதன்பெருமை யாவரே கணித்துள்ளார்?"

என்ற திருச்செய்யுளும் வடமொழியும் தென்மொழியும் ஒன்றினொன்று சற்றும் பெருமையில் தாழாத தனிப்பாஷைகள் என்பதற்கோர் தனிச் சான்றுகும்.

உண்மை நோக்காக, தமிழ் இலக்கணக்கடல் முழுதும் உண்டவரும், தமிழினை வளர்க்கும் திருவாவடுதுறை மடத்தவருமான ஸ்ரீமத் சுவாமிநாத தேசிகர், தமிழ் மொழியுடன் வடமொழி சம்பந்தம் மிக்கு இருத்தலால் மயங்கி,

"அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித் தமிழ் உண்டோ"?— என்றும்

"அன்றியும் ஐந்து எழுத்தால் ஒரு பாஷை யென்று
அறையவும் காணுவர் அறிவுடையோரே"— என்றும்

கூறி மாழ்கினர். இவருடைய முதற்கேள்விக்கு உத்தரமாக, காலஞ் சென்ற ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தற்கால முற்கால செய்யுள்களில் சில எடுத்துக் காட்டி இவற்றுள் வடசொல் எங்கே? சங்கநூல்களிலும் எனைப் பின்னூல்களிலும் ஆரிய மொழி எத்துணை பாண்மையர்?" எனச் சமாதானம் கூறினர். "ஆயினும் ஸ்ரீமத் சுவாமி நாத தேசிகர் கேட்பது "ஒன்றே யாயினும் ஸம்ஸ்கிருத வார்த்தை உயோகிக்கப் படாத தனித்தமிழ் "நூல்" உண்டா?" என்பதே யொழிய செய்யுள் உண்டா?" என்பதன்றே. ஆகையால் இவரது உத்தரம் "புதடையானே பொதுவிதி விளக்கும்" என்ற உண்மையையே மெய்ப்பிக்கிற தெனச் சிலர் பிதற்றித் திரிகின்றனர். இப்பேதை மாக்கள் பின்னையவர்களின் இரண்டாவது கேள்வியை மறந்தே விடுகின்றனர். நாம் பழைய நூல்களிற் காணப்படும் ஆரியமொழிகளையும் திராவிட மொழிகளையும் கணக்கிட்டு ஆராய்ந்து பார்ப்போமேயானல், ஒரு நூலானது எவ்வளவுக் கெவ்வளவு பழமையாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆரியமொழிக் குறைவைக் காணலாகும். இதுகொண்டு ஒரு காலத்தில் தனித் தமிழ் நூல்கள் பல இருந்தே இருக்கின்றன, என்று துணிந்து கூறுதற்குத் தடை என்ன இருக்கிறது? "இருக்கிறபின் இப்பொழுது

அவைகள் எங்குபோயின? என்று சிலர் பரிகவித்துக் கேட்கக்கூடும். இக்கேள்விக்கு விடையைக் கேட்போரே இவ்வியாசத்தில் பிறிதோரிடத்தில் கண்டுகொள்வர். கிற்க.

தேசிகரது இரண்டாவது கேள்விக்கு விடையாய்த் தாமே ஓரிடத்தில் "பொது எழுத்தானும் சிறப்பெழுத்தானும் ஈரெழுத்தானும் இலக்கும் தமிழ் மொழி" என்று கூறி யிருக்கின்ற ராதலின், அவர் தம் வாக்கையே மறந்து இங்ஙனம் உரைத்தது வடமொழிப் பயிற்சியேயிக்குடையோராய் அதன் மேற் கொண்ட பேரபிமானத்தினாலேயே எனக்கொள்க. அறிமதி நுட்பமோ டதிகலே கற்ற இவர் இவ்வாறு முக்குண வசத்தால் முறை மறந்துரைத்ததால், தமிழை ஒரு மொழியென நிறுவிய மகத்துவம் மிகுத்த அகத்தியனுர்க்கும், ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர்க்கும், பொன்னுர் செஞ்சடைத் தென்னவர்பிராற்கும் அறியாமையேற்றிப் பழிபாவம் தேடினுர் என்று பலர் நிந்திக்கலாயினர். இவ்வாறு மயங்கி இடர்ப்பட்டத நிமித்தம் இவ்வதி மேதாவியே தமிழைப் பற்றிய உண்மையறிந்தோரால் நாலேவரைப் பெரிதும் இழிக்கப்படுகின்றுராக தமிழைப் பற்றிய உண்மையே ஒரு சிறிதும் உணராதார், யாவும் தெரிந்தார்போன்று, அதனை இழித்துரைக்கமுன்வருவது எத்துணை இழுக்குடைத்து! என்ன பாருங்கள்! சின்னுட்களுக்கு முன் சர்வகலாசாலைச் சங்கம் (University commission) ஏற்பட்டுப் புன் மொழியாப் பைந்தமிழைப் புறம்பே தள்ளி பூவுலகோர் தம் மனத்தைப் புழுங்கச் செய்ய, பற்றியெரியும் நீக்குக் காற்றும் கூடியது போல், பண்டித S. M. கடேச சாஸ்திரியார் போல்வார் முன் போந்து "தழிழ் மொழிகள் யாவும் கேராகவேனும் சிதைவுற்றேனும் ஸம்ஸ்கிருதத்தினின்றும் தோன்றியவை தாம் என்று மதிராஸ் மெயில் வாயிலாய் வெளியிட்டது எவ்வளவு பரிதபிக்கத்தக்கது! "வண்ணஞ் செய்வாள் விழியே யன்றி மறைகுருட்டிக் கண்ணஞ் சுமோ இருளைக்கண்டு?" மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்களில் ஒருவராகிய சாஸ்திரியார் இவ்வணம்உரைப்ப ஸ்ரீமான் A. மாதவையா B.A. மட்டுமே யன்றி புறப்பாஷை பேசும் ரெவரண்ட் டாக்டர் மில்லர் போன்ற பாதிரிமார்கள் அதனை மறுத்துப் பேசியது எவ்வளவு பாராட்டத் தக்கது!

தமது ஆயுள் காலம் முழுதும் தமிழ் கற்பதிலேயே செலவழித்து வரும் ரெவரண்ட் G. U. போப் அவர்களுக்கும் அதனைத் தம்மாலியன்றளவு கற்றுணர்ந்து அகாராதியெழுதி "தமிழ் கிரேக்க பாஷையினும் கயமான செய்யுள் நடையுடையது; லத்தீன் பாஷையிலும் பூரணமானது" என மனப்பூர்வமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்ட வின்ஸ்லோ பண்டிதர்க்கும், "மனிதரால் பேசப்படுகின்ற மிகப்பொலிவும் திருத்தமும் சீருமுடைய பாஷைகளுள் தமிழும் ஒன்று" என்று ஆய்ந்தறிந்த ரெவரண் W. டேலருக்கும், "Tamil is the only vernacular literature in India.....which has honourably attempted to emulate and out shine SANSKRIT என்ற கால்ட்வெல் துரைக்கும் ஏனைத்தமிழாராய்ந்தோர்க்கும் அன்றே இப்பாஷையின் அருமை பெருமை தெரியப்போகிறது? அந்நிய நாட்டுப் பண்டிதர்க்குள்ள அபிமானமும், உண்மையறிவும், நம் நாட்டார் பலர்க் கில்லாமற்போனது வியப்பிற்கும் கைப்புக்கும் இடமாகிற தன்றே?

(இன்னும் வரும்).

M. கோபால கிருஷ்ணையர்.

விவேகம் தந்திரம் ஞானம்.

விவேகத்தினால் ஒருவன் தனக்கும், பிறர்க்கும் ஏஜமானனுவான். எதிரியின் குணகுணங்களே மட்டிட்டு அவனைத் தன் வசப்படுத்துவான். கல்விமான், தைரியசாலி, தந்திரி இவர்களே விட, விவேகியே எச்சாதிக்கும், எக்குடும்பத்திற்கும் தலையாவான். சபைகளில் முதன்மை பெறுவதும், ஊராரை ஒரு கெறிப்படுத்துவதும், விவேகியின் வல்லமையே விவேகமில்லாத மனச்சாதுரியம், கண்ணில்லாத திரிதராஷ்டிரனுடைய தேக பலத்துக்கு சரி. ஒருவனுக்குச் சகல வரமும், சம்பூரணமாகவிருந்தும், விவேக மொன்றில்லாவிட்டால், உலகத்திற்கு அவனால் ஒரு பிரயோஜனமுமில்லை. மற்ற லக்ஷணங்கள் குறைந்திருந்தாலும், சம்பூரண விவேக முள்ளவனே தன் காரிய மனைத்திலும் சித்தியடைவான்.

மனுஷிய குணங்களுக் கெல்லாம், விவேகம் சிரசாகும். தந்திரமோ அற்பத் தன்மையுடையது; இழிந்தகுண மூடையவரிடத்தும். லோபிகளிடத்தும் உற்பத்தியாவது. விவேகம் மேன்மையை முன்னிட்டு, புகழோடு சம்பந்தப்பட்டு, உத்தம வழியிலே சென்று, அரிய பெரிய காரியங்களே நிறைவேற்றும். தந்திரம், சுய நயத்தையே கருதி, ஒரு வழியிலும் நில்லாது. விவேகம், தூர திருஷ்டியுடையதாய், சகல திசையையும் ஒருமிக்கப் பார்த்து மட்டிடும். தந்திரம் சமீப திருஷ்டியுடையது; கையிலுள்ள பொருளே மாத்திரம் வெகு நுட்பமாய்ப் பார்க்கும்; தூரப்பொருள் அதன் கண்ணுக் கெட்டாது. விவேகம் யாரிடத்தையுமோ, அவர்களுக்கு அதிகார சம்பத்துண்டாகும்; அவர் சமூகம் யாவராலும் வாஞ்சிக்கப்படும். தந்திரக் குடியிருக்கப் பெற்றவனைச் சகலரும் தள்ளிவைப்பார்கள். ஈஸ்வரனைச் சாரினும், முக்குணம் இழுக்கென்பது பற்றியன்றே சுபட காடக சுஸ்திரி யென்று வசையாகச் சொல்வது; தந்திரியின் ஜாலம். அவன் குணத்தை அறியாதவனிடத்திற் பலிக்கும். விவேகியின் வல்லபம் அவனை அறிந்தோரிடத்திலே தானே அதிகப்படும். தந்திரியின் வழி பிறரறியக் கெடும். விவேகியின் மார்க்கம் வெளி நின்று ஜொலிக்கும்; சூரியன் எழும்ப எழும்ப அதன் பிரகாசம் அதிகமாகஜ்வலிப்பதுபோல, விவேகம் எவ்வளவு வெளி வருமோ அவ்வளவு, அதன் பலன் அதிகப்படும். விவேகம் யுக்தியின் பூரணம்; வாழ்காட் கடவுக்கு வல்ல மாலுமி. தந்திரம் இயற்கைக்குணம்; தற்கால வினையையே கருதுவது, விவேகம் கேரே வேரோடி, விழுது விட்டிருக்கும் விருக்ஷாதிபை யொப்பது. தந்திரம் வித்தின்றி தானும் மூளைத்துத் தன்னிலே மடியும் புல்லுருவிக்கு நிகராகும். விவேகம் கல்விமான்களிடத்தும், கூரிய புத்திசாலிகளிடத்தும் பிறப்பது. தந்திரம், மிருகங்களிலும், மிருகத் தன்மையரிடத்தும் காணப்படுவது; குறுகி வளைந்து கோணல் செறிந்த விவேகமே தந்திரமாவது. கோர்மையிலும், வல்லபத்திலும், விவேகிக்கும், தந்திரிக்கும், வெகு வித்தியாசமுண்டு. தந்திரியின் மார்க்கம் கோணல்வழி யென்பதை இரண்டொரு உதாரணத்தால் திருஷ்டாந்தப்படுத்துவாம்.

பேசக் கருதிய விஷயத்தை ஒருபோதும் கேரே பேசுகிறதில்லை; எதிரியின் மனதுக்குப் பொழுது போக்காக, அவனுக்கிதமாகிய பல இனிய மொழிகளுடன் விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்து, மெதுவாகத் தன் காரியத்தை துலைப்பதே தந்திரியின் தொழில். அவசரக்காரனுக்

கு புத்தி மட்டாதலால், தந்திரி தன் எதிரியின் அவசர வேளைகளில் அவனைக் கண்டு தன் கைவசப்படுத்துவான். ஏலங் கூறுகையிலே, தான் கருதிப்போன பொருளில், பிறர் கண்போட்டிருக்கக் கண்டால், தான் அதை வாங்க வாராதவன்போற் பாவனை காட்டி, அப்பொருளின் குணத்தை மிகவுங் குறைத்துப் பேசுவான்; கடையிலே தான் கொள்ளப்போன சாமான்களை விட்டு அவைகளைத் தான் வாங்க வாராதவன்போல், கடித்துப் பிற சாமான்களுக்கு விலை பேசிக்கொண்டிருப்பான். தான் நூதன மாய்ச் சொல்வதொன்றை, உலக வதந்தி யென்றுரைப்பான்; சடுதி; ஆலோசனை யறியாததலால், எதிரியைச் சட்டென, மடங்கச்செய்வான். எதிரிக்குக் காட்டுவ தொருவழி, அவனைக் கொண்டுபோய் விடுவது வேறொருவழி. தந்திரி சாகுரியம் பகர்வதை, நியாய துரந்தரர்கள் மடக்கிக் கேட்கும் குறுக்குக் கேள்விகள், எத்தன்மைத் துடையன வென்பதை, நீதி ஸ்தலங்களில், காலாந்தரத்திற் காணலாம். தந்திரம் ஒருவழி பட்டதல்ல. இப்படிக் கோடானு கோடி பேதமுண்டு. இதற்கென்று தனி வழி யென்ப தொன்றில்லை. மித்திர பேதம் முதலான பஞ்ச தந்திரோபாயங்களே தந்திரி செல்லும் வாகனங்களாம். தன் சுயக் கால்களால் நடக்கும் சக்தி இவனுக்கில்லை. சில்லர் தந்திரத்தின் மணமும் தங்களில் இல்லாதிருக்க, வெகு தந்திரிகள்போல் நடிப்பார்கள். அவர்களைக் குறித்துக் காமிவ்கு சொல்ல வந்தோமில்லை. அவர்கள் யாவர்க்கும் சிரிப்புக் இடமாவதன்றி, அவர்களாலாவது வேறொன்றுமில்லை. துடி துடிப்பு வார்த்தை சிக்கிர புத்தியாகாது; மோனம் ஞானமாகாது; உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது; அதுபோல, எவ்வளவு சாதுரியத்தோடி நோற்றினலும், தந்திரம் தந்திரந்தான். விவேகத்திற் கிணையாகவே மாட்டாது.

வலைஞனுக்கு எப்போதும் மிதப்பிலே கண்ணென்ருற்போல, விவேகிக்கு எந்த வேளையிலும், எக்காரியத்தைச் செய்கையிலும் மாய்கையாகிய மயக்கத்திலே தன்னைச் சிக்க வொட்டாமல், பேரின்ப முத்தியிலேயே கண்ணுகவிருப்பான். இப்படிப்பட்ட விவேகியைத்தான், ஞானியென்று சொல்லுவர்.

ஞானம் ஈஸ்வர குணம். அவர் தன்மை அக்குணத்திற்குமுண்டு. அடியார்க் கெளியவரும், அன்பர்க்குத் தோழருமாகிய அன்னவரின் குணமும் தன்னைத் தேடுவார்க்கு லேசாய் அகப்படும். தன்மேல் நேசமுடையோரைத் தாயினும் பிரியாத் தோழமை கொண்டு நீக்காதிருக்கும். சம்பூரண அநுக்கிரக, இயல்பு செறிந்த ஞானம், தன்னை யொருக்காற் றேடுவாரைத் தானிருகாற் றேடிவரும். அதனைத் தேடி ஒரு அடி வைக்கு முன்னே, அது ஒன்பது அடி தூரம் எதிர்கொண்டு நிறகும். இளம் பிராயத்தில் அதனை காடுபவர்களுக்கு அது மிகவும் லேசாய் அகப்படும் அவர்கள் தெடுந்தூரம் போக வேண்டியதில்லை. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற் போலவும், வலிய தேடிவருஞ் சீதேவி போலவும், ராசலீலை காத்துக் கொண்டிருக்கும். தனக்குரியாரைத் தானுய்த்தொடரும். விவேகியின் சிந்தனையே ஞானத்திற்கு ஆரம்பமாம், அதனைப் பாதுகாப்பவாக்கு அணுவளவுஞ் தொல்லையில்லையாம். அது என்றும் வாடாத புஷ்பம். அணிய அணிய நீரேறும் விலை பெற்ற இரத்தினம். மிருக லக்ஷணம் தந்திரம், கல்வியின்பயன் விவேகம். விவேகத்தின் மூடிவு ஞானம்

தஞ்சைபுரிநேசன்.

சரித்திரப்பயிற்சி.

(முன் தொடர்ச்சி.)

சேது முதற்கொண்டு இமயமலை வரைக்கும் பரவி இருப்பதாயும், இருபக்கத்திற் கடலாற் சூழப்பட்டதாயும், சகலமான சாஸ்திரங்களுக்கும், உற்பத்திஸ்தானமாயும், புண்ணிய ஸ்தலங்களும் ஆலயங்களும் நிறைந்துள்ள இடமாயு மிருக்கின்ற பரத கண்டமாகிய இந்த க்ஷேத்திரமானது ஆங்கிலேயர்களாலும் அவர்கள் மொழியிற் பயிற்சியுள்ளவர்களாலும் இந்தியாவென்று சொல்லப்பட்டு வருகிறது. கோதற்ற சரிதை யுள்ளவனுய் ஒப்பற்ற பலமும் பராக்கிரமும் வகித்திருந்த பரதனென்றும் பேருள்ள அரசன் ஒருவன் முற்காலத்திலிருந்தான்; அவன் துஷ்யந்தன்என்னும் மன்னனுக்கு மகன். அவன் அறிவாலும் நிறமையாலும் விசோதி அரசர்களுடைய கூட்டத்தைக் கீழ்ப்படித்தி இத்தேயத்தவர்களே தன் புகழாகிய வெண்குடைக்கீழ் நிழற்றினனென்று புராணங்கள் மொழிகின்றன. ஆதலால் இத்தேயத்திற்குப் பரதகண்டமெனப் பெயர் வந்தது. இவ்வரசனுக்கு முன்னுல் வெகுகாலம் இத்தேச மிருந்த ஆண்மையும் குறைவிலாச் செல்வமும் குடிகளின் வறுமைக்கு வறுமையுண்டாக்கும் காட்டமும் சரண மடைந்தவர்களே இரக்ஷிக்கின்ற பெருந்தன்மையுமுள்ள மன்னர்களாற் காப்பாற்றப்பட்டு வந்ததென்றும் தெரியவருகிறது. துஷ்யந்தன் மகன் பரதன் காலத்துக்குப் பின்னுலிருந்த அரசர்களும் "மனிதர்களாற் செய்தற்கறிய செயல்களுடையவர்களாயும், தங்கள் பிரதாபத்தினுல் கொளுத்தப்பட்ட பகைவர்கள் கூட்டத்தை யுடையவர்களாயும், நீதி தவருது செங்கோலோய்ச்சினவர்களாயும், அயல் காட்டரசர்கள் வியக்கத்தக்க நல்லொழுக்க முள்ளவர்களாயும், தங்கள் தண்ணருளென்றும் பேராற்றினுல் குடிகளென்னும் பயிர்களைச் செழிப்பித்தவர்களாயும் மறை நெறிக்கிசைந்தவர்களாயும் இவ்வாரியாவர்த்தத்தை ஆண்டார்கள், என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாக இப்பூமியானது நல்லரசர்களின் பரிபாலனத்தால் களிப்படைந்ததாயும், தத்தம் நெறிதவருத பல வருணத்தவர்கள் வாழப் பெற்றதாயும் மென்மேலும் வளருந்தன்மையுடைய வடமொழி நூல்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் கூறப்பட்டுள்ளது. பராசர் புத்திரர் வியாசர் வேதத்தைப் பரிசோதித்து அறியாமையாற் கிடந்தழலும் பலருக்கு உபயோகமாகும் பொருட்டு பதினெட்டு புராணங்களையும் சந்திர வம்சத்தரசர் சரித்திரமாகிய மாபாரதத்தையும் செய்தது இக்காலத்தில் தான். சொற் சுவையுள்ள பாவலர்களிலெல்லாம் முதன்மை பெற்ற வால்மீகி இத்தேசத்தவர்களின் கவித்திறமையை வெளிப்படுத்துகின்ற சூரிய குல சரித்திரமாகிய இராமாயண மென்னும் காவியத்தைச் செய்ததும் அக்காலத்தில் தான். நான்கு வருணங்களையு மேற்படுத்தி, சர்வ ஜனசம்மதமான நீதிநூலேப்பயிற்றிய எல்லாம் அறிந்த மனுவும் இவ்வுலகில்தோன்றியதும் அக்காலத்திற்றுன். திருமகள்கணவனுகிய நல்லோரைக் காப்பாற்றும் கருணைக் கடலாகிய எல்லா உலகங்களிலும் இருப்பவர்களைப் பாதுகாப்பதை விரதமாகக் கொண்ட பகவானுகிய திருமாலும், கொடிய ஒழுக்கமுள்ள இருள் மலிந்த ஹிருதயர்களான அசுராகன் அரசர்கள்முதலியவர்களே தன்னுண்மையாகிற தழலுக்கு விறகாகச்செய்யும்பொருட்டு இப்பூவுலகில் மீனன்வசாகம் முதலிய பலஉருவமாக அவதரி

த்து அடியார்க்குதவி புரிந்தார், தீயோர்களை அழித்தா ரென்பது அக்கால த்திற்முனென்றும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. மிகுதி யாகக் கூறுவதிற் பயனென்னை? இவ்வாறே கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகமென்ற மூன்று யுகங்களிலும், கருணையால் இவ்வுலகிலவதரித்த தேவதைகளும், அணுக்கிரக வசத்தால் மாகாத்மியத்தைப் பெற்ற மனிதர்களும் பலசட்டங்களை ஏற்படுத்தி கன்முய் சிறிது சிறிதாக முயன்று கடையில் பேரின்பமே வடிவாகக்கொண்ட கடவுளை யோகியானவன் காண்பது போல உயர்ந்த பதவியை யடைந்தது.

மிக்க கொடிய ஆலா அலமாகிய பெரும் கஞ்சைப் போல பொருத்தற் கரிய கியவொழுக்க மலிந்த கலிகாலமாகிய காரிருள் பரவுங் காலத்திலேயும், பிறர்க்குதவி செய்தால் களிப்படையும் உள்ளத்தவர்களாயும் அன்னியமதங்கள் தெருங்குங் காலத்துத் தங்கள் மதத்தை முன்னுக்குக் கொண்டுவருங்காரியத்தில் காட்டமுள்ளவர்களாயும், மிக்க மழையின்மை, பெறுங்காற்று, பெரும் நோய் முதலிய நிபாதங்கள் உண்டாகுங்காலத்தில் குடிகளைக் காப்பாற்றும் பொருட்டு, தம்மாலானதைச் செய்தும், தங்கள் பொருள்தானை எல்லாம் கொடுத்தும், பிறகு மந்திரிமார் முதலிய உத்தியோகஸ்தர்கள், புதல்வன் முதலிய உறவினர்கள், பிறகு பெண்சாதிமுதலியவர்களை யிழந்தும் மீண்டும் வேறு வழியில்லாமையால் தம்முயிரையும் கொடுத்து தம் வாழ்விற்கும் காட்டின் வாழ்விற்கும் வித்தியாசமறியாமலிருந்த தேவர்களேயென்று சொல்லத்தக்க பல அரசர்கள் ஆண்டார்களென்றும் புராணங்கள்கூறுகின்றன. (இன்னும் வரும்.)

T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

கலாப் பிரகாசனி.

முன் தொடர்ச்சி.

இங்ஙனமாக 7 வருஷங்கள்கழிந்தன. பிறகு சுருணமாலினிக்கும் கலாலங்கிருதருக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது. இதற்கு மேலும் 2 வருஷங்கள் சென்றன. சுருணமாலினி கற்பமடைந்து நவமாச பரிபூரணமாகி தச மதியில் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்கு நவமாலிகை என்று பெயரிட்டு வளர்த்து வருகையில் அதற்கு அணிந்திருந்த நகைகளின்மீது ஆசை கொண்டு அரண்மனையிலிருந்த சேவகர்கள் கால்வரும் ஒன்று கூடியோசித்து இரவில் அனைவரும் நித்திரை செய்துகொண்டிருந்த தருணம் பார்த்து அக்குழந்தையை எடுத்து அவ்விடத்திலிருந்த ஒரு பெட்டியில் வைத்து ஒரு கயிற்றினால் கட்டி மேல் மாடியிலிருந்து கீழே மெதுவாய் நேராக இருந்த ஒரு மரத்தின்மேல் இறக்கினர். அத்தருணம் அம்மரத்தில் உட்கார்ந்து இன்றிரவு எவ்விடத்தில் திருடலாமென்று யோசித்துக் கொண்டிருந்த திருடனொருவன் இப்பெட்டியைக் கண்டதும் ஆசை கொண்டு இதில் ஏதாவது இருக்கலாமென்றெண்ணி அப்பெட்டியை எடுத்துக்கொண்டு வெகு சீக்கிரத்தில் பட்டணத்தைக் கடந்து ஒரு காட்டில்பிரவேசித்தான். இடையில்காளுறென்று குருக்கிட்டது. சிறிதுஜலம்தான் இருக்குமென்றெண்ணி எப்படியோ அதிக கஷ்டத்துடன் நதி ஆற்றிற்கு கடந்து விட்டான். ஜலப் பிரவாகம் அதிகமாயிருந்ததால் இவனால் நிற்பதற்குக் கூடவில்லை. கடையில் தன் உயிருக்கே மோசம்

வரும்போல் தோன்றிற்று. கழுத்தளவு ஜலமிருந்தது போய் தலைக்கு மேலும் வந்தது. பார்த்தான் திருடன். யோசித்தான் சிறிது நேரம். தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதே மேலென்றத் தோன்றிற்று. உடனே பெட்டியை ஆற்றில் விட்டுவிட்டு தான் மட்டும் நீந்திக்கொண்டு சென்றான். கிற்க அரண்மனையில் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு கால்வரும் மரத்தின் மீதேறிப் பார்த்தனர். கயிறுமட்டு மிருந்தது. பெட்டியைக் காணோம். பல இடங்களில் தேடினர். அகப்படவில்லை. பிறகு ஒன்றும் தோன்றுமல் நிகைத்து இங்கிருந்தால் மோசம் வருமென்றெண்ணி அந்த இராத்திரியே கமலாபுரியை விட்டு ஓட்டமெடுத்தனர். பிராதக்காலமாயிற்று. சுருணமாலினி தன்னருகில் நவமாலிகையைக் காணுதால் பயங்கொண்டு தன் நாயகனுக்குத் தெரிவித்தான். உடனே பல இடங்களிலும் தேடினர். மனிதர்களால் எவ்வளவு பிரயத்தினங்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து பார்த்தனர். அகப்படவில்லை. சுருணமாலினி படும் துன்பத்தை யெடுத்துரைக்க யாவரால் முடியும்.

நித்ய கிருபாலோசனன் எனும் வேடனொருவன் வனமெலாஞ் சுற்றித் தன்னுகாரத்திற்கு வேண்டிய காய் கனிகளைச் சேகரம் செய்து கொண்டு ஒரு ஆற்றினருகே வந்தான். இவன் கண்ணிற்கு ஏதோவொன்று புலப்பட்டது. உடனே நதியிற் குதித்து நீந்திக்கொண்டு சென்றதில் பெட்டி ஒன்று மிதந்து போய்க்கொண்டிருப்பதைக் கண்டு அதைக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்து பெட்டியைத் திறந்து பார்த்தான். ஜகஜ்ஜோதிர்மயமான ஒரு ஸ்திரீ சிசு சர்வாபரணலங்கார பூஷிதையாய் நித்திரை செய்துகொண்டிருந்தது. அப்பெட்டியில் ஒரு கடிதமும் இருக்கக் கண்டு வாசித்துப் பார்த்து சகல விஷயங்களு முணர்ந்து ஆனந்தக் கண்ணீர் விட்டான். பிறகு அக்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் என்ன பெயரிடலாமென்று யோசித்துக் கடைசியில் அக்குழந்தையின் சிரசில் போட்டிருந்த மோதிர மொன்றில் நவமாலிகை என்று இருக்கக்கண்டு அப்பெயரையே அவளுக்கு வைத்து வேத சாஸ்திர புராணேதிஹாசமாதியனவும் கற்றுக்கொடுத்து வெகு பிரீதியுடன் வளர்த்து வந்தான். நவமாலிகைக்கு 17வது பிராயம் நிறைந்து 18வது வயதும் பிறந்தது. மாளவ தேசத்து அரசனுகிய ஞானுபரணன்மீது கிருபாலோசனர் அதிக பிரியம் வைத்திருந்தார். அவ்வரசனும் அவருடைய பிரியத்தை அபிவிர்த்தி செய்துகொண்டே வந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் ஞானுபரணனும் நவமாலிகையும் தற்செயலாய் ஒருவரை யொருவர் சந்தித்துக்காதல்கொள்ளலாயினர். இவ்விஷயம் கிருபாலோசனர்க்குத் தெரிந்ததும் அவர் அதிக சந்தோஷத்துடன் விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார். மாளவ தேசத்தில் ஞானுபரண மகாராஜாவுக்கும் நவமாலிகைக்கும் பாணிக்கிரகண மகோத்சவம் அதியுன்னதமாய் நடந்தேறியது. கிருபாலோசனர் சின்னாளவும் நகரத்திலிருந்து பிறகு விடை பெற்றுக்கொண்டு கானகம் சேர்ந்தார். தம்பதிகளிருவரும் வெகு அன்யோன்னியமாய் வாழ்ந்து வந்தனர். [தொடரும்.]

நித்நிரை.

இவ்வுலகின் கண், நமக்கு இன்றியமையாதிருக்கப் பெற்றவஸ்துக்களுள் தூக்கமும் ஒன்றேயாம். தூக்கமேயில்லாமல் ஒருமனுஷ்யன் 40 நாட்களுக்கு மேல் ஜீவித்திருப்ப தரிதெனக் கற்றுத் தேர்ந்த பெரியவர்கள்

லொருவர் கூறியுள்ளார். இவ்வுலகின் கண் நன்கு வாழத் தூக்கமும் முக்கிய சாதனங்களுளொன்றே. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்" என்று கேளாதோர் ஒருவருமில்லை. எதுவும் தத்தம் அளவுக்கு மேற்படின் தீங்கையை விளைவிக்கக்கூடியதே. ஏற்பட்டுள்ள அளவுக்குருதியினும் சிற்சில வஸ்துக்கள் துன்பத்தைப்பயக்குவதா யிருக்கிறது. சரியான வீடுக் கொளிகண்ணுக்கு இன்பத்தைப்பயக்குகிறது. அதிகவெளிச்சம் கண்ணுக்கு இனிமையைப்பயவாதிருப்பதுடன் துன்பத்தையும் விளைவிக்கிறது. வெளிச்சம் குறையினும் பார்க்கக் கஷ்டமாயிருக்கு மென்பதை சொல்லாமலே யாவருமறிவார்கள். சப்தங்களின் சுபாவமும் இவ்வண்ணமே சிற்சில சப்தங்கள் காதைக்கூட செவிடடையச்செய்து விடுகின்றன. தேகப்பயிற்சியும் இவ்வகைத்தே. மிதமிஞ்சிச் செய்வோமாகில் வருத்தமடைய வேண்டியதுதான். தூக்கமும் அப்படியே, அதிகத்தூக்கம் துக்கத்துக்குக் காரணமே. சோம்பலை மேலிடச்செய்யும். அசதியை உண்டுபண்ணும், தேகத்துக்கும் அசௌக்கியத்தை உண்டாக்கும். தூக்கம் குன்றினும் துக்கத்துக் கேதுவாம். "அனத்தலாடேல்" என்ற ஔவைமொழி யாவருமறிந்தது. இவ்வாக்கியத்துக்குச் சிலர் தூங்கவே கூடாதென பொருளுரைக்கிறார்கள். அவ்வகைப் பொருள் இவ்வாக்கியத்துக்குப் பொருத்தமெனத்தோன்றவில்லை. சிக்திப்பதிலும், சங்கல்பம் செய்வதிலும் மூளை வேலை செய்கிறதென்பதை யாவருமறிவார்கள். "மூளையே அறிவுக்குஸ்தான" மென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். மூளை என்பதென்னவென்று சற்று உற்று நோக்குவாம். மூளை, கபாலஅறையிலிருக்கும் ஒருஇந்திரியமாம். அவ்வறையினுள் விருந்து அவ்வறையை மூடிக்கொண்டிருக்கும் நரம்புப் பிண்டமெனக் கூறலாம். அது சற்றேறக்குறைய 7 அங்குல நீளமும், 5 அங்குல அகலமும். 50 அவுன்ஸ் நிறையுமுள்ளதென கூறு சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறியுள்ளார்கள். (கபால அறை என்பது நாலாபக்கங்களிலும் எலும்பாலாகி மண்டைமீதுள்ள ஓரறை). இந்நரம்புப்பிண்டம் இரு போர்வைகளால் மூடப்பெற்றுள்ளது. ஒரு போர்வை கபால அறையின் மூடியுள்ளும்பின் உட்புறத்தை யொட்டினதாயும், மற்றொன்று மூளையின்மேற் பாகத்தை ஒட்டினதாயுமிருக்கிறது. ஏதேனும் கெடுதல்களிலிருந்து சொல்பவளவு மூளைகளைக் காப்பாற்றுவதற்கு மட்டும் இவ்விதமான போர்வைகள் ஏற்படவில்லை. மூளைக்குப் போகிறதும், மூளையிலிருந்து வருகிறதுமான இரத்தக்குழாய்கள் அப்போர்வையினூடு தான் செல்கின்றன. மூளை அதிக வெண்மையில்லாததிறத்துடன் கூடமிருதுவாயிருக்கின்றன. நமது சங்கல்ப யோஜனைகளில் இந்த மூளை முயற்சியுடனிருந்து சிரமப்படுகிறதாம். சிரமபரிகாரம் பண்ணிக்கொள்வது அம்மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்களிலுள்ள இரத்தத்தினுலேதானென சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறியுள்ளார்கள். மூளை தேகத்தின் 50 ல் ஒரு பாகமிருப்பினும், அதற்களிக்கப்படும் இரத்தம் நமது தேகத்துக்களிக்கப்படும் இரத்தத்தின் 8ல் ஒருமடங்காம். மூளை சிரமமடைய சிரமமடைய நிய இரத்தம் அடிக்கடி அளிக்கப்படவேண்டுவது அவசியமே.

(தொடரும்) S. N. ஸ்ரீனிவாசன்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்:—இப்புத்தகத்தைப்பற்றிய அபிப்பிராயம் மறுமுறை வெளிப்படும்.

பிரஜாபந்துகூடலன்.

பருவம். 2 } திரிச்சி 1905-வது மே-மீ { இலக்கம்2.

விசேஷ அறிக்கை.

நமது பிரஜாபந்துகூடலன் பத்திரிகையானது சென்ற மேமீ முதல் தேதியன்று வெளி வரவேண்டியதிருக்க இவ்வளவு காட்சென்று வெளி வர்ததைக் குறித்து சந்தாதாரர்களின் மனதுக்கு அதிக வருத்தமுண்டாயிருக்கலாம். நிச்சயமாகவே வருத்தமுண்டாக வேண்டியதும் நியமம்தான். அங்ஙனம் வருத்த முண்டாகாதிருப்பின் அது பத்திரிகாபிமானத்தைக் காட்டாதன்றே? ஆகவே உள்ளபடி மனவருத்த மடைந்திருக்கும் பத்திரிகாபிமானிகள் யாவருக்கும் இங்ஙனம்நேர்ந்ததாமதத்தின் காரணத்தை யெடுத்துக் காட்ட யாம் கடமை யுடையோமாகையால் சுருக்கமாய் இதனடியில் இரண்டொன்று கூறுவாம்.

"நல்ல காரியத்துக்கு நாலாயிரம் விக்கினங்கள்" என்பார் உலகோர். அது முற்றும் நம் அனுகூலன் விஷயத்திலேயே நிறைவேறுவதாயிருப்பதும் மிகவும் விசனிக்கத் தக்கதே. நமது கையொப்பக்காரர்களிடமிருந்து சந்தாத் தொகைகளை வசூலிப்பதில் பல கஷ்டங்களேற்பட்டன. இதற்கிடையில் நமது பிதாவாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ S. கோவிந்தசாமி நாயுடு அவர்களும் 1905ஆவது ஏப்பிரல்மீ 21உ வெள்ளிக் கிழமையன்று காலஞ்சென்றார்கள். இங்ஙனமே கோர்த்த பலவிடையூறுகளால் மேமீ சஞ்சிகையைத் தாமதமாய் வெளியிடும்படியாக சம்பவித்ததுடன் ஜூன், ஜூலை மாதத்திய சஞ்சிகையையும் காலந்தாழ்த்துப் பிரசுரிக்கும் படிநேரிட்டிருப்பதற்கு காம்பிகவும் வியசனிக்கின்றோம். அநுகூலனின் இரண்டாவது ஸம்வத்ஸரத்தில் குறிப்பிட்ட தேதியிலேயே வெளியிட வேண்டுமென்றெண்ணியிருந்தோம். தானொன்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைத்ததென்பதற் கிணங்க முடிந்ததைப்பற்றி யாமடையும் சஞ்சலத்திற் கெல்லையில்லை. ஆயினும் குறிப்பிட்ட தேதியில் பிரகடனஞ் செய்வதற்கு எம்மாவியன்றளவும் முயற்சி செய்தே வருகின்றோம். சந்தாதாரர்கள் மன்னிப்பார்களாக.

பத்திராதிபர்.

பொருள்.

[முன்தொடர்ச்சி.]

அப்படிக் கெட்டவழியிலாவது பொருள்தேடி நீழே வாழ்கின்றனரா? அதுவுமில்லை. நீச்செயலிலாவது பொருள் சம்பாதிக்கவேண்டுமென்றெண்ணுகிறவன் ஒருக்காலும் கல்வழியில் செலவுசெய்து கீர்த்தியடையமாட்டானென்பது திண்ணம். கல்வழியிற் பொருளைச் செலவிடாமற் செல்வச் செருக்கினாற் பிறரை மதியாத அற்பருடைய செல்வம் மின்னல்தோன்றி மறைவதுபோல் விரைவில் அழிந்துபோம். (காலடியார்) "செல்வர் யாமென்றுதாஞ்செல்வழி யெண்ணுத, புல்லறிவாளர் பெருஞ்செல்வம்--எல்லில், கருங்கொண்மூவாய்திறந்த பின்னுப் போற்றேன்றி, மருங்கறக்கெட்டுவிடும்." இப்படிப்பட்ட நூல்களின் நியாயங்களுணர்ந்தேனும் சன்மார்க்கத்தில் நடப்பரோ? இல்லை, இல்லை. நிரமமாக மனிதனது வயது நூறே. அதில் ஐம்பது நிரவிலுண்டாகும் கித்திரையிலும், ஐந்து குழந்தைப் பருவத்திலும், பதினைந்து இளமைப் பருவத்திலும் ஒழிந்துபோம். மற்ற முப்பதில் தான் சகல இன்ப துன்பங்களும் அனுபவிக்கவேண்டும். ஆற்று நீர்ப்பெருக்கை யொத்தது செல்வம். ஆற்றுப் பெருக்கின் இடிகரையை ஒத்தது இளமை. இடிகரையில் வளரும் மரத்தை ஒத்தது வாழ்நாள். இவ்வாறிருக்க சிலர் கற்கோடிகாலம் இப்பூமியின்கண் வாழ்வது போல எண்ணியும் செல்வம் எப்பொழுதும்நீங்காதென்றெண்ணியும் சற்பாத்திரத்திற் செலவிடாமல் வீணுகக் கெட்டுப்போகின்றனர். (காலடியார்) "புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி, இன்னினியே செய்க அறவினை--இன்னினியே, நின்றுணிருந்தான் கிடந்தான் தன் கேளலறச், சென்றனைப்பதலால்." என்பதையும் (குறள்) 'நெருநலுள னொருவனின்றில்லையென்னும், பெருமையுடைத்திவ்வுலகு' என்பதையும் பிறவற்றையும்நன்குணர்தல்வேண்டும். சிலர் தருமம்செய்யத் தக்கமனம் பொருந்தாதவராயிருப்பினும் டாம்பிகத்திற்காகவேனும் அதிகார வரம்புக்குக் கீழ்ப்படிந்தேனும் தம்மையடைதவர்க்குப் பொருளுதவி செய்கின்றனர். அதனுல் பயனேதேனுமுண்டோ? எத்துணை நன்மையுமுண்டாகாது. நீச்செயல்களோ யொழித்து கல்வழியில் பொருளைச்சம்பாதித்துத் தரித்திரக்கடலிலாழ்ந் தழல்கின்ற பஞ்சைகட்குத்தம்மாலியன்றமட்டும் இரக்கங்கொண்டுபொருளுதவிசெய்யவேண்டும். காஸ்திவசனங்களுவ தும்இன்று நாளையென்று கும்பம்படியாகச் சொல்லியிழுத்தடித்துக் கடையாகக் கையையிரிப்பதும் பழிப்பும் பாவமுமேயாம். நாளை நாளையென்பது நம்முடைய நாளோ நமனுடைய நாளோ? ஒருவன் தேடிவந்தபோதே உதவுவது தான் மேன்மை. ஒருக்கால் அச்சமயம் சரிப்படாமல் போனுல் இயலுங்காலத்தைக் குறிப்பிட்டு வரச்செய்து உதவவேண்டும. தேடிய பொருள் அந்தியகாலத்தில் உதவாது. நவதானுண்டாகும் கீர்த்திதான் எப்போதும் துணையாகநிற்கும். (குறள்)" அன்றறிவாமென்னுதறஞ் செய்கமற்றது, பொன்றுங்காற் பொன்முத்துணை." " அறத்தாறிது வெனவேண்டா சிவிகை, பொறுத்தானேரேந்தானிடை" என்று நாயனர் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். தம்மிடம்யாசகார்த்தமாய்வரும் ஏழையானவன் முற்பிறப்பில் பரமலோபியாயிருந்ததனுல் இப்பிறப்பில் தரித்திரனனென்னும் முன்தருமஞ்செய்திருப்பின் இப்போதும் நம்மைப்போல்செல்வவாளுகப்பிறக்திருப்பானென்றும்பணக்காரர் மனதில் திண்ணமாகநினைத்தல்வேண்டும். அப்படி நினைக்கவேண்டுவது முக்கியமான விஷயம். (காலடியார்) "நல்லார் கையிருப்ப கயமிலாக், கல்லார்க்கொன்றுகிய காரணம்-- தொல்லை,, வினைப்பயனல்லதுவே னெடுங்கண்ணுய், நினைப்ப வருவதொன்றில்" என்று கூறப்பட்டிருப்பதை நன்காராய்ந்தால் புலப்படும். யோக்கியரிடத்துண்டாகும் வறுமையும் அயோக்கியரிடத்துண்டாகும் செல்வமும் அவரவர்க்குத் தக்க நன்மையை விளைவிக்காதென்பது திண்ணம். ஒரு காலத்திலும் குறைவென்பதில்லாமலும் பிறவற்றினுதவி வேண்டாமலுமிருக்கிற கடலினிடத்தே மழை பொழிவதுபோலச் செல்வங்கொண்டோர் சற்பாத்திரத்தில் பொருளைச் செலவிடாமல் அபாத்திரத்திற் செலவிட்டால் ஒருநன்மையும் பெறார். அதனுல் இகபரசாதகம்கனவிலுங்காணமாட்டார்கள். தான் தேடிய பொருளை மனைதார ஏழைகளுக்கு தாமதமும் தானுமனுபவியாமலும் மிகவும் ஜாக்கிரதையாகக்காப்பாற்றுகிற லோபியானவன் தானருமையாகப் பெற்ற பெண்ணைப் பிறனுடைய சொத்துக்கே உரியளாகும்படியாகச் செய்வதுபோல், தான் பெற்ற செல்வத்தையும் அயலானுக்கே உரியதாகச் செய்கின்றனன். சமுத்திரமானது எவ்வளவும் குறைவற்றதாயிருந்தாலும் அது எவ்வுயிர்க்கும் பயனற்றதாயிருப்பதுபோல் அயோக்கியனுடைய செல்வமும் பயனற்றதாகிறது. அக்கடலினருகே உண்டாகும் ஊற்றுக்கொப்பாக யாவர்க்கும் உதவி செய்து வினங்கினுல் புருஷார்த்தமும் புண்ணியமுங்கிட்டும். கன்றனது ஊட்டுகையில் சந்தோஷமாய்ப் பாலேச்சுரக்கும் பசுவைப்போல் ஏழைகளைக் கண்டவுடனே யிரக்கங்கொண்டு சந்தோஷத்தோடு பொருளுதவி செய்வதுதான் கொடையாம். வலியோர் பலவித்தத்தால் வருந்த, மனவெறுப்புடன் தேனீயைப் போலக் கொடுப்பது கொடையாகாது. சில லோபிகள் தாம் கொடாவிட்டாலும் காலவித்தியாசத்தாற் செல்வமிழந்த ஈகையாளனைக் குறிப்பிட்டுக் கன்றலே தெரியாமல் கொடுத்துக் கொடுத்து என்ன பலனைக்கண்டான், வறுமைப்பலனைக்கண்டான் என்று நிந்தை கூறுவர். வறுமையடைந்த ஈகையாளன் பெற்ற யோக்கிய குணமுள்ள மைந்தன் பிறர் செய்யும் நிந்தையைக் கனியாமல் இயன்றமட்டில் யாசகர்க்குக் கொடுப்பன். (நன்னெறி) "எத்தை நல்கூர்ந்தனிரப்பார்க்கீக் தென்ற வன், மைந்தர் தம்மீகை மறுப்பரோ-- பைந்தொடி, நின்று பயனுதவில்லா அரம்பையின் கீழ்க், கன்றுமுதவுங்கனி"; என்பதுவே சாகுபியாம். நதியானது இருகரையும் பெருகித் தண்ணீரோடிக் கொண்டிருக்குங்காலத்தில் தன்னையடைந்தவர்க்குத் தாகசாந்தி செய்து வறண்டகாலத்தில் வந்தவர்களை ஓட்டிவிடுகிறதா? அப்போதும் ஊற்றிலிருந்துண்டாகும் தெளிந்த நீரைக்கொடுக்கின்றது. இது யாவர்க்கும் பிரத்தியக்ஷ அனுபோகமே. யோக்கியர் எவ்வளவு கேவல ஸ்திதியிலிருந்தாலும் தம்மைத்தேடிவந்த யாசகர்க்கு இல்லை யென்னுமல் தம்மாலியன்றமட்டும் உதவுவர். (நல்வழி) "ஆற்றுப் பெருக்கற்றடிகமேற் காளுமவ்வா, றூற்றுப்பெருக்கா லுலகுட்டும்-ஏற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாராலும், இல்லையெனமாட்டாரிசைந்து". பொருளை சம்பாதிப்பது பெரிதல்ல. அதனை நல்வழியிலேயே தேடித்தானும் சுகமாக அனுபவித்து நல்வழியிலேயே செலவிடல்வேண்டும். [இன்னும் வரும்.]

கே. கு. விசாகப்பெருமாள் முதலியார்.

சரித்திரப் பயிற்சி.

(முன்தொடர்ச்சி.)

இத்தேசத்தில் எங்கும் காணதக்கவைகளாயும் இக்காலத்தவர்களால் செய்யக்கூடாததாயும், வேறு காடுகளில் அகப்படக்கூடாதனவாயும், காலஞ்சென்றும் வன்மை குறையாத தன்மையுள்ளனவாயும் இருக்கிற சிறந்த கோட்டைகளும் ஆலயங்களும் எவர்களால் நிர்மாணம் செய்யப்பட்டன? பிற்காலத்தவர்கள் பிறவிக்கடலின் பெரும்வெள்ளத்திலுழன்று பணத்தையே தெய்வமாகக்கொண்டு பரதேவதையை மறந்து சிற்றின்பங்களில் மனதை நுழையவிட்டு கலிகாலத்தின் பாவ யிருட்டிலுல் மதியிழந்து நரகத்திற் கிரையாவாரென்று இரங்கி முத்தியளிக்கத்தக்க தெய்வங்களை ஆங்காங்கு பிரதிஷ்டை செய்தவர்கள் யார்? வானம் பார்த்த பூமைகளில் பெரும் பஞ்சத்தால் ஜனிற்கு தானியமற்று பசியினுல் வருந்தும் ஏழைகட்கு உதவும்பொருட்டு பெரிய ஏரிகளும் ஆறுகளும் யாரால் வெட்டப்பட்டன? மிகவும் பிரயாசைப்பட்டு சிற்பசாஸ்திரங்கள் யாரால் விருத்திசெய்யப்பட்டன? மானியங்கள் மிகுதியாகவிட்டு சிற்பிகள் யாவரால் ஆதரிக்கப்பட்டார்கள்? இப்படிப்பட்ட சாதாரணமான அரசர்களுக்குக் கிடைக்கக்கூடாத தர்மங்களையெல்லாம் கலிகாலத்தில் ஆரம்பத்திலிருந்த அரசர்கள் தான் செய்தார்களென்பதற்கு ஐயமில்லை.

பிறகு பேர்பெற்ற விக்கிரமாதித்தன் ஆரிய வர்த்தத்திற்கு அரசனுகவந்தான். அவன் தேச க்ஷேமத்தின் பொருட்டு உலகத்திற் பிறந்த அரசர்களுக் கெல்லாம் முதன்மை யானவன். கலிபுருடன் செய்யும் காரியமாகிய பெருமலேயின் சிற்றறிய மகாவாச்சாம்போல் வந்தவன். தன் புகழின் மிகுதியால் திசைகளையெல்லாம் வெண்மையாகச் செய்தவன். விண்ணுலகிலும் மண்ணுலகிற்போல் லாபம் பெற்ற குணங்களையுடையவன். கடமையான தவத்திலுல் பார்வதியின் பிரசாதத்தைப்பெற்றவன். பரதகாட்டிற்கு தபோராசி போன்றவன். கற்றோர்களாகிய சகோதரங்களுக்கு முழுமதி போன்றவன். புராணங்களாகிய இருட்டிற்கு சூரியன் போன்றவன். எல்லாக்கல்விகளுக்கும் உறைவிடமானவன். வினயத்திற்குத்தங்குமிடம் போன்றவன். பலவிதச்செல்வங்களாகிய ஆறுகளுக்குக் கடல்போன்றவன் என்று தெரியவருகிறது. மனிதர்களுக்கு மிகவுமுதவிபுரிந்த இந்த மன்னர்க்கு மன்னன் நமது தேயத்திற்குபுகழை விளைவிக்கும் மகாதவியாளை ஆதரித்தானென்பது இக்காலத்தவர்களாலும் புகழுடன் சொல்லப்படுகிறது. மிக அன்போடு அங்கீகரிக்கப்பட்டு தவனிடத்திலிருந்து வெகுமானங்களைப் பெற்ற காளிதாசர் முதலான கவிகளும் நெருவம்சம் முதலிய சிறந்த காவியங்களைச் செய்தார்களென்பது ஒரு செய்யுளால் தெரியவருகிறது. அதன் பொருள் "தன்வந்தரி, க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கெடர்ப்பன், காளிதாசன், ... ———, சரருசி, இவர்கள் சபைக்கு நவரத்தினங்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

இந்த விக்கிரமாதித்தன் ஆந்திரவம்சத்தில் பிறந்தவன். அக்கினிகுல அரசர்களுக்கெல்லாம் முதன்மையானவனென்று, மகாகவிகளாலும், புராணக்காரர்களாலும் பிரபந்தங்களாலும் புகழப்பெற்ற அரசனுயிருந்தான். அக்கினி குலத்திலுண்டான மன்னர்மணிகளோ வென்றால்

சீர்த்திமான்களாயும், வேறு தேசத்தவர்களால் பெரிய காரியங்களைச் செய்பவர்களென்று அடிக்கடி புகழப்பெற்றவர்களாயும், பௌத்தமதமென்கிற துஷ்டமிருகத்தைத் தூரத்தக் காரணமானவர்களாயும், பிராமண மதமென்கிற மண்டபத்தைத் தாங்க ஸ்தம்பங்கள் போன்றவர்களாயும் ஆண்டுவந்தார்கள். அக்கினி வம்சமென்றால் என்ன? அது எந்ததேசத்திலிருந்தது? எதற்காக அவர்கள் பரதகண்டத்தவர்களால் புகழப்பெற்றவர்களானார்கள்? பௌத்தமதமென்றால் கிறிஸ்து மதமா? யவன மதமா? அல்லது தூருக்க மதமா? இவைபோன்ற கேள்விகளுக்கு எம்மாலான மட்டும் உத்தரம் சொல்லப்புகுவாம். (இன்னும்வரும்.)

டி. வி. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

நன்றி மறவாமை.

நன்றிமறவாமையாவது தனக்குப் பிறர் செய்த உபகாரத்தை மறவாதிருத்தல். உபகாரமாவது பிரதியுபகாரத்தை விரும்பாதுசெய்யும் நன்மையாம். அளவற்ற செல்வமுடையவனுயினும், மிக்க பலமுடையவனுயினும், மேலான கல்வியுடையவனுயினும், பெரியஅதிகாரத்தைப் பெற்றவனுயினும், உலகமுற்றும் ஒரு குடையின்கீழ் அரசாளும் சக்கரவர்த்தியாயினும் சிலசமயங்களில் பிறர் உபகாரத்தைப் பெறாமலிருக்க முடியாது. அப்படிப் பிறர் உபகாரத்தைப் பெற்றவர் அதை யொருபோதும் மறக்கப்படாது. அதுவும் ஆபத்துக்காலத்தில் செய்த நன்றியை என்றும் என்னாளுமேலும் மறக்கவேபடாது. அவ்வாபத்துக்காலத்தில் செய்த நன்றி அற்பமேனும் காலத்தின் அருமை நோக்க அது உலக அளவினும் பெரியதாகும். தினை அளவு நன்மைசெய்தாலும் அதை அவ்வளவினதாகக்கொள்ளாது பனை அளவாகக்கொள்வர் சான்றோர். பிறர் செய்த உபகாரத்தைப்பெற்றவர் மறக்கப்படாதென்று முன்னுரைத்தோம். அபகாரஞ்செய்தாலோ, அதை அப்போதே மறந்துவிடவேண்டும். அதுபற்றியே "நன்றிமறவேல்" என ஔவையாரும், "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என நாயனாரும் உரைத்தனர். நமக்கு ஒரு காலத்தில் நன்மைசெய்தவர் பின்னொருகாலத்தில் தீமை புரிவாராயின் முன் செய்த நன்மையை நினைக்க, பின்செய்த தீமை யில்லையாய் விடும். பசுவின் மூலையை அறுத்தல், கருவையழித்தல், சிசுவைக் கொல்லல் முதலிய பாதகங்களைச் செய்தார்க்கும் அப்பாதகங்கள் ஒழியத் தருமசாஸ்திரங்களில் பிராயச்சித்தங்கள்கூறுகின்றன. பிரதியுபகாரத்தை விரும்பாது நன்றி செய்தவர்களுக்கு அவர்கள் செய்த நன்மையைக் கருதாது தீமை செய்தவர்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை. இதனுல் நன்றி செய்தார்க்குத் தீமை செய்பவர் கொடியரினும் கொடியரென்றே விளங்குகின்றது.

ஒருவர் செய்தவுபகாரத்தை யெத்தகாலும் மறக்கப்படாதென்றும், அபகாரத்தை மறக்கவேண்டு மென்றும், பிரதியுபகாரம் அவசியம் செய்யவேண்டு மென்றும் கூறுவதனுல் எப்படியாகிலும் பிரதிஉபகாரஞ் செய்யவே வேண்டு மென்றெண்ணிச் சாஸ்திர விரோதமான தியசெயல்களைச் செய்தும், பிறர்க்கு கஷ்டப்படுத்தியிடையூறுபண்ணியும் நன்மை செய்யப்படாது. ஓர் நியாயாதிபதியினிடத்தில் உபகாரஞ்செய்த ஒரு

வனும் செய்யாத ஒருவனும்சேர்ந்து,வழக்குக் கொண்டுபோவார்களேல் அந்த நியாயாதிபதியானவர், உபகாரத்தை மறக்கப்படாதென்றும் மறந்தவர்க்கு ஒழ்ஸீவிக்கும் வழியில்லையென்றுங் கூறுவதால் உபகாரஞ்செய்யாதவன் பக்ஷத்தில் நியாயம் பலமா யிருக்கும்போதும் அவனுக்கு கஷ்டமுண்டாக, உபகாரஞ்செய்த நியாயம் பலமில்லாதவன் பக்ஷமாய் நடுவு நிலையை தவறித் தீர்ப்பு செய்ய வொண்ணுது. உபகாரத்தைப் பெற்றநியாயாதிபதி தனக்கு உபகாரஞ் செய்தவனுக்குத் தன்சொந்தத்தில் பிரதிஉபகாரஞ்செய்து கன்றிமறவாமையைக் காட்டலாமேயன்றி, பிறரைக்கெடுத்து கஷ்டப்படுத்தி அவர் மனம்வருந்த நீதிதவறிப் பிரதிஉபகாரஞ்செய்யலாகாதென்பதாம். நமக்கு உபகாரஞ் செய்த ஒருவன் பலவீனனை பிறனெருவனே அநியாயமாய் அடித்துத் தொந்தரவு பண்ணி அவன் கையிலுள்ள பொருள்களே யெல்லாம் பறிப்பானேல் அச்சமயத்தில்அந்தப் பலவீனன் பக்ஷமாயிருந்து அவனேயடியாமலும் பொருளைப் பிடுங்காமலும் செய்து பாதுகாக்கவேண்டும். இதலால் உபகாரஞ்செய்தவனுக்கு அபகாரஞ் செய்ததாயாவது, உபகாரத்தை மறந்ததாயாவது, பிரதிஉபகாரஞ் செய்யவில்லே யென்றுவது குற்றங்கூறவொண்ணுது.உபகாரஞ்செய்தவர், பொய், கொலை, களவு, விபசாரங்கள்செய்யவும், கள்குடிக்கவும் (விருத்தசபையில் ஊன்றுகோல்போ லுதவுவார்களென்றும் இன்னும் அநேகபேறுகளைப்பெற்றுச் சுகமாய் வாழலாமென்றுமெண்ணி நெடுங்காலம் தவஞ்செய்து பெற்ற) தாய் தந்தைகள் மனம்நோக அவர்களைவிடவும், ஜாதிமதம் கெடவும், இன்னும் இப்படிப்பட்ட அக்கிரமங்கள் செய்யவும்சொல்வாரேல் நடுவுநிலைமைதவறி நாம் அவ்வாறு செய்தாலுண்மலாபத்தை இழக்கப்படாது. உபகாரஞ் செய்தவர்க்குப் பதிலுபகாரஞ் செய்வதும் உபகாரத்தை மறவாதிருப்பதும் நடுவுநிலைமை தவறியன்று. உபகாரஞ்செய்தவர்களுக்கு நடுவுநிலைமை தவறிப் பிரதியுபகாரம்ஒருவேளை செய்யப் போகின்றீர்களென்று கருதியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய்மலர்ந்தருளிய தமிழ்மறையான திருக்குறளில் ''செய்ந்நன்றியறிதல்''என்னும் அதிகாரத்தின்பின் பகைவர், அயலார், நட்பினரான இம்மூவகை யோரிடத்தும் அறத்தினின்றும், வழுவாமல் சமமாய் நிற்கும் நிலைமை ''யான (''நடுவுநிலைமை'' என்னும் அதிகாரத்தை வைத்தருளினர். ஆகையால் நடுவுநிலைமை தவறாமல் ''நன்றிமறவாமை'' யை அனுசரித்தல் வேண்டும் என்பதாம். நிற்க,

கருணைவடிவமும் பேருபகாரியுமான சர்வேஸ்வரன் பிரதியுபகாரம் விரும்பாமலே ஆணவ இருளில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்களே அஞ்ஞானம் ஒழிய மெய்ஞ்ஞானம்பெற்று, என்றும் பிரிதலில்லாத முத்தி யின்பம் பெறும்பொருட்டு வெளிப்படுத்தி, தது கரண புவன போகங்களைக் கொடுத்து, முத்திக்குச்சாதனமான கரும பத்தி ஞானங்களே அனுஷ்டிக்க வேதாகம சாஸ்திரங்களைத் தந்து, அவரவர் சரீரபலத்துக்கும் புத்தி வலிமைக்கும் ஏற்றவாறு படிப்படியாக அனேக மார்க்கங்களே உண்டாக்கியிருக்கிறார். பிரதியுபகாரம் விரும்பாமலே கொடுத்திருக்கிற அவர்க்குநாம்செய்யும் பிரதி யுபகாரமாவது: அவரருளிய வேதாகம சாஸ்திரங்களின்படி கொலை, களவு, விபசாரம், பொய், சூது முதலிய தீமைகளே விலக்கி, சத்தியம், தயை, பொறுமை, பரோபகாரம், சாந்தம் முதலிய நன்மைகளே அநுசரித்துச் சாது சங்கத்தில் சேர்ந்து, நித்தியாநித்திய வஸ்துவிவேகஞ்செய்து, அநித்தியப்பொருளே விரும்பாமல்நித்தியபொ

ருளான பரப்பிரமசொரூபத்தின் அருளைத்தேடி, நிர்விகரண சுத்தியாய்ப் பணிந்து நற்கதி பெறுவதாம். அவருடைய சாயுஜ்ய பதவியை நாம டைவதைவிட வேறு பிரதியுபகாரம் அவர் விரும்பவில்லே. நாம் ஜனன மரணதுக்கங்களே யொழித்து நித்திய சுகத்தைப் பெறுவதே அவர்விரும்பும் பிரதியுபகாரமானுல் அவ்வாறுசெய்யாமல் அநித்தியப்பொருளைநித்தியப் பொருளென்று மயங்கி அதில்வீழ்ந்து துக்கசாகரத்தில் மூழ்குவது கன்றுமோ! இது அவர் விரும்பும் பிரதி உபகாரமாகுமா ! ஆகாது !! ஆகாது !! ஆகையால் அவர்செய்த கன்றியை மறவாது அவரைத் தினந்தோறும் தியானித்து யான் என்னும் அகப்பற்றும், எனதென்னும் புறப்பற்றும் ஒழித்து முக்தி பெறுவோமாக.

''ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி அல்லவற்று ளாயமாய்
ஐந்து மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனே
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாகி அந்தரத்தணைந்து நின்று
ஐந்தும் ஐந்து மாய நின்னே யாவர் காண வல்லரே.''
(திருமழிசை-ஆழ்வார்)

பொருளாகக்கண்ட பொருளைவைக்குமுதற் பொருளாகிப் போதமாகி
தெருளாகிக்கருதும் அன்பர்மிடி தீரப்பருக வந்த செழுந்தேனுகி
அருளாலேநீர்க் கசம் புற மென்றன்ன தூரண ஜோதமாகி
இருள்தீரவிளங்குபொருளியாதந்தப்பொருளினையாம்இறைஞ்சிநிற்பாம்
(தாயுமானவர்.)

க. வீ. சந்தானகிருஷ்ண நாயடு.

பிள்ளைவளர்ப்பு.

(முன்தொடர்ச்சி)

பிள்ளைகளுக்கு மோசபுத்தி கற்றுக் கொடுக்கக்கூடாது. மேலும் அவர்களேயும் எப்பொழுதும், மோசம் செய்யக்கூடாது. அவர்களுடன் சொல்லிய பேச்சை யென்றும் தவறக்கூடாது. தவறும்பட்சத்தில்அவர்கள் மறுபடியும் நம்மை நம்பஞ்ணுர்கள். ஆதலால் ஏதாவது கொணர்ந்துகொடுப்போமென்றுவது எவ்விடத்துக்காவதுஅழைத்துக்கொண்டு போவோ மென்றுவது மற்றெந்த விஷயத்தைக் குறித்தாயிலும் அவர்களுடன் வெறும்வார்த்தைகள் சொல்லக்கூடாது. அவ்விதப் பேச்சுகளே அவர்கள் மறக்கமாட்டார்க ளாதலால் சொல்லியவண்ணஞ் செய்வித்தல் முக்கியமானது. உடன் பிறந்தவர்களேயாவது தோழப்பிள்ளைகளேயாவது தொண்டுகளேயாவது ஏனேயோர்களேயாவது அடிக்கடியும் வருத்தப்படுத்திக்கொண்டு சில குழந்தைகள் முரட்டுக்குணம் பொருந்தியவர்களாயிருப்பார்கள். இதை ஆவசியம் ஒழித்து விடவேண்டியது. இவ்வியற்கைமுற்றி வருமாயின் பெரியவர்களானபொழுது தயாளுத்தனமற்று ஈரஇரக்கமில்லாதவர்களும் குரூரச்சுபாவ முள்ளவர்களுமாய் அநேகவிதமான இடையூறுகளுக்கு ஆளாவார்கள். மேலும் தோழக் குழந்தைகளே அநியாயம்பண்ணி அவர்களுடைய பொருள்களே அக்கிரமமாய் அபகரித்துக் கொள்ளவிடக்கூடாது. செட்டி செல்லரைக்கெல்லாம் கினந்துகொள்வது பிள்ளைகளுக்குப் பழக்கப் படுத்தக்கூடாது. இரங்கிய இளகெஞ்சுடனும் பொறுமையுடனும் இத்துற்குணத்தைப் போக்கடிக்க வேண்டியது. குழந்தைகள் விஷயம்கெட்டு வாய்க்குவந்தபடி எல்லாம் வதறுவதும்கூடாது.

பெரியவர்களுடைய நடவடிக்கைகளையும் வழிகளையும் அனுசரிப்பதும் தாகாதுகாய, பய, விகயங்கள் இரைந்தமட்டும் பொருந்தியிருந்து, நல்லபோர் நடுவில் பதமையாய்நடந்து கொள்ளும் பிள்ளைகள்; பெற்றவர்களுடைய இருதயக்கட்டுகளைப் பின்னிக்கொண்டு அபரிமிதமான ஆனந்தத்தையுண் பெண்ணுவார்கள். பிள்ளைகள் உலகவறிவு பெறவேண்டியவர்களாதலின், புதுப்பொருள்களைக்கண்டபொழுதும் ஏதேனும்தெரியாத விகயங்காண ப்பட்டபொழுதும் திரும்பித் திரும்பி வினவிக்கேட்பார்கள்: அப்பொழு து அவர்களின்மேல் கசிந்து கொள்ளாமல் அவர்களுக்கு அச்சங்கதிகளை ச்செவ்வையாய்த் தெரியப்படுத்தவேண்டியது: அவை அவர்களுக்குச் சொல்லக்கூடாத விகயங்களாயின் சொல்லத்தகாதென்று தெளிவுபட த் தெரியப்படுத்த வேண்டியது. தங்களுடைய விளையாட்டுச்சாமான்க ள், பொம்மைகள் முதலியவற்றைத்தாமே சாக்கிரதையாய்க் காப்பாற்றி ஒழுங்காய் வைத்துக்கொள்ளும்படி பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவே ண்டியது. சோம்பல், அசிரத்தை, ஒழுங்குபாடில்லாமல் பொருள்களை வழிக்குக் குறுக்கே போடல், இவைபோன்றகெடுவழக்கங்களைமாற்றவே ண்டியது. கிரமமாய்ப் பொருள்களையிட்டுக் கொள்ளும் வழக்கம் பெரிய வர்களான பிறகு மிகவும் பிரயோஜனப்படும். சிறிய பிள்ளைகளுக்குப் பர மானந்த கரமானது. நகங்களினுல் அவர்களுடைய மார்புகளும் மூச்சுப் பைகள் பலப்படும், இரத்தம் செவ்வையாய் ஓடி இருதயத்தைச் சந்தோ ஷத்துடன் பொங்கச்செய்யும். சோணசக்தி அதிகரிக்கும். ஆரோக்கியத் துக்கும் தேகபலத்திற்கும் சிறிய தேவாலிர்த்தத்திற்கொப்பானது. ஆதலி ன் பிள்ளைகள் சிரித்துக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் மேல் கோபி த்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவே யல்லாமல் கேட்பவர்களுக்குக் கூட பிள்ளைகளின் சிறிய விகாரங்களைப் பறக்கடித்துச் சந்தோஷ த்தைப் பிறப்பிக்கும். பிள்ளைகளின் சிரிப்பு— ஆகா! அதன் கலத் தொ னி, அதன் இன்னிலைகள்! அதன் இயற்கை இயல்பு, அதன் உல்லாசம், அதன் உற்சாகம், அதன் மிருதுவும் இனிமையும்! அதனைக் காட்டிலும் ம்னச் சுகதுஷ்டிகரமாக விருக்கும், இசையொலி இவ்வுலகில் பிறிதேனு முளதோ? (முற்றிற்று.) M. S.

கலாப்பிரகாசனி.

(முன் தொடர்ச்சி.)

நீற்க, கமலாபுரியில் சுகுணமாலினி மீண்டும் கற்பவதியானுள். 10-வது மாதத்தில் ஒருபெண்குழந்தை பிறந்தது. அதற்கு வனசலோசனி என்றும் நாமகரணஞ் சூட்டினர். பின்இரண்டு வருஷத்திற் கெல்லாம் மறுபடியும் இரண்டு குழந்தைகளைப் பெற்றுள். அக்குழந்தைகளிருவரில் மூத்தவனுக்கு வித்தியாதரன் என்றும் இளையவனுக்கு ரூபசந்திரன் என்றும் பெயரிட்டு அதிக ஜாக்கிரதையுடன் வளர்த்து வருதனர். வன சலோசனி மங்கைப்பருவமடைந்து 17-வதுவயதையும்கடந்து நவயௌ வன யுவதியாய் விளங்கினுள். அன்னவளை சுந்தரபுரியின் மன்னனுன சுருணேதையனுக்கு விவாகம் செய்து கொடுத்தனர். வித்தியாதரன் ரூப சந்திரன் இவ்விருவரும் கல்வியைக் கசடறக் கற்றுக் கலாசாலையினின் றும் நீங்கி பெற்றோரடி பணிந்து இராஜகுல சம்பிரதாயப்படி புவனச ஞ்சாரம் செய்துவர அனுமதி பெற்று தேசாடனஞ் செய்யச்சென்றனர்.

இவர்கள் சென்ற சிலகாட்களுன் கலாலங்கிருதரைக்காண ஓர் சன் னியாசியார் வந்தார். கலாலங்கிருதரும் அவரை யுபசரித்து க்ஷேமலாப வர்த்தமானங்களை விசாரித்ததில் அவருடைய பெயர் நித்தியானந்த ஸ்வாமிகள் என்றும் அவர் அநேக தேசங்களுக்கு யாத்திரை போயிருப் பதாயும் இரண்டாவது தடவை தேசசஞ்சாரம் செய்து வரவேண்டுமென் ன்ற அபேகையுண்டானதினுல் மறுபடியும் புறப்பட்டதாகவும் தெரியவ ந்தது. வந்த சன்னியாசியார் கலாலங்கிருதரைத் தன்னுடன் வரும்படி யழைத்தனர். அவரும் தனக்கு தெய்வாளாய் இருந்த இவ்வெண்ணத்தை கிறைவேற்றிக்கொள்ள இதுதான் தக்கதருண மென்றெண்ணி சன்னியா சியாருடைய வார்த்தைக் கொப்பித் தன் பிரிவைப் பொறுக்க ஆற்றலற்ற வனாய்ப் பிரலாபிக்கும் தன் பிராணேஸ்வரியான சுகுணமாலினிக்கு வே ண்டியதேறுதல்களைப் புகன்று விடைபெற்றுக்கொண்டு சன்னியாசியா ருடன்சென்றார்.

பதியின் பிரிவாற்ருமையால் வருந்தும் சுகுணமாலினி ஒருகாளிர வு தனது காயகன் கப்பலுடைந்து சமுத்திரத்தில் மூழ்கித் தத்தளிப்பது போலவும், அவர் அருமையாய்ப் பாதுகாத்துவந்த தான்குபுஸ்பச் செடிக ளும் வாடிப்போயிருந்தது போலவும் அவருடைய உருவம் சித்திரமாயிரு ந்தபடம் கீழேவிழுந்து உடைந்து போனது போலவும் ஒருபயங்கரமான கனவுகண்டு அலறினுள்: எல்லோரும் நித்திரையிலிருந்து விழித்துக்கொ ண்டோடிவந்தனர். கடைசியிற் கனவிற்கண்டபடியே படம் உடைந்துபோ ய்கீழேவிழுந்தும், புஸ்பச்செடிகள் தான்கும் வாடிப்போயுமிருக்கக்கண்டு அனைவரும் வியப்படைந்து மனக்கலக்கங்கொண்டனர். சுகுணமாலினி வியஸனக் கிராந்தையாய் பலர் தடுத்தும் சோளாமல் உலக சுகத்தை வெ றுத்துத் துறவியானுள்.

நீற்க மாளவதேசத்தையடுத்த ஓர் காட்டில்கள்ளிருளில் பெரியவரொ ருவர் அதிகவஸ்டத்துடன் கடந்துபோய்கொண்டிருந்தார். எவ்வளவோ பிரயாசை யெடுத்தும் தன் தாகத்தைச் சாந்திசெய்து கொள்ள சிறிதாகி லும் ஜலம் கிடைக்காமற் போயிற்று. கடைசியில் மனம் வருந்தி அதிக களைப்புடன் ஒருவ்ருக்ஷத்தடியில் உட்கார்ந்தார். உடனேஇவர் தலையில் மர க்கிளை ஒன்று ஒடிந்து விழுந்தது. வெகு கஷ்டத்துடன் அதை எடுத்து விட்டுப்பார்க்கையில் ஒருபெண் மூர்ச்சையாய்க்கிடந்தாள். இதைக்கண்ட பெரியவர் மூர்ச்சை தெளியும்படிவேண்டிய உபசாரங்கள் செய்தனர். சந் திரனும்உதயமாகி நிலவைவீசஆரம்பித்தான். இதற்குள் அந்தரமணி மூர் ச்சைதெளிந்து எழுந்துட்கார்ந்து தன்னைக் காப்பாற்றியவருக்கு வந்தன மளித்து தான் மாளவதேசாதிபராகிய ஞானபரணருடையமனைவியென் றும் தன் பதியின்பிரிவாற்ருமையால் வருந்தி பலகஷ்டங்களையனுபவித் து இக்கு வந்து இம்மரத்தின் கிளையில் கயிற்றைக்கட்டித் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டு மரத்தினின்றும் குதித்ததாயும் தன்பாரம் தா ங்கமுடியாமல் மரக்கிளை ஒடிந்துவிழ அத்துடன் தானும் விழுந்ததாயும் தன்பெயர் ரவமாலிகையென்றும் தெரிவித்தாள். இதைக்கேட்டதும் பெ ரியவருக்கு மனதில் சந்தேகமும் வியசனமும் உண்டாயிற்று. ரவமாலி கையை வெகு ஆவலுடன் உற்று நோக்கி இடது காலைக்காட்டச் சொன் னர். அதில் ஓர்மச்சமிருந்தது. வலதுகையைப்பார்த்ததில் அதில் "கலா லங்கிருத ரவமாலிகா" என்று பச்சை குத்தியிருக்கக்கண்டார். உடனே அதிக துக்கத்தோடி ஹா! ரவமாலிகா!! இத்தனை வருஷங்கட்கு மேல்

உன்னை இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியிலா காணும்படிசேரிட்டது!. தெய்வச் செயலே யறிந்தார் யார்? உன்னை ஐந்து பிராயத்தில் வேறோ சுவாமிச் சென்றனர். உன்னை மறுபடியும் காண்பேனென்று கனவிலும் கருதவில்லை. நான் அன்னியனென்று எண்ணவேண்டாம். உனது தந்தையான கலாலங்கிருதன் நான்தான். உனது மூன்றாவது பிராயத்தில் உனது தாயார் சுகுணமாலினி வேடிக்கையாக என் பெயரையும் உன் பெயரையும் ஒன்றுசேர்த்து உன் கையில் பச்சைகுத்தினாள். அப்பொழுது சாதாரணமாய் நினைத்த பச்சையே இப்பொழுது உன்னைக் கண்டு பிடிப்பதற்கு உதவியாய் நின்றதென்று கூறி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். இதைக்கேட்ட கவமாலிகை அதிக ஆச்சரியத்துடன் உற்றுநோக்கியதில் தன் தந்தையென்றே தோன்றிற்று. தக்ஷணமே கவமாலிகை கலாலங்கிருதரை வணங்கி என்னுயிர்போகும் நேரத்தில் உங்களையும், நீங்கள் தாகத்தால் வருந்தி இறக்குந்தருணத்தில் என்னையும் இவ்விடத்தில் ஒன்று சேர்த்த தது கடவுளின் செயலே யாகுமென்றாள். இந்த சமயத்தில் வனசஞ்சாரியாயிருந்து வரும் கிருபாலோசனர் அகஸ்மீகமாய் அவ்வழியே சென்று கொண்டிருந்தவர், இதென்ன இந்த நடு ராத்திரியில் மனிதர் குரல் போல் சப்தம் கேட்கிறதே யென்று அவ்விடம் வந்து கலாலங் கிருதரையும் கவமாலிகையையும் கண்டு ஒன்றும் தோன்றாது பிரமித்தார். கிருபாலோசனரைக் கண்ட கவமாலிகை ஹா! பிதா! வென்று அலறிக் கொண்டு அவர் மேலே விழுந்து மூர்ச்சையானாள்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஞானம்பாள்.

(முன் தொடர்ச்சி.)

ராம:— நான் ஒரு விஷயம் கூறுகிறேன். அதற்கு உதவி செய்தால் தங்களை மறக்க மாட்டேன். அது என் மனதை வாள் போலறுக்கின்றது!

வீரசி.— அதென்ன! சொல்!

ராம:— அது குடும்ப விஷயம். பெரிய சங்கதி. அது இன்று இரவு முழுவதும் செல்லும். ஆனாலும் சுருக்கமாய்க் கூறுகிறேன். என் சிறிய தகப்பனாராகிய சுந்தரதாஸ் கோகுலபுரம் ஜமீன்தாராயிருந்தார். அவர் இறந்து போனார். அவர் பின்னே யாகிய ஹரிதாஸ் என்பவர் அங்கிலங்களையும் பங்களாவையும் தன தாக்கிக் கொண்டு எனக்குப் பேசியிருந்த பெண்ணாகிய பார்வதி யம்மாள் என்பவளைத் தான் மண முடித்துக் கொண்டு எனக்கு வரவேண்டிய பாகத்தைக் கொடாமலு மிருக்கிறான். அவனுக்கிருக்கிற சொத்தோ ஏதேஷ்டம். எனக்கு ஓர் வழியால் கிடைக்கவேண்டிய பாகமோ அதனில் மிகுந்த சொற்பம். அதைத் தரமாட்டேனென்று மறுத்தனன். அதன் மேல் நான் வியாஜ்யம் செய்யத் தலைப்பட்டேன். ஆனால் அவன்பக்கமே அனுகூலமாயிற்று. நான் வாரியிறைத்த பணமெல்லாம் வீணாயின. ஆனால் அப்பீலுக்குப்போக யோசித்திருக்கிறேன். அதற்கு மிக்க செலவாகும். நான் இவற்றால் எளியவனாய் விட்டேன். அவன் மகா செல்வ வந்தனாய் விளங்குகிறான். நான் அவனை என் ஜன்ம சத்ருவாகவும் வெறுக்கிறேன். பரதசன்! நீர் எனக்கு உதவி செய்வீரா?

வீர:— நல்லது! அவன் இறந்து போனால் உனக்கு பாத்தியதை எப்படிமா?

ராம:— இல்லே யில்லே! அவனுக்குக் கைக்குழந்தை ஒருபையனிருக்கிறான். அவன் ஓர் பெரிய தடைதான்.

வீரசி:— நீ தாராள மாயிருந்தால் சொல்! இப்போது 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொல். என் வீரரான அன்பர்கள் இவ்விஷயத்தில்தானே செய்யக்கூடும்! நான் அவர்களைக் கூப்பிடட்டுமா?

ராம்:— வேண்டாம்! அது கொலையாகவன்றோ முடியும். நான் ஜவாப் சொல்ல வேண்டி வருமே?

வீரசி: ஓ! ஓ!! இவ்வளவு தானா நீ. போ! போ!! பயங்காளி.

ராம்:— நான் பயங்காளி அல்ல மகாராஜ்! தாங்கள் அப்போர்ப் பட்ட சொத்துக்களை யெல்லாம் விட்டு விடவா யோசிக்கிறீர்? ஐயோ!

வீர:— அப்படியானால் அவன் வீட்டில் என்ன இருக்கிறது சொல் பார்ப்போம். அவன் சாவகாரல்லவா?

ராம்:— (மிக்க ஆவலோடு) ஆம்ஆம்! இதுவுந் தவிர, பெரிய லேவாதேவியாபாரி. கையிலேயே அவன்வீட்டில்மூப்பதினாயிரமும்,சொக்க விஷயத்தில் இருபதினாயிரமும் இருக்குமே. நிலவிஷயத்தில்வேறேயாய்

வீரசி:—ஆ! போதும்! இவ்வளவிருந்தால் பெரிய அதிருஷ்டமே.

ராம்:—மேலும் அவன்தடியன். பத்துப்பேரானாலும் ஒரே அடியில் எமலோகம் சேர்த்து விடக் கூடியவன். ஜனக்கட்டும் ஜாஸ்தி.

வீர:— ஆ! அப்படியா!!

ராம்:— நான் உண்மையைக் கூறுகிறேன். மேலும் அவனுக்கு ஒரு பையனும், ஞானம்பாள் என்னும் பெண்ணும் ஒன்றிருக்கிறது.

வீரசி:—அப்படியானால் காளி என்னைக்கார்ப்பான். அவன் கட்டாயம் செத்தே தீரவேண்டும். குழந்தையானால் என்ன குட்டியானால் என்ன ஒரே வீச்சாய் வீசிப் போட்டாலென்ன?

ராம்:— குழந்தையைக் கூடத்தானே மகாஹாராஜ்!

வீரசி:— குழந்தைகள் சண்டை பிடிக்குமா, ஆனாலும் அதுவுந்தானேனிருக்கிறது?

ராம்:— மேலும் மற்றொரு விஷயம் கூறவேண்டியிருக்கின்றது. கொல்லைப்புறம் இரண்டு வீட்டுக்கும் பெரிய கதவு இருக்கின்றது. நான் அவன் வீட்டிற்கு சில சமயங்களில் போவேன். எனது மனைவியும் போவாள். நான் தாங்கள் குறிப்பிடும் காள் உள்ளே ஒழிந்து கொண்டிருக்கிறேன். ஏதாவது அடையாளத்தின் மீது கதவைத்திறந்து எல்லாரையும் உள்ளே விட்டு விடுகிறேன். என்னுடி இரண்டு ஆட்களை யனுப்புங்கள். அவர்களுக்கு எல்லாம் சொல்லி ஏற்பாடு செய்துவிடுகிறேன்.

வீரசி:— சரி! அப்படியே செய்தல் நலம் தான்! உடனே கோவிந்தன்! கறுப்பன், என்று கூவவே இரு ஆட்கள் வந்தனர். அப்போது அக்கொள்ளைத் தலைவன் 'இவர் கூடப்போங்கள்! சொல்லுகிற படி கேளுங்கள்! நானும் காளை அங்கே வருவேன். காளை தான் கமக்கேற்பட்டதினம். ஏனெனில் காளை அமாவாசியை. போகலாம் போங்கள் சிக்கிரம். ஹே சாவகார் அவர்களுக்கு சகல உதவியும் செய்யும் எனக்கூறி அனுப்பி விட்டனன். (இன்னுமவரும்.)

K. S. வைத்தினாதய்யர்.

தமிழ்ப்பாஷை.

:o:

(முன் தொடர்ச்சி.)

இனித் தமிழ்ப்பாஷையின் உற்பத்தி வளர்ச்சி தேய்வு முதலியன ஆராய்வாம்:

சுருதியொப்ப ஆதியில் வரிவடிவின்றி ஒலி வடிவாயிருந்த இத் தமிழ் இன்ன காலத்திற்றான் உற்பத்தியாயிற் றென்றேனும் இன்ன மனிதரால் உண்டாக்கப்பட்ட தென்றேனும் எவராலும் கூறமுடியாது.

ஆனால் "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" என்றும், "பொதியமா மலையான் மொழி" என்றும் வில்லி யாதியோர் கூறியுள்ளதால், தமிழ் மகத்துவம் மிகுந்த அகத்தியனாரால் உண்டாக்கப் பட்டிருக்க வேண்டுமெனச் சிலர் துணியலாம். ஆனால், வில்லியாதியோர் கூற்று, உபசார வழக்கையும் சுவீகார புத்திர தருமத்தைப் பற்றியுமேயாம் என்பது நூல் வழக்கானும் மரபானும் பண்டையாசாரியர் உரையானும் சுருத்தானும் தெற்றெனப் புலப்படும். எங்ஙனமெனில், தற்காலத்துள்ள தமிழ் நூல்களுக்கெல்லாம் ஆதி நூலாகக் கொள்ளப் பெற்ற ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தை இயற்றி யருளியவரும் அகத்தியரின் பிரதம சீடருமான தொல்காப்பியனார், தமது நூலின் முதற்கண்.

"ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனே வழுத்து தூஉம்
போத மெய்ஞ்ஞான நலம்பெறற் பெருட்டே"

என்று கூறியிருத்தலானும், அகத்தியர் தமிழ்மொழியை அவலோகித முனிவர்பால் கற்றுணர்ந்தார் என்று க்ஷமண மதமும், சுப்பிரமணியக் கடவுளிட மிருந்து தமிழ் மொழியையும் பரமசிவனிடத் திருந்து அதன் இலக்கணத்தையும் ஓதி யுணர்ந்தனர் எனச் சைவமதமும் கூறுவதாலும், அகத்தியற்கு முன்னும் தமிழ் இருந்திருக்கிறது என்பது நன்கு புலப்படும் அன்றே? ஆதலின் அகத்தியர் தமிழ் நெடுங்கணக் கேற்படுத்தியவர் என்பதே பொருந்தும். நிற்க,

இவ் வக்ஷரகாலமே தமிழுக்கு ஆதி இலக்கிய காலமாயிற்று. இலக்கியங்கண்டதற் கிலக்கணம் இயம்புதல் விதியாதலின்.

இக்காலத்து, தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன் செம்பூட் சேய், வையாபிகன், வாய்ப்பியன் பனம்பாரன், கழாரம்பன், அவினயன், காக்கை பாடினியன், நற்றத்தன், வாமனன், என்னும் அகத்தியரது பன்னிரு சீடரும் அவரிடத்தில் அவர் செய்த சிற்றகத்தியும் பேரகத்திய இரண்டும் முற்றக் கற்றுத் தத்தம் பெயரால் வேறு வேறிலக்கணமும் அனைவரும் ஒருங்கு சேர்ந்து புறப்பொருட் பன்னிரு படலமும் எழுதினராம்.

அப்பால், சங்கங்கள் ஏற்பட்டுத் தமிழ் வளர்க்கலாயின. அவை நீண்டகாலம் இடை யிடைபட ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ்ந்தனவாதலின், அவை தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் எனப் பெயர் பெறும். அவற்றைப்பற்றிய விஷயச் சுருக்கம் அடியில் வருமாறு காண்க:—

தலைச்சங்கம்:—இற்றைக்கு ஏறக்குறைய 4500 வருடங்களுக்கு முன்னர் இருந்ததாகக் கொள்ளப்படும் இச்சங்கம் காய்சினவழுதி முதல் கடுங்கோன் வழுதி யீறாக 89 பாண்டியர்களைக் கொண்டதாம். இப்பாண்டியருள் எழுவர் கவியரங் கேறினோராம். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 549. இதில் 4449 புலவர்கள் தத்தம் நூல்களை அரங்கேற்றியுள்ளார். அந்நூல்களிற் சிலவாகிய தொல்காப்பியம் காக்கை பாடினியம் முதலியவற்றில் இயற்றமிழும், பெருநாரை பெருங்குருகு முதலியவற்றில் இசைத்தமிழும், முறுவல், சயிந்தம் குணநூல் முதலியவற்றில் நாடகத்தமிழும் விரித்துரைக்கப் பட்டனவாம். இச்சங்கம் இருந்தவிடம் "தக்ஷிண மதுரை". இது கடல் கொள்ளப் பட்டது.

இடைச்சங்கம்:—முன்பின் 3500 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகக் கூறப்பெறும் இச்சங்கம் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறனீறாக 59 பாண்டியரைக் கொண்டதாம். இவரில் கவியரங் கேறினோர் ஐவராம். இதில் வீற்றிருந்த புலவர் தொகை 509. தமது நூல்களை அரங்கேற்றிய புலவர்கள் 3700 பேர்கள். இச்சங்கத்தின் ஸ்தானம் "கபாடபுரம்". இதுவும் கடல் கொள்ளப்பட்டதே, இச்சங்கத் தரங்கேறியவை கலியுருகு வெண்டாளி முதலியன.

கடைச்சங்கம்:— இது ஏறக்குறைய 2000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததாகத் தெரியவருகிறது. இச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி யீறாக 49 பாண்டியர்களைக் கொண்டது. இவருள் கவியரங்கேறியோர் மூவர். இச்சங்கத்து வீற்றிருந்த புலவர் தொகை 49. தத்தம் காவியங்களை அரங்கேற்றிய புலவர்கள் 449 பேர்கள். நெடுந்தொகை நானூறு, புறநானூறு, குறுந்தொகை நானூறு, எழுபதுபரிபாடல் முதலியநூல்கள் இதில் அரங் கேறியவை. இவற்றுள் திருவள்ளுவ நாயனாரது "திருக்குறள்" தான் கடைசியாக இச்சங்கத்து அரங்கேறிய நூலாம். இச்சங்கம் இருந்தவிடம் தற்காலம் "மதுரை" யென வழங்கும் "உத்தர மதுரை" யே. (இன்னும் வரும்.)

M. கோபால கிருஷ்ணையர்.

மதுரை மாணவர் சென்தமிழ்ச்சங்கத்து அக்ராஸநாதிபதி.

புத்தகவரவு.

ஸ்ரீகிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்— பாவலருக்கு நிலகம் போலும் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும் பான்மையை விளக்கி, யாவருக்கும் தெவிட்டாத இன்பத் தேனினைச் சொரிந்து, பூவுலக மாந்தர் புரிந்த நற்றவமாய் மேவிட ஜொலிக்கும் சாக்ஷாத் அகிலாண்ட நாயகனின் அவதாரமான அற்புதகதையை ஆவலாய்ப் பெற்றனம். இதனைத்தேனினு மினிய செந்தமிழ் நடையில் எவ்வித பிழையுமின்றி நடை நோக்குத் தொடைநோக்கு முதலிய இலக்ஷணங்களோடு மூடித்திருப்பதும், பாவலர்க்குக் கைக்கனியாய் இடைஇடையே தோன்றும் அரியபெரிய அற்புதங்களும் மெத்தவியக்கற் பாலதே. இந்நூலின் நடை கற்றூருங் கல்லாரும் ஒருவித இடர்ப்பாடுமின்றி யெளிதின் அறிந்து ஆனந்தங்கொள்ளும் வண்ணம் எவ்விடத்திலாயினும் ஒருசிறிதும் தடைப்

தெவின்றி ஆற்றின் பிரவாகம் போல் செல்லுகின்றது. ஸ்வாமிகள் சரீ க்ஷிரம் பக்ஷிரசமும் சோகரஸமும் மிகுந்து படிக்கப் படிக்கப் பரமானந் தமளித்து முடிக்க மனமெழா முதன்மையைப் பெற்றுளது. இந்நூலின் கண் ஆங்காங்கு தோன்றும் ஒவ்வொரு கவிகளுள்ளும், அமைத்துவிடக்கு ம் சொற்றிறம், பொருட்பொலிவு, அணிநலம், கல்லிலக்கணப்பிரயோகம் பக்ஷிரச முதலிய விசேடங்கள் எம்மாற் கூறப்படும் தன்மையனவல்ல. இந்நூல் ஓசையுடைமை, ஆழ முடைமை யடைந்து ஆன்றோர் செய்யுட்களி ன் அழகொலாங் கவர்ந்து பசுந் தமிழ்ச் சொற்கள் செறிந்து பாச்சுவை பரவிய நடையானமைந்து ஆக்கியோனது கல்வித்திறனையும் தமிழ் ஆ ராய்ச்சி வன்மையையும் செவ்விதிற் காட்டுகின்றது. சக்கரைப்பந்தலிற் றேன் மாரி பொழிந்து போல இந்நூலுக்குப் பாயிரமாகச் சேர்த்திருக்கு ம் ஆங்கிலேய தர்க்கசாஸ்திர நுட்பங்காட்டி செய்துள்ள நீரீஸ்வர வாதக ண்டனம் அதிசிலாக்யமா யிருக்கின்றது. இக்காலத்தில் இத்தகைய நூற்க ளே நம் காட்டிற்குத் தேவை. இவ்வருடத்திய B. A பரிக்ஷைக்குப் பாட மாக இதை வைத்திருப்பதும் இவற்றின் அருமை பெருமையை நன்கு வி ளக்குவதற்குத் தக்க சான்றாகும். இத்துடன் இப்புத்தகத்தில் ஸ்வாமிகளின் திருவுருவப் படமொன்றும் வைக்கப்பட்டிருக்கின்றது. இகபரசாதகத் தை யுன்னிப் பாடப்பட்டழைத்தவரின் பெற்றிக்கு இரும்பூதி கொள்வதன் றி எம்மால் மற்றொன்று செய்யச் சற்றுந்தர மில. சுத்தமிழுலக மிது காறும் கண்டிராத இவ் வுத்திருஷ்ட்டமான ஸத்திரசத்தினை நம்பாலன்பு வைத்தனுப்பிய நமது ஆப்தமித்திரரும் இந்நூலாசிரியரு மொருவருமா கிய மகா-ரா-ஸ்ரீ T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A. அவர்கட்கு எமது ஹி ருதயபூர்வ விநய வந்தனத்தைச் செலுத்தி நன்றிபாராட்டுகின்றோம்.

மாதர்நீதிமாலை:—இச் சிறப்பெயர் தரித்த நூலொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றனம். சுத்தேயத்து மாதர்கட்கு இந்நூல் அத்யா வசியமாய் வேண்டற்பாலது. அநேக அரிய நீதிகள் இப்புத்தகத்தில் ஒருங்கே திரண்டிருக்கின்றது. இன்பகரமான பாக்களால் நிறைத்து படிக்கப்படிக்கப் பரவசமளிக்கின்றன. அவற்றின் அருமை பெருமை களைப்பற்றி எவ்வளவு விஸ்தரித்துப் புகழ்ந்தெழுதிடினும் தகுமென்றே கூறலாம். இதை இயற்றியவர் நமது நண்பரும் இப்பத்திரிகையின் நிரூப கேயருமான மகா-ரா-ரா-ஸ்ரீ P. S. அனந்த கம்பியார் அவர்களாவர். சிறுவர் சிறுமியர்கட்கு சுலபமான வழியில் பல நீதிகளைப் போதிக்க வெண்ணி ஏற்கனவே பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவ ற்றினை விளம்பரத்திற் கண்டுகொள்க. இப்புத்தகத்திற்கு விலை அணு 3 ஆக வைத்திருப்பதும் அனைவரும் வாங்கி வாசிக்கவேண்டுமெனு மாவ லேகாரண மென்னலாம். இப்புத்தகத்தை நம்பார்வைக்கு வரவிடுத்தமே யரவர்கட்கு உகந்த வந்தனமளித்து மிகுந்த நன்றி பாராட்டுகின்றோம்.

பாலர்க்கினிய கீதம்:—பெயருக் கேற்றபடியே விளங்கும் இப்புத் தகத்தில் அநேக அரியகீதங்கள் அடங்கி யிருக்கின்றது. அமிர்தஞ்சரக் கும் ஒவ்வொரு இனிய பாடலையும் படித்து உரையாலளப்பரும் பெரு மகிழ்வடைந்தனம். சிறுவர் சிறுமியர்கட்கு இது மிகவும் பிரயோஜனப் படத்தக்கது. இதை நம் பார்வைக் கனுப்பிய மகா-ரா-ரா-ஸ்ரீ C. ஸ்ரீராம ஐயங்காரவர்கட்கு அநேக வந்தன மளிக்கின்றோம்.

மதுரை மாணவர் சேந்தமிழ்ச் சங்கம்:—இதின் கான்காம் வரு ஷோத்ஸவ அறிக்கையின் பிரதி ஒன்று அச்சங்கத்தின் அக்ராஸனாதிபதி

யவர்களிட மிருந்து வரப்பெற்றோம். இச்சங்கத்தால் ஜனங்கள் பல விதத்திலும் நன்மையடைந்து வருகின்றனர். இதின் அபிவிர்த்திக்கு மிஸ்டர் M. கோபாலகிருஷ்ண ஐயரவர்களுடைய தளரா முயற்சியே காரணமாகும். இவ்வளவு சிறப்புடன் இச்சங்கத்தை நடத்தி வருவதைப் பற்றி யாமடையும் மகிழ்ச்சிக்கெல்லையில்லை. இச்சங்கம் மேன்மேலும் விர்த்தி யடையுமாக.

நித்திரை.

முயற்சிக்க வேண்டிய சாதனங்களை நாம் தூங்கும்பொழுதுதான் மூளை அடைய ஏதுவாகின்றது. நாம் தூங்கப் போகும் பொழுது நரம்பு க்குரிய சக்தி (Nervous onergy-) யெல்லாம் குன்றியிருப்பதை யாவ ரு மறிவார்கள். தூக்கக்கண்ணுக இருக்கும்பொழுது எவ்விஷயத்வையு ம் நமது செவி ஜாக்கிரதையுடன் ஏற்பதில்லை. ஏதேனும் ஒன்றை சோ க்க வேண்டியிருப்பினும் கண்களுக்கு அதிக சிரமத்தை யளித்தே பாக்க வேண்டியிருக்கிறது. அப்படி பார்த்தபோதிலும், சிற்சில சமயங்களில் பார்த்ததாக ஞாபகமிருப்பது மில்லை. 5, 6, மணி நேரம் தூங்கிய பின் இவ்வண்ண மிருப்பதில்லை. கொஞ்ச சப்தம் தூக்கத்தினின்றும் நம்மை எழுப்பிவிடுகிறது. படுக்கை யறைகளின் பலகணி வழியா யடிக்கும் சொற்ப வெளிச்சங்கூட, நித்திரையினின்று விழிக்கும் வண்ணம் நம் மைச்செய்கிறது. இது என்? அதிக வேலைசெய்து களைத்துப் போயிருக் கும் நமது தேகம், மூளை இவைகள் அவைகளின் சக்திகளைத்திரும்ப அடைந்தவைகளாய் ஆகின்றன. புதியவேலைகள் செய்வதற்குத் தயா ராகவிருக்கின்றன. மனது தெளிவடைகிறது.

"அதிகாலையில் எழுந்து நூற்களைக் கற்றுக்கொள்" என்று நமது பெரியோர்கள் சொல்வதும் இவ்விதக் காரணங் கொண்டே. "காலை கல் மாலை புல்" என்று ஓர் பழமொழியும் உண்டு. ஆகையால் மனிதன் தூங்கவேண்டுவது அவசியமே என்று ஏற்பட்டது.

"எவ்வளவு நேரம் ஒருமனிதன் தூங்கவேண்டும்" என்ற விஷயத் தை விசாரிக்கப்புகின், அவரவர்கள் தேக சக்திக்கு ஏற்றவாராயுளது. என்ற விடைதான் கிடைக்கக் கூடியதாக விருக்கிறது. வயதுக்குத்தக் கவண்ணமும் வித்தியாசப் படுகிறது. ஒரு நாளைக்கு குழந்தைகள் 16 மணியும், 2வயதுக் குழந்தைகள் 14 மணியும், 4வயதுக் குழந்தைகள் 12 மணியும், 8வயதுக் குழந்தைகள் 11 மணியும், 12வயது பையன்கள் 10 ம ணியும், இவ்வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 மணிமுதல் 9 மணியும் தூங்க வேண்டுவது அவசியமாகும். புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் ஒரு மணி அதிகமே நித்திரை செய்தல் வேண்டும். மூப்புப்பருவத்து அதிக சாலம் தூங்கவேண்டும். பின் இராத்திரியைக் காட்டிலும் முன் இராத் திரியே தூங்குவதற்கு சௌக்கியமான காலமென்று கூருகிறார்கள். "வைகறைத்துயிலெழு" என்றவ்வை சொல்லியவண்ணம் விடிந்தவுட னேயே நித்திரையினின்று நீங்குவது நலமாம். இல்லாவிடின் சோம் பல், அசதி இவைகள் மேலிடுவதை நாம் நன்றுய்க் கண்ணுறலாம். "அதிகாலையில் எழாவிடின் பிசாசானது கருப்புப் போர்வைக் கொண்டு கம்மைப் போர்த்தி அசதியுடன் சோம்பலா யிருக்கச்செய்யும்" என்று சில மதஸ்தர்களதுகொள்கை. அசதியும்சோம்பலும் அதிகமாவதை காம் நேரிலேயே கண்ணுறலாம்.

161978

"புத்தியதிகப் பொருந்து தெளிவனிக்குஞ்
சுத்தமும்பினறற் றூய்மையமும்—பித்தொழியுஞ்
சாவுவரிதாத பித்தந் தத்த நிலை மன்னுமதி
கோவுவிழிப்பின் குணத்தைக் காண்".

உத்யோகித்து விழிப்போர்களுக்கு வாத, பித்த, சிலேஷ்டம் தங்கள் தங்கள் இடத்திலேயே இருக்கப்பெறும். புத்திக்குத் தெளிவையுனர்த்துகிற சுத்த ரம்புத் துவாரத்தில் நிறைந்திருக்கும் நீர் கலங்கலின்றியிருக்கும்.

வேதங்கற்பவர்கள், சங்கீதசாஸ்திரம் பயிலுவோர்கள் முதலிய சகல வித்தியார்த்திகளும் விடியற்காலத்தில் தங்கள் தங்கள் வித்தைகளைச் சிரமப்பட்டுக் கற்பதை ஒருவரும் அறியார்களா? கேவலம் பட்சிஜாதிகள் கூட அதிகாலையிலெழுந்திருந்து இனிய குரலுடன் பாடுகின்றன. அவ்வண்ணமிருக்க பகுத்தறிவுடன் கூடிய மனிதர்கள் எழுந்து தெய்வ துதி பாடிக் கொண்டிருத்தல் கூடாதா? கற்றல் கூடாதா? "அந்தித்போழுது கிடவார்" என்று சொல்லிய வண்ணம் சாயந்திர வேளையில் படுத்தல் கூடாது. சிலர் இராக்காலத்தைப் பகற் காலமாக்கி நாடகம் பார்ப்பதிலும், கூத்துப் பார்ப்பதிலும் செலவழித்து விட்டு பகற்காலத்தைத் தூங்கு கிறார்கள். அது அவ்வளவு நன்மையை பயக்கு மென்று தோன்றவில்லை.

"காலை துயில் சிலம்போம், கண்டபக லாக்கம் போம், மாலை துயிலினையாம்" என்றதை அவர்கள் அறியத்தக்கது.

இரவில் சீக்கிரமாவது படுக்கைக்குச் சென்று, அதிகாலையிலேயே எழுந்திருத்தல் நலம். அவ்வண்ணம் செய்வதால் நமதுதேகம் சௌக்கிய மாயிருப்பதுடன். நாமும் அநேகநன்மைகளைப் பெற்றவர்களாகவுமிருப்போம். "நாம் சீக்கிரம் படுக்கைக்குசென்று, சூரியன் உதயமாகுமுன் எழுந்திருப்போமேயாகில் இலட்சுமி நம்மைவிட்டு நீங்காள்" என்று பெரியோர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இவ்வண்ணமே, மேநாட்டு ஜனங்களும், "சீக்கிரம் படுக்கைக்கு சென்று அதிகாலையில் எழுந்திருக்கும் ஒருமனிதன் சுகவானாகவும், புத்திமானாகவும் தனவானாகவுமிருப்பானெனச் சொல்வது வழக்கம். அநேக கிராமங்களில் இச்சொல்லை மிக்க மரியாதையுடன் நடத்திவருகிறார்கள். பட்டண வாசங்களில்தான் அநேகமாய் மேற் கூறப் பெற்றுள சொல் கவனிக்கப் படாதிருக்கிறது. ஆனால் இப்பழமொழியைப் பற்றி அங்கொருவரும் தர்க்கிப்பது இல்லை. உண்மை யென்றே ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

அதிகாலையில் எழுந்திருத்தலா லடையும் நன்மைகள்:—(1) அன்றையதினம் செய்யவேண்டிய வேலைகளைச் சீராகச்செய்ய ஓர் தூண்டுகோல் போலாகிறது.

(2) சீக்கிரம் எழுந்திருக்கு மொருவன், படுக்கையைவிட்டு அநேகர் எழுந்திருக்குமுன், கஷ்டமான வேலையில் அதிக பாகத்தைச் செய்தவனாகின்றான். அதிகாலையில் மனது மிக்க சுத்தமாகவிருக்குமென முன்னமேயே சொல்லப்பெற்றுளது. சப்தங்களும், வேறுவிதமான தடங்கல்களும் அதிகாலையில் அவ்வளவு அதிகமில்லை. ஆகையால் விடியற்காலம் செய்யப்படும் வேலை நன்றாகவே இருக்கும். அதிகமாகவும் செய்துமுடிக்கலாம். கஷ்டமான வேலையெனினும் சிரமம் தோன்றாது.

(தொடர்ந்து வரும்.) S. N. ஸ்ரீனிவாசன்.